யான் உன்னில் சங்கமம். - KodhaiNappinai

அத்தியாயம் - 1

நான்கு மாதங்களுக்கு முன்பு... ஒரு சுபயோக சுபதினத்தில்...

“நியூமிக்ஸ் மாட்டிக்ஸ்னா(numismatics) என்னன்னு தெரியுமா கார்த்திக்?” என்று எங்கோ அவசரமாக சென்று கொண்டு இருந்த தன் தம்பியை தடுத்து நிறுத்தி சூழ இருந்த நாதஸ்வர இசையிலும், மண்டபத்தில் நிரம்பி வழிந்த கூட்டத்தின் சலசலப்பின் மத்தியிலும் காதில் விழுவதற்காக உரக்கவே கேட்டான் பத்ரி என்று அழைக்கப்படும் பத்ரிநாத் சச்திதேவ்

அவர்கள் வீட்டு விழா என்பதால் சகோதரர்கள் இருவரும் வெண்பட்டில் வேட்டி, சட்டை உடுத்தி இருக்க அது இருவருக்கும் இருவேறு விதமாக பொருந்திருந்திருந்தது. முதன்முதலாக இருவரையும் இப்படி ஒன்றாகப் பார்ப்பவர்களுக்கு இவர்களை அண்ணன், தம்பி என்ன? உறவினர் என்று சொல்வது கூட கடினம்.

சச்சிதேவ் ஜீன்ஸ்சிற்கே உரிய உயரத்துடன் நாள் தவறாமல் ஸ்வீமிங்கை வேண்டி விரும்பி செய்யும் பத்ரி நீச்சல் வீரர்களுக்கே உரிய டெனிங்குடன்(TANNING) தன் ஆறு அடி இரண்டு அங்குலத்திற்கு ஏற்ற உடற்கட்டு, நீண்ட முகம், எடுப்பாய் கண்கள், நேரான நாசி, ஷேவ் செய்யப்பட்ட மழுமழு கன்னம் என்று பத்ரி ஈர்ப்பாக இருந்தாலும் அவனிடம் சடாரென்று பார்வையை இழுப்பது என்னவோ அவனின் கூரான முகவாயில் இருக்கும் அந்த சின்ன குழிதான்.

பெரும்பாலும் கன்னக்குழியை அழகென்று சிலாகித்து வர்ணிப்பவர்களுக்கு முகவாயில் கூட குழி விழும் என்று தெரியாது!!! அப்படியே தெரிந்தாலும் அதை கவனிப்பது அரிது!!!

ஆனால் பத்ரிக்கோ முகவாயில் இருக்கும் அந்த அரை இன்ச் குழியை அப்படி பத்தொடு பதினொன்றாக யாராலும் கடந்து விட்டு போக முடியாதோடு மட்டுமல்ல.. கிழவியில் இருந்து குமரி வரை வயது வித்தியாசமின்றி பார்ப்பவர்களை வசீகரித்து... புதை குழியாக இழுக்க... அதில் மூச்சு முட்டாமல் மீள்வது முடியாத காரியம். இதில் வேடிக்கை என்னவென்றால் தன் வசீகரத்தை அவன் நன்கு உணர்ந்திருத்தும் இருந்தது

தான்!!!

புயலே அடித்தாலும் அப்படி இப்படி அசைய முடியாதபடி அவனின் வணங்கா முடி நின்று நிலைகொண்டு இருப்பதற்கு அவன் லிட்டர் கணக்காக தடவி இருக்கும் ஜெல் காரணம் இல்லை… கொஞ்சமாவது முடி இருந்தால் தானே காற்றுக்கு ஆட முடியும்? அதுதான் ஒட்ட வெட்டி சதுரட்டம் அடிக்கப்பட்டு இருக்க எங்கிருந்து ஆடுவது?

தன் தம்பி கார்த்திக்கை போல் அவனுக்கு சுருட்டை முடி தன் வணங்கா முடி இம்மி அளவு சுருண்டாலும் அது தன் ஆண்மைக்கே இழுக்கு என்று எண்ணத்தில் திரிபவன் ஆதலால் தான்.. இப்படி ஒரு கெட்டப்..

சுருக்கமாக சொல்லப் போனால் அவனைப் பார்த்தவுடன் “சலாமி தே” என்று உரக்க கத்தி.. காலை வேகமாக “டப்பு” என்று மாற்றி நின்று சல்யூட் அடிக்கத் தூண்டும் மிலிட்டரி ஆபிசர் மாதிரி ஒரு மிரட்சி கலந்த கம்பீரம் அவனிடம் மண்டி கிடந்தது.

சாகச விளையாட்டில் அதீத ஆர்வம் கொண்ட கார்த்திக்கோ எயிட் பேக் ஜிம் பாடியுடன் கட்டுமஸ்தாக பப்புகளில் இருக்கும் பவுன்சருக்கு இணையாக நின்றான்.

பாட்டி இட்ட வேலையை அடியோடு மறந்துவிட்டு இவன் சொன்ன செய்தியில் அதிர்ச்சியான கார்த்திக் “என்ன… என்ன… நியூசில் மாட்டிக்கிட்டியா??? ஹா.. ஹா.. இதை தான்டா.. அண்ணா நான் ஆவலா எதிர்பார்த்தேன்… உத்ரகண்டிற்கு நீ எம்.பி.ஏ. படிக்க போறேன்னு மலை ஏறியதில் இருந்து கடந்த ஒன்றரை வருஷமாக நீ அடித்த கூத்துக்கு எல்லாம் நீ மாட்டாமல் எஸ் ஆகிட்டே இருந்தப்பவே நினைத்தேன்… தலைவர் எதிலோ பெருசா மாட்டப் போறாருன்னு…” என்று மிகுந்த உற்சாகத்துடன் பேசினான் கார்த்திக் சச்சிதேவ்.

பதில் சொல்ல வாயை திறந்த பத்ரியை பேசவே விடாது இவனே தொடர்ந்து “ஆமாம்… எதுக்குடா மாட்டின? அந்த கல்சுரல் விழாவில் குத்துவிளக்கு ஏற்ற வந்த சீப் கெஸ்ட்டிற்கு பர்த்டே கேன்டிலை ஏற்றி கொடுக்க.. அதை கவனிக்காது கர்மமே கண்ணாக அவர் கையில் வாங்கிய… அடுத்த நொடி அது மினி ஏவுகனையா சீறிப் பாய… பயத்தில்

எதைப் பிடிக்கிறோம் என்றே தெரியாது... அந்த ஆறு அடி குத்து விளக்கை கட்டிப்பிடித்து ஸ்டேஜிலே அங்கப் பிரதக்ஷனம் செய்து பர்பாமன்ஸ் கொடுத்தாரே!!! அதுக்கா இல்லை.. நாலு பேர் தங்க கூடிய உன் ரூமை நீயும் உன் ரூம்மேட் சித்தும் சேர்ந்துக் கொண்டு தங்க வரும் ஆட்களை எல்லாம் வாட்ஸ் இஸ் த ப்ரொசிஜர் டூ சேன்ஞ் த ரூம்ன்னு(WHAT IS THE PROCEDURE TO CHANGE THE ROOM) தலைதெறிக்க ஓடவைக்கும் படியாக பர்பாமன்ஸ் கொடுக்கறீங்களே அதுக்கா? இல்ல..." என்று அவன் மூச்சே விடாமல் பேசிக்கொண்டே போக..

"அடேய்... இப்படி என்னை பேசவே விடாது நீயே சோலோவா பர்பாமன்ஸ் கொடுத்தேன்னு வை... அப்புறம் கலகலப்பா நடக்க வேண்டிய இந்த விழா கைகலப்பா நடந்ததுன்னு தான் பேப்பரில் நியூசா வரப் போகுது.." என்றான் சுவற்றில் சாவகாசமாய் சாய்ந்து மார்பின் குறுக்கே கையை கட்டியபடி பத்ரி.

இத்தனை நேரம் பொங்கி வழிந்த உற்சாகம் இருந்த இடம் தெரியாமல் மறைய பதட்டத்துடன் "ஐய்யோ... வேண்டாம்டா அண்ணா... ஏற்கனவே நம்ம வீட்டு கல்யாண முறையை பத்தி எட்டாங் கிளாஸ் சமச்சீர் கல்வி திட்டத்தில் வரப்போவதாக நம்ப தகுந்த செய்தி என் காதில் விழுந்தது... இந்த விளம்பரம் பத்தாதுன்னு நீ வேற இதை தஞ்சாவூர் கல்வெட்டில் பொறிக்கும் அளவு ஏற்பாடு பண்ணிடுவ போலயே டா... வேண்டாம் டா அப்புறம் பசங்க ஓட்டும் ஓட்டு என்னால் தாங்க முடியாது.." என்று நிரம்பவே வருத்தமாக மறுமொழிந்தான் கார்த்திக்.

இருக்காதா பின்ன? இதுவரை அவர்களின் சச்சிதேவ் வம்சத்தில் ஒருத்தருக்கு கூட பத்திரிக்கை அடித்து, நாள் நட்சத்திரம் பார்த்து உற்றார் உறவினர் புடை சூழ திருமணம் நடந்ததாக சரித்திரமே இல்லையே!!!

"இங்க பாரு ப்ரோ... என்னதான் சயின்ஸ் நமக்கு புலி.. பூனை குடும்பத்தை சார்ந்ததுன்னு சொன்னாலும் கம்பீரமாக காட்டில் ராஜநடை போட்டுத் திரியும் புலியை... "ஸ்ச்சு" என்று விரட்டினாலே தலைதெறிக்க ஓடி ஒளியும் பூனையோடு ஒப்பிட்டு பார்க்க முடியுமா? எங்கே உன்னை ஓட்டும் எவனையாவது அதை வீட்டில் செல்ல பிராணியா வளர்க்க சொல்ல பார்போம்...?? நினைத்தாலே உதறும்... அதுமாதிரி தான்டா நாமும்... ஊர் உலகம் என்ன சொன்னாலும் சரி.. சச்சிதேவோட தனித்தன்மையே அந்த

கல்யாணம் தான்டா... யாரு எப்ப யாரை கல்யாணம் பண்ணிக்க போறாங்கன்னு யாருக்குமே தெரியாது. கேட்கப்போனா கல்யாணம் பண்ணிக்கப் போகும் மாப்பிளைக்கோ இல்லை பெண்ணிற்கோ கூட அது தெரியாது.. நம்மை தவிர எவனையாவது இப்படி பண்ண சொல்லு பார்ப்போம்... பண்ணறது என்ன நினைத்து பார்த்தாலே அண்ட சராசரமே உதறும்?!?" என்று தன் கையை ஆட்டியபடி பெருமை பொங்க பெருமிதமாக சொன்னான் பத்ரி சச்சிதேவ்.

"ப்பா... என்னடாண்ணா கபாலி டீசர் அளவிற்கு சச்சிதேவ் டான்னு பில்டப் கொடுக்கற.? உண்மையில் பத்திரிக்கை அடித்து நாள் நட்சத்திரம் பார்க்கும் அளவு எந்த சச்சிதேவிற்கும் அவ்வளவு பொறுமை இல்லாத காரணத்தினால் தாலி கட்டினால் நீ என்னடான்னா.. பிச்சி உதறிட்ட போ.. உன்னால் மட்டும் தான்டா இப்படி எதை எதுக்கோ கம்பேர் பண்ணி பேச முடியும்... உன் பேச்சை கேட்டு நானுமே ஒரு நிமிஷம் நாம அவ்வளவு வீர, தீர பராக்ரமசாலியோன்னு நினைக்க வச்சிட்டியே டா?" என்று கார்த்திக் மறுமொழிக்க பத்ரி உல்லாசமாக சிரித்தான்.

சச்சிதேவ் ஜீன் இருந்தால் மட்டுமே ஊர் உலகமே நக்கலாக பேசினாலும் அதைப் பற்றி அலட்டலே இல்லாமல் நகைசுவையாக எடுத்து சிரிக்க முடியும். இதற்கே இவர்கள் ஒன்றும் ஊர் பேர் தெரியாத ஆட்கள் இல்லை. ஏற்காட்டில் சுமார் ஐநூறு ஏக்கரில் டீ, காபி எஸ்டேட்டை கொண்ட "தேவ் குரூப்ஸின்" வாரிசுதான் இவர்கள். பரம்பரையாக இதையே பிரதான தொழிலாக செய்து வரும் பாரம்பரியம் மிக்க குடும்பம் தான் சச்சிதேவின் குடும்பம்.

அந்த புகழ் பெற்ற தேவ் குரூப்ஸின் தலைமை நிர்வாகி சிவ சச்சிதேவ் என்றால் அந்த குடும்பத்தின் தலைமை நிர்வாகி அவருடையை மனைவி மல்லிகா. அவர்கள் செல்வ செழிப்பில் மட்டும் அல்ல... மக்கட் செல்வத்திலும் மிகையானவர்கள்.

அந்த தம்பதியர்களுக்கு மூன்று ஆண்களை தொடர்ந்து வீட்டிற்கு ஒளி சேர்க்க ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று தவமாய் தவம் இருக்க இறைவனின் அருளால் ஒரு பெண் குழுந்தைக்கு ஏங்கியவர்களுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தார்கள்.

அப்படிப்பட்ட சச்சிதேவ் குடும்பத்தின் மூத்த தலைமுறையினர் நாட் நாட் செவன் என்று பட்டப்பெயரால் அழைப்படும் பாட்டி மட்டுவார் குழலியும், ஒற்றன் என்று அழைக்கப்படும் மட்டுவார் குழலியின் ஆரூயிர் கணவன் சங்கரன் சச்சிதேவ் தான்.

தன் இரண்டாவது அண்ணன் பேச்சு திறமையை கார்த்திக் நன்கு அறிந்தவன் என்பதால் "சரி.. இப்படி வலைச்சு வலைச்சு பேசியே எல்லாத்தையும் சரி கட்டறவன் இப்ப எந்த நியூஸ்ல மாட்டின?" என்றான் பரபரப்போடு கார்த்திக்.

"ம்ச்சு.. டேய் ஏன்டா வெறுப்பேத்தற... அது நியூமிக்ஸ் மாட்டிக்... அப்படின்னு ஒரு கோர்ஸ் இருக்காம்... என் புது ரூம் மேட்டாக வந்திருக்கும் அலக்ஸ் அதைத் தான் படிக்கிறானாம்... இப்பதான் சித் போன் பண்ணி சொன்னான். ஒன்னரை வருஷமா அங்க படிக்கிறேன் தான் பேரு.. இப்படி ஒரு கோர்ஸ் இருக்கறதை விடு... அப்படி ஒரு வார்த்தை இருக்குன்னே இன்னைக்கு நான் கேள்விப் படறேன். அதனால தான் உனக்கு தெரியுமான்னு கேட்டேன்" என்றான் பத்ரி தாடையை தேய்த்துக் கொண்டே சுற்றியும் தெரிந்த ஜனதிரளை யோசனையாக ஆராய்ந்தப்படி.

"என்னது உங்க ரூமில் புது ஆளா? நிஜமாவா?? உங்களைப் பற்றி தெரிந்து அங்க வரான்னா அவன் மன தைரியத்தை நிச்சயமாக பாராட்டியே ஆகனும்டா!!!" என்று சிலாகித்தான் கார்த்திக்.

"டேய்... அவன் நியூ அட்மிஷன்டா" என்றான் அவன் புறம் திரும்பி பத்ரி.

"பாவம் யார் பெத்த புள்ளையோ" என்று அந்த முகம் தெரியாத அலக்ஸிற்கு பரிதாப்பட்டவன்... "உங்ககிட்ட வந்து சிக்கி சின்னா பின்னமாகவே அந்த மடையன் வருஷம் பாதியில் வந்து உன் காலேஜில் சேரறானாடா?" என்று அதிசயத்தான் கார்த்திக்.

அவன் கேட்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை.. ஏன் என்றால் பத்ரி படிக்கும் இடம் அப்படி பட்டது. பி.ஜியிலிருந்து மட்டுமே ஆரம்பிக்கும் அந்த காலேஜில் இடம் கிடைப்பது அவ்வளவு சுலபம் அல்ல என்பதோடு, அப்படியே நுழைவுத் தேர்வு எழுதி இடம் கிடைத்தாலும் அங்கே கட்ட வேண்டிய ஃபீஸ் கேட்டு இதற்கு நேராக யூ.எஸ்.சில் சென்று படித்து

வரலாம் என்று தலைதெறிக்க ஓடுபவர்கள் தான் அதிகம்.

அவ்வளவு தொகையை ஃபீஸாக கட்டி படிக்க முடியாதவர்கள் பெரும்பாலும் தாங்கள் வேலை செய்யும் கார்ப்பரேட் கம்பெனி மூலம் ஸ்பான்சர் செய்து படிக்க வருவார்கள். சொல்லப்போனால் அப்படி வருபவர்களின் எண்ணிக்கைதான் மிகுதியாக இருக்கும். பெரும்பாலும் அங்கு படிப்பவர்களுக்கு பின் இருபதுகளில் ஆரம்பித்து ஐம்பதுகள் வரை வயது வித்தியாசமின்றி அனைத்து வயதினரும் அங்கே தங்கி படிப்பதை காணலாம். அதுவும் பெண்களை அங்கே காண்பது மிக மிக குறைவு.

அதற்கு காரணம் அழகான இமய மலையின் சரிவில் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் எழுபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் அந்த காலேஜிற்கு கீழே இருக்கும் டவுனிலிருந்து தினமும் இரண்டு மணி நேரம் பயணம் செய்து போய் வர முடியாது என்பதால் கட்டாயம் ஹாஸ்டலில் தங்கி தான் படிக்க வேண்டியது வரும். மாணவர்கள் மட்டும் அல்ல கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அங்கே பணி செய்பவர்கள் கூட அங்கு தான் தங்கியாக வேண்டிய கட்டாயம்.

ஹாஸ்டல் என்றவுடன் புறா கூடு மாதிரி அறைகள் இருக்கும் என்று நினைத்தால் அது தவறு... முதல் முறை பார்ப்பவர்களுக்கு அது ஹாஸ்டல் தானா என்ற சந்தேகம் வந்து தம்மை தாமே கிள்ளி பார்த்துக் கொள்ளும் அளவு தான் அங்கே வசதி செய்யப்பட்டு இருக்கும். அட்டாச்டு பாத்ரூம் வசதி கொண்டு நான்கு ரூம் சேர்ந்து ஸ்டேட் ஆப் தி ஆர்ட்ஸ் வசதி கொண்டது தான் ஒரு அறை. பின்னே வாங்கும் இமாலய ஃபீஸிற்கு இது கூட செய்யவில்லை என்றால் எப்படி??

பெரும்பாலும் பின் இருபதுகளில் இருக்கும் பெண்களுக்கு திருமண ஆகி கணவன், குழந்தைகளோடு இருப்பதால் இங்கே வந்து தங்கி படிப்பது என்பது நடைமுறைக்கு ஒத்து வராது என்பது தான் நடைமுறை சிக்கல். அப்படியே படிக்க வரும் விரல் விட்டு எண்ண கூடிய சொற்ப எண்ணில் இருக்கும் பெண்களுக்காக தனி ஹாஸ்டல் என்ற விதி முறை எல்லாம் கிடையாது.

சாத்தியம் இருந்தால் பெண்கள் ஒன்றாக ஒரே ரூமில் இருக்க முயற்சி செய்யலாம்.. அவ்வளவுதான் அதிக பட்சம் செய்யக் கூடியது. இல்லை

என்றால் இருபாலரும் கலந்து தங்கி இருப்பது தான் வாடிக்கை. அதை யாரும் பெரிய விஷயமாக அங்கே பார்ப்பது இல்லை.

“என்னமோடா ஸ்டூடன்ட் எக்ஸ்சேன்ச் ப்ரொகிராம்ன்னு இங்க மாத்தி வந்து இருக்கானாம்.. நான் ஊர் வருவதற்கு இரண்டு நாள் முன்னாடி தான் வந்தான். அதுவுமே புது ரூம்மேட் வந்தாச்சுன்னு சித் சொல்லி தான் அவன் வந்ததே எனக்கு தெரியும். அவன் முகத்தை கூட பார்க்கவில்லை.. இங்கே கிளம்பும் அவசரத்தில் இருந்ததால் அப்படியே போற போக்கில் முதுகை பார்த்ததுதான்” என்றான் விட்டேரியாக பத்ரி.

“அப்..” எதையோ வாயை எடுத்து கேட்க வந்த கார்த்திகை முந்திக் கொண்டு ஒரு பெண் குரல் அவர்கள் காதில் கணீர் என்று ஒலிக்க பட்டென்று திரும்பினர்..

“நம்ம வீட்டு விழாவிற்கு உன் ப்ரண்ட் வரேன் சொன்னா அவர்களை வரவேற்க வாசலில் கூட வந்து நிற்காமல் எவன் வீட்டு விருந்தோன்னு இங்க ஜாலியா வெட்டி நியாயம் பேசி கூத்தடிச்சிட்டு இருக்கிற உன்னை அண்ணன்னு சொல்ல ரொம்ப பெருமையாக இருக்கு!!” என்று உரக்க கூறியபடி உக்கிரகாளி வேடத்தில் அவர்களுக்கு பின்னாடி நின்றாள் தங்கை மேகமித்ரா.

தங்கை சொன்னது ஒரு பொருட்டாக கூட மதிக்காது நண்பனை கண்ட குஷியில் “ஹாய் சித்.. எங்கிருந்து டா குதிச்ச? இத்தனை நேரம் நான் தான் வாசலை பார்த்துகிட்டே இருந்தேனே??” என்று ஆச்சரியமாக பத்ரி கேட்டான்.

ஆனால் அந்த சித்தாகப்பட்டவனுக்கு பத்ரி கூறியது காதிலே விழாதது போல் அவனை திரும்பி கூட பாராது மேகமித்ராவையே கண்ணில் கனிவும் இரக்கமும் பொங்க பார்த்துக் கொண்டு நின்றான்.

நெடு நெடு என்று உயரம், சிவந்த நிறத்துடன் சின்னதாக குறுந்தாடியும், அரை அடியில் குதிரை வாலிட்ட முடியுடன் வெள்ளை நிறத்தில் கார்கோ பேண்டும், ஆண்கள் போடவே துணியாத வெளிர் பச்சை நிறத்தில் கேஸ்வல் லூஸ் சர்ட் அணிந்து... அதே நிறத்தில் ஏவியேட்டர் சன் கிளாஸை தலையில் செருகியபடி நின்றவனுக்கு அந்த உடை மிக மிக

பொருத்தமாக இருந்தது எட்டாவது அதிசயம் என்றால் அது மிகையாகாது.

“நான் வரேன்” என்று மேகமித்ரா தலை ஆட்டி சித்திடம் விடைப்பெற்றவள் அவளின் அண்ணன்கள் புறம் திரும்பி “ஒழுங்கா அவரை சாப்பிட அழைத்து போ.. அதையும் மறந்துவிட்டு வாய் பார்த்துக் கொண்டு நிற்காதே” என்று பணித்து விட்டு திரும்ப...

“நான் வேணுன்னா வாசல் வரைக்கும் துணையா வரவா?” என்று வார்த்தைகளில் கணிவும், கண்களில் பரிவும் பொங்கி ததும்ப, அவளை பார்த்துக் கேட்டான் சித்.

“என்னது துணைக்கா?” என்ற அலறிய கார்த்திக் தன் சகோதரனை பார்த்து கண்ணால் இவனை குத்தவா? இல்லை பல்லை உடைக்கவா? என்று கேள்வி கணையை விடுத்தான்.

பின்ன?? எள்ளு போட்டால் எள்ளு இறங்காது என்று தான் சொல்லுவார்கள் ஆனால் அந்த மண்டபத்திலோ.. எள்ளு போட்டால் எண்ணெயாக தான் கீழே வரும் அப்படி ஒரு ஜனதிரள் பொங்கி வழிய இப்ப எதற்கு சித் வாசல் வரைக்கு துணைக்கு வரவா என்று கேட்கிறான்? எந்த அர்த்தத்தில் கேட்கிறான்? அதுவும் இரண்டு அண்ணன்கள் அங்கே குத்து கல்லு மாதிரி நின்றுக் கொண்டு இருக்கும் போது?

பொதுவாக வீட்டில் இருக்கும் இளம் பெண்களை கருதி ரொம்பவே நெருங்கிய நண்பர்கள் என்றால் தவிர வீட்டிற்குள் யாரையும் அழைத்து வருவதில்லை என்று சகோதர்கள் மூவரும் ஒன்று கூடி எடுத்த முடிவு ஆனால் சித் பார்த்தவுடன் வழியும் ரகம் இல்லை. அதுவும் கடந்த ஒரு வருடமாக அவனுடன் தான் பெரும்பாலான நேரம் செலவழிப்பதால் அவன் நிச்சயம் அப்படிபட்ட ஆசாமி இல்லை என்பது தெரியும். பின்னே எதுக்கு இப்படி துணைக்கு கேட்கிறான் என்று அவனுக்குமே புரியாத காரணத்தால்... பத்ரி திருதிருக்க...

அதற்குள் மேகமித்ரா.. “ஐயோ வேண்டாம் நான் போய்கொள்வேன்” என்று தன் மேகாவாட் புன்னகையை அவன் புறம் வீசி விட்டு திரும்பி நகர்ந்தாள்

கார்த்திக் கண்களால் கேட்டதை எங்கே நிஜத்திலும் செய்ய துணிந்து

விடுவானோ என்று பயம் பத்ரி லேசாக பரவியது. அவனும் யாரிடமும் வழிய மாட்டான். தன் தங்கைகளிடம் யாராவது தேவை இல்லாமல் பேசினால் சும்மா விடவும் மாட்டான்.

அவனால் எத்தனை பேரோட சில்லி மூக்கு உடைந்து ரத்தம் கொட்டி இருக்கு என்று கணக்கு வழக்கே கிடையாது. இத்தனைக்கும் நண்பர்களிடையே சும்மா விளையாட்டுக்காக நடந்த சண்டையில் தெரியாமல் கை பட்டு உடைந்தவை தான். ஏன் என்றால் கார்த்திக் உண்மையிலேயே ஒரு கிக் பாக்சர். இப்படி அவனுக்கும், அவனின் நண்பர்களுக்கும் வைத்தியம் பார்த்தே வெட்நரி டாக்டருக்கு படிக்கும் மேகமித்ரா பாதி மனித டாக்டருக்கு படிக்காமலே தேர்ச்சி பெற்று விட்டாள் என்பது தனி கதை. பத்ரி சூழ்நிலையை சரி செய்யும் பொருட்டு அவசரமாக வாயை திறக்க...

பத்ரியை முந்திக் கொண்டு சித். “ஏன்டா நீயெல்லாம் ஒரு அண்ணாவாடா?” என்று “வள்” என்று எரிந்து விழுந்தான் சித் என்று அழைக்கப்படும் சித்திக்.

“நான் ஒரு அண்ணன் இல்லைடா மூன்று பேருக்கு அண்ணாவா இருக்கேன்.. இப்ப என் அண்ணன் திருப்பணியில் என்ன குறை வந்து விட்டதுன்னு இவ்வளவு கோபப்படுற?” என்றான் பத்ரி இப்ப எதுக்கு இப்படி ஒரு கேள்வியை கேட்கிறான் என்று புரியாத திகைப்பில்.

அவனின் பதிலால் வெகு கடுப்பான சித்... “ஆகா... அப்படியே பாசம் தான்.. எந்த அண்ணனாவது பிசிகல்லி சாலஞ்டான தங்கையை இப்படித் தான் பொங்கி வழியும் கூட்டத்தில் எங்கேடாவது கெட்டுப் போன்னு விடுவாங்களாடா?” என்று ஆதங்கம் பொங்க கேட்டான் அந்த சித்.

“என்னது ஃபிசிக்கலி செலஞ்சுடா(physically challenged)? அப்படின்னு அவள் சொன்னாளா???” என்று சகோதரர்கள் இருவரும் கோரஸ்சாக இழுக்க..

“அவங்க இதை வேற வாயை திறந்து சொல்லனுமா?? பாவம் நடக்க முடியாம... ஒவ்வொரு அடிக்கும் அங்க தடுமாறி.. சுவறை பிடித்துக் கொண்டு நடப்பது கண்ணுக்கு தெரியலை??” வேதனை மண்டிய குரலில் மேக மித்ராவை ஒரு முறை திரும்பி பார்த்தபடி சொன்னான் அந்த சித்.

அதை கேட்ட மாத்திரத்திலே கார்த்திக் குலுங்கி, குலுங்கி சிரிக்க ஆரம்பிக்க.. தன் சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிய பத்ரி...

“டேய்.. அவள் ஃபிசிக்கலி செலஞ்சுடா (physically challenged) இல்லைடா.... அவள் ஹாப் சாரி செலஞ்சு” என்று ஆரம்பித்தவன் சித்திக்கின் முகம் போன போக்கை பார்த்துவிட்டு அதற்கு மேலும் அடக்க மாட்டாமல் பக்கென்று சிரித்தான் பத்ரி...

“என்ன?? அப்போ.. அப்ப...” என்று ஒன்றும் புரியாமல் சித் என்று செல்ல சுருக்கமாக விழிக்க...

“அவளுக்கு பாவாடை தாவணி கட்டி நடக்க வராது... அவளும் கேப்ரியும் ஒட்டி பிறந்த இரட்டையர்கள். அது இல்லாமல் தான் அம்மணி கம்பிமேல் நடப்பது போல் சாகசம் பண்ற எபக்டில் (effect) நடக்கறா...” என்று சிரிப்புக்கிடையே பத்ரி விளக்கினான்.

“வாட்?” என்று சித் அலற..

தங்கையின் பேச்சை இதற்கு மேலும் இழுத்தால் கார்த்திக்கின் கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும் என்று உணர்ந்தவன்,

“அவள் கதையை விடு... ஆமாம் நம் புது ரூம்மேட் எப்படி?” என்று பேச்சே திசை திருப்பினான்.

அலட்சியமாக தோளை குலுக்கியவன் “நம் புது ரூம்மேட் பயங்கர அமைதிடா.. மின்னல் மாதிரி எப்ப வராங்க எப்ப போறாங்கன்னே தெரியலை..” என்றான் அமைதியாக சித்.

“என்னது வராங்க, போறாங்களா?? போச்சுடா.. வயதானவரா? ஆனா நான் பின்னாடி இருந்து பார்க்கும் போது ரொம்ப வயசானவன் மாதிரி ஒன்றும் தெரியலையே?” என்றான் தீவிரமாக யோசித்தபடி பத்ரி.

இதுவரை அவர்கள் அறையில் தங்கி ஓடியவர்கள் எல்லாம் ஒரளவு அவர்கள் வயதை ஒத்தவர்களாக தான் இருந்தனர். வயதானவரை எப்படி ரூமை விட்டு காலி பண்ண வைப்பது என்று அவன் மனம் அதற்குள்

திட்டமிட தொடங்கியது.

“ம்கூம்.. அலக் நந்தாவிற்கு இருபத்தி மூன்று இல்லை இருபத்தி நான்கு இருக்கலாம்” என்றான் சித் யோசனையுடன்.

“அலக்நந்தாவா??? கேட்டா பெண் பெயர் மாதிரி இருக்கு..??? அப்ப அலக்ஸ்? என்றான் அமைதியாக இத்தனை நேரம் இவர்கள் சம்பாஷனை கேட்ட கார்த்திக்.

யார் இவன் எங்கள் பேச்சிற்கு இடையே என்பது மாதிரி பார்த்த சித் எரிச்சலுடன் “பெண்ணிற்கு பெண் பெயர் வைக்காமல் ஆம்பள பெயரா வைப்பாங்க?” என்று இடக்காக மொழிந்தவன் பத்ரியிடம் திரும்பி “ஆமாம் யார் இந்த அலக்ஸ்” என்று அவர்களையே எதிர் கேள்வி கேட்டான் சித்.

“என்னது பொண்ணா?” என்று பத்ரி அதிர..

“உங்க ரூம்மேட் பொண்ணா?” என்றான் கார்த்திக் பத்ரியின் அதிர்ச்சிக்கு கொஞ்சமும் குறையாமல்.

இன்று...
அவர்கள் அறையில்...

“கேட்கறது காதில் விழலையா பத்ரி? இப்ப என்னோட லைப்ரரிக்கு வரியா இல்லையா?” என்று அலக்நந்தாவின் ஆங்கிலம் கலந்த ஹிந்தி ஆவேசமாக செவிப்பறையில் அறைய...

சித் புயல் வேகத்தில் அவர்களின் அறைக்குள் நுழைத்தான்.

ஹாலில் இருந்த கவுச்சில் சம்மனமிட்டு அமர்ந்து எதையோ வாயில் பத்ரி கொறித்துக் கொண்டிருக்க அவனுக்கு முன்னால் ஆக்ரோஷமாய் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, முகத்தையே மறைக்கும் சோடா புட்டி கண்ணாடி அணிந்து தன் முட்டை கண்ணால் அவனை வைத்த கண் வாங்காமல் முறைத்தபடி ஜல்லி கட்டிற்கு சிலிர்த்துக் கொண்டிருக்கும் காளையை போல் அலக்நந்தா நின்றிருந்தது கூட சித் கண்ணிற்கு பெரிதாக தெரியவில்லை. ஆனால் அவள் இப்போ பேசிய பேச்சுதான் தன் செவியின்

கேட்கும் திறனையே சந்தேகப்பட வைத்தது.

தனக்கு முன்னால் இருந்த டீ டேபிளை கூட பார்க்காது காலில் இடித்துக் கொள்ள.. அதை உணர கூட முடியாத அதிர்ச்சியில் "இப்ப.. இப்ப... பேசியது நீயா.. நீயேதானா.... அலக்நந்தா?" என்று ஆச்சரியம் தாங்காது கேட்டவன் அதே டீ டேபிளில் அமர்ந்து தன்னையும் அறியாது தன் காலை தடவி விட்டபடி அவளை வெறித்தான்.

ஏற்கனவே கடும் கோபத்தில் இருந்தவள் இவனின் இந்த கேள்வியால் இன்னும் கோபம் தலைக்கு ஏற.. இத்தனை நேரம் பத்ரியிடம் செலுத்திய அதே உக்கிர பார்வையை அப்படியே அவன் பக்கம் திரும்பி

"இல்லையே... நான் சும்மா வாயை மட்டும் அசைத்தேன்.. பின்னாடி இருந்து எனக்கு டப்பிங் குரல் கொடுக்கிறார்கள்!!!" என்று திருப்பி அடித்தாள் அலக்நந்தா.

"நீ என் ரூம்மேட் இல்ல.. நீ நிச்சயம் அலக்நந்தாவா.. இருக்க முடியாது ?" என்றான் தீர்மானமாக சித்.

"ஏன்டா.. ஏன்டா நீ வேற???? அவள் தான் க்ரவுண்டு ப்ளோர் மட்டும் இல்லாது அன்டர் க்ரவுண்டில் இருப்பவர்களுக்கு கூட கேட்கும் அளவு கத்திக் கொண்டு இருக்கிறாள் இப்ப போய் அவள் அலக்நந்தா தானான்னு கேள்வி கேட்கற?" என்றான் பத்ரி அவனை முறைத்தபடி.

எதுவும் பதில் போசாது அவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்தபடி திருதிருவென்று விழித்தான் சித்.

அவனாக இருக்கப் போய் வாயடைத்து போய் அமர்ந்திருந்தான் அவனிடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும் வாய் மட்டும் அல்ல... மயக்கமே போட்டு விழுந்திருப்பார்கள்.

காரணம் அங்கே ஐந்தடி ஐந்து அங்குலத்தில் ரூமிற்குள்ளேயே மூன்று இன்ச் ஹீல்ஸ் அணிந்து தன் ஆஸ்தான ∴பேடட் ஜின்ஸும், மெரூன் நிறத்தில் டீசர்ட் உடுத்தி, முடிந்தும் முடியாமலும், அவிழ்ந்தும் அவிழாமலும் இருந்த கூந்தலுடன் ஆவேசமாக நிற்கும் அந்த உருவம் தான்

இத்தனை ரசாபாசத்திற்கும் காரணம்.

இதுநாள் வரை அலக்நந்தா பேசுவதை கேட்பதற்கு அவர்கள் டிவியை மியூட் செய்தால் மட்டும் போதாது பக்கத்து ரூமில் இருக்கும் டிவியை கூட மியூட்டில் போட சொன்னால் தான் அவள் பேசுவது ஓரளவு காதில் கேட்கும். பரம சாதுவாக இங்கே வந்து தங்கிய அந்த அலக்நந்தாவை தப்பி தவறி ஒருமுறை கூட அதிர்ந்து பேசியோ இல்லை எனக்கு இந்த உதவி செய் என்று சாதாரணமாக பிறரிடம் கேட்டு கூட பார்த்திராத. அப்படிப்பட்ட அலக்நந்தா இன்று பில்டிங்கே அதிரும் படி பேசுவதை கேட்டால் அவனுக்கு வாயை அடைத்ததோடு நெஞ்சையும் சேர்ந்து அடைக்க.. அவசரமாக அதை நீவியபடி பத்ரியின் புறம் திரும்பினான்.

“டேய் பத்ரி... என் கையை கொஞ்சம் கிள்ளுடா எனக்கு இது கனவா நிஜமான்னு தெரியனும்.. உலகத்தில் ப்ரெயின் டிரான்ஸ்பிளாண்ட் இன்னும் நடை முறைக்கு சாத்தியப்படாத வரை இது நம்ம அலக்நந்தாவா இருக்க முடியாது தானே?” என்றபடி தன் கையை நீட்டினான்.

பத்ரி கிள்ளுவதற்குள் முந்திய அலக்ந்தா அங்கே இருந்த பேப்பரை சுருட்டி அவன் கையில் ஒரு போட்டாளே ஒரு போடு...

“ஸ்ஸ்.. வலிக்குதே... அப்ப நீ.. நிஜமாகவே எங்க ரூம் மேட் அலக்நந்தா தானா.. இல்ல அவளுடயை இவில் டிவின் சிஸ்டர் யாராவது...?” என்று அவன் எதையும் முழுவதுமாக நம்ப முடியாது சந்தேகமாக இழுக்க..

“ம்கூம்... இதை ஏன் அங்க கேட்கிற என்னிடம் கேளு நான் சொல்றேன் சித். இப்ப உன் முன்னால் நடந்தது தான் அக்மார்க் நிஜம். இதுதான்டா அலக்நந்தாவுடைய அசல் முகம்... இத்தனை நாள் இல்ல... இத்தனை மாசம் நம்மை சாது மாதிரி நம்ப வைத்து ஏமாற்றியது அலக்நந்தாவின் நடிப்பு திறமைடா” என்ற பத்ரியின் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைக்கும் பார்வையும், அதை படு நக்கலாக சொன்ன குரலையும் கண்டு ஒரு நிமிடம் அந்த அறையே மயான அமைதி பூண...

பத்ரி உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையும் நகக்கண்ணில் ஏற்றப்பட்ட ஊசியாக சுருக்... சுருக் என்று வலிக்க தைக்க... பற்களை இருக்க மூடி தன் வலியை கட்டுப்படுத்த முயன்றாள்.. முயன்றாள் அடுத்த ஒரு நிமிடமும்

தாடை இறுக.. முயன்றபடியே தனக்குள் போராடினாள்....

அத்தியாயம் - 2

நான்கு மாதங்களுக்கு முன்பு.... ஒரு சுபயோக சுபதினத்தில்....

"உங்க ரூம்மேட் பொண்ணா?" என்றான் கார்த்திக் பத்ரியின் அதிர்ச்சிக்கு கொஞ்சமும் குறையாமல்.

வந்ததில் இருந்து நாதஸ்வரக்காரன் காதில் அமர்ந்து நாயனம் வாசிப்பது போதாதென்று.. இவர்களும் தங்கள் பங்கிற்கு ஒரு சேர அலற எரிச்சலாக இருவரையும் பார்த்தான் சித்.

பத்ரி தொண்டை கிழிய கத்தினான் என்றால் அதில் ஒரு அர்த்தம் இருக்கிறது... ஆனால் இந்த சுருள் முடி மண்டையன் என்னத்துக்காக அலறனும்?? அதுவும் அவர்கள் ரூம்மேட்டை பற்றி இவன் என்ன கேட்பது? என்ற கேள்வி குடைய கார்த்திக்கை உற்று நோக்கினான் சித்.

தான் இங்கு வந்ததில் இருந்து பத்ரியை விட்டு ஒரு இன்ச் அகலாதது மட்டும் அல்லாமல் தன்னை முறைப்பதற்கும், கேள்வி கேட்பதற்கும் இவன் யார்? என்ற எண்ணம் ஓட முகம் தெரியாத அன்னியன் முன் தங்கள் ரூம்மேட்டைப் பற்றி பேச அவன் துளியும் விரும்பாதது பிரதானமாக இருக்க அந்த சுருள் முடிகாரன் புறம் நன்றாக திரும்பிய சித்..

தன் ஆறு அடிக்குமாக நிமிர்ந்து "ஐயம் மிர் சித்திக் அல்உமர் அலிக்கான்" என்று அமைதியான அழுத்ததுடன் கிட்டதட்ட பிரகடனப்படுத்தினான்.

தன்னைப் பற்றியோ இல்லை தன் பின் புலத்தைப் பற்றியோ எவரிடமும் வாய் விட்டு சொல்ல வேண்டிய அவசியமில்லாமலேயே... அவன் தன் பெயர் சொன்ன விதம்.. பல நூற்றாண்டாக அவன் உடம்பில் ஓடும் ராஜ ரத்தத்தில் இழைந்தோடும் அசாத்திய கர்வமும் ராஜ தோரனையும் எதிரில் நிற்பவர்களை எதைப் பற்றியும் யோசிக்காமல் சட்டென்று இரண்டு அடி பின் தள்ளி நிற்க வைத்து விடும் என்பதை சித் நன்கு அறிவான்.

அதுவும் குறிப்பாக தனக்கு பேச பிடிக்காத நேரத்தல்... யார் என்று தெரியாவிட்டாலும் கூட அந்த பெயரே கேட்பவர்கள் தங்களையும் அறியாது ஒரு அச்சத்தை தோற்றுவிப்பதை சமயத்திற்கு தகுந்த மாதிரி தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வது வழக்கம்.

அப்படி ஒரு எதிரொளியை கார்த்திடமிருந்து எதிர்பார்க்க...

“அப்படியா??? சரி... இருந்துட்டு போ...” என்று தெனாவெட்டாக மொழிந்த கார்த்திக் “ஆனா... முதலில் இப்படி சின்ன புள்ளத் தனமா உங்க பெயரை சொல்லி.. பையாஸ்கோப் காட்டுற வேலை எல்லாம் உங்க ரூம்மேட்ஸோட நிறுத்திக்கோங்க சொட்டா நவாப்!!!” என்றான் கார்த்திக் அமர்த்தலாக.

“மை காட்..... கார்த்திக்??? கார்த்திக்.... நீயா???” என்று அவனை சரியாக யூகித்தவன் தன் கண்களையே நம்ப முடியாது ஒரு தரம் ஏறி இறங்க அவனை பார்த்தபடி இறுக்கம் தளர தன் குதிரை வால் ஆட தலையை பின்னுக்கு தள்ளி சிரித்தவன் “மேன்... ஐ கான்ட் பிலிவ் திஸ்” என்று கார்த்திக்கின் கையைப் பற்றி இழுத்து கட்டி அனைத்து சிரித்தபடியே முதுகில் வேகமாக ஒரு தட்டு தட்டினான்.

கார்த்திக்கும், பத்ரியையும் தவிர அவனின் நண்பர்கள் வட்டத்தில் தப்பித் தவறி விளையாட்டுக்கு கூட அவனை அப்படி அழைக்க தைரியம் வந்ததில்லை என்பது தான் உண்மை. அதுவும் பத்ரி அவன் கிளாஸ் மேட்டாக இருந்த போதிலும் கார்த்திக்கும், சித்துவும் சம வயதினர்.

“நானே தான்.. கார்த்திக்கே தான்..” என்று மொழிந்தபடியே சித்தின் இடியாய் வந்த அடியை முகம் சுளிக்காமல் வாங்கிக் கொண்ட கார்த்திக் அவனிடமிருந்து விலக.

“இதுவரை நாம் போனில் மட்டும் தான் பேசி இருக்கோம்.. அதுதான் குரல் அடையாளம் தெரியவில்லை.. இந்த தடியனும் போனில் உள்ள உன் ப்ரோபையில் பிக்சரில் நீ ரொம்ப மெலிதாக இருந்ததை தான் பார்த்தேன். அதனால் தான் என்னால் கண்டுபிடிக்க முடியலை” என்று பத்ரியை முறைத்தபடி கார்த்திக்கு அவன் கேட்காமலேயே பதில் கூறினான் சித்.

“அதுவா.... எங்கே அவனுடைய கேர்ள் ப்ரண்ட்ஸ் எல்லோரும் கட்டுமஸ்தான இந்த எயிட் பேக் பாடியைப் பார்த்து அப்படியே... மயங்கி விடுவாங்களோன்னு ஸ்டமக் பர்னிங்ல என்னோட பழைய மோசமான படத்தை வைத்திருக்கிறான்” என்றான் கார்த்திக் பத்ரியை முறைத்தபடி.

“யார் நான்.. இந்த.. கட்டு.. கட்டாக.. கட்டுவிரியன் பாம்பு மாதிரி இருக்கும் உன் கட்டுமஸ்தான எயிட் பேக்கை பார்த்து பொறாமை படுகிறேனா???” என்றான் பத்ரி சளைக்காமல்.

“என்னது என் எயிட் பேக் கட்டுவிரியனா??? என்று பல்லை கடித்தவன்.. “ஏன்டா சொல்லமாட்ட? பெண்ணிற்கும் ஆணிற்குமே அடையாளம் தெரியாத நீ இப்படி தான் பேசுவ... முதல்ல மங்கியை கூப்பிட்டு உன்னை ஐ செக் பண்ணனும்.” என்று சிலிர்த்துக் கொண்டு கேட்டான் கார்த்திக்.

“என்னது மங்கியா?” என்று சித் கேட்க.. அதைக் காதிலே வாங்காத பத்ரி தன் தம்பிக்கு திருப்பி கொடுக்கும் ஆர்வத்தில்.

“டேய்.. வீணா அதைப் பற்றி பேசி என் வாயை கிளறாத... நான் ஊருக்கு கிளம்பும் அவசரத்தில் பின்னாடி தான் பார்த்தேன் பார்த்த வரையில் ஜீன்ஸும், புல் ஹாண்ட் சர்ட்டும்.. அப்புறம் நீண்ட தலைமுடியும் தான் கண்ணுக்கு தெரிந்தது. இவன் அலக்நந்தான்னு சொன்னது கூட என் காதில் அலக்ஸ்நந்தான்னு விழவே அதுக்கு மேல எதையும் யோசிக்கலை...” என்று கடுப்பாக தன்னிலை விளக்கம் கொடுத்தான் பத்ரி.

“இந்த விஷயத்தில் நான் கார்த்திக் கட்சி.. அலக்ஸ்ன்னு பெயரை வைத்து பையன்னு நினைத்துக் கொண்டாலும்... அது எப்படிடா அந்த நீண்ட முடியைப் பார்த்த பின்னும் கூடவா உனக்கு சந்தேகம் வராமல் போகும்??” என்று எதிர்கேள்வி கேட்டான் சித்.

“அப்படி போடுடா” என்று சித்திற்கு ஹய் பைவ் கொடுத்தான் தம்பிக்காரன்.

அவர்களை வெறுப்பாக ஒரு பார்வை பார்த்த பத்ரி “ஏன்டா சொல்ல மாட்ட... பாடகர் நரேஷ் ஐயர் மாதிரி நெற்றியில் விழும் சுருட்டை முடி வைத்துக் கொண்டு திரியறவன்... நீ..”

“என்னடா அவ்வளவு இளக்காரமா சொல்ற? அன்றைக்கு நல்லா இருக்குன்னு சொன்ன…??” என்று அவனின் பேச்சை தடுத்து நிறுத்திய கார்த்திக்.

“ம்ம்.. அது அவருக்கு சொன்னேன்.. உனக்கு சொல்லலை… அவர் பாடகர்.. ஃபங்கியா இருந்தால் நல்லாதான் இருக்கும்… ஆனா நீ மல்டி கோர் பிசினஸ் செய்யும் ஒரு பிசினஸ் மேன்… நீ வைத்தால் எப்படி இருக்கும்? சூப்பர் ஸ்டார் மாதிரியே நாமும் டிரஸ் பண்ணா உடனே நாமும் சூப்பர் ஸ்டார் மாதிரி தெரிய மாட்டோம்டா.. பவர் ஸ்டார் மாதிரி தெரிவோம்…” என்று போகிற போக்கில் கார்த்திக்கை கலாய்க்க.. சித் அடக்கி பார்த்தும் முடியாமல் வெடித்து சிரித்து கார்த்திக்கின் கனல் கக்கும் பார்வைக்கு ஆளானான்.

“ரொம்ப சிரிக்காதடா.. மச்சி நீ மட்டும் என்ன? உங்க ஊர் ஹீரோ பிரபாஸ் பாகுபலி படத்தில் வருவது போல் முடியை வைத்திருக்க.. அதனால் உனக்கு அரை அடி போனி டெயில்…. அப்ப உன்னை பின்னால் இருந்து பார்க்கறவங்க உன்னை பொண்ணுன்னு நினைக்க முடியுமா…??? இல்ல… இப்ப கை தாங்கலா அழைத்துகிட்டு வந்தியே மங்கி… அவள் இரண்டு மாசம் முன்பு வரை என்னை மாதிரி ஹேர் ஸ்டைலில் தான் திரிந்தாள்.. அதனால் அவளை பையன்னு சொல்ல முடியுமா??” என்று சித்திடம் அடுக்கிய பத்ரி…

“இதை எல்லாத்தையும் விட… இன்னும் கொஞ்ச நேரத்தில் என் அண்ணன் ஸ்டேஜில் வந்து விடுவான் அவனை பார்… நீயாவது குதிரை வால் போடும் அளவு தான் முடி வைத்திருக்க.. ஆனா ஆர்யா… கீழே பட்டு குஞ்சலம் வைத்து… தழைய தழைய சடை பின்னி… சரம் சரமாக பூ வைக்கும் அளவு ஆறு அடிக்கு முடி வளர்த்துக் கொண்டு திரியறான்.. அதனால தலைமுடியை வைத்து அது ஆணா பெண்ணான்னு எல்லாம் ஒரு முடிவிற்கு வர முடியாது… அதை முதலில் புரிந்து கொள்” என்றான் பத்ரி எரிச்சலாக.

பதில் பேச வாயை திறந்த சித்திக்கை தடுத்து நிறுத்திய கார்த்திக் “விடு சித்… நீ என்ன சொன்னாலும் தன் பேச்சுத் திறமையால் சாமர்த்தியமாக பதில் சொல்லி வாயை அடைத்து விடுவான். இவனுக்கு பதில் கொடுக்கும் சரியான ஆள் என் பாட்டிதான்” என்று மொழியும் போதே கார்த்திக்கின் ஐ போன் அடிக்க அவசரமாக அதை காதில் வைத்தவனின் முகம் திடுக்கிட்டு…

சுற்றியும் முற்றியும் விழிகள் எதையோ தேட.. தேடியது கிடைக்காததில் எரிச்சலை கசிய விட “சரி.... சரி” என்று முனுமுனுத்துவிட்டு போனை அணைத்தான்.

“யாருடா?” என்றான் பத்ரி அவனின் முகத்தை பார்த்தபடியே இருந்தவன்.

“எல்லாம்... நம் நாட் நாட் செவன் தான்.. வேற யார்?”

“நாட்... நாட்... செவனா?” என்று கேள்வியாக அவர்கள் இருவரையும் பார்த்தான் சித்.

“ஏய்... அது என் பாட்டி...”

“உன் பாட்டிக்கு பெயர் நாட் நாட் செவனா?” என்று மேலும் குழும்பி போய் கேட்டான் சித்.

“ம்ம்...” என்று தலையை ஆமோதிப்பாக ஆட்டியவன் “பொதுவா.. டி.வியில் நமக்கு பிடித்த பாட்டு வந்தா என்ன செய்வோம்??? நாமும் கூட சேர்ந்து பாடுவோம்... அது தானடா ஊர் உலகத்தில் எல்லோரும் பண்ணுவோம்??? ஆனா எங்கள் பாட்டி இருக்கே... எந்த ஜேம்ஸ் பாண்ட் படம் ஓடினாலும் டையலாக்கை கூடவே சேர்ந்து பேசும்... அப்படி ஒரு ஜேம்ஸ் பாண்ட் வெறி... அதை விட எங்கள் எல்லாரோட பர்சனல் லைப்லையும் மூக்கை நுழைப்பதையே தன் வாழ்க்கையின் லட்சியமாக கடைபிடிப்பவர்கள்... அதனால் தான் இரண்டுமாய் சேர்த்து அப்படி ஒரு பெயர்” என்று பத்ரி முடித்தான்.

“ஒன்னு சொன்னா நம்ப கூட மாட்ட சித்... இவன் மேலே படிக்க மாட்டேன்னு பிடிவாதமாக பிசினஸில் உட்கார... ஆர்யாவும் பாட்டியும் சேர்ந்து ப்ளான் பண்ணி.. இவனுடைய கையெழுத்தை இவனை விட அழகாக பாட்டியே போட்டுதான் அங்கே எம்.பி.ஏ படிக்க அனுப்பி வைத்தார்கள்... அது மட்டுமா??? இப்ப கூட நான் போனை எடுத்து காதில் வைத்தவுடன் என்ன தெரியுமா சொன்னாங்க?? இந்த சுவர் பாம்பன் பாலம் கட்டிய சங்கர் சிமெண்டில் கட்டியதாம்?” என்று அவன் சாய்ந்திருந்த சுவரை தட்டிக் காட்டினான் கார்த்திக்..

அதற்கு அந்த நாட் நாட் செவன் கிழவி என்ன சொல்லி இருக்கும் என்பதை உணர்ந்த பத்ரி பக்கென்று சிரிக்க தொடங்க...

“அதுக்கு???” என்று சித் மலங்க.. மலங்க விழித்தபடி.

“ம்ம்.. அதனால் இந்த சுவருக்கு நாம முட்டு கொடுத்து மூன்று பேரும் நிற்க வேண்டாமாம்... அதாவது போடா போய் வேலையை பாருன்னு சொல்ற விதம்” என்று நேரிடியாக விளக்க சித்தின் கண்கள் ஆச்சரியத்தில் தெரித்தது.

“அவன் இன்றி ஒரு அணுவும் அசையாதுன்னு யாரைப் பார்த்து சொன்னாங்களோ இல்லையோ இந்த கிழவிக்கு தெரியாமல் நான் காலை கூட ஆட்ட முடியாது போல... எனக்கு என்னமோடா பத்ரி தனி ஒருவன் படத்தில் வருவது போல நம் உடம்பிலும் இந்த கிழவி எதாவது சிப்பை வைத்திருக்குன்னு தான் நினைக்கிறேன்.. இல்லன்னா கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஆள் கண்ணிலேயே படலை.. ஆனா அநியாயத்திற்கு சரியா சொல்றாங்களே!!!” என்று தன் சந்தேகத்தை பத்ரியிடம் தெரிவித்தான் கார்த்திக்.

“ம்கூம்.. இத்தனை நேரத்திற்கு செய்யாமல் இருந்தால் தான் ஆச்சரியப் படனும்..” என்று பத்ரி புன்னகையுடனே மறு மொழிக்க.. இவர்கள் இருவரையும் விசித்திரமாக பார்த்தான் சித்.

“போன் வந்ததுக்கு அப்புறமும் நான் இங்கே நின்று பேசிட்டு இருந்ததை பார்த்தாங்கன்னு வை... ஷங்கியை விட்டு எதாவது ஜூஸ் கொடுத்து அனுப்பி நம்மை தலை தெரிக்க ஆளுக்கு ஒரு பக்கம் ஓட வைப்பாங்க... அவுங்க அந்த எக்ஸ்ட்ரீம் போக நாம ஏன் விடனும்? நீயும் சித்தை அப்பாகிட்ட அறிமுகப்படுத்து.. நானும் கிளம்பறேன்...” என்று பத்ரியிடம் தெரிவித்தவன் “அப்புறம் மீட் பண்ணலாம் பாஸ்..” என்று சித்திடம் விடைபெற்றுக் கொண்டு இரண்டு அடி எடுத்து வைத்து முன்னே நகர்ந்தவன் ஏதோ உறுத்த பட்டென்று திரும்பி...

“சித்... உங்க புது ரூம்மேட்டின் பெயர் என்ன சொன்ன?” என்றான் புருவங்கள் முடிச்சிட.

“அலக்நந்தா” என்றான் சித் தெளிவாக.

“ஓ!!” என்றபடி கார்த்திக்கு முகம் பிரகாசம் அடைய அதைக் கண்ட பத்ரிக்கு உள்ளே குறுகுறுத்தது.

“ஏன்டா?” என்றான் யோசனையோடு பத்ரி.

“ம்கூம்.. ரொம்ப வித்தியாசமான பெயரா இருக்கு இல்லை?” என்று தலையை அசைத்து விட்டு அவசரமாக முன்னே நகர்ந்த கார்த்திக்கின் மனம் “அலக்நத்தா..” 'இந்த பெயரை எங்கோ கேட்டிருக்கேன்…எங்கே..??? எங்கே..???' என்று தீவிரமாக யோசனையில் மனம் இறங்க… நினைவு தானாக “அவளை” நோக்கி ஓடியது.

இந்நேரத்திற்கு “அவள்” இருந்திருந்தால் யார், எங்கே, எப்போ சொன்னார்கள் என்ற முழு விபரத்தையும் அக்கு வேறு ஆணிவேறாக சொல்லி இருப்பாள். பார்த்ததையும், கேட்டதையும் அப்படியே விலாவாரியாக சொல்லும் “போட்டோ ஜினிக் மேமரி” என்று அவளை பற்றி நினைக்கையிலேயே உள்ளுணர்வு ஏதோ உணர்த்த வேகமாக திரும்பி கார்த்திக்கின் கண்கள் அந்த ஹாலின் குறுக்கும் நெடுக்குமாக நூறு பேர் நடமாடிக் கொண்டிருக்க ஈட்டி போல பார்வை நேராக “அவளின்” கண்ணில் குத்தி நின்றது.

எப்பொழுது வந்தாள்? என்று திடுக்கிட்டு எண்ணுகையிலேயே.. நிச்சயம் இப்பொழுதுதான் வந்திருக்க வேண்டும் இல்லை என்றால் அவளின் வருகையை யாரும் சொல்லாமலே அவன் உணர்ந்திருப்பானே!!! என்று சிந்தனை விரிகையிலேயே பிரிக்க முடியாத அவளின் பார்வையை பிரித்துக் கொண்டு மெல்ல அங்கிருந்து நகர்ந்து சென்றாள் “அவள்”.

கண்டும் காணாதது போல் அவசரமாக தன் பார்வையை திருப்பிக்கொண்டு போன “அவளின்” மேல் கரை புரண்டு கோபம் ஒட… அதை விட நெஞ்சு முட்ட காதலும் கரை புரள… இதை எதையும் வெளியே காண்பிக்க முடியாத சூழல் தன்னை வலையாக பின்னி இருக்கும் தன் நிலையை மறந்து அவள் புறம் ஒரு அடி எடுத்து வைக்க… அவனை திடுக்கிட்டு சுய உணர்வு பெற்று நிற்க வைத்தார் அந்த தனி தவில் வாசித்தவர்.

அவனுக்கு பத்தடி தூரத்தில் தான் நாதஸ்வர கச்சேரி அரங்கேற அதில் தனி தவில் வாசித்துக் கொண்டிருந்தவர் இன்று தவில் கிழியாமல் என் கையை எடுக்க மாட்டேன் என்று "தன் அம்மா மேல் சத்தியம்" செய்து கொடுத்து விட்டு வந்தவர் போல் தன் மொத்த திறமையும் அதில் காட்டி.. அந்த தவிலை உலுக்கி எடுக்க.. காதல் முக்கியமா? காது முக்கியமா? என்று கேள்வியில் காதே முக்கியம் என்று தீர்மானித்து அவசராமாக அங்கிருந்து நகருகையில்தான்…

அவன் மனம் மிக துள்ளியமாக அலக்நந்தாவின் பெயரை யாரோ வீட்டு ஆட்கள் பேச்சில் வந்தது போல் மண்டையில் மணி அடிக்க… தனக்கு முன்னே மேக மித்ரா தத்தி தவழ்ந்து சுவரை பிடித்தபடி நடந்து வருவது தெரிந்து.

"ஏய் மங்கி" என்று அழைத்தபடி அவன் முன்னாடி சென்றவன் "அலக்நந்தா பற்றி உனக்கு தெரியுமா?" என்று தொண்டை கிழிய கத்தினான்.

"என்னது அல்க்கையா?? நீ சொல்றது சரிதான்டா அண்ணா… நானே எப்போ அவிழ்ந்து விடுமோன்னு தாவணியில் ஒரு கையும்… தடுக்கி விழப்போறேனோன்னு பாவடையில் ஒரு கையும்.. இதோ இந்த தலையில் இருக்கும் சந்திர பிறையும்.. சூரிய பிறையும்.. வழுக்கிட்டு வந்து கண்ணில் விழுது.. சுத்தமாக கண்ணு தெரியலை.. சுவற்றை பிடித்துக் கொண்டு தடுமாறிய நிலையில் தான் பத்ரியோட ப்ரண்டு என்னை கை தாங்கலாக அழைத்து வந்தார். நீ சொல்ற மாதிரி ஒரு அல்லக்கை இருந்தா தேவலை தான்" என்று அவள் சொல்ல கார்த்திக்கு எங்காவது போய் முட்டிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

இவள் தெரிந்து சொல்கிறாளா இல்லை தெரியாமல் சொல்கிறாளா என்று கண்டுபிடிப்பது அவள் டிவின் சங்க மித்ராவால் தான் முடியும். சங்க மித்ராவிடத்திலாவது எதாவது விஷயம் கரக்க முடியும்.. ஆனால் இவள் மகா அழுத்தக்காரி.. அவளே தன் திருவாயை திறந்து சொன்னால் தவிர என்ன நினைக்கிறாள் என்று யூகிக்க கூட முடியாது. ஆர்யாவிற்கு அடுத்தபடியாக வீட்டில் மகா அழுத்தம் பிடித்தவள் இவள் தான்.

அப்படிப்பட்ட அழுத்தக்காரி எப்படி வாயில்லா பிராணிகளிடம் அத்தனை இரக்கத்துடனும், தயாளத்துடனும் நடந்து கொள்கிறாள் என்பது யாருக்கும்

புரியாத புதிர்!!!

எதுவும் பதில் பேசாமல் அவளை முறைத்தபடி அங்கிருத்து நகர்ந்தவன் இனி இதை நம் வீட்டு ஒற்றன் தாத்தாவிடம் தான் கேட்க வேண்டும் என்று முடிவு பண்ணி தாத்தாவை கண்ணால் தேடியபடியே வேகமாக நகர்ந்தான்.

“ஏய் உங்க பாபி மேடைக்கு வந்துட்டாங்க..” என்று ஆரம்பித்தவன் பட்டென்று திரும்பி “ஆமாடா… நீங்க தான் கல்யாணத்தையே ஊர் உலகத்திற்கு தெரியாமல் செய்றவங்க இந்த வளைகாப்பு மட்டும் எதுக்கு இத்தனை ஆடம்பரம், ஆரவாரம்? அதுவும் இந்த லேடிஸ் பங்சனுக்கு என்னை கூப்பிட்டது ரொம்ப டூ மச் டா” என்று கேள்வி கேட்டான் சித்.

“நீ என்னவோ இதுக்காகவே ஊரில் இருந்து கிளம்பி வந்த மாதிரி எதுக்கு மச்சி சீன்? மதுரை வரைக்கும் வந்துட்டியே அப்படியே இங்கே வான்னு சொன்னேன். அதுவும் உனக்கு வந்த வேலை முடிந்து விட்டதால் இப்படி வந்த…” என்று கூறியபடியே தன் முட்டியால் லேசாக அவன் வயிற்றில் ஒரு குத்து விட்டவன் “அடேய் உங்க ஹைதராபாத் பிரியாணிக்கு கூட வெயிட் பண்ண வேண்டாம்.. ஆனா எங்க ஊர் பழைய சோறு ஒருநாள் வெயிட் பண்ணாதான் கிடைக்கும். இந்த மகத்தான தத்துவம் தெரியுமா?”

“ஏதோ சினிமா டையலாக்குன்னு தெரியுது. ஆனா எந்த சினிமான்னு தெரியலை… அதைவிட எதுக்கு எங்க ஊர் பிரியாணியை இப்ப ஞாபகம் படுத்தறன்னு தான்…எனக்கு புரியலை” என்றான் சித்.

“ம்ம்ம்…. கல்யாணத்தை கூட நினைத்த நேரத்தில் நடத்திக்கலாம் ஆனா குழந்தை? சச்சிதேவாக இருந்தாலும் பத்து மாசம் பொறுத்து தான்டா ஆகனும்?!? அதனால் தான் இப்படி விழா கொண்டாடி எங்களை திசை திருப்பிக்கறது.. இல்லைன்னா எங்க அவசரத்துக்கு இவ்ளோ பொறுமை காத்தோன்னு வை… ஒன்னு குழந்தை குறை பிரசவத்தில் பிறக்கும்… இல்லை… எங்களுக்கு பைத்தியம் பிடிக்கும்… இதில் எது நடந்தாலும் மக்களுக்கு ஆபத்து என்ற நல்லெண்ணத்தில் இப்படி விழா கொண்டாடுவது” என்றான் பத்ரி.

“அடேய்… என்னவோ… இப்ப மட்டும் ஒழுங்கா இருக்கிறதா நினைப்பா? இப்பயும் அதே அரை கிறுக்குதனமா தான்டா சுத்தறீங்க??" என்றான் சித்.

கடகடவென்று தலையை பின்னுக்கு தள்ளி சிரித்தவன் “அப்படின்னா சொல்ற? சரி வா போய் என் குடும்பத்தின் அடுத்த நபரை அறிமுகப்படுத்தறேன்” என்று கூறியபடியே மேடையை நோக்கி அவனை அழைத்துக் கொண்டு நடையைக் கட்டினான்.

ஒருவழியாக கோபியர் கொஞ்சும் ரமணாவாக இருந்த தன் தாத்தாவை எப்படியோ பேசி சமாளித்து கொஞ்சம் தனியாக அழைத்துக் கொண்டு வந்த கார்த்திக் கேட்ட முதல் கேள்வி “அலக்நந்தாவை தெரியுமா?” என்றான் படபடப்பாக.

“தெரியுமாவா??? பார்த்தே இருக்கேன். ஏன் உன் பாட்டிக்கு கூட தெரியுமே??” என்று பதில் சொல்ல வாயடைத்து போய் நின்றான் கார்த்திக்...

இன்று... அவர்கள் அறையில்...

பத்ரி உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையும் நகக்கண்ணில் ஏற்றப்பட்ட ஊசியாக சுருக்... சுருக் என்று வலிக்க தைக்க.... பற்களை இருக்க மூடி தன் வலியை கட்டுப்படுத்த முயன்றாள்.. அடுத்த ஒரு நிமிடமும் தாடை இறுக.. தனக்குள் போராடினாள்....வலியும், வேதனையையும் விட அந்த ஏமாற்றம்.. என் பத்ரியா இப்படி என்ற ரணம் நெஞ்சை அறுத்தது.

தான் எதையோ நினைத்து அவனை துணைக்கு அழைக்க பத்ரி அதை இப்படி திரித்து விடுவான் என்று அவள் கனவிலும் கண்டாள் இல்லை. இதற்கும் அவள் பகல் கனவு காணும் ஆசாமி இல்லை சொல்லப் போனால் தன் வாழ்க்கையில் கனவே வேண்டாம் என்று ஒதுக்கியவள்.. ஒதுக்கி ஓடியவள்!!!

ஆனால் இன்றோ... நித்தமும் கனவு காண ஆசைப் படுகிறாள் தான்.. காணும் ஒவ்வொரு கனவிலும் இவனே நாயகனாக வரவேண்டும் என்ற பிராத்தனையுடன். தன்னுள் எழுந்து நிற்கும் இத்தனை மாற்றத்திற்கும்

காரணம் இதோ அவர்கள் ரூம் கவுச்சில் சம்மனமிட்டு அமர்ந்து சாவகாசமாக கையில் இருக்கும் சிப்ஸை தின்னும் இந்த பத்ரிநாத் சச்சிதேவ் அல்லவா!?!

இவன் உதிர்த்த வார்த்தைகளை வேறு யார் பேசி இருந்தாலும்... இந்நேரத்திற்கு அவனுடன் பேசுவது மட்டும் அல்ல.... அவன் முகத்தில் விழிப்பது கூட இதுதான் கடைசி தடவையாக இருந்திருக்கும்... நான்கு மாசம் முன்பு வரை அப்படித் தான் இருந்தாள். அதையும் மாற்றியது இதோ இதே பத்ரிதான்.

அவன் சொன்ன வார்த்தையில் பதில் பேச முடியாமல் தனக்குள் உடைந்து... உறைந்து போய் அலக்நந்தா சிலையாய் நிற்க.. முதலில் சுதாரித்த சித்..

கண்ணில் கோபம் மின்ன "டேய்..." என்று ஆவேசமாக வாயை திறக்க வேகமாக அவனை அடக்கினாள் அலக்நந்தா.

"அதுக்கு நான் பதில் சொல்கிறேன் சித்.. எனக்கான கேள்வியை நானே எதிர்கொள்ளும் தைரியம் எனக்கு உண்டு" என்று தீர்மானமாக சொன்னாள் அலக்நந்தா.

இவள் கேட்டுக் கொண்டாள் என்ற ஒரே காரணத்திற்காக உற்ற நண்பனான பத்ரியிடமே உண்மையை மறைத்தவன் சித். எதிரிகளின் வஞ்சனை எளிதில் ஏற்றுக் கொள்ளும் மனம் கூடவே இருக்கும் நண்பர்களின் துரோகத்தையும், புறக்கணிப்பையும் ஏற்பதில்லை... அதை அனுபவப் பூர்வமாக கண்டவள். தான் பட்ட வேதனையையும், ரணத்தையும் பத்ரியும் எக்காரணத்திற்காகவும் பட தேவையில்லை... அதுமட்டும் இல்லாமல் இதில் சம்பந்தமே இல்லாமல் சித் வேறு தேவையில்லாமல் பாதிக்கப் படுவானேன்? இப்பொழுது பத்ரி இருக்கும் மனநிலையில் சித் தரும் விளக்கத்தைக் கேட்கும் அளவு பொறுமை இருக்குமா? என்பது மில்லன் டாலர் கேள்வி.

"மாறாதது மாற்றம் ஒன்றுதான் என்று வாழும் வாழ்க்கையில் என்னை மட்டும் மாறாமல் இருக்க கூடாதுன்னு எப்படி எதிர்பார்க்கற பத்ரி?? எனக்கு பிடிக்காத விஷயத்தை நான் மாற்றுவது தப்பில்லையே?!? அதுக்கு பேர் எப்படி நடிப்பாகும்? நீ கூட தான் நேற்று வரை என்னை நண்பனாக பார்த்த..

இப்ப திடீரென்று விரோதி மாதிரி பார்க்கிற? அது நடிப்பு என்றால் அப்ப இதுவும் நடிப்பு தானே? நீ மாறலாம்.. ஆனால் நான் மாறக் கூடாதா? அது மாற்றம் என்றால் இதுவும் மாற்றம் தானே? நீ தானே இரவு எட்டு மணி மேல எதுக்காகவும் லைப்ரரிக்கு தனியாக போகாதேன்னு சொன்ன? எனக்கு தெரிந்த வரையில் அந்த லைப்ரரி இன்னும் அங்கே தான் பத்ரி... அதனால் தான் கூப்பிட்டேன்" என்று கூறியபடி பத்ரியின் கண்களை நேருக்கு நேராக எதிர்கொண்டாள்.

அவள் சொன்னதில் முற்பாதி காதிலே விழாதது போல்..."சொன்னேன் தான்... யார் இல்லைன்னு சொன்னது?? அப்போ.. நீ இங்க வந்த புதிதில் நான்கு கிலோ மீட்டர் தள்ளி இருக்கும் லைப்ரரிக்கு இரவில் நீ மட்டும் தனியாக போக... பயப்படுவயேன்னு ஒரு நல்ல எண்ணத்தில் சொன்னேன்.. நான் சொன்ன அந்த ஒரு வார்த்தையை உடும்பாக பிடித்துக் கொண்டு எப்பவும் உன் பாடி காடாய் என்னை துணைக்கு கூப்பிடுவாய் என்று முன்பே தெரிந்திருந்தால் சத்தியமா சொல்லி இருக்க மாட்டேன். கடந்த நான்கு மாசமா தலை எழுத்தேன்னு வந்தேன்... இனியும் செய்ய இஷ்டம் இல்லை.. வேணுன்னா இதோ சித் வந்து விட்டானே அவனை அழைத்துக் கொண்டு போ.. என்னை ஆளை விடு" என்றான் விட்டேத்தியாக பத்ரி.

"எனக்கு கண் இருக்கு பார்க்க... வாய் இருக்கு கேட்க. எது வேண்டும் என்றாலும் நானே கேட்டு வாங்கிக் கொள்வேன் பத்ரி. எனக்கான தேவையை நானே கேட்டு பூர்த்தி செய்துக் கொள்ளும் திராணி எனக்கு உண்டு.. நான் உன்னிடம் தான் கேட்டேன்" என்று பிடிவாதமாக மொழிந்தவள்... சட்டென்று அவன் கவுச்சின் முன்னால் மண்டி இட்டு... தன் கண்ணாடி இட்ட முட்டை கண் வழியாக அவனை நேருக்கு நேராக நோக்கியவள் "ஒரு உண்மையை மட்டும் சொல்லு பத்ரி.. இத்தனை நாள்... இத்தனை நாள்... என்னுடன் சைக்கிளில் லைப்ரரிக்கு.. வந்தது வெறும் பாடிகாடாக மட்டும் தானா பத்ரி?" என்று கேட்கும் போதும் அவள் குரலில் வழிந்த அந்த துக்கம், வருத்தம் ஆற்றாமை என்று எல்லாமாக ஒன்று சேர்ந்து பத்ரியை பந்தாக தாக்கியது.

அந்த தாக்குதலில் ஒரு வினாடி நிலைகுலைந்தவன் பின் சுதாரித்து.. இதற்கு பதில் சொல்லும் அளவுக்கு ஒன்றும் முக்கியம் இல்லை என்னும் ரீதியாக எதுவும் பதில் பேசாது... அசட்டையாக தோளை குலுக்கி விட்டு தீவிரமாக கையில் இருந்த சிப்ஸில் பார்வையை திருப்பினான் பத்ரி...

சட்டென்று அவன் கையில் இருந்த காலி கவரை பிடுங்கியவள் “எனக்கு பதில் சொல்வதை விட அந்த தீர்ந்து போன சிப்ஸ் பேக்கட் தானே முக்கியம்??? உள்ளே இன்னும் மூன்று பாக்கெட் இருக்கும் நல்லா வயிறு முட்ட தின்னு… யூ நோ வாட்… ஐ டோண்ட் வான்ட் அ ஹீரோ ஆர் அ பாடிகாட் இன் மை லைப்… என் வழியில் எனக்கு போக தெரியும்…” என்று வெறுப்புடன் மொழிந்தவள்.. அங்கே கிடந்த சாவியை எடுத்துக் கொண்டு துள்ளிக் குதித்து ரூமை விட்டு புயல் வேகத்தில் வெளியேறினாள்..

அவள் புயல் வேகத்தில் வெளியேறிய அடுத்த நொடி இருவர் சம்பாஷனையையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்த சித்திடம்..

“மூன்று இன்ச் ஹீல்சில் நடக்கவே முடியாது… இவளால் எப்படிடா ஓட முடியுது?!? என்று அவள் சென்று மறைந்த திசையை நோக்கியப்படியே கேட்டவன்.. தாங்க முடியாத வலியை… சமாளிக்க பிரயத்தப்படுவது போல் முகம் வேதனையில் சுருங்க… மெல்ல ஆழ்ந்த மூச்சேடுத்து சத்தமில்லாமல் வெளியேற்றியவன்…

“அன்று நீ மன்னில் மாதிரி வரதேதும் தெரியலை… போறதும் தெரியலைன்னு சொன்னியே சித்…” என்று மொழிந்தவனின் கண்கள் நேராக சித்தை நோக்க.. “அமைதியான வந்த தடமே தெரியாமல் கண்ணை பறிக்கும் மின்னல் வரும் போது… பெரும் இடியும், பேய் மழையும், சூறாவளி காற்றும் கூடவே வரும்ன்னு எனக்கு அப்போ புரியலைடா சித்… முழுமையாக புரியலைடா..” என்று ஆதங்கமாக பேசியவனின் கண்கள்.. தானாக சுவரில் மாட்டிருந்த கீ ஹோல்டரின் மேல் விழ..

அங்கே அவளுடைய சைக்கிளின் சாவி மாட்டும் இடம் மட்டும் காலியாக தொங்க… சூரீரென்று உண்மை உரைத்தது.

“ஓ… மை காட்….” என்று பதறியபடி எழுந்தவன் தாவிக் குதித்து தன் ரூமிற்கு சென்று லேதர் ஜர்கினை மாட்டியபடியே ஷூவிற்குள் காலை தினித்தவன் “டேய்… இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் நீ நேரா ஹாஸ்பிட்டலுக்கு வந்து விடு சித்…” என்று மொழிந்தபடியே ரூமை விட்டு வெளியேறினான் பத்ரி சச்சிதேவ்.

அத்தியாயம் - 3

நான்கு மாதங்களுக்கு முன்பு.... ஒரு சுபயோக சுபதினத்தில்...

“தெரியுமாவா??? பார்த்தே இருக்கேன் ஏன் உன் பாட்டிக்கு கூட தெரியுமே??” என்று தாத்தாவின் பதிலால் வாயை அடைத்து போய் ஒரு நிமிடம் நின்ற கார்த்திக்... அடுத்த நிமிடம்

“ஹூரே” என்று கையை மடக்கி.. செயற்கரிய சாதனையை சாதித்து விட்டது போல் காற்றில் குத்து விட்டபடி சந்தோஷப்பட்டவன்.. “ஐ நோ... ஐ நோ... இந்த நாட் நாட் செவன் தான் எதாவது பண்ணி இருக்கனுன்னு நினைத்தேன்.. ஆனா இவ்வளவு பண்ணி இருக்குன்னு நினைக்கலை. ஆமாம் நீங்க எப்ப பார்த்தீங்க?” என்றான் பரபரப்பாக.

அவன் தீடிரென்று குதித்ததையும், படபடவென்று கேள்வி கேட்டதையும் விசித்திரமாக பார்த்த தாத்தா “போன வருஷம் நார்த் இன்டியா டூர் போனமே... என்னடா விழிக்கிற... நீதானடா எல்லா ஏற்பாடையும் பண்ணி அனுப்பி வைத்த.. அப்பதான் பார்த்தேன்.”

“ஒ!!! கங்கா ஸ்நானம்னு போனிங்களே... அதுவா? எதுக்கு அலக்நந்தாவை போய் பார்த்தீங்க?” என்றான் பரபரப்பு சற்றும் குறையாமல்.

“என்னடா எதுக்குன்னு கேட்கற? உன் பாட்டிதான் பார்க்கனுன்னு சொன்னா அழைத்துக் கொண்டு போனேன்” என்றார் தாத்தா சற்றே எரிச்சலாக.

“சரி... அதுக்கு அப்புறம் வரேன்... இப்ப எதுக்கு அலக்நந்தா பத்ரியிடம் போகனும்? அது தெரிந்தால் போதும்?” என்றான் கறாராக கார்த்திக்.

“என்னடா இப்ப, அப்பன்னு மடத்தனமான ஒரு கேள்வி கேட்கற? என்னைக்கா இருந்தாலும் அலக்நந்தா பத்ரியின் வழி போகாம வேற எங்க போக முடியும்?” என்றார் தாத்தா விளக்கமாக.

“இது எல்லாம் பாட்டியோட ஏற்பாடா?” என்றான் காட்டமாக.

“உன் பாட்டி வேணுன்னா பெரிய லாடு லபக்கு தாஸா இருக்கலாம் ஆனால்

இயற்கையை மிஞ்சும் சக்தியெல்லாம் அவளுக்கு கிடையாது… எப்படி அலக்நந்தா பத்ரியின் வழியில் தான் போகனுமோ… அதே மாதிரி அலக்நந்தா இல்லாமல் பத்ரி ஏது? இதை தடுக்கவும், மாத்தவும் உன் பாட்டி என்ன தெய்வப் பிறவியா?" என்று பரிகாசமாக பேசினார்.

"ஆக ஒரு முடிவோட தான் அப்ப அலக்நந்தாவை போய் பார்த்திருக்கீங்க போல…?" என்று மிடுக்காக கேட்டான் கார்த்திக்.

அவனை ஒரு மார்கமாக பார்த்த தாத்தா "ம்ம்… உண்மையை சொல்லனுனா அலக்நந்தா இவ்வளவு அழகுன்னு நான் நினைக்கலைடா… எத்தனை நாடு எத்தனை கண்டம் கடந்தாலும் நம்ம ஊர் அழகை தட்டிக்க முடியாது. தூரத்தில் இருந்து பார்ப்பதற்கும் பக்கத்தில் இருந்து பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியாசங்கற??? பார்க்க மட்டுமா செய்தேன் அந்த அழகை ரசித்து.." என்று பேசிக் கொண்டே போக அப்படியே அவரின் கழுத்தை பிடிக்காத குறையா கத்தினான் கார்த்திக்..

"ச்சி… வாயை மூடுங்க தாத்தா… நீங்க எனக்கு எப்படி தாத்தாவா வந்து பிறந்தீங்களோ தெரியலை…!?! வயசான பிறகு ஏன் தான் உங்க புத்தி இப்படி போகுது?? ஏதோ காபி வித் ஜீனத்தமன்னு உங்க எப்.பில அப்பேட் பண்ண ஆசைப்பட்டீங்கன்னு சௌவி ஏற்பாடு செய்ய… நீங்களும் பல்லை இளித்துக் கொண்டு ஜீனத்தமனுடன் நின்ற பிக்சரை பார்க்க சகிக்கலைன்னாலும் நானும் தலை எழுத்தேன்னு லைக் போட்டேன்… அந்த டீல்… உங்க வயசிற்கு மேட்சாகும்… ஆனா பேத்தி வயதில் இருக்கும் அலக்நந்தாவை போய்…" என்று பல்லை நறநறவென்று கடிக்க..

"என்னடா… சொல்ற??? போனதே பார்க்க தான்ங்கும் போது??" என்று அவர் முழுவதுமாக முடிக்கும் முன்..

"கங்கா ஸ்நானம் பண்ண போறேன்னு நட்ட நடு ராத்தியில் எழுப்பி டிக்கெட் புக் பண்ண சொல்லும் போதே நான் சுதாரித்து இருக்கனும்… அலக்நந்தாவை பார்க்க போயிட்டு. புனித யாத்திரைன்னு என்ன ஒரு கட்டு கதை?" என்றான் கோபமாக.

"வெல்… போகிற வழியில் அலக்நந்தாவையும் பார்த்துவிட்டு போகதான் ப்ளான் பண்ணி இருந்தோம்…. நீயே சொல்லு அவ்வளவு தூரம் போய் விட்டு

அப்புறம் சலசலன்னு ஒடும் அலக்நந்தாவில் குளிக்காமல் வரசொல்றியா? முதல் ஒன்னு தெரிந்துக் கொள்ளுடா பேராண்டி.. நதிக்கு, கலைக்கு ஏதுடா வயது?" என்றார் தாத்தா திகைத்து போய்.

"நதியைப் பார்க்க போனீங்களா?" குழம்பமாக கார்த்திக்.

"டேய்... இப்ப அலக்நந்தாவைப் பற்றி கேட்கறியா? இல்ல நதியாவைப் பற்றி கேட்கறியா??? இப்போதைக்கு நதியாவை மீட் பண்ணும் ப்ளான் எதுவும் இல்லை... அடுத்த காபி வித் டார்கேட் என் கனவு கன்னி ஹேமமாலினிதான்..." என்றார் பரந்த மனதாக தாத்தா.

"இப்படியே நீங்க பேசிக்கிட்டே போங்க.. நான் அப்புறம் ஷங்கியை எதையாவது பேக்(bake) பண்ணி தர சொல்லிடுவேன்" என்று திட்டவட்டமாக மொழிந்தவன் "அப்ப இத்தனை நேரம் நீங்க யாரைப் பற்றி பேசினிங்க... அலக்நந்தாவை பற்றி இல்லையா?"

அவனின் அவசரம் புரியாமல் "இப்ப தான் ப்ராஜக்ட் ஹேமமாலினியைப் பற்றி சொல்றேன்.. நீ அதுக்குள்ள என்னை படுத்த படுக்கையாக ஏற்பாடு பண்றேன்றியே நியாயமா? நேற்று செந்தில் வந்து ஆவி பறக்கும் சூப் கப்பை நீட்ட... டொமேட்டோ சூப்போன்னு நினைத்து வாயில் வைத்தேன்... நானும் நாடு... நகரம் ஏன் கண்டம் விட்டு கண்டம் தாண்டி கூட சுற்றி இருக்கேன்டா பேராண்டி ஆனா மோரில் சூப் செய்து குடித்தில்லைடா...." என்று ஆற்றாமையுடன் புலம்பினார் தாத்தா.

சிரிப்பு பீறிட "ஐய்யோ தாத்தா அது சூப்பே இல்லை..." .

"பின்ன?? சூடாக ஆவி பறக்க... சூப் கப்பில் இருந்ததே...." என்று சந்தேகமாக தாத்தா இழுக்க.

"அது ஷங்கி மங்கிக்காக செய்த எக்லெஸ் ரெட் வெல்வெட் கேக் (EGGLESS RED VELVET CAKE) தான் உருமாறி சூப்பாக வந்து உங்க கையில் உட்கார்ந்திருக்கு..." என்று அவன் விளக்கி முடிக்க தாத்தாவின் முகம் போன போக்கை சொல்ல வார்த்தைகள் இல்லை.

"அடக் கடவுளே!!! கேக் எப்படிடா சூப்பாகும்...??" என்று ஆற்றாமையுடன்

தாத்தா நெஞ்சை நீவிக்கொண்டே கேட்க…

“ஆகும்.. ஆகும்… நம் மங்கி செய்தால் எதுவும் எதுவாக வேண்டுமானாலும் உருமாறுவது என்ன கூடு விட்டு கூடே மாறும்… சொ… இன்னொரு சூப் வேண்டாம் என்றால் ஒழுங்காக போன வருஷம் கங்கா ஸ்நானம் செய்யப் போன நீங்க எதுக்கு அலக்நந்தாவை பார்த்தீங்க என்ற முழு விபரம் சொல்லிடுங்க.. அதுக்கு முன்னாடி என் மண்டையை காய வைக்காமல் யார் இந்த அலக்நந்தான்னு முதலில் சொல்லிடுங்க” என்று கிட்டதட்ட மிரட்டினான் அந்த பேரன்.

இத்தனை கேட்ட பிறகு எந்த வாலிபனுக்கும் தைரியம் வராது என்னும் போது ஒரு வயோதிகருக்கு எங்கிருந்து தைரியம் வரும்??

“சரியா போச்சு போ.. படிக்கிற காலத்தில் ஒழுங்கா கங்கையைப் பற்றி படித்திருந்தன்னா இப்படி கேட்டிருக்க மாட்ட…” என்றார் தாத்தா கடுப்பாக.

“தாத்தா எனக்கு ஹிஸ்டரி கிளாஸ் (HISTORY CLASS) தான் தூங்கற ப்ரியடே.” என்று மறுமொழித்தான்.

பட்டென்று தலையில் தட்டிய தாத்தா… “இது ஹிஸ்டரி(HISTORY) இல்லடா எருமை.. ஜியாகரபி(GEOGRAPHY)…”

“அப்படியா?? இப்ப மாத்திவிட்டாங்களா?? சரி இருந்துட்டு போகட்டும்… இப்ப எனக்கு ஜியாகரபி (GEOGRAPHY) கிளாஸ் எடுக்காமல் எங்க போய்… எதுக்காக அலக்நந்தாவை பார்த்தீங்கன்னு.. சொல்லி தொலைங்க.” என்றான் பொறுமையற்று கார்த்திக்.

“ம்ம்… கங்கை நதி ஒன்றும் “ஆடு தாண்டு காவேரி” மாதிரி ஒரு சின்ன சதுரத்தில் ஊற்றெடுப்பது இல்லை… இரு பெரிய நதிகளின் சங்கமம் தான் கங்கை. ப்ரவுன் கலரில் அமைதியாக ஓடி வரும் பாகீரதி நதியும், பச்சை நிறத்தில் கரை புரண்டு ஓடி வரும் அலக்நந்தா நதியும் சங்கமிக்கும் இடமான தேவ ப்ராகையில் தான் பகீரதன் பிரயத்தனப்பட்டு ஆகாய கங்கையாக இருந்தவளை… இந்த உலகை உய்விக்கும் பொருட்டு கொண்டு வர… அவள் கங்கையாக ஜனிக்கும் இடம் அதுதான்.”

“அப்ப இத்தனை நேரம் நீங்க சொல்லிட்டிருந்த அலக்நந்தா.. ஒரு நதியா?? என்று கேட்கையிலேயே தலை சுற்றியது அவனுக்கு… “அப்ப அலக்நந்தா பத்ரியின் வழி போகாம வேற எங்க போக முடியுன்னு சொன்னது??”

“அலக்நந்தா புரண்டு ஓடும் வழியில் தான் இந்துகளின் புனித ஸ்தலமாக கருதப்படும் பத்ரிநாத் கோயில் இருக்கு… அதை தான் அப்படி சொன்னேன்” என்றார் விளக்கமாக.

“அப்ப அலக்நந்தா இல்லன்னா பத்ரி ஏதுன்னு சொன்னது?” என்றான் திடுக்கிட்டு.

“ம்ம்.. புத்த மதம் ஓங்கி இருந்த காலத்தில் அங்கே குடி இருந்த பத்ரி விக்ரகத்தை அங்கே ஓடும் அலக்நந்தா நதியில் போட்டு விட்டனர்…. பின்னர் பல காலம் கழித்து அங்கே வந்த ஆதி சங்கரர் நதியில் போடப்பட்ட பத்ரியை மீட்டு எடுத்து அங்கே கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தார். அதனால் அப்படி சொன்னேன்…” என்றார் தாத்தா விளக்கமாக.

“ஸ்.. ஷப்பா…. கவிழ்த்து விட்டிங்களே தாதா… இப்ப நிஜமாலுமே எனக்கு நீங்க சொன்ன சூப் குடித்த மாதிரி ஒரு உணர்வு… நான் கூட வேற என்னவோன்னு நினைத்துவிட்டேன்… ஒன்னு கேட்கனும் தாத்தா… நீங்க கூட இதை எல்லாம் நம்பறிங்களா தாத்தா? கங்கையில் போய் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தா சொர்க்கத்துக்கு போவாங்க மாதிரி எல்லாம்?”

“இந்த பேச்செல்லாம் இளமையும், உடம்பில் தெம்பும் இருக்கும் வரை இதை விட அதிகமாவே பேச தோன்றும் கார்த்திக்…. முதிர்ந்த வயதில்… நேற்று பார்த்த நபரின் முகமோ இல்லை அவனின் பெயரோ ஞாபகம் இல்லாத போதும் கூட… ஆறு வயதில் நான் கேட்டேன் என்பதற்காக நான்கு குதிரை பூட்டிய வண்டியில் ஊர் விட்டு ஊர் போய் சீனி மிட்டாய் வாய் கொடுத்த தாத்தாவின் முகம் ஞாபகம் இருக்கு… அவருக்கு நான் எதுவுமே திருப்பி பண்ணலையேன்னு ஆதங்கமும் வரும் போது.. நாம் நம்புவதும்… நம்பாததும் பறந்து போய்… உண்மை, பொய் என்பதை தாண்டி… சொர்க்கம், நரகம் பின்னுக்கு தள்ளப்பட… இந்த உலகத்தில் ஏதோ ஒரு மூளையில் நாம் நல்லா வாழனுன்னு காற்றோடு காற்றாக கலந்து இருக்கும் நம் முன்னோர்களுக்கு நாம் ஏதாவது திரும்பி செய்ய முடியுமானால் அதை

செய்வதில் என்ன தப்பு இருக்கு?? என்று தான் மனசில் தோன்றும்".

"தாத்தா… செத்ததுக்கு பின்னாடி போய் எங்கயோ நதிக்கரையில் அவர்களுக்கு பூஜை செய்வதை விட இருக்கும் போது ஒழுங்கா பார்த்துப்பது தான் நான் விரும்புவது" என்றான் கார்த்திக் திட்டவட்டமாக.

"நீ சொல்வதை நான் மறுக்கவில்லைடா பேராண்டி. உன் அப்பாவை, உன் தாத்தாவை நீ பார்த்துக்க முடியும்.. ஆனா என் அப்பாவிற்கு உன்னால் என்ன செய்ய முடியும்?? இந்த பரம்பரைக்காக எத்தனையோ தியாகங்கள் பண்ண என் தாத்தாவிற்கு நீ என்ன பண்ண முடியும்? அவர்கள் சம்பாதித்த சொத்தை மட்டும் ஆண்டு அனுபவிக்கும் நமக்கு அவர்களுக்கு திருப்பி செய்யும் கடமை இல்லையா??" என்று நிறுத்தி நிதானமாக கேட்டார் தாத்தா.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கார்த்திக் விழிக்க…

"உங்க சயின்ஸ் மாதிரி நான் மாற்றி மாற்றி சொல்லவில்லைடா.. சயின்ஸ் மாறும்… தன் தேவைக்கு ஏற்றப்படி மாற்றிக் கொள்ளும்… நம் முன்னோர்களுக்கு நாம் செய்யும் ஒரே கடமை அவர்களுக்கு கங்கையில் சென்று சிராத்தம் கொடுப்பது தான் என்று புராணம் சொல்கிறது…" என்று விசித்திரமாக ஒரு புது கருத்தை தாத்தா சொன்னார்.

"என்னது சன்யிஸ் மாறுமா? சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி சொல்லுமா? என்ன தாத்தா சொல்றிங்க? விட்டா திருப்பதியில் லட்டுக்கு பதில் ஜிலேபி கொடுக்கறாங்கன்னு சொல்லுவிங்க" என்றான் அதிர்ச்சியான குரலில்.

"ஆமான்டா பேராண்டி நானும்.. நீயும் படிக்கும் போது உன் சயின்ஸ் என்ன சொல்லுச்சு… ப்ளூடோ ஒரு கிரகமுன்னு சொன்ன அதே சயின்ஸ் இப்ப ப்ளூட்டோ கிரகம் இல்ல… அது ஒரு டிராப்ட் பிளானட்ன்னு (DRAFT PLANET) சொல்லுது… நாம் பயன்படுத்தும் ஜார்ஜியின் காலண்டரில்(Gregorian calendar) லீப் வருடம் எதை வைத்து, எப்படி கணக்கு பண்ணி இருக்காங்கன்னு போய் பார்… ஐன்ஸ்டினின் ரிலேட்டிவிட்டி தியரியே புரிந்துவிடும் அப்படி ஒரு குழப்பம்… இன்னும் குழப்பிக் கொண்டே தான் இருக்கிறார்கள்… இப்படி நான் நிறைய சொல்லலாம்.. ஆனா எடுத்துக்காட்டு ஒன்னு சொல்றேன்… ஆறாம் கிளாஸ் சயின்ஸ் புத்தகத்தில் ஆக்சிஜன் இல்லாமல் விளக்கு

எரியாதுன்னு வருமே… ஞாபகம் இருக்கா…??"

"ஏன் ஞாபகம் இல்லாமல்? எக்ஸ்பிரிமென்ட் பண்ண போறேன்னு ஷங்கி எல்.இ.டி பல்புல டம்ளர் போட்டு கவிழ்த்தாளே அது தானே???" என்றான் கார்த்திக் சிரிப்பை அடக்கிய குரலில்.

"அதே தான்டா… சொ உன் சயின்ஸ் சொல்றபடி ஆக்சிஜன் இல்லாமல் விளக்கு எரியாது… அப்படித் தானே??

"ஆமாம்…"

"அலக்நந்தா சீறிப்பாய்ந்து ஓடும் நதிகரையில் இருக்கும் பத்ரிநாத் கோயிலில் நவம்பர் மாதத்தில் நிலவும் கடும் பனிபொழிவு காரணமாக தீபாவளியை ஒட்டி ஒரு விளக்கை மட்டும் ஏற்றி வைத்துவிட்டு கோயிலை அடைத்து விட்டு எல்லோரும் மலையிலிருந்து கீழே இறங்கி விடுவார்கள். அடுத்து ஆறு மாசம் கழித்து மே மாதத்தில் வரும் அக்ஷய திரியை தேதியே ஒட்டிய தேதியில் தான் திறப்பார்கள்… அதுவரை அங்கு ஏற்பட்ட அந்த தீபமானது நிற்காமல் எரிந்துகொண்டே தான் இருக்கும்… அங்கு வைத்த மலர்களும் வாடுவதில்லை… இதை உங்கள் சயின்ஸ் எதைக் கொண்டு விளக்க முடியும் கார்த்திக்.?!?" என்று தாத்தா நிறுத்தி நிதானமாக கேட்டார்.

"நிஜமாகவா தாத்தா??? மை காட் ஆறு மாசம்.. ஆறு மாசம் மூடப்பட்ட அறையில் பனி சூழ்ந்த பகுதியில் விளக்கு எரிந்து கொண்டே இருக்குமா??? பூ வாடாதா?? ஐ கான்ட் பிளிவ் திஸ்.."

"ம்ம்… உலகத்தில் சயின்ஸ் கண்டுபிடித்து விஷயம் கை அளவு தான் அதில் எத்தனை சரின்னு போக போகதான் தெரியும்.." என்று பேசிய தாத்தாவை கட்டிப்பிடித்தான் கார்த்திக்.

"தாத்தா யூ ஆர் ரியலி கிரேட்… எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிங்க!!!"

"நான் கிரேட் எல்லாம் இல்லைடா.. என் தாத்தாவை நினைத்து வருந்தி பேசிக்கொண்டு இருக்க உன் பாட்டி தான் இப்படி எல்லாம் சொல்லி என்னை அங்கே அழைத்துக் கொண்டு போனா… போன பின்ன.. நிஜமோ பொய்யோ… மனதிற்கு ஒரு மகா அமைதியும், பெரும் நிம்மதியும் கிடைத்து

என்பது உண்மை!!!" என்று சொல்ல..

சொல்லி வைத்த மாதிரி பாட்டியிடமிருந்து போன்.... "ப்பா..." என்று அலறியபடி போனை காதில் வைத்தவன் "வந்துட்டேன்... வந்துட்டேன்..." என்றபடி போனை கட் செய்தான்.

"எல்லாம் உங்க பொண்டாட்டி தான்.. மிரட்டறாங்க தாத்தா.. முடியலை. இன்னமும் இங்க நின்னு உங்களிடம் வாய் பேசிகிட்டு இருந்தேனா ஆளு வைத்து தூக்கி வர கோட்டேஷன் கொடுக்க போறதா சொல்றாங்க... சரியான அராஜகப்பிசாசு.." என்று கூறிவிட்டு "நான் போய் இதை கொடுத்து விட்டு வருகிறேன் தாத்தா..." என்று தன் கையில் இருந்த நான்கு ஜோடி வைர வளையல்களை காட்டியபடி வேகமாக அங்கிருந்து நகர..

"பொறுடா... இப்ப தீடிரென்று அலக்நந்தாவை பற்றி ஏன் தோண்டி துருவுன? முதலில் சொல்லிவிட்டு அப்புறம் போ" என்று பிடித்துக் கொண்டார் தாதா.

"இதை என்னிடம் கேட்கறிங்களே. நீவீர் ஒரு ஒற்றனா? ஒற்றன் வாதகொடாறி விட மிகவும் மோசமய்யா... இந்த விழா முடியட்டும் உங்க விலாவை நான் சிறப்பிக்கிறேன்..." என்று கடுப்பாக பேசிய கார்த்திக்... அதற்குமேல் தூய தமிழில் பேச இம்சை அரசன் இரண்டாம் புலிகேசியை போல்ப வராததால் "பத்ரி ரூம் மேட்டாக ஒரு பெண் வந்திருக்காளாமே உங்களுக்கு தெரியுமா? அவள் பெயர் அலக்நந்தா. யாரோ எங்கையோ சொன்ன பெயர் மாதிரி இருந்ததா.. அதைக் கேட்க தான் உங்களை தள்ளிக் கொண்டு இப்படி வந்தேன்" என்று நிரம்ப ஏமாற்றத்தோடு சொன்னான்.

"உன் பாட்டிக்கு இதில் எந்த சம்பந்தமும் இருப்பது போல் எனக்கு தெரியலை... நிச்சயமா இருக்கவும் இருக்காது. ஏன்னா அவளுக்கு இப்ப இருப்பத்தி நான்கு மணி நேரமும் மாசமான சௌவியை பார்ப்பதிலேயே நேரம் சரியா இருக்கு... அதுவும் கடந்த ஒரு மாசமா.. இந்த விழா ஏற்பாட்டில் அம்மணி செம பிசி.. அதனால் அலக்நந்தா நதியை தவிர.. வேற யாரையும் அவளுக்கு தெரிய வாய்பே இல்லை.." என்று தாத்தா திட்டவட்டமாக சொல்ல..

"சரி.. தாத்தா" என்று அவசரமாக பதில் சொல்லிவிட்டு அதே அவசரத்தை நடையில் காட்டி மேடையை சென்றடைந்தான் கார்த்திக்.

ஏதோ பேசியபடியே மேடையை நோக்கி இரண்டு அடி எடுத்த வைத்த பத்ரி தன்னுடன் வந்த சித்திடம் “சரி இப்ப சொல்லுடா... கார்த்திக் முன்னாடி அலக்நந்தாவை பத்தி பேசப் பிடிக்காமல் நீ தவிர்த்ததை நான் பார்த்தேன். என்ன விஷயம்? அலக்நந்தா எப்படி? நான் வந்தவுடனே வாட் இஸ் த ப்ரொசிஜர் டூ சேன்ஜ் த ரூமுன்னு கேட்க வைக்கனுமா?” என்று நேராக விஷயத்துக்கு தாவினான் பத்ரி.

இது தான் பத்ரி. வாய் பேசினாலும்.. சுற்றி என்ன நடக்கிறது, எப்படி உணர்கிறார்கள் என்று நன்றாகவே கிரகித்துக் கொள்ளும் குணமுடையவன்.

“விஷயம் ஒன்னும் பெரிசா இல்லை...” என்று பீடிகையோடு ஆரம்பித்தவன்.. “ம்ம்... அலக்நந்தாவை எப்படின்னே என்னால் சொல்ல முடியலைடா...” என்றான் தெளிவில்லாமல்.

பட்டென்று நின்ற பத்ரி “என்னடா சொல்ற? நான் வந்து ஒரு வாரம் கழித்து தானடா நீ ஊருக்கு வந்த? ஒன்னும் சொல்ல முடியலைன்னா என்ன அர்த்தம்??”

“என்னை எதுவும் கேட்காதே... நேரில் வந்து பார்த்துவிட்டு நீ எனக்கு சொல்.. என்ன? எனக்கு தெரிந்த வரை அவளுக்கு அல்சர் பிரச்சனை இருக்காம். அவளே சமைத்து தான் சாப்பிடுவாளாம்.. அதனால் இரண்டு ரூம் காலியா இருக்கும் நம் அறையில் ஒன்றை சமையல் செய்ய பயன்படுத்திக் கொள்ள அனுமதியுடன் அனுப்பி இருக்காங்க. மற்றபடி எனக்கு எதுவும் தெரியலை... ரொம்ப அமைதி.. யாரிடமும் பேசி கூட பார்த்தில்லை.. எனக்கு என்னமோ பார்த்த வரை ரொம்ப பயந்த சுபாவம் மாதிரி தெரியுது...”

“ஓ!! காட்!!!! இந்த பல்லிக்கும், கரப்பான் புச்சிக்கும் பயப்படும் பொண்ணுனா என்ன கருமத்துக்கு அப்பப்ப யானை கூட்டமும், பனி சிறுத்தையும், காட்டு பன்றியும் உலா வரும் அந்த மலை சரிவில் இருக்கும் காலேஜிற்கு படிக்க வரணும்?” என்றான் கடுப்பாக

“இல்லை.... நீ நினைக்கிற மாதிரி இல்ல...”

“என்னடா உளர்ற? நீ தானே சொன்ன பயந்த சுபாவமுன்னு? அப்புறம் இல்லன்னு சொல்ற?” என்றான் பத்ரி முகச்சுளிப்புடன்.

“பயந்த சுபாவம் தான்… ஆனா… பல்லிக்கும், கரப்பான் பூச்சிக்கும் பயப்படும் ரகம் மாதிரி தெரியலை.. அப்படி பயப்படும் ஆசாமியா இருந்தா நம் செக்யூரிட்டி நாயுடன் கொஞ்சி குலாவ முடியுமா?” என்று எதிர்கேள்வி கேட்டான் சித்.

“வாட்?? அந்த டைகர் கிட்டயா?” என்று மிகுந்த ஆச்சரியப்பட்டான் பத்ரி. ஏன் என்றால் அந்த நாய் நிஜமாகவே பார்ப்பதற்கு வேட்டையாட வந்த புலி மாதிரி உயரம், நிறம் கம்பீரமாக கண்டவர்களை மிரட்டும் தோரனையில் தான் நிற்கும். அதை அவ்வளவு சீக்கிரம் நெருங்க கூட முடியாது. அங்கே தங்கி இருப்பவர்களே அதை தீடிரென்று பார்த்தால் பயந்துவிடுவார்கள். அப்படி இருக்க வந்த இரண்டே வாரத்தில் அந்த டைகருடன் பழகி விட்டாள் என்றாள் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் தான்!!!

“பின்ன ஏன் அப்படி சொன்ன?”

“இல்லை… அலக்நந்தாவிற்கு விலங்குகளை கண்டால் பயம் இல்லை.. ஆனா..”

“என்னடா இப்படி தயங்கி விழுங்குற? விலங்குகளை பார்த்து பயம் இல்லைன்னா வேறு யாரை பார்த்து பயம்??”

“ம்ம்.. மனிதர்களை பார்த்தால் மட்டும் தான் பயந்து பின் வாங்கும் ரகம் மாதிரி தெரியும்” என்றான் சித் தயங்கியபடி.

இன்று...

“டேய்… இன்னும் ஒருமணி நேரத்திற்குள் நீ நேரா ஹாஸ்பிட்டலுக்கு வந்து விடு சித்…” என்று மொழிந்தபடியே ரூமை விட்டு வெளியேறினான் பத்ரி சச்சிதேவ்.

“வாட்?? வாட்?? ஹாஸ்பிட்டலா?? எதுக்கு?” என்று பின்னாடி இருந்து கேட்டபடியே அவனை தொடர்ந்த வந்த சித்.

“ஆமான் டா… அவ்வளவு பெரிய கண்ணாடி போட்டே நாலு அடிக்கு முன்னாடி மலை பாம்பு போனாலும் அவளுக்கு தெரியாது… இந்த லட்சனத்தில் இரண்டு அடி முன் என்ன இருக்குன்னே தெரியாதளவு மூடுபனி… இதெல்லாம் பத்தாதற்கு அந்த மூன்று இன்ச் ஹீல்ஸ் வேற… இதை விட விழுந்து வாரி காலை உடைக்க ரெசிபி வேண்டுமா??” என்று சொன்னபடியே படி இறங்கியவன்…. “என் அனுமானம் இந்நேரத்திற்கு அவள் கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டு இருப்பாள்… ஒருவேளை தப்பி தவறி அவளாக உடைக்கலைன்னா நானே உடைக்க போறேன்… ஐ ஹவ் ஆல் தி ரைட்ஸ் டூ ப்ரேக் ஹர் லேக்ஸ்…” என்று வேகமாக பேசியபடி கீழே தடதடவென்று இறங்க…

கை பிடி சுவரில் சாய்ந்த நின்ற சித்.. “அடப்பாவி… அப்ப இரண்டு மாசம் முன்னாடி நீதான் அவள் கையை உடைச்சியா?? நான் கூட தப்பா நினைத்து விட்டேன் போலயே…” என்று சிரித்தபடியே கேட்க…

“ம்கூம்.. நான் முயற்சிக்கறதுக்கு முன்னாடி இயற்கை அன்னை முந்திக் கொண்டு விட்டாள்…. சொ… போன முறை தவறவிட்ட சந்தர்பத்தை இந்த முறை முழுமையா பயன்படுத்தப் போறேன்…” என்று சொன்னபடியே தடதடவென்று படியிறங்கி கண்ணை விட்டு மறைந்தான் பத்ரி.

பத்ரியை நல்லவன்… உத்தம புத்திரன் என்று எல்லாம் சொல்ல முடியா விட்டாலும்… ஒரு பெண் தன் ரூம்மேட்டாக மட்டும் இல்லாமல் ஒரு நல்ல நண்பனாகவும் எந்த முறையில் பழக வேண்டும் என்ற வரைமுறை தெரிந்து பழகுபவன் என்பதால் வாய் விட்டு உரக்கவே சிரித்தான்.

அலக்நந்தாவிற்கும், பத்ரிக்கும் நடுவில் எதுவோ ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் அறிவான். என்னடா நடக்குது?? என்று கேட்கும் உரிமையுடன் கூடிய நட்பு இல்லை அவர்களுடையது… அதையும் தாண்டி அவன் சொல்ல கூடியது என்று நினைத்தால் சற்றும் தயங்காமல் பத்ரியே சொல்லுவான் என்று ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூடியது அவர்களின் நட்பு. அதனால் எதையும் அவனாக வாய் விட்டு கேட்கவில்லை. முடிந்த வரை அவர்களுக்கு மத்தயில் வராமல் சற்று ஒதுங்கியே போகிறான்.

காற்றின் வேகத்தில் படிகளில் இறங்கிய பத்ரி தன் டுகாட்டி பைக் இருக்கும்

இடத்திற்கு போய் சேர்ந்தவனின் கண்ணில் அப்பொழுதுதான் தன் சைக்களில் மேல் ஏறி அமர்ந்த அலக்நத்தாவின் உருவம் வரிவடிவாக கண்ணு தெரிய.. பைக்கை எடுத்தவன் உள்ளே பொங்கிய வேகத்திற்கு சற்றும் குறையாமல் அவள் முன் தன் பைக்கை அதிரடியாய் நிறுத்தினான்.

இரண்டு இன்ச் முன்னாடி பசக்கென்று அவன் நிறுத்தியதை எந்த சலனமும் இல்லாமல் பார்த்தாள்…

“வரவே மாட்டேன்” என்று சொன்னவன் மின்னல் வேகத்தில் வந்து நின்றதைப் பார்த்து ஆச்சரியமோ இல்லை அதிர்ச்சியோ பட அவளால் முடியவில்லை!?!

வரமாட்டான் என்று நினைத்து பின் வந்திருந்தால் தான் அந்த ஆச்சரியம்.. ஆனந்தம் எல்லாம் தோன்றி இருக்கும் அவளுக்கு தான் பத்ரி சர்வ நிச்சயமாக தன்னைத் தேடி வருவான் என்று உள்ளங்கையின் ரேகையை போல் தெரிய.. பொய்யாக அவளுக்கு நடிக்க வராது..

அவனுடன் பழகிய இந்த நான்கு மாதத்தில்… அவள் நம்பிய முதல் ஜீவன் பத்ரி தான்… பத்ரி மட்டுமே தான்..

பற்றி படர துணையின்றி கிடந்த கொடிக்கு பற்றுகோல் கிடைத்தவுடன் அந்த கொடியானது அங்கே நிற்காது தன்னை விட பன்மடங்கு பலங்கொண்ட மரத்தின் மீது பயம் இன்றி பரவி படர்வது.. தான் படரும் அந்த மரமே வேருடன் விழுந்தாலும், தாங்கி பிடிக்க அந்த பற்றுக்கோல் தன்னுடன் இருக்கிறது என்ற நம்பிக்கையால்.. அது போல் மனித இனத்தின் மீது நம்பிக்கை அற்று இருந்தவளுக்கு பத்ரியின் மேல் வந்த நம்பிக்கை தான் பிறர் மனிதர்களை நம்பவும்… பிற்காலத்தில் அவர்கள் தன்னை விட்டுப் பிரிந்தாலும் என்றும் பத்ரி துணை இருப்பான் என்பதும் முழு முதற் காரணமாகும்.

முட்டை கண்களை வைத்துக் கொண்டு எந்த சலனமும் இல்லாமல் அவனைப் பார்த்தவள் பின் அமைதியாக பத்ரி வழி மறித்து நின்றதை சட்டையே செய்யாமல் தன் சைக்கிளை வேறுபுறம் திருப்ப.. பட்டென்று சைக்கிள் ஹேன்பாரை எரிச்சலாக பிடித்து நிறுத்தியவன்…

“உன் பொலுஷன் பாராயணத்தை இன்னைக்கு ஒருநாள் மூட்டை கட்டி வைத்து விட்டு வா பைக்கில் போகலாம்” என்றான் அழுத்தமாக ஹிந்தியில்.

அமைதியாக அவனைப் பார்த்தவள் “பாடிகாடாக நீ எனக்கு வேண்டாம் பத்ரி” என்றாள் அமைதியாக அதே சமயத்தில் பிடிவாதமாவும் செப்பினாள்.

“உனக்கு பாடிகாடாவோ… இல்ல உன்னுடைய ஹிரோவா டுயட் பாடவோ நான் உன்னை கூப்பிடலை அலக்நந்தா.. சொல்லப் போனா வில்லனா கூப்பிடறேன்.. நீயா வண்டியில் ஏறினால் லைப்ரரிக்கு போகலாம் நானாக ஏற்றினால் ஹாஸ்பிட்டலுக்கு போவாய் எப்படி வசதி?!?” என்று நமுட்டு சிரிப்புடன் கூடிய எகத்தாளத்துடன் கூறினான் பத்ரிநாத்.

அத்தியாயம் - 4

நான்கு மாதங்களுக்கு முன்பு…. ஒரு சுபயோக சுபதினத்தில்

“மனிதர்களை பார்த்தால் மட்டும் தான் பயந்து பின் வாங்கும் ரகம் மாதிரி தெரியுது” என்றான் சித் தயங்கியபடி.

அவனை விசித்திரமாக பார்த்த பத்ரி “எதை வைத்து அப்படி சொல்ற?”.

“வந்த இந்த இரண்டு வாரத்தில் நான் ஏதாவது பேச முயற்சி பண்ணா முத்து உதிர்வது போல் ஒரு வார்த்தை பதில் தான்… ரொம்ப வெட்கப்படும் பெண் என்று கூட நினைத்தேன்… இதுவரை என் முகத்தை அவள் நிமிர்ந்து கூட பார்த்தில்லை… ஏன்.. நானுமே சரியா அவள் முகத்தை பார்த்தில்லை…”

“உன்னை பார்த்தா மனிஷன் நின்னு பேசுவானாடா? கொஞ்சம் பயமா தான் இருக்கும்?” என்று பதிலடி கொடுத்தான் பத்ரி.

“ம்கூம்..” என்று பெருமூச்சு விட்ட பத்ரி… “நானும் இதையே தான்டா முதலில் நினைத்தேன். அப்புறம் பார்த்தா… கிளாஸ்லயும் அப்படிதானாம்.. யூ வோண்ட் பிலீவ்… இதுவரை அவள் யாரிடமும் பேசி பார்த்தில்லை… டி.வி பார்த்து பார்த்தில்லை… பாட்டு கேட்டோ.. சிரித்தோ பார்த்தில்லை… ஏன் அவள் கையில் போனை கூட பார்த்தில்லை.. பாய் ப்ரெண்டு இல்லாமல்

இருந்தாலும் இருப்பாங்களே தவிர இந்த காலத்தில் பொண்ணுங்க போன் இல்லாமல் பார்க்க முடியுன்னு நினைக்கிற???" என்ற சித்தின் அறிவாளி(?)தனமான கேள்வியில் ஒரு அர்த்தம் இருக்க தான் செய்தது.

"யூ ஆர் ரைட்... போன் இல்லாமல் இருக்க வாய்ப்பே இல்லையே" என்று ஆமோதிப்பாக தலை ஆட்டியவன்... "ம்கூம்... இப்படி ஊர் பெயர் தெரியாத கோர்சை எல்லாம் எடுத்து படிக்கறவங்க நார்மலா இருப்பாங்கன்னு நினைக்கற??" என்று கூடவே தன் சந்தேகத்தையும் சேர்த்தே கேட்டான் பத்ரி.

"அவளால் பெரிய பிரச்சனை வரும்னு தோன்றவில்லை... பார்ப்போம்.. சரி என் போனில் நல்லா சிக்னல் வருது.. நான் அவள் படிக்கும் கோர்ஸ் பற்றி குகூள் பண்ணி பார்க்கறேன்..." என்று என்றபடி போனில் சித் கையை வைக்க..

"ம்கூம்... அதுக்கு அவசியமே இல்லை.. நம்மை தேடியே குகூள் வருது" என்று கூறியவன் அவசரமாக சித்திக்கிடம் திரும்பி.. "டேய் சித்.. இப்பயே சொல்றேன்.. இரண்டு நொடிக்கு... ஜஸ்ட் டூ செகண்ட்ஸ்.. அதற்கு மேல் நீ அவளைப் பார்த்தால் அப்புறம் பின் விளைவிற்கு நான் பொறுப்பு இல்லை.." என்று சொல்லும் போதே மெல்ல அவர்கள் அருகில் ஒரு பெண் மிகுந்த தயக்கத்துடன் வந்து நின்றாள்.

ஏன் பத்ரி இரண்டு நொடி தான் பார்க்க அனுமதி என்று சொன்னான் என்று அப்பொழுது புரிந்தது... அவனுக்கு முன்னால் நின்ற பெண்ணின் அழகு பார்த்து.. பார்த்து செதுக்கிய சிலை போல் இருக்க... அவளின் அந்த தயக்கம் கலந்த பேச்சு அவளின் அழுகிற்கு அழகு சேர்க்க கண் இமைக்க மறந்து பார்த்தான் சித்.

சித்த பிரம்மை பிடித்தவன் போல் சித் நிற்க.. அவளோ அருகில் இருந்த அவனை திரும்பி கூட பார்க்காமல்... "எப்படி இருக்கீங்க மாமா?" என்றாள் பத்ரியிடம் தயங்கியபடி.

"நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க நிரல்யா? ஊரில் இருந்து எப்ப வந்தாய்? படிப்பு எப்படி போகுது" என்று முறைப்படி குசலம் விசாரித்தான் பத்ரி.

அவள் கிசுகிசுப்பாய் சொன்ன பதில் காதில் சரியா விழாத போதும்… பொதுவாக தலையை மட்டும் ஆட்டியவன் பின் அருகில் இருந்த தன் நண்பனை அறிமுகம் செய்து வைக்க… அதிசிரத்தையாக அவள் கண்கள் சரியாக அரை வினாடி அவனை கவனிக்க… அவள் முனுமுனுப்பாக சொன்ன வார்தைகள் பத்ரி காதில் விழவில்லை…. என்றால் சித் காதில் விழுந்தாலும் அதை புரிந்துகொள்ளும் நிலையில் இருக்கவில்லை.

“அப்புறம்… நிரல்யா நிமிக்ஸ் மாட்டிக்ன்னா என்ன?” என்றான் பத்ரி. பக்கத்தில் மகுடிக்கு மயக்கிய பாம்பு மாதிரி நிரல்யாவின் அழகில் நின்றிருந்த சித்தின் காலை நச்சென்று மிதித்தபடி.

“நிமிக்ஸ் மெட்டிக்கனா… காயின்ஸ், கரண்சியை பத்தி படிக்கறதுக்கு பேருதான் நிமிக்ஸ் மாட்டிக்ஸ்…”

“ஒ… வீட்டில் ஸ்டாம்ப்(stamp) கலக்ஷன், காயின் கலக்ஷனில் ஈடுபடுவாங்களே? அவங்கள மாதிரியா??” என்றான் பத்ரி புரிந்து கொள்ளும் நோக்கோடு.

“ம்கூம்.. சேகரிப்பவங்களுக்கு சேகரிக்கும் ஆர்வம் மட்டும் தான் இருக்கும். அதைப் பற்றி ஆழ்ந்த அறிவும், தெளிவும் இருக்காது.. ஆனா இந்த கோர்ஸ் படிக்கறவங்க அந்த நாணயங்களைப் பற்றி ஆழ்ந்த அறிவும், காசுகளைப் பற்றிய ஞானம், அதன் மதிப்பிடு, எந்த காலத்தில் எந்த நாணயம் அச்சிடப்பட்டது… எந்த ராஜ்ஜியத்தில் அந்த நாணயம் எதற்காக புழக்கத்தில் வந்தது என்பது பற்றி எல்லாம் தெளிவு இருக்கும்” என்றாள் நிரல்யா விளக்கமாக.

அதைப் பற்றி எல்லாம் படிக்க படிப்பு கூட இருக்கா? என்று மனதில் நினைத்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் அமைதியாக நிரல்யா விடைபெற தலை ஆட்டினான்.

பத்ரி காலை மிதத்து பிறகும் கூட தன் பார்வையை மாற்ற முடியாது திக் பிரமை பிடித்தபடி நின்ற சித்தை..

“டேய்… அவள் கண்னை விட்டு மறைந்து ஐந்து நிமிஷம் ஆகுது… நானும்

பார்க்கிறேன் கொஞ்சமாவது மாறுமான்னு… ஆனா சொல்லி வைத்த மாதிரி ஒவ்வொருதருடைய ரீஆக்ஷனும் அப்படியே தான் இருக்கு" என்றான் பெருமூச்சுடன் பத்ரி. ஒருவழியாக தன் நிலைக்கு திரும்பிய சித்… "என்ன சொல்லி வைத்த மாதிரி ரீஆக்ஷன்?"

"ம்ம்… நிரல்யாவை முதல் முறையாக பார்க்கும் ஒவ்வொரு ஆணும் இப்படி தான் ஆகறாங்க…."

புரிந்தது மாதிரி தலையை ஆட்டிய சித் "அழுகும், அறிவும் சேர்ந்திருப்பது ரொம்ப அபூர்வம் அதை விட வெகு அபூர்வம் அதை பற்றிய சிறு கர்வம் கூட இல்லாமல் இருப்பது இல்லையா பத்ரி??" என்று உண்மையை பேசினான்.

"ம்ம்.. இதுக்கே இப்படி அசந்து போறியே சித்.. அவள் என்ன படிக்கிறான்னு கேட்டேன்னா என்ன சொல்லுவ?"

"அப்படியா? என்ன நியூமிக்ஸ்மேட்டிக் மாதிரி எதாவது படிக்கறாங்களா?" என்றான் சித் புன்னகைத்தபடியே.

"ம்கூம்.. அவள் பி.ஹச்.டி. படிக்கறா" என்றான் பெருமையாக.

"யூ.மீன் டாக்டரேட்???? ஆனா பார்த்தா ரொம்ப சின்ன பெண்ணு மாதிரி தெரியறாங்க?!?" என்றான் இன்றைய அதிர்ச்சி இவ்வளவு தானா இன்னும் இருக்கா.. என்னும் ரீதியில்.

"ம்ம்… நிரல்யா ஐந்து வயதில் ரொம்ப புத்திசாலியாக இருக்கவே ஐ.கியூ டெஸ்ட் பண்ண… அப்ப கண்டு பிடித்தாங்க அவளோட ஐ.கியூ நூற்றி நாற்பதுன்னு.. சொ.. அம்மணிக்கு எல்லாவற்றிலும் இரட்டை வேகம் தான்… இப்ப இருபது வயதுதான் ஆகிறது" என்றான் விளக்கமாக.

"வாவ்!!! என்று வாயை பிளந்தவன் "என்னால் நம்பவே முடியலைடா… ஒரு சைல்ட் ப்ராடஜி(child prodigy)யிடமா நான் இத்தனை நேரம் பேசிக்கிட்டு இருந்தேன்???"

சித்தின் தலையை லேசாக தட்டியவன் "நீ எங்கடா பேசிகிட்டு இருந்த?

பார்த்திட்டு இருந்த.. நல்லவேளை கார்த்திக் பக்கத்தில் இல்லை இருந்திருந்தால் இந்நேரத்திற்கு உன் மூக்கு உடைந்திருக்கும்….” என்று ஐயம் திரிபுற உறுதியாக தெரிவித்தான் பத்ரி.

“இப்ப எதுக்கு கார்த்திக் என் மூக்கை உடைப்பான்?" என்று இழுத்தவன் “உனக்கு இரண்டு தங்கை தானே.. ஸ்ஸ்..ஓ!! கசினா?” என்றான் சித்.

“ம்கூம்… அதுக்கும் மேல” என்றான் பத்ரி சுவாரசியமாக.

“அதுக்கும் மேலயா?” என்று யோசித்தவன் “அப்ப அவனோட கேர்ள் ப்ரண்டா?... இல்ல கட்டிக்க போகும் முறைப்பெண்.. ஏதாவதா??” என்றான் யோசித்தபடியே சித்.

“ம்கூம்... அதுக்கும் மேல…” என்று சிரிப்புடன் பத்ரி கூற…

“என்னடா கேர்ள் ப்ரண்டும் இல்லைன்னு சொல்லற? கட்டிக்க போகும் முறை பெண்ணும் இல்லை… ஆனா அதுக்கும் மேலன்னா... அப்ப என்ன பொண்டாட்டியா?” என்று எரிச்சலுற்று கூறினான் சித்.

“சரி ஜவாப் சாப்ஜி… சரியாக சொன்னதற்கு உங்களுக்கு ஒரு கோடி” என்று பத்ரி சொல்ல மயக்கம் வராத குறையாக சித் தன் உற்ற நண்பனை வெறித்தான்.

“என்னடா சொல்ற???” என்றான் பேய் அறைந்தது போல் சித்.

“டேய் மறுபடியும் முதலில் இருந்தாடா?” என்று பொய்யா எரிச்சல் பட்டவன் “உனக்கு எத்தனை தடவை சொல்வது எங்க சச்சிதேவ் குடும்பத்திற்கு நாள் நட்சத்திரம் பார்த்து கல்யாணம் எல்லாம் பண்ணிக்க தெரியாது… இதுவரை அதுமாதிரி நடந்ததாக சரித்திரம் என்ன பூலோகம் கூட கிடையாதுன்னு?” என்றான் புன்னகையோடு பத்ரி.

“அதுக்காக அண்ணனுக்கு முன்னாடி கல்யாணம் பண்ணிப்பானா டா??” என்று கூறிய சித்.. “முதலில் நீ உண்மையை சொல்லுடா உனக்கும் கல்யாணம் ஆகிடுச்சா???” என்றான் இன்னும் அதிர்ச்சி விலகாமல்.

பக்கென்று சிரித்த பத்ரி “எனக்கு இன்னும் ஆகலை… கவலைப்படாதே உனக்கு தெரியாமல் ஆகாது. கார்த்திக்கின் விஷயத்தில் சூழ்நிலையும் சந்தர்பமும் அப்படி. ஏன் எதற்குன்னு கேட்காதே அவனே உன்னிடம் ஒருநாள் சொல்லுவான்.. அதுவரை நான் வாய் திறக்க முடியாது. அதை விட இந்த கல்யாண விஷயம் என் குடும்பத்தை தவிர வேற யாருக்கும் வெளியே தெரியாது” என்று முடித்தான் பத்ரி.

“என்னடா பொல்லாத சூழ்நிலை… என் அண்ணன் நிச்சயத்த பெண்ணையே கல்யாணம் பண்ணிக்காமல் தள்ளி போடறான் நீங்க என்னடான்னா..” என்று எரிச்சலாக சித் மொழியும் போதே திடுதிடுப்பென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட வேகமாக திரும்பிவனுக்கு ஸ்டேஜில் ஏறிக்கொண்டிருந்த ஹிந்தி நடிகை நிகாரிக்காவை கண்ணுற்றவனுக்கு பரபரப்பின் காரணம் புரிய…

“என்னடா பத்ரி… உங்க அண்ணன் ஆட்டோகிராப் படத்தில் வருவது போல் அவருடைய எக்ஸ் கேர்ள் ப்ரெண்ட்ஸிற்கு எல்லாம் பத்திரிக்கை வைத்து விட்டார் போல!!!”

“ம்ம்.. என் அண்ணன் எக்ஸ் கேர்ள் ப்ரெண்ட்ஸ் லிஸ்ட் போட்டால் அப்புறம் இன்னொரு மண்டபம் தான்டா வேணும். கூட்டத்தை சமாளிக்கறது ரொம்ப கஷ்டம்…” என்று அவன் நக்கலாக சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. மூளையில் நின்று கொண்டு இத்தனை நேரம் தன் மனைவியை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த ஆர்யா முன்னாடி வந்து நிகாரிக்காவை முறைப்படி வரவேற்றான்.

பத்ரி சொன்னது போல் ஆறு அடி நீள கூந்தல் இல்லை என்றாலும்… பெண்களே பார்த்து பொறாமைப்படும் நான்கு அடி நீளத்தில் கற்றை கூந்தலை போனி பொட்டு சகோதரர்களைப் போல் அவனும் பட்டு வேட்டியில் அமர்களமாக இருந்தான்.

சௌவியுடனான மணவாழ்க்கை அவனை நிறைய மாற்றி இருந்தது… அதை வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு தெரியாமல் இருந்தாலும் அவனுடைய குடும்பத்தாருக்கும் அவன் ஆரூயிர் மனைவி சௌவிக்கு நன்றாகவே புரிந்தது.

சொல்ல போனால் அந்த நான்கு அடி நீண்ட கூந்தலை புது பேஷன் என்று ஊர் உலகம் நினைக்க... ஆனால் உண்மை நிலவரம் யாதெனில் அவள் கருவுற்றிருக்கிறாள் என்று எந்த நொடி அறிந்தானோ அன்று தங்கள் குலதெய்வத்திற்காக நேர்ந்து கொண்ட முடி என்று அவன் குடும்ப அங்கத்தினரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது!!!

"நிஜமாவா டா" என்று சித் வாயை பிளக்க...

"டேய் உன் கற்பனை குதிரையை நிறுத்து... முதலில் இந்த நிகாரிக்கா என் அண்ணனுக்கு ப்ரெண்டாகி அப்புறம் சௌவிக்கு ரொம்ப பெஸ்ட் ப்ரெண்டாகிட்டாங்க. அது தான்... வந்திருக்காங்க" என்றான் எரிச்சலாக பத்ரி.

"ஏன்டா அந்த நிகாரிக்கா பெயரை சொல்லும் போது உன் முகம் இப்படி போகுது??"

"எப்படியும் போகலை...." என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே பின்னாடி வந்த கார்த்திக் பட்டென்று பத்ரி முதுகை தட்டியவன்..

"எப்படி போகாமல் இருக்கும்... இவனுக்கு நிகாரிக்காவை விட அவளுடைய தங்கை பெயர் என்ன.... ஏதோ "அ" வில் கூட ஆரம்பிக்குமே... இரண்டு நேஷனல் அவார்டு கூட வாங்குச்சே... அந்த பொண்ணு" என்று கார்த்திக் இழுக்க...

"அல்கா??" என்று க்யூஸ் காம்படிஷனின் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லிவிட்டது போல் பெருமிதம் கொண்டான் சித்.

"அதே அல்காதான்... அவளை தான் தலைவருக்கு ரொம்ப பிடிக்கும். சொல்லப் போனா ஐயாவின் கனவு கன்னி... அக்கா நிகாரிக்கா வந்த பின்னாடி அந்த பொண்ணு நடிக்கறது இல்லையா... அந்த வெறுப்பில் பேசறான்" என்றான் கார்த்திக் விளக்கமாக.

"ஏன்டா இரண்டு அடி தூரத்தில் இருக்கிற நானும் இவனும் பேசிக்கிறது சரியா கேட்க மாட்டேங்குது.. எங்கிருந்தோ வந்த உனக்கு அவன் கேட்டது மட்டும் எப்படிடா சரியா கேட்குது??" என்று கடுப்பாக கேட்டான் பத்ரி.

பத்ரி சொன்னது இருவருக்கும் காதிலே விழாதது போல்… “ஏன்டா அந்த அல்கா நடிக்க வரதில்லை?” என்று கன அக்கறையாக கேட்டான் சித்.

“என்னை கேளுடா… ஏன்னா நான் தான் பார்ட் டைமா அவளுக்கு மேனேஜரா வேலை பார்க்கிறேன் பாரு??” என்றான் பத்ரி நக்கலாக.

“ஸ்.. இப்ப தான் ஞாபகத்திற்கு வருது…. நீ சொல்லும் இந்த அல்கா தானே… யாரோ கடத்திட்டு போயிட்டதா கூட ஒரு ரூமர் வந்ததே”

“ஒரு ரூமரா வந்தது? கடத்திட்டு போனதிலிருந்து… ஓடி போயிட்டா.. தற்கொலை பண்ணிக்கிட்டா.. விபத்தில் கோமாவில் இருக்கான்னு வராத தகவலே இல்லை… ஆனா சாமர்த்தியமா பாரு அவங்க டைரக்டர் அப்பாவும் சரி, நடிகை அம்மாவும் சரி… இங்கே வந்து நிக்கும் நிகாரிக்காவும் சரி அந்த அல்காவை பற்றி எப்படி கேட்டாலும் வாயவே திறக்க மாட்டாங்க!!! ஹிந்தி நடிகை திவ்யபாரதி இறப்பின் போது எப்படி இந்தியாவே ஷாக்காகி… ஆளுக்கு ஒரு கதை கட்டி விட்டாங்க… ஆனா வேடிக்கை என்னன்னா இன்றைய தேதி வரைக்கும் அந்த நடிகையின் இறப்பு இன்னும் புரியாத புதிராதான் இருக்கு… அந்த மாதிரி தான் இந்த பதினேழு வயது ஹிந்தி நடிகை அல்காவின் மாயமும்… நடிகை திவ்யபாரதியின் இறப்பிற்கு பிறகு இந்தியாவே ஒரு நடிகையின் மாயமான கதையை ஆறு வருஷத்திற்கு பிறகும் பேசிட்டு இருக்காங்கன்னா அது இந்த அல்கா தான்!!!”

"டேய் பாட்டி நம்மை கூப்பிடறாங்க வா போகலாம்" என்று பத்ரி கையை காட்டி பேச…

"யாருடா நாட் நாட் செவனா??" என்றான் சித் ஆர்வமாக மற்றதை மறந்து.

"ம்ம்…" என்றபடி பாட்டி இருந்த திசையில் கையை காட்ட…

கிட்ட தட்ட எம்.எஸ் அம்மாவின் சாயலில் சாந்த சொரூபினியா இருக்கும் அந்த பாட்டியை அவனால் இவர்கள் வர்ணித்த ஆளோடு ஒப்பிட்டு கூட பார்க்க முடியவில்லை…

"டேய் என்னடா அவர்களை போய் நாட் நாட் செவன்னு சொல்ற? பார்க்கவே

அவ்வளவு அமைதியா இருக்காங்க?" என்றான் அதிர்ச்சியாக சித்.

"ம்… ஒரு அம்மாஞ்சி அம்பிக்குள்ள தானே அந்நியன் இருந்தான்.. அதே மாதிரி எங்க பாட்டியும்… தோற்றத்தை பார்த்து ஏமாந்து விடாதே… கில்லாடி கிழவி அவங்க!!!"

"அதுசரி ஊருக்கு ப்ளான் படி நாளைக்கு தான கிளம்பற…" என்றான் சித்.

"ம்ம்.. ஆமாம் ஏன்டா கேட்கற நீயும் நாளைக்கு தானே?"

“இல்லை டா… அந்த ஹோட்டல் டீல் இன்னும் இழுத்துக்கொண்டே இருக்கு… அண்ணனுக்கு போலோ ப்ராக்டிஸ் சீசன்… ஆரபித்து விட்டதால்… கொஞ்சம் வேலை இருக்கு… நான் அடுத்த வாரம் தான் வரேன்.. டிக்கெட் கேன்சல் பண்ணிட்டேன்…”

அதற்குள் கார்த்திக் ஏதோ பேச.. மூவரும் சிரித்தபடி ஏற.. நடிகை நிகாரிக்கா அந்த மூவரில் சித்தையும், பத்ரியையும் ஒரு நிமிடம் நின்று நன்றாக பார்த்தவள். பின்னர் தன் அருகில் இருந்த சௌவியிடம்

“தாய்மை அழுகுன்னு எல்லோரும் சொல்லுவாங்க நான் இதுவரை நம்பியதில்லை… ஆனா உன்னை பார்க்க.. பார்க்க நான் முழுமையாக நம்பறேன் சௌவி..” என்று நிகாரிக்கா சிரித்தபடி கூறியவள்… “உன்னை சுற்றி உன் குடும்ப உறுப்பினர்கள் சூழ நின்று விழுந்து விழுந்து கவனிக்கும் போது எனக்கு பொறாமையா கூட இருக்கு சௌவி.. எனக்கு இப்படி ஒரு குடும்பம் இல்லையேன்னு… அதை விட அந்த வாய்பையும் தவற விட்டுட்டேனேனு நினைக்கும் போது தான் என்னையே என்னால் மன்னிக்க முடியவில்லை” என்றாள் நிகாரிக்கா தாங்கலோடு.

மருதாணி அணிந்த தன் விரல்களால் நிகாரிக்காவின் கையை பிடித்த சௌவி.. அவளின் மெகாவாட் புன்னகையை வீசியவள்.. "ம்கூம்… சந்தோஷமான நாளில் சந்தோஷமான நினைவு மட்டும் தான்… பெரிய மலையின் உச்சியை அடைய கூட கீழே இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும் நிக்கி…. நீ முதல் அடியை எடுத்து வைத்துவிட்டாய். இனி… அடுத்த அடுத்த அடியை தூரத்தை பார்க்காமல் முன்னேற வேண்டியது பாக்கி…!!!!”

இன்று

“உனக்கு பாடிகாடாவோ… இல்லை உன்னுடைய ஹிரோவா டுயட் பாடவோ நான் உன்னை கூப்பிடலை.. அலக்நந்தா. சொல்லப் போனா வில்லனா கூப்பிடறேன்.. நீயா வண்டியில் ஏறினால் லைப்ரரிக்கு போகலாம், நானாக ஏற்றினால் ஹாஸ்பிட்டலுக்கு போவாய் எப்படி வசதி?!?” என்று நமுட்டு சிரிப்புடன் கூடிய எகத்தாளத்துடன் கூறினான் பத்ரிநாத்.

“இல்ல பத்ரி எனக்கு நீ ஹிரோவா… வில்லானா, பாடிகாடா இல்லாமல் எப்பவும் போல் என் ப்ரெண்டா இருக்க கூடாதா?” பத்ரி வலி நிரம்பிய குரலில் கேட்டாள் அலக்நந்தா.

அவள் உதிர்த்த வார்த்தையின் அவன் செவிப்பரையில் உள்ள வாங்கும் முன்… பொங்கி வந்த ஆத்திரத்தை முழுவதும் தன் பைக்கில் காட்டி அதை ஸ்டான்ட் போட்டு நிறுத்தி விட்டு அவள் முகத்திற்கு நேராக வந்து நின்றவன் “எப்படி…. எப்படி??? உன்னை சுற்றி ஒரு வட்டம் போட்டுக் கொண்டு நான் இதை தாண்டி வர மாட்டேன்… அதே மாதிரி நீயும் இதை தாண்டி உள்ளே வராதேன்னு இருப்பதற்கு பேரு… உனக்கு ப்ரெண்டு.. இல்லை…???" என்று நேருக்கு நேராக ஆங்காரமாக கேட்டவன்.

"சாரி… அலக்நந்தா என்னால் அப்படி இருக்க முடியாது… அதை விட இனிமே என்னால் உன்னை ப்ரெண்டா ஒரு காலமும் ஏற்றுக் கொள்ள முடியாது. தெரியாமல் தான் கேட்கிறேன்.. இவ்வளோ நடந்த பிறகும் இப்படி உன்னால் என் முகத்திற்கு நேராக கேட்க எப்படி டி முடியுது??” என்று கொந்தளிப்புடன் கேட்டான் பத்ரி.

தன் பார்வையை சற்றும் விலக்காதவள் “ஏன் கேட்கிறேன்னு உனக்கு புரியலையா?? உன் நெஞ்சில் கை வைத்து உண்மையை சொல்லு பத்ரி நிஜமா உனக்கு புரியலை??” என்று கேட்ட போது அவள் கூறுவதில் இருந்த ஆற்றாமையும் வலியும் அவனை சிறிதும் அசைக்கவில்லை என்று அடுத்து அவன் உதிர்த்த வார்த்தைகள் நிறுபித்தது.

“இல்ல.. அலக்நந்தா… எனக்கு தெரியலை… எதை நம்பவும் என் மனசு இடம் கொடுக்கவில்லை… ஒரு தரம் உன்னை நம்பி நான் என்னை ஏமாற்றிக் கொண்டது போதும்… இனியும் அதை செய்ய நான் முட்டாள் இல்லை..” என்று திட்டவட்டமாக மொழிந்தான்.

யாரோ ஒங்கி அடித்தது போல் உடல் ஒரு தரம் குலுங்கி நிற்க “இது தான் உன் முடிவா பத்ரி???” லேசாக நீர் தேங்கிய கண்களோடு... குரல் உடைய கேட்டாள் அலக்நத்தா.

“இது என் முடிவு மட்டும் இல்லை அலக்நந்தா என் முடிவான முடிவு கூட” என்று அவன் கூறிய முறையும், தொனியும்... அங்கு நிலவிய குளிரை உரை பனியாக்க வல்லதாக இருந்தது.

இத்தனை நேரம் அவள் மனதின் மூலையில் எங்கேயோ ஒளித்திருந்த சின்ன ஒளி இந்த பதிலால் பெருங்காற்று அடித்து சிறு தீபம் அணைவது போல் நின்று போக... இவ்வளவுதானா? தான் கண்ட கனவு எல்லாமே இவ்வளவு தானா? என்ற ஏமாற்றம் அவளை சூறாவளியாய் சுழற்றி அடிக்க... வலியின் கடுமையை தாங்காது தன்னை மீறி கண்ணிலிருந்து நீர் மணிகள் கதகதப்பாக கீழே இறங்கியது.

இரண்டு அடி முன்னே எடுத்து வைத்தவன் கண்ணீர் வழிந்த அவளின் கண்களை கண்ணுற்றவனுக்கு இத்தனை நேரம் இருந்த இறுக்கம் எங்கோ போய் மறைய... “இது தான்டி.. இது தான்டி என் பிரச்சனையே.. இங்கே வழியும் கண்ணீர் உண்மையா.. இல்லை நடிப்பான்னே நம்ப முடியவில்லை... காட் டேமிட்!!! என்னை என்ன பண்ண சொல்ற?? இது எல்லாத்துக்கு காரணம் நீதானே?? உன்னோடு நான் நாலு மாசம் கூடவே இருந்திருக்கேனே டி ஒரு... ஒரு முறை... கூட என்னிடம் உண்மையை சொல்லனுன்னு தோணவே இல்லையா டி???” என்றான் ஆற்றாமையுடன் கலந்த வெறுப்பு மண்டிய குரலில் மொழிந்தான்.

“எனக்கு தெரியாதே பத்ரி.. இங்கு உன்னை மாதிரி ஒருத்தனை பார்ப்பேன்னு எனக்கு முன்னாடியே தெரியாதே பத்ரி.... இப்படி எல்லாம் நான் மாறுவேன்னு தெரிந்திருந்தால் எல்லா உண்மையையும் உன்னை பார்த்த முதல் நாளே சொல்லி இருப்பனே...” என்று அவன் சட்டையை பிடித்துக் கொண்டு முனகியவள் அப்படியே அவன் பரந்த மார்பில் தன் முகத்தை புகைத்தாள்...

இரண்டு அடி தூரத்தில் இருக்கும் வரை தன் கட்டு பாட்டில் இயங்கிய புலக்கள் அணைத்து அலக்நந்தாவை ஸ்பரித்த அந்த நொடி.... எத்தனையோ

ஆண்டுகாலம் தன் போக்கில் வின்னில் சுழன்றுக்கொண்டிருந்த விண்விழ்(meteoroid) பூமியின் பாதையில் நுழைந்தவுடன் புவி ஈர்ப்பு விசையால் தன்னை இழப்பதை போல இருபத்தி ஒன்பது ஆண்டுகள் தன் கட்டுபாட்டில் செவ்வனே வேலை செய்துக்கொண்டிருந்த புலன்கள் அணைத்தும் அவளை நெருங்கியவுடன் அவளுடைய கட்டுபாட்டிற்கு மாற... அவனையும் அறியாது அவனுடைய கைகள் சுற்றி வலைத்து இருக்கி அணைத்தன...

அத்தியாயம் - 5

முன்று மாதம்... இரண்டு வாரத்திற்கு முன்பு

சென்ற வாரம் ஏற்காட்டில் இருந்து உத்திரகண்டிற்கு திரும்பியவனுக்கு மூச்சு முட்ட வேலை.. அதுவும் தன் ப்ராஜக்ட் பார்ட்னர் பாயலுடன் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகள் அப்படியே நின்று போய் இருக்க... அவளோடு இரவு பகல் பாராமல் ஒரு வழியாக செய்து நேற்றோடு முடித்தவன்...

“ஹாயாக” வார விடுமுறையை கழிக்க கவுச்சில் படுத்துக் கொண்டு இளையராஜா மெலோடிகளை ஓடவிட்டு, ஒரு கையில் ப்ராக்கியை(frankie) ரோலை சாப்பிடுவதற்காக பிரித்தவன்... மறுகையால் இந்த வாரத்தில் பார்க்காத தன் பர்சனல் மெயிலை பார்க்க... எப்பொழுதும் போல் ஒரு மெயில் பாயலிடம் இருந்து வந்து இருந்தது... மூன்று நாள் முன்னாடி!!!

அதை என்னவென்று ஓப்பன் செய்து கூட பார்க்காமல் அப்படியே டெலிட் செய்தவன் பெருமூச்சு ஒன்றை விரக்தியாக விடுத்தான்... இத்துடன் இது முப்பதாவது முறையாக இருக்குமா? யார் கண்டது அவனுக்கு சத்தியமாக தெரியவில்லை!!! அவளுக்கு அலுக்கவே அலுக்காதா? வாரத்திற்கு ஒருமுறை அவனுக்கு தன் காதலை மெயில் பண்ணுவதும்... அதை பார்க்க கூட மாட்டாது டெலிட் செய்வதும் வாரம் ஒருமுறை நடக்கும் வழமை!!!

இதில் கொடுமை என்னவென்றால் பாயலை பிடிக்காதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது!! அவனையும் சேர்த்து தான் சொல்கிறான்.. ப்ரோபசரின் மகள் என்ற திமிர், தான் என்ற அகங்காரம் எல்லாம் இருக்காது... அழகு மட்டும் அல்ல... அறிவு.. குணம் என்று அனைத்து நற்பண்புகளையும் கொண்டவள். எல்லாவற்றையும் விட பத்ரியை மிகவும்

நேசிப்பவள் என்பதை அவன் அறிவான்.

சில சமயம் அவள் மனதை புண்படுத்த விருப்பம்… இல்லாமல் அவளுடைய காதலை ஏற்றுக் கொண்டு விட்டால் என்ன?? என்று கூட தோன்றும்!!!

பாயல் வருந்துவதும், அவனுக்காக காத்திருப்பதும் சுத்தமாக பிடிக்கவில்லை என்ற போதிலும்.. ஒருவேளை இதுதான் காதலா? என்று அவனுக்குள் சந்தேகம் வண்டாய் குடைய… இப்படிதான் தன் அண்ணன் சௌவியின் காதலை ஏற்றுக் கொண்டானா? இதற்காகதான் பாட்டியும் தாத்தாவின் காதலை ஏற்றுக் கொண்டாரா? என்று நினைத்த போதிலும்..

அவனுள் இருக்கும் சச்சிதேவின் ரத்தம்.. தான் ஏதோ தவறு செய்வதாக மனதை உறுத்த… இந்த முறை ஊருக்கு சென்ற போது விவரம் எல்லாவற்றையும் தன் பாட்டியிடம் கூறி என்ன செய்வது என்று கேட்டான் பேரன்…

மெலிதான வாட்ச் பார்டர் அணிந்த வெந்தய நிறத்தில் பட்டு புடவை அணிந்திருந்த நாட் நாட் செவன்.. அமைதியாக அவன் சொல்வதை எல்லாம் ஒன்று விடாது கேட்ட பிறகு…

“நீ சொன்னது எல்லாம் சரி… இப்ப என்னிடம் என்ன கேட்க வர பத்ரி?!!!” என்றார் முத்தாய்பாய் பாட்டி தன் கண்ணாடியை கழட்டி துடைத்தபடி.

“பாட்டீஈஈஈஈ….” என்று கடுப்பானவன் “என்ன கேட்க வரேன்னு புரியாத மாதிரி நடிக்கறதை நிறுத்திவிட்டு எனக்கு பதில் சொல்லுங்க பாட்டி…” என்று கடுப்பாக ஆரம்பித்தவன் இறைஞ்சலாக முடித்தான்.

“என்னை கேட்பதை விட உன் வயது ஒத்த ஆர்யாவை கேளுடா…. அவன் சொல்லுவான்…”

"நல்லா சொல்லுவானே??? தொண்டைக்கும் வயிற்றுக்கும் மத்தியில் குடலையே புரட்டி வந்து நிற்கிற மாதிரி இருக்கும்.. அது பெயர் தான் காதல்ன்னு என்று வர்ணிச்சான்…. அந்த புன்னியவான்.. கேட்கவே கேவலமா இருந்தது.. சரின்னு கார்த்தியிடம் கேட்டால்… பராசூட் இல்லாமல் ப்ளைட்டில் இருந்து குதிக்கிறது மாதிரி இருக்கும்னு சொன்னான்.. கேட்கவே

பயங்கர டெரரா இருந்துச்சு!!! சரி வீட்டில் சாந்தமான அப்பாவிடம் கேட்டா… அவர் அதுக்கும் மேலே… ஆர்யாவை பிறந்து முதன் முதலா கையில் வாங்கும் போது, மூன்று கிலோ எடை இருந்தவன்.. முன்னூறு கிலோ எடை இருப்பது போல் கனமா இருந்தானாம்… அப்போ தான் புரிந்துதாம் அது ஆர்யாவின் எடை இல்லை.. அம்மா மேல் உள்ள காதலுன்னு… கண்றாவியா சொன்னார் பாருங்க…"

"சரி போய் தொலைங்கன்னு நேரா வந்து தாத்தாவிடம் கேட்டா… மான் புலியை அடித்து தின்னா எப்படி இருக்குன்னு உணர்ந்தேன்னு சொன்னார்… காட்!!! ஒரு சச்திதேவ்… ஒரு சச்சிதேவ் கூட.. அவங்க காதலை நார்மலா இந்த பூ… புண்ணாக்கு.. மலர்வது மாதிரி… பூமியே எல்.யி.டி. பல்பு போட்ட மாதிரி பளிச்சுன்னு தெரியறது போலன்னு.. சொல்லாமல் ஒன்னு தின்னுவதை சொன்னா… அடுத்தவர் வாந்தி எடுப்பதைன்னு சொல்றாங்க… பாட்டி!!!" என்றான் பத்ரி எரிச்சலாக.

"உன் தாத்தா அப்படியா சொன்னார்?" என்று பாட்டி பரபரப்பாக…

"ஐய்யோ.. அப்படியே டூயட் பாட வேற பாரின் லோக்கேஷனுக்கு போகாதீங்க.. இப்ப என் கதைக்கு வாங்க…"

"காதலைப் பற்றி ஒரு விசித்திரமான உண்மை என்ன வென்றால்… இது இப்படி இருக்கும்.. இப்படிதான் வரும் என்று யாராலும் வரையறுத்து சொல்ல முடிவதில்லை பத்ரி!!! இதை யாரும் யாருக்காகவும் தீர்மாணிக்க முடியாது பத்ரி… ஒவ்வொருத்தருக்கு ஒரு மாதிரி தோன்றும்!!!" என்று கூற.

அவரின் பதிலால் இன்னும் குழம்பி போனவன் "இதெல்லாம் சரி பாட்டி… அவள் மேல் அனுதாபம்.. பாசம்.. நட்பை காதலுன்னு தப்பா அர்த்தம் பண்ணிக்க மாட்டேன்னு என்ன நிச்சயம் பாட்டி??" என்றான் பத்ரி.

"காதல் எப்ப வரும், எப்படி வருன்னு என்னால் சொல்ல முடியாது பத்ரி… ஆனா எது காதல் இல்லைன்னு சொல்ல முடியும்… நிச்சயம் முடியும்…

"அப்படியா.. எப்படி பாட்டி????" என்றான் ஆச்சரியமாக பத்ரி.

"உன் அண்ணன், உன் தம்பி… உன் தாத்தா.. உன் அப்பா.. இவங்க உதிர்த்த

தத்துவ வார்த்தைகளின் அர்த்தம் எப்ப உனக்கு புரியலையோ அப்பவே எனக்கு புரிந்து விட்டது நீ இன்னும் காதலில் விழவில்லைன்னு!!!" என்றார் பாட்டி தீர்மானமாக.

"யூ மீன் டூ செ... அவங்க உதிர்த்த தத்துவ குப்பைகள் எனக்கு புரிந்தால் நான் லவ் டெஸ்ட்டில் பாஸாகிட்டேன்னு அர்த்தம் இல்லையா???" என்று எரிச்சலாக கேட்டவன்.. பட்டென்று எழுந்து அவர்கள் குலதெய்வம் கோயில் கொண்டிருக்கும் வடக்கு பக்கம் திரும்பி... "அம்மா தாயே... மகா காளி!!! இப்ப டைம் இல்லாததால் அடுத்த முறை ஊருக்கு வரும்போது கடா வெட்டி பொங்கல் வைக்கிறேன்... தயவு செய்து இந்த காதல் எனக்கு வேண்டவே வேண்டாம்.. இந்த கருமம் பிடித்த காதல் பிதற்றல்களை புரிந்து கொள்ளவும் வேண்டாம்" என்று பக்தி பரவசத்தில் கூறினான்.

"எப்ப காதலில் விழுகிறாயோ... அப்ப இதே தத்துவ குப்பைங்கள் உனக்கு கம்பன் கவிதைகளா தெரிவதோடு மட்டும் இல்லாமல்... உன் ஒவ்வொரு அனுவிலும் அந்த காதலின் வீரியத்தை உணரும் போது இப்படி... முட்டாள் தனமாய் கேள்வி கேட்க மாட்டாய்...' என்று பாட்டி சிரித்தபடி நினைக்க...

அங்கே அவன் வணங்கிய காளியோ... "நிச்சயம் வருவாய் மகனே!!! எனக்கு பொங்கல் வைப்பாய்... ஆனால் அதை நீ மட்டுமாக தனியாக வந்து வைக்க போவதில்லை மகனே!!!" என்று எண்ணியபடி அவரும் புன்னகை பூத்தார்.

"கொஞ்சம் அந்த பாட்டை ஆப் செய்றீங்களா?" என்று ஒரு பெண் குரல் ஹிந்தியில் கேட்டது பத்ரியின் காதில் விழ... திடுக்கிட்டு தன் நினைவலையில் இருந்து மீண்டவன்...

பழக்க தோஷத்தில் "எவ அவ?" என்று வாயில் வர... நல்ல வேளை வாயில் இருந்த பன்னிர் ப்ராங்கி(frankie) அவனின் குரலை வெளியே வராமல் தடை போட்டது.

தங்கள் ஹாலில் இருந்த கவுச்சில் படுத்து தன் மார்பில் இருந்த லேப் டாப்பை ஒரு கையால் குடைந்து கொண்டு மறு கையால் அழகாக ரோல் செய்யப்பட்டிருந்த பன்னீர் ப்ராங்கியை ருசித்து மென்று தின்றவனுக்கு தலைமாட்டிற்கு பின்னாலிருந்து வந்த குரலை கேட்டவுடன்... மெல்ல பின்னுக்கு தள்ளி திரும்பி பார்க்க...

வெளிர் மஞ்சள் நிறத்தில் வுல்லன் சாக்ஸ் அணிந்த கால்கள் கண்ணுக்கு தெரிய… மேலும் பார்வையை உயர்த்தியவனுக்கு கருப்பும் கிரேவும் கலந்த நைட் பேண்ட் சர்ட்டில் யுவதி நிற்பது தெரிய… ஒரு வழியா இங்கே வந்து ஒரு வாரம் கழித்து நம் புது ரூம் மேட்டை நேருக்கு நேராக பார்க்க போறோம் போல… என்று எண்ணியபடியே மேலே கண்ணை உயர்த்தியவனுக்கு.. அதிர்ச்சியில் தன்னை மறந்து அமர எத்தனிக்க.. கையில் இருந்த ப்ராங்கியுடன்.. தன் நெஞ்சில் இருந்த அந்த ஆப்பிள் லேப் டாப் சரிந்து அங்கே இருந்த கார்பெட்டில் “மெத்தென்று” விழுந்து தானா பாட்டு ஆப் ஆக… இது எதையும் உணர கூட இயலாது ஒரு முறை மலங்க… விழிக்க… பின் பழக்க தோஷத்தில் கைகள் தானாக அவன் கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தவனுக்கு… தன்னையும் அறியாது கண்கள் கலங்கியது!!! அங்கே தெரிந்த அழகை கண்டு அல்ல.. கையில் இருந்த அந்த மாசாலா காரத்தில்!!!

ஒரு சச்சிதேவை ஆச்சரியப்படுத்த அசாதாரணமான விஷயம் தேவை என்பது அவனின் கருத்து… அதுவும் தன் பேஷன் டிசைனர் அண்ணன் ஆர்யாவின் நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமாக மாற்றும் அவனுடைய ஹர் ஸ்டைலை பார்த்து வளர்ந்தவனுக்கு எந்த மாதிரி ஸ்டைலை பார்த்தாலும் அதிர்ச்சி அடைய வாய்ப்பே இல்லைன்னு தான் இந்த நொடி வரை இருமாந்து இருந்தான். இதோ இந்த அலக்நாந்தாவை காணும் வரை!!!

இதுவரை முக வடிவிற்கு ஏற்றது போல் முடி வெட்டி அதை முகத்தில் அழகாக விழும் படி தான் பார்த்திருக்கிறான். ஆனால் முதல் முறை… முகத்தில் நான்கு அடியில் முடி முளைத்து பார்க்கிறான். அதாவது… தலையில் இருக்கும் முடி எல்லாத்தையும் முகத்தில் முக முடி போல் விழும் ஹேர் ஸ்டைலை இப்பொழுது தான் பார்க்கிறான்!!!.. இதுபோதாது என்று முகத்தை மறைக்கும் ஒரு சோடாபுட்டி கண்ணாடி வேற!!! இந்த சோடாபுட்டி கண்ணிற்கா.. இல்லை கன்னத்திற்கா என்று கூடவே சந்தேகம் வேறு எழுந்தது.

“கடவுளே!!!” இந்த ஹேர் ஸ்டைலைப் பற்றி தப்பி தவறி கூட ஆர்யாவிற்கு சொல்ல கூடாது இல்லையேல்.. அவன் நிச்சயம் இது மாதிரி ஒன்றை முயற்சிப்பான். அதுவும் இப்பொழுதே ஆறு அடிக்கு வளர்த்துக் கொண்டு

திரிப்பவன் வேற!!! அது என் மூலம் தான் ஆச்சு என்று தெரிந்தால் அந்த நாட் நாட் செவன் கிழவி என்னை ஆள் வைத்து கடத்தி எனக்கு இப்படி ஒரு ஹேர் ஸ்டைலை வெட்டி விடும்!!!

ஏன் சித் இவளை இன்னும் சரியாக பார்க்கவில்லை என்று இப்பொழுது புரிந்தது. பார்ப்பதற்கு இண்டு இடுக்கு சந்து பொந்து இருந்தால் தானே முகத்தை பார்க்க முடியும்??? அது தான் ஜன்னல் திரை மாதிரி முகத்தை முழுவதும் முடி மறைத்திருந்தால் எங்கிருந்து பார்க்க??

"அடேய்!!! நல்லவங்களா எங்கிருந்து டா இவளை என் ரூம் மேட்டாக போட்டிங்க?!!?" என்று மனதில் அலறல் ஒளித்த போதும்.. அவளை 'வாட்ஸ த ப்ரோசிஜர் டு சென்ச் த ரூம்' என்று சொல்ல வைக்க ஆசை வர வில்லை.. காரணம் இத்தனை நேரம் அவன் சுவைத்து உண்ட ப்ராக்கியும் இந்த ஒரு வாரமாக அவள் செய்து.. டப்பர் வேரில் மூடி வைத்திருந்த சுவையான, எளிமையான உணவும் தான் அதற்கு காரணம்.

தன் கேட்டரிங் படிக்கும் தங்கை ஷங்கி சமைத்த உணவை சாப்பிட்டவனுக்கு... வெகு சுமாராக சமைத்த உணவாகினும் தேவாமிர்தமாக தான் இருக்கும்... ஆனால் உண்மை என்னவென்றால் இந்த நியுமிக்மெட்டிக்ஸ் படிக்கும் அலக்நந்தா ரொம்பவே நன்றாக சமைத்தாள்!!!

அதற்காக அறுசுவை உண்டி படைத்தாள் என்று சொல்ல முடியாது ஆனால் ப்ரெட் சான்வெஜ், பாஸ்தா, ரொட்டி, ப்ராங்கி, சாலட் என்று எளிமையாக சமைத்தாலும் மிகவும் சுவையாகவே இருந்தது. ஒருவேளைக்கு நான்கு வெரைட்டி கேட்கும் சித்திக்கே அவள் சமைத்த உணவை விரும்பி சாப்பிடுவதை அவன் அறிவான்.

இதுவரை அவள் சமைத்த உணவை சாப்பிட்டிருக்கானே தவிர அவளை பார்த்தது இல்லை!!! இன்னும் பார்க்கவில்லை என்பது வேறு விஷயம்!!! கடந்த ஒரு வாரமாக ஒன்று டப்பர்வேரிலோ.. இல்லை செல்லோவிலோ அவர்களுடைய உணவு இருக்கும்!!!

"ஏக் மினிட்..." என்று மொழிந்தவன் கீழே கிடந்த லேப் டாப்பை எடுத்து காபி டேபிளில் வைத்தவன், அப்படியே அந்த frankieயை எடுத்து குப்பை தொட்டியில் போட போனவன்...

“படிக்கறதுக்கு பாட்டு டிஸ்டர்பா இருக்கா?” என்றான் பாட்டை நிறுத்த சொன்னாளே.. காரணம் இதுவாக தான் இருக்க வேண்டும் என்ற யூகம். முகம் தெரியாவிட்டாலும் ரூம்மேட்டாக ஆகிவிட்டாளே என்ற காரணம் பிரதானமாக இருக்க கடமையேன்னு கேட்டு தொலைத்தான்.

ஆனால் அந்த தேமே என்ற கேட்கப்பட்ட கேள்வியால்.... மரத்தில் இருந்து ஏன் “ஆப்பிள்” கீழே விழ வேண்டும்? என்ற ஐஸக் நியூட்டனின் கேள்வி எப்படி உலகத்தையே புரட்டி போட்டதோ... அப்படிதான் அலக்நந்தாவிடம் புறப்பட்டு வரப்போகும் அந்த பதிலால்... பத்ரியின் வாழ்க்கை பாதையை மட்டும் இல்லாமல்.. அலக்நந்தாவின் பாதையும் சேர்த்தே புரட்டி போட போகிறது என்பது தெரியாது !!!

“ம்கூம்...” என்று தலை அசைப்பாய் பதில் வந்தது அவளிடமிருந்து.

“பின்ன?”

“தூங்க போனேன்!!!”

“வாட்????” என்று அதிர்ந்து அவளை நின்றி இடத்தில் இருந்து திரும்பி அலக்நந்தாவை பார்த்தான் பத்ரி. தூக்கும் போதும் இளையாராஜாவின் இசை இடைஞ்சலா இருந்ததா??? அதுவும் எண்பதுகளில் வந்த மெலோடி?!? மூளையில் எங்கோ எதுவோ “கிளிங்” என்று அடிக்க... கையில் இருந்த ப்ராக்கியை டஸ்பினில் போட்டவன் அமைதியாக கையை கழுவிக்கொண்டு வந்து...

“ஹாய் நியூ ரூமி.. ஐயம் பத்ரிநாத் சச்சிதேவ்” என்று முறைப்படி... தாமதமாக தன்னை தானே அறிமுகம் செய்துக்கொண்டவன்... அப்படியே இத்தனை நேரம் தான் ஆனந்த சயனத்தில் பள்ளிகொண்டிருந்த கவுச்சில் அமர்ந்தவன்.. எதிரில் ஒன்றாக இருந்த ரிசைக்ளினர் சோபாவை (recycliner sofa) கையை காட்டி “உட்கார்.. அலக்நந்தா” என்றான் அமர்த்தலாக.

“இல்லை... நீங்க முக்கியமான வேலையில் இருந்தீங்க..” என்று கூறியபடியே அந்த அலக்நந்தா திரும்பி தன் ரூமிற்கு போக தன் சாக்ஸ் அணிந்த கால்களை திருப்ப..

“புது ரூம் மேட்டிடம்.. ஒரு வார்த்தை பேச முடியாத அளவு எந்த பிசியான வேலையிலும் இல்லை.. நாளைக்கு ஞாயிறு தானே… பார்த்துக்கலாம்?!?” என்று எளிதாக தோளை குலுக்கியவன் “வந்து… உட்கார் அலக்நந்தா” என்றான் அதிகாரமாக.

அவனின் குரலில் இருந்த அதிகார தொனியைக் கேட்டு திடுக்கிட்டவளின் பெரிய சோடா புட்டி அணிந்த கண்கள் ஒரு நொடி நிமிர்ந்து நோக்கியது…

எதையும் கவனமாக உள்வாங்கும் பத்ரியின் கண்களுக்கு அந்த நொடிப் பொழுதில் வந்து போன அனைத்துவிதமான ரசத்தையும் கவனித்தவன் கடைசியாக அந்த முண்டக கண்ணில் நிரம்பிய பயத்தை துல்லியமாக அவனால் இனம் காண முடிந்தது.

பதுமையாக “ம்ம்” என்று தலையை ஆட்டியவள்… அவனை மீண்டும் தலை நிமிர்த்தியும் பாராது பத்ரியின் நேரேதிரில் இருந்த அந்த ரிசைக்ளினரில் அமராமல் அவனுடைய கவுச்சின் மறுகோடியின் மூளையில் அமர்ந்தாள்.

அவள் உட்கார்ந்த விதத்தையும், விரல்கள் பிசைந்த விதத்தையும் கவனித்தவனின் உதடுகளில் முதல்முறையாக சிரிப்பு பீறிட… வெகு சிரமப்பட்டு அடக்கியவன் கவுச்சின் நுனியில் உட்கார்ந்திருந்தவளை ஏதோ ஒரு தாங்க முடியாத சஸ்பென்ஸ் சினிமா பார்ப்பது போல்… எங்கே ஒரு நொடி கண் இமைத்தாலும் அந்த கதை புரியாமல் போயிட போகுதோ என்ற நோக்கில் பார்ப்பது போல் சுவாரசியமாக பார்த்தான்!!!

தொடர்ந்த ஐந்து நிமிடமும் அவளைப் பார்க்க… அதாவது திரைசீலையாக தொங்கிய முடி எதுவரை பார்க்க அனுமதித்ததோ அதுவரை பார்த்தான்… அப்படி அவன் பார்த்த அடுத்த ஐந்து நிமிடமும் அவள் தப்பி தவறிக் கூட தலையை நிமிர்த்தியோ… நிலவிய மௌனத்தை கலைக்க விரும்பி பேச்சை ஆரம்பிக்கவோ இல்லாமல் அலக்நந்தா அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.. அவன் தன்னை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான் என்று ஐயமற தெரிந்த போதும்!!!

“தேங்க்ஸ் அலக்நந்தா” என்றான் மொட்டையாக .

“ம்ம்..” என்று பொதுவான தலை அசைப்புதான் அவளிடமிருந்து பதிலாக கிடைத்தது.

“எதுக்கு தேங்க்ஸ் சொல்றேன்னு தெரியுமா?” என்றான் குரலில் கேலி இழையோட பத்ரி.

“ம்கூம்..” என்று அவ்விடத்திலிருந்து மீண்டும் தலை அசைப்புதான் பதிலாக வர..

“உன்னுடைய உணவிற்காக தான்.. எல்லாமே ரொம்பவே டேஸ்டியா இருந்தது” என்றான் நிதானமாக பத்ரி.

“ம்ம்...”

“இதற்கும் ம்ம்.. தானா? இந்த வாரம் முழுவதும் உன்னை கேட்காமலே உன் உணவை நான் எடுத்து சாப்பிட்டேனே கோபம் வரவில்லையா?” என்றான் பத்ரி அவளின் முகத்தை பார்த்தபடி அல்லது பார்க்க முயன்றபடி!!!

வெளியே சத்தம் வராமல் பெருமூச்சு விட்டவள்...“எனக்கு முன்னாடியே தெரியும்!!!” என்றாள் அமைதியாக.

ஒகோ!!! நம்மை பற்றி எவனோ துச்சாதன் ரேன்ஜிற்கு போட்டுக் கொடுத்து இருப்பானோ?!? அதனால் தான் இப்படி இருக்காளோ என்று மனசு கேள்வி கேட்க... அதற்கு அவனின் உள்ளுணர்வு கண்டிப்பாக அது இல்லை என்று அடித்து பதில் கூற...

“எப்படி தெரியும்?”

“மிர் சித்திக் அல்உமர் அலிக்கான் தான் நான் எது சமைத்தாலும் மூன்று பேருக்கும் சேர்ந்து சமைக்கும் படி சொன்னார்!!!” என்றாள் கிசுகிசுப்பாக வெளியே வந்த போதும் தெளிவாக கேட்டது.

“ஓகோ!!!” என்று புன்னகை விரிய கேட்டவன்.. இது சித் பையனின் வேலையா? “இப்படி நீ ஒவ்வொரு முறையும் இவ்வளவு நீட்டி முழக்கி கூப்பிடறத்துக்குள்ள அடுத்த ஆறு மாசம் ஓடிவிடும்.. சோ அவனை சித்...

என்னை பத்ரி போதும்!!!" என்றான் பரந்த மனதாக.

"ம்ம்.." என்று அதற்கு பதிலாக ஒரு தலையசைப்பு பதிலாக கிடைத்தது!!!

"என் எல்லா கேள்விக்கும் உன் கையைப் பார்த்தே பதில் சொல்றியே... என் கேள்விக்கு பிட் எழுதி வைத்திருக்கியா... இல்லை நீ எங்க ஊர் சஞ்சய் ராமசாமியா இல்லை உங்க ஊர் சஞ்சய் சின்ஹானியாவா?" என்றான் குறும்பு அவன் கண்களில் மட்டும் அல்ல குரலிலும் கூத்தாட!!!

அவள் பதில் சொல்லுவதற்குள் கதவை திறந்துக் கொண்டு உள்ளே நுழைந்த சித்...

இருவரும் ஒரே கவுச்சில் உட்கார்ந்து இருப்பதை பார்த்து... "கடைசியா நம் ரூம் மெட்ஸ் எல்லாம் ஒன்றாக சேர்ந்தாச்சு போல?" என்றான் உள்ளே வந்தப்படி சித்.

இதற்கு பத்ரி பதில் சொல்லும் முன் "நான் தூங்க போறேன்.." என்று முனுமுனுப்பாக சொன்னபடியே எழ...

இந்த முறை எந்த மறுப்பும் சொல்லாமல் பத்ரி "குட் நைட்" என்று சொல்ல, அதையே சித்துவும் மொழிய... இருவருக்கும் சேர்த்து ஒரு "குட் நைட்டை" சொல்லிவிட்டு என்னமோ கூண்டில் அடைத்து வைக்கப்பட்ட பறவை விடுவிக்கப்பட்டது போல்... விரைந்து சென்று தன் ரூமிற்கு சென்று தஞ்சை அடைந்தாள் அலக்நந்தா!!!

அங்கிருந்த ரிசைக்ளினரில் பொத் என்று அமர்ந்த சித்... "என்னடா பத்ரி... அம்மணி... உன்னிடமும் அதே ம்ம்.. ம்கூம்... பல்லவி பாடினாங்களா??" என்று அலட்சியமாக கேட்டான் சித்.

சித் அறிந்த வரையில் அவள் யாரிடமும் வேறு எதையும் பேசியதில்லை என்ற எண்ணம் அவனுக்கு....

"நீ சொன்னது அப்ப கெஸ்ட் அப்பியரன்ஸ் கொடுத்த போதும்.. அலக்நந்தா நிறைய பேசினாளே!!!" என்றான் அடாவடியாக பத்ரி.

“அப்படியா ஐ காண்ட் பிளிவ் திஸ்...?” என்று பத்ரி சொன்னதை முழுவதுமாக நம்ப முடியாது வாயை பிளந்த சித்..

“ம்ம்.. பாட்டு சத்தம் வந்தா அலக்நந்தாவால் தூங்க முடியாதாம்... சொ... இனி பாட்டு நைட்ல பாட்டு கேட்கனுன்னா.. ஹட் போன் கேட்டு கேளு..” என்று பத்ரி முடிக்க...

மயக்கம் வருவது போல் நடித்த சித்.. “நிஜமா அலக்நந்தாவா டா இதை சொன்னாங்க????” என்றான் நம்ப மாட்டாமல்

“பின்ன நான் அவள் ரூம் கதவை தட்டி என்னுடன் வந்து பேசறியான்னு கேட்டா உடனே சொல்லிடுவாங்களா??” என்றான் பத்ரி.

“அப்ப நான் நினைத்த மாதிரி அவள் ஷய் டைப் இல்லையா???” என்றான் சித் யோசனையாக.

“நீயும்.. நானும் எந்தளவு ஷய் டைப்போ அதே அளவு தான் அவளும்....” என்றான் முற்றும் அறிந்த ஞானியாக.

“அப்படியா????? எதை வைத்து சொல்ற பத்ரி?” என்றான் ஆர்வகோளாராக.

“ம்ம்... என்னை விட்டு ஐந்து அடி தள்ளி இருக்கும் அந்த ரிசைக்ளினரில் நான் உட்கார சொன்னால்.. அதில் உட்காராமல் இதோ எனக்கு பக்கவாட்டில் இரண்டு அடி தூரத்தில் உட்கார்ந்தா...”

சோ??? என்று சித் இழுக்க

“நினைத்ததை செய்யனுன்னு ரொம்ப தெளிவா முடிவு எடுக்கும் ரகம்.. அதை விட முக்கியமா தான்... நினைத்ததை வெளியே சொல்லாத அழுத்தமான ரகம். இங்கே உட்கார்ந்திருந்த பத்து நிமிடமும் தப்பி தவறி ஒரு முறை கூட என்னை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை... என்னை பார்க்கவிடவும் இல்லை சித்... அதனால் தான் அப்படி ஒரு ஹேர் கட்... இதில் இருந்து என்ன தெரியுது???” என்றான் அழுத்தம் திருத்தமாக அதே சமயத்தில் தெள்ளத் தெளிவாக.

“ம்ம்.. அவ்வளவு பெரிய கண்ணாடி போட்டும் கண்ணு தெரியாது தெரியுது!!!”

“பாரதி ராஜா டீச்சர் ஹிரோயின் போட்டதற்கு பிறகு அந்த கண்ணாடியை இப்ப தான் யூஸ் பண்ணி பார்க்கிறேன்!!!...” என்று சிரித்தபடியே மொழிந்தவன்... பின் தன் ஒருநாள் தாடியுடன் இருந்த தாடையை யோசனையுடன் தடவ... அவனின் முகவாயை குழி பளிச்சென்று வெளியே பிரகாசிக்க...

“என் யூகம் சரி என்றால்... அவள் எதற்காகவோ பயப்படுகிறாள்..!!!” என்றான் எள்ளத்தனையும் சந்தேகமில்லாமல். அழுத்தம் திருத்தமாக.

அது மட்டும் அல்ல... ஐந்து நிமிடம்... ஐந்து நிமிடம் அவளை நான் வெறிக்கிறேன் என்று தெரிந்த பின்னும் கூட அவள் தலை உயர்த்தி பார்க்கவில்லை என்றால்???? ஒன்று இந்த மாதிரி பார்ப்பதற்கு பழக்க பட்டவளாக இருக்க வேண்டும் இல்லை... தலை நிமிர்த்தி பார்ப்பதற்கு பயந்தவளாக இருக்க வேண்டும் என்ற தோன்ற... ஏனோ அவனின் உள் மனது இதில் இது இரண்டில் ஒன்று இருக்க வாய்பில்லை.. இரண்டுமே இருக்க தான் வாய்ப்பு அதிகம் என்று தோன்ற அதை மறந்தும் சித்திடம் வாயை திறக்கவில்லை!!!

“டேய்... இதை எல்லாம் அவளுடன் உட்கார்ந்திருந்த ஐந்து நிமிடத்தில் முடிவு செய்து விட்டாயா?” என்றான் நம்பமாட்டாமல் சித்.

“ம்ம்..” என்று தலையை யோசனையாக ஆட்டியவன்.. “சித்.. நாளைக்கு யார் ரூமில் கார்ட்ஸ் பார்ட்டி?”. விடுமுறையில் நண்பர்கள் ஒன்று கூடி கார்ட்ஸ் விடையாடுவது அவர்களில் வழக்கம்.

“ஏன்?? நம்ம பவன் ரூமில் தான்”

“நாளைக்கு நம் ரூமில் கார்ட்ஸ் பார்ட்டின்னு சொல்லிவடு...”

“நீ எதோ ப்ளான் பண்ணிட்டல்ல??” என்று சித் அலக்நந்தாவின் ரூமை பார்த்தபடி கேட்டான்.

இன்று...

ஒரு நிமிடம் தன் மார்பில் புதைத்து கொண்டிருந்தவளை வளைத்து தன்னுடன் சேர்த்து அணைத்தவன் மறு நிமிடம்...

“மோனல்!!!” என்றபடி அவளின் மெல்லிய நீண்ட கழுத்தில் முகம் புதைக்க... நீண்ட நெடிய... நாள் கழித்து அவன் வைத்த பெயர் சொல்லி அழைக்கிறான்!!!

எந்த பெயரை இனி அவன் வாயால் கேட்கவே மாட்டேன் என்று நினைத்து ஏங்கினாளோ அந்த பெயர்.. அவனே அழைக்க.. கால்கள் அள்ளி தண்டாக துவள அப்படியே சரிந்து கிழே விழ போனவளை அப்படியே அவன் கையில் ஏந்தியவன் ஒரு நொடி கூட யோசிக்காமல் இரண்டே அடியில் தன் பைக்கில உட்கார வைக்க என்ன நடக்கிறது என்று அவள் உணரும் முன் அவன் பைக்கை ஸ்டார்ட் செய்திருந்தான்.

இப்படியே அவன் எங்கே கொண்டு போனாலும் அவளுக்கு மிகுந்த சந்தோஷமே... ஒரு வினாடி கூட அவனை பிரிய விரும்பாதவள் போல அப்படியே அவன் மார்பில் கிடக்க அந்த டுகாட்டியே அவர்களின் வெண் புரவியில் போகும் பயணமாக ஒவ்வொரு அனுவிலும் தன்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தவன் எப்படி உணர்கிறான் என்று கேட்க தேவையே இல்லாமல் அவன் பைக் முப்பது கிலோ மிட்டர் வேகத்தில் போக இதை விட வேறு என்ன வேண்டும் பத்ரியின் நிலையை உணர??

வண்டி நின்ற பிறகும் கூட இறங்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் அவள் அப்படியே உட்கார்ந்திருக்க... பைக்கை ஆப் செய்தவன் அவளிடமிருந்து மெல்ல விலக.. அவளையும் இறக்கி நிறுத்த.. அடுத்த நொடி

“ஹாய் பத்ரி... உனக்காக தான் பத்து நிமிஷமா இந்த கடும் குளிரிலேயும் இங்கயே வெயிட் பண்ணிட்டு இருக்கேன்” என்று பாயலின் உல்லாசமான குரல் லைப்ரரியின் வாசலில் கேட்க... இத்தனை நேரம் அவனுடன் ஒட்டிக் கொண்டிருந்ததால் தெரியாத குளிர் இப்போது மொத்தமாக அவளை தாக்க.. குளிரில் உடல் நடுங்க... வெடவெடக்க நின்றாள் அலக்நந்தா.

அத்தியாயம் - 6

மூன்று மாதம்... இரண்டு வாரத்திற்கு முன்பு....

“நீ எதோ ப்ளான் பண்ணிட்டல்ல??” என்று சித் அலக்நந்தாவின் ரூமை பார்த்தபடி கேட்டான்.

“ம்ம்...” என்று அவளை போலவே அவனும் தலையை ஆட்ட.

“ஒருத்தர் தலை ஆட்டுவதை பார்க்கறதே வெறுப்பா இருக்கு... இதில் இன்னும் ஒரு ஜீவனா?... நான் பாவம் டா.. மச்சி... என்னை விட்டுடு... இல்லை அழுதுடுவேன்!!!?” என்று விளையாட்டாக கூறியவன்... பின் பத்ரியை நேராக எதிர்கொண்டு “மச்சி... என்னை கேட்டா... அவள் இருக்க திக்குகே ஒரு கும்பிடு போடுன்னு சொல்வேன்... அலக்நந்தா பேசறது மட்டும் இல்ல.. அவள் நடந்து கொள்வதைப் பார்த்தால் ஏதோ கொலை குற்றம் பண்ணிட்டு வந்து இங்க தலை மறைவா இருக்க மாதிரி இருக்கு... பி கேர் புல்...” என்றான் நண்பனின் நலனில் அக்கறை கொண்டவனாக சித்.

தலையை லேசாக சரித்து அவளின் ரூமின் புறம் திரும்பியவன் “நீ சொன்னது எல்லாம் நானும் ஒத்துக்கிறேன்... ஆனா.. நீயே சொல்லு சித்... ஒரு பயங்கர சஸ்பென்ஸ் திரில்லர் படம் பார்க்க.. உட்கார்ந்துவிட்டு முதல் பத்து நிமிஷத்தில் ஐய்யோ படத்தோட முடிவு எப்படி இருக்குமோன்னு பயந்து படத்தை பாதியிலேயே நிறுத்து விடுவோமோ என்ன?” என்றான் பத்ரி ஒய்யாரமாக.

“அது எப்படி முடியும்? முடிவு என்னன்னு தெரியாமல் மண்டையை வெடித்து விடுமே..” என்றான் சித் என்ன சொல்கிறான் என்று புரிந்தபடி.

“ம்ம்.. அதுமாதிரி தான் அலக்நந்தாவும்... குட் ஆர் பேட்... சஸ்பென்ஸ் என்னன்னு தெரியாது நிம்மதியாக இருக்க முடியாது” என்று முடித்தான் பத்ரி.

“நீ முடிவு பண்ணிட்ட.... இனி உன் காது கேட்காது... நீ ஆடு ராஜா... ஆனா ஒரு விஷயம்.. பத்ரி... பி கேர் புல்... ஓடும் பச்சை நிற அலக்நந்தா ஆறு பார்க்க வெகு அழகா தான் தெரியும்... ஆனா அந்த நிர்மலமான அழகில் மயங்கி

ஆர்வ கோளாறில் ஆற்றின் சுழலில் சிக்கி மடிந்தவர்கள் தான் அதிகம் என்று படித்திருக்கேன் பத்ரி… எனக்கு என்னமோ அந்த அலக்நந்தா ஆற்றுக்கும்… இந்த அலக்நந்தாவிற்கும் பெரிய வித்தியாசம் இருப்பது போல் தெரியவில்லை…" என்றான் எப்பொழுதும் விளையாட்டு தனமும், கேலியும் மிதமிஞ்சி பேசும் சித்.

"மனிதனை விடுடா… உருவத்தில் பெரிய யானையை கூட தன் போக்கில் அடித்துச் செல்லும் காட்டாறு கூட.. சின்ன சின்ன.. மீனை தன்னை எதிர்த்து சர்வ சாதாரணமாக எதிர்நீச்சல் போட அனுமதிக்கும்.. ஏன் தெரியுமா?" என்று ஸ்தரமாக கேட்டான் பத்ரி.

"அட… ஆமாம் இல்லை.. நான் இதைப் பற்றி யோசித்து கூட பார்த்தது இல்லை… யானை கூட ரொம்ப நல்லா நீந்தும் இல்ல??.." என்றான் சித் யோசித்தபடி.

"ரொம்ப சிம்பிள்.. அந்த நதிக்கு தெரியும்… யானையால் நிலத்தில் வாழ முடியும்.. ஆனா மீனால் வேற எங்கேயும் வாழ முடியாதுன்னு…" என்றான் பத்ரி சூட்சமாக.

"ம்ம்… இதுக்கு அப்புறம் நான் சொல்ல ஒன்னும் இல்லை.. பத்ரி.." என்று பெருமூச்சை விட்டவன் "நாளைக்கு சீட்டு கட்டை எடுத்துக்கொண்டு நம்ம ரூம்மிற்கு வர சொல்லிடறேன். அப்பறம் எப்பவும் போல நாளைக்கு லன்சிற்கு கேன்டீன் போயிடலாம் இல்லை.. நீ ஸ்விமீங் போயிட்டு வந்திடுவியா இல்லை வேற எதாவது ப்ளான் இருக்கா?!?"

"எதுவும் இல்லை… லன்சிற்கு வந்திடறேன்.. ஏய்.. அந்த ஸ்டிக்கரில் நாளைக்கு நமக்கு சமைக்க வேண்டான்னு எழுதி அந்த கதவில் ஒட்டு… எப்ப எழுந்திருப்பாலோ என்னவோ…?!?" என்று பத்ரி முன்யோசனையாக சொல்ல..

"சாரி.. அலக்நந்தாவிற்கு அரபிக் புரியாதுன்னு நினைக்கிறேன்.. அதனால் நீயே எழுதி வை" என்று சிரித்தபடி கூற

"காட்.. உன் கையெழுத்தை எப்படி மறந்தேன்???" என்று பக்கென்று சிரித்தவன் "சரி.. நானே எழுதி வைக்கிறேன்.. உன் ப்ராக்ஜெட் எப்படி

போகுது" என்று அரட்டை அடிக்க ஆரம்பித்தவர்கள் நேரம் தெரியாமல் பேசி விட்டு சித் தூக்கம் வருகிறது என்று படுக்க போக மணி ஒன்றை தாண்டி இருந்தது.

தன் மெயில்கள் எல்லாம் முடித்துவிட்டு... விடிவெள்ளியை ஆன் செய்துவிட்டு படுக்க போனவனிற்கு தூக்கம் மருந்திற்கு கூட வரவில்லை.. ஏனோ அலக்நந்தாவின் அந்த முகம்.. அவள் இவனை பார்த்த அந்த பார்வை அவனுள் தூண்டில் மீனாய் ஈர்த்தபடியே இருந்தது!!!

மூன்று மணி ஆகியும் தூக்கம் வராமல் புரண்டவன்... தண்ணீர் குடிக்க வெளியே வர... விடி வெள்ளியின் வெளிச்சத்தில் தன் ஆஸ்தான கவுச்சில் யாரோ படுத்திருப்பது தெரிய.. சித் ஏன் இங்கே? என்று நினைத்தபடி அருகில் சென்றவனுக்கு அது அலக்நந்தா என்று புரிந்தது.

தான் உட்கார சொன்ன போது கூட நுனி சீட்டில்.. முள் மேல் உட்கார்ந்து இருப்பது போல் அமர்ந்திருந்தவள் இப்பொழுது ஏன் இங்கே வந்து படுக்க வேண்டும்?!? என்று யோசனையுடன் அவளைப் பார்க்க.. அப்பொழுது தான் அவள் தன் வயிற்றை பிடித்துக் கொண்டு சுருண்டு படுத்திருந்த விதமும்... கண்களை இறுக மூடி அவள் வலியை தாங்க படாதபாடு பட்டுக்கொண்டிருப்பதும் விளங்க...

மெல்ல அவள் அருகில் சென்றவன்... அந்த குளிரிலும் அவள் முகத்தில் முத்து முத்தாக வேர்த்திருக்க... ஒருவேளை பெண்களின் பிரச்சனையாக இருக்குமோ? ஏற்கனவே அவள் வாயை திறந்து ஒன்றும் சொல்ல மாட்டாள். இதில் இது வேறு என்றால்... சுத்தம்.. என்ன செய்வது.. பேசாமல் அமைதியாக ரூமிற்கே போய் விடுவோமா? என்று ஒரே.. ஒரே நொடி தான் யோசித்தான்.. ஆனால் அடுத்த நொடி அவள் படுத்துக் கிடந்த இடத்திற்கு அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தவன்...

"அலக்நந்தா" என்று மெல்ல அழைத்தான்.

இரண்டாம் முறை அழைத்தற்கு மெல்ல கண் விழித்தவள் கண்ணாடி அணியாது இருந்த கண்கள் வலியின் ஒவ்வொரு ரணத்தையும் கண்ணாடியாய் பிரதிபலிக்க...

“என்ன பண்ணுது?” என்றான் மெல்ல..

வலி… தொண்டை கிழிய கதறி அழுவது எல்லோரும் அறிவது.. ஆனால் தன் வலியை.. ஒரு சின்ன சிணுங்கல் கூட வராது தனக்குள்ளே தாங்கிக் கொள்ள முயல்வது ரணம்… அப்படி தனக்குள் போராடிக் கொண்டிருந்தவள் அவன் சொன்னது எதுவும் காதில் விழாதது போல் ஒரு நிமிடம் இருக்கி மூடி கண்ணை திறந்து…

“அல்சர்” என்றாள் காற்றோடு காற்றாக போன குரலில்.

“மாத்திரை தீர்ந்து விட்டதா?” என்றான் சரியாக யூகித்தவனுக்கு கூடவே இரவு சற்றே மசாலா தூக்கலாக இருந்த ப்ராங்கியை சாப்பிட்டது நினைவில் வந்து நிழலாடியது.
“ம்ம்..” என்று முனங்கலாக வந்தவள் மீண்டும் தன் வலியின் தாக்குதல் அதிகம் ஆக… அப்படியே மரக்கட்டை போல் தன்னுள் சுருள… வேகமாக தன் கைபேசியை எடுத்து வந்தவன் யாருக்கோ போன் செய்து..

“ம்ம்.. ஆமான்டா தூங்கிட்டியான்னு கேட்க தான் போன் பண்ணினேன் என்று சிலாகித்தவன்.. ஏன்டா இந்த நேரத்திற்கு ஏதாவது அவசரம் இல்லாமல் போன் பண்ணுவாங்களா?”

“டேய்… ஹர்ஷா.. இப்ப மட்டும் கண்ணை திறக்கலை… உன் ரூம் கததை உடைத்து வந்து தலையில் தண்ணியை ஊற்றுவேன்… அந்த பயம் இருக்கட்டும்… அல்சர் பேயின் டப்ளட் ஓமேஸ் இருக்கா?” என்றான் அதட்டலாக.

“ம்ம்… சித்திற்கு தான்.. டேய்.. அவனுடைய மெடிக்கல் ஹிஸ்டரி பற்றி அப்புறம் விசாரிக்கலாம்… முதல்ல மரியாதையா மாத்திரை எடுத்து வை இப்ப வரேன்” என்று போனை கட் செய்தவன்.

“அலக்நந்தா.. நான் போய் மாத்திரை எடுத்து வரேன்.. ஏக் மினிட்” என்று அவசரமாக மொழிந்தவன் மெல்ல கதவை பூட்டி விட்டு புயல் வேகத்தில் ஹர்ஷா ரூமை அடைந்தவன் அவன் கேட்ட எந்த கேள்விக்கும் பதில் சொல்லாது கிட்டதட்ட அவன் கையில் இருந்து மாத்திரையை பிடுங்கிக் கொண்டு அதே வேகத்தில் ரூம் வந்தான்.

வலியில் சுருண்டு கிடந்தவளை… மூன்று முறை பெயர் சொல்லி அழைத்து கண் திறக்கச் செய்ய…

அந்த நீண்ட முண்டகம் போல் இருந்த நேத் த்தில்… வலியின் மிகுதியால் திரண்டு இருந்த நீரில் அவளின் கரு விழியில் மிதந்தன.
“ஆழி சூழ் உலகு” என்று அவன் எப்போதோ கேட்ட தமிழ் பதத்தை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்திருக்கிறான்… ஆனால் இன்று தன் கற்பனைக்கு எல்லாம் எட்டாத காட்சியாக… அவளின் கருவிழியே உலகாகவும்… அதில் திரண்ட கண்ணீர் திவளைகள் ஆழியாகவும் தெரிய… ஒரு நிமிடம் அரண்டு போய் பார்த்தான்..

பின்னே?? இந்த சமயத்தில் இப்படி எல்லாம் கற்பனை தோன்றினால்.. “ச்ச..” என்று மண்டையில் தட்டிக் கொண்டவன்…

“மாத்திரை…” என்று கையை நீட்ட…

நீர் திரண்டு இருந்ததாலோ என்னவோ அவள் கைகள்… மாத்திரை இருந்த இடத்தை விட்டு எங்கோ கையை நீட்டினாள்…

“இந்தா” என்று அவள் கையைப் பிடித்து உள்ளங்கையில் மாத்திரையை தினித்தவன்.. கூடவே தண்ணீர் பாட்டிலையும் வைத்தான்!!!

ரோபோ மாதிரி மாத்திரை போட்டு தண்ணீரை குடித்தவள்… கண்களை மூடிக்கொண்டு அப்படியே சரிய.. அவளை அங்கே தனியாக விட்டு போக மனதில்லாமல்… தன் ரூமில் இருந்து அவசரத்திற்கு என்று வைத்திருந்த அதிப்படியான கம்பளியை எடுத்து வந்து போர்த்தி விட்டவன் அங்கிருந்த ரீக்கிளினரின் கால்களை இழுத்துவிட்டு அப்படியே அவனும் சாய்ந்தான்.

அரை மணி நேரத்திற்குள் வலி படிப்படியாய் குறைய… அப்படியே நித்தரையில் ஆழ்ந்தவளை கண்ணுற்றவன்… அவளை எழுப்பி ரூமிற்கு அனுப்பலாமா? கொஞ்சம் ப்ரியா தூங்குவாளே என்ற எண்ணம் உதித்த போதும்… அவளின் அத்தனை போராட்டத்தை பார்த்தவனுக்கு எழுப்ப மனம் வரவில்லை.

அவளை இவனே தூக்கி சொல்லலாம் தான் ஆனால் ஒரு பெண்ணின் ரூமிற்குள்.. அனுமதி இல்லாமல் நுழைய அவனின் வளர்ப்பு இடம் தராததால்… இங்கேயே தூங்கட்டும்… என்று முடிவு செய்து விட்டு அவனும் அங்கேயே தூங்கிப் போனான்.

மறுநாள் காலை தூங்கி எழுந்தவனுக்கு ஏன் ஹாலில் படுத்து இருக்கிறோம் என்று மெல்ல புரிய… அவசரமாக கண்களை கவுசின் பக்கம் திரும்பினான்.

அப்பொழுதான் சரியாக அவளும் தன் முகத்தை திருப்பி லேசாக சோம்பல் முறித்தபடி கண்களை திறக்க…

எப்பொழுதோ தன் அண்ணனிடம் "ஏன்டா இன்னும் கல்யாணம் பண்ணிக்காமல் என் உயிரை எடுக்கிறாய்? என்று கேட்டதற்கு.. எந்த பெண்ணின் முகத்தை பார்த்தவுடன் இனி இவள் முகத்தில் தான் காலம் முழுவதும் விழிக்கப் போகிறாம் என்ற கேள்வி எழும் போது பின்னங்கால் பிடறியில் அடிக்க ஓடாமல்மல் நிற்க தோன்றுகிறதோ அப்போ அவளை கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்று சொன்ன வார்த்தையின் அர்த்தம் அந்த நொடி அவனுக்கு புரிவது போல் இருந்தது.

இந்தியாவே தூக்கி வைத்துக்கொண்டாடும் ரசனையை இந்நாள் வரை இவன் தான் புரிந்திருக்க வில்லை… !!!

ஏன் என்றால் அந்த கவுச்சில் இன்னும் எவனோ காக்கா வலிப்புகாரன் கத்தரி பிடித்து வெட்டி வைத்த அந்த கார் கூந்தல் மலை பாம்பு சுருண்டு படுத்து இருப்பது போல் சுருண்டு கிடக்க.. தாமதமாக விடியும் அந்த மலையில்… இவளின் முகத்தை நீ மட்டுமா முதல் முறை பார்க்கிறாய்? நானும் இன்று தான் பார்க்கிறேன் என்று பேராசையும், பேராவலும் போட்டி போட… சூரியனின் பொன் நிற கிரணங்கள் பதிக்க…
பனி மறைந்து வெளிச்சம் தவழும் அந்த நேரத்தில்… தெரிந்தும், தெரியாலும் காட்சி கொடுக்கும் மூன்றாம் பிறை போல் அந்த நெற்றியும், இலக்கியத்தில் சொல்லப்பட்டு இருக்கும் காதளவோடி கண்களுக்கு புது அர்த்தம் கற்பிக்கும் கண்களும்… அந்த கண்களை காக்கும் காவல்களாய் கருத்தடர்ந்த நீண்ட நெடிய புருவமும்… சற்றே சிறிய மூக்கும்… நெருக்கமாக தொடுத்தும்.. உதிராத பன்னீர் ரோஜாவாக இதழ்கள்… என்று ஒவ்வொரு

அங்கமாய்.... பிரம்மன் தன் கலா ரசனையை உலகிற்கு நிரூபிக்க இந்த அலக்நந்தாவை சாட்சியாக அனுப்பி வைத்திருக்கான் என்று தோன்றியது!!!

“குட்... மானிங்.. அலக்நந்தா உடம்பு எப்படி இருக்கு?” என்றான் அவள் முகத்தை விட்டு பார்வையை விலக்க பிடிக்காது.. விலக்க முடியாது!!!

அவனைப் போலவே அவசரமாக பார்வையை அவனிடமிருந்து விலக்கியவள் “குட் மானிங்... வலி இல்லை... ரொம்ப நன்றி பத்ரி.. நான்... குளிக்கனும்..” என்றாள் கிசுகிசுப்பாக... தூண்டிலில் மாட்டிக் கொண்ட மீன்கள் போல அலைபாய்ந்த கண்களால்!!!

“ம்ம்..” என்று மெல்ல தலையை ஆட்டினான்... அவனால் அது மட்டும்தான் செய்ய முடிந்தது... ஏனோ இசையே பிடிக்காத அவளின் குரலில் வந்த தன் பெயர் தாள லயத்தோடு இழைத்த தேனமுதாய் காதில் விழுந்தது.

அவன் பதில் சொன்ன அடுத்த வினாடி... போர்த்திருந்த போர்வையை வாரி சுருட்டிக் கொண்டு துள்ளிக் குதித்து எழ..

“அலக்நந்தா..” என்று விளித்து ரூமை நோக்கி ஓட எத்தனித்தவளை தடுத்து நிறுத்தியவன் தன் முன்னால் இருந்த டிடேபிளிலிருந்த மாத்திரை அட்டையை கையைக் காட்டி.. “மறக்காமல் சாப்பிடு”.. என்றான் அமர்த்தலாக.

“ரொம்ப நன்றி...” என்றபடி அதை எடுத்துக் கொண்டு திரும்பி பார்க்காமல் ரூமிற்குள் பறந்தாள்.

பின் மெல்ல தானும் எழுந்து காலை கடனை முடித்துவிட்டு எப்பொழுதும் போல் ஸ்விமிங் செல்ல.. அங்கே இருக்கும் தன் வழக்கமான கேங்குடன் நிறைய ஸ்விமிங்.. ரகளையான அரட்டை.. கலாட்டா டைவிங்... என்று காலை நேரம் முழுவதும் கழிய... மதியத்திற்கு சொன்னது போல் சித்தை சந்திக்க கேன்டீன் சென்றவனை... கடுப்புடன் எதிர்கொண்டான் சித்.

“வாடா... நல்லவனே... உனக்காக தான் காத்துக் கொண்டிருக்கேன்... ஏன்டா ஏன்டா உனக்கு இப்படி எல்லாம் ஒரு ஆசை?”

“ம்ம்… எனக்கு என்னடா ஆசை? நீதானே இங்க வந்து சிக்கன் சாப்பிட ஆசைப் படுவ? இப்ப என்னை ஆசையான்னு கேட்கற?” என்றான் பத்ரி அடக்கமாக தன் நாற்காலியை இழுத்து போட்டு அமர்ந்தப்படி!!.

“நீ ஏன்டா சொல்ல மாட்ட… நைட்டோட நைட்டா எனக்கே தெரியாமல் என்னை சீக்காளி ஆக்கிட்டு நீ பாட்டிற்கு ஜாலியா ஸ்விமீங் போயிட்ட.. நீ போனதிற்கு அப்புறம் நம்ம ப்ளாக் மேம்பர்ஸ் எல்லோரும் நான் என்னமோ இப்பவோ.. அப்பவோ இழுத்துகிட்டு வாய் பேச முடியாத படுத்த படுக்கையா கிடக்கற மாதிரி… ஆள் இல்லாத டீ கடைக்கு எதுக்குடா டீ ஆத்துறிங்கன்னு நான் சொல்ல வருவதை காதிலே வாங்காமல் இல்லாத அல்சருக்கு வீட்டு மருந்து… நாட்டு மருந்து.. போய் சைனா மருந்து வரை என் ரூமில் டண்.. டண்னாக இறங்கி… இருக்கு” என்றான் கடுப்பாக.

“ஒ!!!” கண்கள் ஹாசியத்தில் மின்ன சிரித்தபடி சொல்ல.. “ஏன் டா வயிற்றில் அல்சர் வந்தா வாயில் என்னடா பிரச்சனை? எதுவும் வேண்டாம் என்று சொல்வது தானே?” என்றான் ஒய்யாரமாக பத்ரி

“ஏன்டா சொல்ல மாட்ட?? நீ இதுவும் சொல்லுவ.. இதுக்கும் மேலயும் சொல்லுவ… இவ்வளவு அறிவா படிக்கும் இந்த மூளைக் காரனுகளுக்கு அது புரியலையே.. என்னை வாயை திறக்க விட்டால் தானே?!? சொல்வதற்கு? பேசாமல் படு… பேசாமல் படு.. என்று கம்பளி போர்த்தி வாய் வரைக்கும் மூடி விடுகிறாங்கடா… இதுல என்ன தெரியுமா கொடுமை”

சிக்கன் லெக்கை எடுத்து கடித்தப்படி “என்ன கொடுமை??” என்றான் பத்ரி சுவாரயஸ்யமாக.

“நம்ம லக்னோ லக்கி இல்ல… ஒருபடிக்கு மேல போய்… என் அல்சர் பெயினுக்கு என் தலையில் பச்சை கலர் மருந்தை நான் தூங்கும் போது பத்து போட… ஒரே எலி செத்த நாற்றம்.. என்னடா நாற்றமுன்னு கண்ணை திறந்து பார்த்தா இவன் கையில் அந்த டப்பாவை வைத்துக் கொண்டு நிற்கிறான்… வயிற்றை புரட்டிக் கொண்டு வர.. அவனை தரதரவென்று இழுத்து வெளியே தள்ளிவிட்டு ஒரு மணி நேரம் குளிக்க… டேய் சிரிக்காதடா டேய்….” என்று அதிர… அதற்கு மேல் தாங்கமட்டாமல் சிரிக்கத் தொடங்கினான் பத்ரி.

அதற்குள் அங்கே வந்த இவர்கள் ப்ளாக் நண்பர்கள் இவர்களை சூழ… “இப்படி பிரியாணியா தின்னா ஏன் அல்சர் வராது” என்று டயட் கிளாஸ் எடுக்க கடுப்பாக முறைத்தான் சித்.

ஒருவழியாக அவர்களை சமாளித்து.. சாப்பிட்டு வெளியே வர முன் மாலை பொழுதாகி இருக்க அவர்களுக்கு கிடைத்த முதல் தனிமையில் சித்தின் தோளில் கையை போட்ட பத்ரி.. எதுவும் சொல்லாமல் ஒரு முறை அழுத்தி.. லேசாக முதுகை தட்டினான்.

இது எதற்காக என்று வாய் வார்த்தையால் சொல்லாமலே “அலக்நாந்தாவை பற்றி வாயை திறக்காதது மட்டும் அல்ல விஷயம்… சித்திற்கு பிடிக்காததை பேசினாலே தன் பெயரை சொல்லியே மிரட்டி நான்கு அடி தள்ளி நிறுத்தும் அவன்… இப்படி ப்ளாக் மொத்தமும் அவன் மேல் பாசத்தை பொழிந்து அவனை நாத்த சேற்றில் குளிப்பாட்டிய போதும்.. அதை விளையாட்டாகவே எடுத்துக் கொண்டதை விட… அதிமுக்கியமானது இதுவரை நேற்று இரவு என்ன நடந்தது என்று அவன் வாயை விட்டு ஒரு தரம்… கேட்க வேண்டும் என்பது இல்லை.. பார்வையால் கூட அவனிடம் எதுவும் கேட்காதது தான்!!!” அதற்காக தான் தன் நெழ்ச்சியை அவனுக்கு புரிய வைத்தான்.

இந்த விஷயத்தில் சித்திற்குள் தன் கார்த்திக்கை பார்க்கிறான் என்பது அவன் மட்டுமே அறிந்த உண்மை…

வெளியே நடந்தபடி வந்தவர்களை… மேலும் இரு நண்பர்கள் சூழ… பேசியபடியே தங்கள் ப்ளாக்கிற்கு வர இருட்டவே தொடங்கி இருந்தது. அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் ரூமிற்குள் நுழைய… சரியாக அந்த நொடி தன் ஆஸ்தான ஜீன்ஸ் பேன்ட் டீ சர்ட்டில் தன் மூன்று இன்ச் ஹீல்ஸில் அலக்நந்தா வெளியேற தயாராகி இருக்க…

“ஹாய் ரூமி… எங்க கிளம்பியாச்சு?” என்றான் சித் தன் ஷூவை கழட்டியபடி.

“லைப்ரரி” என்றாள்.. பத்ரியையும், சித்தையும் ஒரு நொடி அவசரமாக பார்த்தபடி.

“சன்டே லைப்ரரி போனா சாமி குத்தம் ஆகிடும்” என்றான் சித் என்னவோ

அவனை துணைக்கு வான்னு கூப்பிட்டது போல!!!

“சரி அப்ப நீ இரு.. நான் லைப்ரரி வரைக்கும் போயிட்டு வரேன்” என்ற பத்ரி... அப்படியே திரும்பி அலக்நந்தவிடம் "வா போகலாம்" என்றான் மிடுக்காக..

“ஒ.கே பை கயிஸ்..” என்றபடி டாடா காட்டி விசில் அடித்தபடி அவர்கள் முகத்திற்கு நேராகவே கததை சாத்தினான் சித்.

அவள் எதுவும் கூறாமல் அவளுடன் கூடவே நடந்தவன் “ஏய்.. எங்க அந்த பக்கம் போற?” என்றான் பத்ரி பார்க்கிங் இடம் வந்தவுடன்.

“என் சைக்கிள்...” என்று தன் கையை காட்டியப்படி ஒரு அடி எடுத்து வைக்க..

அவசரமாக அவள் முன் கையை நிட்டி நடையை தடுத்து நிறுத்தியவன் “ஒ... கம்மான் என் பைக்கிலே போகலாம் அலக்நந்தா. ஒரே இடத்திற்கு போவதற்கு எதுக்கு இரண்டு வண்டி??” தன் பைக் கையை காட்டி.

சரெலேன்று ஒரு அடி தன்னிச்சையாக பின் நகர்ந்தவள்... ஏதோ படம் எடுக்கும் பாம்பு தன் முன்னால் நிற்பது போல் பத்ரியின் நீட்டிய கையை பயம் கலந்த நடுக்கத்தோடு ஒரு நிமிடம் பார்த்தவள்..

“நான் உங்க கூட வரேன்னு எப்பவாவது சொன்னேனா?” என்று அழுத்தம் திருத்தமாக கேட்டவள்... “ஏதோ நேற்று எனக்கு உதவி செய்தீங்க.. அதுக்கு நன்றி சொல்லி விட்டேன்... அத்தோடு அந்த கதைக்கு முற்று புள்ளி வச்சாச்சு.. இப்ப அவசியமே இல்லாமல் பக்கத்தில் புள்ளி வைத்து தொடர் கதையாக்கி... அதை பிடித்துக்கொண்டு என்னிடம் அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டு உங்க இஷ்டம் போல ஆடாலான்னு கனவில் கூட நினைக்காதிங்க பத்ரி...” என்ற போது அலக்நந்தாவின் குரலில் அலட்சியமும்.. வெறுப்பும் கரைபுரண்டு ஓடியது!!!

இன்று...

அவனுடன் ஒட்டிக் கொண்டிருந்தால் இருந்த தெரியாத குளிர் இப்பொது மொத்தமாக அவளை தாக்க.. குளிரில் உடல் நடுங்க... வெடவெடக்க நின்றாள் அலக்நந்தா.

அப்பொழுது தான் பத்ரிக்கு பின்னாடி நின்றிருந்த அலக்நந்தாவை கண்ணுற்ற பாயல்…

“ஹாய்… அலக்நந்தா.. நீயும் வந்திருக்கியா???? ப்பா.. ஊருக்கு போய்ட்டு வந்ததிலிருந்து உன்னைப் பார்க்கவே முடியலை… நானும் விஷயம் கேள்வி பட்டு வாழ்த்து சொல்ல ரூமிற்கு இரண்டு தரம் வந்தேன்… நீ இல்லை. சரி போனிலாவது வாழ்த்து சொல்லலாம் என்று பார்த்தால் சித்தும்.. பத்ரியும் உன் போன் நம்பரை என்னவோ ராணுவ ரகசியம் காப்பது போல் காப்பாற்ற.. சரி போன்னு விட்டு விட்டேன்.” என்று அசையாமல் அனாயாசமாக ஒரு குண்டை தூக்கி போட..

இவள் எதுக்கு வாழ்த்து சொல்கிறாள்?!? சித்திடம் கூட சொல்லாத விஷயத்தை இவன் பாயலிடம் சொல்லி விட்டானோ!!! என்று நினைக்க வயிற்றில் சுனாமி சுரந்தது.

அவள் அறிந்த பத்ரியா இருந்தால் நிச்சயம்.. செய்து இருக்க மாட்டான் என்று நம்பிக்கையுடன் இருந்திருப்பாள். ஆனால் இந்த பத்ரி… அவள் அறியாத புது பத்ரி!!! தன்னை எந்த முறையிலும்… எந்த விதத்திலும் பழிவாங்கவும்.. இம்சிக்கவும் தன் வாழ்க்கையின் குறிக்கோளாக மாற்றிக் கொண்டவனாக திரிய.. எதையும் முழுமையாக நம்ப முடியாது அவனைப் பார்த்தாள்.

“என்ன அலக்நந்தா… இது சந்தோஷமான விஷயம் தானே.. அதுக்கு எதுக்கு இப்படி முகத்தை வைத்துக் கொள்கிறாய்?? கொஞ்சம் கூட சிரிக்கலாமே!!!” என்று அலக்நந்தாவிற்காக சிரித்தவள்.. அவளே தொடர்ந்து..
“தொல்பொருள் துறைக்கு ஆய்வு கட்டுரை அனுப்ப மொத்தம் இந்தியாவிலேயே தேர்வு செய்யப்பட்ட பத்து பேரில் நீயும் உன் கிளாஸ் மேட் ரோகனும் தேர்வாகி இருப்பது எவ்வளவு பெரிய விஷயம்!!! அதைவிட அந்த துறையால் தேர்வு செய்யப்படும் கட்டுரை ஆய்வு எழுதியவங்களை… கேரளா பத்மநாபசாமி கோயிலில் இருக்கும் தங்ககாசை பார்க்க அனுமதியாமே!!! சும்மா எங்களைப் போல காசை பற்றி தெரியாத ஆளுங்களுக்கே காசு குவியலை பார்க்கனும் ஆசை… ஆனா நீ.. அதையே எடுத்து படித்திருக்க.. உனக்கு அது தான் அலிபாபா குகை இல்லை…?? ஐ மீன் மானிட்டரி டர்ம்ஸ்ல சொல்லலை… அந்த தங்ககாசு கொடுக்கும்…

அளவிட முடியாத தகவல்…. நம்முடைய சரித்திரத்தையே புரட்டி போடும் தன்மையுடையது இல்ல?!?" என்று பரபரப்பாக பேசினாள் பாயல்.

அப்பாடா இதுதான் விஷயமா…. இரண்டு நிமிடம் நின்று போயிருந்த இதயம் நிறுத்தியதற்குமாக சேர்த்து துடித்தது!!!

மெல்ல புன்னகைத்த அலக்நந்தா "ரொம்ப நன்றி பாயல்".

தனக்காக சந்தோஷப்படும் ஒருத்தியை எப்படி வெறுக்க முடியும்?? பல்ட் குரூப்பில் ஓ பாசிட்டிவை வகை ரத்தத்தை யூனிவர்சல் டோனர் என்பது போல் இந்த "பாயல்" யூனிவர்சல் ப்ரண்ட்… அதுதான் நிலையை இன்னும் சிக்கலாகியது. உண்மையை இவளாக வாய் விட்டு சொல்ல முடியாது. நினைத்தை எல்லாம் இந்த பாயல் போல் படபடவென்று மனதை திறந்து சொல்லும் வரம் அவளுக்கு ஏது?? பாயலை பார்க்கும் போது எல்லாம் குற்றவுணர்வு மனதில் ஏறி உட்காருவதை தவிர்க்க வழி தெரியவில்லை!!!

"நீங்க இரண்டு பேரும் உங்க அரட்டை கச்சேரியை முடித்து விட்டு வாங்க… நான் உள்ளே போய் என் வேலையை பார்க்கிறேன்" என்று பாயலை மட்டும் பார்த்து மொழிந்தவன் வேகமாக படியேறி உள்ளே சென்றான் பத்ரி.

அவன் போகும் திசையை பார்த்த பாயல் "நானும் பார்க்கிறேன்.. இந்த பத்ரி இப்ப எல்லாம் நிரந்தர ஷார்ட் டெம்பராவே இருக்கார்… வீட்டில் ஏதாவது பிரச்சனையாக இருக்குமோ?!?" என்று சந்தேகமாக இவளை பார்த்து கேட்டாள்…

அவனுடைய நிரந்திர பிரச்சனையே அவள் தான் என்று எப்படி பாயலிடம் சொல்லுவாள்?

எப்பவும் போல் "ம்கூம்.." என்று தலையை மட்டும் பதிலாக ஆட்டினாள் அலக்நந்தா.

"எப்படி அலக்நந்தா இப்படி எல்லாத்தையும் ஒரு அடக்கத்தோடு எடுத்துக்கற..? இந்த ரோகனை பார்…. அவன் தான் இந்த போட்டியில் ஜெயிக்கப் போகிறேன்னு பீத்தல் பீதாம்பரமாக சொல்லிட்டு என்ன அலப்பறை பண்ணிட்டு திரிகிறான்.. நீ என்னடான்னு இப்படி ஒரு தேர்வு

ஆகி இருக்கறேன்னு கூட யாரிடமும் சொல்லாமல் அமைதியா வந்து நிக்கற" என்று ஆச்சரியபட்டாள்... இவள் பதில் சொல்ல இடமே தராமல் "சரி.. வா... உள்ளே போகலாம்... உன்னுடைய வேலை நான் கெடுத்துக் கொண்டு இங்கே நிற்கிறேன் பார்.." என்று சொல்லிவிட்டு முன்னேற.. அவளை பெருமூச்சுடன் பின் தொடர்ந்தவள் இவள் இடம் வந்ததும் பிரிய..

அன்றைய பிரச்சனை எல்லாம் போதாது என்பது போல் அவளை கண்டால் என்ன... அவள் பெயரை கேட்டாளே டிராகன் போல் நெருப்பு புகையை கக்கும் ரோகன் கண்களில் துவேஷம் மின்ன "எனக்கு போட்டியா இங்கேயும் வந்திட்டயா?" என்றபடி இவளை வெறித்து பார்த்தான்!!!

அத்தியாயம் - 7

மூன்று மாதம் இரண்டு வாரங்களுக்கு முன்பு....

"ஏதோ நேற்று எனக்கு உதவி செய்தீங்க.. அதுக்கு நன்றி சொல்லி விட்டேன்... அத்தோடு அந்த கதைக்கு முற்றுப்புள்ளி வச்சாச்சு.. இப்ப அவசியமே இல்லாமல் பக்கத்தில் புள்ளி வைத்து தொடர் கதையாக்கி... அதை பிடித்துக் கொண்டு என்னிடம் அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டு உங்க இஷ்டம் போல ஆடலான்னு கனவில் கூட நினைக்காதீங்க பத்ரி..." என்ற போது அலக்நந்தாவின் குரலில் அலட்சியமும்.. வெறுப்பும் கரைபுரண்டு ஓடியது!!!

"வெல்.. வெல்... வெல்.." என்று அலட்டலே இல்லாமல் கூறியவன்... "உன்னை தொடர்ச்சியாக நாலு லைன் பேச வைக்கறத்துகாகவே நிறைய அட்வான்டேஜ் எடுத்துக்கலாம் போலயே!!!" என்று தலையை சரித்து தெனாவட்டாக அவளுக்கு மறுமொழிந்தான் பத்ரி.

இந்த பதிலை சற்றும் எதிர்பார்க்காத அலக்நந்தாவின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சி... உதட்டை அவள் கடித்து தன் பதட்டத்தை காட்டிய விதம்.. இது எல்லாத்தையும் விட கண்ணாடிக்கு பின் இருந்த அகண்ட விழிகளில் வந்து போன பாவத்தை முன்பு பல முறை பார்த்திருக்கிறான்... அது அவளிடத்தில் இல்ல... மங்கி வளர்க்கும் முயலை பிடித்து தூக்கும் போதும் இப்படிதான் "மாட்டிக் கொண்டு விட்டோமே" என்று தன் பிங்க் நிற விழிகளை உருட்டி எல்லாம் பக்கமும் மருட்சியுடன் தப்பிச் செல்ல வழி பார்க்கும்... அதே பாவம்

கொஞ்சம் கூட குறையாமல் அவளிடமும் பிரதிபலிக்க… அவன் யூகித்தது சரி என்று அந்த மருண்ட விழிகள் கட்டியம் கூறியது.

“என்ன பார்க்கற அலக்நந்தா? என்னிடம் இருந்து எப்படி தப்பி ஓடறதுன்னு பார்க்கிறாயா? சாரி.. நானே தப்பி ஓடறதுக்கு உனக்கு வழிவிட்டாலே தவிர வேறு எப்படியும் போக வழியில்லை..” என்று கூறியபடியே ஒரு அடி முன் வைக்க…

அவசரமாக இரண்டு அடி பின் நகர்ந்தவள் பின்னாடி இருக்கும் ஏதோ ஒரு வாகனத்தில் முட்டிக் கொண்டு மேலும் நகர முடியாத பதட்டத்தில் அவனை பரிதவிப்புடன் நோக்கினாள்!!!

அவளின் தேவையற்ற பதட்டத்தையோ… பரிதவிப்பையோ கண்டு கொஞ்சும் கூட மனம் இறங்காதவன் மேலும் ஒரு.. அடி நெருங்கி.. அவனின் மூச்சு காற்று அவள் மேல் படும் தூரத்தில் நின்றான். அவளை நேருக்கி நிற்கும் ஒவ்வொரு நொடியும் அவனின் டூகாட்டி பைக்கில் நூற்றி இருபதில் போவது போல் ஒரு த்ரில் அலையலையாய் அவனுள் எழுந்து பரவ… நின்றவன்..

மேலும் ஒரு அடி எடுத்து வைத்து… நூற்றி ஐம்பதில் போக சொல்லி இதயம் சண்டிதனம் செய்ய… விசித்திரமான வகையில் எப்பையும் ஸ்பீடாக போக ஊக்கும் மூளையோ இன்று காரணமின்றி அபாய சங்கு ஊதியது… அது பயத்தினால் அல்ல.. ஒரு முறை அந்த வேகத்தின் ஏகாந்தத்தை அனுபவித்து விட்டால் மீண்டும்… மீண்டும்… அதே தான் நாடும்.. வேற எதிலும் நிம்மதி பெற தோன்றாது என்ற முன்னேச்சரிக்கை உணர்வு அவனை அங்கேயே தடுத்து நிறுத்த செய்தது.

அவளை வைத்த கண் வாங்காமல் ஒரு நிமிடம் நேருக்கு நேர் கண்ணுற்றவனுக்கு ஏதோ தோன்ற… பின் பாக்கெட்டில் இருந்த தன் ஐ போனை எடுத்து அவசர கதியில் எதையோ டைப் பண்ண.. அடுத்த நொடி “பிங்” என்ற சப்தத்துடன் பதில் வர… அந்த பதிலை படித்தவனின் முகத்தில் சிரிப்பு மலர.. அந்த முகவாய் குழி இரு மடங்கு பரந்து விரிந்தது.

முதல் முறையாக அந்த குழியை அத்தனை நெருக்கத்தில் பார்த்தவளுக்கு… கையில் இருந்த தன் பர்ஸ் கீழே நழுவி மெத்தென்று புல் தரையில்

சத்தமில்லாது விழுந்ததையோ… அதை தொடர்ந்து கையில் இருந்த சின்ன நோட் பேடும் விழ… எதையும் அறியாது தன்னை மறந்த நிலையில் அந்த முகத்தில் வந்த சிரிப்பையும்.. அந்த சிரிப்பால் விரிந்த குழியையும்… அந்த குழியால் எகிறிய அவளின் இதய துடிப்பும் என்று ஒரு செயின் ரிக்யாக்ஷன் அவளிடம் அரங்கேற…

அமைதியாக எல்லாவற்றையும் கண்ணுற்றவனுக்கு முகத்தில் ஒரு மந்தகாசமான புன்னகை விரிய.. பிரிக்க முடியாமல் பார்வையை அவளிடமிருந்து பிரித்தவன் மெல்ல குனிந்து கீழே கிடந்த அவளுடைய பொருட்களை எடுத்தவன் எதுவும் பேசாது அவளிடம் நீட்டினான்.

அப்பொழுது தான் தன் கையில் இருந்து கீழே விழுந்ததையே உணர்ந்தவளின் முகத்தில் நிராசை பரவ… பின் அதை மறக்கும் விதமாக வேகமாக ஒரு திரை விழுந்தது!!!

“வா.. போகலாம்” என்று பின்னால் நகர்ந்தான்.

இவள் எதுவும் பேசாமல் தன் பையர் பாஸ்(firefox) கியர் சைக்கிள் இருக்கும் இடம் நோக்கி நடுங்கிய கால்களுடன் நடந்து சென்று பின்னால் இருந்த சின்ன ஸ்டான்டில் பொருட்களை வைத்து விட்டு மெல்ல சைக்களில் உட்கார… அவளுக்கு பக்கத்தில் நிறுத்தி வைக்கப்படிருந்த மற்றொரு கியர் சைக்கிளை இவன் சாவதானமாக எடுத்து ஏறினான்.

வாயே திறக்காமல் தன் கண்ணாடி அணிந்த முட்டை கண்ணால் அவனை ஒரு பார்வை பார்த்தாள் அலக்நந்தா.

“நான் ஏதோ திருடிட்டு வர மாதிரி என்னைப் பார்க்காதே அலக்நந்தா. அவனிடம் சொல்லி விட்டு தான் எடுத்திருக்கிறேன்… பின்ன என்ன பண்ண சொல்ற? உன் சைக்கிளிலேயே டபுள்ஸ் வரலாம் தான்… போறது நாலு கிலோமீட்டர்… ஸ்டான்ட் ரொம்ப சின்னது.. அதில் நான் உட்கார சான்சே இல்ல… உன்னை வைத்து இறக்கை கட்டி பறக்குதய்யா அண்ணாமலை சைக்கிள்ன்னு… பாடிகிட்டு டபுள்ஸ் அடிக்கலாம் என்றால் எப்படியும் நீ ஒரு ஐம்பத்தைந்திலிருந்து அறுபது கிலோ இருப்ப… மலைபாதை வேற… சைக்கிளை மிதிக்கறத்துக்குள்ள மூச்சு முட்டி நான் செத்திடுவேன்… அதைவிட நான் தனியா வந்தா “வா.. வா… செல்வந்தனே…” பாடிக்கிட்டு

போறது கொஞ்சம் பெட்டரா இருக்கும்!!! இது இல்லாமல் உனக்கு தான் பாட்டுன்னா பிடிக்காது வேற!!!" என்று அவள் வாய் விட்டு கேட்காமலே பதில் கூறினான்.

அதற்கும் எதுவும் பேசாமல் அவள் சைக்கிளை எடுக்க... ஐந்து நிமிஷம் ஒரே சீராக அமைதியான மலைபாதையில் சைக்கிள் ஓடியது..

"ஆமாம்.... அலக்நந்தா.. இங்க மிக பிரபலமான கோர்ஸ் ஆயிரம் இருக்க.. எதுக்கு ஊர் உலகத்தில் யாருக்கும் தெரியாத, இப்படி ஒரு கோர்ஸ் எடுத்து படிக்கிற?" என்றான் ஆர்வமாக அவளை லேசாக திரும்பி பார்த்தபடியே.

எதுவும் பேசாமல் அவள் பாட்டிற்கு தன் வண்டியை முன்னிலும் வேகமாக மிதித்தபடி முன்னே போக.. எரிச்சலுற்ற பத்ரி.. அதே வேகத்திற்கு அவளுடன் சரியாக சென்றவன்...

"ஒரு சின்ன அட்வைஸ் நான் உன்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் போது... நீ இரண்டு அடி பின்னே நகர்ந்தால் கண் இமைக்கும் நேரத்தில் நான் மூன்று அடி உன்னை நோக்கி எடுத்து வைப்பேன் அலக்நந்தா.. உனக்கு யாருடனும் நெருக்கம் பிடிக்காது என்று தெரியும்... உனக்கான ஸ்பேஸை நான் தரவேண்டும் என்றால்.. இப்படி பயந்து ஓடாதே... நான் எதை சொல்கிறேன் என்று புரியும்ன்னு நினைக்கிறேன்..." என்றான் அழுத்தமாக சொன்னான் பத்ரி.

"என்னை நோக்கி நீங்க ஏன் வர வேண்டும்?" என்றாள் அலக்நத்தா வன்மமாக.. தலையை சிலுப்பி.

தனக்கே புரியாத விஷயத்தை எப்படி இவளிடம் சொல்வது என்று ஒரு நிமிஷம் தன் முன்னால் விரிந்த ரோட்டை வெறித்தவன்... "டூ பி ப்ராங்க்.. ஐ டோன்ட் நோ..." என்று விட்டேற்றியாக தோளை குலுக்கியவன்.. "இருந்தாலும் ஏனோ.. இங்க" என்றபடி தன் மூளையை தொட்டுக் காட்டியவன் "இங்க.. உன்னை நோக்கி போ.. போன்னு சொல்லிட்டே இருக்கு.... எதுக்கு சொல்லுதுன்னு தெரியலை... அதை தெரிஞ்சுக்க தான்" என்றான் தன்னால் முடிந்தளவு விளக்கியபடி.

கீரிச்சென்று வண்டியை பிரேக் போட்டு தன் சைக்கிளை நிறுத்த... அவனும்

அவசரமாக சற்று முன் சென்று நிறுத்தியவன்.. திரும்பி அவளைப் பார்க்க.. அவனையே வெறித்து பார்ப்பது புரிந்தது!!!

பத்ரி சொன்ன பதில் அவள் எதிர்பார்த்ததற்கு சற்றும் நேர்மாதிரியான பதில் என்பது அவள் வண்டியை நிறுத்திய விதமும்... கண்களில் தெரிந்த பயம் கலந்த ஆச்சரியமும் தெளிவுபடுத்த.. லேசாக சிரித்தவன்..

“பயப்படாதே அலக்நந்தா... அனாவசியாக நான் பொய் சொல்வது இல்லை.. அதுவும் இந்த மாதிரி விஷயத்தில் நான் நிச்சயம் சொல்வது இல்லை... என்னைப் பற்றி உனக்கு தெரிய வாய்ப்பில்லை என்பதால் நானே சொல்லி விடுகிறேன்... தேவை இல்லாம் இந்த அட்வான்டேஜ் நாடகம் எல்லாம் வீணா உன் மூளையைப் போட்டு கசக்கி பிழிந்து யோசிக்க வேண்டாம்...” என்று சிரித்தபடி சொல்ல.. மீண்டும் அவர்கள் சைக்கிளை மிதிக்க தொடங்கி இருந்தார்கள்.

“ஒரு பெண்னை சைட் அடிக்க வேண்டும் என்று நினைத்தால் அதை அவளுக்கு முன்னாடியே.. நேருக்கு நேராக செய்யும் தைரியம் எனக்கு இருக்கு... அதை விட்டு அவர்கள் குனியும் போதோ.. இல்லை அவர்கள் பார்க்காத சமயத்திலோ அவர்களை போட்டோ எடுத்து பார்க்கும் அல்ப புத்தி எனக்கு இல்ல... இட்ஸ் நாட் மை கப் ஆட் டீ.. நேற்று உன்னை முதல் முதலா பார்த்த போதே புரிந்திருக்கும்... எனக்கு இரண்டு சிஸ்டர்... இரண்டு சிஸ்டர் இன் லா இருக்காங்க.. அலக்நந்தா.. ஒரு பெண்ணிடம் கன்னியம் குறையாமல் என்ன பேசலாம்... என்பதிலிருந்து எங்க தொடலாம் என்பது வரை எனக்கு தெரியும்.. சொ.. எந்த காரணத்திற்காவும் என் லிமிட்டை நான் தாண்ட மாட்டேன்... அதனால் நான் கையை தொட்டாலோ இல்லை உன் பக்கத்தில் உட்கார்ந்தாலோ... அதை நான் அட்வான்டேஜா எடுத்துக் கொள்வதாக தேவை இல்லாமல் கற்பனை பண்ணிக்காதே... என்னை மாதிரி தான் சித்துவும்.. அவனுக்கு தங்கை இல்லாத போதும் கூட ஒரு பெண்ணிடம் கன்னியத்துடன் பழக தெரிந்தவன்” என்று அமைதியாக தெள்ள தெளிவாக மொழிந்தான் பத்ரி.

“எனக்கு.. எனக்கு யாரையும் பிடிக்க வேண்டாம்..” என்றாள் பிடிவாதமாக அலக்நந்தா

“இட்ஸ்.. ஓ.கே பிடிக்க வேண்டாம்.. உனக்கு யாரையும் பிடிக்க வேண்டிய

கட்டாயம் இல்லை… அதுக்காக கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் போக வேண்டிய அவசியம் இல்லை அலக்நந்தா.. நான் உன்னுடைய ரூம் மேட்.. பிடிக்கிதோ இல்லையோ இன்னும் ஆறு மாதம் என்னுடன் தான் இருந்தாகனும்… உன் கையால் இன்னும் ஆறு மாசம் சாப்பிட வேற போகிறேனே… குறைந்த பட்சம் உன் பெயரை தவிர வேற எதுவும் தெரியலைன்னா எப்படி??" என்று விடாமல் அடிக்கிக்கொண்டே போக…

"எனக்கு சொல்ல பிடிக்க பிடிக்கவில்லை.."

"பட் எனக்கு கேட்க பிடிக்குதே.." என்றான் விடாப் பிடியாக பத்ரி.

"ம்ம்" என்று எரிச்சலுடன் பெரு மூச்சு விட்டவள்.. "இப்ப நீங்க கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டால் போதுமில்லை?" என்று காழ்புணர்ச்சியுடன் கேட்டவள்…

அவளை போலவே தலை ஆட்டவும்…

அமைதியான தூரத்தில் தெரியும் பனி சிகரத்தை பார்த்தவள்.. "எனக்கு நாணயங்களின் பின்னால் இருக்கும் வரலாறை படிக்கப் பிடிக்கும் படிக்கிறேன்" என்றாள் என்னவோ உலக மாக ரகசியத்தை தன்னிடம் மட்டும் சொல்லி விட்டது போல்.

"இது ஒரு பதிலா.. அலக்நந்தா.. பிடிக்காமல் படிப்பாங்களா? அதுவும் இது மாதிரி விசித்திரமான ஒரு கோர்சை?" என்றான் பத்ரி விடாபிடியாக.

"எல்லோரும் தனக்கு பிடித்ததை மட்டும் தான் படிக்கிறாங்க என்று சொல்லிவிட முடியாது பத்ரி… எத்தனை பேர் தன் அம்மா டாக்டர் கனவு கண்டார்கள் என்று தனக்கு பிடிக்காத போதும் கத்தியை பிடிக்கறாங்கன்னு தெரியுமா? இன்ஜினியரிங்.. பத்தி கேட்கவே வேண்டாம்… லாயர்… ஆடிட்டர்.. தன் அப்பாக்கள் தொடங்கிய தொழிலை தொடர்ந்து செய்ய எத்தனை பேர் படிக்கிறாங்க தெரியுமா??" என்றாள் முதல் முறையாக வாய் விட்டு.

"நீ சொன்னது ரொம்ப சரி… நானே கூட எம்.பி.ஏ. படிக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்க.. என் வீட்டில்… என் அண்ணும்… என் பாட்டியும் சதி

செய்து... என் கையெழுத்தை பாட்டியே போட்டு கம்பெனி சார்பாக அனுப்பி வைத்தார்கள்" என்று சிரித்தபடியே சொல்ல..

"நான் சொல்லலை?!?" என்பது போல் அவனை ஒரு பார்வை பார்த்தால் அலக்நந்தா.

"நீ நினைப்பது போல் என்னைப் படிப்பதற்காக இங்கே அனுப்ப வில்லை அலக்நந்தா.. யூ.ஜி. முடித்திலிருந்து பிசினஸ... பிசினஸ்ன்னு நாயா அலையறேனா.. லைப் என்ஜாய் பண்ண தெரியலையாம்... அதனால் ஒரு இரண்டு வருஷம் கண்ணுக்கு மறைவா நல்லா என்ஜாய் பண்ணுன்னு எனக்கே தெரியாமல் என்னை இங்கே பார்சல் பண்ணி அனுப்பிட்டாங்க" என்று பெருமையுடன் சொல்ல ஒரு மார்க்கமாய் பார்த்தாள் அலக்நந்தா..

பின்னே.. இவ்வளவு செலவு செய்து போய் என்ஜாய் செய் என்று சொல்லி அனுப்பும் குடும்பத்தை எப்படி பார்ப்பாள்?!?

"நீ மிரண்டு போய் பார்க்கும் அளவிற்கு என்னுடையது ஒன்றும் அப்நார்மல் குடும்பம் இல்லை.." என்றான் அவசரமாக பத்ரி.

"ம்ம்.. அப்படியா? அறுபதுகளில் இருக்கும் உங்க பாட்டி உங்க கையெழுத்தை போடறாங்கன்னா அது கொஞ்சமே கொஞ்சம் அப்நார்மலா?" குரலில் ஹாசியம் மின்ன.

நல்லவேளை பாட்டியின் பெயரை சொல்லவில்லை என்று நினைத்துக் கொண்டு லேசாக புன்னகை புரிந்தவன்.. "ம்ம்.. இப்ப இந்த ப்ளட் சுகர் லேவல் ரேன்ஜ் பார்க்கும் போதும்.. அதிக பட்சம் நூற்றி நாப்பதுன்னு இருக்குமே.. அது மாதிரி... பார்டர் தாண்டினா சுகர் வந்திடும் பட் சுகர் இல்லன்னு ஒரு ரேன்ஜ் இருக்குமே" என்று கூறிக்கொண்டு இருக்கும் போதே.. "ஹய்.. அலக்நந்தா.. நிறுத்து.. நிறுத்து" என்று அவசரமாக அவளுடைய ஹேன்டில் பாரை பிடித்து நிறுத்தினான்.

"என்ன?" என்று கடுப்பாக அவனைப் பார்க்க

"என்னை பார்க்காதே... அங்க பார்" என்று அவர்களை சுற்றி இருந்த மலையில் சுமார் ஒரு பத்தடி தூரத்தில் உடம்பெல்லாம் நீலமும் பச்சையும்

கலந்து முதல் பார்வையிலேயே அதன் நிறம் கண்ணையும்... கருத்தையும் பறிக்க.. அழகான சற்றே நீண்ட கழுத்தில் மினுமினுக்கும் ஆரன்ஜ் வண்ணம் வாரி இறைக்க பட்டிருக்க... அதனுடைய வால் சற்றே வெளிர் ஆரன்ஜில் இருக்க.. தன் குட்டி கால்களுடன் ஒரு சின்ன பறவை தலையை திருப்பி.. திருப்பி பார்த்தபடி நடந்து சென்றது.

பார்வை அகல விரிய அதனை பார்த்தவள் "என்ன அது.. பார்க்க மயில் மாதிரி இருக்கு ஆனா மயில் இல்லன்னு அதன் கழுத்தை பார்த்தா தெரியுது?" என்றாள் கிசுகிசுப்பாக அலக்நந்தா.

"அதற்கு பெயர் ஹிமாலயன் மோனல் இங்கே மட்டுமே பார்க்க கூடிய மலை வாழ் பறவை" என்றான் பத்ரி விளக்கியப்படி.

"ஓ!!!" என்று கூறியவள்... தன்னை மறந்து அந்த பறவையை இரண்டொரு நிமிடம் நின்று பார்க்க..

"பிடிக்க வா?" என்றான் அவள் அவ்வளவு ஆசையாக பார்ப்பதைப் பார்த்த பத்ரி.

படாரென்று தன் பார்வையை அவனிடம் திருப்பியவள் கண்ணில் குரோதம் மின்ன..

"என்ன.... பிடிக்கறிங்களா? ஒரு குட்டி பறவையை பிடித்து உங்கள் வீரத்தை காட்டறிங்களாக்கும்? ஏன் இப்ப அங்க ஒரு புலி நின்னா இதை சொல்வீங்களா?" என்று படபடவென்று பொறிந்து தள்ளினாள் அலக்நந்தா முதல் முறையாக உண்மையான கோபத்துடன்.

"கூல் டவுன் அலக்நந்தா.. கூல் டவுன்.. அதைப் பிடித்து உன்னிடம் காட்டத்தான் கேட்டேன்.. அதை கொன்னு சாப்பிட இல்லை..." என்று அவன் வெள்ளைக் கொடியை காட்ட..

அந்த வெள்ளைக் கொடியை மதிக்கும் நிலையில் அலக்நந்தா இல்லை.. "இப்ப உங்களை பிடித்து கால் கை கட்டி போட்டு ஒரு இடத்தில் உட்கார சொன்னா சந்தோஷமா இருக்குமா?... அது மாதிரி தான் அதுங்களுக்கு.. அழகா இருக்கா... அதற்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் பார்த்து,

ரசித்துவிட்டு போகனும்… உங்களுக்கு எந்தளவு பூமியில் வாழ உரிமை இருக்கோ அதே உரிமை அவைகளுக்கு இருக்கு….” என்று அவள் பொரிய…

“போச்சுடா… அடுத்த மங்கியிடம் மாட்டிக் கொண்டேன் போலயே” என்று மனதிற்குள் நினைத்த போதும்.. வாயை திறக்காமல் உண்மையான அலக்நந்தாவின் அவளே அறியாமல் குணம் வெளிப்பட… அவளை ரசித்து பார்த்தான்.

அந்தி மயங்கிய மாலை வேளையில் சுற்றியிலும் இருந்த உயர்ந்த மரத்தின் இடையே.. வந்த அந்த வெய்யோனின் வெங்கதிர் இதமாய் அவளின் முகத்தில் பதிய..

முகத்திரையாய் இருந்த கார்குழல் மறைக்காமல் விட்ட கடைந்தெடுத்த சந்தன பேழை போலிருந்த கழுத்தில்.. பாய்ந்து வந்த சூரிய ஒளி கூட அங்கே நிற்க முடியாமல் சிதறிக் கொண்டு ஓட… அங்கே சிறிய கடுகளவு இருந்த மச்சம் அவன் கண்ணிற்கு அப்பொழுது தான் தெரிய… ஏனோ அதைத் தொட வேண்டும் என்று கைகள் பரபரத்தன.

முதல் முறையாக ஒரு பெண்ணை அதுவும் அவளுடைய கழுத்தின் இருக்கும் கண்ணிற்கு தெரியாத மச்சத்தை தொட்டுப் பார்க்க வேண்டும் என்று ஏன் இப்படி மூளை சண்டித்தனம் செய்கிறது என்று புரியவில்லை.. அதை விட… அந்த மச்சத்தை பார்க்க.. பார்க்க ஏன் இப்படி சம்பந்தமே இல்லாமல் இதயம் ஏன் தலைதெரிக்க ஓட வேண்டும் என்று சத்தியமாக புரியவில்லை..

இன்று

அவள் பெயரைக் கேட்டாளே டிராகன் போல் நெருப்பு புகையை கக்கும் ரோகன்.. கண்களில் துவேஷம் மின்ன “எனக்கு போட்டியா இங்கேயும் வந்திட்டயா?” என்றபடி இவளை வெறித்துப் பார்த்தான்!!!

“இறைவா” இன்று யார் முகத்தில் விழித்தாளோ தெரியவில்லை இப்படி சோதனை மேல் சோதனையாக வந்து தொலைக்கிறதே என்று ஆழ்ந்த பெருமூச்சு விட்டு அவனைக் கடந்து செல்ல முயற்சிக்க…

இப்படி கண்டம் விட்டு கண்டம் மாறி மாட்டிக் கொள்கிறாளே!!! சர்க்கஸில் தீ வளையத்தில் தாவி குதிக்கும் சாகச வீரன் மாதிரி.. ஒரு கண்டம் விட்டால் மறுகண்டம்.. ஒரு கண்டம் விட்டால் மற்றொன்று அவள் முன்னால் அணிவகுக்க... எத்தனை கண்டம் தாவி குதிப்பது என்று ஆயாசமாக இருந்தது அவளுக்கு. இதில் ஒவ்வொன்றையும் தாண்டுவதிலேயே தான் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தால் என்று தன் வாழ்க்கையை சரி செய்வது!!! எப்போ அவள் அனுப்ப வேண்டிய கட்டுரையை அனுப்புவது?!?

"நீ எவ்வளவு கஷ்டப்பட்டு எழுதினாலும் கடைசியில் நான் தான் ஜெயிக்க போகிறேன் அலக்நந்தா" என்றான் தீர்மானமாக அந்த ரோகன்.

இவள் இங்கே வந்து சேரும் முன்பு வரை தனி காட்டு ராஜாவாக தன் டிபார்ட்மென்டில் திரிந்தவனுக்கு இவள் வந்த பின்தான் தலைவலி தொடங்கியது.

தன் துறையில் மிகுந்த ஈடுபாடும், ஆழ்ந்த அறிவும் கொண்டவன் என்பதினால் சமயம் கிடைக்கும் போதில் தன்னை அறிவுள்ளவன் என்பதை காட்டிக் கொள்வதை தவறவே மாட்டான்.. அது மற்றவர்களை மட்டப்படுத்திய போதும்!!!

அதற்கு நேரேதிர் அலக்நந்தா. அவனைப் போலவே அறிவும் திறமையும் இருந்த போதிலும் எதையும் யாரிடமும் காட்டிக் கொள்ளும் ரகம் இல்லை என்பதினால் அவள் யாரிடமும் பேசாத போதிலும் ஏனோ அந்த அடக்கம் கலந்த அமைதி அவளை எல்லோருக்கும் பிடிக்கவும் செய்திருந்தது.

எந்த சலனமும் இல்லாமல் அமைதியான நிர்மலமான முகத்துடன் அவனை எதிர்க்கொண்டு "ஆல் தி பெஸ்ட்" என்றாள்..

"திமிர் அவ்வளவு திமிர்.. ஏற்கனவே உன் கட்டுரை அந்த பத்திக்கையில் வந்திருக்குன்னு பகல் கனவு காணாதே அலக்நந்தா... நீ முன்னாடி அனுப்பிய கட்டுரை எல்லாமே அரைத்த மாவு தான்... வெவ்வேறு வார்த்தைகளை போட்டு அனுப்பலாம். ஆனா இப்ப நீ அனுப்ப போவது ஆராய்ச்சி கட்டுரை அதுக்கு புத்தக அறிவு மட்டும் போதாது சொந்தமாக யோசித்து எழுதும் திறமை வேண்டும்!!! உன்னை அடக்கவே நான் இந்த

போட்டியில் உன்னை ஜெயிக்கிறேனா இல்லையான்னு பார்!!!" என்று பகட்டு இருமாப்புடன் சவால் விட்டான் ரோகன்.

"என்ன சொன்ன.. அடக்க போறியா? நான் ஒன்னும் ஜல்லிகட்டு மாடு இல்லை என்னை அடக்க? எதுவும் பேசாமல் ஒதுங்கி போவதால் நான் பயந்து போவதா அர்த்தம் இல்லை ரோகன்.. உன்னை விட எனக்கு நூறு மடங்கு இந்த போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்று வெறி இருக்கு… இப்படி சவால் விடுவதால் நீ ஜெயித்து விட்டதாக அர்த்தம் இல்லை" என்று பதில் கூறிவிட்டு அவன் பதில் பேசும் முன் அங்கிருந்து நகர…

அதிர்ச்சியில் வாயை அடைத்து நின்றான் ரோகன்… காரணம் இதுவரை அவளிடம் நிறைய முறை இப்படி பேசி இருக்கிறான். ஆனால் ஒருமுறை கூட அவள் திரும்பி ஒரு வார்த்தை கூட பேசியதே இல்லை… பதிலுக்குப் பேச வாயை திறந்தவனின் கைகளை யாரோ பற்ற… அவசரமாக தன் பார்வையை திருப்பியவனுக்கு தன் முன்னால் நின்றிருந்த பத்ரி தெரிந்தான்.

"நீ எப்படா வந்த?" என்று ரோகனின் கண்கள் தானாக கேட்டது.

அதைப் பற்றி சிறிதும் அக்கறை இல்லாமல் அப்படியே அவனை லைப்ரரியின் சற்றே இருட்டான பின் பக்கம் இழுத்துக் கொண்டு போனவன் பட்டென்று அவனை அந்த சுவற்றில் நெட்டியவன்.. தன் பலத்தை எல்லாம் அவன் மேல் சரித்து சட்டையை கொத்தாக பிடிக்க.. …

"நான் ஒன்றும் பேச வில்லை.. நிஜமாக நான் ஒன்னும் அவளை திட்டவில்லை பத்ரி.." என்று ரோகன் அவசரமாக பதட்டம் கலந்த பீதியில் பேச..

எச்சரிக்கை செய்ய இழுத்து வந்தவனின் நூல் இழையில் ஒட்டிக்கொண்டிருந்த பொருமை அதை கேட்டதும் காற்றோடு பறக்க.. எதிர்பார்க்காத நேரத்தில் சரியாக அவன் மூக்கில் ஒரு குத்து விட… அவன் "அம்மா" என்று அலறிய அவனின் சின்ன முனங்கல் கூட வெளியே வராது அவனின் வாயை பொத்தியவன்….

"ப்ரோ… உன் நல்ல நேரம் நீ பேசியது காதில் விழ வில்லை.. அப்ப எதுக்குன்னு அடித்தேன்னு பார்க்கறியா? ஏற்கனவே உன்னை வார்ன்

பண்ணி இருக்கேன்… ஷி இஸ் மைன்… அவளிடம் இரண்டு அடி தள்ளி பேசுன்னு…!!! இனி ஒரு தரம்.. ஒரு தரம் அவள் மூச்சுகாற்று படும் இடத்தில் உன்னை நான் பார்த்தேன்… என்ன பண்ணுவேன் என்று எனக்கே தெரியாது!!!" என்று எச்சரிக்க அதில் ரூத்திர தாண்டவம் ஆடிய கோபத்தை பார்த்து அரண்டு போய் கிட்ட தட்ட மயங்கிய நிலைக்கு சென்றான் அந்த ரோகன்…

அத்தியாயம் - 8

மூன்று மாதம் இரண்டு வாரங்களுக்கு முன்பு…

முதல் முறையாக ஒரு பெண்னை அதுவும் அவளுடைய கழுத்தில் இருக்கும் கண்ணிற்கு தெரியாத மச்சத்தை தொட்டு பார்க்கவேண்டும் என்று ஏன் இப்படி மூளை சண்டித்தனம் செய்கிறது என்று புரியவில்லை.. அதை விட… அந்த மச்சத்தை பார்க்க.. பார்க்க ஏன் இப்படி சம்மந்தமே இல்லாமல் இதயம் ஏன் தலை தெரிக்க ஒட வேண்டும் என்று சத்தியமாக புரியவில்லை..

அதை பற்றி மேலே எதையும் யோசிக்க நேரம் இல்லாமல் "போகலமா?" என்று அலக்நந்தா அமைதியாக கேட்க.. அந்த வார்த்தையை உச்சரித்த விதத்திலேயே தான் அதிகமா பேசிவிட்டோமோ என்ற நெருடல் மண்டி கிடந்தை அவனால் உணர முடிந்தது.

அவன் சொன்ன அவளுக்கான "ஸ்பேஸை" கொடுக்க வேண்டிய இடம் என்று அவனுக்கு புரிந்தது.. இந்த மாதிரி அவளே அறியாமல் வெளிப்படும் சந்தர்ப்பமே போதும் என்று மனம் சொல்ல.. லேசாக புன்னகைத்தவன்..

"ஒ.எஸ்" என்றப்படி தத்தம் சைக்கிளில் அமர… ஆள் இல்லாத அமைதியான ரோட்டில்… மாலை நேரத்தில் தன் கூட்டிற்கு திரும்பும் பெயர் தெரியாத பட்சிகளில் கூக்குரலை கேட்டப்படி எதுவும் பேசாமல்… இயற்க்கையின் அசாத்திய அமைதியை ரசித்தப்படி லைப்பரரிக்கு வந்து சேர.. சைக்கிளை நிறுத்திவிட்டு இருவரும் லைப்பரரியை நோக்கி நடந்த வேளையில் தான் ரோகன் எதிர்ப்பட்டான்.

வந்தவன் சும்மா போகவில்லை… இவளை பார்த்தவுடன் முறைக்க ஆரபித்தவன் அவளை கடந்து செல்லும் வரை முறைத்தப்படியே தான்

சென்றான்.

“யார் அவன்?” என்றான் பத்ரி ரோகனின் முறைப்பை தாமதமாக கவனித்தவன்.

பதில் சொல்லாமல் இவள் நடந்ததப்படியே இருக்க.. அலுப்பாக “அலக்நந்தா…” என்றான் பத்ரி.

எரிச்சலாக பெரு மூச்சு விட்டவள் “ரோகன் என் கிலாஸ் மேட்” என்றாள் சொல்ல பிடிக்காமல்.

“என்னது கிலாஸ் மேட்டா??” என்று ஆச்சரியமாக அவன் சென்ற திசையை ஒரு முறை திரும்பி பார்த்தவன் “எனக்கு தெரிந்தவரை கிலாஸ்மேட்டை பார்த்தா பேசுவாங்க… இல்ல குறைந்த பட்சம் சிரிப்பாங்க… இது என்ன புது விதமாக முறைக்கறது?? அதுவும் இப்படி ஒரு முறைப்பு??? நீ அவன் பொருட்களை திருடிட்டு போயிட்ட மாதிரி” என்றான் பத்ரி.

“ம்ச்சு..” என்று விட்டேத்தியாக சொன்னவள் மேலே எதுவும் பேசாமல் அமைதியாக நடக்க..

“ம்ச்சு.. என்பது நான் கேட்டதற்கான பதில் இல்லை… ஏன் அவன் உன்னை முறைக்கிறான்னு சொல்லு” என்றான் விடா பிடியாக பத்ரி அவளுடன் நடந்தப்படியே.
“முறைக்கறது அவனாக இருக்கும் போதும்.. ஏன்னு என்னை கேட்டால் எனக்கு எப்படி தெரியும்?” என்றாள் கடுப்பாக அலக்நந்தா.

“சூப்பர் லாஜிக்” என்று தலையை அலக்நந்தாவின் புறம் திருப்பி ஒரு மார்க்கமாக பார்த்து மொழிந்தவன் பட்டென்று அப்பவுட்டன் அடித்து மெல்ல ஜாக் செய்தப்படி தான் வந்த வழியே சென்றான்.

திடுக்கிட்டு இவன் எங்கே லைப்பரிக்கு உள்ளே போகாமல் இப்படி திரும்பி போகிறான்? என்ற கேள்வியுடன் அவன் செல்லும் திசையை பார்க்க…. அவன் ரோகன் இருக்கும் திசையை நோக்கி ஓடுகிறான் என்று தாமதாக புரிந்தது.

“மை காட்” என்றப்படி அவனை துரத்திக்பிடிக்க தன் ஹீல்ஸ் அணிந்த கால்களுடன் புல் தரையில் புதைய ஆனாயாசமாக அவன் பின்னாடி ஓடினாள் அலக்நந்தா!!!

பத்ரியின் அருகில் வந்தவள் அவன் முன் கையை நீட்டி “நில் பத்ரி” என்றாள் காட்டமாக.

அவளை அதிசயமாக பார்த்தவன் “என் பாட்டி.. ஒரு முக்காலும் உணர்ந்த ஞாநி” என்றான் அதிசிரத்தையாக.

“ம்ம்??” என்றாள் அலக்நந்தா… அந்த “ம்”மையே கேள்வியாக.

“உலகத்தில் உன்னால் தான் அலக்நந்தா “ம்”மை கூட கேள்வியாக கேட்க முடியும்” என்று நேரம் காலம் இல்லாமல் சிலாகித்தவன்… அவள் எதுவும் பேசாமல் அவனின் பதிலுக்காக நிற்பதை கண்டு.. “என் பாட்டியை ஏன் ஞாநின்னு சொன்னேனா… என் அழகில் மயங்கி என் பின்னால் பெண்கள் துரத்திக்கொண்டு ஓடி வர போறாங்கன்னு சொல்லுவாங்க… அதுக்கா இப்படி ஹை ஹீல்ஸில் தன் உயிரை பணயம் வைத்து என் பின்னால் ஒடி வருவார்கள் நினைக்கவில்லை…” என்றான் விளக்கினான் சிரிப்புடன்.

அதற்கும் மறுப்பாக கூட எதுவும் பேசாமல் அவள் இவனை முறைக்க..

“ஏய்.. எதுக்கு முறைக்கற.. உண்மையை தானே சொன்னேன்?? இப்ப லைப்பரிக்கு போகாமல் பின்ன இங்க என்ன பண்ற?” என்றான் எதுவுமே தெரியாத மாதிரி பத்ரி.

“நீங்க எங்க போறிங்க பத்ரி?” என்றாள் தன் முட்டை கண்ணில் கனல் கக்க.

“ரோகனை தான் கேட்கனுன்னு நீ தானே சொன்ன.. அதை தான் செய்ய போறேன்” என்றான் முட்டும் சிரிப்பை விழிங்கியப்படி பத்ரி.

“டோன்ட் கிரியேட் சீன் பத்ரி?!!” என்றாள் சற்றே சரிந்த குரலில் அலக்நத்தா.

“அலக்நந்தா… உன்னிடம் ஒரு பதில் வாங்கறத்துக்கு நான் நூறு கேள்வி கேட்பதை விட அவனிடம் ஒரு கேள்விக்கு நூறு பதில் வரும்… அந்த டீல்

பெட்டரா ஃபீல் பண்ணதால அவனை பார்க்க வந்தேன்" என்றான் சவாதனமாக பத்ரி.

"தெரிந்து என்ன பண்ண போற?" என்றாள் அவளும் விடாமல்.

"ப்பா... நான் முன்னாடி சொன்னது உனக்கு இன்னும் புரியலை இல்லை?? நான் கேட்கும் கேள்விக்கு நீயா நேரடியா பதில் சொன்னா உனக்கும் எனர்ஜி மிச்சம்.. எனக்கும் டைம் மிச்சம்... அப்படி இல்லன்னா என் கேள்விக்கான பதிலை நானே தெரிந்துக்கொள்வேன்.. அலக்நந்தா" என்றான் இருமாப்புடன் பத்ரி.

எரிச்சலாக அவனை பார்த்தவள் "யூ ஆர் நோசி(nosy)"

"திங் சொ... என் மேல் தப்பு இல்லம்மா... சச்சிதேவ் ப்ளட்லேயே உள்ள பிரச்சனை... சரி பேச்சை மாற்றாமல் விஷயத்தை சொல்லு" என்றான் கர்மமே கண்ணாக பத்ரி.

பல் டாக்டரிடம் போகும் குழந்தையை போல் முகத்தை வைத்துக்கொண்டு "போன வாரம் நடந்த பேப்பர் ப்ரசனட்டேஷன்ல என்னுடயது தான் பெஸ்ட்ன்னு ப்ரோஃபசர் சொன்னதால வந்த கடுப்பில் அப்படி பார்த்துட்டு போறார் போதுமா?!?" என்று சொல்லிவிட்டு அவனை கோபமாக முறைத்தவள் எதுவும் பேசாமல் திரும்பி லைப்பரியை நோக்கி நடக்க அவளுடன் அவனும் சேர்ந்துக்கொண்டவன்.

"ச்ச்.. என்ன கண்றாவியான ரீசன் இது?? நான் கூட அவன் முறைந்த முறைப்ப பார்த்து... அந்த ரோகன் முதல் பார்வையிலே உன் அழகில் மயங்கி" என்று கண்ணடித்து சிரிக்க.... அலக்நந்தா நின்று அவன் புறம் திரும்பி மீண்டும் முறைக்கவும் வாய் விட்டு உல்லாசமாக சிரித்தவன் தொடர்ந்து "உன்னிடம் ப்ரோபோஸ் பண்ணி நீ ஒத்துக்கவில்லை என்பதால் அவன் இப்படி நடந்துக்கறான்னு... ஒரு பயங்கரமான கதையை எதிர்பார்த்தால் ஒரு உப்பு சப்பு இல்லாத ஆப்டர் ஆல் ஒரு பேப்பர் ப்ரஸ்டேன்ஷனுக்கா இந்த பில் டப்?!?" என்றான் பத்ரி நிஜமான வருத்ததுடன் .

பத்ரியை உற்று நோக்கியவள் வருத்தம் அப்பிய கண்களுடன்

“உலகத்திலேயே ஸ்டாங்கஸ்ட் அனிமல் எதுன்னு தெரியுமா?” என்றாள் சம்பந்தமே இல்லாமல்.

“ம்ம்.. ப்ளூ வேல்?!?” என்றான் பத்ரி லேசாக தன் ஒரு நாள் முடியுடன் கூடிய முள் தாடியை தேய்த்தப்படி.

“ம்கூம்…. நான் பிக்கஸ்ட் அனிமல் கேட்கவில்லை பத்ரி.. ஸ்டராங்கஸ்ட் எதுன்னு கேட்டேன்” என்றப்போது அவளில் குரலில் கடினம் குடியேறி இருந்தது.

“பிக்கஸ்டு தான் ஸ்டராகஸ்ட்டாக இருக்குன்னு யூகித்தேன்” என்றான் பத்ரி மேலும் தாடையை தடவியப்படி.

“ம்கூம்… ஒரு விலங்கின் வலிமையை எப்படி தீர்மானம் செய்யறாங்கன்னா… தன் உடல் எடையை விட எத்தனை மடங்கு பாரத்தை தூக்க முடியும் என்பதை வைத்துதான் தீர்மானம் செய்யறாங்க… உருவத்தில் பெரியதாக இருந்துவிட்டால் மட்டும் அது வலிமை கொண்டதாகி விடாது பத்ரி.. உலகத்திலேயே வலிமையானது எதுன்னா அரை இன்ச் நீலமுள்ள டங் பீட்டல்(dung beetels) என்று அழைக்கப்படும் வண்டு இனத்தை சேர்த்தது தான் வலிமையானது… அது தன் எடையை விட 1141 மடங்கு உள்ள எடையை அசாதாரனமாக தூக்கி சுமக்க முடியும்… நீங்க சொன்ன ப்ளூ வேல் டாப் டென் லிஸ்டில் கூட இல்லை… தெரியுமா??” என்று அமைதியாக கூறி முடித்தாள் அலக்நந்தா.

“வெரி இன்டர்ஸட்டிங்க பேக்ட்… ஆனா இதை நீ என் பொது அறிவை வளர்க்க சொல்லவில்லை என்று நன்றாக புரியுது.. இவ்வளவு தூரம் சொன்னவள் அதற்கான காரணத்தையும் சொன்னா நான் சந்தோஷப்படுவேன்” என்றான் பத்ரி மிகுந்த யோசனையுடன்.

“பெரிசா இருக்கறதால… ஸ்டாராங்கா இருக்கனுன்னு அவசியம் இல்லை பத்ரி… அரை இன்ச் நீலமுள்ள பீட்டேல் 1141 மடங்கு தூக்கும் போது ஏன் நம்மால் அத்தனை பாரம் தூக்க முடியலைன்னு கேட்க முடியுமா? அது மாதிரி… எல்லோருக்கும் எல்லாத்தையும் தாங்கும் சக்தி இருப்பதில்லை பத்ரி.. சிலருக்கு சாதாரணமாக தோன்றுவது பலருக்கு அசாதாரணமாக தோன்றும்… அவங்களுக்கான ஒரு லிமிட் இருக்கு… ரோகனுக்கு சின்ன

தோல்வியை கூட தாங்கும் சக்தி இல்லை.. அவ்வளவுதான்..” என்று அமைதியாக குரலில் வலியுடன் முடித்தாள்.

அசந்து போய் பார்த்தான் பத்ரி… என்ன மாதிரி ஒரு விளக்கம்?? எத்தனை பேர் தன்னை எதிராய் நினைப்பவனின் மன நிலையை உணர்ந்துக்கொள்ள முடியும்? ஏனோ.. இது ரோகனுக்கு மட்டுமானது அல்ல என்று மூளை மணி அடிக்க… ஒருவேளை இவளும் அப்படிதானோ? சின்ன சின்ன தோல்வியை கூட தாங்கி கொள்ள முடியாத சென்சிடிவ் ஆனவளோ? என்று மனம் தரிக்கெட்டு ஓடியது…

அதற்குள் அவர்கள் பிரிந்து செல்ல இடம் வந்து சேர.. ஒரு பையை உதிர்த்து விட்டு அவள் முன்னே செல்ல..

“ஏக் மினிட் அலக்நந்தா” என்று அவளை தடுத்து நிறுத்தியவன்.. “ஏழு மணிக்குள் உன் வேலையை முடித்து விடு… எட்டு மணிக்கு நம் ரூமில் கார்ட்ஸ்(cards) பார்ட்டி இருக்கு… ஐ மீன் எட்டு பேர் கார்ட்ஸ் விளையாட நம்ம ரூம்மிற்கு வருவாங்க..”

அவன் சொல்லி முடிக்கும் முன் இரண்டு அடி பின் நகர்ந்தப்படி “இல்ல.. நான் வரலை” என்று பதில் வந்தது அவளிடம் இருந்து.

“நீ இதை தான் சொல்லுவேன்னு.. எதிர்பார்த்தேன். பட் வேற வழி இல்லை.. நம்ம ரூம்மில் நடக்கும் போது நாம் போய்தான் ஆகனும்..”

“இதுவரை நான் காட்ஸ் விளையாடியதே இல்லை.. எனக்கு தெரியாது” என்றாள் மாட்டிக்கொண்ட அதே முயலில் மருண்ட விழிகளுடன்.

“இதை விட பெட்டர் ரீசன் என்ன வேண்டும் விளையாட?? நான் கற்றுக்கொடுக்கிறேன்…” என்றான் அவளின் அண்ட புளுகை கண்டு கொண்ட திருப்தியுடன்.

அவனை எதுவும் பேசாமல் முறைத்து விட்டு விருட்டென்று அங்கிருந்து திரும்பி தன் மூன்று இன்ச் ஹில்ஸ் லேசாக சப்தம் வர நடந்தாள்.

ஒரு நிமிஷம் அவள் நடந்து செல்லவதையே பார்த்தவன் இந்த

சொடுக்கு(sudoku) மாதிரி எப்படி போட்டாலும் எங்கோயோ ஒரு நம்பரில் இடிக்கிறாளே!!! என்று நினைத்தவனை பின்னாடி வந்த பாயல் அவன் தோளை தட்ட திரும்பியது "என்ன?" என்பது போல் கையை ஆட்டி கேள்வி கேட்க...

"ஒன்றும் இல்லை" என்று தலையை அலக்நந்தாவை போல தலையை ஆட்டியவன்.. ம்ம்.. இரண்டே நாளில் அவளுடைய சயின் லாங்வேஜை நமக்கு கற்றுக்கொடுக்கிறாளே என்று நினைத்து லேசாக முகத்தில் புன்னகை அரும்ப "வா போகலாம்... பாயல்" என்று மொழிந்தவன் அவளுடன் தான் செய்ய வேண்டிய பணியில் முழுமையாக கவனம் செலுத்தினான்.

சரியாக ஏழு மணிக்கு தன் வேலையை முடித்துவிட்டு பாயலியிடம் விடைப்பெற்றுக் கொண்டு எழுந்தவன் நேராக அலக்நந்தா இருக்கு இடத்திற்கு செல்ல.. தன் அருகில் நிழல் ஆடியதை உணர்ந்தவள் நிமிர்ந்து அங்கே நின்றவனை கண்டவள் அவசரமாக தன் கை கடிகாரத்தை பார்த்து விட்டு அவன் எதிர்பார்த்தப்படியே

"வேலை முடியலை..." என்று அவள் ஆரம்பிக்க...

அதற்கு மேல் பேசவே விடாது "இன்னும் வேலை முடியலை நீங்க போங்கன்னு தப்பிக்கலான்னு நினைச்சு கூட பார்க்காதே அலக்நந்தா... நீ அங்க வரலைன்னா.. எல்லோரையும் இங்க வரவழைத்து லைப்பரியையே ப்ளே ரூம் ஆகிடுவேன். அங்கன்னா எட்டு பேர் மட்டும் தான் இங்கன்னா எப்படியும்..." என்றப்படி தன் தலையை ஒரு சுழற்று சுழற்றியவன் "இருபது பேராவது நிச்சயம் வருவாங்க எப்படி வசதி?!?" என்று அடா வடியாய் கேட்டான் பத்ரி.

"பத்ரி!!???" என்று அரண்டு போய் பார்த்தாள் அலக்நந்தா.

"ஆமாம்... நான் பத்ரியே தான்.. உனக்கு அடிக்கடி மறந்து போகுது.. வா போலாம்" என்றான் தடாலடியாக.

"ம்ம்.. விளையாடுவேன்.. ஆனா எந்த சூழலில் எனக்கு அங்க உட்கார பிடிக்கலைன்னாலும் எழுந்து போய் விடுவேன்.. கம்பல் பண்ணி கூப்பிட

கூடாது" என்று பேரம் பேசினாள் அலக்நந்தா.

"டன்..." என்று லேசாக சிரித்தப்படி கூற.. பெரும் மூச்சு விட்டப்படி தன் சாமன்களை எடுத்துக்கொண்டவள் எடுத்த ரெப்ரன்ஸ் புக்ஸ் எல்லாவற்றையும் அதே இடத்தில் வைத்துவிட்டு அவனுடன் நடந்தாள்.

இருவரும் வெளியே வர.. பாயல் அங்கே இவர்களுக்காக காத்து இருந்தாள்.

முறைப்படி அவனுடைய ப்ராஜெட் பார்ட்னரை அறிமுகம் படுத்த அமைதியாக "ஹாய்" சொன்னாள் அலக்நந்தா.

இவளின் விசித்திர ஹர் கட்டை ஒரு முறை பார்த்தவள்.. "ஐ லைக் யூவர் ஹேர் ஸ்டைல்" என்றாள் பாயல் அசாத்திய துணிச்சலுடன்.

இதை கேட்ட பத்ரிக்கு நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.. கடவுளே.. இந்த ஹேர் ஸ்டைலை நன்றாக இருக்கு என்று சொல்லும் ஜீவ ராசி கூட இந்த உலகத்தில் இருக்கா? என்று நினைத்தவன்.. "முடி வெட்ட ஆரபித்து எப்படி முடிப்பதுன்னு தெரியாம அப்படியே... அங்க.. அங்க.. குதறி வைத்திருக்கான்.. அதை ஹேர் ஸ்டைலுன்னு சொல்லாதே" என்று வர்ணித்தான் அவன்.

ஒரு என்ன ரசனை உன்னுடையது என்பது போல் ஒரு பார்வையை வீசிய பாயல்... அலக்நந்தாவிடம் திரும்பி அவன் சொன்னது காதிலே விழாதது போல் நெடு நாள் பழகிய தோழி போல் பேசியப்படி வந்தாள்.

பெண்கள் இருவரையும் முன்னாடி விட்டு பின்னாடி யோசனை படிந்த கண்களை அலக்நந்தாவை பார்த்தப்படி வந்தான் பத்ரி. பாதி வழியிலேயே பாயல் விடை பெற்று விட்டு திரும்பி விட.. அலக்நந்தாவுடன் இணைந்து அமைதியாக வந்தான் பத்ரி.

ரூம் வந்தவளுக்கு பீட்சாக்களும்... கோக் பாட்டில்களும் நிரம்பி இருப்பதை பார்த்து திடுகிட்டு பத்ரியை பார்க்க...

"காட்ர்ஸ் பார்ட்டி... டின்னர் இங்க தான்... நீ இப்பவே உன் டின்னரை முடித்து விட்டு... எங்களுக்கு எதுவும் வேண்டாம்" என்றான் சித்திற்குமாக இவனே

பேசியப்படி.

எட்டு மணியை நெருங்க ஒவ்வொருவராக வந்து சேர… முறையாக எல்லோரையும் அலக்நந்தாவிற்கு அறிமுக படுத்த “ஹாய்” என்பதற்கு மேல் எதுவும் இவளை கண்டுகாது நண்பர்கள் ஒன்று கூடியனால் எழும் கூச்சலும்.. சிரிப்பும்.. காலை வாரிக்கொண்டு பேச… ஆரபிக்க அத்தனை நேரம் டென்ஷனில் விரைத்து இருந்த அலக்நந்தாவின் தோள்கள் லேசாகியதை நன்றாக உணர்ந்தான் பத்ரி.

ஆட்டத்தை ஆரபிக்க ஆயுத்தமாக எல்லோரும் கீழே வட்டமாக அமர பாயலுடன் கூட அவளுடைய ப்ரெண்டு சோனாவும் வந்திருக்க அவர்கள் அருகில் அலக்நந்தா உட்காருவாள் என்று அவன் எதிர் பார்க்க அலக்நந்தாவோ பாயலை ஒரு பார்வை கூட பார்க்காது நேராக அவன் அருகில் அமர்ந்தாள்.

எப்பையும் போல் முதலில் ப்ளப்(bluff) ஆட துவங்க பத்ரியிடம் அவசரமாக தன் கலவரமான பார்வையை திருப்பி பார்த்த அலக்நந்தா… “எனக்கு தெரியாது பத்ரி” என்றாள் கிசுகிசுப்பாக.

“வாட்?????? நிஜமாக உனக்கு ப்ளப் ஆட தெரியாதா??” என்று ஆச்சரியாமக பார்த்தான் பத்ரி. அவள் வருவதை தவிர்பதற்காக அப்படி சொன்னாள் என்று தான் இத்தனை நேரம் நினைத்துக்கொண்டு இருந்தான்.

“ம்கூம்.. முன்னாடியே சொன்னேனே பத்ரி” என்று தன் தலையை மறுப்பாக ஆட்ட…

ஒரு நிமிஷம் அவளுடைய கண்களை உற்று பார்த்தவனுக்கு அதில் இருந்த உண்மை உரைக்க… “இட்ஸ்.. ஒ.கே அலக்நந்தா… நான் சொல்லி தரேன்… பெயருக்கு ஏற்ற மாதிரி இது பொய் சொல்ற ஆட்டம்.. ஆனா பொய்யையே உண்மை மாதிரி சொல்லி… கையில் இருக்கும் காட்ஸை கீழே இறக்கனும்…” என்று ஆரபித்து விளக்கி முடித்தவன்…. “சொல்லும் போது கொஞ்சம் குழப்பமாக தான் இருக்கும் என்னுடன் சேர்ந்து விளையாடு புரியும்” என்று கூறிவிட்டு.. தன் கார்ட்ஸை அவளிடம் கொடுத்து அருகில் அமர சொல்லி எப்படி என்று சொல்லிக்கொண்டே விளையாடினான்.

முதல் ஒருரவுண்டு முடிவதற்குள்ளே விளையாட்டையும் அவனுடன் சேர்ந்துக்கொண்டு பார்த்தவளுக்கு அவர்களின் விளையாடுவதை விட அங்கே நண்பர்கள் “ப்ளப்” என்று கத்தி கூப்பாடு போடுவதும்… போகிற போக்கில் ஏமாற்றவதும்… அதை விட பத்ரியும்.. சித்துவும் கட்டிப் புரளாத குறையா சண்டை போட்டுக்கொள்… அவளையும் அறியாது பத்ரியிடம் இருந்து சற்றே தள்ளி அமரந்தவள்.

“பத்ரி” என்று மெல்ல பயத்துடனே அழைத்தாள் அலக்நந்தா.

அவளின் சைகையை கவனித்தவன் “இப்படி அடித்துக்கொள்ளாமல் ப்ளப் விளையாடினால் சாமி குத்தம் ஆகிடும்” என்று புன்னகையுடன் சொல்ல… அவளின் குழப்பமான… அலையடிக்கு விழிகளை கண்டவனுக்கு ஏனோ அந்த விழிகளில் டைவ் அடித்து விழுந்து நீந்த வேண்டும் என்று நெஞ்சம் துடித்தது!!!

சற்றே பயத்துடன் அமர்ந்திருந்தவளை மேலும் கலவரபடுத்த பிடிக்காமல் பத்ரியே சமாதானமாக… ஆச்சரியமாக பார்த்தான் சித். அவர்கள் இருவரும் அடித்தக்கொள்ள தொடங்கினால் கட்ட பஞ்சாயத்து வைத்து… வெள்ளை கொடியை பறக்க விட்டால் ஒழிய அவ்வளவு சீக்கிரத்தில் அந்த சண்டையை முடிக்க மாட்டார்கள் என்பது நாடு அறிந்த ரகசியம். ஆனால் இன்று எட்டாவது அதிசயமாக பத்ரி தானே சமாதானம் ஆக… அவனின் இந்த திடீர் மனமாற்றத்தின் காரணம் பக்கத்தில் அமர்ந்தவளின் மருண்ட விழியோ என்று தோன்றியது சித்திற்கு.

தெம்பாக சண்டை போடவே வரவழைக்கப்பட்டது போல் பிட்சாவும் கோக்வும் கொறிக்க ஆரபிக்க… அடுத்த ரவுண்டிற்கு விசிறி மட்டையாக கையில் கார்ட்ஸ் வைத்துக்கொண்டு மீண்டும் முதலில் இருந்து சண்டையை ஆரபிக்க அவர்களின் அறை போர்களம் போல் காட்சி தந்தது.

இப்படி எல்லாம் விளையாடுவதை பார்த்திராத அலக்நந்தா முதலில் விளையாட்டை கவனிப்பதை விட அவர்கள் அடித்துக்கொள்வதை.. பயத்துடன் பார்த்தவள் பின் அதையே வெகு சுவாரசியமாக வேடிக்கை பார்க்க ஆரபித்துவிட்டாள்!!

அவளின் செய்கையை நோக்கியவனின் உதடுகளில் சிரிக்க இப்பொழுது

சித்துவும், பாயலும் அடுத்த கட்ட போர் முரசை கொட்ட இது எப்படியும் முடிய பத்து நிமிஷமாகும் என்று எண்ணியவன் “என்ன அலக்நந்தா இப்படி நீ உன் நண்பர்களுடன் விளையாடியது இல்லையா?” என்றான் மெல்ல.

“ம்கூம்…” என்றாள் அலக்நந்தா அவர்கள் அடித்துக்கொள்வதை பார்த்து மிக லேசாக புன்னகை பூத்தப்படி.

“ஏன்?”

“முதலில் விளையாடறத்துக்கு டைம் இருந்ததில்லை… கூடி விளையாடுவதற்கு ப்ரெண்சும் இருந்ததில்லை” என்றாள் லேசாக திரும்பி அலக்நந்தா.

இப்படி ஒரு பதிலை நிச்சயமாக எதிர்பார்க்காத பத்ரி திடுகிட்டு அவளை பார்த்தான். விளையாட நேரமும் இல்லாமல்… ப்ரெண்ஸ்சும் இல்லாமல் என்ன மாதிரியான குழந்தை பருவம் அவளுடையது? அப்பொழுது தான் அவள் கண்ணில் தெரிந்த வலியை உணர சுருக்கு என்று இவனுக்கு தைத்தது.

பள்ளி நண்பர்களும் அவன் எப்படி எல்லாம் லூட்டி அடித்திருக்கிறான்??? அதை விட… இருபத்தி ஏழு வயதில் ஜாலியாக இருப்பதற்காகவே அவனுடைய குடும்பம் காலேஜ் படிக்க பார்சல் பண்ணி இங்கே அனுப்ப… இவளுக்கு??? என்று மேலும் நினைக்க.. நினைக்க நெஞ்சின் வலி குமுறலாக மாறியது.

அவன் பார்வையின் மாறுதலை உணர்ந்தவளுக்கு தான் வாய் விட்டு உளறியது புரிய.. சண்டையை பார்க்கும் விதமாக சடக்கென்று தலையை திருப்பிக் கொண்டாள்.

அவள் திருப்பிய வேகத்தில் அவளுடைய திரையாக மறைத்த குழல் ஒதுங்க… இன்று மாலையில் பார்த்த அவளின் நீண்ட சந்தன கழுத்தும் அதனின் மச்சமும் தெரிய… ஏனோ அந்த மோனல் பறவையின் ஞாபகம் வந்தது..

அந்த பறவையின் நிறம் கண்ணை பறிக்கும் படியாக பார்க்க வெகு அழகாக

இருந்தாலும் ஏனோ அதன் மின்னும் கழுத்துதான் அவன் கண்ணை மட்டும் அல்ல கருத்தையும் பறிக்கும்… அதை போல் தான் ஏனோ அலக்நந்தாவின் அந்த சங்கு கழுத்தும் அதில் இருக்கும் அந்த சின்ன மச்சம் அவனுள் ஒரு இதமான புரிந்துக்கொள்ள முடியாத இம்சையை ஏற்படுத்தியது!!!

இப்படி அவளை வெறித்துக்கொண்டு இருக்கும் போது அலக்நந்தா தன்னை மறந்து அங்கே நடந்த சண்டையை பார்த்து லேசாக புன்னகை பூக்க… பக்க வாட்டில் இருந்த அவளின் முகதோன்றமும்… எழிலான சிரிப்பும் யாரையோ நினைவு படுத்த…

“உன் முகத்தை பார்த்த மாதிரி இருக்கு அலக்நந்தா… நாம் இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கோமா?” என்று யோசனையுடன் கேட்டான் பத்ரி.

இன்று

“ப்ரோ… உன் நல்ல நேரம் நீ என்ன பேசினயோ நான் காதில் வாங்கலை.. அப்ப எதுக்குன்னு அடித்தேன்னு பார்க்கறியா? ஏற்கனவே உன்னை வான் பண்ணி இருக்கேன்… ஷி இஸ் மைன்… அவளிடம் இரண்டு அடி தள்ளி நின்னு பேசுன்னு…!!! இனி ஒரு தரம்.. ஒரு தரம் அவள் மூச்சு காற்று படும் இடத்தில் உன்னை நான் பார்த்தேனா… என்னை பண்ணுவேன் எனக்கே தெரியாது!!!” என்று எச்சரிக்க அதில் ருத்திர தாண்டவம் ஆடிய கோபத்தை பார்த்து அரண்டு போய் கிட்ட தட்ட மயங்கிய நிலைக்கு சென்றான் அந்த ரோகன்…

அங்கே நடந்தேறிய கலவரம் எதுவும் அறியாத அலக்நந்தா தன்னுடயை ஆராய்ச்சி கட்டுரையை எழுதுவதில் முனைய அடுத்த இரண்டு மணி நேரம் போனதே தெரியாமல் மறைந்தது. இரவு நடுநிசியை தாண்டியதும் அவளை தேடிக்கொண்டு வந்தாள் பாயல்.

“ஹய் அலக்நந்தா.. போதும் பா விட்டா இன்றே எழுதி முடித்துவிட்டு தான் ரூம்மிற்கு போவ போல… எனக்கு தூக்கம் வருது” என்று பாயல் பெரிய கொட்டாவியை விட்டப்படியே அழைத்தாள்.

“ஒ.. சாரி.. பாயல் இதோ வந்துட்டேன்” என்றப்படி மடமடவென்று

புத்தகத்தை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு மின்னல் வேகத்தில் புறப்பட.. அதற்குள் ரோகனிடம் பத்ரி எச்சரித்ததை மட்டும் ரத்தின சுருக்கமாக படபடவென்று அடிக்கினாள் பாயல்.

ஒரு நிமிடம் உடல் விரைத்து நின்றவள் மறுநிமிடம் அப்படியே தோய்ந்து சேரில் அமர்ந்தாள். அவளால் அவனுக்கு இருக்கும் பிரச்சனை போதாது என்று இது வேறு புது கதையா? என்று மனது தவித்த போதும் இத்தனை நடந்த பின்னும் பத்ரி தனக்காக அவனிடம் பேசி இருக்கிறான் என்று நினைப்பே உவப்பாக தான் இருந்தது.

“அலக்நந்தா...” என்று மெல்ல தயங்கியப்படி பாயல் அவளை அழைத்து நினைவுலகிற்கு திருப்ப...

லேசாக கலங்கிய கண்களுடன் நிமிர்ந்த அலக்நந்தாவிடம்.. “பத்ரி சும்மா எல்லாம் கையை நீட்டும் ரகம் இல்லை என்று தெரியும்... உனக்காக ரோகனிடம் சண்டை போட்டி இருக்கார்ன்னா என்ன அர்த்தம் அலக்நந்தா?!?” சோகம் அப்பி முகத்துடன் பாயல் கேட்டாள்.

“எனக்கு தெரியலை பாயல்... இதை நீ பத்ரியிடம் கேட்க வேண்டியதுதானே?” என்றாள் இல்லாத அமைதியை குரலில் காட்டி.

நேருக்கு நேராக அவள் முன்பு நின்றவள் “அவரை கேட்கும் முன்னாடி உன்னை கேட்கறேன் அலக்நந்தா... நீயும் அவரை காதலிக்கிறாயா?” என்றாள் வெதும்பிய முகத்துடன் பாயல்.

இப்படி கேட்பவளிடம் எப்படி பொய் சொல்லுவாள்.. அப்படி சொல்வதும் இவளுக்கு என்ன நலன் பயத்து விட போகிறது? இன்று இல்லை என்றாலும் என்றாவது தெரிய தானே போகிறது என்று மூச்சை பிடித்துக்கொண்டு கண்ணீர் படிந்த விழிகளுடன் பாயலை பார்த்தவளுக்கு பதில் சொல்ல நாக்கு தழுதழுக்க எப்பையும் போல “ம்ம்...” என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

“மை காட்!!! ஒ மை காட்!!!” என்று தன் நெஞ்சின் வலியை முழுமையான வார்த்தைகளில் வழியாக வெளிப்படுத்த முடியாது தடுமாறிய பாயல்... “நான்... நான்... முன்பே சொன்னே அலக்நந்தா பத்ரியை நான்

காதலிக்கிறேன்… அவரை தவிர இந்த காலேஜில் யாரை வேண்டுமானாலும் லவ் பண்ணிக்கோ.. எனக்கு பத்ரியை மட்டும் விட்டுட்டுன்னு சொன்னனே…" என்றாள் கட்டுக்கிற்கு அடக்காத சோகத்துடன்.. கண்ணீர் மல்க பாயல்.

Part 9

"உன் முகத்தை பார்த்த மாதிரி இருக்கு அலக்நந்தா… நாம் இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கோமா?" என்று யோசனையுடன் கேட்டான் பத்ரி.

அதைக் கேட்ட அடுத்த நொடி… முகத்தில் இருந்த அந்த புன்முறுவல் புயல் காற்றில் அனையும் தீபமாக சட்டென்று அனைய… முகமோ கலவரத்தில் வெளுக்க… மெல்ல அவன் புறம் திரும்பி அவளின் கண்களில் வந்துபோன அதீத பயத்தைக் கண்டவன் திடுக்கிட்டான். வெகு சாதாரணமாக கேட்ட இந்த கேள்விக்கு இப்படி ஒரு ரியாக்ஷனை எதிர்பார்க்கவில்லை என்பதோடு.. இப்படி ஒரு அதிர்வையும்… பயத்தையும் அவளிடம் தோற்றுவிக்கும் அளவு அவன் என்ன கேட்டு விட்டான் என்று யோசிக்கும் முன்பு..

ஒருவாறு தன் அதிர்ச்சியில் இருந்து மீண்டவள்.. "நான் இங்க… காலேஜில் தான் உங்களைப் முதன் முதலில் பார்த்தேன் பத்ரி… ஆனா நீங்க என்னை பார்த்திருக்கீங்களான்னு எனக்கு தெரியாது" என்று வருத்தம் இழையோடிய தெளிவில்லாத குரலில் அமைதியாக பதில் அளித்தாள்.

இப்படி ஒரு விசித்திரமான பதிலை சற்றும் எதிர்பார்க்காதவனின் முகத்தில் முதலில் வியப்பு தோன்ற… பின் அது மெல்ல புன்னகையாய் மலர.. அவளுக்கு தக்க பதில் சொல்ல வாயை திறக்கும் முன் முந்திக் கொண்ட அலக்நந்தா..

"எனக்கு தலைவலி ஆரம்பிக்குது பத்ரி.. நான் படுக்கப் போறேன்" என்று சொன்னபடி அவள் கையில் இருந்த காட்ஸ்சை அவன் கையில் திணித்தாள்.

"அலக்நந்தா.." என்று அவன் இழுக்க..

"என்னை கம்பல் பண்ணாதே பத்ரி…" என்று மறுமொழித்தவள் அமைதியாக அனைவருக்கும் ஒரு குட்நைட்டை சொல்லிவிட்டு மடமடவென்று தன் ரூம்

செல்ல.. பத்ரி குழப்பமாய் அவளைப் பார்த்தான்.

படு மும்மரமாய் வாய் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த சித்.. அவளின் விலகலை உணர்ந்து அதை பாதியிலேயே நிறுத்தி விட்டு பத்ரியை பார்க்க..

அவனோ இதை அப்புறம் பேசிக்கொள்ளலாம் என்றும் படியாக தலையை அசைக்க... விட்ட இடத்தில் இருந்தே மீண்டும் தன் சண்டை தொடர்ந்தான் சித். ஒருவாறு சண்டைக்கு மத்தியில் அவர்களின் விளையாட்டு இனிதே நிறைவடைய... வந்தவர்கள் எல்லோரும் கிளம்பிய பின் கிடைத்த தனிமையில் சித்

“என்னடா ஆச்சு?” என்றான்.

“சஸ்பென்ஸ் திரில்லர் படம் காட்றா” என்றான் அசட்டையாக பத்ரி அவளின் ரூமின் புறம் கை காட்டி.

“ஓ!!! ப்ரிமியர் ஷோ உனக்காக மட்டும் ஓடுதா??” என்று சிரித்தபடி சித் கண்ணை அடிக்க.

லேசா விரத்தியுடன் சிரித்தவன்... “நான் படத்தை பாதியில் இருந்து பார்க்கிறனா.. இல்ல முதலிருந்து பார்க்கிறனான்னு எனக்கு சுத்தமா புரியலைடா.... எது ஆரம்பம் எது முடிவுன்னு தெரியாம ஒரு விசித்திரத்திரமான படத்தை பார்க்கிற மாதிரி இருக்குடா சித்.. எதையோ எங்கையோ மிஸ் செய்கிறேன் என்று தெரியுது.. ஆனா எங்க எதென்னு தான் புரியலை..” என்றான் மிகுந்த யோசனையுடன் தாடையை மெல்ல தேய்த்து விட்டு... மூடப்பட்டிருந்த அலக்நந்தாவின் கதவை பார்த்தப்படி பத்ரி.

“நான் வேணுன்னா.. அண்ணாவிடம்...” என்று சித் சற்று தயங்கியப்படி படி ஆரபித்து முடிக்காமல் பாதியிலே நிறுத்தி அர்த்தம் பொதிந்த பார்வையுடன் பத்ரியை பார்த்தான்.

மிர் அல்உமர் சித்திக் அலிகான் நவாப் பரம்பரை என்பதாலே அவனுக்கு என்று தனிப்பட்ட முறையில் கண்ணிற்கு தெரியாது நிறைய பாதுக்காப்பு

வளையம் செய்யப்படு இருக்க… அது அவனுடன் மட்டும் நிற்காது அவனிடம் நெருங்கி பழகும் நண்பர்களின் “பேக்கவுண்ட் செக்” என்பது வரை என்று சற்றே நீண்டு இருக்கும் என்று பின் நாளில் பத்ரி சித்தின் மூலமாகவே அறிந்துக்கொண்டான்.

தன் நண்பர்களை உளவு பார்பது போல் இருக்கும் இந்த நடவடிக்கையில் சித்திற்கு கொஞ்சமும் பிடிக்காவிட்டாலும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவனுடைய அண்ணன் இம்மி அளவும் விட்டுக்கொடுக்க மாட்டான் என்பதால் தன் நண்பர்களை பற்றிய ரீபோர்ட் அவனுடைய அண்ணின் பார்வைக்கு மட்டுமே போய் சேரும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சித் எதை சொல்கிறான் என்று புரிய அவசரமாக “வேண்டாம்.” என்று மறுத்த பத்ரி.. “ஆற்றைக் கடக்க.. அது எத்தனை அடி ஆழம்.. எத்தனை அடி அகலங்கற தகவல் எல்லாம் தெரியனுங்கற அவசியம் இல்லை சித்… நல்ல நீச்சலடிக்க தெரிந்தால் மட்டும் போதும்… எத்தனை தூரத்தையும் கடந்துவிடலாம்… அதுதான் அதில் இருக்கு திரிலே..” என்று திட்டவட்டமாக மொழிந்துவிட்டு மிகுந்த யோசனையுன் படுக்க சென்றான் பத்ரி.

இப்படி வீரப்பாக பேசினான் தவிர அதற்கு பிறகு அந்த நடமாடும் சஸ்பென்ஸ் திரில்லரை கண்ணால் கூட காண முடியவில்லை… அவனுக்கும் சித்திற்கும் எப்பவும் போல் காலையில் டிபனும், இரவில் டின்னரும் இருக்க… ஆள் மட்டும் தென்படவே இல்லை. இப்படியே அடுத்த ஐந்து நாட்களும்… எதோவொரு நேரத்திற்கு வந்து உணவுகளை தயார் செய்து வைத்து விட்டு.. போக.. இப்போ கண்ணிற்கு தெரியாது படம் காட்டினாள்!!!

எப்ப பார்த்தாலும் அவளுடைய ரூம் முடியே இருக்க… ஏனோ கதவை தட்டி அவளிடம் பேச அவன் விரும்பவில்லை. எக்காரணத்தைக் கொண்டும் அவள் தானாக கதைவை திறக்கும் ரகம் இல்லை… தேவை என்றால் நாமாக தான் கதைவை உடைத்துக் கொண்டு அழையாக விருந்தாளியாக உள்ளே சென்றால் தான் உண்டு என்று அவளின் குணம் தாமதமாக புரிய… இந்த ஐந்து நாள் அவள் அடித்த கூத்திற்கு சரியான அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க எண்ணி நேரில் சந்திக்க அவள் கிளாஸிற்கே நேரில் சென்றான்.

இந்த வாரம் முழுவதும் அவளுக்கு இரண்டு மணிக்கே கிளாஸ் முடிந்துவிடும் என்று அறிந்தவனுக்கு எப்படி அவளால் ஓடி ஒளிய முடிந்தது என்று புரிய சிரித்தபடி அவளுடைய வரவிற்காக படிக்கட்டின் வாயிலிலேயே காத்திருந்தான்.

சரியாக இரண்டு மணிக்கு கிளாஸ் முடிந்த அடுத்த வினாடி தன் சிலிங் பேகை மாட்டியபடி இவன் ஒருத்தன் இங்கே நிற்கிறான் என்று கவனிக்காது பறந்தடித்துக் கொண்டு படி இறக்கினாள்.

கிளாஸ் முடிந்தவுடன் ஓடி வரும் ரகம் மாதிரி இவளைப் பார்த்தால் தெரியவில்லை.. சொல்லப் போனால் தன் டவுட்களை எல்லாம் கேட்டு எல்லோரும் வெளியே சென்று பின் கடைசியாக வருவாள் என்று தான் அவன் எண்ணி இருந்தான். ஆனால் அவன் எண்ணத்தை தவிடு பொடியாக்கும் விதமாக அவள் அனைவரையும் முந்திக்கொண்டு முன்னால் வர.. அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தில் பார்த்தான்.

தன் மூன்று இன்ச் ஹில்சில் படி இறங்கி கண்ணை விட்டு மறையும் வரை ஆச்சரியமாக பார்த்தவனுக்கு தாமதமாக ஏன் இங்கே வந்து நிற்கிறோம் என்று புரிய மெல்ல புன்னகைத்தபடி சத்தம் வராது வுட்லேண்ட் ஷூவில் மெல்ல ஜாக் செய்து அவளை அடைத்தான் பத்ரி.

இந்த நேரத்தில் அவனை அங்கே எதிர்பார்த்திராத அலக்நந்தா அதிர்ந்து நிற்க...

“ஹாய் அலக்நந்தா” என்றான் பத்ரி சிரித்தபடி.

“உங்க கிளாஸ் வேற பில்டிங் ஆச்சே... இங்க என்ன பண்றீங்க பத்ரி?” என்றாள் அலக்நந்தா தன் அதிர்ச்சியிலிருந்து மீண்டு..

“உன்னை பார்க்கத் தான் வந்தேன்”

“ஏன்?”

“உன்னை பார்த்து ஐந்து நாளே ஆச்சே..”என்றான் சர்வசாதரனமாக பத்ரி.

“ஜஸ்ட் பார்க்கவா???” என்றாள் தாங்க முடியா ஆச்சரியத்துடன் அலக்நந்தா.

“அப் கோர்ஸ் ஜஸ்ட் உன்னை பார்க்கதான் வந்தேன். பின்ன கிளிப் பச்சை நிறத்தில் நீ போட்டிருக்கும் காஸ்லி ஷூ பிராண்ட்டான ஜிம்மி சூ(mmy choo) ஹில்சில் எப்படி தடுக்கி விழாமல் நடப்பதை பார்க்க வந்தேன்னு நினைத்தியா?? இல்லை… என்றும் மாறா நீல நிறத்தில் நீ போடும் டிசைனர் ஆர்யாவின் ஜீன்ஸை பார்க்க வந்தேன்னு நினைச்சியா இல்லை… டிசைனர் ஆர்யாவின் ஒய்ப் டிசைனர் சௌந்தர்யாவின் சிக்னேச்சர் கலக்ஷனான இந்த காட்டன் டி சர்ட்டில் இருக்கும் தி மோஸ்ட்..” என்றபடி அவன் தலையை சரித்து டி சர்டில் இருக்கும் வாசகத்தை படிக்க ஆரம்பிக்க..

“பத்ரி” என்றாள் அலக்நந்தா எச்சரிக்கும் குரலில்.

மெல்ல அவளின் டிசர்ட்டில் இருந்த பார்வையை விலக்கி அவளை நேருக்கு நேராக எதிர்க்கொள்ள… “இன்னும் ஒரு முறை என்னை அப்படி பார்த்தால் சாப்பாட்டில் பேதி மாத்திரையை கலந்து விடுவேன்” என்றாள் அலக்நந்தா அமைதியாக.

“வெல்… சாரி எல்லாம் கேட்க சொல்லாதே.. இட்ஸ் எ கய் திங்… நான் என்றைக்குமே என் தம்பி மாதிரி ராமனாக இருந்ததும் இல்லை.. அதுக்காக என் அண்ணன் மாதிரி கலியுக கர்ணனாக இருந்ததும் இல்லை.. இது இரண்டுக்கும் மத்தியில் ஒரு மீடியம் இருக்குன்னா அது நான்” என்றான் பத்ரி அவளுடன் புல் தரையில் நடந்தபடி.

“எனக்கு உங்களையே தெரியாது..” என்றாள் எனக்கு யாரையும் தெரிந்துக் கொள்ள வேண்டாம் என்ற குரலில்.

“என்னை மட்டும் இல்ல.. என் குடும்பத்தையும்… சித்தோட குடும்பத்தையும் கூட தெரிந்து கொள்ள நேரம் வந்தாச்சு அலக்நந்தா…” என்று பிடிவாதமாக கூறினான்.

எதுவும் வாயை திறந்து கேட்காமல் அமைதியாக நடந்தவள் தலையை மட்டும் நிமிர்த்தி ஏன் என்பது போல் ஒரு பார்வை பார்த்தாள்.

“ஏன்னா… இந்த செம்மில் எடுக்க வேண்டிய லீவ் எல்லாத்தையும் நாங்க

எடுத்து முடித்துவிட்டதால் இனி அவங்கதான் இங்கே வந்து பார்க்கனும்…”

“ஐந்து மாதம் உங்க வீட்டு ஆட்களை பார்க்காமல் இருக்க முடியாது என்றா சொல்றிங்க பத்ரி?” என்று கேட்ட பொழுது அதில் பொங்கி வழிந்த துயரம் இரண்டு அடி தூரத்தில் இருக்கும் அவனை தாக்கியது.

தன் வீட்டு ஆட்களை எல்லாம் பார்க்க வேண்டி வருமே என்று இத்தனை வருத்தப்படுகிறாளா இல்லை… தன்னை காண யாரும் வர மாட்டார்கள் என்ற வருத்ததில் அவளின் சோகம் பொங்கி வழிகிறதா என்று புரியா விட்டாலும் கூட அவளின் சோகம் இவனை பாதித்தது.

“ம்ம்.. இவ்வளவு செலவு பண்ணி ஏன் என்னை இங்கே படிக்க வைக்கறாங்கன்னு நினைக்கிற அலக்நந்தா? என்னால் மட்டும் இல்ல என் வீட்டு ஆட்களாலும் என்னை பார்க்காமல் இருக்க முடியாது.. அது அவங்களுக்கு தெரியும். அதை விட என்னால் கான்கிரிட் ஜங்கலான சிடிக்குள்ளே இருந்தால் மூச்சு முட்டியே செய்து விடுவேன்னு தெரியும்… அதனால் தான் என் சொந்த ஊர் மாதிரியே இருக்கும் இயற்கை எழில் கொஞ்சம் இங்கே பேக் பண்ணி அனுப்பிய… என் அண்ணன் ஆர்யா சச்சிதேவ் டிசைன் செய்த ஜீன்ஸை தான் நீ போட்டிருக்க…” என்று முடிக்கும் முன் சடன் பிரேக் போட்டு நின்றாள் அலக்நந்தா.

“நீங்க.. நீங்க.. அந்த சச்சிதேவ் குரூப்ஸ்…” என்று அவள் அவனை பார்த்து தடுமாற.. அவள் விழிகளில் நவரசம் வந்து போனது.

கண்ணாடி வழியே அந்த கண்ணில் தெரிந்த பாவத்தை ரசித்தப்படி “ம்ம்.. ஆர்யா சச்சிதேவோட தம்பி பத்ரி சச்சிதேவ்… என் அண்ணன் இல்ல அண்ணியை உனக்கு தெரியுமா?” என்றான் ஏதோ தோன்ற.

“ம்கூம்” என்றாள் உள்ளடக்கிய குரலில்.

“அப்புறம் எப்படி சிக்னேச்சர் கலக்ஷன் டீ சர்ட் கிடைத்தது..? இது ஆன் லைனில் எல்லாம் கிடைக்காதே…” என்று யோசனையுடன் இழுக்க..

“என் அக்கா வாங்கி கொடுத்தாள்” என்றாள் சற்றே தடுமாற்றமாய் சுத்தமாக வெளியே வராத குரலில் அலக்நந்தா.

“ஓகே..” என்றபடி தலையை ஆட்டியவன்.. “நான் எதுக்கு உன்னை பார்க்க வந்தேன்னா… நாளைக்கு சித்தோட அண்ணன் ஊரில் இருந்து கிளம்பி வருகிறார். உனக்கு எதாவது வாங்கி வர வேண்டுமா? தயங்காமல் எதுவானாலும் கேட்கலாம்…” என்று கூறி பேச்சை மாற்றினான். ஏனோ அவன் வீட்டை பற்றி பேச… பேச.. அவள் முகம் வரண்டுக்கொண்டே போவதையும்.. ஏற்கனவே மெதுவாக பேசும் அவள் குரல் இப்போது தட்டு தடுமாறி கிசுகிசுபாக வருதையும் கண்டவனுக்கு மனம் பாரமாகிக்கொண்டே போனது.

“எதுவும் வேண்டாம்”

இந்த பதில் அவன் எதிர் பார்த்தது தான் என்பதால் “சரி.. அப்புறம் நாளைக்கு எதுவும் சமைக்காதே.. அவங்க அண்ணன் வரும் போது அவங்க குக் நமக்காக செய்த ஹைதராபாத் பிரியாணி எடுத்து வருவார்… உனக்காக மசாலா, காரம் எல்லாம் கம்மியா போட்டு தனியா செய்ய சொல்லி சித் முன்னாடியே சொல்லிட்டான்” என்று பத்ரி கூறியபடியே செல்ல.

அப்படியே திடுக்கிட்டு நின்றவளுக்கு… அதிர்ச்சியில் மூர்ச்சையாகி விழுபவள் போல் லேசாக கால்கள் தள்ளாட…

அவசரமாக “ஏய் என்னாச்சு அலக்நந்தா?” என்றபடி அவள் கையை பிடிக்க போக..

“வேண்டாம்” என்பது போல் இரண்டு அடி தள்ளாட்டமாகவே பின் நகர்ந்தவள் அப்படியே அந்த புல் தரையில் அமர்ந்தாள்.

“அப்படி உட்காரு நான் தண்ணி எடுத்து வரேன்” என்று கூறிவிட்டு பத்ரி நகர..

“வேண்டாம் பத்ரி.. ஐயம் பைன்” என்று பலவீனமாக ஒலித்தது அவள் குரல்.

அவளின் பதிலால் திருப்தி அடையாதவன் “பார்த்தா அப்படி தெரியலையே” என்றபடி இழுக்க

மெல்ல அதிர்ச்சி நீங்க பெற்றவளாக… “ஒன்றும் இல்லை” என்றாள் அலக்நந்தா.

“ஒ.கே” என்றபடி அவனும் அவள் அருகில் அமர… “என்னாச்சு?” என்றான் கரிசனமாக.

“வெயில்” என்றாள் இல்லாத வெயிலை காரணம் காட்டி.

அந்த பதிலே அவள் சொல்ல விரும்பாத தன்மையை வெளிப்படுத்த.. சரி அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மாணித்தவன்.. “உன் போன் நம்பர் கொடு அலக்நந்தா.. அது இருந்திருந்தால் இன்னைக்கு என் கிளாஸை பங் பண்ணிட்டு வந்திருக்க மாட்டேன்” என்றான் அதிசிரத்தையாக.

ஆழ்ந்த மூச்சை விட்டவள்… “எதுக்கு?” என்றாள் அவனை நேருக்கு நேராக பார்த்து.

“என்ன எதுக்கு? நீ என் ரூம் மேட்… எதாவது மேசெஜ் சொல்லனுன்னா..”

“நேரா பார்த்து சொல்லுங்க..” என்றாள் அவன் பேசி முடிக்க இடமே கொடுக்காமல்.

“ம்ம்.. அதாவது… நீ நம்பர் தரமாட்ட.. அது தான் இப்படி சொல்ற இல்ல?” என்றான் பத்ரி நேரடியாக.

“ம்ம்..” என்று தலையை மட்டும் ஆட்டியபடி.. கீழே இருந்த புல்லை வருடிக் கொடுத்தவள்.

“ஏன்… அலக்நந்தா?” என்றான் குனிந்த தலையை பார்த்தபடி பத்ரி.

எதுவும் பதில் சொல்லாமல் அவள் மௌனமாக தலை குனிந்த படியே அமர்ந்திருக்க…

ஒரு நிமிடம் அவளையே வெறித்துப் பார்த்தவன்.. கதவை உடைக்கும் நேரம் என்று உள்ளுணர்வு கட்டியம் கூற…

“ஏதோ ரூம் மேட்டாச்சேன்னு உன் நம்பரை தான்னு மரியாதையா கேட்டேன்.. நீ தரலைன்னா என்ன நானா தெரிந்துக் கொள்கிறேன்” என்றான் பகட்டு இருமாப்புடன்.

விசுக்கென்று தலையை நிமிர்த்தியவள் “அது முடியாது” என்றாள் திட்டவட்டமாக.

“ஏன் முடியாது? இப்ப உன் கிளாஸை கண்டுபிடித்து வர முடிந்த எனக்கு உன் நம்பரை கண்டுபிடிக்க முடியாது என்றா நினைக்கிறாய்?” என்றான் சச்சிதேவிற்கே உண்டான தெனாவட்டில்.

“ம்கூம் முடியாது.. நிச்சயம் முடியாது” என்றாள் ஆணித் தரமாக.

“அப்படியா? உன் போன் நம்பரை கண்டு பிடித்துவிட்டால்.. இப்ப எதுக்காக இப்படி அதிர்ந்து போய் கீழே உட்கார்ந்தன்னு எனக்கு சொல்லனும்.. அது தான் பெட்...” என்றான் அவள் கண்ணோடு கண் நோக்கி.

அலட்சியமாக அவனைப் பார்த்தவள்.. “நிச்சயமா சொல்றேன் நீங்க என் நம்பரை ஒரு வாரத்தில் கண்டு பிடிக்கும் பட்சத்தில்” என்றாள்.

“ஒரு வாரம் எல்லாம் வேண்டாம்... அது என் சச்சிதேவ் ப்ளட்டிற்கு ரொம்ப அசிங்கம்... எண்ணி நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் உனக்கு நான் போன் பண்றேன் அலக்நந்தா..” என்று சொடுக்கு போட்டப்படியே சவடால் விட்டான் பத்ரி.

“பத்ரி.. இந்த காலேஜிற்கு நான் வந்ததே இங்கே இருக்கும் ப்ரைவசிக்காக தான் தெரியுமா? இந்த உலகத்தில் மொத்தம் மூன்று பேருக்கு மட்டுமே என் நம்பர் தெரியும்... அது யார் யாருன்னு கூட உனக்கு தெரியாது என்பதால்.. நீங்க அவங்க நெற்றிப் பொட்டில் கன் வைத்து கூட என் நம்பரை அடுத்த நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் கண்டுபிடிக்க முடியாது.. சோ நீங்க தோற்பது உறுதி... நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் அழைப்பு வரவில்லை என்றால் இனி என்னை இந்த மாதிரி டார்ச்சர் பண்ணாமல் ஒதுங்கி விடனும்.. ஓ.கே வா?” என்றாள் அவனை பரிதாபமாக பார்த்தபடி.

“பார்க்கலாம்.. பார்க்கலாம்” என்று மொழிந்தபடி எழுந்த பத்ரி.. “வா ரூமிற்கு போகலாம்”

“இல்லை.. நான் லைப்ரரி போகனும்..”.

“ஓ.கே.. நீ லைப்ரரி போ நான் உன் நம்பரை கண்டுபிடிக்க போகிறேன்” என்று அவன் சர்வ சாதாரணமாக கூறினான்.

“ஆல் தி பெஸ்ட் பத்ரி” என்று முதல்முறையாக அவனைப் பார்த்து உளமாற புன்னகைத்தாள் அலக்நந்தா.

அந்த மலர்ந்த விழிகளில் தெரிந்த ஆனந்தம்.. உதட்டில் தோன்றிய அந்த சின்ன புன்னகையிலிருந்த வசீகரம்… மென் குரலில் இருந்த உண்மையும் அவனை நேராக தாக்கி.. அவனை மாம்பழத்தில் இருக்கு வண்டாக குடைந்தது கூறுப்போட்டது.

இதுவரை இப்படி எல்லாம் எந்த பெண்ணிடமும் ஒரு ஈர்ப்பை உணர்ந்ததே இல்லை என்று சொன்னால் அது பச்சை பொய்… பெண்களிடம் எதுவுமே தோன்றாமல் இருக்க அவன் என்ன சன்னியாசியா? ஆனால் அவை எல்லாம் கிணற்றில் எறியப்படும் ஒரு சின்ன கல் மாதிரி தோன்றிய சலனம் நொடிகளில் மறைந்துவிடும்… ஆனால் இவளிடம் மட்டும் ஏனோ அந்த சின்ன கல்லின் அதிர்வு கூட அவனுள் அலையலையாய் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தி திக்கு முக்காட செய்தது.

இதில் வேடிக்கை விநோதம் என்னவென்றால் அந்த சலனம் அவளை பார்க்கும் போதும் மட்டுமல்லாது அவளை நினைக்கும் போதே தன் உள்ளத்தில்… பிரளயம் பிரவாகம் எடுத்து ஓட… அதை ரசிக்க செய்ததுதான் அவனுக்கே புரியாத புதிராக மண்டையை குடைந்தது.

அன்று இரவு பதினோரு ஐம்பதிற்கு வாட்ஸ் அப்பில் அலக்நந்தாவின் போன் நம்பர் அவனுக்கு வந்து சேர… அவன் அதை புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே நேரம் காலம் தெரியாமல் கார்த்திக் அழைக்க பெருமூச்சுடன் போனை காதில் வைத்தான் பத்ரி.

இவன் ஹலோ சொல்லும் முன் முந்திக் கொண்ட கார்த்திக்.. “அப்பா வந்து

சச்சிதேவ் பெயரை பிசினஸ் பேஜில் வரவழைத்தார்.. ஆர்யா அதே சச்சிதேவ் பெயரை எண்டர்டெயின்மென்ட் பேஜில் போட்டான். அவர்களை எல்லாம் தாண்டி நீ சச்சிதேவ் பெயரை ப்ரண்ட் பேஜில் கவர் ஸ்டோரியா போட எல்லா ஏற்பாட்டையும் பண்ணி விட்ட போல…" என்று எடுத்த எடுப்பில் கொந்தளித்தான்.

"என்னடா சொல்ற… நான் என்ன பண்ணேன்?" என்றான் பத்ரி ஒன்றும் புரியாமல்.

"இப்பதான் அவள் போன் பண்ணினாள்… முன்ஜாமின் எடுத்து வைக்க சொல்லி.." என்று கிட்டதட்ட குரைத்தான் கார்த்திக்.

இன்று.....

"நான்… நான்… முன்பே சொன்னேனே அலக்நந்தா.. பத்ரியை நான் காதலிக்கிறேன்… அவரை தவிர இந்த காலேஜில் யாரை வேண்டுமானாலும் லவ் பண்ணிக்கோ.. எனக்கு பத்ரியை மட்டும் விட்டுட்டுன்னு சொன்னனே…" என்றாள் கட்டுக்கிற்கு அடக்காத சோகத்துடன்.. கண்ணீர் மல்க பாயல் கேட்க..

அதில் குற்றம் சாட்டும் தொனியோ இல்லை வெறுப்போ இருந்திருந்தால் அலக்நந்தாவின் மனம் அதை ஏற்றுக் கொண்டிருக்கும்… ஆனால் பாயலின் குரலிலோ பொங்கி வழிந்த சோகமும்.. சொல்லோன்னாதா வருத்தமே பிரதானமாக இருக்க… இப்படி பட்ட ஒரு நல்ல நட்பை ஏமாற்றி விட்டோமே என்ற எண்ணம் அவளை பீடிக்க… மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் வெளிப்பட்டது அலக்நந்தாவிடமிருந்து!!!

"காதலை நான் தேர்ந்தெடுக்கவில்லை.. அதுதான் என்னை தேர்ந்தெடுத்தது" என்று தொண்டை அடைக்க மொழிந்தவள்.. "டிரஸ்ட் மீ… வாழ்க்கையில் நான் யாரையும் நம்பிக்கை துரோகம் பண்ண வேண்டும் என்று ஒருநாளும் நினைத்ததில்லை.. ஆனால் அது என்னமோ தெரியவில்லை.. என்னை நம்பியவர்களுக்கு அதை தான் நான் கடந்து நான்கு மாதமாக பரிசாக கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்… என்றாவது ஒருநாள் என்னை மன்னிக்க முடியும் என்று நினைத்தால் அந்த நாளுக்காக நான் காத்திருப்பேன் பாயல்… சித்திற்கு பிறகு நான் ப்ரெண்டாக கருதும் ஒரு நபர்

நீதான்" என்றாள் உயிரை உருக்கும் குரலில்.

விரத்தியாக ஒரு சிரிப்பை வெளியே விட்ட பாயல்.. "பத்ரியை விட்டு விட்டாயே அலக்நந்தா.."

"பத்ரி என் ப்ரெண்டு மட்டும் இல்லை.. பாயல் என் வாழ்க்கையின் திருப்புமுனை… ஆனால் அந்த திருப்பு முனை நல்லதா கெட்டதான்னு இன்னும் தெரியலை பாயல்" என்றாள் அலக்நந்தா சோகமே வடிவாய்.

"ம்ம்… யாரை காதலிக்கறது என்பது வேணுன்னா நம் கையில் இல்லாமல் இருக்கலாம் அலக்நந்தா.. ஆனா காதலித்தவனையே கை பிடித்தோமா… என்பதை விட அந்த காதல் குறையாமல் வாழ்க்கை முழுக்க வாழ்ந்தோமா என்பது நம் கையில் தான் இருக்கு.." என்று அனாயாசமாக பாயல் ஒரு குண்டை தூக்கி போட… அண்ட சாராசரமே நடுங்கியது அவளுக்கு.

"பாயல்… கடந்த நான்கு மாதத்தில் என்னை ஒருமுறையாவது ப்ரெண்டா நினைத்திருந்தேன்னா தயவுசெய்து பத்ரியிடம் இன்றைக்கு இதைப் பற்றி எதுவும் கேட்காதே…" என்றபோது அவளின் குரலில் இருந்த ஆற்றாமை பாயலை வெகுவாக தாக்க..

"அலக்நந்தா நான் ஓட்டை வாயா இருக்கலாம்.. அதுக்காக உன் முன்னாலே காதலைப் பற்றி பத்ரியிடம் பேசும் அளவு நான் முட்டாள் இல்லை…." என்று லேசாக கடிந்தபடி மொழிந்தவள் "போகலாம் வா" என்றாள் மணியை காட்டி.

உள்ளுக்குள்ளே மூன்றாம் உலக யுத்தம் நடந்துக் கொண்டிருக்க.. எதுவும் பேசாது அமைதியாக பத்ரியின் வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

தன் இடம் வந்தவுடன் பாயல் திரும்பி சென்று விட.. எப்பொழுதும் இரண்டு அடி தூரத்தில் இடை வெளியில் செல்லபவள் இன்று அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த அன்பை எல்லாம் அவனிடம் தெரிவிக்கும் நோக்கில் அவனை அப்படியே இடையோடு கட்டிப்பிடித்து அவன் முதுகில் முகம் புதைத்தாள் அலக்நந்தா…

Part 10

மூன்று மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு….

“இப்பதான் அவள் போன் பண்ணினாள்… முன்ஜாமீன் எடுத்து வைக்கச் சொல்லி..” என்று கிட்டதட்ட குரைத்தான் கார்த்திக்.

அந்த “அவள்” யார் என்று கேட்காமலே அது நிரல்யா என்று அவன் வீட்டில் இருக்கும் அனைவருக்கும் தெரியும். இவன் இப்படி அழைப்பது இன்று… நேற்று… என்று இல்லை… அவனுடைய பதினாறாவது வயதில் இருந்து நிரல்யாவை “அவள்” என்று அழுத்தம் திருத்தமாக ஒருவித பொசசிவ்நசுடன் சொல்லும் விதத்திலேயே கார்த்திக் யாரை கூறிப்பிடுகிறான் புரிந்துவிடும்.

“முன்ஜாமீன்… பின்ஜாமீன்… எடுக்கும் வேலையை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் இப்ப எதுக்கு அர்த்த ராத்திரியில் நிரல்யாவிற்கு போன் பண்ணின??" என்று கறாராக கேட்டான் பத்ரி.

“எவ்வளவு பெரிய விஷயத்தைப் பற்றி இங்க நான் கேட்டுக் கொண்டு இருக்கேன்… அதுக்கு பதில் சொல்லாமல்… அவளிடம் நான் போனில் பேசியது மட்டும் தான் உன் மண்டையில் ஏறுச்சா??” என்று வெகு கடுப்பாக கேட்டான் கார்த்திக்.

“கார்த்திக்… லேட் நைட்டில் நிரல்யாவிற்கு போன் பண்ணாதேன்னு ஏற்கனவே நான் உன்னிடம் சொல்லி இருக்கேன்.. அப்புறம்…” என்று அண்ணன்களுக்கே உரிய அந்த அதிகார தோரனையில் பத்ரி எதையோ பேச ஆரம்பிக்க..

“போதும் டா அண்ணா… உன் புராணத்தை ஆரம்பிக்காதே… நான் என்ன சஞ்ஜய் ராமசாமியா எல்லாத்தையும் மறந்து தொலைக்க???? நீ சொன்னது எல்லாம் அக்ஷரம் விடாமல் திவ்யமா நியாபகத்தில் இருக்கு… என்னை தான் போன் பண்ண வேண்டான்னு சொன்னியே தவிர… அவள் நடுராத்திரி போன் பண்ணா அட்டன் பண்ணாதேன்னு சொல்லலை இல்ல?!?” என்று எரிந்து விழுந்தான் கார்த்திக்.

“என்ன… நிரல்யாவே உனக்கு போன் பண்ணினாளா?” என்றான் பத்ரி நம்ப

மாட்டாத குரலில்.

“நம்ப முடியலை இல்லை.. என்னாலயும் தான் நம்ப முடியலை… அவள் உங்களை எல்லாம் விட்டுட்டு எனக்கு போன் பண்ணும் போதே ஏதோ பெரிய பிரச்சனைன்னு புரிந்துவிட்டது… நீ பண்ணி இருக்கும் வேலைக்கு முன்ஜாமீன்… பின்ஜாமீன்.. மட்டும் எடுத்தா போதாது டா சைடு ஜாமீன்… கிராஸ் ஜாமீன் கூட எடுக்கனும் போல… ஏதோ நல்ல காலம் அந்த புண்ணியவதி எனக்கு போன் பண்ணி விஷயத்தை தெரிவித்தாள். எப்பவும் போல பாட்டியிடமோ இல்லை அம்மாவிடமோ போன் பண்ணி இதை சொல்லி இருந்தான்னு வை… உனக்கு டன்டனக்க.. னக்க.. னக்க தான்டி ” என்று கெக்களிக் கொட்டினான் கார்த்திக்.

நல்லகாலம் அவள் கார்த்திக்கிடம் போன் பண்ணினாள் என்று நிஜமாகவே நிம்மதி பெருமூச்சுடன் “டேய் நிரல்யா பயப்படும் அளவு ஒன்னும் இல்லைடா..”

“என்னது ஒன்னும் இல்லையா…” என்று மகா எரிச்சலுடன் மொழிந்தவன் பட்டென்று ப்ரென்சிற்கு தாவி.. அவர்களின் அண்ணன் ஆர்யா சொல்லிக் கொடுத்த நாலு “நல்ல ப்ரெண்ச்” வார்த்தையை அடுக்க…

“நான் ஊரில் இல்லாத போதும்… நல்லா ப்ரெண்ச் பாடம் படிக்கிறன்னு தெரியுது…. விட்டா நிரல்யாவிற்கு முன்னாடியே நீ பி.ஹச்.டி வாங்கிடுவ போல” சிரித்தபடி கேட்டான் பத்ரி.

“டேய் சும்மா அவளைப் பற்றி பேசி என்னை கடுப்பேத்தாத… ஏற்கனவே நான் அவள் மேல் கொலை வெறியில் இருக்கேன்!!!” என்று பேச்சில் மட்டும் இல்லை குரலிலும் அதே கடுமை குறையாமல் இருந்தது.

“எதுக்கு??? தினமும் நிரல்யா போன் பண்ணி பேசலைன்னா??” என்றான் பத்ரி குரலில் பொங்கி வழிந்த நகையுடன்.

“நேரில் பார்த்து ஒரு வார்த்தை பேசினாளே இரண்டு இன்ச் குறைந்திட மாட்டாள்??? இதில் போன் பண்ணி வேற பேசனுமா?? அவள் கடைசியா எனக்கு போன் பண்ணது நான்கு மாசம் முந்தி பிறந்த நாள் வாழ்த்து சொல்ல… ஏன் இப்ப கூட வளைகாப்புக்கு வந்தவள் யாரோ மூன்றாவது

மனிதனை பார்த்து பேசற மாதிரி பேசிவிட்டு.. போறா" என்றான் எரிச்சலாக கார்த்திக்.

அவள் பேசாததற்கு இப்படி கொந்தளிக்கும் இதே கார்த்திக்கும் தானாக முன் சென்று எதுவும் பேசி இருக்க மாட்டான் என்று பத்ரிக்கு நன்றாக தெரியும்... அதைவிட அவன் ஆச்சரியப்படும் விஷயம் என்னவென்றால் கார்த்திக்கும் நிரல்யாவும் வாய் விட்டு பேசியதை கூட அவன் இதுநாள் வரை பார்த்ததில்லை... ஆனால் இருவரும் மௌன மொழியிலே பேசிக் கொள் கூட பார்க்க வேண்டும் அல்லவா?? இவர்கள் மத்தியில் அப்படி பார்வை பரிமாற்றம் கூட இருக்காது.. ஆனாலும் பேசிக்கொள்வது போல் அவனுக்கு மட்டும் தோன்றும்.... அது எப்படி சாத்தியம் என்று கூட இதுநாள் வரை புரியவில்லை!!!

இதில் வேடிக்கை என்ன வென்றால் இந்த சச்சிதேவ் குடும்பத்தில் தான் மட்டும் நார்மலாக இருப்பதாக நினைத்துக் கொண்டு கார்த்திக் திரிய... உண்மையில் சச்சிதேவ் குடும்பத்திலேயே அவன் தான் மிகவும் விசித்திரமானவன் என்று அவனுக்கு இதுவரை புரியவில்லை அதை சொன்னாலும் நம்ப மாட்டான் என்பதை பத்ரி அறிவான்.

தொன்னூறு என்ன? தொன்னூற்றி ஒன்பது சதவீதம் மனிதர்களை சரியாக கணிக்கும் பத்ரி முதன் முதலில் கோட்டை விட்டது தன் தம்பி விஷயத்தில் தான் என்று வெளியே சொன்னால் வெட்க கேடு...

கார்த்திக் தன்னுடைய பதினாறு வயதில் பத்ரியிடம் "நிரல்யாவை ரொம்ப பிடிக்கும்" என்று சொன்னவன்... பதினெட்டாவது வயதில் அவளைக் காதலிப்பதாகவும், அவளை தான் கல்யாணம் பண்ணிக்க போவதாகவும் இவனிடம் சொல்ல..

பதினெட்டு வயதில் கல்யாணமா?? இது சச்சிதேவிற்கே ரொம்பவே அதிகம் என்று தோன்ற... அரண்டு போய்.. "மை காட்!!! கார்த்திக்... அவளுக்கு என்ன வயசு?? உனக்கு என்ன வயசு?? டீன் ஏஜில் காதலை பற்றி பேசறதே அதிகம்... இதில் கல்யாணம் வரைக்கும் ஏன்டா போற?? ஆமாம் நிரல்யா உன்னை காதலிப்பதா எப்படா சொன்னா?" என்று பத்ரி அடுக்கடுக்காக கேள்விகளை தொடுக்க...

அதற்கு எதுவுமே பதில் சொல்லாத கார்த்திக் இவனை ஒரு மார்க்கமாக பார்த்துவிட்டு அங்கிருந்து நகர்ந்து போக... கடைசியில் கார்த்திக் சொன்னது போலவே அதே நிரல்யாவை ஒரு அசாதாரண சூழலில் மணமுடித்தான்.

“அதுக்கு தான்... நிரல்யாவை பழிவாங்க தான்... ஷங்கி செய்த அந்த எக்லேர்ஸ் ரெட் வெல்ட் கேக்கை சாப்பிட சொல்லி கொடுத்த போல...” என்றான் பத்ரி சிரிப்புடனே சூழ்நிலையை சரியாக்கும் பொருட்டு.

“பின்ன யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்னு இல்லாவிட்டாலும்... குறைந்த பட்சம்.. என் சகதர்ம பத்தினின்னு கூட இல்லன்னா எப்படி??? நான் சாப்பிட கொடுத்தது கூட பெரிய விஷயம் இல்லை டா... அது யார் செய்ததுன்னு தெரிந்து சாப்பிட்டா பாரு...?!?” என்று கார்த்திக் சிரிப்புடன் கூற..

பத்ரிக்கு தெரியும் அது ஷங்கி செய்தது என்று தெரிந்தும் அவள் சாப்பிட்டாள் என்றால் அது ஷங்கிக்காக நிச்சயம் இருக்காது கார்த்திக்காக தான் என்பது இவனுடைய கணிப்பு.

“டேய் டாபிக்கை மாற்றியது போதும்.. ஏதோ உங்க காலேஜ் வந்த சீஃப் கெஸ்ட்டை அங்க பிரதட்ஷனம் செய்ய வைச்சயே.. அதில் ஒரு நியாயம் இருந்தது... உன் ரூமிற்கு வந்த பசங்களை எல்லாம் தலைதெரிக்க ரூமை விட்டு ஓட வைச்ச அதில் ஒரு தர்மம் இருந்தது.. ஸ்வீமிங் பூலில் ஆளுங்க அதிகமாக இருக்காங்க.. நீ டைவ் அடிக்க இடமே இல்லைன்னு.. பச்சை பாம்பை தண்ணீல போட்டு அடுத்த ஒரு மாசத்திற்கு யாரையும் ஸ்விமிங் பூல் பக்கமே வரவிடாம செய்தியே அதில் உன்னுடைய பேஷன் தெரிந்தது... ஆனா என்ன கரும குப்பைக்காகடா ஒரு போன் நம்பரை எடுக்க உன் காலேஜ் டாக்குமென்ஸை ஹக்(HACK) பண்ண சொல்லுவ?!? இப்ப நீயா உன் வாயை திறந்து ஏன் ஹக்(HACK) பண்ணன்னு சொல்றியா... இல்ல என் செல்லத்தை எடுத்துக் கொண்டு... ஹனிமூன் கொண்டாட அங்கே விடியற்காலையில் வரவா... எப்படி வசதி??” என்று கறாராக கேட்டான் கார்த்திக்.

கார்த்திக் “செல்லம்” என்று சொன்னவுடன் அது நிரல்யாவை தான் என்று யூகித்தால் இது சச்சிதேவ்வை பற்றி சரியா தெரியாதவர்களாவே மட்டுமே இருக்க முடியும். அவன் “செல்லம்” என்று சொன்னது அவனுடைய புத்தம் புது ஹெலிகாப்டரை தான் சொல்கிறான்!!!

யூ.எஸ் போகும் வரை அண்ணன்களை போல காரிலோ, பைக்கிலோ பெரிய ஈடுபாடு காட்டாத கார்த்திக் அங்கே சென்று பொழுது போக ஸ்போட்ஸ் பைலட் சர்டிபிகேட்டில்(SPORT PILOT CERTIFICATE) கோர்ஸில் சேர அன்று ஆரம்பித்த விமானம் ஓட்டுதலின் மேலான காதல்... அவனே தனியாக விமானம் ஓட்டும் அளவு வளர்ந்து தனக்கு என்று ஒரு ஹெலிகாப்டரையும் வாங்கும் வரை அது வந்து இருக்கிறது!!!

இனி எப்படியும் தப்பிக்க முடியாது என்று உணர்ந்தவன் "டேய்.. அது வேற ஒன்னும் இல்லை டா... ஒரு பெட் வைத்தேன்.." என்று அவன் சொல்லி முடிக்கும் முன்..

இத்தனை நேரம் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தவன் அந்த வார்த்தையை கேட்டது தான் தாமதம்... "எந்த மடையன் சச்சிதேவிற்கே பெட் கட்டறது?? காட்!!! வெறும் போன் நம்பரோட ஏன் விட்ட? எப்படியும் முன்ஜாமீன் எடுக்க போறதுன்னு ஆகி போச்சு.. அது போன் வெறும் போன் நம்பருக்கு இருந்தா ரொம்ப அசிங்கம்... இப்ப சொல்லு அவளிடம் அந்த ஆளோட மொத்த டேட்டாவையும் உருவ சொல்லிடறேன்.." என்று பேசி தான் ஒரு அக்மார்க் சச்சிதேவ் இனம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான் கார்த்திக்.

"அது எல்லாம் வேண்டாம்.. முடிந்தவரை இதை வீட்டில் யாரிடம் சொல்லாது இரு.. மற்றதை நான் பார்த்துக்கிறேன்... அப்பறம் முன்ஜாமீன் வாங்கும் அளவு அந்த ஹக்கிங் ஒரு பெரிய விஷயமே இல்லை.."

"ம்ம் சொல்ல மாட்ட நீ.. ஆமாம் அது யாரோட போன் நம்பர்டா அது?"

"என் புது ரூம் மேட்.."

"ஓ!! அந்த அலக்ஸ் என்கிற அலக்நந்தாவா? கேட்கவே மறந்து போனேன்.. இப்பயாவது முகத்தை பார்த்தியா? எப்படி இருக்காங்க?" என்றான் கார்த்திக் பரபரப்பாக.

"உண்மையை சொல்லனுன்னா... ரோட்டில் என்னை கடந்து போன முகத்தை பார்த்து இது தான் அலக்நந்தாவான்னு கண்டுபிடிக்க முடியாது...

ஆனா… அவள் கட் பண்ணி இருக்கும் ஹேர் ஸ்டைலை வைத்து நாலு கிலோ மீட்டர் தூரத்தில் அதோ அலக்நந்தான்னு வராளேன்னு சொல்ல முடியும்" என்று பத்ரி ஒரு புது விளக்கம் கொடுக்க.

"ம்கூம்.. ஏன்டா இப்படி கொல்ற? ஏற்கனவே தலைமறைவு வாழ்க்கைதான் நான் இங்கே வாழ்ந்துட்டு இருக்கேன்.. இதில் நீ வேற இப்படி பேசி என்னை நிஜமாகவே சன்னியாசம் வாங்க வைத்திடாதே…"

"என்னது தலைமறைவு வாழ்க்கையா? ஏன்டா என்னாச்சு?? பாட்டி தான் இப்ப எல்லாம் சௌவியோட பிசியா இருப்பதால் சமாளிக்க முடியாத பிரச்சனை ஒன்னும் இருக்காதே…"

"அப்படின்னு ஒரு வதந்தியை பரப்பி விட்டு இருக்கு டா… அந்த நாட் நாட் செவன்… கஷாயம் வைக்கனும்.. என்னை காஷாயம் கட்டாம விடாது போல அந்த கிழவி.. இதை பறித்து பறிச்சிட்டு வா.. அதை பறிச்சிட்டு வான்னு.. ஒரே டார்ச்சர். போன வாரம் அப்படிதான் காலையில் ஜாகிங் போன என்னை கீழாநெல்லி எடுத்துக்கிட்டு வான்னு சொல்ல… ஏன் பாட்டி கீழ கிடக்கற நெல்லிக்காய எடுக்கனும்.. அதுதான் மரத்தில் அவ்வளவு நெல்லிக்காய் இருக்கேன்னு அப்புராணி சப்புராணியா ஒரு வார்த்தை தான்டா சொன்னேன்… அதுக்கு அங்க ருத்ர தாண்டவம் ஆடி இருந்தா கூட எனக்கு மனசு சமாதானம் ஆகி இருக்கும்டா.. ஆனா அவங்க தரதரன்னு என்னை தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போய்… அருகம்புல்லில் ஆரம்பித்து இருந்து கோரைப் புல் வரை காட்டி… பாடம் நடத்தினாங்க பாரு… அன்றிலிருந்து நான் சொந்த வீட்டிலிலேயேதலைமறைவு வாழ்க்கை வாழ்ந்துட்டு இருக்கேன்.." என்று பெருமூச்சு விட்டான் கார்த்திக்.

அத்தனை நேரம் அமைதியாக வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்த சிரிப்பை இனியும் அடக்க முடியாது வாய்விட்டு சிரித்தான் பத்ரி.

"என்ஜாய்டா சகோதரா.. நீ யூ.எஸ்.சில் ஜாலியா ஊர் சுத்திட்டு இருக்கும் போது நானும் இப்படிதான்டா அவஸ்தைப் பட்டேன்.. இப்ப உன் முறை" என்று மேலும் பொங்கி சிரித்தபடி உரைத்தான் பத்ரி.

"சரி.. சரி உன்னிடம் வெட்டியா பேச நேரம் இல்லை.. நாளைக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு. காலையில் சீக்கிரமா போகனும் இப்ப

தூங்கினாதான் காலையில் அந்த நாட் நாட் செவன் கண்ணில் படாமல் எழுந்திருக்க முடியும். குட் நைட்" என்று மொழிந்து விட்டு போனை வைக்க நிம்மதி பெருமூச்சு விட்டான் பத்ரி.

அவளுடைய நம்பருக்கு இப்பவே கூப்பிடலாமா என்று பரபரப்பாக நேரத்தை பார்க்க ஒன்றை தாண்டி இருக்க... யோசனையுடன் தூரத்தில் கண்ணிற்கு தெரியாத மலையை வெறித்தவன் அப்படியே தூங்கியும் போனான்.

அவன் கெடு விதித்த நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் நாற்பத்தி ஏழு மணி நேரம் வரை அவள் கண்ணில் படாமல் ஆட்டம் காட்டி விட்டு சரியாக மதியம் ஒரு மணிக்கு

அவள் இருக்கும் லைப்ரரிக்கு சென்று அவள் எதிரிலேயே அமர்ந்து லேசாக கால் ஆட்டியப்படி அவளை வைத்த கண் வாங்காமல் டையல் செய்யதான்.

தன் ஹேன் பேக்கில் இருந்து தான் போன் அடிக்கிறது என்பதை கூட தெரியாது எதையோ படித்துக்கொண்டு இருந்தவளின் கவணத்தை பக்கத்தில் இருப்பவர் போன் மணி அடிப்பதாக சொல்லி கலைக்க...

ஒரு சாரி சொல்லிப்படியே அவசரமாக போனை எடுத்தவள் அதில் ஒளிர்ந்த புது நம்பரை பார்த்து.. முட்டை கண்களில் நவரசமும் தாண்டம் ஆட.. பின் மெல்ல உதட்டில் ஒரு குறுநகைய மலர.. லேசாக தலையை ஆட்டியப்படி "பத்ரி?!?" என்று சற்றே தயக்கம் கலந்த ஆச்சரியத்துடன் அலக்நந்தாவின் குரல் மிக மிக இனிமையாக கேட்க...

போனில் வழியாக கேட்ட அந்த குரல்... ஏனோ நேராக அவளுடைய வெட்பமான உதடு அவன் காதில் உரச அழைத்து போல் பிடரியில் இருக்கும் அவனின் அரை இன்ச் முடியும் எழுந்து நிற்க... எங்கோ பறந்த தன் உணர்வுகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வர முடியாமல்... தினற.. எதையோ.. எதையோ பேச வேண்டும் என்று ப்ளான் பண்ணிக்கொண்டு இங்கே வந்தவன்.. கடைசியில் "எஸ்.. பத்ரியே தான்... பிரியாணி வந்தாச்சு சாப்பிட வா" என்று சொதப்பலாக கூறி முடித்தான் பேச்சு சாதுரியம் மிக்கவன் என்று பெயர் பெற்ற பத்ரி.

இன்று..

“நகரு அலக்நந்தா” என்றது அவன் குரல் மூர்கதனாமாக.

சரியாக காதில் வாங்கிய அலக்நந்தா.. யாரோ இன்னும் ஒருவர் பின்னாடி உட்கார வருவது போல் இவனை இன்னும் இறுக்கமாக கட்டி அணைத்து அமர.. நூறில் பறந்த டூகாட்டி சட்டென்று ஐம்பதிற்கு குறைந்தது.

மீண்டும் ஒரு முறை அதே ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மொழிய அந்த குரலில் இருக்க வேண்டிய கடினம் இல்லாமல் சுருதி குறைந்து கொண்டே வர…

அவளோ ஒவ்வொரு முறைக்கும் அவனை இன்னும் நெருங்கி அமர… ஒரு கட்டத்தில் வண்டி நட்ட நடுரோட்டில் தானாக நின்றது.

ஒரு நிமிடம் போராடியவன் பின் வேகமாக அவள் கையை பிச்சு எரிந்து வண்டியை விட்டு கிட்டதட்ட குதித்து இறங்கியவன்…

“ஏன் டி?? ஏன்??? ஒரு தடவை… ஒரு தடவை என்னிடம் சொல்லி இருந்தால் இத்தனை பிரச்சனை இல்லையே..” என்றபோது நிஜமான வருத்தம்.. துக்கம் அவன் குரலில் பொங்கி வழிந்தது… “என்னைப் பற்றி தெரியாத போது உன்னைப் பற்றி சொல்லி இருக்க வேண்டாம்.. என்னைப் பற்றி தெரிந்த பின்னும்… நான் உன்னிடம் என் காதலை சொன்ன பிறகும்… பைத்தியக்காரன் மாதிரி உனக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தேனே… அப்ப கூட உனக்கு எப்படி…டீ… எப்படி டீ என்னிடம் உண்மையை சொல்லனும் தோன்றவே இல்லை??? கொஞ்சம் கூட அந்த குற்ற உணர்வே இல்லாது என்னுடன் உன்னால் பழக முடிந்தது???” என்று ஆங்காரமாய் முடித்தான்.

“நான் எப்படி இருந்தாலும் என்னை காதலிப்பிங்கற நம்பிகையில் சொல்லவில்லை பத்ரி… என்னை காதலிக்கிறேன்ன்னு சொல்லும் போது.. சச்சிதேவ் ஒருநாளும் காதலிச்சவளை விட்டுப் பிரிந்ததா சரித்திரம் இல்லைன்னு சொன்னிங்க???”

“”என்ன மாதிரி லாஜிக் டீ உன்னுடையது?!? நீ சொல்லும் நம்பிக்கை

என்மேல் இருந்திருந்தா.. ஒளித்து மறைத்து எல்லாம் முடிந்து… கடைசியில் சொல்லி இருக்க மாட்ட!! இப்பவும் சொல்றேன்… காதலித்தவளை சச்சிதேவ் பிரிந்தது இல்லை தான் ஆனா… நான் யாரை காதலித்தேன்னு எனக்கே தெரியாத போது எப்படி நான் கொடுத்த வாக்கை காப்பாற்ற சொல்ற அலக்நந்தா..”

“பத்ரி.. ப்ளிஸ்.. நான் உண்மை சொல்லாததை நியாயப்படுத்த வில்லை… ஆனா என் இடத்தில் இருந்து நான் என்ன மாதிரி நிலையில் அதை செய்தேன்னு கொஞ்சம் யோசிக்க கூடாதா?” என்ற போது அவள் குரல் மன்றாடியது.

“தெர் யூ ஆர்….” என்றப்படி தன் இருக்கையும் உதரியப்படி கதையை விரித்தவன்… “உனக்கு உன்னை தவிர வேற யாரையும் பற்றியும் ஒரு இம்மி அளவாவது நினைத்து பார்த்து இருக்கியா? எப்பயும் உன் சந்தோஷம்.. உன் உணர்வு.. உன் துன்பம்ன்னு…உனக்கு எப்பவும் உன் நிலை பத்தி மட்டும் தான் யோசனை.. இல்லை..? உன்னால் யார் பாதிக்கப் பட்டாலும் பரவாயில்லை இல்ல?” என்று என்று மொழிந்த போது அவன் குரலில் இகழ்ச்சி.. வெறுப்பும் போட்டி போட்டது.

அவன் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த உண்மை அவளை அக்கினி ஜுவாலையாக சுட… உடம்பெல்லாம் காந்த.. “என்னை யாரும் அப்படி நினைத்து பார்க்கவே இல்லையே பத்ரி” என்றபோது அவள் குரலில் உயிர் வலியின் ரணம் மிதம் மிஞ்சம் கிடந்தது.

ஆற்றாமையுடன் “முதலில் நீ யாரைடி உன் இரண்டடி வட்டத்திற்கு உள்ளே விட்ட??? உன் அப்பா அம்மா முதற்க்கொண்டு எல்லோரையும் தள்ளி தானே வைத்திருக்க?”

சட்டென்று இரண்டு அடி எடுத்து வைத்து அவனின் மூச்சு காற்று படும் தூரத்தில் நின்று.. அவனின் உயரத்தில் சற்றே தலையை உயர்த்தி அவனை கண்ணொடு கண் பதித்தவளின் அகண்ட நேத்திரத்தில் வார்த்தைகளில் விவரிக்க முடியாத காதல் பொங்கி வழிய… அதனுடன் கரையை தொட்டு செல்லும் வெள்ளமாய் இமையின் விளிம்பில் நின்ற கண்ணீருடன்.. “உன்னை உள்ளே விட்டேனே பத்ரி… இங்கே விட்டேனே” என்றப்படி தன் இதயத்தை தொட்டு காட்டியவள்.. “ஆனா… எல்லோரும் எப்படி வலிக்க

விட்டு விலகி போனாங்களோ அதே மாதிரி தான் பத்ரியும் இப்ப நீயும் செய்யற… அப்பயும் இப்பயும் என்ன வித்தியாசன்னா.. அவர்களை விட நீ நூறு மடங்கு அதிகமாக வலிக்க செய்யற பத்ரி" என்றாள் உயிரையே உருக வைக்கும் குரலில்.

அந்த குரலையும்… அவளின் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளையும் கேட்டவன் அப்படியே அவளை வாரி அனைத்து நெஞ்சில் புதைக்க வேண்டும் என்று துடித்த இதயத்தை.. அவனின் புடைத்த கழுத்தின் நரம்புகள் காட்ட… இருகிய புஜங்களும்… அழுத்திய முடி இருந்த விரல்களும் அவனுக்குள் நடக்கும் போராட்டத்தை கட்டியம் கூற இவை எல்லாவற்றையும் விட.. அவளது வலியை தனதாக உணர்ந்து அவனின் விழிகளில் வந்த மரண வலியின் பாவம் எதையும் கவணிக்கும் நிலையில் அலக்நந்தா இருக்கவில்லை!!!

Part 11

மூன்று மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு…

"எஸ்.. பத்ரியே தான்… பிரியாணி வந்தாச்சு சாப்பிட வா" என்று சொதப்பலாக கூறி முடித்தான் பேச்சு சாதுரியம் மிக்கவன் என்று பெயர் பெற்ற பத்ரி.

"வாட்?????" என்று அவன் சொல்வது புரியாததது போல் அவள் மீண்டும் கேட்க…

சத்தம் வராது "ஸ்ஸ்" என்றப்படி இடது கதையால் தன் தலையில் அடித்துக்கொண்டவன்… "பிரியாணி??? காட்… பிரியாணி சாப்பிட கூப்பிடவா டா HACK பண்ண?!?...." என்று அவன் தன்னை தானே திட்ட அதற்குள் இவனிடம் பதில் வராது போகவே..

"பத்ரி.. பத்ரி" என்று அலக்நந்தா இரண்டு முறை அழைத்திருந்தாள்.

"ம்ம்.. இருக்கேன்… ஆனா.. ஷாக்கில் இருக்கேன்" என்றான் தெளிவாக.

"என்னது ஷாக்கா?? நான் சொல்ல வேண்டிய டைலாக்கை நீங்க சொல்றிங்க!!!" என்ற போது அவள் குரலில் பொங்கி வழிந்த நகையும் அதை

விட அந்த குமிழ் சிரிப்பு நேரில் அமர்ந்து பார்த்தவனுகக்கு அவனையும் அறியாது மனம் லேசாகியது… யாருமே இல்லாத ஸ்விம்ங் பூலில் தான் மட்டும் பேக் ப்ளாட்(BACK FLOAT) செய்தப்படியே தண்ணீரில் மிதக்க… உடல் லேசாக அதனுடன் மனமும் லேசாக நிர்மலமான வானத்தையும்.. அங்கே பறந்து செல்லும் பறவை கூட்டத்தையும்.. நகரும் மேகத்தையும் பார்ப்பது ஒரு அலாதியான அனுபவம்… அப்படி ஒரு அலாதியான உணர்வை அவளின் அந்த குமிழ் சிரிப்பு அவனுள் ஏற்படுத்த இத்தனை நேரம் சீட்டின் நுனியில் அமர்ந்து அவளை பார்த்துக்கொண்டு இருந்தவன் இப்போது நன்றாக காலை நீட்டி சாய்ந்து வசதியாக அமர்ந்து வெகுவாக ரசிக்க தொடங்கினான் பத்ரி!!!

“ம்கூம்… உனக்கு புரியாது அலக்நந்தா…” என்றான் பெருமூச்சு விட்டப்படியே.

“அப்படியா??? அப்ப புரிய மாதிரி சொல்லுங்க.. உங்க பெட்டில் நீங்க ஜெயித்திற்கு நியாப்படி நான் தானே ஷாக் ஆகனும்??”

“இது பெட்டை பற்றிய விஷயம் இல்லை… அலக்நந்தா என்னை பற்றிய விஷயம்… எது பேசினாலும் யோசிக்காமல் பேசும் ரகம் நான் இல்லை… அது இயற்க்கையா வந்ததில்லை… என்னுடைய பதினெட்டாவது வயதில் ஒரு நாள் எதுக்கோ வேலைக்காரனை பயங்கரமாக சத்தம் போட்டு திட்ட… அங்க வந்த என் அம்மா என்னை அழைத்து தேவை இல்லாமல் வார்த்தையை உதிர்க்காதே… ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வோரு சக்தி உண்டுன்னு சொல்ல… அதுக்கு டீன் ஏஜிற்கே உள்ள தெனாவட்டில் அம்மா நான் ஒன்னும் மந்திரம் ஜெபிக்கலை… வார்த்தைக்கு எல்லாம் ஏதுமா சக்தின்னு பயங்கரமா வாக்குவாதம் பண்ணினேன்”

“நான் சொன்னதை எல்லாம் ரொம்ப பொருமையா கேட்ட என் அம்மா… நீ உதிர்க்கும் வார்த்தை ஒருத்தரை அழ வைக்கவும்.. சந்தோஷப்பட வைக்கவும் சக்தி இருக்கும் போது அது மத்திரம் தானே பத்ரி?!? நீ ஒன்னும் சின்ன பையன் இல்ல.. உன் அண்ணனும் இங்க இல்ல… வந்து இருக்கப் போவதும் இல்லை… இனி மொத்த குடும்பத்தின் பொறுப்பும் உன் தலையில் தான் வந்து விழ போகுது… பல குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னாமாகி போவதற்க்கு காரணம்… அர்த்தமற்று உதிர்கப்படும் தேவை இல்லாத வார்த்தைகள்தான் காரணம்… நம் குடும்பம் இனி உன் கையில்ன்னு தான் அதை புரிந்து நடந்துக்கொள்ன்னு சொன்னாங்க.. அதுக்கு அப்புறம் இன்று

தான் உன்னிடம் யோசிக்காமல் பேசி இருக்கேன் அலக்நந்தா" என்றான் தீவிர யோசனையுடன் தன் கையால் மேஜை மேல் எதையோ வரைத்தப்படி இருந்த அலக்நந்தாவை ஆழமாக பார்த்தப்படி.

"ஒ..." என்றவளின் கைகள் மேலும் வேகமாக அந்த டிசைனை வரைய...

"தீவிரமான யோசனையில் இருக்குற மாதிரி இருக்கு?? உனக்கு என்னிடம் என்னமோ கேட்கனும் இல்லை?!? நான் நோ அப்ஜக்க்ஷின் சர்டிபிக்கேட் தரனேன் தாராளமா கேளு..." என்றான் அவளை வைத்த கண் வாங்காமல்.

"ஆ.. நான் தீவிரமான யோசனையில் இருக்கேன்னு உங்களுக்கு.." என்றப்படி அவள் அவசரமாக தலையை உயர்த்த... அவனின் நேருக்கு நேராக பார்வையை எதிர்க்கொண்டாள் அலக்நந்தா.

இவனை கண்டவுடன் நற்தனமாடிய அவளின் அத்தனை ரசம் அவன் ரசிக்க... ஏனோ சம்பந்தம் மில்லாது அவளின் கழுத்தின் மச்சத்தை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவனை ஆட்கொள்ள.... தன் கட்டுபாடை மீறி அவனின் கண்கள் அவளின் சற்றே நீண்ட கழுத்தையும் அதில் தெரிந்த மச்சத்தையும் காண கண் அலைப்பாய... அவனையும் அறியாது அவன் உதடுகள் "மோனல்" என்றது.

"மோனலா?!? அது யாரு?!?" என்றாள் அலக்நந்தா புரியா திகைப்புடன்.

"ஒரே நாளில் இது இரண்டாவது தடவை..." என்றப்படி தொண்டையை லேசாக கனைத்தான் பத்ரி.

"வழக்கமாக நான் பேசுவது தான் உங்களுக்கு புரியாது.. இன்னைக்கு என்ன நீங்க பேசறது எனக்கு புரியவே இல்லை?!?" என்ற அலக்நந்தா.. "பத்ரி.... இத்தனை நேரமும் இங்கேயா இருந்திங்க?!?" என்றப்படி அவனை முறைத்து பார்த்தாள்.

"ஆமாம்.. என்று சர்வ சாதாரனமாக மொழிந்தவன் "நீ என்ன முறைத்தாளும் உண்மை அதுதான்.." என்றான் அமைதியாக.

"ஏன்?"

“ஏன்னா என் குரலை கேட்கும் போது உன் ரீயாக்க்ஷனை எப்படி இருக்குன்னு பார்க்க ஆசை.. வேற எதுக்கு?!?” என்று லேசாக தோளை குலுக்கினான்.

“ஒ!!!” என்றப்படி அவள் அவனை மேலும் ஆழமாக பார்க்க முனைய..

“என்ன விஷயம் அலக்நந்தா?!? உனக்கு என்னவோ என்னிடம் கேட்கன்னு.. ஆனா கேட்க ரொம்ப நர்வஸா இருக்க.... யூ ஆர் மை ப்ரெண்ட சொ.. தாராளமா நீ என்னிடம் கேட்கலாம்.. தப்பா நினைக்க மாட்டேன்..” என்று அவளை ஊக்கினான் பத்ரி.

“நான் நர்வஸ்சா இருக்கேன் உங்களுக்கு..” என்று அவள் இழுக்க..

“அலக்நந்தா... முதலில் கேட்க வந்ததை கேளு... அப்புறம் மற்றதை பற்றி பேசலாம்” என்றான் கராராக.

கைகள் தானாக ஏதோ வட்டம் போட.. “ம்ம்... உங்க அண்ணன் உங்களிடம் குடும்ப பொறுப்பை ஒப்படைத்து விட்டு தனியாக போய்.. மிக பெரிய ஆளானது உங்களுக்கு வருத்தமே இல்லையா?!?.. ஐ மீன் நமக்கு அந்த மாதிரி சந்தர்பமே இல்லையேன்னு உங்களுக்கு தோன்றியதே இல்லையா?” என்றாள் அலக்நந்தா தயங்கியப்படியே.

நம்பரை எப்படி கண்டு பிடிச்சிங்க என்று தான் கேட்க போகிறாள் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தவன் இப்படி ஒரு கேள்வியை கேட்டவுடன் ஒரு நிமிஷம் நின்று நிதானித்தான்.. “இதுக்கு நான் என்ன பதில் சொன்னாலும் உன்னால் நம்ப முடியாது... அதனால் ஒரு விஷயம் சொல்றேன்.. புரிந்துக்கொள்ள ட்ரை பண்ணு... என்னிடம் ஹரப்பா மோகஞ்சதாரோ கலாசாரத்தின் நாணயம் கிடைத்தால் என்ன பண்ணுவேன்.. ஏதோ பழைய காசுன்னு நினைப்பேன் ஆனா அதுவே உன்னிடம் கிடைத்தால் அந்த பொக்க்ஷியத்தின் அருமை உனக்கு தெரியும்.. சொ.. அது அது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தான் தான் அதுக்கு மதிப்பு இல்லையா?!?... அதுமாதிரி தான் ஆர்யாவும்”

“உண்மையில் ஆர்யா இருக்க வேண்டிய இடம் பேஷன் நகரமான பாரிசில்....

அவனின் திறமைக்கு எத்தனை முறை அங்கே வந்து பிசினஸ் செய்யும் படி அழைப்பு வந்ததுன்னு கணக்கே கிடையாது.. ஆனால் ஒருமுறை கூட அவன் போகன்னு நினைத்தது கிடையாது. இன்னும் கேட்க போனா... அப்படி ஆபர் வருதுன்னு கூட அவன் வாயை திறந்து என்னிடம் சொன்னது கிடையாது.. அவனின் குடும்பமே இங்கே இருப்பதால்... அவனால் அங்கே சந்தோஷமாக என்ன நிம்மதியாக கூட இருக்க முடியாதுன்னு தெரியும்.. அவன் வெறிதனமான டிசைனர் தான்... ஆனால் குடும்பமா.. பேஷனான்னா கேட்டா... ஒரு நிமிஷம்.. ஒரே ஒரு நிமிஷம் கூட யோசிக்காமல் பதில் சொல்லுவான் குடும்பம் மட்டும் தான்... இது ஆர்யாவிற்கு மட்டும் இல்லை மொத்த சச்சிதேவ்விற்கும் பொருந்தும்"

பத்ரி பேச.. பேச.. அவளின் முகம் அப்படியே புத்தகமே இல்லாத நூலகம் மாதிரி வெறுமையாக இருக்க.. லேசாக தொண்டைய அடைக்க.. கைகள் இன்னும் வேகமாக எதையோ வரைந்தப்படி.. "நாட்டில் பெரும்பாலானவர்கள் தான் செய்யும் தொழிலுக்காக தன் குடும்பத்தையே இழக்க தயாரா இருக்க... உங்க அண்ணா கிரேட் பத்ரி" என்றாள் கம்மிய குரலில்.

"எத்தனை சம்பாரித்தாலும் அதை பகிர்ந்துக்கொள்ள தன்னை உண்மையாக நேசிக்கும் ஜீவன் இல்லாமல் போச்சுன்னா அதை சம்பாரிப்பதற்க்கு என்ன அர்த்தம் இருக்க முடியும? நான் பணத்தை மட்டும் சொல்லை.. பேரு.. புகழ்ன்னு எல்லாத்தையும் சேர்த்து தான் சொல்றேன் அலக்நந்தா" என்றான் வெகு சாதாரணமாக.

"உங்களை மாதிரி எல்லோருக்கும் குடும்பத்தின் அருமையை சொல்லி புரிய வைக்க அம்மா அமைவதில்லை.. சொல்லாமலே புரிய வைக்கும் அண்ணாவும் அமைவதில்லை... எத்தனை தியாகம் செய்தாலும் புரிந்துக்கொள்ள ஆட்கள் எங்கே இருக்காங்க சொல்லுங்க?" என்றாள் மனத்தாங்களோடு அலக்நந்தா.

"எனக்கா சாப்பிடுவதையும்.. எனக்காக தூங்குவதையும் தியாமகாக நினைப்பேனா?? அதே மாதிரி தான் தன் குடும்பத்திற்காக செய்யும் செயல்... அதை எப்படி தியாகம் ஆகும? என்று தீவிரமாக கேட்டான் பத்ரி.

"ம்ம்.." என்று தலையை மட்டும் ஆட்டியவள் அவனை நேராக பார்த்து

“இதை பொறாமையில் சொல்லலை பத்ரி... இப்படி ஒரு குடும்பம் கிடைக்க நீங்க கொடுத்து வைத்திருக்கிங்க... உங்களுக்காவது இப்படி ஒரு குடும்பம் கிடைத்ததை நினைத்து எனக்கு ரொம்ப.. ரொம்ப.. சந்தோஷம்...” என்றப்போது அவளின் குரலில் வலியும் வேதனையும் நிரம்பி கிடக்க..

“இப்ப நீ என்ன சொன்ன? அந்த “உங்களுக்காவதுன்னா” என்ன அர்த்தம் அலக்நந்தா??” என்றான் திடுகிட்டு பத்ரி.

“எல்லாத்துக்கும் அர்த்தம் கேட்காதிங்க பத்ரி” என்று மிகுந்த மனவேதனையுடன் மொழிந்தவள்... முதலில் கேட்க வேண்டிய கேள்வியை தாமதமாக “எப்படி என் நம்பரை கண்டு பிடித்திங்க?” என்றாள் அவசரமாக.

பேச்சை மாற்ற விரும்புகிறாள் என்பது புரிய “என் தம்பி ஒய்ப்யிடம் சொல்லி உன் போன் நம்பரை காலேஜின் டாக்குமெட்டில் இருந்து ஹக்(HACK) பண்னேன்” என்றான் பெருமையும் புரிப்புமாக.

இப்பவும் அவன் எதிர்பார்த்த கேள்வி கேட்காமல் “என்னது உங்க தம்பிக்கு கல்யாணம் ஆயாச்சா?? அப்ப உங்களுக்கு?” ஆச்சிரியம் தாளாது அலற.

“இதுக்கு மட்டும் எல்லோரும் ஒரே மாதிரி ரீயாக்ட் ஆகி இப்படி ஒரு கேள்வி கேட்கறிங்க...” என்று தெனாவட்டாக சொன்னவன்.. “எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை.. ஆகும் போதும் நிச்சயம் சொல்றேன்” என்று அலுப்பாக சொல்லி முடித்தான்.

“இல்ல.. நான்.. நான்.. ஒன்னும் அப்படி நினைத்து கேட்கலை...உங்க தம்பிக்கு ஆகிடுச்சேன்னு சொன்னிங்களே அதுதான் கேட்டேன் மற்றப்படி வேற ஒன்னும் இல்லை” என்றாள் தடுமாற்றமாக.

“அலக்நந்தா... சச்சிதேவ் குடும்பத்தில் காதலில் விழுவது தான் ரொம்ப முக்கியம்.. கல்யாணம் எந்த ஆடர்ல வேணுன்னா நடக்கும்...” என்றான் பெருமை பொங்க.

“நீங்களும் உங்க குடும்பமும் எக்ஸ்பிஷன் ப்பீஸ் இல்ல...??” என்றாள் முகம் லேசாக.

“உண்மையை சொல்லனுன்னா.. நீ சொல்வதில் கொஞ்சமே கொஞ்சம் உண்மை இருக்கு… ஆனா எக்ஸ்சிபிஷன் பீஸ் எல்லாம் இல்லை..” என்றான் மகா தன்னடக்கத்துடன்.

“ம்ம்..” என்று அவன் சொன்ன விதத்திலேயே மேலும் அவள் முகம் புன்னகையில் விரிய.. “ஆமாம் இது எதுக்கு எதிரெதிர் உட்கார்ந்து போனில் பேசனும்?? வாங்க நடத்துக்கொண்டே பேசலாம்…” என்றபப்படி அவள் எழ முனைய..

“ம்கூம்.. வேண்டாம்..” என்றப்படி தலையை அசைத்தவன் இன்னும் நன்றாக சாய்ந்து “உட்கார்ந்து போனிலேய பேசு…” என்றப்படி அவளை அங்கே அமரும் படி தலையால் ஆட்டி செய்கை செய்தான்.

எழுந்தவள் மீண்டும் அமர.. “ஏன்?” ஒன்றும் புரியா திகைப்புடன்.

“வெல்…” என்றப்படி தன் கையால் ஏதோ பெரிதாக விளக்க வருவது போல் தன் இடது கையை ஆட்டியப்படி இழுக்க…

“பத்ரி… ரீசன் ப்ளிஸ்” என்றாள் அவனின் செய்கையை ரசித்தப்படி.

“ம்ம்… வெல்…” என்று மீண்டும் ஆரபித்தவன்.. “என் காதில் மட்டுமே ஒளிக்கும் இந்த குரலை கேட்க ரொம்ப பிடித்திருக்கு..” என்றப்படி சற்று தயக்கமாவே ஆனாலும் அவளை பார்த்தப்படி உண்மையை உரைக்க… அவள் அரண்டு போய் அவனை பார்த்தாள்.

பார்வை பரிமாற்றத்தில் கூட மின்சார தயாரிக்க சாத்தியம் உண்டு எனில் அந்த சஷனத்தில் அது நிச்சயம் சாத்தியமாகி இருக்க கூடும். ஏன் அந்த பார்வை தன்னை இப்படி கட்டி போடுகிறது என்று அர்த்தம் தெரியாது அவனும்… தன் முன்னால் அவன் சொன்ன ஹரப்பா நாகரிகத்தின் பொக்கிஷ அறையே தன் கண் முன்னால் நிற்பது போல் அவள் அவனை பார்த்தபடியே பிரிக்க முடியாது மயங்கி நிற்க..

“ஹய்… பத்ரி… லைப்ரரி வந்தும் போனா?” என்று கேட்டப்படி பாயல் அவன் அருகில் வர..

பிரிக்க முடியாத அவனின் பார்வையை பிரித்தவன் பாயலின் புறம் திரும்பிய போது.. அலக்நந்தா அவசரமாக தன் போனை எடுத்து பேக்கில் வைப்பது நன்றாகவே தெரிந்தது.

“ஹாய்… ஒரு முக்கியமான கால்” என்றப்படி பாயலுக்கு பதில் சொன்னப்படி போனை கட் செய்ய.. “நான் அவசரமாக ரூம்மிற்கு போகனும்.. அலக்நந்தா போகலாமா” என்று மொழிந்தவன் பாயலுக்கு “பை” சொல்லியப்படி எழ…

அப்பொது தான் எதிரில் இருந்த அலக்நந்தாவை பார்த்த பாயல்.. “ஹாய்… அலக்நந்தா” என்றப்படி ஒரு மாதிரி இவனையும் அவளையும் கணிப்பதை உணர்ந்த பத்ரி..

“போகலாம் அலக்நந்தா எனக்கு டைம் ஆச்சு..” என்றான். அலக்நந்தா போகலாம் என்று சொன்னபோது இங்கே உட்கார்ந்து பேசலாம் என்ற சற்று நேரத்திற்கு முன்பு சொன்னவன் இப்போ இறக்கை இல்லாமல் பறந்தான்!!!

முறையா பாயலிடம் “ஹாய்” சொல்லியவள் இவனிடம் முகத்தை கூட திருப்பாது “சரி” என்று தலை நிமிராமலே மண்டையை ஆட்டியப்படி வேகமாக தன் பொருட்களை எடுத்து வைத்து விட்டு கிளம்பினாள்.

அவர்களுடனே சேர்ந்து எழுந்த பாயல் “நீ போ பத்ரி நான் ஒரு விஷயம் அலக்ந்நதாவிடம் சொல்லனும்.. என்னனு கேட்காதே” என்று கூறி விட்டு திரும்பி நின்று “அலக்நந்தா வா போகலாம்” என்றப்படி அழைக்க அவசரமாக அவனை ஒரு பார்வை வீசியவள் பலி கடா மாதிரி பாயல் பின்னால் செல்ல…

ஏதோ வாயை திறந்து பேச வந்தவன் பின் அமைதியாக “சீக்கிரம் அனுப்பி விடு” என்று மட்டும் சொல்லி விட்டு முன்னே சென்றான்.

அவன் காது எட்டாத தூரம் வரை சென்றவள் “அலக்நந்தா.. நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லனும் நான்.. நான்.. பத்ரியை காதலிக்கிறேன்” என்று அவள் முகத்தை பார்த்தப்படி கூறினாள் பாயல்.

என்ன மாதிரி ரீயாக்ஷன் வரும் என்று எதிர்பார்த்து சொன்னாலோ ஆனால் அலக்நந்தாவின் முகத்தில் எந்த ஒரு சலணமும் இல்லாமல்… அமைதியாக

“இதை நீங்க பத்ரியிடம் சொன்னிங்களா?” என்றாள் தெளிவாக.

“ம்ம்… பத்ரியிடம் எப்பையோ சொல்லி ஆச்சு..”

அதற்கு எதுவும் பேசாமல் அலக்நந்தா நடக்க தொடங்க.. அவளுடன் சேர்ந்து நடந்த பாயல்..

“அதுக்கு பத்ரி என்ன பதில் சொன்னான் கூட கேட்க மாட்டியா அலக்நந்தா??” என்றாள் ஆச்சரியமாக.

“ரொம்ப பர்சனலா இருக்குமேன்னு தோனியது பாயல்..” என்றாள் அமைதியாக.

“ம்ம்.. பர்சனல் தான் ஆனா உனக்கு தெரியலாம்…” என்றாள் பாயல் லேசாக சிரித்தப்படி

“யூ மீன் நீங்க என்னிடம் சொல்லனுன்னு ஆசை படறிங்க..”.

“ம்ம்.. பத்ரியிடம் என் காதலை சொன்னப்ப ப்ரெண்டாக இல்லாது வேறு எந்த உணர்வும் இல்லை.. ஐயம் ரீயலி சாரின்னு சொன்னார் அலக்நந்தா. ஆனா எனக்கு ஒரு நம்பிக்கை நானும் முதலில் அவரை ஒரு நல்ல நண்பராக மட்டுமாக தான் நினைத்தேன். போக போக அவரையே காதலிக்க தொடங்கினேன் அதே மாதிரி பத்ரியும் இன்று இல்லைன்னாலும் என்றாவது ஒருநாள் என்னை நிச்சயம் காதலப்பாருன்னு… அதுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கேன்… சொ.. நீ பத்ரி தவிர்த்து இந்த காலேஜில் யாரை வேண்டும் என்றாலும் காதலிக்கலாம்…” என்று சிரித்தப்படியே கூற…

“இல்ல..” என்று வேகமாக மறுத்து எதையோ கூற வந்தவளின் வழிகளில் கண்ணாடி கதவில் சாய்ந்தப்படி வெள்ளை நிற ஜீன்ஸில் சிகப்பும் கருப்பும் நிறம் கலந்த டிசர்ட் அணிந்து விடுமுறைக்கு வந்த மிலிட்டரி ஆபிசர் மாதிரி இருந்த அவன் தன்னையே உன்னிப்பாக பார்த்து நின்றுக்கொண்டிருப்பதை உணர… கண்ணிற்கு முன்னால் இருக்கும் பொக்கிஷத்தை பார்க்க கூட முடியாது தடா போட்டது போல் அவள் முகம் சொல்லோன்னாத வேதனை நிரம்ப..

எப்பபையும் போல தன் ஆஸ்தான பதிலான “ம்ம்” என்பதை மட்டும் தெரிவித்தாள்.

அந்த பதிலேயே திருப்பதி அடைந்த பாயல் அவளிடம் ஏதோ அளந்தப்படி பத்ரி இருக்கும் இடம் வந்து சேர… தலையை கூட உயர்த்தாத தன் சைகளில் பக்கம் சென்ற அலக்நந்தாவை விசித்திரமாக பார்த்தான் பத்ரி.

“வா பத்ரி போகலாம்” என்று பாயல் அழைக்கும் வரை அலக்நந்தா சென்ற திசையையே தாடை தேய்த்துக்கொண்டு இருந்தவனுக்கு நடப்பு திரும்ப..

“நீ வண்டியை எடுத்துக்கொண்டு போ.. பாயல் நானும் இன்று சைகிளில் தான் வந்தேன்” என்று மறுத்து கூற..

“ஆனா..” என்று பாயல் எதையோ கூற வர..

“இல்லை பாயல்.. நான் அலக்நந்தாவுடன் வரேன். நீ உன் வண்டியில் போ.. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு” என்றான் அமைதியாக.

“ஒ.கே” என்று இருவருக்கும் ஒரு பையை சொல்லிவிட்டு போக.

இருவரும் தத்தம் வண்டியை ஏறி மிதித்தவுடன் அவன் கேட்ட முதல் கேள்வி “என்னாச்சு?” என்பது தான்.

“ம்கூம்” என்றாள் அமைதியாக

“இந்த பதில் போதும் எதோ ஆச்சுன்னு எனக்கு புரிய” என்றான் விடாப்பிடியாக பத்ரி.

“ஒன்னும் ஆகவில்லை பத்ரி” என்றாள் அலகநந்தா.

“மறுமுடியும் முதலிருந்தா அலக்நந்தா?? நீ என் ப்ரெண்டு…” என்று அவன் கூறிக்கொண்டு இருக்கும் போதே இடை வெட்டிய அவள்

“நீங்க என் ப்ரெண்ட்டும் இல்லை பத்ரி” என்றாள் தீர்மானமாக.

“சரி… நான் உன் ப்ரெண்ட் இல்லை.. பின்ன என்னவாக இருக்கனும் நீ நினைக்கற?” என்றப்படி தன் சைக்களை வேகமாக சடன் பிரேக் போட்டு கேட்டான் பத்ரி.

இன்று….

அந்த குரலையும்… அவளின் அர்த்தம் பொதிந்த வார்த்தைகளையும் கேட்டவன் அப்படியே அவளை வாரி அனைத்து நெஞ்சில் புதைக்க வேண்டும் என்று துடித்த இதயத்தை.. அவனின் புடைத்த கழுத்தின் நரம்புகள் காட்ட… இருகிய புஜங்களும்… அழுத்திய முடி இருந்த விரல்களும் அவனுக்குள் நடக்கும் போராட்டத்தை கட்டியம் கூற இவை எல்லாவற்றையும் விட.. அவளது வலியை தனதாக உணர்ந்து அவனின் விழிகளில் வந்த மரண வலியின் பாவம் எதையும் கவனிக்கும் நிலையில் அலக்நந்தா இருக்கவில்லை!!!

“அல்நந்தா..” என்று உணர்ச்சியே இல்லாத செய்தி வாசிப்பாளரின் குரலில் அவள் பெயரை கூறியவன்… “ஒரு முக்கியமான விஷயம் உனக்கு என்னை பற்றி பேச மட்டும் தான் உரிமை இருக்கு… ஆனா இனி தப்பி தவறி கூட சச்சிதேவ் பெயர் உன் பேச்சில் இழுக்காதே… அதுக்கு உனக்கு எந்த சம்பந்தமும் இல்லை… அதை நியாபகத்தில் வைத்துக்கொள்”

விசுக்கென்று தலை உயர்த்தி பார்த்தவளில் விழிகளில் இத்தனை நேரம் இருந்த வலியும் வேதனையும் துடைக்க பட்டிருக்க அதற்கு பதில் கோபம் தீ பிழப்பாக அவள் கண்ணீல் ஜெலிக்க.. “இக்க என்ன பத்ரி சொன்ன சச்சிதேவ் பெயரை சொல்ல கூடாதா??? நீ பத்ரிநாத் சச்சிதேவா இருக்கும் போதும் நான் எப்படி சச்சிதேவை இழுக்காமல் இருக்க முடியும்??? நான் உன்னை காதலிக்க தொடங்கியதே இந்த குடும்பத்தில் நானும் ஒரு அங்கமாகனுன்னு ஆசையில் தானே பத்ரி… கடைசியில் என்னை அதில் இருந்து ஒதுக்கறியே…” என்று ஆங்காரமாய் ஆரம்பித்தவள் அனத்தலாக முடித்தாள்.

“நான் ஒதுக்கலை அலக்நந்தா.. நீயே உன்னை தனிமை படுத்திக்கொண்ட.. வேண்டாம் இதை பற்றி பேசி.. பேசி.. என் பி.பியை ஏற்றாத ஏற்கனவே நான் ரொம்ப கடுப்பில் இருக்கேன்.. வா போகலாம் ஆனா தனியா உட்கார்” என்று

கடுமையாக பேசிவன் தன் கோபத்தை எல்லாம் டூகார்ட்டில் காட்டி ஸ்டார்ட் செய்ய..

நீர் வடிந்த கண்ணோடு எதுவும் பேசாமல் வண்டியில் ஏறி அமர்ந்தவள் அவன் சொன்னது போலவே இடைவேளை விட்டு அமர.. வண்டி பறந்தது…

அடுத்த பத்தாவது நிமிஷத்தில் வண்டி வந்து சேர… ரூம்மில் அத்தனை நேரமும் டி.வியில் எதையோ பார்த்துக்கொண்டு இவர்களின் வரவிற்காக காத்து இருந்த சித்.. உள்ளே நுழைந்த அலக்நந்தாவிடம் “குட் நயிட்” சொல்ல..

பதிலுக்கு எதுவுமே சொல்லாமல் சென்றவளை பார்த்தவன் பின்னாடியே வந்த பத்ரியும் அதே முக பாவையுடன் இருக்க..

“என்னடா மச்சி… அவள் பின்னாடியே ஹிரோ மாதிரி போனியே.. அங்க என்ன சீன் அரங்கேற்றம் பண்ண?? உங்க ஊர் தமிழ் பட மாதிரி ஒவர் சென்டிமென்ட்டா இல்லை எங்க ஊர் தெலுங்கு மட மாதிரி ஒவர் மசாலாவா.. இல்ல அலக்நந்தா ஊர் ஹிந்தி படம் மாதிரி ஒவர் கிளாமராவா…?” என்று சூழ்நிலையை லேசாக்கும் விதமாக கேட்டான் சித்.

வெறுப்புடன் கவுச்சில் அமர்ந்த பத்ரி.. குனிந்து தன் இரு கைகளுக்கு மத்தியில் தலை வைத்து பலமாக பிடித்துக்கொண்டவன்.. என்னவோ சொல்ல…

“என்ன சொன்ன? இப்ப நீ என்ன சொன்ன?” என்று சித் மீண்டும் கேட்க. தலையை உயர்த்தியவன் “நீ சென்ன எல்லா படத்திற்கும் நான் மட்டுமே வில்லானா இருந்தா எப்படி இருக்கும் அப்படி இருக்கு சித்” என்றான் துக்கம் கலந்த ஆற்றாமையுடன்.

அத்தியாயம் - 12

மூன்று மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு…

“சரி… நான் உன் ப்ரெண்ட் இல்லை.. பின்ன என்னவாக இருக்கனும் நீ நினைக்கற?” என்றபடி தன் சைக்களை வேகமாக சடன் பிரேக் போட்டு

கேட்டான் பத்ரி.

தன் சைக்கிளையும் நிறுத்தியவள் “எனக்கு எதுவாகவும் நீங்க இருக்க வேண்டாம்.. நான் எப்படியும் உங்களை நினைக்கவில்லை..” என்றாள் அமைதியாக.

“இதுவரைக்கும் நினைக்காவிட்டால் பரவாயில்லை.. இப்ப நினை அலக்நந்தா... நல்ல விஷயத்தை தள்ளி போட கூடாதுன்னு சொல்லுவாங்க அதனால இனி என்னை உன் ப்ரெண்டா நினைத்துக்கொள்...” என்று மிக எளிதாக கூறியவன் தொடர்ந்து...

“இங்கே பாரு அலக்நந்தா... உனக்கு பாட்டு பிடிக்காது... யாரோடும் பேச பிடிக்காது... பழக பிடிக்காது.. ப்ரெண்ட்ஸ் பிடிக்காது ஏன் உன்னை பற்றி பேச கூட பிடிக்காதுன்னு.. இப்படி உனக்கு பிடிக்காததை கேட்டு... கேட்டு... போர் அடிக்குது.... ஒரு மாற்றத்திற்கு உனக்கு பிடித்தது எதாவது சொல்லேன்...” என்று ஹேண்டில் பாரில் தன் முழங்கையை வைத்து நன்றாக குனிந்து அவளைப் பார்த்தபடி இதை மொழிந்தவனின் முகத்தில் சிரிப்பு மிக... அங்கே அழகாய் பளிச்சிட்டது அவனுடைய முகவாய் குழி!!!

“பத்ரி...” என்று வேகமாக எதையோ பேச ஆரம்பித்தவளின் விழியில் அந்த குழியின் வசீகரம் சுண்டி இழுக்க... அதில் சொக்கி போய்... தான் பேச வந்ததை மறந்து தடுமாறி அப்படியே நின்றாள்.

“வாவ்... நான் எதை எதையோ சொல்லுவன்னு நினைத்தேன்.. ஆனா சத்தியமா இந்த பதிலை நான் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை... யூ மேட் மை டே” என்றான் மிகவும் பூரிப்பாக பத்ரி.

தன்னிலை மீண்டவள் “நீங்க.. நீங்க... இவ்வளவு சந்தோஷப்படும் அளவு இப்ப நான் என்ன சொன்னேன்??” என்றாள் புரியாத திகைப்புடன் கேட்டாள்.

“போச்சுடா... இத்தனை சின்ன வயசில் இவ்வளவு மறதி கூடாது அலக்நந்தா.. இப்ப தானே உனக்கு என்ன பிடிக்கும்னு கேட்டதற்கு என் பெயரை தெளிவா பத்ரின்னு சொன்ன??” என்றான் அந்த புன்னகை மாறாது.

“நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை பத்ரி...” என்றாள் தடுமாற்றத்துடன்.

“அலக்நந்தா….” என்று அலுப்பாக கூறியது போல் இருந்தாலும் அவன் குரலில் ஒரு சிரிப்பு இழையோட…. “ப்ச்சு… என்னை ப்ரெண்டா நினைக்கலனாலும் பரவாயில்லை… ஆனா என்னை உனக்கு ரொம்ப.. ரொம்ப… பிடிக்கும்னு தெரியும்” என்ற போது அவன் கண்ணில் வந்த பளீர் ஒளியும்… சைக்கிளில் அவன் குனிந்து நின்ற விதமும்… உதட்டில் ஒட்டி இருந்த சிரிப்பும்.. இத்தனை நேரம் பிடித்திருக்கவிட்டாலும் அந்த நொடியில் அவளை நிஜமாகவே பிடிக்க தான் வைத்தது!!!

“நான்… நான்.. உங்களை போல் மனதில் பட்டதை என்னால் எளிதாக சொல்லிட முடியாது பத்ரி… ஐயம் நேச்சுரலி அ ரீச்சவுட் பர்சன்…”

“நீ நேச்சுரலி ரீச்சவுட் கிடையாது… நீயா உன்னை அப்படி மாற்றிக் கொண்டாய்” என்று அவன் அவளைப் பற்றி சரியாக சொல்லவும் அவனை அமைதியாக முறைத்து விட்டு சைக்கிளில் அமர்ந்து அறைக்கு ஷாட் கட் பாதையில் போவதற்காக திரும்ப…

அவளுடன் அமைதியாக அவனும் தன் சைக்கிளை மிதித்தவன்… “அலக்நந்தா இது ஷாட் ரூட் தான் ஆனா தனியாக வந்தால் இந்த வழியில் வராதே.. இது காட்டு பகுதியை ஒட்டி இருக்கும்.. எப்பயும் இல்லாவிட்டாலும் கூட தப்பி தவறி எப்பவாவது காட்டு மிருகம் முள் வேலியை பிச்சுட்டு உள்ளே வர கூடும்… கேமரா.. செக்யூரிட்டின்னு எவ்வளவு சே:ப்பாக இருந்தாலும்… இது தனியா போவதற்கான இடம் இல்லை…” என்றான் தெளிவாக அதை சமயத்தில் கண்டிப்புடன்.

“காட்டு மிருகம்னா??”

“பெருசா இல்லன்னாலும் காட்டு பன்றி.. முள்ளம் பன்றி.. நரின்னு… நிறைய இருக்கு… பார்க்க சின்னதாக இருந்தாலும் ரொம்ப ரொம்ப ஆபத்தானது… சொ நீ லைப்பரிக்கு வரேன்னு சொன்னா தனியா வராதே அதுவும் இந்த வழியில் வராதே” என்றான் அதட்டும் குரலில்.

“ஆபத்தில் இருந்து என்னைக் காப்பாற்ற எந்த ஹீரோவும் வேண்டாம் பத்ரி.. என்னை எனக்கு பார்த்துக் கொள்ள தெரியும்..” என்றாள் திடமாக.

“உனக்காக இல்லை அலக்நந்தா உன் நல்ல ப்ரெண்டாக நினைக்கும் எனக்காக…” என்றான் அமைதியாக.

ஏதோ பதில் சொல்ல வாயை திறந்தவள்… பின் அமைதியாக சைக்கிள் ஓட்ட… அந்த அமைதியை கலைக்க பிடிக்காதவன் போல் அவனும் அப்படியே வர… திடீரென்று அவள் புறம் திரும்பியவன்…

“உனக்கு சைக்கிள் ஓட்ட ரொம்ப பிடிக்குமா?!?”.

எதுவும் சொல்லாமல் அமைதியாக அவள் ஓட்ட…

“அலக்நந்தா..” என்றான் சற்றே அழுத்தமாக.

“தெரியாது…”

“என்ன?... இப்ப என்ன சொன்ன? தெரியாதா?!?” தன் காதில் விழுந்ததை நம்ப முடியாது.

“ம்ம்…”

“அலக்நந்தா… இப்படி ஒரு பதிலை கொடுத்து விட்டு அமைதியாக ம்ம் சொன்னா என்ன அர்த்தம்?!?”

“இப்படிப்பட்ட பதில் வேண்டாம் என்றால் என்னை எந்த கேள்வியும் கேட்காதே பத்ரின்னு அர்த்தம்” என்றாள் பெரு மூச்சுடன்.

“அலக்நந்தா…” என்று அவன் அழுத்தம் திருத்தமாக கூற..

“இப்ப உங்களுக்கு… நான் ஏன் சைக்கிள் ஓட்டறேன்னு தெரியனும் அதுதானே?!? ஏன்னா…. ஏன்னா நான் சின்ன வயசில் சைக்கிள் ஓட்டியதில்லை… காற்று முகத்தில் அறைய… முடி பறக்க… அதை செய்து பார்த்திராததால்…” என்று ஆவேசமாக ஆரம்பித்தவள் பின் எதையும் முடிக்காமல் அப்படியே பாதியில் விட்டாள்.

“தட்ஸ்.. ஓ.கே… நானும் சைக்கிள் ஓட்டியது இல்லை… இது ஒன்னும்

வெளியே சொல்லிக்க கூடாது ரகசியமோ இல்லை.. அசிங்க படக்கூடிய விஷயமோ இல்லை… எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்து பைக்… பைக் மட்டும் தான்…" என்றான் சர்வசாதாரணமாக.

"ஓ.." என்பதற்கு மேல் அவள் எதுவும் பதில் சொல்லாமல் ஓட்டியவள்.. சிறிது நேரம் கழித்து "பிடிச்சிருக்கா?" என்றாள் அவனை பார்த்து.

"இந்த ஒரு வார்த்தையை பதிலாக சொல்வதை மட்டும் நீ நிறுத்தினன்னா உன்னை ரொம்பவே பிடிச்சிருக்கு… என்று சொல்லி இருப்பேன்… நீ இன்னும் என்னிடம் அதை நிறுத்தவில்லை என்பதால் இப்போதைக்கு வெறும் பிடிச்சிருக்கு மட்டும் தான்" என்றான் பத்ரி விளக்கமாக.

"வாட்?????? பத்ரி நான் என்னை பிடிச்சிருக்கான்னு கேட்கலை…" என்று எரிச்சலாக மொழிந்தவள் "நான் சைக்கிள் ஓட்டுவதை பிடித்திருக்கான்னு கேட்டேன் பத்ரி"

"ஓ…" என்று அதுக்கு லேசாக தலையை சாய்த்து அவளை புன்னகை ததும்ப பார்த்தவன் "தெரியாது…" என்றான் அவளை போலவே.

"பத்ரி" என்று அவன் அலக்நந்தா என்பதை எப்படி அழைப்பானோ.. அவளும் அதே மாடுலேஷனில் அழைத்துக் காட்ட…

"வெல்…. நாட் பேட் வார் த பஸ்ட் டைம்…." என்று புன்னகையுடன் அவளை மெச்சியவன்… "உண்மையை சொல்லனுன்னா நீ சொன்ன மாதிரி எல்லாம் நான் நான் சைக்கிள் ஓட்டுவதை கவனிக்க கூட இல்லை… மே பி உன்னுடன் பேசிக் கொண்டு வந்ததால் இருக்கலாம்!!!" என்றான் யோசனையோடு பத்ரி.

அவனை சொன்ன பதிலை கேட்ட அலக்நந்தா அவனை ஒரு மாதிரி பார்க்க.. என்ன என்றான் தலையை மட்டும் அசைத்து.

பதிலுக்கு ஒன்றும் இல்லை என்பது போல் தலையை அவளும் அசைக்க..

இவருக்கும் உள்ளே ஒரு பேரமைதியும்.. அதை தொடர்ந்து அந்த அமைதியால் மலர்ந்த சுகமும் அவர்களை தழுவ.. அந்த மனோகரமான சூழலை பேசி கலைக்க விரும்பாத… அந்த ரம்பியத்தை ரசித்தப்படி எதுவும்

பேசாமல் அவர்கள் வர வேண்டிய இடத்திற்கு வந்து சேர… அந்த இனிமை அவர்களின் ரூமில் அஜானுபாவாக ஆறு அடிக்கு நின்று கொண்டு இருந்த ஒரு அன்னியனை காணும் வரை தொடர்ந்தது.

புதியவர்களை கண்டாலே சற்று பின்னடிக்கும் அலக்நந்தா தங்கள் ரூமில் நின்ற நெடு நெடுவென்ற உயரத்துடன்… அந்த அறையை தன் உயரத்தால் நிறப்பிக் கொண்டிருந்தவனை பார்த்தவளுக்கு தன்னையும் அறியாது இரண்டு அடி பின் வைத்து முதல் முறையாக பத்ரியின் விரல்களை பற்றினாள்.

அந்த புதியவன் சித்தின் அண்ணன் நவாப் மிர் ரபிக் அல்வுமர் அலிகான் என்று பத்ரிக்கு புரிய பஞ்சு போல் மெத்தென்று இருந்த அவள் கையை ஒருமுறை அழுத்தியவன்… “ஹேய் ரபிக் எப்படி இருக்கீங்க? இந்த வருஷமும் நீங்கதான் போலோ கேமில் கப் ஜெயித்தீங்களாமே… வாழ்த்துக்கள்” என்று முறைப்படி விசாரித்துக் கொண்டு இருக்கும் போதே சித் சாப்பிட்ட தட்டை கிட்சனில் போட்டுவிட்டு வெளி வர…

“டேய் எப்ப போன எப்ப வர??? எருமை…உனக்கா வெயிட் பண்ணி பார்த்துவிட்டு நானும் அண்ணாவும் சாப்பிட்டு விட்டோம்.. நீங்டக இரண்டு பேரும் சாப்பிடுங்க நாங்க வெளியே போயிட்டு வரோம்” என்று மொழிந்தவன்” என்றவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அலக்நந்தாவை பார்த்து முறைப்படி தன் அண்ணனிடம் அறிமுகம் செய்து வைக்க…

எப்பையும் போல எண்ணி ஒரு வார்த்தை அந்த புதியவனிடம் பேசினாள்.

அவள் யார் என்பதை தெரிந்தும் கண் அசைவினில் கூட காட்டிக் கொள்ளாத அந்த “நவாப்” இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சித்தும் அவனும் வெளியேற.. அப்பொழுது வரை அவனின் விரல்களை இறுக்கி பிடித்திருந்தவள் மெல்ல விடுவித்தாள்…

அவனை விரலை இத்தனை நேரம் பிடித்திருந்ததை கூட அவள் உணர்ந்திருக்க மாட்டாள் என்பது பத்ரியின் யூகமாக இருக்க…

எதுவுமே நடக்காதது போல் பத்ரி… “வா சாப்பிடலாம்” என்று அழைத்தவுடன் அமைதியாக வந்தவள்… அந்த நவாப் சென்ற திசையையே ஒரு நிமிடம்

பார்த்தவளின் முகத்தில் ஒரு பயமும் ஏதோ நிராசையும் பரவ…

“பத்ரி..” என்று தயக்கத்துடன் அழைத்தவள் அவன் நின்று திரும்பியவுடன் “என்னிடம் இந்த ஒரு வாரம் மட்டும் எந்த ஒரு கேள்வியும் கேட்காமல்… ஜஸ்ட் நீ சொன்ன ப்ரெண்டா இருக்க முடியாமா?” என்று முதன் முறையாக அவனை ஒருமையில் அழைத்து திடீரென்று கேட்க…

அவளிடம் இருந்து இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்காத பத்ரி.. ஒரு நிமிஷம் அவளை ஊடுருவி பார்த்தவன்.. “அலக்நந்தா அது என்ன ஒரு வாரம் மட்டும் ப்ரெண்ட்?? ஏன் அதுக்கு அப்புறம் நான் என்னாவாகி போவேன்?” என்றான் அழுத்தமாக.

“அது.. அது…” என்று மென்று விழுங்கியவள்… “அதை ஒரு வாரம் முடிந்த பிறகு பார்த்துக் கொள்ளலாமே…” என்று மிகுந்த இறைஞ்சலுடன் கேட்டாள்.

அவள் சாதாரணமாக கேட்டிருந்தாளே அவன் ஒத்துக்கிட்டு இருந்திருப்பான்… இப்படி அவள் இறைஞ்சவும் எதைப் பற்றியும் யோசிக்காமல்

“சரி.. ஆனா மறக்காதே அலக்நந்தா… எனக்கு இந்த வாரம் மட்டும் நீ ப்ரெண்டு இல்லை… எப்பவுமே ப்ரெண்ட் தான்…” என்று எளிதாக ஒத்துக் கொண்டவன் “மறந்திடாதே… இந்த பெட் மேட்டர் இந்த வாரம் முடிந்தவுடன் கேட்பேன்”.

இப்படி ஃப்ரெண்டு மட்டும்தான் என்று சொல்லியவன் விரைவில் “நீ என் ப்ரெண்டு மட்டும் இல்லை… அதுக்கும் மேலே… எல்லாத்துக்கும் மேல” என்று தன் வாயாலேயே மாற்றி சொல்லப் போகிறோம் என்று முன்பே தெரிந்திருந்தால் ஒத்துக்கொண்டிருப்பானோ என்னவோ?1?

அவள் கேட்டுக் கொண்டது போலவே அவன் எதையும் கேட்காது இருக்க… அவர்களிடம் ஒரு ஆழமான ஒரு நல்ல நட்பு மலர தான் செய்தது. என்றாலும் பத்ரிக்கு மட்டும் அவள் பழகிய விதம்.. என்னமோ இந்த ஒரு வாரத்திற்கு பிறகு அவனை என்னவோ பார்க்க முடியாது போலவும்.. இனி பழகவே முடியாது என்பது போல அவள் நடப்பதும்.. அது எல்லாவற்றையும் விட என்னமோ அந்த ஒருவாரத்திற்கு மேல் இந்த பூலோகமே அழிந்து விட

போகிறது என்பது போல் அவள் நடக்க ஆச்சரியமாக கூட இருந்தது..

இது எல்லாம் அவளும் அவனும் சீறிப்பாய்ந்து ஒடும் அலக்நந்தா நதியின் கரையில் ஏதோ பேசிக் கொண்டிருந்தவள்.. கால் தவறி ஆற்றில் விழும் விழும் வரைதான் அதன் பிறகு நடந்து எதுவும் அவன் கையில் இல்லை....

இன்று...

“நீ சொன்ன எல்லா படத்திற்கும் நான் மட்டுமே வில்லனா இருந்தா எப்படி இருக்குமோ அப்படி இருக்கு சித்” என்றான் துக்கம் கலந்த ஆற்றாமையுடன்.

“ஏய்... அந்த கால ஹீரோவை போல ரொம்ப நல்லவனா இருந்தா யார் ரசிக்கிறாங்க சொல்லு?!? வில்லத்தனத்துடன் கூடிய ஹீரோ தான் எல்லோருக்கும் பிடிக்குது... போலீசே இருந்தாலும் போக்கிரி போலீசா இருந்தா தான் மக்கள் ரசிக்கிறாங்க.... சொ நீ வில்லத்தனமாக இருந்தாலும் நீ ஹீரோ தான்டா மச்சி..” என்று விளையாட்டு தனமாக சொன்னவன்...
“டேய்... நீ இந்த மாதிரி அதீதமா கற்பனை பண்ணாமல் போய் படு. உங்களுக்காகத்தான் இத்தனை நேரம் வெயிட் பண்ணிட்டு இருந்தேன்... எனக்கு பயங்கர தூக்கம் வேற வருது குட் நைட்” என்று சற்றே அமைதியாக மொழிந்துவிட்டு தன் ரூமை நோக்கி நடந்தான் சித்.

இவர்கள் இங்கே உரையாடிக் கொண்டு இருக்கும் வேளையில் அலக்நந்தா இனியும் நெஞ்சை அறுக்கும் இந்த ரணத்தை ஒற்றையாக கையாள முடியாது... அடுத்து என்ன செய்வது என்று புரியாது... வேறு மார்கமும் தெரியாது அவளுடைய அக்காவிற்கு போன் செய்தாள்!!!

இரண்டாவது ரிங்கிலேயே எடுத்த நிகாரிக்கா... “நந்தா..” என்றாள் ஆச்சரியமாக.

“ம்ம்..” என்றபோது அழுகையின் அடையாளம் அவள் குரலில் எஞ்சி இருக்க...

“நந்தா அழறியா?? ஏன் என்னாச்சு பத்ரி ஏதாவது சொன்னானா?” என்று படபடத்தவள்..

“பத்ரியை பற்றி பேசும் பொது மரியாதையா பேசுக்கா.. அவர் யாருன்னு தெரியுமில்லை?!?” என்றாள் அலக்நந்தா எரிச்சலாக. இத்தனை நேரம் இருந்த அழுகை முழுமையாக விடைப்பெற்று ஒரு கடினம் குடியேறி இருந்தது.

ஒரு நிமிடம் மறுமுனையில் அமைதி குடிகொள்ள.. “சாரி அவசரத்தில் ஒருமையில் பேசிவிட்டேன்… உனக்கு அங்க இருக்க கஷ்டமா இருந்துச்சுன்னா வீட்டிற்கு வந்து விட்டு போயேன் நந்து”.

“நான் வீட்டிற்கு வரேன் ஆனா அங்க யார் இருப்பா?? நாடு விட்டு நாடு பறந்து பறந்து ஷூட்டிங் போய் கொண்டு இருக்கும் நீயும் அங்க இருக்கமட்ட… டாக் ஷோ நடத்திக் கொண்டிருக்கும் அம்மாவும் இருக்க மாட்டாங்க… ப்ரோடக்ஷன் வேலையில் பிசியா இருக்கும் அப்பாவும் இருக்க மாட்டாங்க.. நீங்களே ஒருத்தரை ஒருத்தர் அவார்டு ஷோவில் சந்திக்கும் போது தான் பார்த்துக்குறீங்க.. நான் எதுக்கு அங்கே…” என்றாள் விரத்தியாக.

“இல்ல… நீ வரும் போது சொல்லு நானும் அங்கே இருக்க முயற்சி செய்யறேன்..” என்றாள் பிடிவாதமாக நிகாரிக்கா.

“எனக்கு பயமா இருக்கு.. நீயாவது வாக்கான்னு போனில் கதறி அழுத போது பர்த்டே பார்ட்டியை முடித்து விட்டு வர முயற்சி செய்கிறேன்னு சொல்லி விட்டு… உன் நண்பர்களுடன் என்னுடைய தோல்வியை கேக் வெட்டி கொண்டாடினியே அந்த முயற்சியாக்கா?” என்றாள் அலக்நந்தா ஆவேசமாய்.

“அலக்நந்தா…. நான் செய்தது மிக பெரிய துரோகம் தான்.. ஆனா….” என்று பேச வந்தவளை.

“வேண்டாம் அக்கா… மீண்டும் உன் சாரி படலத்தை ஆரம்பிக்காதே… உனக்கு போட்டியா இதே சினிமா துறையில் நான் இருந்திருந்தால் நீ என்னுடன் பேசி இருப்பியான்னு கூட எனக்கு தெரியலை..” என்று வன்மம் வெடிக்க மொழிந்தாள் அலக்நந்தா.

“ப்ளீஸ்… அப்படி எல்லாம் பேசாதே அலக்நந்தா… ஒரு அக்காவா இருந்து… என் தங்கையை காக்கும் பொறுப்பில் தவறி விட்டேனேன்னு குற்ற

உணர்வே என்னை வாழ்நாள் முழுக்க கொலை குற்றவாளியா நிற்க வைக்க.. அது பத்தாதுன்னு நீ இப்படி பேசியே என்னை கொல்லாதே..." என்று மிகுந்த வருத்தமாக.. மொழிந்தவள்.. "இப்ப வேணுன்னாலும் ஒரு வார்த்தை சொல்லு உன்னை நடிக்க வைக்க நிறைய பேர் ரெடியா இருக்காங்க.. அப்பவாவது என்னை நம்புவியா?!?" என்றாள் ஆற்றாமையுடன்.

"வேண்டாம்.. உன் உயிராக நீ மதிக்கும் இந்த சினிமா எனக்கு வேண்டாம்.. அது தரும் பேரும்... பணமும்.. எல்லாத்தையும் விட அது தரும் புகழ் போதையும்.. எதுவும் வேண்டாம். எனக்கு பத்ரியும் அவன் குடும்பமும் மட்டும் போதும். நான் உன்னை கூப்பிட்டதே அதுக்கு தான்... எனக்கு பத்ரியுடைய பாட்டி போன் நம்பர் வேணும்" என்றாள் பிடிவாதமாய்.

"பழைய காலேஜில் உன்னை யாருன்னு தெரிய ஆரம்பிக்க... அது மீடியா வரைக்கும் போகாமல் தடுப்பதற்காகவே அவசரமாக வேற காலேஜ் பார்த்துக் கொண்டு இருந்த சமயத்தில்தான் சௌவி நீ பத்ரியுடன் இருந்தால் பத்திரமாக இருப்பாய் என்று உறுதி அளித்தாள். நீ அங்கே பத்திரமாய் இருப்பாய் என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே உன்னை அங்கே அனுப்ப ஏற்பாடு செய்தேன்... ஆனா இப்படியெல்லாம் நடக்கும் என்று கனவில் கூட நினைக்கவில்லை நந்து... ப்ளிஸ் என்னை நம்பு..."

"என் பத்ரியை உன்னால் தான் இங்கே பார்க்க முடிந்தது.. அந்த ஒரே ஒரு காரணத்திற்காக நீ என்னை கொன்று இருந்தால் கூட நான் மன்னிப்பேன் அக்கா..." என்றாள் அலக்நந்தா அமைதியாக.

"நந்தூ..." என்று துக்கமும் ஆனந்தமும் கலந்த குரலில் நிகாரிக்கா மொழிய.. "உனக்கு பத்ரியுடன் இருப்பதில் தான் சந்தோஷம் என்றால் அதை தடுக்க நான் யார்? ஒரு சச்சிதேவால் நான் சினிமா துறையில் பெரும் புகழும் பெற்றேன் என்றால் இன்னும் ஒரு சச்சிதேவால் என் தங்கை என்னை மன்னிக்கிறாள் என்றால் அவர்களுக்கு தான் வாழ்நாள் முழுக்க நன்றி கடன் பட்டு இருக்கேன்னு சொல்லனும் போல..." என்றாள் கண்களில் கண்ணீர் வழிய....

அத்தியாயம் - 13

மூன்று மாதங்களுக்கு முன்பு.....

அலக்நந்தா சொன்ன ஒரு வாரம் கெடு முடிந்த நிலையில் அதைப் பற்றி பிரஞ்ஞையே இல்லாதது போல் அவள் இருக்க... அதில் தனக்கும் ஒரு பிரச்சனையும் இல்லை என்பது போல் பத்ரியும் அதை கண்டுக் கொள்ளாது அவள் கொடுத்த அந்த இடைவெளியிலேயே அவனும் பழக.. அடுத்த ஒரு வாரமும் இப்படி இனிமையாகவே கழிந்தது.

இந்த இரு வாரத்தில் "பெஸ்ட் ப்ரெண்ட்" அவார்ட் வாங்கும் அளவு எல்லாம் பழகவில்லை என்பது ஒரு புறம் இருக்க... எப்பொழுதும் தனியாக சாப்பிடும் பழக்கமுடையவள் இவர்களுடன் இரவில் சேர்ந்து சாப்பிடவும்.. ஹிஸ்டரி செனலில் எந்த நிகழ்ச்சி பார்க்க வேண்டும் என்றாலும் தன் லாப் டாப்பிலே பார்த்தவள் அதை விடுத்து இப்போது அவர்களுடன் டி.வியில் சேர்ந்து பார்த்ததும் தான் இந்த அவன் கண்ட முன்னேற்றமாக இருந்தது... அதுவும் வேறு யாராவது ரூம்மிற்கு வரும் வரை தான். அப்படி யாராவது வந்து விட்டால் அவர்கள் அமரும் முன் முதலில் இடமாறி பத்ரியின் அருகில் உட்காருவது அவளாக தான் இருக்கும்!!!

அவளை போல் இவன் ஒன்று கால அவகாசம் நிர்ணயித்து எல்லாம் அவளுடன் பழகவில்லை என்பதால் அவளின் இந்த விசித்திர குணத்தை பெரிதாக எடுத்துக்கொள்ளதாது... எப்பயும் போல் சாதாரணமாக தான் இருந்தான்.

பத்ரியுடன் நன்றாக பழகிய போதும் பெரும்பாலும் அவர்களுடன் இருக்கும் சித்திடம் சற்றே தயக்கம் மறந்து பழகினாள்.

அப்படி அவர்கள் ஒருநாள் பேசிப்படியே சாப்பிட்டுக்கொண்டு இருந்த போதுதான் ஹத்ராபாத்தில் நடக்கும் பேஷன் ஷாவிற்கு ஆர்யா போய் இருப்பதாக பத்ரி தெரிவித்தான்.

"வாட்?? ஆனா கார்த்திக்... எங்க ஹோட்டலில் தான் தங்கி இருப்பதாக இன்று மாலை மேசேஜ் பண்ணினானே." என்றான் சப்பாத்தியை வாயில் தினித்தப்படி சித்.

பத்ரியின் முகத்தில் வந்த ஆச்சரியத்தை பார்த்து "கார்த்திக் போனது உனக்கு தெரியாதா?" என்றாள் அலக்நந்தா அவனை விட ஆச்சரியமாக.

“ம்கூம்..” என்றான் பத்ரி அவள் புறம் திரும்பி.

“ரியலி...?? நீயும் கார்த்திக்கும் ரொம்ப க்லோஸ்ன்னு நினைத்தேன் நான்” என்று சித் சொல்ல..

“ஆனா... ஆனா... நீயும் ஆர்யாவும் தான் ரொம்ப நெருக்கம் என்று நான் யூகித்தேன்” என்றாள் அலக்நந்தா இருவரையும் பார்த்தப்படி.

“நீங்க சொல்லும் இரண்டுமே சரிதான்.. நடுவில் பிறந்தாலோ என்னவோ ஆர்யாவிற்கு சரி.. கார்த்திக்கும் சரி நான் சகோதரன் என்பதை விட பெஸ்ட் ப்ரெண்டு ரேஜில் தான் எங்களில் உறவு முறை இருக்கும்... பட் ஆர்யாவிற்கும் கார்த்திக்குமான உறவு டிப்பிக்கல் அண்ணன் தம்பி உறவு முறையாக இருக்கும்... உன் அண்ணன் என்ன சொன்னாலும் கண் மூடி தனம்மா நீ கேட்பயே அது மாதிரி தான் இருக்கும் அவர்களுடையதும்.” என்று சித்தை பார்த்து மொழிந்தவன்.

“நானாவது ஆர்யா இந்த துறையில் இருக்கானேன்னு பேஷன் ஷோவை கடமையேன்னு பார்ப்பதுண்டு.. ஆனா அந்தளவு பொருமையும், சகிப்புதன்மையும் கார்த்திக்கிற்கு கிடையாது பட் ஸ்டில் ஆர்யாவின் ஷோவிற்கு இப்படி திடுதிப்புன்னு போவது கூட ஒரு மாரல் சப்போட்டுக்காத தான் இருக்கும்.. தம்பியுடையான படைக்கு அஞ்சான்னு கேள்வி பட்டது இல்லை அந்த மாதிரி.. அவனுடைய கல்யாணத்தை கூட... என்ன பண்ணலான்னு.. எப்படி பண்ணலான்னு என்னிடம் விடிய டிஸ்கஸ் பண்ணிவிட்டு... அப்பாவிடத்தில் கேட்பதற்கு பதில் ஆர்யாவிற்கு போன் பண்ணி பர்மிஷ்ன் கேட்ட ஆள் அவன்... கார்த்திக்குடைய சகோதர பாசம் எப்பேர் பட்டதுன்னா வீட்டிற்கே தெரியாமல் அண்ணனுக்கு கல்யாணம் ஏற்பாடு பண்ணற அவளவுக்கு உயர்ந்தது!!!” என்று பத்ரி சிரிப்புடன் கூற..

“வாட் வீட்டிற்கு தெரியாது கல்யாணமா?” என்று இருவரும் அலறியதில் ஆரபித்து ஆர்யாவின் கல்யாணத்தையும் அதில் அரங்கேறிய கூத்தை பத்ரிக்கே கூரிய பாணியில் விளக்க... இருவரும் சாப்பிடுவதை மறந்து விழுந்து விழுந்து நகைத்தனர்.

இப்படி பேச்சும் சிரிப்புமாக அடுத்த இரண்டு நாளும் கழிய.. பத்ரியின் பேப்ர்

பிரஸ்டெஷன் நாளும் நெருங்க… அதற்கான வேலையில் அவன் பயங்கர பிசியாக ராத்திரி பகலாக பிசியா திரிய… அவன் ரூம்மில் இருக்கும் நேரமும் குறைந்தது.

தன் ரூமில் இருந்து வெளியே வந்த போது ஹிஸ்டரி சேனலில் ஏதோ டாக்குமென்டரி பார்த்துக் கொண்டிருந்தவளை கண்ட சித் "குட் மார்னிங்க… பத்ரி… பேப்பர் பிரஸன்டேஷன் தயார் பண்ண கிளம்பி போயாச்சா..??" என்று கேட்டபடி நேராக அவள் எதிரில் இருந்த கவுச்சில் அமர்ந்தான்.

"குட் மார்னிங்க… போய் அரை மணி நேரம் ஆச்சு… உங்களுக்காக ஹைதிராபாத்திகளுக்கு இஷ்டமான இரானி டீ… ப்ளாஸ்கில்" என்று அவள் சொல்லி முடிக்கும் முன்…

"வாட்???" என்றபடி துள்ளி குதித்து எழுந்து சென்று ப்ளாஸ்கில் இருந்த டீயை மக்கில் ஊற்றியபடி அதை முகர….

அதைக் கண்டவள் வேகமாக "வந்து சித்.. நீங்க இரானி டீ இல்லாமல் ரொம்ப ப்ஃல் பண்ணதாகவும்… உனக்கு போட தெரியுமான்னு பத்ரி கேட்டார்… அதான் முயற்சி செய்தேன் எப்படி இருக்குன்னு தெரியாது.." அவள் சொல்லிக் கொண்டே இருக்க அதையும் எதையும் காதிலே வாங்காது…

"ஐ மிஸ் யூ மை டியர்…" என்ற அந்த மக்கில் இருந்த டீயை பார்த்து காதல் ரசம் பொங்க வசனம் பேசியவன்… குதூகலமாக அதை ரசித்து உறிஞ்சினான்..

அவனுடைய டீ மேல் உள்ள காதலைக் கண்டு அதிர்ந்து போய் என்ன பேசுவது என்று தெரியாமல் அவனைப் பார்த்துக் கொண்டு இருக்க… ஒரு செட்டு விடாமல் குடிக்கும் வரை அவனும் அந்த டீயுமே தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தவன் ஒரு வழியாக தன் உலகில் இருந்து மீள… அவனை விசித்திரமாக பார்த்துக் கொண்டிருந்தவளை கண்டு…

"தேங்க்ஸ் அலக்நந்தா.." என்றான் ஆத்மார்த்தமாக.

"உங்களுக்கு டீ அவ்வளவு பிடிக்குன்னு தெரியாது.." என்றாள் ஆச்சரியம் பொங்க அலக்நந்தா.

“ஹைதராபாத்தி லவ்ஸ் டீ.. அதுவும் ஒரு நல்ல இராணி டீ கிடைக்கும்னு தெரிந்தால்... நாலு கிலோ மீட்டர் இல்லை நானூறு கிலோ மீட்டர் போய் கூட குடிக்க தயங்க மாட்டாங்க... இந்த இராணி டீயை குடித்து பார்க்க தான் சச்சின் டென்டுல்கரே வந்தார் தெரியுமா? எனக்காக தயாரித்ததுக்கு ரொம்ப ரொம்ப நன்றி அலக்நந்தா” என்றான் மனமார்ந்த நன்றிகளுடன்.

“எப்படி இருந்தது..??” என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்க.

“பெஸ்ட்ன்னு எல்லாம் பொய் சொல்ல மாட்டேன் பட் குட்.. அதை விட எனக்காக போட்டதற்காகவே வெரி ஸ்பெஷல் தேங்க்ஸ்..” என்று அத்தனை நேரம் சிரித்தபடி மொழிந்தவனின் முகம்... சட்டென்று இறுக..

“அல்கா... இந்த டீ எனக்காக போடலைன்னு தெரியும்... ஒருவேளை இந்த டீ மூலம் பத்ரியை இம்பரஸ் பண்ண தான்...” என்று சித் சொன்னதை காதிலேயே வாங்காமல் “அல்கா” என்ற வார்த்தையே கேட்ட மாத்திரத்தில் மடியில் இருந்த லேப் டாப்பை அது கீழே விழுந்தது கூட தெரியாது உரைந்து போய் எழுந்து நிற்க...

“எனக்கு நீ யாருன்னு தெரியும் அலக்நந்தா...” என்றான் அமைதியாக சித்.

ஒரு நிமிடம் தன் கண்களை இறுக முடி திறந்தவள் “வந்து பத்ரிக்கு..”

“ம்கூம்.. இதுவரை தெரியாது...” என்று அவளை குற்றம் சாட்டும் பார்வை பார்த்தான்.

அவனின் பார்வை உக்கிரத்தை தாங்காது வேகமாக பார்வையை தவிர்த்தவள்... “உங்க அண்ணன்...?” என்று அமைதியாக இழுக்க...

“இல்ல.. அவர் சொல்லலை... நானா கேட்காமல் அவராக எதுவும் சொல்ல மாட்டார்..”

“அவராக சொன்னாலும் நீயா கேட்டாலும் என்ன வித்தியாசம் இருக்கப் போகுது சித்?” என்றாள் வெறுப்பாக.

“நிறைய வித்தியாசம் இருக்கு… நீயா உன்னைப் பற்றி பத்ரியிடம் சொல்வதற்கும் நானா அவனிடம் சொல்வதற்குமான வித்தியாசம் இருக்கு அலக்நந்தா. அது உனக்கு புரியலைன்னு நினைக்கிறேன்…” என்றான் திடமாக சித்.

“சித்…” என்று அவள் அழா குறையாக அழைக்க..

“அலக்நந்தா… நீ என்ன பிரச்சனையால் இங்க வந்தேன்னு தெரியாது.. எதுக்காக வந்தேன்னு தெரிய வேண்டாம்… ஆனா வந்த இடத்தில் கிடைத்த நட்பை ஏமாற்ற வேண்டாமே…” என்றான் சித்.

“ஏமாற்றன்னு நினைக்கவில்லை சித்.. ஆனா கிடைத்த நட்பை இழக்க பிடிக்காம தான்…” என்று அவள் இழுக்க..

“ஒரு பொய்யில் ஆரம்பித்த எந்த உறவும்… நிலைக்கவும் நிரந்தரமாகவும் வாய்ப்பில்லை அலக்நந்தா… அது ஏன் உனக்கு புரியலை…”

“புரியாமல் இல்லை.. ஆனா…”

“தள்ளிப் போட.. போட.. உனக்கு மட்டும் பிரச்சனை இல்லை அலக்நந்தா… பத்ரிக்கும் தான்.. இன்பாக்ட் உன்னைப் பற்றி என் அண்ணனிடம் பேசியது கூட அவனுக்காக தான்…”

“உங்க அண்ணனுக்கு எப்படி தெரியும்?”

“நான் யாருன்னு உனக்கு தெரியும்… கடந்த ஐநூறு வருஷமாக என் நவாப் குடும்பத்தில் இயற்கையாக இறப்பதை விட போரிலும்.. உறவினர் மற்றும் நட்புகளின் துரோகத்திலும் இறந்தவர்கள் தான் அதிகம்.. அதனாலேயே பாதுகாப்பிற்கு ஏகப்பட்ட விதி முறைகள் இன்னும் நடைமுறையில் இருக்கு… ரூமிற்கு வந்து சமைத்து சாப்பிட்டு விட்டுப் போகும் ஆளைப் பற்றி எதையும் தெரியாமல் உன்னை விடுவார்கள் என்று நினைக்கிறாயா அலக்நந்தா?!?” என்றான் அவனின் நவாப்பிற்குரிய குரலில்.

“ஆனா..”

“என் செக்யூரிட்டி ஏற்பாடுகள் எல்லாம் என் அண்ணன் தான் பார்ப்பது வழக்கம்… உன்னைப் பற்றி எதையும் கேட்காமல் தான் இருந்தேன்… என் அண்ணனை பார்த்தவுடன் பயந்து போய் பத்ரியின் கையைப் பிடித்தாய் பார் அப்பவே எனக்கு தெரியும் சம்திங் ப்ஷ்ஷி… அதனால் தான் அண்ணாவிடம் கேட்டேன்… நீ யாராக இருந்தாலும்… உன்னை பத்ரிக்கு பிடிக்கும். அதனால் உண்மையை சொல்லி விடு” என்றான் திடமாக.

“ஐ நோ.. ஐ நோ… ப்ளிஸ்.. சித் நானே சொல்லிடறேன்” என்றாள் கெஞ்சும் குரலில்.

பெருமூச்சு ஒன்றை விட்டவன்… “ம்ம்…. அவன் நடப்பை அட்வான்டேஜா எடுத்துகாதே அலக்நந்தா… என் அண்ணனுக்கு அடுத்தப்படியா நான் மதிக்கும் ஆள் அவன்” என்றான் பொறுப்பான நண்பனாக.

இந்த நாள் வரும் என்று அவள் நிச்சயம் அறிவாள்.. அதுக்குதான் அவள் இந்த ஒருவாரம் கெடு விதித்ததே.. ஆனால் அது ஒரு வாரத்தை கடந்து போகும் போதே அவளுடைய அதிர்ஷ்டத்தை நினைத்து பூரிந்திருக்காமல் உண்மையை சொல்லி இருக்கலாம் தான். ஆனால் ஏனோ அவளைப் பற்றி சொல்ல மனது வரவே இல்லை… அவளுடைய உணர்வை எப்படி சொல்லுவாள்? சொன்னாலும் புரிந்துக் கொள்ளும் தன்மை உண்டா என்று அவளுக்கு புரியாத குழப்பத்தில் இருக்க… சித் வந்து இப்படி சொல்லவும் தான் வேறு வழியில்லாமல் இனியும் தள்ளிப்போட கூடாது என்று தீர்மானித்தவள் முன் மாலைப் பொழுது ரூம் வந்த பத்ரியை வாக்கிங் போகலாம் வா என்று அழைத்துக் கொண்டு நதிகரையில் நடந்து போக..

ஏதோ முக்கியமாக பேச வேண்டும் என்று கூறிவிட்டு முக்கியமாக எதையோ பேச தான் அவள் இங்கே அழைத்து வந்திருக்கிறாள் என்று வார்த்தையால் கூறாவிட்டாலும் கூட அவள் அழைத்த விதமும்… கையை பிசைந்தப்படி அவனுடன் நடந்த விதமும் அவளின் எகிரி துடித்த இதய துடிப்பையும் படபடப்பும்… கட்டியம் கூற.. எதற்காக இவ்வளவு டென்ஷனாக இருக்கிறாள் என்று புரியவிட்டாலும் அவளே வாயை திறந்து கூறட்டும் என்று எதுவும் பேசாமல் அமைதியாக உடன் வர… அவனின் அந்த புரிதலும்.. நெருக்கமும் இன்னும் அதிகமாக அவளை டென்ஷனாக்க…

தன் மூன்று இன்ச் ஹில்சில் நடந்தவளுக்கு வழியில் பெரிய கல் இருந்ததை கூட கவனிக்காது.. கால் தடுக்கி சரிவாக இருந்த மேட்டில் இருந்து அப்படியே அலக்நந்தா நதி பிரவாகம் எடுத்து ஓடும் ஆற்றங்கரையில் விழ..

சூழலோ... ஆழமோ அதிகம் இல்லாத நதியின் கரையி கால் இடறி விழுந்தவள் எந்த வித போராட்டமே இல்லாது அப்படியே முழுக... கண்முன்னே நடந்த நிகழ்வை கிரகிப்பது முன் அவள் முழுக... "அலக்நந்தா" என்று அழைத்தவன்... அடுத்த நொடி தன் ஷூவை கழட்டியபடி தண்ணீரில் குதித்தான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் நீரின் அடியில் முழ்கிக் கொண்டே இருந்தவளைப் பற்றி இழுத்து வெளியே அவன் வந்து கரையில் கிடத்த... தண்ணீர் புரையேறி விக்கலும் விம்பலுமாய் அவன் மேல் சாய்ந்து இரும...

"ஒரு நிமிடம் என் இதயமே நின்னு போச்சு அலக்நந்தா" என்றபடி அவளை மார்போடு இறுக அணைத்தவன்.. "ப்ப்.." என்று பெருமூச்சு விட்டபடி

"தேங்க் காட் யூ ஆர்...." என்று எதையோ பேச ஆரம்பித்தவன் பின் யோசனையுடன் தன் மார்பில் புதைந்தவளின் தலையை உயர்த்தியவன் "உனக்கு எங்க அடிப்பட்டிருக்கு...??" என்றான் கண்ணாடி இல்லாத விழிகளை நேருக்கு நேராக நோக்கி.

"எங்கேயும் அடிபடலை" என்றபடி தன் கையை வேகமாக பின்னுக்கு இழுக்க.. வலிதாங்க முடியாமல் கண்கள் கலங்கி நீர் வழிந்தது.

"உன் கையில் அடிப்பட்டு இருக்கு இல்ல?? அதனால் தான் உன்னால் கையை கூட உயர்த்த முடியாது அப்படியே தண்ணீர் முழுகினாய் இல்ல?" என்றபடி அவளின் கையை ஆராய.. பார்த்தவுடனே ப்ராக்சர் ஆகி இருக்கு என்று புரிய...

"கையை அசைக்காதே... தண்ணில விழம்போது என் போனும் நனைந்து இருக்கும்.. யாரையும் கூப்பிட முடியாது" என்றபடி அவளை அப்படியே தூக்க..

“பத்ரி..” என்று அவனின் ஈர மார்பில் அழுத்தமாக பதிந்த அவளின் முகமும் அதில் இருந்து வந்த வெது வெதுப்பான கண்ணீரும் உணர… அவள் கண்ணீர் பட்ட இடம் தீயாய் சுட்டது அவனுக்கு.

“இன்னும் ஐந்து நிமிஷத்தில் ஹாஸ்பிடல் போயிடலாம் மோனல்.. ஹால்டான்..” என்று மிக மென்மையாக மொழிந்தவன் அவளை பூ தூக்குவது போல் தூக்கி செல்ல… அவளோ வலியிலும் அதிர்ச்சிலும் வாயை இருக்க மூடி அவன் மார்பில் இன்னும் அழுத்தமாக புதைந்தாள்.

அடுத்த பத்து நிமிஷத்தில் ஹாஸ்பிடல் வந்து சேர அவசரமாக அவளுக்கு முதல் உதவி செய்து எக்ஸ்ரே மற்றும் கட்டு போட்டு விட்டு வெளியே வர அடுத்த ஒரு மணி நேரம் ஆக…

அதற்குள் பாயலுக்கு போன் செய்து விஷயத்தை தெரிவித்தவன் மாற்று உடை எடுத்து வரும்படி தெரிவித்துவிட்டு சித்திற்கும் தகவலை தெரிவித்து அவனுடைய காரை எடுத்து வர சொல்லி பணித்து விட்டு ஹாஸ்பிடலில் எல்லா வேலையும் முடித்து விட்டு.. அனைவரும் ரூம் வரும் முன் இரவை தாண்டி இருந்தது.

ரூம் வந்ததும் அவர்களுக்கு உணவு தயாரகி இருக்க… எதுவும் வேண்டாம் என்று மறுத்த அலக்நந்தாவை பிடிவாதமாக சூப்பை மட்டும் குடிக்க செய்த பாயல் மாத்திரையும் கொடுத்து முழுங்க செய்ய ஒரு செய்யலாகாத கோபத்தோடு பத்ரியை முறைத்து விட்டு அமைதியாக பாயலில் கை பிடியிலேயே ரூம் சென்று படுத்தாள்.

பாயலை விட்டு வர சித் செல்ல… முதல் முறையாக அலக்நந்தாவுடைய ரூமிற்குள் சென்றான் பத்ரி.

காலடி சத்தத்தை கேட்டு கண் விழித்தவளின் விழியில் வலியின் தாக்கம் இன்னும் குறையாமல் இருக்க..

அமைதியாக அவள் அருகில் உட்கார்ந்து.. “ரொம்ப வலிக்குதா??” என்றான் மெல்ல.

“ஆமாம்” என்பது போல் லேசாக தலையை ஆட்டினாள்.

"கேட்க மறந்தே போனேன்.. உன் போன் தண்ணீல விழுந்து தொலைந்து போச்சு... இது என் போன்.. வீட்டில் யாருக்காவது போன் பண்ணி சொல்லனுன்னா.." என்றபடி தன் பாக்கெட்டில் இருந்த போனை எடுத்து நீட்ட..

வேண்டாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

"என் போன் வேண்டாமா இல்ல உன்வீட்டில் யாருக்கும் சொல்ல வேண்டாமா??" என்று அவன் அதிர்ந்து கேட்க.

"சொல்லும் அளவுக்கு யாரும் இல்லை பத்ரி.."

"வாட் யூ மீன் பை தட்... உனக்கு அப்பா அம்மா எல்லோரும் இருக்காங்கதானே??" என்றான் படபடப்பாக.

"மம்..ம்" என்று பதில் மட்டும் தான் பதிலாக வர..

எதுவும் கேட்காமல் அவளை ஆழமாக பார்த்தவன் "அட்லீஸ்ட் உன் அக்காவிற்காவது?"

அதற்கும் மறுப்பாக தலையை அசைக்க..

"மை காட்... உனக்கு கையில் ப்ராக்சர் ஆகி இருக்கு.. அதை சொல்லக் கூடிய ஆளு இந்த உலகத்தில் யாரும் இல்லையா?" என்றான் அதிர்ச்சியாக.

"நீ இங்க இல்லாமல் இருந்திருந்தால் உனக்கு போன் சொல்லி இருப்பேன் பத்ரி... நீ இங்கேயே இருக்க நான் யாருக்கு போன் பண்ணி சொல்ல?" என்றாள் மெல்ல.

இன்று...

"உனக்கு பத்ரியுடன் இருப்பதில் தான் சந்தோஷம் என்றால் அதை தடுக்க நான் யார்? ஒரு சச்சிதேவால் நான் சினிமா துறையில் பெரும் பேரும், புகழும் பெற்றேன் என்றால் இன்னும் ஒரு சச்சிதேவால் என் தங்கை

என்னை மன்னிக்கிறாள் என்றால் அவர்களுக்கு தான் வாழ்நாள் முழுக்க நன்றிக்கடன் பட்டு இருக்கேன்னு சொல்லனும் போல…" என்றாள் கண்களில் கண்ணீர் வழிய….

"அக்கா" என்று தொண்டையை அடைக்க மொழிந்தவள். "எனக்கு ஒன்னும் மட்டும் புரியவே இல்லைக்கா… நான் என்னக்கா தப்பு பண்ணினேன்.. எதுக்குக்கா என்னை பிடிக்கவே இல்லை..?" என்றாள் அலக்நந்தா தொண்டை கமற….

"ப்ளீஸ் நந்தா தப்பு என்னுடையது… ப்ளீஸ் நீ அழாதே…" என்று வேதனையாக மொழிந்தவள்… "உனக்கு ஞாபகம் இருக்கான்னு கூட தெரியலை… நீ ஆறு வயதில் நடித்த முதல் படத்தில் என்னை தான் முதிலில் புக் செய்து… போட்டோ ஷூட் முதற்கொண்டு எல்லா ஏற்பாட்டையும் செய்து விட்டு பூஜையும் போட்டு விட்ட நிலையில்.. எதற்கோ நம் வீட்டிற்கு வந்த உன்னை பார்த்த டைரக்டர் நீ தான் மிகவும் பொருத்தமாக இருப்பாய்ன்னு உன்னை வைத்து படம் எடுத்தார்.. அந்த படத்தில் உனக்கு கிடைத்த புகழ்.. உன்னை எல்லோரும் கொஞ்சிய விதம்… எல்லோமே எனக்கு சொந்தமாதை நீ தட்டி பறித்துக்கொண்டாய் என்று எண்ணம் தோன்ற… அப்ப ஆரபித்த இந்த பொறாமையும், பகையும்… உன் ஒவ்வொரு படத்தின் வெற்றிக்கு பிறகும் அது கூடிக்கொண்டே போக.. ஒரு நிமிஷம் கூட நீ உன் குழந்தை பருவத்தை தொலைத்து விட்டுதான் செய்யறேன்னு எனக்கு தெரியவே இல்லை நந்தா…."

"அப்ப ஆரம்பித்து உன் மேல் எனக்கு பொறாமையும் பகையும் நம்முடைய இளமை காலத்தை முழுவதும் தட்டிப் பறித்து விட்டது… இதில் கொடுமை என்னன்னா அதை நான் தப்பு என்று கூட உணராதது தான். சௌவி என் ப்ரெண்டான பிறகு தான், கேவலமான ஒரு அக்காவா உனக்கு இருந்திருக்கிறேன் என்று புரிந்தது… என்னுடைய முட்டாள்தனத்திற்கு எத்தனை முறை நான் உன்னிடம் மன்னிப்பு கேட்க நந்தா??" என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க.

"ம்ம்.." என்பதுக்கு மேல் அலக்நந்தாவால் ஒன்னும் சொல்ல முடியாத அளவு துக்கம் அவளை மழுங்கடிக்க.. "அப்புறம் பேசறேன் அக்கா" என்று போனை அவசரமாக வைத்தவளுக்கு கண்ணில் கொட்டியது.

குப்புறப்படுத்து குலுங்கி குலுங்கி அழுதபடி… அப்படியே உறங்கியும் போனவளின் போனில் நாட் நாட் செவனின் போன் நம்பர் வந்திருக்க… அதை கவனிக்கும் நிலையில் அவள் இல்லை.

மறுநாள் காலையில் நம்பரை பார்த்தவளின் கண்ணில் மின்னல் தெறிக்க.. என்ன பேசுவது எப்படி பேசுவது என்று எதுவும் புரியாமல் படபடக்கும் இதயத்தோடு நாட் நாட்செவனுக்கு போன் செய்ய..

இரண்டாவது ரிங்கிலேயே போனை எடுத்தவள்.. இவள் தன்னை யார் என்று சொல்லும் முன்.. “எப்படி இருக்க அலக்நந்தா… என் பேரன் இன்னும் சண்டி குதிரையா தான் இருக்கானா?” என்றார் தடாலடியாக.

அத்தியாயம் - 14
இரண்டு மாதம்... மூன்று வாரங்களுக்கு முன்பு.

“நீ இங்க இல்லாமல் இருந்திருந்தால் உனக்கு போன் சொல்லி இருப்பேன் பத்ரி… நீ இங்கேயே இருக்க நான் யாருக்கு போன் பண்ணி சொல்ல?” என்றாள் மெல்ல…

இதை அவள் சோகத்திலோ அல்லது மனக் கசப்புடனோ சொல்லி இருந்தால் ஏதோ வீட்டில் இருப்பவர்களுடன் கோபத்தில் இருக்கிறாள் அதனால் தான் இப்படி பேசுகிறாள் என்று நினைத்திருப்பான்.. ஆனால் அவள் மொழிந்த விதத்தில் அப்படி எந்த வருத்தமோ.. கசப்புணர்வோ.. இருக்கவில்லை… ஒரு செய்தி வாசிப்பாளரின் தன்மை அந்த குரலில் இருக்க… இந்த பதிலை கேட்டு அவனுக்கு எங்கோ சுருக்கு என்று தைத்தது.

“அம்மா அப்பாவிற்கு சொல்ல வேண்டாமா?” என்றான் உள்ளே பொங்கிய வருத்தத்தை மறைக்காமல்.

“பத்ரி... நான் என்ன சின்ன குழந்தையா கீழே விழுந்து அடிப்பட்டதுக்கு எல்லாம் அப்பா அம்மாவிடம் ஓடிப் போய் சொல்ல??? அதை நான் சின்ன குழந்தையா இருந்த போதே செய்ததில்லை… எதையுமே தனி ஆளாக நானே பார்த்துக் கொள்ளும்... ” என்று பெரிதாக எதையோ அவள் பேச ஆரம்பிக்க…

அதை விரிவாக கேட்கும் மனநிலையில் அவன் இல்லை என்பது ஒருபுறம் இருக்க, விவரிக்கும் ஆரோக்கியத்தில் அவளும் இல்லை என்பதை உணர்ந்தவன் அமைதியாக அவளைப் பார்த்து "போதும்" என்றான்.

அவனின் பார்வையையும் குரலையும் வேறாக யூகித்து.. லேசாக தலையை தன் உடைந்த கையின் புறம் ஆட்டி… "பத்ரி.. இதுக்கு இவ்வளவு சோகமா இருக்காதீங்க… வெறும் ஹர் லைன் ப்ராக்சர் தான்.. இந்த மாதிரி அடிபடுவது எனக்கு ஒன்றும் முதல் முறை இல்லை.. என்னால் இதை விட அதிகமான…" என்று அவள் மீண்டும் பேச..

இத்தனை நாள் பேசு… பேசு… என்று அவளிடம் வாக்கு வாதம் செய்தவன் முதல் முறையாக அவளாக பேச வந்ததை தடுக்கும் விதமாக சட்டென்று முன்னே வெகுவாக குனிந்து அவள் உதட்டில் தன் ஆள் காட்டி விரலை வைத்தவன்…

"ஷ்..ஷ்.. அது தான் போதுன்னு சொன்னேனே? இதுவரைக்கும் நீ எப்படி இருந்தியோ ஐ ஜஸ்ட் டோன் கேர்… ஆனா இனி சின்னதாக கீறினாலும் என்னிடம் சொல்லனும் புரியுதா?!?" என்று மகா எரிச்சலாக மொழிந்த பத்ரி தொடர்ந்து.. "இனி நீ வாக்கிங் போகும் போது ஹீல்ஸ் போடுவதை பார்த்தேன்… மார்க் மை வ்வோட்ஸ்… உன்னுடைய ஹீல்ஸ் எத்தனை காஸ்ட்லியா இருந்தாலும் அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை.. உன்னடைய ஒவ்வொரு… ஹீல்ஸையும்…" என்று ஆவேசமாக ஏதோ எச்சரிக்க வந்தவனின் கண்களுக்கு.. அவளின் விரிந்த கரு விழியில் விழுந்த அவனின் பிம்பத்தை கண்ணுற்றவனுக்கு… எத்தனை தூரத்தையும் சர்வ சாதாரணமாக நீந்தி கடக்கும் திறம் படைத்த பத்ரிக்கு… அவளின் விழி தூரத்தை… நீந்தி கரை சேர முடியாது… மூச்சு முட்ட தத்தளித்தான்…

அந்த தத்தளிப்பும்… அதனால் அவனுள் கிளர்ந்து எழுந்த எண்ணங்களும் தறிகெட்டு எங்கோ ஓட… தான் பேசிக் கொண்டு இருந்தது பேச வந்தது எல்லாம் மறந்து.. அவசரமாக கண்களை அவளிடமிருந்து பிரம்ம பிரயத்தனம் செய்து பார்வையை திருப்ப… நேரம் காலம் இல்லாமல் அவளின் சங்கு கழுத்தின் அந்த மச்சம் தெரிய…

இத்தனை நேரம் சோகமும், வலியும் பீடித்திருந்த உள்ளத்தில் சட்டென்று

நீர் குமிழியாக குபுகுபு வென்று எங்கிருந்தோ குதூகலம் பீறிட்டு அவனை திணறடிக்க… தன்னை நிலைப்படுத்திக் கொள்ள தடுமாறிய பத்ரியை… அலக்நந்தாவின் அருகாமையும் அவளுக்கே உண்டான மனமும்.. முண்டக விழிகளில் வந்த பாவமும் அவனை மென்மேலும் மூச்சு முட்ட செய்ய… விசுக்கென்று தன் கையை அவள் உதட்டில் இருந்து எடுத்தவன் படக்கென்று எழுந்து நின்றான்.

“என்ன.. என்னாச்சு??” என்றாள் அலக்நந்தா அவன் எழுந்து நின்ற விதத்தை பார்த்து.

“ஏன் எதுக்குன்னு கேட்காமல் பதில் சொல்லு.. அலக்நந்தா.. நீ என் ப்ரெண்டு தானே?” என்றான் திடீரென்று சம்பந்தம் இல்லாமல்.

“என்ன கேள்வி இது?” என்று அலக்நந்தா பதிலாக கேள்வியை விடுக்க..

“ம்ச்ச..” என்று சப்புக் கொட்டியவன் “இப்ப தானே கேள்வியை கேட்காதே பதிலை மட்டும் சொல்லு சொன்னேன்… நான் உனக்கு யாரு?”

அவனை விசித்திரமாக பார்த்த அலக்நந்தா “என்னோட பெஸ்ட் ப்ரெண்டு” என்றாள் அமைதியாக.

“ம்ம்.. இன்னும் ஒரு தரம் சொல்லு நானும் நீயும் ஒரே பேஜில் தான் இருக்கமான்னு தெரியனும்” என்றான் அவளை கண் சிமிட்டாமல் தீவிரமாக பார்த்தபடி.

அவன் பேசியது புரியாது விழித்தவள்.. “தண்ணில விழுந்தது நான்… நீ ஏன் பத்ரி… உளற? என்னை காப்பாற்ற தண்ணில குதிச்சியே உனக்கு ஒன்னும் அடிப்படவில்லை தானே?!?” என்றாள் அவன் சம்பந்தம் இல்லாமல் பேசுவதை பார்த்து.

“எனக்கு ஒன்னும் இல்லை.. ஆனால்..”

“ஆனால்..???” என்று அவன் சொல்லாமல் விடுத்ததை அவள் கேள்வியாக கேட்க.

“நத்திங்…” என்று மிகுந்த யோசனையோடு சொல்ல…

“என்னாச்சுன்னு இப்ப சொல்ல போறியா இல்லையா… பத்ரி?!?” என்றாள் அலக்நந்தா.

“ப்பச்ச்…” விரக்தியாக தாடையை தேய்த்தவன் “ஒரு நிமிஷம் பயங்கர கோபமா இருக்கேன்… அடுத்த நிமிஷம் பயங்கர சந்தோஷமா இருக்கேன்… ஏன் இப்படின்னு எனக்கே புரியாத போது நான் உனக்கு எப்படி புரியவைக்க…?? நன்றாக தெரிந்த பாட்டு தொண்டைக் குழியில் இருந்து… வார்த்தையா பாட வாராது.. அந்த பாட்டை கண்டு பிடித்தே ஆகனும் போல் ஒரு அவஸ்தையா.. மனசு அதிலே சுழன்றபடி இருக்குமே..? அது மாதிரி… இருக்கு..” என்று விளக்கினான் பத்ரி.

“ம்ம்..” என்று அவள் தலையை மட்டும் ஆட்ட.. “மே பி… மூன்று நாளா சரியா தூங்காமல் வேலை செய்த டையர்டாக இருக்கும்.. நீ போய் படுத்து தூங்கு பத்ரி நாளைக்கு காலை புரிய ஆரம்பிக்கலாம்” என்றாள் அலக்நந்தா அமைதியாக.

“ம்ம்..” என்று அவள் பதிலில் சமாதானம் ஆகாமல்… மேலும் எரிச்சலாக தாடையை தடவியவன் “நைட் வந்து எப்படி இருக்கன்னு பார்ப்பேன்… கதவை லாக் பண்ணாதே” என்று மொழிந்தவன் ஒரு குட் நைட்டுடன் கதவை முடியபடி வேகமாக வெளியேறினான்.

பாயலை ட்ராப் செய்து விட்டு ரூமிற்கு வந்த சித்.. அயர்ந்து போய் கவுச்சில் அமர்ந்திருந்த பத்ரியைக் கண்டு.. “ஏன்டா என்னாச்சு?!? அலக்நந்தாவிற்கு ரொம்ப முடியலையா?” என்றான் அவன் அருகில் அமர்ந்தபடி.

“ம்ம்கூம்… வலி இருக்குதான் ஆனா.. அது இல்ல விஷயம்..”

“பின்னே?”

“அவள் உருண்டு விழுந்து தண்ணில அப்படியே முழுகறதை நேரா பார்த்தேன் டா… அப்ப அவளை காப்பாற்ற முடியுமான்னு ஒருதுளியும் பயம் இல்ல… ஆனா இப்ப அவள் பேசிய பேச்சை கேட்டு ரொம்ப பயமா இருக்குடா… தண்ணியில இருந்து காப்பாற்ற முடிந்த என்னால்

அவளிடமிருந்தே அவளை காப்பாற்ற முடியுமா என்னும் கேள்விக்கான விடை எனக்கு தெரியிலை…" என்றான் பத்ரி வார்த்தைகளில் விவரிக்க முடியாத மனவருத்தத்துடன்.

அவன் சொல்லும் வார்த்தைகளில் அர்த்தம் பாதி புரிய மீதி இவன் எதைப் பற்றி பேசுகிறான் என்று புரியாத போதும்... அலக்நந்தா என்ன சொன்னாள் என்று கேட்காது.. "கேள்விக்கான விடை எளிதில் கிடைத்து விடும் ஆனால் விடைக்கான சரியான கேள்வி கிடைப்பது தான் ரொம்ப கஷ்டன்னு என் அண்ணன் அடிக்கடி சொல்லுவார் பத்ரி... அலக்நந்தா கேள்வி இல்லை.. அவள் ஒரு விடை… அவளுக்கான சரியான கேள்வியை நீ இன்னும் கேட்கவில்லை என்றே எனக்கு தோன்றுகிறது!!!" என்றான் சித் அவன் தோளை தட்டி. "இப்ப எதைப் பற்றியும் ரொம்ப யோசித்து உன்னை நீ குழப்பிக்காதே. போய் படு நாளைக்கு பார்க்கலாம்" என்று மேலே எதைப் பற்றியும் பேசாமல்... அவனை ரூமிற்குள் தள்ளிவிட்டான் சித்.

புரியாத பாஷையில் இருக்கும் க்ராஸ் வார்ட் மாதிரி தெரியும் அலக்நந்தாவை பற்றிய நினைவே ஆக்கிரமிக்க அவசரமாக தன் முழு கவனத்தையும் ப்ராஜக்டில் செலுத்தினான். இப்படியே அடுத்த மூன்று மணி நேரமும் தன் வேலையில் முழுகியவனுக்கு அலக்நந்தாவின் நினைவு.. தண்ணீரிலேயே முக்கிய பந்தாக குபீர் என்று மேலே வர.. எழுந்து அவள் அறைக்கு சென்றான்.

போர்வையில் சுருண்டு படுத்து கிடந்தவளை தொட்டு பார்க்கும் முன்னரே அவளுக்கு நன்றாக காய்ச்சல் அடிக்கிறது என்று புரிய.. அவளை எழுப்பி.. டாக்டர் கொடுத்த மாத்திரையை கொடுக்க.. அரை மயக்கத்திலேயே அதை விழுங்கியவள்...

"பத்ரி" என்றாள் கண்களை முடியபடி முனுமுனுப்பாக.

"ம்ம்.."

"பத்ரி" என்றாள் மீண்டும் அலக்நந்தா.

"இங்கதான் இருக்கேன் அலக்நந்தா.." என்றான் அமைதியாக.

“உங்க அம்மா நல்லா சமைப்பாங்களா?” என்றாள் சம்பந்தா சம்பந்தமில்லாமல்.

“இப்ப எதுக்கு அதைப் பற்றி?” என்றான் எதுவும் புரியாமல்.

“ப்ளீஸ் சொல்லேன்” என்றாள் அசதியாக.

“ரொம்ப ரொம்ப நல்லா சமைப்பாங்க”

“ம்ம்… எனக்கு கூட அம்மா கையால் சாப்பிடனுன்னு ஆசையா இருக்கு.. எனக்கு நினைவு தெரிந்து என் அம்மா காபி கூட போட்டு நான் பார்த்தது இல்லை… வலிக்காக டாக்டர் ஹேவி டோஸ் டாப்லட்ஸ் எழுதும் போது… எனக்கு அல்சர் இருக்குன்னு சொன்ன இல்லை?!? ஏன் அல்சர் வந்தது தெரியுமா? என்னுடைய ஆறாவது வயதில் இருந்து பதினைந்தாவது வயது வரை நேரம் காலம் இல்லாமல் வெளியே சாப்பிட்டதால்… வந்த பிரச்சனை தான் அல்சர்… அது அப்புறம் எனக்கான உணவை நானே தயாரிக்க கற்றுக் கொண்டேன்…” என்றாள் இருக கண்களை முடியபடி அலக்நந்தா.

இத்தனை நாள் அவள் வாய் திறந்து பேச மாட்டாளா?? என்று இருந்தவனுக்கு இப்பொது அவள் பேசாமல் இருந்தால் தான் நிம்மதியாக இருக்க முடியும் என்று தோன்ற ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு முறை அவளைப் பற்றி பேச.. பேச.. காற்றே இல்லாத குகையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது போல் மூச்சு முட்ட…

“என் அம்மாவை இங்கே அழைத்து வருகிறேன்… உனக்கு என்ன சமைத்து சாப்பிட வேண்டுமோ அவர்களிடம் சொல்லி… ஆசை தீர சாப்பிடு” என்றான் முகம் இருக… குரல் கடுக்க.

“அதை ஏன் கோவமா சொல்ற” என்றாள் அவனின் குரலை வைத்தே கண்டு கொண்டவள்.

“உன் மேல் கோவத்தில் சொல்லல அலக்நந்தா… உன் அம்மா மேல கடுங்கோபத்தில் இருக்கேன்..”

“என் அம்மாவை உனக்கு தெரியுமா?”

“தெரியாது… நீ பேசுவதை கேட்க.. கேட்க.. அவர்களை தெரிந்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லன்னு நினைக்கிறேன்.. இன்னும் சொல்ல போனா யாருன்னு தெரியாத வரைக்கும் அவர்களுக்கு நல்லதோன்னு கூட தோன்றுகிறது!!!”

“என் அம்மா… அப்பாவை தெரிய வேண்டாம்ன்னு சொன்ன முதல் ஆள் நீ தான் பத்ரி”

“சரி… அப்படியே இருந்துட்டு போறேன் இப்ப தூங்கு.. காலையில் பேசலாம்..” என்றான் பத்ரி. இன்னும் இங்கே இருந்து அவள் பேசுவதை கேட்டால் நிஜமாவே சித்துடைய அண்ணனுக்கு போன் பண்ணி இவள் பெற்றவர்கள் கேட்டு தெரிந்துக் கொண்டு நேராக அவர்கள் முன் போய் விடுவோமோ என்ற எண்ணம் வேற தரிகெட்டு ஓட அவசரமாக எழுந்தான்.

“பத்ரி..” என்று அவசரமாக அழைத்தவள்.

“என்ன??” என்றது அவனின் பொறுமை அற்ற குரல்.

“எனக்கு.. உன்னை ரொம்ப பிடிக்கும்.. பத்ரி…” என்று சற்றே இடைவெளி விட்டு அவள் சொல்ல.

இத்தனை நேரம் காற்று புக முடியாத காலாகரஹத்தில் இருந்தவனுக்கு தீடிரென்று மேற்கு திசையில் இருந்து வீசும் கோடை காற்று.. கிழக்கு திசையில் இருந்து வீசும் கொண்டல் காற்று… வடக்கு திசையில் இருந்து வீசும் வாடை காற்று… தெற்கில் இருந்து வீசும் தென்றல் காற்று… என்று இப்படி நாலா புறத்தில் இருந்தும் வீசும் காற்று அவனை ஒரு சேர திக்கு முக்காட செய்ய…

“ஓ… எனக்கு முன்னாடியே தெரியும் அலக்நந்தா.. பட் ஸ்டில் நீ சொன்னதில் இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சி.. நீ கையை உடைத்தால் தான் இப்படி எல்லாம் வாய் முடாமல் பேசுவாய் என்று தெரிந்திருந்தால் வந்த முதல் நாளே உன் கையை உடைத்திருப்பேன் அலக்நந்தா…” என்றான் சிரிப்பு பொங்க…

“ம்ம்.. இப்ப பேசறது என் பத்ரி.. இல்லயே..”

“என் சொன்ன… உன் பத்ரி இல்லையா? நான் எப்ப உன் பத்ரி ஆனேன்?!?” என்றான் பரபரப்பாக.

இத்தனை நேரம் கண்களை மூடிக்கொண்டு பேசியவள் அவசரமாக விழி திறந்து… “ஐ மீன் என் ப்ரெண்டு பத்ரி இல்லன்னு சொன்னேன்..” என்றாள் சற்றே தடுமாற்றத்துடன்.

“ஓ!!.. அப்ப யார் பத்ரியா பேசினேன்?” என்றான் குதூகலம் பொங்க பத்ரி.

“அது பத்ரி சச்சிதேவ்…” என்றாள் சற்றும் சளைக்காமல்.

“பத்ரி சச்சிதேவிற்கும்… உன் பத்ரிக்கும் வித்தியாசம் தெரியுமா?” என்றான் லேசாக தலையை சாய்த்து.. நாடி குழி அழகாய் வெளிப்பட.. மிக மெலிதாய் கேட்டான் பத்ரி.

“ஓ.எஸ்.. இப்ப மாத்திரை கொடுத்தது என் ப்ரெண்ட் பத்ரி… அதோ இப்படி போஸ் கொடுத்து… பேசிக்கொண்டு இருப்பது பத்ரி சச்சிதேவ் தி கிரேட்..” என்றாள் அவனை பார்த்தபடி.

“மை காட் அலக்நந்தா!!!” என்று பொங்கி சிரித்தவன்… “நீ என்ன பதில் சொல்லுவ.. நீ என்ன மாதிரி கேள்வி கேட்பன்னு என்னால் யூகிக்க முடிந்ததே இல்ல… உன்னை பொருத்தவரை ஐயம் க்ளூலேஸ்… ஒரு சஸ்பென்ஸ் நாவல் படிக்கற மாதிரி அடுத்த பக்கத்தை புரட்ட ஆசையா இருக்குமே அது மாதிரி இருக்கு.. உன்னிடம் நான் கழிக்கும் ஒவ்வொரு தருணமும்!!!...” என்று மொழிந்தவன் அவள் எதையோ பேச வாய் எடுக்க முனைய..

“இன்றைய கோட்டாவுக்கு இது போதும்.. இதுக்கு மேல என் அலக்நந்தா இவ்வளவு ஸ்வீட்டா இருந்தா நான் தாங்க மாட்டேன்… ம்கூம்.. வேண்டாம் இதுக்கு மேல பேசாதே… குட் நைட்” என்று விட்டு ரூமை முடிவிட்டு தன் அறைக்கு வந்தவனுக்கு மனம் அலைகளில் பேக் ப்ளாட் செய்வது போல் மிக மிக ரம்யமாக உணர.. கண்களை சுழற்றி தூக்கம் வர ஆழ்ந்து துயின்றான்!!!

மறுநாள் வலியொடு தன் ரூமை விட்டு வெளியே வந்தவளுக்கு சித்தும் பத்ரியும் பெரும் குரலிட்டு கூச்சலிடுவது அவள் காதில் விழ என்ன நடக்குது என்று வலியை பொருட்படுத்தாது முன்னே சென்றாள்.

“டேய்.. உன் அம்மாவை கேட்டு.. உன் பாட்டியை கேட்டு… அதுவும் பத்தாதுன்னு யூ டியூப்லையே இருக்கும் எல்லா வீடியோவையும்… பார்த்து இரண்டு டசன் டா மச்சான்.. இரண்டு டசன் முட்டையை ஆம்ளட் போடறேன்னு தீச்சு கரிகட்டையாக்கி.. மனசாட்சியே இல்லாமல் டெஸ்ட் பண்ண சொல்லி என் வயித்துக்குள்ள போட்டு.. மிச்சத்தை டஸ்டு பின்ல போட்டு இருக்க.. இனி முட்டை வேணுன்னா… நான் எங்கயாவது கோழி பண்ணையில் போய் கொள்ளை அடித்தால் தான் உண்டு.. ஆனா ஒன்னுடா மச்சான்.. இனி வாழ்க்கையில் என்னை முட்டையே தின்ன முடியாத படி செய்த பெருமை உன்னையே சாரும்!!!” என்று புலம்போ புலம்பு என்று சித் புலம்பிக்கொண்டு இருக்க.. அங்கே வலியை மிஞ்சிய சிரிப்புடன் நின்றாள் அல்நந்தா….

இன்று…

“எப்படி இருக்க அலக்நந்தா… என் பேரன் இன்னும் சண்டி குதிரையாதான்இருக்கானா?” என்றார் தடாலடியாக… பாட்டி.

“நான்.. என்..” என்று தடுமாறியவள்… “என் நம்பர் உங்களுக்கு எப்படி தெரியும்?” என்றாள் ஆச்சரியம் விலகாது அலக்நந்தா.

“எப்படி தெரியுன்னு கேட்பதை விட எப்ப தெரியுன்னு கேட்பது தான் பேட்டர் கொஸ்டினா இருக்கும் அலக்நந்தா” என்றார் பாட்டி அவருக்கே உரிய அடாவடித்தனத்துடன்.

ஒன்றும் புரியாமல் விழித்தவள்.. “எப்ப தெரியும்?”

“ஒருநாள் காலையில் ஆறு மணிக்கு பத்ரி என்னிடம் போன் பண்ணி ஆப்லேட் போடுவது எப்படின்னு குக்கரி கிளாஸ் எடுக்க சொன்னானே? அப்பவே யாருக்காகன்னு தெரிந்து வைக்க வேண்டியது என் கடமை ஆகிப் போச்சு” என்று விளக்க.

“என்னது உங்களிடம் பத்ரி கேட்டாரா?” என்றாள் ஆச்சரியமாக.

“ம்ம்… பத்ரிக்கு சாப்பிட தெரியுமே தவிர.. அவனுக்கு சுடுதண்ணியை கூட தீக்கும் ரகம்… அப்படிப்பட்டவன் என்னிடம் போன் பண்ணி ஆப்லேட் எப்படி ஈசியா பண்ணன்னு கேட்ட பிறகும் நான் சும்மா இருந்தா நான் எப்படி அவன் பாட்டியா இருக்க முடியும் சொல்லு?" என்றார் பாட்டி.

அவர் சொன்ன விதத்திலேயே சிரிப்பு வர.. தாமதமாக ஞாபகம் வந்தவளுக்கு “குழந்தை எப்படி இருக்கான்?” என்றாள் ஆர்வமாக.

“இந்த பருவத்தில் மட்டும் தான் சச்சிதேவை இவ்வளவு அமைதியாக பார்க்க முடியும். அதுக்கு அப்புறம் கையில் பிடிக்க முடியாதுன்னு ஊருக்கே தெரியும் அதனால் ஊரே திரண்டு வந்து இருக்கு.. என் கொள்ளுப் பேரனை பார்க்க” என்றார் பாட்டி பெருமிதமாக.

“நீங்க.. ரொம்ப பிசியா இருப்பீங்க.. உங்களை தொந்தரவு பண்ணிட்டேன்.. நான் வேணுன்னா அப்புறமா பேசவா?”

“அவன் கொள்ளு பேரன்னா நீ எனக்கு பேத்தி இல்லையா அலக்நந்தா” என்றார் பாட்டி பிடிவாதமாக.

“அப்படி இருப்பதற்கு பத்ரி ஒரு போதும் சம்மதிக்க மாட்டாரே பாட்டி” என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க…

“அவன் சம்மதம் கொடுக்க வேண்டிய காலம் எல்லாம் எப்பவோ மலையேறி போயாச்சு அலக்நந்தா.. அவன் சம்மதிச்சாலும் சம்மதிக்கா விட்டாலும் நீயும் சச்சிதேவ் குடும்பத்தில் ஒருத்தி அதை மனதில் வைத்துக் கொண்டு பேசு!!! சொன்ன நாளுக்கு பத்து நாளுக்கு முன்னாடியே இவன் பிறப்பான் என்று யாரும் எதிர்பார்க்காததால் வீட்டில் இத்தனை அடாவடி இன்னும் ஒரு வாரம் பொருத்துக்கோ அலக்நந்தா.. அதுக்கு அப்புறம் எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்..” என்றார் பாட்டி தெளிவாக.

“ம்ம்.. எனக்கு பயமா இருக்கு பாட்டி. நான் பண்ணது தப்புதான்… எத்தனை முறை சாரி கேட்கறது இதுக்கு மேல எப்படி சாரி கேட்பதுன்னே தெரியலை பாட்டி” என்றாள் துக்கம் மிகுந்த குரலில்.

“ச்ச நீ பண்ணதில் என்ன தப்பு இருக்குன்னு அவனிடம் சாரி கேட்ட? ஆயிரம் பொய்யை சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம் தமிழில் ஒரு பழமொழி உண்டு.. கல்யாணம் பண்ணுவதற்காவது ஒரு கணக்கு வழக்கு உண்டு ஆனா காதலிப்பதற்கு அது கூட கிடையாது… அப்படி பார்த்தா எந்த விதத்திலும் நீ தப்பே பண்ணலியே!!!” என்றார் நாட் நாட் செவன்.

அத்தியாயம் - 15
இரண்டு மாதம் மூன்று வாரங்களுக்கு முன்பு.

“ஆனா ஒன்னு டா மச்சான் இனி வாழ்க்கையில் என்னை முட்டையே தின்ன முடியாதபடி செய்த பெருமை உன்னையே சாரும்!!!” என்று புலம்போ புலம்பு என்று சித் புலம்பிக் கொண்டு இருக்க.. அங்கே வலியை மிஞ்சிய சிரிப்புடன் நின்றாள் அலக்நந்தா….

“குட் மானிங்க” என்றாள் இருவருக்குமாக சேர்த்து…

அந்த குரலைக் கேட்டு அவசரமாக திரும்பிய இரு விழிகள் கூர்மையுடன் அவளை இன்ச்.. இன்ச்சாக ஆராய… மற்றொரு ஜோடி விழிகளில் ஏதோ தூக்கு தண்டனையில் இருந்து கடைசி நிமிஷத்தில் தப்பிய உணர்வு மிதக்க…

அந்த விழிகளுக்கு சொந்தகாரனான சித்.. தன் இரு கையை எடுத்து அவளை பார்த்து உணர்ச்சி பொங்க வணங்கியவன்… “உன்னைப் பார்க்காத வரை வெரி பேட் மார்னிங்கா இருந்தது… நீ இங்க வந்தவுடன் அப்படியே குட் மார்னிங்கா மாறிடுச்சு அலக்நந்தா… இப்ப என் கண்ணுக்கு நீ எப்படி தெரியறன்னா… என்னை காக்க வந்த லட்சுமி மாதிரி… ம்கூம்.. அவங்க செல்வம் தான் தருவாங்க இல்ல?!? அப்ப.. சரஸ்வதி.. ச்ச்… அவங்க படிப்பு தானே தருவாங்க… ஆ.. என்று ஒரு நொடி யோசித்தவன்… என்னை காக்க வந்த பராசக்தி மாதிரி தெரியற…” என்றான் பக்தனின் பரவசத்துடன்.

“ஆமாம் டா மச்சான்.. உன்னை என்னிடமிருந்து காக்க ஓடிவரும் அவசரத்தில் தன் ஹில்ஸ் இல்லிருந்து தலை குப்புற கீழே விழுந்து இரண்டு கையையும் உடைத்துக் கொண்டு வந்து நிற்கும் ஆதிபராசக்தி

மாதிரிதான் என் கண்ணுக்கு தெரியுறா..” என்றான் பத்ரி.

“பத்ரி... நான்..” என்றபடி மெல்ல சிரித்தவள் “எனக்கு ஒன்னும் இரண்டு கையும் உடையலை... ஒரு கை லேசாக சுளுக்கி இருக்கு.. இன்னொரு கையில் ஹேர் லைன் ப்ராக்சர் ஆகி இருக்கு அவ்வளவு தான்” என்று அவள் சப்பையாக சொல்லும் பதில் அவளுக்கே வலியை மிஞ்சி சிரிப்பு வர... பேச்சை மாற்றும் விதமாக பத்ரியை பார்த்து “ஆமாம் என் கிட்சனில் நீங்க என்ன செய்றிங்க??” என்றாள் முட்டையில் குளித்திருந்த பத்ரியை பார்த்து...

அவன் பதில் சொல்லும் முந்திக்கொண்ட சித்.. “என்னம்மா கை உடைந்த ஆதிபராசக்தி... அவன் உன் கிட்சனில் இருப்பது மட்டுமா உன் கண்ணுக்கு தெரியுது?? உன் பாத்திரம் எடுத்து அதை இனி காயலங்கடைக்காரன் கூட வாங்க முடியாத படி செய்து வைத்திருப்பது உன் கண்ணுக்கு தெரியலையா? உன் சமையல் பொருட்கள் எல்லாத்தையும் ஒன்னா கொட்டி கலந்து வைத்திருக்கானே.. அது உனக்கு கண்ணுக்கு தெரியலையா??...இல்ல... உன் இன்டக்ஷன்.. ஸ்டவ்..” என்று சொல்லும் போதுதான்.. எல்லோருக்கும் ஏதோ தீயும் வாசனை நாசியை தீண்ட..

அப்பொழுதான் தோசை கல்லிருந்த முட்டை பத்ரிக்கு ஞாபகம் வர... அவசரமாக திரும்பியவன்.. கையிலிருந்த தோசை திருப்பியை கொண்டு வேகமாக கல்லிருந்து வர மாட்டேன் என்று சண்டித் தனம் செய்த அந்த முட்டையை எடுக்க முடியாது யுத்த களத்தில் எதிராளியுடன் சுழன்று போர் புரியும் வீரனை போல் அதனுடன் சுற்றி... சுற்றி... சண்டை இட..

அந்த முட்டையாகப்பட்ட வஸ்துவானது தன் நிறம்.. குணம்.. இழந்து அறை முழுவதும் தெறித்து சிதர... அங்கே நின்று அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சித் மற்றும் அலக்நந்தாவின் மேலும் விழுந்தது!!!

“மை காட்... இதையும் எக் புர்ஜின்னு மனசாட்சியே இல்லாமல் என்னை டெஸ்ட் பண்ண சொல்லுவான், நான் உயிருக்கு பயந்து ஓடுறேன்.. இரண்டு நாளைக்கு அவன் கண்ணிலே படமாட்டேன்னு சொல்லிடு அலக்நந்தா” என்றபடி தன்னை முட்டை மழையில் இருந்து காப்பாற்றிக் கொள்ள அந்த இடத்தை மட்டும் இல்லை.. அவர்களின் அறையை விட்டே தலை தெரிக்க.. ஓடினான் சித்!!!

“பத்ரி…” என்று சற்று உரக்கவே அழைத்தாள் அலக்நந்தா.

முட்டைக்கும் அவனுக்குமான யுத்த போராட்டத்தில் சித் உயிர் பிழைக்க தப்பி ஓடியதையோ இல்லை… அலக்நந்தா அவனை மேலும் இரண்டும் முறை அழைத்ததோ சுத்தமாக காதிலே விழாது விடா முயற்சியுடன் பத்ரி போராட…

ஒரு கையில் கட்டுப் போட்டு இருக்க.. அடுத்த கை அசைக்க முடியாது படி சுளுக்கி இருக்க… அவனின் கவனத்தை எப்படி கவருவது என்று ஒரு வினாடி யோசித்தவளின் மேல் முட்டை மழை நிற்காமல் பொழிந்தபடி வேறு இருக்க.. அதற்கு மேல் பொறுக்க மாட்டாது… சட்டென்று தன் காலை அவனின் காலுக்கு இடையில் கொடுத்து தட்டி விட்டாள்!!!

அலக்நந்தாவின் இந்த கொரில்லா தாக்குதலை சற்றும் எதிர்பார்க்காதவன் பேலன்ஸ் இழந்து கையில் இருந்த நான் ஸ்டிக் எங்கோ பறந்து விழ.. இவனோ அவளின் காலடியில் “பொத்தென்று” விழுந்தான்.

கீழே விழுந்த பத்ரிக்கு பட்ட பகலில் கண்களில் நட்சத்திரம் தெரிய இரண்டு நிமிடம் ஆனது… தான் கீழே விழுந்து கிடப்பது புரியவே!!!

மெல்ல.. எழுந்து தன் கால்களை முட்டு கொடுத்து அமர்ந்தவன்.. தலை உயர்த்தி… “நான் எப்படி விழுந்தேன்?” என்றான் யோசனையுடன் அங்கே சிரிப்பை உள்ளே விழுங்கியபடி.. முகத்தை சீரியஸாக வைக்க முயன்ற அலக்நந்தாவைப் பார்த்து.

லேசாக தொண்டையை செருமியவள்.. “அது.. வந்து அது.. ஆ.. கால் தடுக்கி விழுந்து விட்டாய் பத்ரி” என்றாள் மிகுந்த தடுமாற்றத்துடன்.

அவளைப் பார்த்தபடி எதையோ தீவிரமாக யோசித்தவன்… “ம்ம்?? கால் தடுக்கியா.. என் கால் தடுக்கி நானே விழுந்தேனா?” என்றான் தாடை தடவியபடி…

கோக் பாட்டிலை திறந்தவுடன் குபு குபு வென்று பொங்கி வரும் நுரை போல்.. அவள் உள்ளே குமிழிடும் சிரிப்பு அவளை பேச முடியாது கட்டி போட.. வெகு சிரமப்பட்டு வாயை இருக்க மூடியவள்.. அதிவேகமாக

“ஆமாம்” என்பது போல் தலையை மட்டும் பலமாக ஆட்டினாள்.

“நடக்க பழகிய ஒரு வயதில் இருந்து கடந்த இருபத்தி எட்டு வருட காலமாக என் கால் தடுக்கி நான் இதுவரை கீழே விழுந்ததே இல்லை..” என்றபடி அவளை உன்னிப்பாக பார்த்தவன்... “ஆமாம்.. கால் தடுக்கி தான் விழுந்தேன்...” என்று இழுந்தவன் “ஆனா... அது என் கால் இல்லை...” என்றபடி உண்மையை கண்டுக்கொண்டவன்...

“மை காட்!!!” என்றபடி மின்னல் வேகத்தில் எழுந்து அவள் முன்னாடி நெருங்கி நின்றான் பத்ரி.

“யூ ஆர் சோ மீன் அலக்நந்தா... நான் உனக்காக ஆம்லெட் போட்டா.. நீ என்னையே போட்டு தள்ளிடுவ போல இருக்கே..” என்றான் ஆச்சரியமாக.

இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த சிரிப்பு பீறிட்டு வெளி வர... வாய் விட்டு சிரித்தாள்!!!

கண்களில் ஆனந்தம் ஆர்ப்பரிக்க.. கன்னம் பூரிக்க.. சிப்பியாய் திறந்த இதழில் வெண் முத்துகளாய் பற்கள் பளீரிட... அவளின் கற்றை கூந்தல் கூட அவள் சிரிப்பின் ஜதிக்கு தாளம் தப்பாது பறந்து.. பறந்து.. நற்தனம் ஆட... தன்னிலை மறந்து பார்த்தான் பத்ரி.

முதல்முறையாக அலக்நந்தா இப்படி சிரிப்பதை பார்த்தவனுக்கு அந்த காட்சி எழிலோவியமாக மனதை மட்டும் நிறைக்கவில்லை... அவனின் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு அனுவையும் நிறைக்க...

பூமிக்கடியில் எடுக்கப்பட்ட செல்லா காசுகள் இவளுக்கு பொக்கிஷமாக தோன்ற... அவனுக்கோ.. அவளின் இந்த ஆனந்த சிரிப்பு தான் இருப்பதிலே மிக பெரிய பொக்கிஷமாக உணர... தன்னுள் பத்திரமாக சேமித்து வைத்துக்கொண்டான்!!!

அவனின் பார்வையின் மாற்றத்தை உணர்ந்த அலக்நந்தா “பத்ரி... ஏன் அப்படி என்ன பார்க்கற?” என்றாள் சிரிப்பு மாறாமல்.

சற்றே குனிந்து “நீ சிரிக்கும் போது.. ரொம்ப.. ரொம்பவே.. அழகா இருக்க..”

என்று தன் இரு கையை விரித்து... குரல் குழைய அவன் சொன்ன பாவமும் விதமுமே அவளை அழகாக உணர வைத்தது.

அவன் மொழிந்த வார்த்தைகளும்... அதனால் ஏற்பட்ட அவளின் முக விகசிப்பும்.. அவர்களை சுற்றியும் கண்ணுக்கு தெரியாத மாய கூட்டை மின்னல் வேகத்தில் எழுப்ப...

இத்தனை நெருக்கத்தில் சிரிப்பும் ஆனந்தமும் போட்டி போட எழிலே வடிவாய் இருக்கும் அவளை... அப்படியே இறுக அனைத்து தன்னுள் பொத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வேகம் பிரவாகம் எடுத்து ஆர்ப்பரித்து ஓட...

அவனை தவிர யாரிடமும் இடைவெளி விட்டே பழகும் இவளிடம் உணர்ச்சி பெருக்கில் எதையாவது செய்து வைத்து விட போகிறோம் என்ற எண்ணம் மட்டும் அவனை மெல்லிய கயிறு கொண்டு கட்ட... அவசரமா தன் கையை இருக மூடி ஜீன்ஸ் பாக்கெட்டில் நுழைத்தவனுக்கு.. அவனின் இதயத் துடிப்பு தாறு மாறாக எகிருவது தன் காதிலே விழ.. இனியும் அவள் அருகில் நின்று இப்படி பார்த்துக் கொண்டு நின்றால் தெரியாத அந்த மாய கட்டை தகர்க்கவே முடியாது என்ற உள்ளுணர்வு எச்சரிக்கை செய்தது.

"அலக்நந்தா... நீ எப்பையும் இப்படியே சிரித்துக்கொண்டே இருக்கனும்... ஏன்னா..." என்று அவளை இமைக்காமல் பார்த்தபடி மொழிய...

"ஏன்னா?" என்று அவள் அதையே கேள்வியாய் கேட்க...

"உன்னை சிரித்து பார்க்கும் போது உன் கன்றாவியான ஹேர் ஸ்டைல் கூட மில்லயன் டாலர் மாதிரி தெரியுது!!!" என்று ஒரு பக்கம் தலையை சாய்த்து கண்ணடித்தபடி.. பேசி சீண்ட.. அவனின் நாடி குழியோ... அவன் பேச்சை விட பேசாமல் விஷமமாய் சீண்டியது!!

அவனின் அந்த பேச்சால் அத்தனை நேரம் அவர்களை சுற்றி பின்னட்டிருந்த அந்த மாய வலை அறுபட..

"பத்ரி... சச்சிதேவ்..." என்று பொய்யான ஆத்திரத்துடன் தன் கண்களை

சுழற்றியபடி அவனை அழைத்தவள்.

“எஸ்.. ஐயம் பத்ரி சச்சிதேவ்” என்றான் தெனாவட்டாக.

“ஐ நோ.. ஐ நோ.. ஸ்டாப் பீயிங் பத்ரி சச்சிதேவ்.. பீ மை பத்ரி” என்றாள் தன் பொய்யான கோபத்தை விடுத்து.

“என்னால் எப்பயும் உன் பத்ரியா இருக்க முடியாது.. பீ ப்ராக்டிகல்.. ஐயம் மிக்க்ஷர் ஆப் போத்...” என்று அவளுக்கு விளக்கம் கொடுத்தவன் “அப்ப ராத்திரி பேசியது எல்லாம் ஞாபகம் இருக்கு இல்ல?”

“நான் என்ன தண்ணியா அடித்திருந்தேன் பேசியது எல்லாம் மறந்து போக?” என்றாள் அலக்நந்தா புரியாது.

“இல்ல.. நேற்று என்னிடம் பேசிய விஷயத்தைப் பற்றி சங்கடப்படுறியோன்னு” என்று அவன் இழுத்தபடி கேட்க.

“பத்ரி... நான் சங்கடப்படற ஒரே விஷயம்.. ஏன் உன்னை நான் முன்னாடியே பார்க்கலையேங்க வருத்தம் மட்டும் தான்... மற்றபடி வேறு எதைப் பற்றியும் இல்லை” என்றாள் திடமாக.

“ஐய்யோ... நான் உடனே ஆற்றங்கரைக்கு போகனும்” என்றான் பத்ரி பதட்டமாக..

“ஏன் என்னாச்சு??”

“இல்லை என் ரூம்மெட் நேற்று கால் தடுமாறி அதில் விழுந்துட்டாங்க... அவளை காப்பாற்ற போன நான் தவறி உங்களை காப்பாற்றி கூப்பிட்டு வந்துவிட்டேன் போல.. நான் போய் அவங்க எப்படி இருக்காங்கன்னு பார்த்து விட்..” என்று சிரியசாக அவன் சொல்லிக் கொண்டே போக... அதற்கு மேல் பொறுக்க மாட்டாது..

“பத்ரி...” என்றபடி மீண்டும் அவன் காலை மிதிக்க... முற்பட

இம்முறை சுதாரித்து தன் காலை காப்பாற்றிக் கொண்டவன் “அலக்நந்தா...

கை உடைத்துக் கொண்டது பத்தாதுன்னு காலை வேற உடைத்துக் கொள்ள வேண்டுமா?" என்று சிரித்தபடியே துள்ளி குதித்து நகர..

"உடைத்துக் கொண்டாலும் பார்த்துக் கொள்ள நீங்க இருக்கீங்க என்ற நம்பிக்கை தான்" என்று உளமாற கூறியவள்.. "ஆமாம்.. எப்போ இருந்து உங்களுக்கு செப்பா மாற ஆசை?" என்றாள் அவனின் கோலத்தை பார்த்து.

"சௌவிக்கு டெலிவரி முடியும் வரை எங்கேயும் நகர முடியாதுன்னு அம்மா சொன்னதால்.. நானே சமைக்க வேண்டியதா போச்சு... டெலிவரி முடிந்தும் அவர்களை வர சொல்றேன்... இல்லை அதுக்குள்ள உனக்கு ஆசைன்னா உன்னை அங்கே அழைத்து போறேன்!!"

"இல்லை வேண்டாம்.... நேற்று என்னமோ அம்மா ஞாபகம் வந்து விட்டது பத்ரி... மற்றபடி நான் அப்படி எல்லாம் ஏங்கும் ரகம் இல்லை.." என்றாள் அலக்நந்தா அமைதியாக.

"புரியுது... என் அம்மா வர முடியாததால்.. சரி நாம் எதையாவது சமைக்கலாமேன்னு தான்.." என்று அலங்கோலமாக ஆக்கி வைத்திருந்த கிட்சனை காட்ட...

"ம்ம்.... ஆமாம்.. ஏன் ஆம்லேட்டுன்னு முடிவு பண்ணிங்க?"

"அது கொஞ்சம் இசியா இருக்கும் போல தோன்றியது ஆனால் அது தான் இருப்பதிலேயே கஷ்டம்னு அப்ப தெரியலை" என்று அதை என்னவோ ராக்கெட் சைஸ் ரேன்ஜிற்கு பேசியவனைப் பார்க்க சிரிப்பு முட்டியது அவளுக்கு.

"அதெல்லாம் சரி தான்... எனக்கா சாப்பாடு செய்யும் நீ நான் எழுந்து இங்க வந்தலிருந்து என்னை ஒருவார்த்தை கூட எப்படி இருக்கேன்னு கேட்கவே இல்லையே..?!? என்றாள் ஆச்சரியமாக.

"கேட்டா மட்டும் உண்மையா சொல்ல போற? நல்லா இருக்கேன் வலி குறைந்து இருக்குன்னு தான் சொல்ல போற.. அதை ஏன் கேட்கனும்? நீ சொல்லாமலே உன் கையை அசைக்க கூட முடியாதளவு வலி இருக்குன்னு எனக்கே தெரியும்" என்றான் பத்ரி திட்டவட்டமாக.

அசந்து போய் “எப்படி?” என்றாள் கண்கள் அகல..

“என்ன எப்படி?!?”

“எப்படி உங்களுக்கு என் வலியை நான் சொல்லாமலே தெரியும்?”

“எப்படின்னா… உன் வலியை என்னால் உணர முடியுது!!! லிட்டில் ஸ்டேன்ஜ் பட் அதுதான் உண்மை…” என்ற பூகம்பமான ஒரு விஷயத்தை போகிற போக்கில் மிக சாதாரணமாக சொல்லி விட்டு.. “உனக்காக சுமாரான ஒரு ஆம்லேட்டை எடுத்து வைத்திருக்கேன் வந்து சாப்பிடு.. அப்புறம் மாத்திரை போடலாம்” என்று ஸ்தம்பித்து நின்றிருந்தவளை அங்கே இருந்த டேபிளில் அமர செய்ய..

அவன் சொன்ன பதிலால் உரைந்து போய் இருந்த அலக்நந்தாவிற்கு முன்னால் ஒரு தட்டில் ஆம்லெட் என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு வஸ்து ப்ரெட்டிற்கு நடுவில் திணிக்கபட்டிருக்க… அவளுடைய பக்கத்திலேயே நின்ற பத்ரி… அதை எடுத்து அவள் வாயில் வைத்தான்.

ரோபோ தனமாக அவன் வாயில் வைத்ததை மெல்ல கடித்தவளுக்கு மெல்லவும் முடியாது.. விழுங்கவும் முடியாது தொண்டைய அடைக்க… தன் அருகில் நின்றவனை தலையை உயர்த்தி ஒரு நொடி பார்த்தவள்.. அப்படியே அவனின் வயிற்றில் தன் முகத்தை அழுத்தி புதைத்தவள் குமுறி குமுறி அழுதாள்!!!

இன்று

“ச்ச்ச நீ பண்ணதில் என்ன தப்பு இருக்குன்னு அவனிடம் சாரி கேட்ட? ஆயிரம் பொய்யை சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலான்னு தமிழ்ல ஒரு பழமொழி உண்டு.. கல்யாணம் பண்ணுவதற்காவது ஒரு கணக்கு வழக்கு உண்டு. ஆனா காதலிப்பதற்கு அது கூட கிடையாது… அப்படி பார்த்தா எந்த விதத்திலும் நீ தப்பே பண்ணலியே!!!” என்றார் நாட் நாட் செவன்.

“பாட்டி…” என்று அதிர்ந்தவள்… பின் குபீரென்று வெடித்து சிரிக்க… “எப்படி பத்ரிக்கு இப்படி எல்லாம் பேச வருதுன்னு நான் அடிக்கடி யோசிப்பேன்.

ஆனா இப்ப தான் தெரியுது அது எங்க இருந்து வந்ததுன்னு…" என்றாள் அதே சிரிப்பு மாறாமல்.

அவன் அன்று அவளுடைய சிரிப்பை பற்றி பேசியதும் அவனின் பார்வையும் அந்த இனிமையான நிகழ்வு எல்லாம் முட்டி மோதிக்கொண்டு நினைவு வர… "என் பத்ரி" எப்போ வருவான் என்று மனது ஏங்கியது…

"இப்படி சிரித்த முகமாக இருக்கனும் அலக்நந்தா.. உன் குடும்பமாய் நாங்க இருக்க நீ எதுக்கு கவலைப்படனும்?… இனி அவனிடம் மன்னிப்பு கேட்பதை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு ஒழுங்கா சச்சிதேவ் மாதிரி நடக்க பழகு அலக்நந்தா.. "

"ம்ம்…எப்படி பழகன்னு எனக்கு தெரியலை பாட்டி… கடந்தகாலம்… எதிர்காலம்.. நிகழ்காலம் என்று கட்டம் கட்டி பிரித்து தனி… தனியா வாழும் உன்னுடன் என்னால் ஒரு வாழ்க்கையை நினைத்து கூட பார்க்க முடியலன்னு பத்ரி சொல்லும் போது… நான் என்ன செய்ய பாட்டி? என்னால் என் கடந்த காலத்தை மாற்ற முடியாதே பாட்டி?" என்றாள் வலியும் வேதனையிலும் குரல் நடுங்க…

"உன்னிடம் அப்படியா சொன்னான்?.. என் பேரன் அப்படியா சொன்னான்?" என்றார் பாட்டி நம்ப மாட்டாமல்…

"ம்ம்…" என்றாள் துக்கம் மித மிஞ்ச.

பத்ரி எந்த ஒரு வார்த்தையும் யோசிக்காமல் பேசும் ரகம் இல்லை என்று இருவருக்குமே நன்றாக தெரியும் என்பதால் மறுமுனையில் பலத்த மௌனம் குடிகொண்டது!!!

"நான் கொஞ்சம் யோசிக்கனும் அலக்நந்தா.. நான் நினைத்த மாதிரி விஷயம் சுலபமாக இருக்கும் மாதிரி தெரியலை.. அவன் கோபத்தில் மட்டும் இருக்கற மாதிரி தெரியலை வேற ஏதோ இருக்குன்னு நினைக்கிறேன்…" என்று யோசனையுடன் பேசியவர் "ஆமாம் உன் அம்மா அப்பா ஏதாவது அவனிடம் பேசினார்களா?" என்றார் பரபரப்பாக.

“நான்… நான்.. அதைப் பற்றி யோசித்தே பார்க்கவில்லை பாட்டி… நான் எதையுமே அவர்களிடம் சொல்லவில்லை.. மே பி என் அக்கா மூலம் விஷயம் தெரிந்து பத்ரியிடம் பேசினாங்களான்னு கூட தெரியாது…” என்றவள் “நான் வீட்டிற்கு பேசிப் பார்க்கிறேன் பாட்டி” என்றாள் மிகுந்த வருத்தத்துடன்.

“இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்கு நீயா அவர்களிடம் போன் பண்ணி சொல்லி இருக்க வேண்டாமா?” என்றார் பாட்டி அதட்டலாக.

“அது வந்து.. அது வந்து… நான்… நான்… அவர்களிடம் பேசுவதில்லை…” என்றாள் தயக்கத்துடன்.

“இருக்கட்டும் வீட்டில் சண்டை சச்சரவு இருக்கதான் செய்யும்… அக்கா சொல்லும் முன் இந்த விஷயத்தை நீயே சொல்லி இருக்க வேண்டும் அலக்நந்தா.. என்ன இருந்தாலும் அவர்கள் உன் பெற்றவர்கள்…” என்றார் கறாராக பாட்டி.

“ஆனா அவர்கள் என்னிடம் பெற்றவர்களா ஒருநாளும் அப்படி நடந்துக் கொள்ள வில்லையே பாட்டி?”

“அவர்கள் நடந்து கொள்ளாதது ஒருபுறம் இருக்கட்டும்… நீ முதலில் அவர்களின் மகளா நடந்திருக்கியா?” என்றார் பாட்டி

அத்தியாயம் 16

இரண்டு மாதம் மூன்று வாரங்களுக்கு முன்பு…

ரோபோ தனமாக அவன் வாயில் வைத்ததை மெல்ல கடித்தவளுக்கு மெல்ல முடியாது.. விழுங்க முடியாது தொண்டையை அடைக்க… தன் அருகில் நின்றவனை தலை உயர்த்தி ஒரு நொடி பார்த்தவள்.. அப்படியே அவனின் வயிற்றில் தன் முகத்தை அழுத்தி புதைத்து குமுறி குமுறி அழுதாள்!!!

ஒரு நொடி உடல் விரைக்க அசைவற்று நின்றாலும் தன் கட்டுபாட்டையும் மீறி அவனின் கைகள் செங்கால் நாரை போன்ற நீண்ட கழுத்தை சுற்றி

வளைத்து இறுக்கி அணைத்துக் கொள்ள... கண்களை மூடினான்.

மூடிய விழிகளில் முன்பு இதேபோல் ப்ரியாணியை பற்றி பேசிய போது.. அவள் அதிர்ந்து கீழே அமர்ந்த நினைவு நிழலாடியது!!!

மூன்று வேலையும் வக்கனையாக சாப்பிடுபவனுக்கு அறுசுவை உண்டி படைத்தாலும் சாதாரணமாக தான் தெரியும்... வாழ்நாள் முழுவதும் கால் வயிறு அரை வயிறாக சாப்பிடுபவனுக்கு இலையில் சாதாரண உணவு பரிமாறினாலே அறுசுவை உண்டி அடுக்கி வைத்தது போல தான் இருக்கும்!!!

முன்னது அவன் என்றால் பின்னது அலக்நந்தா.. அவனை பொருத்த வரையில் இது மிக மிக சாதாரண விஷயம்.. ஆனால் அவளை பொருத்த வரையில் தனக்காக ஒருவர் செய்வது என்பது மிக பெரிய விஷயமாக உணர்கிறாள்... என்பதோடு எந்த அளவிற்கு அது பாதிக்கிறது என்பதை அவன் உணர..

நேற்று இரவு அவள் தன் அல்சர் பற்றி சொன்னதிற்கு பிறகு அன்றைய அதிர்ச்சிக்கான காரணமும் இன்றைய அழுகைக்கான அர்த்தமும் அவள் வாய் விட்டு சொல்லாமலே புரிய தொடங்க... சற்று நேரத்திற்கு முன்பு சொன்ன அவள் அதே வார்த்தைகளை... ஏன்... ஏன் டி உன்னை நான் முன்னாடியே பார்க்கலை?? என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டான்

ஒரு குடும்பத்தில் நடக்கும் மிக சாதாரண விஷயம் கூட அவளை இந்தளவு பெரியதாக பாதிக்கிறதே என்பதை யூகிக்க... நாடி நரம்புகள் எல்லாம் முறுக்கியது அவனுக்கு!!!

ஆழ மூச்செடுத்து தன்னை கட்டுப்படுத்த முயன்றவனுக்கு... தான் அணிந்திருந்த டி சர்ட்டையும் மீறி அவளின் கண்ணீரின் ஈரம் உணர... அந்த ஈரம்பட்ட இடம் தீயாக அவனை சுட... கொழுந்து விட்டு எரியும் கடங்காத காட்டு தீக்கு மிக சின்ன நெருப்பு பொறி போதும்... அதுபோல் அவளின் அந்த ஈரம் அவனுள் கட்டுகடங்காத சினத்தை பற்றி பரவ செய்ய...

அதற்கு மேல் சும்மா நிற்க முடியாது... கண்களை திறந்தவன் லேசாக

கைகள் நடுங்க.. அவளுடைய கார்கூந்தலை வருடினான். பார்ப்பதற்கு தேங்காய் நாரை ஒத்து இருக்கும் அவளின் கூந்தல்... அவன் ஸ்பரித்த போது.. செடியில் இருந்து வெடித்து பறக்கும் பஞ்சு போல் மெத்தென்று இருக்க... அவன் தொட்ட மாத்திரத்தில் அழகாய் அவன் விரல்களில் சுருள... நிலை தடுமாறி ஒடும் வண்டியை போல் அவனின் எண்ணம் எங்கெங்கோ ஓடியது!!!

தொண்டையை செருமி தன்னை நிலைபடுத்திக்கொண்டவன் "எதிர்பார்த்தேன் தான் அலக்நந்தா... அதுக்காக இப்படி நீ கண்ணீரும் கம்பலையுமா கதறி அழும் அளவிற்கு என் ஆம்லெட் மோசமா இருக்குன்னு சத்தியமா நான் எதிர்பார்க்கவில்லை... இனி நான் வாழ்நாளில் சமைக்க மாட்டேன்" என்று அவன் சீரியசாக சொல்ல.

மெல்ல தலையை நிமிர்த்தியவளின்.. விழிகளில் ஈரம் படிந்திருக்க... அதற்கு நேர்மாறாக.. உதட்டில் லேசாக சிரிப்பு ஒட்டி இருக்க... "பத்ரி... உன்னால் மட்டும் தான் என்னை அழ வைக்க முடியுது அடுத்த.. ஒரே நிமிஷத்தில் சிரிக்க வைக்கவும் முடியுது" என்று சொல்ல..

அவளின் ஈரம் வழிந்த கன்னங்களை துடைத்தவனின் விரல்கள் அவளின் முகவாயை பற்றி... "உன் முட்டை கண்களால் என்னை கோபமாக பாரு.... முறை.. ஏன் சண்டை கூட போடு.. ஆனா அழாதே இப்படி உன் கண்ணிலிருந்து விழிவதை பார்த்தால்... மூச்சே விட முடியாதப்படி கழுத்தில் டையை இருக்கி கட்டிக்கொண்ட மாதிரி இருக்கு..." என்று அவன் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அங்கே பாயல் யாருடனோ போனில்பேசியபடியே உள்ளே நுழைவது தெரிந்தது.

வேகமாக பிரிக்க பிடிக்காது அவள் கார் கூந்தலில் குடியிருந்த விரல்களை பிய்த்து எடுத்தவன்... அருகில் இருந்த நாற்காலில் அமர்ந்து லேசாக கைகள் நடுங்க... முடியே இல்லாத தன் தலை முடியை வேகமாக கொதியப்படியே... நிமிர...

.

இருவருக்கும் குட் மார்னிங் சொல்லியபடியே வந்தவள் அங்கே இருந்த அலங்கோலத்தை கண்ணுற்று "நான் தான் டிபன் எடுத்து வரேன்னு சொன்னனே பத்ரி" என்று மொழிந்தபடி தன் பையை திறந்து

எல்லோருக்குமான டிபனை வைக்க..

“நான் தான் வேண்டாம் என்று சொன்னேனே பாயல்” என்றான் திடமாக பத்ரி.

“நான் அலக்நந்தாவிற்காக எடுத்து வந்தேன் பத்ரி... எப்படியும் ஒரு வாரம் அவளால் சமைக்க முடியாது. அதுவரைக்கும் கேன்டின் சாப்பாட்டையும் சாப்பிட முடியாதுன்னு உனக்கே தெரியும் பின்ன ஏன்... நீ ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிற?” என்றாள் பாயல் அலுத்த குரலில்.

“நீ அலக்நந்தாவிற்கு எடுத்து வருவது உன் இஷ்டம்... ஆனா எனக்கு சேர்ந்து எடுத்து வராதே.. இப்ப எடுத்து வந்துவிட்டதால் சாப்பிடுகிறேன் நாளைக்கு வந்தால் சாப்பிட மாட்டேன் பாயல்” என்றான் விடாபிடியாக பத்ரி.

எதுவும் பேசாமல் அவனை ஒரு வினாடி முறைத்த பாயல்... பின் தன் தலையை திரும்பி அலக்நந்தாவை பற்றி விசாரித்தபடியே... எடுத்த வந்த உணவை ஊட்ட... ஒரு வித இருக்கமான சூழலிலேயே அனைவரும் சாப்பிட்டு முடித்தனர்.

கை கழுவிய கையோடு பத்ரி ஏதோ வேலை இருக்கு என்று சொல்லி விட்டு வெளியே செல்ல.. கதவு வரை சென்றவன் திரும்பி.. “அலக்நந்தா... ஹவுஸ் கீப்பிங்கிடம் தினமும் வந்து இங்கே கிளீன் பண்ண சொல்றேன் நீ எதையும் செய்ய வேண்டாம்” என்று மொழிந்தவன் இருவருக்கும் ஒரு பையை உதிர்த்துவிட்டு சென்றான்.

அவன் போன பிறகு.. “ம்கூம்...” என்று பெருமூச்சு விட்ட பாயல்... “என் காதலை சொல்லி ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டேனோன்னு கூட தோன்றுகிறது அலக்நந்தா” என்றாள் வருத்தத்துடன்.

“ம்ம்..” என்று அமைதியாக எதுவும் பேசாது தலையை அசைத்தாள் அலக்நந்தா.

“எங்க இரண்டு பேருக்கும் ஒரே மாதிரியான டேஸ்ட்.. பிடித்த கலரில் ஆரம்பித்து பைக் வரை எல்லாம்... ஒரு மாதிரி தான் இருக்கும்... இருந்தும் என்னை ஏன் பிடிக்கவில்லை என்று தான் தெரியலை...” என்றாள் நிரம்பவே

வருந்தத்துடன் பாயல்.

அவள் சொல்வது முழுக்க உண்மை என்று புரிந்தது.. அவனின் ரூம் மேட்டாக இல்லாமல் இருந்திருந்தாலும் கூட பாயல் அவளுக்காக சமைத்து கொண்டு வந்திருப்பாள். அதே மாதரி தான் பத்ரியும் யார் ஆற்றில் விழுந்திருந்தாலும் ஒருஷணம் கூட யோசிக்காமல் காப்பாற்றி இருப்பான்… பத்ரியை பிடிக்காதவர்கள் என்று யாரும் இருக்க முடியாது என்றால் பாயலும் அப்படியே தான்!!!

“பிடிப்பது வேற காதலிப்பது வேற பாயல்.. உன் காதலை பத்ரி அட்வான்டேஜ் எடுத்துக் கொள்வதா ஆகிவிட கூடாதான்னு நினைக்கலாம் இல்லையா?!?” என்றாள் பத்ரிக்கு வக்காலத்து வாங்கினாள் அலக்நந்தா.

“ம்ம்… புரியாமல் இல்லை அலக்நந்தா… நான் காதலை சொன்னதுக்கு அப்புறம் என்னிடம் அதிகமா விலகி போனதே… ஒரு பார்வையால் கூட என்னை பத்ரி என்கரேஜ் பண்ணதில்லை. அப்படி பட்ட கேரக்டர் பத்ரி… இருந்தும் எங்கோ ஒரு மூளையில் வலிக்குது…” என்று தாங்கலோடு பேசியவள்.. “ச்ச்.. நீயே வலியில் உட்கார்ந்திருக்க.. நான் வேறு என் சோக கதையை சொல்லி போர் அடிக்கிறேனா? ஒன்று மட்டும் சொல்றேன் அலக்நந்தா நான் பத்ரிக்காக உனக்கு டிபன் எடுத்து வரவில்லை… பத்ரி இந்த சீன்லேயே இல்லாவிட்டாலும் நான் உனக்காக எடுத்து வந்து இருப்பேன்” என்றாள் பாயல்.

“ரொம்ப நன்றி பாயல்..” என்று அவளிடம் ஆத்மார்த்மாக மொழிந்தாள் அலக்நந்தா.

அடுத்த ஐந்து நாளும் அவள் அருகில் பாயல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பத்ரியை காண்பதே அறிதாக போனது. அதற்காக காரணம் அவனின் பேப்பர் ப்ரசன்ஸ்டேஷனுக்கான நாள் நெருங்க.. எப்ப வருகிறான் எப்ப போகிறான் என்பது புரியாத புதிராக தான் இருந்தது.

எந்த வேலை எப்படி இருந்தாலும் அவனிடம் இருந்து நேரத்திற்கு மாத்திரை சாப்பிட்டியா என்று மெசேஜ் மட்டும் தவறாமல் வர.. அவளுக்கு அந்த ஒற்றை மெசேஜ் மட்டுமே முகத்தில் புன்னகையை பரவ போதுமானதாக இருந்தது!!!

“வாடா ரூம் மேட்... நீ ஊரில் தான் இருக்கியா? உன்னை நான் பார்த்து மூன்று நாள் ஆகுது டா” என்று எரிச்சலாக மொழிந்தான் சித் அப்பொழுது தான் ரூமிற்குள் நுழைத்த பத்ரியை பார்த்து.

“ஒரு வழியா எல்லா வேலையும் முடித்துவிட்டேன் இனி ப்ரீ தான்” என்று அயர்வாக பத்ரி கவுச்சில் பொத்தென்று அமர்ந்து டீ டேபிளில் காலை நீட்டியவன் மியூசிக் சேனலில் வந்த ரம்மியமான பாடலைக் கேட்டு அப்படியே கண்னை மூடினான்.

அவன் குரலை கேட்டு தன் அறையை விட்டு வெளியே வந்தவள் எதுவும் பேசாமல் அமைதியாக அமர்ந்தாள்.

அவள் வந்த அரவம் கேட்டு கண்ணை திறந்தவன்.... மெல்ல அவள் புறம் தலையை திருப்பி எதுவும் பேசாமல் ஒரு வினாடி உன்னிப்பாக பார்த்தான். அதற்குள் ஓடிக்கொண்டிருந்த அந்த பாட்டு முடிந்து... அங்கே வந்த வர்ணனையாளர் இரண்டு பேர் அந்த பாடலுக்கு இசை அமைத்தவர் தன் மூன்றாவது மனைவியை டைவர்ஸ் பண்ணிவிட்டு வேறு ஒருவரோடு லீவிங் டூ கேதர்ல வாழ்கிறார் என்று கிசுகிசுப்பாக கூற.. அத்தனை நேரம் அங்கே பரவி இருந்த பாட்டின் இனிமை எங்கோ துரத்தி அடிக்க பட்டிருந்தது!!!

“நிம்மதியாக எதாவது ஒரு பாட்டு கேட்க முடியுதா? காம்பெயரிங் என்ற பெயரில் என்ன சாப்பிட்ட... எப்படி தூங்கினன்னு படு மொக்கையாக கேள்வி கேட்கறது.. அப்படி எதுவும் பேச வழி தெரியலைன்னா இது மாதிரி கொஞ்சம் கூட லட்சையே இல்லாமல் எவ்வளவு கீழ் தரமாக அது உண்மையான்னு கூட தெரிந்துக் கொள்ளாது.. அந்த மியூசிக் டைரக்டர் உயிரை கொடுத்து பாட்டுக்கு இசை அமைத்து நேஷ்னல் அவார்ட்டு வாங்கினா.. அதை விட்டு என்னத்தை பேசறாங்க?” என்றான் பத்ரி அருவருப்பாக.

“பின்ன பேசாமல் என்ன செய்வாங்க?? இதே மியூசிக் டைரக்டர் இரண்டு மாசம் முன்னாடி இந்த சேனலில் வந்து தான் காதலிப்பதை.. எப்படி ப்ரபோஸ் பண்ணினேன்னு ஆரம்பித்து.. அந்த நடிகையை எப்படி கூப்பிடுவேன் என்பது வரை விவஸ்தையே இல்லாமல் சொல்லி.. அவங்க

ப்ரைவசி அவங்களுக்கே முக்கியமில்லாமல் இருக்கும் போது... அப்ப கண்டவங்க பேசதானே செய்வாங்க?" என்றான் சித்.

"எல்லோரும் அப்படி இருப்பதில்லை சித்.. என் அண்ணனை எடுத்துக்கோ.. அவனுக்கு விபத்தில் அடிப்பட்டு ஹாஸ்பிட்டலில் சேர்க்கும் வரை அவன் சச்திதேவ் குருப்ஸ் வாரிசுன்னு இன்டஸ்ட்ரியில் யாருக்கும் தெரியாது... அவன் தன் பர்சனல் லைப் பற்றி வாயை திறந்தில்லை ஆனாலும் தப்பி தவறி அவன் யாரையாவது பார்த்து சிரித்தால் கூட அவர்களுடன் சேர்த்து கிசுகிசுதான்... இதனால் யார் எவ்வளவு பாதிக்கப்பட்டாலும்.. பரவாயில்லை. அவர்களுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் எதையாவது நியூஸ் கொடுத்துக் கொண்டே இருக்கனும்...ஏதோ என் அண்ணன் பற்றிய நியூஸ் சொல்வது அவர்களுடைய உரிமை மாதிரி.. யாரோட தனிப்பட்ட வாழ்க்கையிலும் யாருக்கும் மூக்கை நுழைக்க உரிமை இல்லைன்னு ஏன் புரிய மாட்டேங்குது " என்றான் வெறுப்புடன்.

"ம்ம்.." என்று சித் தலை ஆட்ட.. "என்னவோ போடா.. மச்சி... ப்ரீ பப்ளிசிட்டிக்காக இவங்களும்... டி.ஆர்.பி ரேட்டிங்காக அவங்களும் மாறி.. மாறி... என்னத்தையாவது விவஸ்தையே இல்லாமல் சொல்லி.. பொது மக்களான நம்மை தான் பைத்தியக்காரனா திரிய விடறாங்க" என்று அலுத்துக் கொண்டான்.

"என்ன அலக்நந்தா நாங்க பேசிக்கிட்டே இருக்கோம் நீ ஒன்றும் வாயே திறக்காமல் இருக்கியே?" என்றான் அமைதியாக அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு இருந்தவளிடம்.

சட்டென்று உடல் விரைத்தவள்.. "வந்து.. சாரி... அது மாதிரி நான் எந்த நிகழ்ச்சியையும் பார்ப்பதில்லை.." என்றாள் முனுமுனுப்பாக.

"வாட்???" என்று பத்ரி ஆச்சரியமாக பார்க்க.. "ஸ்ஸ்.. ஆமாம் நீதான் பாட்டு கேட்டாலே தூக்கம் வராதுன்னு சொன்ன ஆளாச்சே.. எப்பயும் ஹிஸ்டரி சேனலும், டிஸ்கவரியும் தானா?" என்று பத்ரி கேட்க.

"உங்களுக்கு பிடித்த டிபனை சாப்பிட உட்காரும் போதும்.. உங்க கண்ணுக்கு டிபன் தெரியதற்கு பதில்... அதில் என்ன போட்டு.. எப்படி சமைத்திருப்பாங்க்னு உங்க கண்ணுக்கு தெரியதால் சாப்பிடும் ஆசையே

போயிடாது?" என்று அவள் ஒரு விசித்தர பதிலை அளித்தாள்!!!

அந்த பதிலை கேட்ட மாத்திரத்தில் அங்கே மயான அமைதி குடிகொண்டது!!!

"திரும்பவும்.. புரியாத மாதியே பேச ஆரபித்துவிட்டாய அலக்நந்தா?!?" என்று பத்ரி அவளிடம் கேட்க..

அலக்நந்தா பதில் சொல்லும் முன்.. முந்திக்கொண்ட சித்... "அதை விடு டா... இப்ப புது டிரென்டா பரவிக்கிட்டு இருக்கும் லீவிங் டூ கேதரை பத்தி நீ எதாவது சொல்லுவன்னு நினைத்தேன்?!?" என்று அவன் வாயை பிடுங்கினான் சித்.

"இதை நீ கேட்கும் ஆளே தப்பு... நான் சச்சிதேவ் டா... நாள் நட்சத்திரம் பார்த்து கூட கல்யாணம் பண்ண பொறுமை இல்லாமல் பெண்னை கடத்திகிட்டு போய் தாலி கட்டும் ஆசாமியிடம் போய் லிங் டூ கேதரை பற்றி கேட்கறியே... எங்களுக்கு லவ் பண்ண மட்டும் தான் டா டைம் ஆகும்.. மற்றப்படி என் குடும்ப வழக்கப்படி தாலிகட்டிவிட்டு அவளை என்னவளாக்கி கொண்டு தான் மறுவேலை..." என்று தன் குடும்ப பாரம்பரியத்தை பீற்றிக் கொண்டு இருக்கும் போதே.. சொல்லி வைத்தார் போல அவர்கள் வீட்டில் இருந்து போன் வர..

எடுத்து காதில் வைத்தவனுக்கு சொன்ன செய்தியை கேட்டு முகம் இருள.. "என்னது??? எப்ப?? தாத்தாவிற்கு எந்த கால் அடிப்பட்டு இருக்கு?!? இப்ப எப்படி இருக்கார்?!? பாட்டி??? ம்.. ம்.. சரி நான் வரேன்... என்னது வர வேண்டாமா?? அங்க வராம இங்க ஒவ்வொரு நிமிஷத்திற்கும் போன் பண்ணி நலம் விசாரிக்க சொல்றியா?? சும்மா என்னிடம் போனில் பேசிட்டு டைம வேஸ்ட் பண்ணாத.. தாத்தா கூடவே இரு... நாளை மதியானத்தில் நான் அங்க இருப்பேன்..." என்று அவசரமாக சொல்லி விட்டு போனை கட் செய்தான் பத்ரி.

அவன் குரலில் இருந்த பதட்டத்தை கேட்ட படி அலக்நந்தாவும் சித்தும் அவன் அருகில் வர...

ஆர்யாவிற்கு போன் செய்தபடியே "பாட்டி விழுந்துடாங்களாம் நான்

ஊருக்கு போறேன்" என்று இருவருக்கும் பொதுவாக பதில் அளித்தவன்… போனில் ஆர்யாவின் குரலை கேட்டவுடன்..

"டேய்… மங்கி சொன்னாளா??" என்றபடி தன் வாட்ச்சை பார்த்தவன்… "எப்படியும் இப்ப ப்ளைட்டுக்கு ஸ்லாட் கிடைக்காது.. நாளைக்கு காலையில் தானே கார்த்திக்கும் நீயும் கிளம்ப முடியும்… அதுக்குள்ள நான் நேராக ஹைதிராபாத் வந்திடறேன் எல்லோருமா சேர்ந்து போயிடலாம்… என்னது வேண்டாமா?? இனி ஒரு தரம் பேப்பர் ப்ரசன்டேஷனைப் பற்றி ஒரு வார்த்தை சொன்ன… பல்லை உடைத்து விடுவேன்… நான் வரேன்னா வரேன்.. கார்த்திக் எங்க?? ம்ம் கொடு… டேய்.. டேக் ஆப் ஸ்லாட்டில் பிரச்சனைன்னா சித்தோட அண்ணணிடம் பேசு அவர் ஹெல்ப் பண்ணுவார் நான் பத்து மணிக்கு அங்க இருக்க முயற்சிக்கிறேன்.. ஒ.கே வா??" என்று மற்ற விஷயத்தை பேசிவிட்டு போனை வைக்க..

சித்திற்கு இதுவரை கேட்டதே போதுமானதாக இருக்க… வேகமாக அவனுடைய அண்ணிற்கு போன் பண்ணி விஷயத்தை தெரிவித்தவன்… அதற்குள் காலை ஐந்து மணிக்கு தனி ஹெலிகாப்பரில் பத்ரி புறப்பட எல்லா ஏற்பாடும்… மளமளவென்று முழு வீச்சி தொடங்கி.. அடுத்த இரண்டு மணி நேரத்தில் எல்லாம் முடிவாகி இருந்தது.

இரவு முழுவதும் குடும்பத்தாருடன் தொடர்புடனே இருந்த பத்ரியை பார்த்தவளுக்கு ஏன் இங்கே இருங்க முடியாது என்று சொன்னான் என்பது அப்பொழுது அலக்ந்ந்தாவிற்கு புரிய… விடியற்காலையில் கிளம்பி சென்றவனை "போய் சேர்ந்தவுடன் போன் செய்" என்பது தவிர பத்ரியிடம் அவள் எதுவும் பேசவில்லை..

ஒருவழியாக அவன் கிளம்பியவுடன் தான் சித்திற்கும் அலக்நந்தாவிற்கும் நிம்மதியா மூச்சு விட....

"இந்த வாரம் ப்ராக்சர் வாரம் போல… அங்க பாட்டிக்கு கால் உடைத்ததுன்னா…" என்று பத்ரி பேசும்போதே இடையில் வெட்டியவள்..

"பாட்டிக்கு இல்ல தாத்தாவிற்கு… அவரை தானே ஹாஸ்பிட்டலில் பார்த்துக்க சொல்லி சொன்னான்.." என்றாள் அலக்நந்தா.

“ஆமாம்… ஆனா பாட்டி தானே கீழே விழுந்துவிட்டாதாக சொன்னான்?” என்றான் பத்ரி தெளிவாக..

அப்ப கால் உடைந்தது தாத்தாவிற்கா பாட்டிக்கா? என்று இருவரும் குழம்பி ஒருவரை ஒரு பார்த்து மலங்க விழிக்க.. தங்களின் நிலையை நினைத்து சிரிப்பு வந்தது!!!

“அவங்க வீட்டிலேயே டாக்டர் இருக்காங்க.. ஒன்னும் பெரிய பிரச்சனை இருக்காது… பத்ரியும் அடிக்கடி சொல்லுவான் அவர்களுக்கு அடி பட்டுச்சுன்னாலும்… மூக்கு உடைந்தாலும் அவனின் தங்கை தான் பார்த்துபாங்கன்னு..” என்று சித் திடமாக கூறினான்.

“வாட்??” என்று ஆச்சிரியமாக இழுத்தவள்… “ஆனா… அவங்க வெட்டினரி டாக்டருக்கு படிக்கிறதா சொன்ன ஞாபகம்???” என்று இழுத்தாள் அலக்நந்தா!!

இன்று……..

“அவர்கள் நடந்து கொள்ளாதது ஒருபுறம் இருக்கட்டும்… நீ முதலில் அவர்களின் மகளா நடந்திருக்கியா?” என்றார் பாட்டி

“பாட்டி..” என்று தயங்கியவள்… “என்னோட வெற்றியில் நான் கேட்காமலே என்னுடன் போஸ் கொடுத்து நிற்க தெரிந்த அவர்களுக்கு நான் தோல்வியில் தனியாக இருந்து தவிக்கும் போது என்னுடன் இருக்கனுன்னு தோன்றவே இல்லையே பாட்டி… அப்படி நடத்துக் கொண்ட போது நான் எப்படி ஒரு மகளா நடக்க?!? என்றாள் ஆதங்கத்துடன்.

“ஒரு வயதில் குழந்தை நடப்பதற்கு தேவைப்படும் அம்மாவின் துணை பதினாறு வயதில் தேவைப் படாது… அதுமாதிரி கூட நினைத்திருக்கலாம்… அலக்நந்தா… நான் அவர்கள் செய்தது தப்பு சரின்னு உன்னிடம் வாதாட வரவில்லை… கொஞ்சம் யோசித்து பாரேன் அலக்நந்தா… பத்ரியிடம் மன்னிப்பை வேண்டும் நீ…. அதே மன்னிப்பை உன் பெற்றவர்களுக்கு தரமாட்டேன் என்பதில் என்ன நியாயம் இருக்கு?”

“பாட்டி…” என்றாள் வலியின் ரணம் பொருக்காமல் அலக்நந்தா.

ஆனால் அவள் அழைத்தது காதிலே விழாதது போல் பாட்டி “சச்சிதேவ்வாக நடக்க பழகுன்னு சும்மா சொல்லவில்லை அலக்நந்தா… ஒரு சச்சிதேவோட வாழ ஆசைப் பட்டால் மட்டும் போதாது… அதற்கான என்ன முயற்சி நீ எடுத்திருக்க? ஒரு குடும்பம்.. பெரிய மரமாக தழைத்து செழுமையாக தெரிவதற்கு… மேலே இருக்கும் இலைகள் காரணம் இல்லை அலக்நந்தா பிறர் கண்ணுக்கு தெரியாது இருக்கு ஆணி வேர் தான் முழுமுதற் காரணம்!!!”

“என் மூத்த பேரன் தன் குடும்பத்திற்காக வளமான வாழ்வை துறந்தவன்… பத்ரியோ… தன் இருபத்தியோரு வயதில் முகம் சுளிக்காமல் குடும்ப பாரத்தை தூக்கி சுமப்பவன்… கார்த்திக்கோ தன் குடும்பத்திற்காக காதலித்து கல்யாணம் செய்தும் பிரிந்து வாழ்பவன்… இப்படி கண்ணு தெரியாமல் ஆணி வேறாக இருந்து அவர்கள் செய்வதுதான் குடும்பம் எந்த புயல் அடித்தாலும் திடமாக நிற்க காரணம்… அத்தகைய செயல் புரிய நீ தயாரா இருக்கியா?” என்றார் பாட்டி அழுத்தம் திருத்தமாக.

“பாட்டி…” என்பதற்கு மேல் அவளால் எதுவும் பேச முடியாது தொண்டையை அடைக்க..

“யோசி.. அலக்நந்தா நான் சொல்வது உனக்கு வேதனையா இருக்கலாம்… ஆனா அது தான் உண்மையும் கூட… உன் இடத்தில் பத்ரி இருந்திருந்தால் இப்படி தான் சாரி சொல்லிட்டு இருந்திருப்பானா? இந்நேரத்திற்கு பூமியை உனக்காக தலை கீழ் புரட்டியிருக்க மாட்டானா? ஆனா நீ என்ன பண்ற? இல்லை என்ன பண்ண வேண்டியதை பண்ணாமல் இருக்கன்னு… நீயே முடிவு பண்ணு அலக்நந்தா… சாரின்னு சொல்றதும்… அதை அப்படியே மேசேஜ் அனுப்பறதிலும் எந்த பயனும் இல்லை… செயலில் இறங்க வேண்டிய நேரம்… ஓடினால் தான் ஆறு… நின்றுவிட்டால் அது குட்டை… நிற்காமல் ஓடும் புண்ணிய நதியின் பெயர் வைத்துக்கொண்டு ஒரே இடத்தில் நின்று விடாதே… பத்ரியுடன் நீ வாழ்வது அவன் கையில் இல்லை… உன் கையில் தான் இருக்கு… ” என்று ஆணிதரமாக சொன்னவர் பிறகு பேசுறேன் என்று வைத்துவிட்டார்.

அவரிடம் பேசிய பின் சுத்தமாக குழம்பிவள் காதில் மட்டும் “நீ வாழ்வது அவன் கையில் இல்லை உன் கையில் தான் இருக்கு..” என்ற வார்த்தை

ரீங்காரம் இட்ட படியே இருக்க… தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தாள் அலக்நந்தா…

அத்தியாயம் - 17

இரண்டு மாதம்… இரண்டு வாரத்திற்கு முன்பு…

“வாட்??” என்று ஆச்சிரியமாக இழுத்தவள்… “ஆனா… அவங்க வெட்டினரி டாக்டருக்கு படிக்கிறதா சொன்ன ஞாபகம்???” என்று இழுத்தாள் அலக்நந்தா!!

“அப்படியா?!.. இவங்க வீட்டில் கல்யாணம் தான் குழப்பமாக நடக்கும்ன்னு நினைத்தேன் கடைசியில் எல்லாமே குழப்பமாதான் இருக்குன்னு எதிர்பார்க்கவில்லை.. சரி விடு… ஊருக்கு போனா அவன் பயங்கர பிசியா இருப்பான்… இங்கே வந்ததும் எல்லாத்தையும் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்” என்று சொன்னவன் “உன்னோட அடுத்த செக் அப்… எப்ப? என்றான் அதி சிரத்தையாக.

“இன்னும் மூன்று நாள் கழித்து வர சொல்லி இருக்காங்க… ஏன்?” என்றாள்.

“உன்னுடன் துணைக்கு போக சொல்லி பத்ரி சொன்னான் அதுதான் கேட்கிறேன்”.

“பாயல் வருவதாக முன்னாடியே சொல்லிவிட்டாளே?!?” என்றாள் அலக்நந்தா.

“இருக்கட்டும் அதனால் என்ன?? நான் உன்னுடன் போறதா பத்ரியிடம் சொல்லிட்டேன்..”

“ஆனா… நீ வந்து என்ன பண்ண போற?? எப்படியும் வெளியே தானே உட்கார்ந்து இருக்கனும்?”

“பராவில்லை… அலக்நந்தா. சின்னதோ… பெரிசோ… வாக்கு கொடுத்துவிட்டால் மாற மாட்டேன்..” என்றான் அமைதியாக சித்.

“ஓ!!! நவாப் வம்சம்?!?” என்று லேசாக புன்னகைத்தவள் “முன்னாடியே கேட்கனுன்னு இருந்தேன் நீ ஹத்திராபாதி பின்ன எப்படி பத்ரியிடம் அழகாக தமிழ் பேசற?” என்றாள் யோசனையாக.

“நவாப் அப்பாவிற்கும்.. தமிழ் அம்மாவிற்கும் பிறந்தவன் நான். என் அம்மா கும்பகோணம்.. அதுக்கு நான் என்னவோ அரேபியில் பேசின மாதிரி இப்படி பார்க்கற.. அது தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு ஊர்... அம்மாவை ஏதோ கல்யாணத்தில் பார்த்து.. அடுத்த ஐந்து நிமிஷத்திலேயே ப்ரோப்ஸ் பண்ண... அப்புறம் இரு வீட்டினாரின் எதிர்ப்பு... பின் இவர்களின் நான்கு வருட போராட்டத்திற்கு பிறகு கல்யாணம் ஆச்சு!!!” என்றான் சித்.

“வாவ்.. அது எப்படி எல்லோருடைய அப்பா அம்மாவிற்கும்.. ஒரு ப்ளாஷ் பேக் இருக்கு?”

“அப்பா அம்மாவிற்க்கு மட்டும் இல்ல.. தாத்தா பாட்டி கூட அவர்களுக்குன்னு ஒரு கதை இருக்க தான் செய்யும்... நமக்கு அவைகளை உட்கார்ந்து கேட்க நேரம் இருக்கான்னு தெரியலை..?!!?” என்று சிரித்தப்படி சொல்லியவன்... “நீயும் நேரம் காலம் பார்க்காமல்.. பத்ரி ஊரில் இருந்து வந்ததும்... உன்னை பற்றி சொல்லி விடுவது எல்லோருக்கும் நல்லது.. அலக்நந்தா” என்றான் விடாபிடியாக முடித்தான் சித்.

அத்தனை நேரம் இருந்த சிரிப்பு எங்கோ காணாமல் போக.. அமைதியாக தலையை ஆட்டினாள் அலக்நந்தா.

****

“அடேய்.. போதும் டா.. மூன்று நாளா நீ பண்ணும் அட்டகாசம் தாங்க முடியலை... கடைசி தடவையா சொல்றேன்... இதை நிறுத்திக்கோ... இல்லை..” என்று நறநறவென்று பல்லை கடித்தப்படி சொன்னான் கார்த்திக்.

“இல்லன்னா என்னடா பண்ணுவ?” என்று கால் மேல் கால் போட்டப்படி அலட்சியமாக கேட்டான் பத்ரி.

“ஏற்கனவே ஒருத்தரை காலை உடைத்துக்கொண்டு படுத்துகிடக்கார்... அவருக்கு கம்பெனி கொடுக்க நீ போகனுன்னு ஆசை படாதே..” என்று தன்

முஷ்டியை முறுக்கியப்படி மிக கடுமையாக எச்சிரித்தான் கார்த்திக்.

இதை கேட்டுக்கொண்டே உள்ளே வந்த ஆர்யா.. அதட்டலாக “டேய்… என்னடா பண்ணிறிங்க?? தாத்தாவிற்கு துணையா இருக்க அனுப்பினா… இப்படி காரிடாரே நம் ரூம்மிற்கு முன் நின்னு வேடிக்கை பார்க்கும் அளவிற்கு அடிச்சுபிங்க.. ?” என்றான் ஆர்யா கதைவை சாத்தியப்படி.

“நான் ஆரம்பிக்கலை ஆர்யா” என்றான் பத்ரி முந்திக்கொண்டு.

“என்னது ஆரம்பிக்கலையா?” என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்த கார்த்திக்… “அண்ணா.. பிரச்சனையே இவன் தான் அப்புறம் இதில் தனியா வேற ஆரபிக்கனுமா? தாத்தாவை பார்த்துக்கோன்னு சொல்லி தானே அனுப்பன??” என்றான் காட்டமாக.

“ஆமாம்.. அதுக்கு என்ன இப்ப?” என்றான் ஆர்யா

“அடிப்பட்ட கால் உடைந்த தாத்தா புலம்பி.. அனத்தினா அதில் ஒரு நியாயம் இருக்கு… அவருக்கு பதில் இதோ திம்சு கட்டையா இருக்கும்… இவன் நயிட் முழுவதும் அனத்தரதும்.. படுத்தரதும் தாங்க முடியலை… மூன்று நாளா ஆச்சு அண்ணா நான் தூங்கி….” என்று பத்ரியை முறைத்தப்படி கூறியவன் தொடர்ந்து..

“வந்த அன்றே தாத்தாவுக்கு அடிப்பட்டதால் ஒரு மாஸ்டர் செக் அப் பண்ணி விட சொன்னான்… சரின்னு சொன்னேன்… அப்புறம்.. பாட்டிக்கு ஒன்னு சொன்னான்.. போன மாசம் தான்டா அவங்களுக்கு பண்ணதுன்னு எவ்வளவோ சொன்னேன் கேட்கலை.. சரி போய் தொலையுதுன்னு ஒ.கே சொன்னேன்… அப்புறம் அம்மான்னா.. அப்பான்னா.. இப்படியே வீட்டில் எல்லாரையும் ஒவ்வொருத்தாரா சேர்க்க… ரெஷன் கார்டுக்கு பெயர் சேர்க்கிற மாதிரி… லிஸ்ட் போட… நான் மாஸ்டர் செக் கப்பிற்கு பெயர் சேர்க்காதது வீட்டில் மங்கி வளர்க்கும் சிம்பியும்… அவள் போன வாரம் மலையில் அடிப்பட்டு கிடந்ததுன்னு வீட்டில் தூக்கி வந்திருக்கும் மலை பாம்புதான்… பாக்கி” என்றான் கடுப்பாக கார்த்திக்.

“சரி.. அதை நான் பார்த்துக்கிறேன் நீ போய் கீழே அட்மின் டெஸ்கில்…

நாளை காலையில் பத்து மணிக்கு டிஸ்சார்ஜ் பண்ணலான்னு டாக்டர் சொன்னாத சொல்லி விட்டு வா…" என்று அவனை வெளியே அனுப்பிய ஆர்யா..

"என்னடா ஆச்சு?" என்றான் பத்ரியை பார்த்து.

இத்தனை நேரம் அங்கே இருந்த சேரில் ஹாயா உட்கார்ந்திருந்த பத்ரி பட்டென்று எழுந்தவன் விரத்தியா தலையை கோதியப்படி நடந்து "ஐ ஃபீல் ரெஸ்ட்லஸ்.. இப்படிதான் இருக்கு என்னால் வார்த்தைகைளால் சொல்ல முடியைல" என்றான் பத்ரி ஜன்னல் வழியாக தூரத்தில் தெரிந்த மலை முகடை வெறித்தப்படி.

சச்சிதேவ் குடும்பத்திலேயே பேச்சு திறமை மிக்கவன்… எப்படிப்பட்ட நாசுக்கான விஷயமா இருந்தாலும் தன் வாக்கு சாதுர்யத்தால் தெள்ள தெளிவாக சொல்ல கூடிய வல்லவன் என்று பெயர் பெற்ற பத்ரிக்கு "சொல்ல தெரியலை" என்று கூறுவதை நம்ப முடியாது ஆச்சரியமாக பார்த்தான் ஆர்யா.

ஆர்யாவின் அதிர்ச்சியை கவனிக்காது… "ஏதோ… ரொம்ப ரொம்ப முக்கியமா செய்ய வேண்டிய வேலையை நான் செய்ய மறந்துவிட்ட மாதிரி உள்ளுகுள்ள ஒரு குமைச்சல் என்னை சாப்பிடவிடாது தூங்க விடாது பாடாய் படுத்திகிட்டே இருக்கு… ஆனா என்னு மட்டும் கண்டே பிடிக்க முடியலை!!!"

"சில நேரம்… ஸ்வீமிங் பூலில் டைவ் அடித்து தண்ணிக்குள்ள கீழே போக.. போக.. உடம்பு லேசாக… அதனுடன் சேர்ந்து மனசும் லேசாகி… அத்தனை நேரம் காதில் கேட்ட சத்தம் எல்லாம் மறைந்து.. நமக்கும் வெளி உலகிற்கான தொடர்பு அற்று… ஒரு ஏகாந்த நிலையில்… நாமும் தண்ணிரும்… ஒரு லயத்தோடு ஒன்றாகி கலக்க… அப்போ அந்த தண்ணிரின் நிர்மலமான சத்தம்… காதை நிறைத்து.. ஏதோ மகா சமுத்திரத்தையே வென்று விட்ட ஒரு உணர்வு தோன்றுமே அது போல் இருக்கு… அப்புறம் திடீரென்று என்னவோ.. மீளவே முடியாத ஆழத்திற்கு தான் சென்று விட்டதுபோலவும்… இனி மேல வர முடியாது மூச்சு முட்டுவது போலவும்… மாறி மாறி இருக்கு டா… நான் சொல்றது உனக்கு எதாவது புரியுதா???" என்று பத்ரி கேட்டப்படி திரும்ப…

அவன் சொன்ன விஷயத்தை கேட்டு… அதிர்ச்சியில் உரைந்து போய் ஆர்யா நின்றிருந்தான்.

அந்த சமயம் பார்த்து பெட்டில் படுத்திருந்த தாத்தா பலத்த இருமலுடன் கண் விழிக்க… சகோதரர்களில் கவனம் அங்கே திரும்பியது.

“எப்படி இருக்கிங்க தாத்தா?” என்று விசாரித்தப்படி பத்ரி அவர் அருகில் சென்றான்.

“சூடா தண்ணீர் வேண்டும்…” என்றார் லேசாக இருமலுடன் தாத்தா.

அங்கே ப்ளாஸ்கில் இருந்து ஆவி பறந்த தண்ணீரை ஊற்றி கொடுக்க…

அதை வாங்கிய தாத்தா… “ம்கூம்.. தண்ணீர் ஆறி போச்சு.. கேன்டின் போய் வேற வாங்கிட்டு வா…” என்று பிடிவாதமாக சொன்னார்.

“ஆனா தாத்தா..” என்று பத்ரி பேச ஆரபிக்க..

“டேய்… போய் வாங்கிட்டு வாடா..” என்று ஆர்யா பணிக்க பத்ரியும் கிளம்பினான்.

அவன் கதவை மூடிக்கொண்டு வெளியேறிய அடுத்த நிமிடம் விசுக்கென்று உட்கார்ந்த தாத்தா “என்னடா பேசறான் இவன்?” என்றார் ஆர்யாவிடம்.

“அவன் சொன்னதை கேட்டிங்களா?” என்றான் பத்ரி ஆச்சரியமாக.

“டேய்… எனக்கு காலில் தான் அடிப்பட்டிருக்கு தலையில் இல்ல.. என்று சச்சிதேவாக பேசியவர்… “அவன் சொன்னதை கேட்டியாடா… இவன் உடம்பில் சச்சிதேவ் ரத்தம் ஒடுற மாதிரியா பேசறான்?? எப்படி டா இவன் இவ்வளவு டூயூப் லைட்டா இருக்கான்.. யாருடா அந்த பெண்ணு… பாயலா?!?” என்றார் தாத்தா தன் ஒற்றன் வேலை சிறப்பாக செய்தப்படி.

“ஷ்.. ஷ்… தாத்தா… கத்தாதிங்க… எனக்கு எதுவும் தெரியலை… ஆனா சிக்கீரம் தெரிந்துவிடும். பத்ரி ஒன்றும் முட்டாள் இல்லை… தாத்தா.. பேசும் போதே

ஒரு தடவைக்கு நாலு தடவை யோசித்தும் பேசுபவன்… தான் என்ன மாதிரி உணர்கிறோம் என்பதையும் விரைவில் புரிந்துக்கொள்வான்” என்றான் ஆர்யா.

“ஐய்யோ… எனக்கு இப்பவே கை சரியாகி விட்ட மாதிரி ஒரே பரபரப்பாக இருக்கு” என்றார் மிகுந்த ஆர்பாட்டமாக.

“தாத்தா.. உங்களுக்கு அடிப்பட்டது கையில் இல்ல காலில்” என்று லேசாக சிரித்தப்படி பதிலளித்தவன்.. “அவன் ஒன்றும் என்னை மாதிரி வருஷக்க கணக்கா எடுத்துக்க மாட்டான்… கொஞ்சம் பொருமையா இருங்க”

“அந்த பெண் யாருன்னே தெரியலைன்னு உன் பாட்டிக்கு தெரிந்தா என் ஒரு காலை உடைத்தது பத்தாதுன்னு என் இன்னொரு காலையும் சேர்த்து உடைத்திருப்பா… தயவு செய்து உன் பாட்டியிடம் இதை பற்றி மூச்சு விடாத” என்று தாத்தா முடிக்கவும் பத்ரி வந்து சேரவும் சரியா இருக்க… அத்துடன் பேச்சு நின்றது.

மறுநாள் அவர்கள் தாத்தாவை வீட்டிற்கு அழைத்து வர… தாத்தா திடீரென்று பத்ரியை அப்படி… இப்படி என்று நகர விடாமல் அவர் அருகிலேயே நிறுத்த… அது எல்லோர் கவனத்தை கவர செய்த போதும் யாரும் எதுவும் சொல்லவில்லை.

“நாள் முழுக்க தூங்கியதால் எனக்கு தூக்கம் வரவில்லை எதாவது ஜேம்ஸ் பாண்ட் பார்க்கலாம்..” என்று அடமோ அடம் பிடித்து ஹோம் தியேட்டர் அறைக்கு செல்ல… வீட்டில் இருக்கும் அனைவரும் சிம்பி உட்பட மொத்த குடும்பமும் அங்கே ஒன்று கூட ஜேம்ஸ் பாண்ட் மாரத்தான் இனிதே ஆரம்பித்தது!!!

எப்போதுமே பாட்டி தான் இது மாதிரி செய்வார் என்ற போதும் இம்முறை பாட்டியை பின்னுக்கு தள்ளி வைத்துவிட்டு தாத்தா அடிக்கும் லூட்டிகளை எல்லோரும் முட்டும் சிரிப்புடன் பார்க்க… பாட்டியோ கண்களில் யோசனை பரவ அவரை பார்த்தாரே தவிர வேறு எதுவும் பேசவில்லை….

ஸ்கை பால்(SKY FALL) படத்தின் முதல் பைக் சேஸ் சீன் ஆரம்பிக்க… அந்த சமயம் பார்த்து யாருடைய போனோ அலறியது.

திரையில் இருந்து பார்வையை விலக்காமல் “அடேய் கார்த்திக்… போனை கட் செய்” என்று எரிந்து விழுந்தான் பத்ரி.

“அது உன்னுடையது தான் பரதேசி!!!” என்று அதே சூட்டில் பதில் வந்தது கார்த்திக்கிடம் இருந்து.

திரையில் இருந்து பார்வையை விலக்காது கைகளால் துழாவியப்படி தன் அருகில் கிடந்த போனை எடுத்தவன் நம்பரை கூட பார்க்காமல் கட் பண்ண போனவனின் கண்கள் ஏதேச்சையாக அந்த நம்பரை பார்க்க… அடுத்த நொடி அவசரமாக ஆன் செய்து காதில் வைத்தவன்… “அலக்நந்தா??.. ஏன் போன் பண்ணப்ப எடுக்கலை? ரிப்போட்ஸ் எல்லாம் எப்படி இருக்கு?” என்றப்படி போனை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

டி.வியில் அதி வேகமாக காட்சிகள் நகர… இங்கே உட்கார்ந்திருந்த மனிதர்கள் பாஸ்சில் வைத்த மாதிரி அனைவரும் ஸ்டில் ஆக உட்கார… ஒருநிமிடம் ஆனது அவர்கள் அனைவருக்கு அங்கே என்ன நடந்தது என்று புரிய…

காரணம் ஜேம்ஸ் பாண்ட் படம் பார்க்கும் போது போனை தொடுவதே கொலை குற்றமாக கருதப்படும் இந்த வீட்டில்… பைக் சேஸ் சீன்னில் பத்ரி சர்வ சாதாரணமாக போனை எடுத்தது மட்டுமல்லாமல் அதில் பேசியப்படியே ரூம்மை விட்டே வெளியே போவதை பார்த்து அவன் வீட்டில் இருந்த எல்லோரும் உரைந்தார்கள் என்றால் அது மிகை ஆகாது!!!

சுதாரித்த அனைவரும் ஒரே நேரத்தில் காட்டு கத்தலாக பேச தொடங்க… “அமைதி.. அமைதி… அலக்நந்தாவை பற்றி யாருக்கு என்ன தெரியும்?!?” என்றான் ஆர்யா.

அத்தனை நேரம் ஒரே இடத்தில் உட்கார முடியாத சௌவி எப்பயோ படுக்க சென்று விட்டப்படியால் இவனுடைய புது ரூம் மேட் தான் இந்த அலக்நந்தா.. அவளுக்கு சமீபத்தில் தான் கை உடைந்தது என்பது தான் ஒட்டு மொத்த குடும்பத்துடைய பதிலாக இருந்தது.

“ச்சி.. ச்சி.. இதை சொல்ல உங்களுக்கு வெட்கமா இல்லை.. நான் தான்

சௌவியை பார்ப்பதில் பிசியா இருந்தேன்… நீங்க எல்லாம் என்ன வெட்டி முறிச்சிங்க?? நம்ம வீட்டுக்கு அடுத்ததாக வர போகும் பெண்ணின் பெயர் அலக்நந்தா என்பது தவிர வேற எதுவும் தெரியவில்லை… ச்ச ஷேம் ஆன் யூ கயிஸ்!!! இன்னும் இரண்டு நாளில் பத்ரி ஊருக்கு போறதா சொல்லி இருந்தான் இல்லை… அவன் போனவுடன் உங்களுக்கு அலக்நந்தா பற்றி என்ன… அவளுடைய கொள்ளு தாத்தாவுடைய பூர்வீகத்தை பற்றியும் சேர்த்து சொல்றேன் அதுவரைக்கு மூச்சு விட கூடாது புரியுதா?” என்று சொன்னார் நாட் நாட் செவன்…

மட்டுவார் குழலி பாட்டி சொன்னப்படியே பத்ரி ஊருக்கு கிளம்பிய அடுத்த நொடி குடும்பம் மொத்தம் ஒன்று கூட…

“அலக்நந்தா மல்ஹோத்ரா”ன்னு அவள் முழு பெயரை சொன்னா அவள் படிக்கு கிலாஸில் கூட யாருக்கும் தெரியாது… இதுவே “அல்கா மல்ஹோத்ரா”ன்னு சொன்னா எல்லோருக்கும் தெரியும்” என்று பாட்டி தன் கணீர் குரலால் சொல்ல.. எல்லோருடைய பார்வையும் சௌவியின் மேல் படிந்தது….

இன்று…

“நீ வாழ்வது அவன் கையில் இல்லை உன் கையில் தான் இருக்கு..” என்ற வார்த்தை ரீங்காரம் இட்ட படியே இருக்க… தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தாள் அலக்நந்தா…

மாலை க்லாஸை முடித்து விட்டு அவன் வரும் பாதையில் பத்ரிக்காக காத்திருந்தவள் அவனை கண்டவுடன் நேராக சென்று “நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும் பத்ரி டைம் இல்லன்னு சொல்லாதிங்க.. பத்து நிமிஷம் தான்…” என்றாள் பிடிவாதமாக அலக்நந்தா…

எதுவும் பேசாது அமைதியாக சற்று தூரம் நடக்க.. தங்களுக்கான தனிமை கிடைத்தும் எதுவும் பேசாமல் மலை முகட்டை வெறித்து பார்த்தப்படி அமைதியாக அலக்நந்தா நிற்க…

“இங்கே நின்றுக்கொண்டு நீ பொருமையா யோசித்து உதிர்க்கும் வார்த்தைளை கேட்க நேரம் இல்லை அலக்நந்தா…” என்றான் பத்ரி

அழுத்தமாக.

“ம்கூம்..” என்று பெரு மூச்சு ஒன்றை சத்தம் போட்டு விட்டவள் அமைதியாக அவன் புறம் திரும்பி..

“பத்ரி... என் வீட்டில் இருந்து உனக்கு போன் செய்தார்களா?” என்றாள் ஆதங்கமாக.

“இல்லை... நான்தான் அவர்களுக்கு போன் செய்து பேசினேன்..”.

சத்தியமாக இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத அதிர்ச்சியில் “என்ன நீ.. நீ என் வீட்டிற்கு போன் செய்தியா?” என்றாள் தாங்க முடியாது.

“நீ செய்ய வேண்டியது.. நீ செய்யலை நானும் உன்னை மாதிரி இருக்க முடியாதில்ல?!? அதனால் தான் போன் செய்தேன்” என்றான் வெறுப்பாக.

“பத்ரி... பத்ரி...” என்று திக்கி திணறியவள் பின் சுதாரித்து “என்ன சொன்னாங்க?”

“முதலில் நான் சொன்னதை எதுவுமே கேட்காது... யாரோ பத்திரிக்கைகாரன் தான் வேலை வெட்டி இல்லாமல் போன் பண்றேன்னு நினைக்க... அப்புறம் அவரை நம்ப வைக்கவே ஆர்யாவை கான் காலில் போட்டு பேசினேன்...”

“அப்பா... என்ன சொன்னார்???”

“என்ன சொல்லுவார்?!? ப்ரொடக்க்ஷன் வேலையாக ப்ரான்ஸ்ல இருக்காராம்... ஊர் திரும்பியதும் பேசறேன்னு சொன்னார்... நீ தான் அலக்நந்தாவுடைய நிஜமான அப்பாவா இல்ல யார் நிஜமான அப்பாவோ அவனுடைய போன் நம்பரை கொடு அவனிடம் பேசறேன்னு சொன்னேன்...” என்றான் பத்ரி கூலாக.

“வாட்????? இப்ப நீ என்ன சொன்ன...?” என்றாள் அலக்நந்தா அதிர்ந்து போய்.

“உன் அப்பாவும் இதே தான் கேட்டார்... அதுக்கு நான்.. உன் பெண்னை பற்றி பேசனுன்னு ஒருத்தன் போன் பண்ணா பெண்ணுக்கு என்னாச்சோன்னு

பதறலனாலும் பரவாயில்லை... ஆனா என்ன விஷயன்னு கூட கேட்காமல் ஊர் திரும்பியதும் போன் பேசலாம்ன்னு சொல்லும் ஒருத்தன் அப்பா என்ன ஒரு மனிஷனா கூட இருக்க முடியாதுன்னு நான் சொல்ல... அதுக்கு அவர் ஹிந்தியில் நல்ல வார்த்தையால் பதிலுக்கு மொழிய... நானும் எனக்கு தெரிந்த ப்ரென்சில் நல்ல நாலு வார்த்தையை கற்றுக்கொடுக்க... நல்ல காலம் அந்த ஆள் கண்ணுக்கு மறைவா இருந்தான் இல்லை வயசிற்கு மரியாதை கொடுக்காமல் பல்லை உடைத்திருப்பேன்... ஒரு வழியா உன் அப்பாவும் நானும் அடுத்த ஒருமணி நேரம் சண்டை போட்டது போக நான் சொல்ல வந்த விஷயத்தை சொல்லி முடித்துவிட்டு வைத்தால் அடுத்த பத்து நிமிஷத்தில் உன் அம்மா... என்னை கூப்பிட்டாங்க.."

"அம்மாவுமா??" என்றாள் அதிர்ச்சியாக.

"ம்ம்... உன் அம்மா உன் அப்பா அளவிற்கு கத்த வில்லை என்றாலும் நான் உன் சொத்துக்கும் பணத்திற்கும் தான் உன்னை மயக்கி விட்டதாக ஆரம்பித்து அப்படியே சினிமா டைக்லாகை பக்கம் பக்கமாய் பேச... ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க முடியாது "உங்க சோலோ பர்பாமன்ஸை நிறுத்துங்க... சகிக்கலைன்னு" கடுப்பாக சொல்லிவிட்டு போனை வைக்க.. இரண்டு தரம் உங்க அம்மா கூப்பிட்டாங்க நான் எடுக்கலை.. என்றான் அலுப்பாக பத்ரி.

"உன்னால் என்னை வெறும் அலக்நந்தாவா ஏற்கவே முடியாதா பத்ரி?" என்றாள் ஏக்கத்தொடு.

"வெறும் அலக்நந்தவா?? நந்தை பார்த்திருக்கியா... தன் ஒட்டை முதுகில் சுமந்துக்கொண்டு நகர முடியாமல் ஊர்ந்து போகும்... அது மாதிரி அல்கா மல்ஹோத்ராவிற்கு உண்டான கசப்பான அனுபங்களை மூட்டையாக உன் முதுகில் சுமந்துக்கொண்டு போகும் ஆள் தான் இந்த வெறும் அலக்நந்தா... இவங்க இரண்டு பேருக்கு பெரிய வித்தியாசம் இருப்பதா எனக்கு தெரியலை... உனக்கு...?!? என்றான் கசந்த குரலில் பத்ரி.

"பத்ரி..." என்று அவள் குத்தப்பட்ட வலியுடன் அவனை அழைக்க..

"உனக்கு வெளியே யாரிடமும் பேச, பழக பிடிக்காது ஏன் புது ஆட்களை கண்டாளே பிடிக்காது... என்னை நம்பி என் குடும்பம் மட்டும் இல்ல...

தொழில் முறையில் மூவாயிரம் குடும்பம் இருக்கு... பார்ட்டி கேட் டூ கேதர்ன்னு அடிக்கடி குடும்பத்துடன் கலந்தே ஆகனும்... எத்தனை நாள் இந்த ஊர் உலகத்திற்கு உன்னை மறைக்க முடியும் சொல்லு?!? எப்படியும் ஒரு நாள் இல்லை ஒருநாள் வெளியே வர தான் செய்யும்??"

"ஊருக்கே தெரியாது தாலியை கட்டறிங்க.. வாழும் போதும் மட்டும் ஊர் வேண்டுமா?" என்றாள் ஆவேசமாய்.

"என்னடி சொன்ன... இப்படி சொன்னதுக்கு உன்னை..." என்று ஆவேசம் குறையாமல் பதிளித்தவன்... "பெண்னை கை நீட்டும் பழக்கத்தை என் வீட்டில் கற்றுக்கொடுக்கவில்லை அலக்நந்தா... திருட்டு தாலி கட்டுவோமே தவிர.. திருட்டு குடித்தனம் நடத்தும் பழக்கம் சச்சிதேவிற்கு இல்லை.. அப்படி நடத்தினா அதற்கு வேற பெயரு... . ஊர் உலகத்திற்கு தெரியாமல் ஒளித்து மறைத்து வாழ வேண்டிய அவசியம் எனக்கு இல்லை... அப்பட்ட பட்ட வாழ்க்கை என்னால் கொடுக்க முடியாது... யார் கொடுப்பாங்களோ அவர்களை நீ தாராளமாக கல்யாணம் பண்ணிக்கொண்டு வாழ் அதற்கு நான் ஒரு நாளும் தடை சொல்ல மாட்டேன்!!!" என்று ருத்திர தாண்டவம் ஆடிவிட்டு மடமடவென்று திரும்பி நடந்தான்.

அத்தியாயம்.. 18

இரண்டு மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு...

"அலக்நந்தா மல்ஹோத்ரா"ன்னு அவள் முழு பெயரை சொன்னா அவள் படிக்கும் கிளாஸ்சில் கூட யாருக்கும் தெரியாது... இதுவே "அல்கா மல்ஹோத்ரா"ன்னு சொன்னா எல்லோருக்கும் தெரியும்" என்று பாட்டி தன் கணீர் குரலால் சொல்ல.. எல்லோருடைய பார்வையும் சௌவியின் மேல் படிந்தது....

ஆனால் அலக்நந்தவோ அத்தை மல்லிகாவின் முகத்தை பார்த்து எதையோ லேசாக தலையாட்டி மௌனமாக கேட்டுக்கொண்டு இருந்தாள்.

"பெட் கட்டி இருக்கேன்னு சொல்லி நிரல்யாவை விட்டு அலக்நந்தாவுடைய போன் நம்பரை ஹேக் பண்ண சொன்னான்... அதை பற்றி நான் மறந்தே போனேன்" என்று அவசராக கார்த்திக் விஷயத்தை தெரிவிக்க... நிலமை

இன்னும் மோசமாகியது தான் மிச்சம்...

இத்தனை நேரம் பாட்டி சொன்ன செய்தியிலிருந்து இன்னும் மீளாத அதிர்ச்சியில் கார்த்திக் சொன்னதை காதிலே வாங்காத ஷங்கி...

“பாட்டி??? நீங்க என்ன சொல்லுறிங்க.. நான்கு தலைமுறையா பாலிவூட்டையே தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் அந்த மல்ஹோத்ரா குடும்பத்திலிருந்த வந்த அந்த ஹிந்தி நடிகை அல்காவா?” என்றாள் பரபரப்பாக.

பாட்டி ஆமோதிப்பாக தலையை ஆட்டினார்.

இத்தனை நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவள் சூழ்நிலைக்கு சற்றும் பொருந்தாது... எழுந்து குதித்தப்படி “ஓ!!! மை காட்!!! ஓ!! மை காட்!!!! என்னால் நம்பவே முடியில்லை... பத்ரி அண்ணாவின் முன்னால் கனவு கன்னி அந்த அல்காவா இந்த அலக்நந்தா..... சோ... கூல்!!! இத்தனை நாள் வெறும் ரூம் மெட்டாக இருந்தவர்கள் இனிமே லைப் மெட்டாக போறாங்களா?!? அவங்க தான் என் வருகால அண்ணியா.. !!” என்று கேட்டப்படியே கால் தரையில் படாமல் குதிக்க...

மற்றவர்கள் அந்த சூழ்நிலையின் இருக்கத்தை உணர்ந்து அமைதியான யோசனையில் இருக்க... சிம்பி மட்டும் அவளுடைய சந்தோஷமான கை தட்டலையும்... டான்ஸையும் பார்த்து விட்டு.. தன் சின்ன கண்களால் யாராவது ஷங்கிற்கு கம்பெனி தருவார்களா என்று தேட யாரும் எழுந்து வராததை கண்டு “என்ன மனுஷ பயலுங்க இவனுங்க??” என்று உதட்டை அழுகு காட்டிவிட்டு... ஷங்கிக்கு கம்பெனி கொடுக்க எண்ணி “அழகாக” பல் தெரிய சிரித்தப்படி... சோபாவை விட்டு துள்ளி குதித்து வேகமாக கையை தட்டி ஷங்கியுடன் சேர்ந்து அதுவும் டான்ஸ் ஆடியது!!!

“சிம்பி...” என்று கூவியவள்.. “நீ ஹேர் ஸ்டைல் பண்ண இன்னொரு ஆள் கிடைக்கப்போறாங்க..!!!” என்றாள் அல்நந்தாவின் ஹேர் ஸ்டைல் பற்றி உண்மை நிலவரம் தெரியாது. வீட்டு பெண்களின் தலை முடியின் மேல் அலாதி பிரியம் கொண்ட சிம்பிக்கு அவள் சொன்னது சரியாய் புரிய.. உல்லாசமாக சிரித்தப்படி...

“கிங் காங்” படத்தில் உலக பிரசதிப்பெற்ற ஐஸ் ஸ்கேட்டிங் டான்ஸிற்கு இணையா சிம்பியும் ஷங்கியும் டான்ஸ் செய்ய… அதை பார்த்தவர்களுக்கு சூழ்நிலையை மறந்து புன்னகை மலர… பாட்டி வீசிய “ஆட்டம் பாமை” மிக அழகாக டிப்ஃயூஸ் செய்தாள் ஷங்கி!!!

அது தான் ஷங்கி… பத்ரி தன் பேச்சால் எந்த சூழலையும் சமாளிப்பான் என்றால் ஷங்கியோ தன் செய்கையால் எப்படிப்பட்ட சூழலையும் சமாளிக்கும் திறமை கொண்டவள்!!! அதற்காக தன்னை குழந்தை தனமாக காட்டிக்கவோ.. இல்லை முட்டாளாக மற்றவர்களை நினைப்பதை பற்றி சற்றும் கவலை படாத ரகம்.

“இந்த டான்ஸ் சீனுக்காகவே உன்னை ஆஸ்காருக்கு நாமினேட் பண்றேன்… போதும் டி நீங்க ஆடியது… வந்து உட்கார்” என்று கார்த்திக் புன்னகையுடன் கூற… அப்பொழுதும் அவர்கள் இருவரும் டான்ஸை நிறுத்தாது ஆடியப்படியே மூச்சு இரைக்க சௌவியின் பக்கத்தில் அமர்ந்தனர்.

சற்றே சாய்ந்து ஷங்கியின் காதில் “தேங்க்ஸ்” என்றாள் அவளை நன்றாக அறிந்த சௌவி.

அதற்கு பதிலாக அவள் புறம் ஒரு புன்னகையை விசியவள்.. “ஏய்… நிறுத்து டீ உன் நன்றி நவிதலை… நீ என் அண்ணி மட்டும் இல்லை என் பெஸ்ட் ப்ரெண்டு கூட” என்று பதிலுக்கு காதை கடித்தாள் ஷங்கி.

அதற்குள் பொருமை இழந்த ஆர்யா “ஏய்… இங்க நாங்க எல்லோரும் உனக்கா வெயிட் பண்ணா அங்க என்ன கிசுகிசுப்பு?? என்று கேட்டவன்.. “ஃபான்டா நீதான் ப்ளான் பண்ணி அவளை அங்கே அனுப்பி வைச்ச?” என்று கேட்ட போது தன்னிடம் இதை பற்றி ஒரு வார்த்தை கூட சொல்ல வில்லை என்ற கொதிப்பு தெரித்தது.

“ப்ளான் பண்ணி எல்லாம் இல்லை அத்தான்… ஒருநாள் நிகாரிக்கா ரொம்ப டென்ஷனா இருந்தா ஏன்னு கேட்டதற்கு “ஏற்கனவே என் தங்கைக்கு மனிதர்கள் மேல் அவ்வளவு நம்பிக்கை இல்லை.. இப்ப காலேஜில் இரண்டு வருஷமாக தோழியாக பழகியவள் அலக்நந்தா தான் அல்கான்னு தெரிந்தவுடன் அவளிடம் இருந்த போட்டோஸ்.. மற்றும் இவளை பற்றிய விவரம் எல்லாத்தையும் மிடியாவிற்கு விற்க முனைய கடைசி நிமிஷத்தில்

பணம் கொடுத்து சரிக்கட்டியதோடு மேனேஜ்மென்ட் மூலம் இந்த விஷயம் வெளியே வந்தா டிஸ்மிஸ் செய்து விடுவதாக வான் பண்ணி ஒருவழியாக சமாளிச்சாசு… ஆனா இனியும் அங்கே படிப்பது நல்லது இல்லை… ஆறே மாதம் தான் கோர்ஸ்… அதுக்காக வேற காலேஜ் பார்க்கனும்" என்று புலம்பினாள்.

"அப்ப நான் தான் பத்ரி அத்தான் படிக்கும் காலேஜை பற்றி சொல்ல.. லக்கியா அங்கே அலக்நந்தா படிக்கும் கோர்ஸ் இருக்க.. அடுத்த ஒரு மணி நேரத்தில் ஸ்டூடண்ட் எக்செஜ்ஞ் என்ற பெயரில் அவளை அங்கே மாற்றினாள்.." என்று அமைதியாக கூறினாள் சௌவி.

"அம்மா உங்களுக்கு இது முன்னாடியே தெரியும் தானே.. இந்த போன் ஹேக் உட்பட??" என்றான் ஆர்யா அவன் பெண்டாட்டி தன் அம்மாவை பார்த்த விதத்திலேயே.. கண்டுக்கொண்டவனாய்!!!

கார்த்திக் அதிர்ந்து போய் அம்மாவை பார்க்க.. அமைதியாக "ம்ம்" என்றார் அவர்.

"இவ்வளவு சொன்னியே.. அப்படியே நீதான் பத்ரி தங்கும் ரூமிலே தங்க ஏற்பாடு பண்னேன்னு சேர்த்து சொல்ல வேண்டியது தானே!!" என்றான் ஆர்யா சௌவியிடம் எரிச்சலாக. தன்னிடம் இவ்வளவு பெரிய விஷயத்தை சொல்ல வில்லை என்ற ஆதங்கம் அவன் குரலில் அப்பட்டமாக தெரிந்தது.

"டேய்…" என்று அடக்கிய பாட்டி.. "தற்செயலா நிகாரிக்கவிடம் அந்த காலேஜை பற்றி சொல்லி இருப்பாள்… அவ்வளவுதான் சௌவி பண்ணது…" என்று பேத்திக்காக முன்னுக்கு வந்தார் அவர்.

"தற்செயலா??? வாழ்க்கையில் எதுவும் ஏதேச்சயாவோ தற்செயலாவோ நடக்கறதே இல்லை அத்தை… எது நடந்தாலும் அதுக்காக ஒரு காரண.. காரியம் இருக்கும்.. அது நடப்பதற்கான அர்த்தம் நமக்கு புரியாம வேணுன்னா இருக்காலமே தவிர.. யாருடைய வாழ்க்கையிலும் தற்செயலா எதுவும் நடப்பதில்லை" என்று சித்தாந்தம் பேசினார் தாயார் மல்லிகா.

இதில் எல்லாம் சுத்தமாக நம்பிக்கை இல்லாத ஆர்யா "நீங்க இப்படி பேசுவிங்கன்னு நான் நிச்சயம் நினைக்கலை அம்மா.. அப்ப எல்லாமே

ப்ளான் பண்ணி அதாவது விதிப்படிதான் நடக்கறதுன்னு சொன்னா… நம்ம முயற்சியின் ஒன்னும் இல்லையா..?!? அப்ப இவள் எதுவும் செய்லைன்னா கூட அலக்நந்தா அங்க போய் இருப்பாள்ன்னு சொல்லுறிங்களா??" என்று கேள்வியாய் அடுக்கினான் ஆர்யா.

"ஆர்யா…" என்று நிதனாமாக அழைத்த மல்லிகா… "இதை நீ பார்க்கும் விதம் வேற நான் பார்க்கும் விதம் வேற… இப்ப நாம் பத்து விஷயத்திற்கு ஆசை படறோம்.. அதை நினைத்து உழைக்கிறோன்னா அதில் இரண்டோ இல்லை மூன்றோ தான் நடக்கும்… அதற்காக ஆசை படுவதையே நிறுத்தி விடவோமா?? இல்ல முயற்சி எடுப்பதை தான் நிறுத்தி விடுவோமா?!? நடப்பதை வெற்றியாவும் நடக்காததை தோல்வின்னு நீ நினைக்கற.. நமக்கு எது நடக்கனுன்னு இருக்கோ அதுதான் வெற்றியா கிடைக்கும்.. எது நடக்காதுன்னு விதிச்சி இருக்கோ.. அது தோல்வியா முடியுன்னு நான் நினைக்கிறேன்… அவ்வளவு வித்தியாசம்".

"நீயே சொல்லேன்.. உன் தாதா மான் வேட்டைக்கு தானே காட்டுக்கு போனார் அங்கே வழி தவறி போய்.. தற்செயலா உன் பாட்டியை பார்த்தாருன்னு நம்ப முடியுதா?? உன் அப்பாவை எடுத்துக்கோ.. நூத்தியொரு பேருக்கு கல்யாணம் நடக்கும் கோயிலில் தாலி கட்ட வேண்டிய பெண்ணிற்கு அந்த பக்கம் இருக்க.. இந்த பக்கம் இருந்த எனக்கு மாற்றி தற்செயலா தாலி கட்டினாருன்னு சொன்னா நம்ப முடியுதா? உன் கதையும் அதுதானே?? அலக்நந்தாவை அங்கே அனுப்ப சொல்லும் போது சௌவிக்கு அது தற்செயலாக நடந்த சம்பவமாதான் அப்ப இருந்திருக்கும்… ஆனா என்னை பொருந்தவரை சௌவி சொல்லவில்லை என்றாலும் அலக்நந்தா அங்கே போய் இருந்திருப்பாள்.. இல்ல… இந்த லாஜிக்கை நான் நம்ப மாட்டேன்னு நீ நினைத்தால் அப்படியே இருந்துட்டு போகட்டுமே யாருக்கு என்ன நஷ்டம்?!?" என்று பேசிய தாயை விசித்திரமாக பார்த்தான் ஆர்யா.

"ஆர்யா.. இவளால் அங்கே அனுப்பி வைக்க மட்டும்தான் முடியும்… எவ்வளவு பெரிய அழகியா இருந்தாலும், குணவதியா இருந்தாலும் ஒரு சச்சிதேவை யாராலையும் காதலில் எல்லாம் விழ வைக்க முடியாது…" என்றார் பாட்டி வீராப்பாக.

"என்னடா உன் எல்லா கேள்விக்கு விடை கிடைத்து விட்டாதா?!? என்று

அவனின் அப்பா கேட்க.. ஒரு குழப்பமான பாவனையை விடுத்தான் ஆர்யா.

“உன் அம்மா சொல்வதில் நூறு சதவிதம் உண்மை இருக்கு… உன் பாட்டி சொல்வதிலும் உண்மை இருக்கு… அதை உன்னால் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாது… என் வயது வரும்போது தன்னால் புரியும்..” என்று அறிவுரை வழகினார்.

“சரி… சரி.. இந்த வேதாந்தம்… சித்தாந்தம் பற்றிய பட்டிமன்றம் அப்புறம் வைத்துக்கொள்ளலாம்… இப்ப எனக்கு முதலில் ஒரு பதில் சொல்லுங்க… இந்த அல்கா தான் அலக்நந்தா என்கிற உண்மை பத்ரி அண்ணாவிற்கு தெரியுமா?!?” என்று இத்தனை நேரம் அமைதியாக பேசியதை கேட்டுக்கொண்டிருந்த மங்கி என்று அழைக்கப்படும் மேக மித்ரா கேட்டாள்.

எல்லோருமே அவனுக்கு “தெரியாது” என்பது போன்று தலை அசைக்க… அதுவே பெரிய முடிச்சாய் விழுந்தது.

பெருமூச்சு ஒன்றை விட்ட மல்லிகா.. “முதலில் அவன் தன் காதலை உணர்ந்து… அதை அலக்நந்தாவிடம் சொல்லி அவளும் சம்மதிச்ச பிறகு.. மற்றதை பற்றி பேசிக்கலாம்..” என்றாள்.

ஷங்கி தன் தலையை சிம்பியிடம் கொடுத்திருக்க… அந்த சிம்பியோ தன்னை மறந்த பரவச நிலையின் சுவாரசியமாக அவள் கூந்தலை தன் நீண்ட விரலாலே வாரிக்கொண்டு இருக்க… “அம்மா… சச்சிதேவ் காதலில் விழுவது தான் மேட்டரே தவிர… மற்றவர்கள் விழ வைப்பது ஒரு மேட்டரே இல்லை…” என்றாள் அக்மார்க் சச்சிதேவாக ஷங்கி.

“யூ ஆர் ஷேம் லெஸ்” என்றாள் அவளின் காலை மிதித்தப்படி மங்கி.

“என்னது ஷேம் லெஸ்ஸா?!? போன வாரம் அந்த கண்ணு தெரியாத கிஷோர் வழியிறான் அந்த கிளாஸ் போக மாட்டேன்னு ஒப்பாரி வைக்கலை?? நான் உன் கிஸிசிற்கு அதுவும் குதிரைக்கு டெலிவரி பார்க்கும் ப்ராக்டிக்கல் கிலாஸிற்கு போய்.. அவனிடம் நான் சமைத்த “டோக்லாவை” கொடுத்து அப்படியே “டெக் ஆப்” பண்ணி ஹாஸ்பிட்டலில் போடலை?? அது ஷேம் லெஸ்லா தெரியாத போதும் இதுவும் தெரிய கூடாது!!!” என்றாள் ஷங்கி தெனாவட்டாக.

“என்னது??” என்று கார்த்திக் பல்லை கடித்த போதும் மற்றவர் முகத்தில் சிரிப்பு பரவதான் செய்தது.

“சும்மா… அது ஒன்னும் இல்லைன்னா” என்று டிவின்ஸ் இருவருமாக கோரஸாக பாட…

“ஏய்… அவர்கள் விஷயம் அப்புறம் பார்க்கலாம்… பத்ரி எதை செய்தாலும் தெளிவாக தான் செய்வான் இப்போதைக்கு அவனிடம் இதை பற்றி யாரும் மூச்சு விட வேண்டாம்…” என்றார் பாட்டி தீர்மானமாக.

“ஆனா பாட்டி…” என்று ஆர்யா இழுக்க..

“ஆர்யா… அவள் ஒரு நடிகைன்னு தெரிந்த பிறகு அவன் தன் காதலை மாற்றிக்கொள்வான் என்று நம்பறியா?” என்றார் பாட்டி நாட் நாட் செவனாக.

“இல்லை” என்றான் தீர்மானக ஆர்யா.

“பின்ன தெரிந்தால் என்ன… தெரியாவிட்டால் என்ன? அவன் காதலை அவனே உணராத இந்த சமயத்தில் போய் அலக்நந்தாவை பற்றி சொல்வது சரியான சமயம் என்று நீ நினைக்கிறியா?” என்றார் பாட்டி.

பெருமூச்சு ஒற்றை விட்டு “சரி நான் போன் பேசும் போது சொல்ல மாட்டேன்.. ஆனா எத்தனை நாளைக்கு?”

“அதை பிறகு முடிவு பண்ணலாம்… இப்போ எதுவும் வேண்டாம்..” என்று முடிவாக பாட்டி சொல்லி விட பெண்கள் எல்லோரும் எழுந்து கலைந்தனர்.

ஆர்யாவையும் கார்த்திக்கையும் பார்த்த தாத்தா… “அடேய்.. பேரான்டிகளா… எல்லா விஷயத்தையும் மனைவி ஒப்பிக்கனும் எதிர்பார்க்காதிங்க அப்புறம் லைஃப்ல சுவாரசியமே இருக்காது. லைப் ஒரு நீண்ட பயணம் அதில் கொஞ்சம் ரகசியம் இருந்தால் தான் உங்களுக்கு லைப் போர் அடிக்காது போகும்” என்றார் அவர்கள் மனைவிமார்கள் மேல் இருந்த கோபத்தை தெரிந்து கொண்டு மூத்த தலை முறையாய் அறிவுறுத்தினார்.

****
ப்ளைட் தாமதமானதால் நல்லிரவு ஆகி.. மலை அடிவாரத்திற்கு அவன் வந்து சேர இன்னும் தாமதம் ஆக... கடைசியில் சித் கீழே சென்று அவனை அழைத்து வந்தான். நல்லிரவு தாண்டி ரூம்மிற்கு வந்த பத்ரியை சித்வையும் டி.வியில் டாக்குமென்டிரி பார்த்தப்படி இருந்த அலக்நந்தா.. "ஹாய்" என்றப்படி வரவேற்க... தன் லக்கேஜ் எல்லாத்தையும் அப்படியே போட்டவன்... தொப்பென்று கவுச்சி குப்புற விழுந்து தன் கண்களை இருக்க முடினான் பத்ரி.

"எல்லாத்தையும் நாளைக்கு பேசலாம்... நான் போய் படுக்க போறேன்.. ரொம்ப தூக்கம் வருது.. குட் நயிட்" என்று இருவருக்கும் சேர்த்து சொல்லிட்டு போனான் சித்.

கண்களை திறக்காது பத்ரி "குட் நயிட்" மொழிய.. அலக்நந்தாவும் அவனை பின்பற்றி சொன்னாள்.

அசையாமல் படுத்து கிடந்தவனை பார்த்து "உன்னை பார்த்தா ப்ளைட்டில் வந்த மாதிரி தெரியவில்லை.. ப்ளைட்டையே தள்ளிகிட்டு வந்த மாதிரி தெரியுது.. இதை எழுந்து சாப்பிடு பத்ரி" என்று சப்பாதி ரோலை வைத்தப்படி சிரிப்பு வழிந்தோட செப்பினாள்.

அவள் குரலை அதில் இருந்த சிரிப்பையும் காதில் ஒலிக்க.. படிரென்று கண்ணை திறந்து வேகமாக தலையை திருப்பியவனுக்கு... கண்களில் லேசாக கேளி மின்ன.. உதட்டில் குறுநகை புரிய.. இரவில் மலரரும் செந்தாமரையாக அலக்நந்தாவின் முகம் மலர்ந்து விகசிக்க தன் எதிரில் அமர்ந்திருத்த அலக்நந்தாவை காண.. தான் தண்ணீர்குள்ளே டைவ் அடித்து உள்ளே போகும் தன்மையை உணர நீச்சலடிக்க மறந்து அவளை பார்த்தான் பத்ரி!!!

இன்று...

பத்ரி கொட்டிய வார்த்தைகளின் அர்த்தம் தீயாய் தகிக்க... அந்த குளிரிலும் உடம்பு தகிக்க... அவள் பாரத்தையே தாங்க மாட்டாது கால்கள் துவள.. அப்படியே பொத்தென்று அந்த புல்தரையில் அமர்ந்தாள் அலக்நந்தா!!!

மற்ற நேரமா இருந்திருந்தால்... நிலவிய கடும் குளிரில் கீழே அமர்வதோ.. இப்படி ஒரே இடத்தில் நிற்பதோ முடியாத காரியம்... ஆனால் அவன் சொன்ன வார்த்தையின் அர்த்தம்... தன்னிலையை மறக்கச் செய்ய... உலக பிரகஞ்சை அற்று... தன் தலையை காலில் முட்டு கொடுத்து கண்களில் வெள்ளம் பெருக்க உடைந்து அழுதாள்!!!

அவன் என்ன கேட்கிறான் என்று புரிந்தது... ஆனால் அவன் கேட்டதை கொடுக்கும் மன தைரியம் அவளுக்கு இருக்கா?!? என்று தான் தெரியவில்லை... தன்னுடைய பதினாறாவது வயதில் எப்படி திக்கு தெரியாத காட்டை விட்டு வெளியே வழி தெரியாது தவித்தாள் என்று கண் முன்னால் நிழல் படமாக ஒடியது... ஆனால் இந்த முறை செல்லும் பாதை தெரிந்தும்.. போக முடியாது "பயம்" அவளை காலை கவ்விய முதலையாக தண்ணிகுள்ளே இழுத்தது!!!

எத்தனை நேரம் இப்படி அழுதாளோ அவள் அறியாள்.. ஆனால் அவள் ஹேன் பேக்கில் இருந்த போன் அடிக்க.. ஒருவேளையாக அது பத்ரியா இருக்குமோ என்ற நினைப்பே அந்த காலை எடுக்க போதுமானதாக இருக்க அவசரமாக எடுத்தவளுக்கு எதிர்பார்த்தப்படியே பத்ரியிடம் இருந்து போன் வர காதில் வைத்தாள்.

"உடனே அட்மின் ப்ளாக்கில் இருக்கும் காண்பரன்ஸ் ரூமிற்கு வா" என்று கூறியவன் இவள் பதில் சொல்லும் முன் அப்படியே போனை வைத்தான்.

"காண்பரன்ஸ் ரூம்மிற்காக" என்ற வார்த்தையே பயங்கரமா இருந்தது.. எவன் இவளை கண்டு பிடித்து வந்துவிட்டோனோ என்ற எண்ணமே பிரதானமாக இருக்க.. கால்கள் எழாது துவள... கண்களை கட்டியது.

அப்படி ஒரு வேளை மீடியாதான் இவளை மோப்பம் பிடித்து வந்தது என்றால் பத்ரி அவளை நிச்சயம் அழைத்திருக்க மாட்டான் என்ற தெரிவு சற்றே தாமதமாக பிறக்க... அப்போ வேற விஷயமா தான் இருக்கும் என்று மெல்ல புரிய தொடங்க... சற்றே பயமும் பதட்டமும் குறைந்து கால்களை அழுத்தி நிறுத்தி பொருமையாக எழுந்தாள்.

வழி முழுக்க பயம் பந்தாக அவள் தொண்டையை அடைக்க ஒரு வித

கலக்கத்தோடே பத்ரி சொன்ன இடத்திற்கு கதவை திறந்துக்கொண்டு உள்ளே சென்றவளுக்கு பத்ரியின் ஆவேசமான குரல் காதில் ஓங்கி ஒலித்தது.

யாருடன் இப்படி சண்டை போடுகிறான் என்று விழுந்தடித்துக்கொண்டு முன்னே சென்றவளுக்கு அந்த ஹாலின் கடைசியில் பத்ரி யாருடனோ வெகுவாக சண்டை போட்டுக்கொண்டு நின்று இருக்க.. யார் அது என்று தலையை திரும்பி பார்த்தவளுக்கு கனவிலும் இங்கே வருவார்கள் என்று சற்றும் எதிர்பார்க்காத இரண்டு ஜீவன்கள் நின்று இருந்தனர்.

அது அவளுடைய அப்பா கிரன் மல்ஹோத்ராவும்... அம்மா மயூரி மல்ஹோத்ராவும் தான்.

ஒரு நிமிடம் விரைத்து நின்றவளுக்கு எதற்காக வந்திருக்கிறார்கள் என்று மெல்ல புரிய வர... அப்படியே தன்னுள் இருகி போனவள் எதுவும் பேசாமல் பட்டென்று வந்த வழியே திரும்பி நடக்க...

“நந்தா” என்று தந்தையும்.. தாயும் அதிகாரமாக கூப்பிட... திரும்பி கூட பார்க்காது கதவை திறந்து வெளியே போக கை பிடியில் கையை வைத்தாள் அலக்நந்தா.

“நில் அலக்நந்தா” என்று பத்ரியின் அமைதியான குரல்.

அப்படியே நின்றவள் மறந்தும் தலையை திரும்பி பார்க்காது விரைத்து நின்றாள்..

“உன்னை பார்க்கதான் வந்திருக்காங்க அலக்நந்தா” என்றான் அதே குரலில்.

“நான் வரச்சொல்லவில்லை பத்ரி... நீ வரச்செல்லி இருந்தா நீயே பேசிக்கொள்ள...” என்றாள் கதைவை பார்த்தப்படி.

“நந்தா குழந்தைத்தனமாக பீகேவ் பண்ணாதே” என்றது அவளின் தாய் குரல்.

பட்டென்று திரும்பிய அலக்நந்தாவின் குரலில் வன்மமும்.. கண்ணில்

ஆக்ரோஷமும் கொப்பளிக்க… “என்ன சொன்னிங்க குழந்தைத்தனமா பீகேவ் பண்ண கூடாதா… முதலில் உங்களுக்கு ஒரு குழந்தை எப்படி பீகேவ் பண்ணுன்னு தெரியுமா?” என்றாள் வெகுண்டு.

“அலக்நந்தா” என்று அவள் அம்மாவும் அப்பாவும் இருவரும் ஒரே நேரத்தில் கூவ..

“நிறுத்துங்க” என்று தன் கையை நீட்டி பெருமூச்சு ஒன்றை விட்டவள் “இப்ப நீங்க சொல்லறதை நான் கேட்டா போதும் இங்கிருந்து கிளம்பிடுவிங்க இல்லை?? உங்களுக்கு என்ன சொல்லனுமோ சொல்லிட்டு போங்க” என்றாள் குரலில் வண்ணம் வெடிக்க.

“இவன் சொல்றது எல்லாம் உண்மையா.. இப்.?” என்று அம்மா பேசிக்கொண்டு இருக்கும் போதே இடை வெட்டிய அலக்நந்தா…

“மரியாதை.. மரியாதை கொடுத்து பேசுங்க… அவர் சொல்வது எல்லாம் உண்மைதான்” என்றாள் அலக்நந்தா.

தாயும் தந்தையும் ஒருவரை பார்த்துக்கொள்ள.. “அவர் என்ன சொன்னாருன்னே கேட்கலையே நந்தா” என்றார் அவர் அப்பா.

“கேட்க வேண்டிய அவசியம் இல்லைப்பா…”

“இவ…” என்று முதலில் ஆரபித்தவர் பின்… “இவர்.. இவர் உன் கோடிக் கணக்கான சொத்துக்காக…” என்று அவளின் அப்பா பேச ஆரபிக்க…

“தட்ஸ்.. இட்.. இங்கே இன்னும் ஒரு நிமிஷம் நின்னாலும் உங்க அப்பாவை அரைந்துவிடுவேன் அலக்நந்தா… நீ பேசிட்டு வா நான் ரூமிற்கு போறேன்” என்று உறும்பலாய் வந்தது பத்ரியிடம் இருந்து.

“ப்ளிஸ் பத்ரி.. என்னை விட்டு போகாதே” என்று வேகமாக அவனின் விரலை பற்றி.

அத்தியாயம் - 19

இரண்டு மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு…

இரவில் மலரும் செந்தாமரையாக அலக்நந்தாவின் முகம் மலர்ந்து விகசிக்க.. தன் எதிரில் அமர்ந்திருந்தவளைக் காண.. தான் தண்ணீர்குள்ளே டைவ் அடித்து உள்ளே போகும் தன்மையை உணர நீச்சலடிக்க மறந்து அவளைப் பார்த்தான் பத்ரி!!!

“ஹலோ.. என்ன பத்ரி அப்படி பார்க்கிற?” என்றாள் அவன் முகத்திற்கு முன்னாடி கையை ஆட்டியபடி.

“ம்கூம்…” என்று புன்னகை மலர லேசாக தலையை ஆட்டியவன்… “ஊருக்கு போனதிலிருந்து தூங்கவே இல்லை” என்றான் அங்கே இருந்த சின்ன தலையணையில் வசதியாக தலைக்கு வைத்து படுத்தபடி.

அவனுக்கு எதிரில் எப்பொழுதும் போல் தன் ரீக்ளினரில் அமர்ந்திருந்தவள் அவனைப் பார்ப்பதற்கு ஏதுவாக அதன் அகண்ட கைப்பிடியில் தன் சென்னியை வைத்து.. “என்ன ரொம்ப வேலையா?” என்று அக்கறையாக விசாரித்தவள் “ஸ்ஸ்.. கேட்க மறந்தே போனேன்.. தாத்தா எப்படி இருக்காங்க..??"

“தாத்தா நல்லா இருக்காங்க… ஊருக்கு போனா எப்பவுமே வேலை இருக்கும் தான்.. ஆனா இந்த முறை மொத்த சச்சிதேவும் வீட்டில் இருக்கவே அவர்களைப் பார்ப்பதே அதிக வேலையாக இருந்தது.. அவ்வளவு வேலை இருந்தும் ஏனோ தூங்க முடியலை..”என்றான் பெருமூச்சு விட்டபடி.

“ஓ!!” என்று இழுத்தவள்… “நீங்க தாத்தாவை நினைத்து பயந்து இருப்பீங்க… மைண்ட் ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தா தூங்க முடியாது… அன்னைக்கு ஊருக்கு கிளம்பும் போது பதட்டத்தில் நீங்க தாத்தா விழுந்து விட்டாருன்னு சொல்லுவதற்கு பதில் பாட்டி விழுந்து விட்டதாக தப்பா சொன்னீங்க..”

புன்னகை விரிய அவளைப் பார்த்தவன் “நான் பதட்டத்தில் தப்பா சொல்லவில்லை அலக்நந்தா.. சரியாதான் சொன்னேன்” என்றான் திட்டவட்டமாக.

“அது எப்படி பாட்டி கீழே விழுந்தா தாத்தாவிற்கு கால் உடையும்?? ப்ளீஸ்..

இதுக்கு பத்ரி சச்சிதேவா பதில் சொல்லாதீங்க… என் பத்ரியா இருந்து பதில் சொல்லுங்க…” என்று சொல்லி முடிக்கும் முன்..

காலுக்கு அடியில் பாம்பு இருக்கு என்று சொன்னது போல் வாரி சுருட்டிக் கொண்டு பட்டென்று எழுந்து அமர்ந்தவனை திடுக்கிட்டு பார்த்தாள் அலக்நந்தா.

“இப்ப என்ன சொன்ன.. என்ன சொன்ன??” என்றான் அதே பரபரப்பு குறையாமல் பத்ரி.

அவள் முன்பு சொன்னதையே திருப்பி சொல்ல… அவளின் “என் பத்ரி” என்னும் சொல்லை கேட்ட மாத்திரம் நீர் ஊற்றாய் மனதில் உவகை பொங்க… அதே வார்த்தை மீண்டும்… மீண்டும்… அவன் மூளையில் சுழன்றடிக்க…வேகமாக யோசிக்க தொடங்கினான்.

“பத்ரி” என்று அவள் இரண்டு முறை அழைத்தபின் தன்னிலைக்கு திரும்பியவன்..

“நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலை” என்றாள் அலக்நந்தா அவன் செய்கையை ஆச்சரியமாக பார்த்தபடி.

“ம்ம்..” என்று இன்னும் ஏதோ சிந்தித்தபடி இருந்தவன்.. “பாட்டி விழுந்ததே தாத்தாவின் மேல் என்னும் போது இரண்டுமே நடக்கும் தானே அலக்நந்தா?!?” என்றான் தாடையை தேய்த்தபடி.

“என்னது பாட்டி… தாத்தா மேல் விழுந்தாங்களா? எப்படி?” என்றாள் அதிர்ந்து போய்.

“ம்ம்.. என் தங்கையின் ஹீல்ஸை பார்த்துவிட்டு அதை போட்டுக்கொண்டு நடக்கனுன்னு ஆசை வர… நடந்திருக்காங்க. பழக்கமில்லாத ஹீல்ஸ் இடறி.. தடுக்கி விழப் போக.. அதை தடுக்க போன என் தாத்தாவை கீழே தள்ளிவிட்டு இவங்க மேலே விழுந்துட்டாங்க… ஏன் பாட்டி உங்களைப் பிடிக்க வந்த தாத்தாவை கீழே தள்ளி விட்டிங்கன்னு கேட்டதற்கு… ரொம்ப கூலா… எப்படியும் கீழே விழப் போறது முடிவாகி போச்சு… புல் தரையா உன் தாத்தாவான்னு யோசித்தேன்… தரைன்னா ரொம்ப வலிக்கும்… அதனால…”

என்று அவன் சொல்லி முடிக்கும் முன்..

“பத்ரி தப்பா எடுக்காதே.. என்னால் இதுக்கு மேல் அடக்க முடியலை!!!” என்றபடி பீறிட்டு சிரித்தாள் அலக்நந்தா!!! இரண்டு மாதம் முன்பு வரை ஒரு வார்த்தை பேசுவதற்கு கூட ஆயிரம் முறை யோசிக்கும் அதே அலக்நந்தா.

கண்களில் ஆனந்தம் பொங்க… கன்னம் குழிய… அடுக்கி வைத்த நட்சத்திரம் போன்ற பற்கள் தெரிய சிரித்தவளை கண்ணுற்றவன்.. மின்னலாய் ஏதோ புரிய…

“ஐ மிஸ் டூ யூவர் ஸ்மைல்” என்றான் மென்மையாக அவளுடைய சிரிப்பை ரசித்து பார்த்தப்படி பத்ரி..

“நீ மட்டும் மிஸ் பண்ணவில்லை பத்ரி.. நானுமே மிஸ் செய்தேன்.. என்ன விசித்திரம் என்றால் இத்தனை நாள் இதைதான் மிஸ் பண்றேன் என்றே தெரியாமல் இருந்திருக்கேன்” என்றாள் சிரிப்பு மறைய.

அவள் சொன்ன வார்த்தை எங்கையோ எதையோ தட்ட… அடிக்கி வைத்த டாமினோ(DOMINO) போல்.. “மிஸ் பண்றேன்னே தெரியாது.. இருந்திருக்கிறேன்” என்ற அச்சரம் ராக்கெட் வேகத்தில் வரிசையாக அவனுள் எல்லாத்தையும் தட்டி கவிழ்த்துக்கொண்டே வர… கடைசியாக அவங்கே வந்து நின்ற அலக்நந்தாவின் முழு பிம்பத்தை கண்ணுற்றான்!!!

அந்த காட்சி தந்த பொருளை உணர்ந்தவனுக்கு ஒரு மாபெரும் சயினத்தை தான் மட்டுமே ஒற்றை ஆளாக வெற்றிக்கொண்டது போல.. ஆனந்த பிரளையம் பிரவாகம் எடுத்து கட்டுக்கடங்காமல் ஒடியது!!!

“மற்றவர்களுக்காக இரண்டு இன்ச் ஸ்மைல் பண்ணாமல் எனக்காக சிரிப்பது கூட எனக்கு ரொம்ப புதுசு பத்ரி… அதை விட அப்படி சிரிக்கும் போது இவ்வளவு நல்லா இருக்கும்னு இதுவரை தெரியாது பத்ரி…. நீ ஊருக்கு போகும் முன்னாடியே சொல்லனும் என்று நினைத்தேன்..” என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே…

“ஓ மை காட்..” அவன் துள்ளிக் குதித்து எழுந்தவன்… அந்த ரூமை குறுக்கும் நெடுக்கும் அளந்தபடி “என் வீட்டு ஆட்கள் எல்லாரும் என் கண் முன்னால்

இருந்த போதும்… ஏன் நான் இவ்வளவு ரெஸ்ட் லெஸ்ஸா.. தூங்க முடியாமல் தவித்தேன்னு… ஏன் மூச்சு விடமுடாமல் திணறினேன்னு இப்ப தான் தெரியுது…" என்று தனக்கு தானே பேசிக் கொள்ள…

அவனின் விசித்திர செய்கையால் திடுக்கிட்டு நிமிர்ந்தவள்… பத்ரி பேசுவதும்… நடந்து கொள்வதும் ஒன்றும் புரியாமல் வெற்று பார்வையை வீச…
"ஓ.. காட்.. நான் எப்படி இது கூட தெரியாமல் இருந்தேன்…?!?" என்று விரத்தியாக மொழிந்தவன்… அப்படியே பாய்ந்து சென்று அவளுக்கு எதிராக இருந்த காபி டேபிளில் உட்கார்ந்தான்.

"நான் சொன்னது எதாவது புரிந்ததா??" என்று அவன் அதே படப்படப்போடு கேட்க..

"ம்கூம்.." என்று வேகமாக தலையை ஆட்டினாள்.

தன் கையை ஆட்டியபடி "நான் என்ன.. சொன்னேன்னா… இல்ல.. சொல்ல வந்தேன்னா.. இல்ல… சொல்ல போறேன்னா… ஸ்ஸ்…" என்று தான் ஆரம்பித்த எந்த வாக்கியத்தையும் பேச முடியாமல் கை விட்டு.. என்ன சொல்லவது என்று தெரியாமல் வேகமாக தன் தாடையை தேய்த்துக் கொண்டவன்.. "ஐ லவ் யூ…" என்று நெஞ்சை நிமிர்த்தி கம்பீரமாக சொல்ல வேண்டிய சொற்களை சிரம்பமப்பட்டு.. வேதனை பட்டு.. பகிரத பிரயத்தனம் பட்டு.. திக்கி தினறி ஒருவழியாக விஷயத்தை சொல்லி முடித்தான்.

அப்பொழுது தான் ஹாஸ்பிடலில் ஆர்யாவின் பார்வையும் தாத்தாவின் ரீயாக்ஷனும் ஞாபகத்திற்கு வந்து தொலைய அவன் தன்னை உணரும் முன் தாத்தாவும் ஆர்யாவும் உணர்ந்துக் கொண்டார்கள் என்று புரிந்தது!!!

ஆர்யா நிச்சயம் வாயை திறக்க மாட்டான்.. ஆனால் தாத்தா எப்பவோ உளறிக் கொட்டி இருப்பார்.. இந்நேரத்திற்கு எல்லோருக்கும் இந்த செய்தி பழைய செய்தியாகவே மாறி இருக்கும்… தன்னுடைய காதலை அவன் உணரும் முன்னே தன் குடும்பம் தெரிந்துக்கொண்டதே என்று நினைக்கும் போதே…

"தாத்தா…" என்று நறநறவென்று பல்லை கடித்தான் பத்ரி.

“அது எனக்கு தெரியுமே” என்றாள் அலக்நந்தா இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு என்னும் ரீதியாக.

“என்னது?? உனக்கும் தெரியுமா?? யார் சொன்னாங்க??” என்றான் அதிர்ச்சியாக. இவன் வீட்டு ஆட்கள் அவன் சொல்லும் வரை கூட பொறுக்க மாட்டார்களா?? என்று உள்ளுக்குள்ளே பொங்கியபடி..

“இதை வேற யாராவது சொல்லனுமா பத்ரி.. அது செய்கையிலேயே தெரியுதே...”

“ஓ!!!” என்று அவளை ஆச்சரியம் பொங்க பார்த்தவன்... “அப்ப எனக்கு தெரிவதற்கு முன்னாடியே உனக்கு தெரியுமா?”

“இது என்ன எனக்கு தெரியுமான்னு கேள்வி.. பத்ரி.. இது ஊருக்கே தெரியுமே” என்றாள் அலக்நந்தா மிக சாதாரணமாய்.

“வாட்???? ஊருக்கே தெரியுமா??” என்று பதறியவன் “எப். எம் ரேடியோவில் டிராபிக் நியூஸ் மாதிரி இதையும் சொல்லி இருப்பாங்களோ?!?” என்று மனதால அர்ச்சனை செய்தபடி இருக்க.

“ம்ம்...” என்று வேகமாக தலையை ஆட்டினால் அலக்நந்தா.

“ஏன்??? ஏன் அப்ப என்னிடம் நீ சொல்லவில்லை?” என்றான் எரிச்சலாக.

“உனக்கே தெரியும்னு நினைத்தேன் பத்ரி... அது மட்டும் இல்லாமல் இதை நான் எப்படி சொல்ல முடியும்?!?”

“வாட்?? எப்படி சொல்ல முடியுமா?? நான் சொல்லலைன்னா எனக்கு பதில்... நீ சொல்லி இருக்கனும்..” என்றான் பத்ரி வேகமாக.

“உனக்கு பதிலாக நான் சொல்லனுமா??” என்று ஆச்சரியமாக திருப்பி கேட்டவள்.. “உன் தாத்தாவிடம் நான் போன் பண்ணி ஐ லவ் யூன்னு சொன்னா கேவலமா இருக்காது!!!?” என்று புரியாமல் கேட்டாள் அலக்நந்தா...

“வாட்????? தாத்தாவிடம் லவ் சொல்லனுமா?” என்று அதிர்ந்து போய் அவசரமாக எழுந்த விதத்தில் அவன் அமர்ந்திருந்த சென்டர் டேபிள் ஒரு பேய் ஆட்டம் ஆட… அதில் இருந்த சப்பாத்தி ரோல்… அப்படியே சரிந்து விழ… அதை பிடிக்க போனவன் மேலும் கீழே தட்டி விட “தொத்” என்ற சத்ததுடன் அது கீழே விழுந்தது!!!

“பத்ரி..” என்று அவனை உரக்கவே அழைத்து “நீ கொஞ்சம் நேரம் அமைதியாக உட்கார்” என்று ஆணை இட்டவள் மின்னல் வேகத்தில் அதை எடுத்து குப்பையில் போட்டுவிட்டு.. பெரு மூச்சுடன் அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

“என்னாச்சு பத்ரி… ஏன் இப்படி ஷாக்கான.. நீ தானே ஐ லவ் யூ தாத்தான்னு சொன்ன?!?” என்றாள் குழப்பமாக.

ஒரு நிமிஷம்.. யோசித்தவன் இவளிடம் ஐ லவ் யூ என்று சொன்ன கையோடு “தாத்தா” என்று ஆத்திரமாக பல்லை கடித்ததை ஒன்றாக சேர்த்து அவள் தப்பாக புரிந்திருக்கிறாள் என்று விளங்க.. உள்ளுக்குள்ளே சிரிப்பு பொங்கியது…

“அப்ப இவ்வளவு நேரம் என் தாத்தாவை பற்றி தான் பேசிக்கொண்டு இருந்தியா?” என்றான் அடக்க மாட்டாமல்.

“ம்ம்.. வேற யாருன்னு நீ நினைச்ச?!?” என்று அவனையே கேள்வி கேட்டாள் அலக்ந்நதா..

“இங்கலீஷ்.. மேல புல்டோசர் விட்டு ஏத்த.. என்னைப் பார்த்தா ஐ லவ் யூ மா.. ஐ லவ் யூ பான்னு அப்பா அம்மா தாத்தாவிற்கு எல்லாம் லவ் யூ சொல்லும் ஆளு மாதிரியா தெரியுது???" என்றான் வேகமாக பத்ரி.

ஊர் உலகத்துக்கே யோசித்து பேசும் ரகம் என்று பெயர் பெற்றவன் எத்தனை பெரிய விஷயத்தையும் அழகாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பேசும் திறமை சாலி என்று பெயர் வாங்கியவன் முதன் முதலாக தன் காதலை சொல்ல போக.. கடைசியில் தன் காதல் கதை இப்படியா தாத்தா கதையாகி சொதப்ப வேண்டும்!!! என்ற நினைப்பு வர சிரிப்பு பொங்கியது..

பட்டென்று அவன் நெற்றியில் கை வைத்து “காய்ச்சல் கூட ஒன்றும் இருக்கிற மாதிரி தெரியலையே ஆர் யூ ஆல்ரைட் பத்ரி??” என்று கரிசனமாக விசாரித்தாள் அந்த மங்கை!!! அவனின் இந்த வேறுபட்ட செயலை கண்டு.

இத்தனை நேரம் அவனுள் நானூறு கிலோமீட்டர் வேகத்தில் சுழன்று அடித்த புயல் அவள் ஸ்பரிசம் பட்ட அடுத்த நொடி கரையை கடக்காமலே வலுவிழந்து வந்த தடமே தெரியாமல் மாயமாய் போனதாய் உணர…

அவளின் கையை மெல்ல எடுத்து தன் கைக்குள் புதைத்து.. ஆழ்ந்த மூச்சை விட்டு தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன்… “நான் தாத்தாவை பற்றி சொல்லவில்லை அலக்நந்தா… நான் காதலிக்கிறேன் என்று சொன்னது.. உன்னை.. உன்னை காதலிக்கறேன்.. மனப்பூர்வமா காதலிக்கிறேன்… இதை ஏன் நான் ஹிந்தியில் சொல்றேன்னா.. என் காதலை நீ பூரணமா உணரனும் என்ற நோக்கில் சொல்கிறேன்” என்றான் எதிரில் வாயை திறந்து… தன் கண்ணாடி அணிந்த முட்டை கண்களில் அதிர்ச்சி.. ஆச்சரியம்.. பயம் என்று நவரசத்தையும் பிரதிபலிக்க.. அமர்ந்திருந்தவளைப் பார்த்து.

“ஆனா.. ஆனா.. பத்ரி.. நான்..” என்றபடி தன் கையை விடுத்துக்கொள்ள முற்பட… அதை மென்மையாக தடுத்தான்.

மெல்ல அவளுடைய உள்ளங்கையை அவன் நெஞ்சின் மீது வைத்தவன் உணர்ச்சி பிழம்பாக இருந்தவளிடம்.. “இப்ப.. என் பத்ரியா பதில் சொல்லுன்னு கேட்டியே.. இப்ப மட்டும் இல்ல.. எப்பவும் உன் பத்ரியா இருக்க ஆசைப்படறேன் அலக்நந்தா… உன்னை காதலிக்கிறேன் என்பதற்காக… நீ இல்லாமல் உயிர் வாழ முடியாதுன்னு சினிமா தனமா எதுவும் சொல்ல மாட்டேன்… ஆனா நீ இல்லாம மூச்சு விடுவதை இயல்பாக செய்ய முடியாமல் திண்டாடுவேன்னு உறுதியா சொல்ல முடியும்.. கால் தரையில் படாமல் உன்னை ராணி மாதிரி வைத்துப்பேன்னு உறுதி தர முடியாது.. ஆனா என்னை விட உன்னை இந்த உலகத்தில் அதிகமாக காதலிப்பவன் யாருமே இருக்க முடியாதுன்னு உறுதி தர முடியும்… நீ இழந்த குழந்தை பருவத்தை என்னால் திரும்பி தர முடியாது… ஆனால் நீ நேசிக்க என்னால் ஒரு குடும்பத்தை தர முடியும்.. உனக்கு கை உடைந்த போது சொல்ல யாரும் இல்லைன்னு சொன்னியே… இனி யாருக்கு சொல்வதுன்னு

தெரியாமல் நீ திண்டாடும் படி.. உன்னை நூறு மடங்கு அதிகமாக நேசிக்கும் ஒரு குடும்பத்தை என்னால் தர முடியும்!!!" என்று தன் ஆழ்ந்த குரலால் உணர்வு பூர்வமாக கூறினான்.

முதன் முறையாக அவனின் காதலில் முழுகியவளுக்கு தன்னையும் அறியாமல் கண்ணில் பெருக்கெடுத்து ஓட... "பத்ரி" என்று குரல் தடுமாற அழைத்தவள் "இப்படி சொல்லிய பிறகும் எந்த பெண்ணால் உன்னை காதலிக்காமல் இருக்க முடியும்??? ஆனா...

இன்று...

"ப்ளீஸ் பத்ரி.. என்னை விட்டு போகாதே" என்று வேகமாக அவனின் விரலைப் பற்றியவள்.. "என் பத்ரியா எப்பவும் என்னோடு இருப்பேன்னு சொன்னியே பத்ரி... ப்ளீஸ் இங்கேயே இரு" என்றாள் விரல்களை இன்னும் இறுகப் பற்றி!!!

வெளியில் இருந்து இதை பார்ப்பவர்களுக்கு மிக சாதாரண விஷயமாக தான் தேன்றும்.. ஆனால் அலக்நந்தாவை தெரிந்தவர்களுக்கு அவள் இப்படி கேட்க வேண்டும் என்றால் அது அவளுக்கு எவ்வளவு பெரிய விஷயம் என்பது புரியும்!!!

அவளுடைய பதினாறாவது வயதில் தாய் தந்தை மற்றும் சகோதரிக்கு போன் செய்து கூப்பிட்டபோது வரவில்லை என்பதற்காகவே கடந்த எட்டு வருஷமாக அவர்களுடன் ஒதுங்கியே வாழும் வைராக்கியம் கொண்டவள்!!! அலக்நந்தா தோல்வியை கையாளும் விதமும்.. அதை ஏற்றுக்கொள்ளும் விதமும் சற்றே வித்தியாசமாக இருக்கும் என்பதை அவர்கள் கண்கூடாக கண்டவர்கள்!!!
அன்றைய தவறுக்காக அவர்களை ஒதுக்கி வைத்ததோடு மட்டும் அல்லாமல்... அவர்களின் சினிமா பாரம்பரியத்தையும் தூக்கி எறிந்தது அந்த சம்பவத்தின் பிரதிபலன் தான் என்பதையும் அறிவார்கள்!!!

இப்போ மட்டும் அவன் நந்தாவின் கையை உதறி விட்டு போனால்.. இனி இந்த ஜென்மத்திற்கு அவன் புறம் தலை வைத்துக் படுக்க மாட்டாள் என்று என்பது தின்னம். ஆசை அவர்களை ஆட்டி படைக்க ஆவலாக பார்த்தனர்..

ஆசையை மீறி வேண்டவே தொடங்கினர்

ஆனால் அவன் அப்படி போனால் அதன் பக்க விளைவு எப்படியாக இருக்கும் என்பதை யூகிக்க தவறியவர்களாக மிகுந்த பதட்டத்துடன் அவனை எப்படி இங்கிருந்து என்ன பேசி விரட்ட என்று யோசித்தனர்.

அலக்நந்தா சுயமாக சம்பாரித்த கோடிக்கணக்கான சொத்து ஒரு புறம் இருந்தாலும்… “பெஸ்ட் ப்ரண்ட்ஸ் ஆப் தி இயர்” வாங்கும் அளவு தகுதி இல்லை என்றாலும் கூட மகள் “எவனையோ நம்பி மோசம் போய் விட கூடாதே” என்ற பயம் அவர்களை பிடித்து உலுக்கியது. அதன் காரணமாகத்தான் பத்ரி போன் செய்தவுடன் ஆளுக்கு ஒரு மூளையில் இருந்தபோதும் நான்கே நாட்களில் அடித்து பிடித்துக் கொண்டு இங்கே வந்து சேர்ந்தனர்.

ஆனால் நிலைமை கையை மீறிக்கொண்டு இருப்பது அலக்நந்தா அவன் கையை பற்றிய விதத்திலேயே தெரிய… உள்ளுக்குள்ளே பதறியது அவர்களுக்கு..

ஆர்யாவின் தம்பி… நாளைக்கு சச்சிதேவ் குருப்சை தலைமை ஏற்று நடத்த இருப்பவன் என்பதை தவிர பத்ரி சச்சிதேவ் பற்றிய பெரிய அபிப்ராயம் எதுவும் இல்லை.. அதை விட மல்ஹோத்ராவை கட்டிக்க எந்த தகுதியும் இல்லை என்பது அவர்களின் ஒருமித்த கருத்தாக இருந்தது!!!. பத்ரி என்று இல்லை.. யாராக இருந்தாலும் அவர்களுக்கு பிடித்திருக்காது காரணம் அவன் சினிமா துறையில் இல்லை என்பது தான் முழுமுதற் காரணமாக இருந்தது.

அலக்நந்தாவிடம் பத்ரி எதையோ வாயை திறந்து பதலளிக்கும் முன் யாரோ கதவை திறந்து கொண்டு வரும் காலடி சத்தம் கேட்க.. அனைவரின் பார்வையும் அந்த புறம் திரும்ப.. அங்கே நிகாரிக்கா அரக்க பறக்க வந்து கொண்டிருந்தது தெரிந்தது!!!

“காட்.. இது மல்ஹோத்ராவின் பேமிலி ரீயூனியன்னு தெரிந்திருந்தால் அந்த பக்கமே வந்திருக்க மாட்டேன் அலக்நந்தா…” என்றான் பத்ரி காழ்புணர்ச்சியுடன்.

ஏற்கனவே அவனை துரத்துவதற்காக சந்தர்ப்பம் எதிர்பார்த்துக்கொண்டு இருந்த அவளின் தந்தை “நீ இங்கே இருக்க வேண்டிய அவசியமும் இல்லை என் முன்னால் நிற்க உனக்கு தகுதியும் இல்லை… நீ போகலாம்” என்றார் சேவகனை பணிக்கும் ராஜாவை போல…

“அவசியத்தையும் ஆனாவசியத்தையும் உங்க பெண்ணிடமே கேளுங்க… அப்புறம் என்ன சொன்னிங்க.. தகுதியா… என் தகுதியைப் கேட்க கூட உங்களுக்கு தகுதி போதாது” என்று சச்சிதேவிற்கே உரிய தெனாவட்டோடு பதிளத்தவன்.. “ஒரு மல்ஹோத்ரா நிற்கும் இடத்தில் நான் நிற்பதே அதிகப்படி.. இதில் மூன்று பேரா?!?.. ச்ச” என்றவன் அசிங்கத்தை மிதித்தது போல் மொழிந்தவன்.. அலக்நந்தாவின் பிடியில் இருந்த விரலை உருவிக் கொண்டு..

"உனக்கு தான் யாரும் எந்த ஹீரோவும் தேவைஇல்லை.. என் பிரச்சனையை நானே பார்த்துப்பேன்னு வீர வசனம் பேசுவ இல்ல.. உன் பிரச்சனையே நீயே பார்த்துக்கோ…" என்று இளக்காரமாக மொழிந்தவன் பட்டென்று திருப்பி நிகாரிக்காவை ஒரு பார்வை கூட பார்க்காது கடந்து போக… வாழ்க்கை பயணத்தில் கடைசி வரைக்கும் வர வேண்டியவன் அவளை மட்டும் நட்டாற்றில் தள்ளி விட்டு போக.. சூழலில் மூச்சு விட முடியாது திண்டாடினாள் அலக்நந்தா!!!

அத்தியாயம் - 20
இரண்டு மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு…

“இப்படி சொல்லிய பிறகும் எந்த பெண்ணால் உன்னைக் காதலிக்காமல் இருக்க முடியும்??? ஆனா… நான் உன் மேல் வைத்திருப்பது காதலான்னு எனக்கே தெரியலையே பத்ரி!!!” என்றாள் வெம்பிய குரலோடு… அலக்நந்தா.

இப்படி ஒரு பதிலை சொல்கிறோமே என்ற ஆதங்கமும்.. வருத்தமும்.. அதில் இழைந்த பயமும் அவளின் குரிலில் மண்டி கிடந்ததை அவனால் பரிபூரணமாக உணர முடிந்தது.

“அப்ப சொல்ல வேண்டாம்… உனக்கு உறுதி இல்லாததை நீ செய்யவோ.. சொல்லவோ வேண்டாம்… அலக்நந்தா.. எப்ப உனக்கு என் மேல் இருப்பது

காதல் தான்னு உறுதியா தெரியுதோ அப்ப சொன்னா போதும்…" என்றான் பத்ரி அமைதியாக.

"அப்ப.. நான் காதலித்தாலும்… காதலிக்கவில்லை என்றாலும் நீ என்னுடய ப்ரெண்டாவே இருப்பாயா பத்ரி??" என்றாள் ஆர்வமாக.

"ஒரு நண்பன் காதலனாக ஆகலாம்… ஆனா ஒரு காதலன் நண்பனாக மாற முடியாது… அப்படி ஆக முடியும்னு எவனாவது சொன்னா.. அவனை விட ஒரு பொய்யன் யாரும் இல்லைன்னு அர்த்தம்.. நீ என்னைப் பற்றி எப்படி பீல் பண்றேன்னு தெரியலைன்னு சொன்ன.. அதுக்கு சரின்னு சொன்னேன்.. அதுக்காக என் உறவை மாற்றாதே… வாழ்க்கை முழுவதும் வரக்கூடிய பந்தத்தை பொய்யிலிருந்து ஆரம்பிக்க விரும்பவில்லை அலக்நந்தா." என்றான் நிதானமாக.

அவன் கடைசியாக சொன்ன வார்த்தைகள் கேட்ட மாத்திரத்தில் அவளின் முகம் இருண்டு போக… வேகமாக கையை உருவிக் கொண்டு… "நான்.. என்.." என்று தன்னைப் பற்றி சொல்ல ஆரம்பித்தவள்.. அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது தவிக்க..

"வேண்டாம்… நீ எதை சொல்ல வந்தாயோ அதை சொல்ல நீ இன்னும் ரெடி ஆகவில்லை.. நான் வெயிட் பண்றேன்.. எனக்கு எந்த அவசரமும் இல்லை.. இப்ப பேசின விஷயத்தைப் பற்றி ரொம்ப யோசிக்காதே… போய் படு.." என்றபடி அவன் எழ..

இத்தனை நேரம் பிரகாசமாக இருந்த முகம்.. சற்றே குழம்ப "பாயல்" என்று இழுத்தபடி எழுந்தாள்.

"பாயல்?? பாயலுக்கு என்ன?" என்று கேட்டவன் " நான் எப்படி உணர்கிறேன் என்று தெளிவாக சொல்லி விட்ட பிறகும்.. வெயிட் பண்றேன்னு சொன்னா என்னுடைய தப்பா? ஒன்னு நல்லா புரிந்துகொள் அலக்நந்தா… அவளுடைய சிரிப்பை பார்த்து என் இதய துடிப்பு எகிறலை… அவளைப் பார்க்காததால் நான் தூக்கம் வராமல் தவிக்கவில்லை… அதை விட இதோ இப்படி நீ கண்களை விரித்து வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டு இருக்கும் போது அப்படியே கட்டி பிடித்து முத்தம் கொடுக்கனும் போல் தோன்றவில்லை!!!" என்று அவன் சொல்லவும்

கண்ணுக்கு முன்னே நடு நாயகமாக இருந்த காபி டெபிளை தெரியாது முட்டிக் கொண்டு கீழே விழுந்தாள் அலக்நந்தா..

சிரிப்பை வெகு சிரமப்பட்டு அடக்கியவன்... குனிந்து கையை பிடித்து எழுப்பியப்படி... "இந்த ரீக்யாக்ஷனை முத்தம் கொடுத்த பிறகு எதிர்பார்த்தேன்... ஆனா.. பேசியதற்கே இப்படி மயங்கி விழுவாயன்னு நான் எதிர்பார்க்கவில்லை அலக்நந்தா.." என்று கண்கள் காதல் கொப்பளிக்க.. அதற்கு நேர்மாறாக உதட்டில் சிரிப்பு மின்ன... அந்த சிரிப்பிற்கு போட்டியா முகவாயில் குழி விழ... வெகு அழுகாய் நின்றவன் முறைத்தாள் அலக்நந்தா.

"ஸ்டாப் ப்ளர்ட்டிங்..(FLIRTING) பத்ரி" என்றப்படி தன் கையை வெடுக்கென்று பிடுங்க...

"உன்னை காதலித்துவிட்டு பக்கத்து ரூம் சிம்ரனை போய் ப்ளர்ட் பண்ணா நல்லாவா இருக்கும்?!?" என்று கண்கள் பிராசிக்க.. அவளிடமே நியாயம் கேட்டான் பத்ரி.

இன்னும் அதிகமாக முறைத்தவள் இதற்கு என்ன பதில் சொல்ல என்று தெரியாது... "நான் தூக்க போறேன்... குட் நயிட்.." என்று கூறியப்படியே தன் ரூம்மை நோக்கி வேகமாக நடக்க தொடங்கினாள்...

"சச்சிதேவை காதலிப்பது கூட கொஞ்சம் கஷ்டம் தான் போல அலக்நந்தா..." என்று அவன் விடாது கூற.

கதவை திறக்க கையை வைத்தவள் திரும்பி நின்று "நான் காதலிப்பதாக சொல்லவில்லை பத்ரி.." என்று சூடாக பதில் கொடுத்தாள் அலக்நந்தா.

"ஆங்... நீ நிச்சயமாக சொல்லுவாய்... ஒன்றை மட்டும் நல்லா நியாபகத்தில் வைத்துக்கொள்.. அலக்நந்தா.. நீ எப்ப என்னை காதலிப்பதாக சொல்றியோ.. அப்ப நம் கல்யாணம்.." என்றான் தன் நயிட் பேன்டில் கையை விட்டப்படி.. அசல் சச்சிதேவாக.

அதிர்ச்சியின் உச்சத்தில் "வாட்?????" என்று கத்தியவள் பின் அவசரமாக சித்

ரூம்மின் புறம் பார்வையை பார்த்து விட்டு.. தன் வாயை மூடியவள் “வாட்??” என்றாள் கிசுகிசுப்பாக.. என்ன செய்கிறோம் என்று புரியாது.

அவளின் அதிர்ச்சியை உளமாற ரசித்தப்படி.. மெல்ல நடந்து அவள் அருகில் சென்றவன்.. வாயை மூடி இருந்த விரல்களை விடுவித்து அதை தன் கைக்குள் பத்திரமாக சிறைப்படுத்தியவன்… லேசாக அவள் புறம் குணிந்து “நான் உன்னை கல்யாணம் பண்ணிப்பேன் தானே சொன்னேன்!?! நான் என்னவோ கடந்திட்டு போக போறேன்னு சொன்ன மாதிரி எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?!?… ம்ம்..” என்று அவளை போலவே கிசுகிசுப்பாக வியாக்கியானம் பேசியவன் தொடர்ந்து “என் குடும்பத்தில் இது தான் வழக்கம்… இன்னும் கேட்க போனால் நான் உனக்காக வெயிட் பண்றதையே டைம் வெஸ்ட்ன்னு வீட்டில் சொல்லுவாங்க…” என்று தெனாவட்டாக மொழிந்தான்.

“ஓகோ…” என்று சொன்ன விதத்திலேயே அவள் நம்மாத தன்னை இருக்க.. நக்கலாக அவனை பார்த்து… “நாளைக்கு காதலிக்கிறேன்னு சொன்னா… அப்ப நாளைக்கே என்னை கல்யாணமும் செய்துக்கொள்வாயா பத்ரி?” என்றப்போது அவள் குரல் அவனை எள்ளி நகை ஆடியது.

“இதுக்கு பதில் உண்மையாகவே உனக்கு தெரியனுன்னு ஆசைப்பட்டா… நாளை வரைக்கு எதுக்கு வெயிட் பண்ணனும்?!? இப்பயே காதலிக்கறேன்னு சொல்லு.. போதும்..” என்றான் அச்சு அசல் சச்சிதேவாக.

அந்த குரலில் இருந்த திமிர், ஆணவத்தை மீறி அதில் இருந்த அசைக்க முடியாத திடம் அவளை அசைக்க.. சோசித்து பார்க்கும் தைரியம் இல்லாததால்…

“குட் நைட்” சொல்லியபடி வேகமாக தன் அறைக்குச் சென்று கதவை அடைத்தாள்.

எதுவும் பேசாமல் அவள் செல்வதை பார்த்தவனுக்கு இரண்டு அடி காற்றில் மிதப்பது போல் இருக்க.. தன் அறைக்கு சென்று வேகமாக போனை எடுத்து இந்நேரத்திற்கு ஆர்யாவை அழைத்தால் சௌவிக்கு டிஸ்டர்பாக இருக்கும்… என்பதால் கார்த்திக்கை அழைக்க..

மூன்றாவது ரிங்கில் போனை எடுத்தவன்… “ஹழ்ழோ..” என்றான் தூக்க கலக்கத்திலேயே..

“டேய்… நீ ப்ளைட்டில் இருந்து அப்படியே தலைகீழ் குதிப்பது போல் இருக்குன்னு காதலுக்கு ஒரு அர்த்தம் சொன்னியே அது இப்ப தான்டா புரியுது!!!” என்றான் அர்த்த ஜாமத்தில் போன் பண்ணி.

விசுக்கென்று எழுந்து அமர்ந்த கார்த்திக்.. “ச்ச.. வாயை மூடுடா… பரதேசி… இவ்வளவு ட்யூப் லைட்டா இருந்துட்டு இதுல ரொமான்ஸ் வேறயா?!? கேட்க சகிக்கலை… ஆமாம் நிஜமாகவே நீ சச்சிதேவ் தானா?? நீ காதலிக்கிறது… நம்ம வீட்டு சிம்பிக்கு கூட தெரியும்… ஆனா உனக்கு எப்படிடா தெரியாம போச்சு..?” என்று எரிந்து விழுந்தவன்.. “சரி.. அதை விடு.. எப்ப பாபிகிட்ட சொல்ல போற?” என்றான் உரிமையாக அலக்நந்தாவை அண்ணி என்று அழைத்து.

“சொல்லி விட்டேன்…” என்றான் பெருமிதமாக பத்ரி.

“பரவாயில்லையே.. இதுலயாவது பாஸ்டா இருந்தியே.. ரொம்ப சந்தோஷம்.. பாபியை வீட்டிற்கு எப்போ அழைத்துக் கொண்டு வர?.. அண்ணனுக்கு ஏற்பாடு பண்ண மாதிரி.. உன் கல்யாண ஏற்பாட்டையும் நானே பார்த்துக்கிறேன்… உன் அதிர்ஷ்டம் பாரேன் எல்லோரும் வீட்டில் தான் இருக்கோம்.. என்ன நாளைக்கு காலையில் என் செல்லத்தை எடுத்துட்டு அங்கே வந்திடவா?” என்று அவன் பாட்டுக்கு அடுக்கத் தொடங்க..

“அடேய்… கொஞ்சம் நிறுத்துடா.. விட்டா என் முதல் குழந்தைக்கு பெயர் தேர்வு செய்து விட்டு தான் மறுவேலை பார்ப்ப போல… ஏன்டா… இத்தனை கேள்வி கேட்டியே.. அவள் என்ன பதில் சொன்னாள் என்று கேட்டியா டா பரதேசி?!?” என்றான் நகையும் கேளியுமாக.

“சச்சிதேவையே காதலில் விழ வைத்துவிட்ட பிறகு இனி கேட்க என்ன இருக்கு?” என்றான் சச்சிதேவிற்கே உரிய கர்வத்தோடு.

“இருக்கு… அலக்நந்தா ஒரு நார்மலான பர்சன் கிடையாது..” என்று

சொல்லும் போதே..

“அப்ப நம் குடும்பத்திற்கு ஏற்ற குணவதியாதான் பிடிச்சிருக்க!!! நம்ம வீட்டுக்கு வந்தவுடன் சிம்பி தலை வாரி விடுவதைப் பார்த்து... பழைய படத்து ஹீரோயின் மாதிரி கையை வாயில் வைத்து “வீல்”ன்னு கத்தி அப்படியே மயங்கி விழ மாட்டாங்க... அப்புறம் ஷங்கியோட சாப்பாட்டை நம்பி வாயில் வைக்க மாட்டாங்க... சௌவியோட பீக்னிஸ் பக்கெட் பக்கெட்டாக பாப்கார்ன் சாப்பிடுவதைப் பார்த்து... பின்னங்கால் பிடறியில் அடிக்க ஓட மாட்டாங்க... சூப்பர்டா பத்ரி..” என்று தன் அண்ணனை மனமார மெச்சினான் கார்த்திக்.

“அடேய்... நான் சொல்ல வருவதை கேளுடா..” என்று அவனை அடக்கியவன்... “அவளுக்கு என்னை காதலிக்கிறேனான்னு தெரியலையாம்.. கொஞ்சம் டைம் வேண்டுமாம்..” என்றான் இறங்கிய குரலில்.

“என்னது டைம் வேண்டுமா?? நினைச்சேன்... இந்த இரண்டு மாசம் உன்னுடன் இருந்தாங்க இல்ல.. இப்படிதான் பேசுவாங்க.. இது எல்லாம் வேலைக்கு ஆகாது... நான் நாளைக்கு வரேன்.. தாத்தா பாட்டியை வீடு புகுந்து தூக்கிட்டு வந்தது போல... நீ பாபியை கடத்திட்டு வந்திடு..” என்றான் கார்த்திக் திட்டவட்டமாக.

“மறந்துவிட்டு பேசாதேடா மடையாக... பாட்டியை கடத்த போய் அவர்களுக்கு பக்கத்தில் படுத்திருந்த அவர்களுடைய அம்மாவை தூக்கிட்டு வந்தவர்டா தாத்தா...” என்றான் சிரிப்புடன் பத்ரி.

“எது எப்படியோ கடைசியில் கல்யாணம் ஆச்சா இல்லயா? அது தான் மேட்டர்..” என்று கார்த்திக் சீரியஸாகவே சொல்ல..

“இல்ல கார்த்திக்... அலக்நந்தாவிற்கு அழுத்தம் அதிகம்... அந்த ரூட் சரி வராது.. அவள் முதலில் என்னை காதலிக்கிறேன் என்று சொல்லட்டும் அப்புறம் இதைப் பற்றி பேசலாம்..” என்று திட்டவட்டமாக மறுத்தான் பத்ரி.

“தம்பியா இருந்து உனக்கு கல்யாணம் தான் பண்ணி வைக்க முடியும்... பாபியை காதலில் விழ வைக்கிறது எல்லாம் உன் பாடு.. பாபி சம்மதிக்கும் வரை வெயிட் பண்ண போறேன்னு சொல்லி இந்த இதயம் படத்தில் வரும்

முரளி மாதிரி ஒரு ஒற்றை ரோஜா காதில் வைத்துக் கொண்டு திரிந்து நம் சச்சிதேவ் பெயரை கெடுத்திடாதே… ஒழுங்க மரியாதையா சீக்கிரம் சம்மதம் வாங்கி தொலை..” என்று அட்வைஸ் மழை பொழிந்தான் கார்த்திக்.

“சரிங்க தம்பி அவர்களே… உங்கள் கருத்துக்கு நன்றி.. இப்ப போனை வைக்கிறேன்.. நாளை பேசலாம்” என்று மீண்டும் தன் தம்பி அடுத்த பிளாக்காணம் பாடும் முன்பு போனை வைத்த பத்ரி வெகு நாட்களுக்கு பிறகு நிம்மதியாக தூங்கினான்.

அடுத்த வந்த நான்கு நாட்களும் லீவு எடுத்த நாட்களுக்கான வேலையை முடிக்கவே சரியாக இருக்க… அலக்நந்தாவை கண்ணால் கூட காண முடியவில்லை.. இதற்கு இடையில் நொடிக்கு ஒரு தரம் போன் செய்து அலக்நந்தாவை எப்படி மடக்கலாம் என்று விவஸ்தையே இல்லாமல் ஐடியா என்ற பெயரில் ஆதி காலத்து சினிமாவில் ஆரம்பித்து இந்த காலத்து சீரியல் வரை எதையாவது சொல்லி… அவனை கொல்லாமல் கொல்ல… இப்படி போன் செய்து அவனை டார்சர் பண்ணாத ஆளு ஒன்று அவன் வீட்டில் உண்டு எனில் அது சிம்பி மட்டும் தான்!!! அதுவும் பேச வராத காரணத்தினால் என்பது அவனின் யூகம்.

ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாமல் கால்களை ப்ளாக் பண்ணவே தொடங்கி விட.. அதற்கு எல்லாம் அஞ்சும் ஆட்களா அவர்கள்?!? புது புது நம்பரில் இருந்து போன் பண்ண தொடங்க… பொறுக்க முடியாது போனை சுட்ச் ஆப் செய்து விட்டான்.. அதி அவசரம் என்றால் சித்திற்கு போன் செய்வார்கள் என்று நம்பிக்கையில்.

நான்கு நாட்களாக ஓரளவு தன் வேலையை எல்லாம் முடித்தவன்… ரூமிற்கு திரும்பிய போது ஹாலில் சித் கையில் எதையோ வைத்துக் கொண்டு தீவிரமாக படித்துக் கொண்டு இருந்தான்.

கவுச்சில் அமர்ந்த பத்ரியை கூட முகம் நிமிர்த்தாத சித்தைப் பார்த்து ஆச்சரியம் மேலிட “என்னடா சித் அவ்வளவு சீரியஸா படிக்கற?”

“அடுத்த வாரம் போர்டு மீட்டிங் இருக்குடா ஊருக்கு போனா, அப்பா அதைப் படித்தியா.. இதைப் பார்த்தியான்னு கேட்டு உயிரை எடுப்பார். அதனால் தான் ஆடிட் ரிப்போர்ட்டை பார்த்துக் கொண்டு இருக்கிறேன்…” என்றான்

எரிச்சலாக சித்.

“ம்ம்…” என்றபடி தன் போனை எடுத்து ஸ்ட்ச் ஆன் செய்த பத்ரி “தூங்கிட்டியா?” என்று மெசேஜ் அனுப்பினான் அலக்நந்தாவிற்கு.

“இல்லை.. ஏன்?” என்று பதில் வந்தது

“நாலு நாளு ஆச்சு உன்னைப் பார்த்து”

“அதுக்கு?”

“அம்மா தாயே.. உன்னைப் பார்க்கனும் போல இருக்கு வெளியே வா…” என்று அனுப்பி வைத்தான்.

“பத்ரி… நீ தான் என்னை காதலிக்கிறன்னு சொன்னியே தவிர நான் உன்னை காதலிக்கிறேன்னு சொல்லவில்லை..” என்று வந்தது அவளிடமிருந்து.

“அந்த ஒரு காரணத்திற்காக தான் உன்னிடம் அமைதியாக கேட்டுக் கொண்டு இருக்கிறேன். இல்லைன்னா எப்பவோ உன் ரூமிற்குள் வந்திருப்பேன்.. ஒழுங்கா நீ வெளியே வருகிறாயா இல்லை.. நான் உன் ரூமிற்குள் வரவா? எப்படி வசதி??” என்று சற்றே மிரட்டலாக பதில் அனுப்ப

அடுத்த இரண்டாவது நொடி கதவு திறந்து கொண்டு வெளியே வந்தாள் அலக்நந்தா.

அவள் வருவதை சிரிப்பு பொங்க பார்த்தவனை… மறந்தும் அவன் புறம் பார்வையை திருப்பாது அலக்நந்தா வர..

சித்தை பார்த்து “ஹாய்” என்றாள் அலக்நந்தா.

“ஹாய்.. நீ இன்னும் தூங்கலையா?” என்றான் சித்.

“இல்ல… அடுத்த வாரம் பேப்பர் பிரஸ்சன்டேஷனுக்கு ரெடி பண்றேன்” என்றபடி அவளின் இடத்திற்கு வந்து அமர்ந்தாள் அலக்நந்தா.

அவளையும் தன் அருகில் உட்கார்ந்து இருந்த பத்ரியையும் ஒரு மாதிரி பார்த்தவன் “நீ இவனிடம் சண்டை போட்டியா?” என்றான் அலக்நந்தாவை பார்த்து சித்.

அப்பொழுதும் பத்ரியை பார்க்காது “ம்கூம் இல்லையே ஏன்??” என்று தடுமாறியபடி சித்திடம் கேட்டாள்.

“இல்ல.. நீ நடந்து கொள்வது கொஞ்சம் வித்தியாசமா இருக்கு” என்றான் சித் இருவரையும் மாறி மாறி பார்த்தபடி.

“என்ன வித்தியாசம்?”

“எனக்கு ஹாய் சொல்லிவிட்டு.. என் இரண்டு அடி தூரத்தில் இருப்பவனை பார்க்காத மாதிரி போய் அங்கே உட்காருகிறாயே அதனால் தான் கேட்டேன்”

“ஓ!! அதுவா…” என்று தடுமாறியவள்… “தூக்க கலக்கத்தில் கண்ணு தெரியவில்லை… அதனால் தான்…” என்றபடி அவசரமாக பத்ரியை பார்த்து “ஹாய்” என்றாள் அலக்நந்தா.

“என்ன தூக்க கலக்கமா? இப்ப தான் தூங்கலையான்னு கேட்டதற்கு எழுதிட்டு இருந்தேன்னு சொன்ன? ஆர் யூ ஆல்ரைட்” என்றான் சித் குறு குறுப்பாக பார்த்தபடி.....

இன்று ..

வாழ்க்கைப் பயணத்தில் கடைசி வரைக்கும் வர வேண்டியவன் அவளை மட்டும் நட்டாற்றில் தள்ளி விட்டு போக.. அந்த சூழலில் மாட்டி மூச்சு விட முடியாது திண்டாடினாள் அலக்நந்தா!!!

இது மாதிரி சந்தர்பத்திற்காகவே காத்திருந்த அவளின் அம்மா.. மயூரி.. “பார்த்தியா.. நீ அவ்வளவு கெஞ்சி கூப்பிட்ட பிறகும்.. உன்னை கை கழுவி விட்டு போறவன் தான் உன் கூட கடைசி வரைக்கும் வரப்போறானா? இவனை நம்பி தான் எங்களிடம் சண்டை போடறியா?” என்றாள் ஆவேசமாக. தங்க முட்டை மாதிரி கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டு விட

கூடாது என்பதில் தீவிரமாக.

உள்ளுக்குள் அவள் நொறுங்கிக் கொண்டு இருப்பதை அறியாது… அவளின் அப்பாவும் மனைவியுடன் சேர்ந்து கொண்டு..

“அன்று நீ கூப்பிட்டவுடன் நான் வரவில்லை உன் அம்மா வரவில்லை உன் அக்கா வரவில்லைன்னு இந்த எட்டு வருஷமாக எங்களிடம் பேசாமல் ஒதுங்கி இருந்தியே.. நீயா உன் இஷ்டப்படி தேர்ந்தெடுத்தவன் உன்னை விட்டு ஓடுவதை நல்லா பார்..” என்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச… துடித்துப் போனாள் அலக்நந்தா.

ஏற்கனவே ஏமாந்து நொறுங்கி போய் நின்று இருப்பவளிடம்… இந்த மாதிரி நிலை குலைய வைக்கும் கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்லுவாள்?!?

அதற்குள்ளாகவே அங்கே வந்த நிகாரிக்காவை பார்த்து “இவளுக்கு என்னடி குறை வைத்தேன்.. ஊரே பொறாமை படும்படி தானேடி வளர்த்தேன்… சின்ன வயசில் எது கேட்டாலும் வாங்கி கொடுக்கவில்லை… அள்ளிக் கொடுத்திருக்கேன்… ஞாபகம் இருக்கா… இவள் பார்பி டால் கேட்டாள் என்று அவள் ரூமையே மறைக்கும் அளவு.. டால் ஹவுஸ் கட்டி அதில் பார்பி டாலை வாங்கி நிரப்பலை…?!!? அப்புறம்..

“இல்லை…” என்றாள் அலக்நந்தா இத்தனை நேரம் எங்கோ வெறித்து பார்த்தபடி கலங்கிய கண்ணுடன் அமைதியாக இருந்தவள்.

“என்னது இல்லை?” என்றாள் அவள் அம்மா ஆவேசமாய்.

வேதனையுடன் “அங்க டால் ஹசில் பார்பியை வாங்கி நிரப்பலைம்மா நீங்க என்னை உட்கார வைச்சிட்டிங்க.. வெறும் பொம்மையாய்… உயிரே இல்லாத ஜடமாய்…” என்றாள் அவரை நிமிர்ந்து நேருக்கு நேராய் பார்த்து.

சின்ன வயதில் அந்த மாதிரி டால் ஹவுஸ் தனக்கு இல்லாத கோபத்தில் “அக்கா” என்று ஆசையாக நெருங்கி வந்த அலக்நந்தாவை எத்தனை முறை அழ வைத்து திருப்பி அனுப்பி இருக்கிறாள் என்று நிகாரிக்கா மட்டுமே அறிந்த உண்மை… ஆனால் அதை ஒரு முறை கூட அவள் அப்பாவிடமோ… இல்லை அம்மாவிடமோ வாயை திறந்து கூறியது இல்லை என்ற

நினைப்பே நிகாரிக்காவை ராட்சசியாக உணர வைக்க...

“நந்தூ..” என்று நிகாரிக்கா அலற.. பெற்றவர்கள் இருவரும் அதிர்ந்து போய் எதுவுமே பேச முடியாது விக்கித்து நின்றனர்.

காரணம் அலக்நந்தா பேச பிடிக்காவிட்டால் ஒதுங்கி போவாளே தவிர.. இதுவரை இப்படி எல்லாம் முகத்திற்கு நேராக பேசும் ரகம் இல்லை.

“நீ என்ன பேசறன்னு புரியுதா?” என்றாள் அவளின் அம்மா அகங்காரமாய்.

“நல்லா புரியுதும்மா.. என்னைத் தான் நீங்க ஒருநாளும் புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை.. ”

சூழ்நிலை மிகவும் மோசமாவதை உணர்ந்த நிகாரிக்கா.. “அம்மா” என்றாள் அமைதியாக.

“ஷூட்டிங் ஷெட்டில் இல்லாமல் நீ இங்க என்ன பண்ற” என்று அதி வேகமாய் திருப்பினார் மயூரி.

“மா.. அது முக்கியம் இல்லை... அதுதான் போனில் நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்னு சொன்னேன் இல்ல.. எதுக்காக வந்திங்க?” என்றாள் நிகாரிக்கா.

“வந்த வேலையை கச்சிதமாக நிறைவேற்றி விட்டாங்க அக்கா” என்றாள் அலக்நந்தா விரத்தியாக.

“என்னத்தை நிறைவேற்றி விட்டாங்க?” என்றாள் புரியாது நிகாரிக்கா.

துக்கம் பொங்கி வழிய.. “என்னையும் பத்ரியையும் பிரிக்க தானே இவ்வளவு கஷ்டப்பட்டு கண்டம் விட்டு கண்டம் தாண்டி வந்தாங்க.. வந்த காரியம் நல்டலபடியாவே முடித்தது!!!” என்றாள் கலங்கிய கண்ணோடு.

“நான் ஒன்றும் தப்பா பேசவில்லை... வீணாக என் மேல் பழியை சுமத்தாதே நந்து.. உன் மேல் அன்பு இருந்தால் உலகமே எதிர்ந்து நின்றாலும் அவன் உன் பக்கத்தில் நின்று இருக்கனும்... சும்மா ஒரு வார்த்தை சொன்னவுடன்

அதுதான் சாக்குன்னு விழுந்தடித்துக் கொண்டு ஓட மாட்டான்… நான் மட்டும் இல்ல என் இடத்தில் எந்த அம்மாவும் இது தான் செய்து இருப்பாங்க..”என்றார் அவர் தெளிவாக.

“நீங்க எதுவும் தப்பா பேசவில்லைம்மா.. தப்பா நடக்கவில்லை.. தப்பு எல்லாம் என்னுடையதுதான். உங்களுக்கு மகளாக பிறந்தேனே அது என்னுடைய தப்பு…”

“ஏய்.. என்ன பேச்சு பேசற நீ.. அவனவன் மல்ஹோத்ரா குடும்பத்தில் பிறக்க மாட்டோமான்னு கனவு காண்கிறான்…” என்றார் அவளின் தந்தை.

“கனவு கனவாகவே இருந்துவிட்டா ரொம்ப நல்லா இருக்கும் பா.. அதுவே நிஜமாகும் போதும் சுடும் பா.. நிற்கவும் முடியாது நகரவும் முடியாது நரகமாக இருக்கும் பா.. ஏன் பா.. உங்க ப்ரொடக்ஷன் ஹவுஸ் பத்தி நினைத்த அளவு கூட வேண்டாம்.. அதில் ஒரு பத்து சதவீதம் உங்க பெண்ணைப் பற்றி நினைத்து பார்த்து இருப்பீங்களா?”

“ஏன் நினைக்காமல்? உனக்காக நான் பெரிய பெரிய கனவு வைத்திருத்தேன். ஆனா எல்லாத்தையும் நீதான் வேண்டான்னு தூக்கி எரிந்துவிட்டு இங்கே ஓடிவந்து ஒளிந்து கொண்டாய்” என்றார் மூச்சு இரைக்க.

“என்னை நினைத்து பார்த்தீங்களான்னு கேட்டேன் பா.. கனவு கண்டீங்களான்னு கேட்கலை.. நீங்க காண்பது உங்களுடைய கனவுப்பா.. அதை பதினாறு வருஷம் ஏன்னு கேள்வி கேட்காமல் உங்களுக்காக வாழ்ந்தேன்… உங்க கனவிற்கா என் அக்காவை தொலைத்தேன்.. நண்பர்கள் தொலைத்தேன் பா… என் பள்ளி பருவத்தை கேரா வேனிலே தொலைத்தேன்… என் ஆரோக்கியத்தை தொலைத்தேன்பா.. இதில் கொடுமை என்னென்னா இதை எல்லாத்தையும் தொலைத்தேன்னு தெரியாமல் இருந்தது தான் பா.. ஆனா இப்ப.. எனக்குன்னு ஒரு கனவு இருக்கு.. அதை வாழ நான் ஆசைப்படறேன் பா…” என்றாள் பிடிவாதமாக.

"என்னடி பெரிய பொல்லாத கனவு? என்னவோ ஆஸ்கார் அவார்ட் வாங்க போற மாதிரி சொல்ற? இப்ப உன்னை விட்டு ஓடி போனானே அவனோட வாழப்போறதை கனவா சொல்றியே… உன் திறமைக்கும் அழகிற்கும்

நட்சத்திரமாக வானில் ஜொலித்து பிரகாசிக்க வேண்டிய நீ இப்படி யாரோ ஒருத்தர் வீட்டில் கண்ணாடி கூண்டிற்குள் ஏற்றப்பட்ட விளக்காய் அடைப்பட்டு இருக்கப் போறியா?" என்றார் அவளின் அம்மா அருவருப்பாய்.

"எங்கோ... தூரத்தில் இருக்கும் நட்சத்திரத்தின் ஒளியால் யாருக்கும் எந்த பயனும் இல்லைம்மா.. ஆனா கண்ணாடி கூண்டிற்குள் ஏற்றப்பட்டு இருந்தாலும் அதனால் ஒரு குடும்பத்திற்காவது ஒளியை தந்து பயன் உள்ளதாக இருக்க முடியும்.. என் வாழ்க்கையும் எங்கோ கைக்கு எட்டாத தூரத்தில் யாருக்கும் பயனில்லாது கழிவதை விட ஒரு குடும்பத்திற்காவது என் உழைப்பு பயன்படுமே இதுவே போதும்"

"இப்படி பேச சொல்லி.. சொல்லிக் கொடுத்தானா?" என்றார் அதற்கும்.

"நினைவு தெரிந்த நாளில் இருந்து மத்தவங்க எழுதிக் கொடுத்த டைலாக்கை பேசி.. பேசி.. இனி எக்காரணத்தை கொண்டும் யார் சொல்லிக் கொடுத்தோ, எழுதிக் கொடுத்தோ.. பேசுவதில்லைன்னு முடிவு எடுத்து எட்டு வருஷம் ஆகுதும்மா.. பத்ரி எனக்கு பேச சொல்லி கொடுக்கலை மா.. வாழ கற்றுக்கொடுத்தான்.. உங்க அனுமதி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதை தான் செய்ய போகிறேன்!!" என்றாள் திடமாக அலக்நந்தா.

"இது எல்லாமே உன் சொத்துக்காக அவன் போடும் நாடகமா இருக்க கூடாதான்னு ஒரு நிமிஷம் கூட உனக்கு தோன்றவில்லையா?" என்று மயூரி கிட்டதட்ட கத்தினார்.

"பேசறத்துக்கு முன்னாடி ஒரே ஒரு நிமிஷம் அவருடைய காதல் உண்மை இருந்தால் நம்ம பெண் நல்லா இருப்பாளேன்னு உங்களுக்கு நினைக்க தோன்றவே இல்லையே மா... என் வாழ்க்கையில் முதன் முதலால் என்னை எனக்காவே விரும்பிய ஒரு ஜீவன் பத்ரிதான்மா. என்னை அவர் காதலிக்கிறேன்னு சொல்லும் போது நான் யாருன்னே தெரியாது மா.. தெரிந்த பின்.. என்னை... " என்று அதற்கு மேல் பேச முடியாதப்படி தொண்டைய அடைக்க... கண்களை இருக்க மூடி தடுத்த நிறுத்திய போதும் விழி இமையை தாண்டி குபு குபுவென்று ஆறாய் கண்ணீர் பொங்கி ஊற்ற... அதற்கு மேல் தாங்க முடியாது குமுறி.. குமுறி.. அழுத்தாள் அலக்நந்தா.

அத்தியாயம் - 21
இரண்டு மாதத்திற்கு முன்பு...

பதில் சொல்ல முடியாது கையை பிசைந்தபடி அவள் படும் அவஸ்தையை கண் குளிர கண்டவனுக்கு சிரிப்பு முட்ட அதற்கு மேல்... பொறுக்க முடியாது "டேய்.. ஊருக்கு போவதற்கு டிக்கெட் புக் பண்ணனுன்னு சொன்னியே பண்ணிட்டியா?" என்று பேச்சை மாற்றினான் பத்ரி அலக்நந்தாவை வெகுளியாக ஒரு பார்வை பார்த்தபடி.

"அது எல்லாம் பண்ணியாச்சு... நான் வரும் வரை நியூ இயர் செலிபரேஷனுக்கான ஏற்பாட்டை சுதிரை பார்த்துக்க சொல்லி இருக்கேன்.. அவனை கொஞ்சம் பாலோ பண்ணு.. ஆமாம் நீ எதாவது அலக்நந்தாவிடம் சொன்னியா??" என்றான் முந்தைய பேச்சை விடாது சித்.

"ம்ம்..." என்று தலையை பலமாக ஆட்டியவன் "ஆனா நான் சொன்னதை அலக்நந்தா ஒத்துக்கொள்ள வில்லை. அதனால் என்னை பார்க்காத மாதிரி நடந்துக்கறா?" என்றான் அழுத்தம் திருந்தமாக.

"அப்படி என்னத்தைடா சொல்லி தொலைந்த?!?" என்று அவன் ஆர்வமாக காரணம் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே அவன் அண்ணனிடம் இருந்து போன் வர.. அவசரமாக போனை எடுத்துக் கொண்டு... இவர்களை மறந்து ரூமிற்குள் ஓடினான்.

அவன் உள்ளே சென்றது தான் தாமதம்... "ஏதோ சித் அண்ணன் இடம் இருந்து போன் வந்ததால் தப்பிச்சாச்சு... இல்லைன்னா என்ன சொல்லி இருப்ப பத்ரி?" என்றாள் பரிதவிப்புடன் அலக்நந்தா

"நண்பனிடம் பொய் சொல்ல முடியாது இல்லை... அதனால் உண்மையை..." என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே..

"ஹவ் டேர் யூ...." என்றபடி துள்ளி எழுந்தவள்... "உன்னை..." என்றப்படி கொந்தளிப்புடன் இங்கு அங்குமாய் பார்வையை அலையவிட்டவளுக்கு காபி டேபிளில் இருந்த மேகசினை அதிவேகமாக எடுத்து அவன் மீது வீச கையை ஓங்க....

அவளை மிரட்சியுடன் பார்த்தவன் மின்னல் வேகத்தில் கவுச்சை விட்டு சரிந்து கீழே இறங்கி முகத்திற்கு தலையனையை பாதுகாப்பு கேடையமாக பயன் படுத்தி பதுங்கினான்.

அவள் என்னவோ ஆர்.டி.எக்ஸ் பாம்பை அவன் மேல் வீச போவது போல் அவனின் செயல் இருக்க... தயங்கி நின்று "பத்ரி?!?" என்றாள் ஒன்றும் புரியாது.

"உன் காதலால் என்னை கொல்வாய் என்று நினைத்தேன் மோனல்.... ஆனா இப்படி என்னை கொன்றுவிட்டு காதலிப்பாய் என்று நினைக்கவில்லை" என்று தரையில் படுத்தவன் பயந்து புலம்பினான்.

அவனின் விசித்திர பேச்சே மனதை நிறைக்க "மோனல்" என்று அவன் விளித்தது மனதில் பதியாதவளாய் "கியா??.." என்றாள் உரைந்து நின்று.

"அம்மா தாயே... அப்படியே ஃபார்ட்டி டிகிரி தலையை திருப்பி உன் கையை பார்" என்றான் கையை உயர்த்தி காட்டி.

என்ன உளறுகிறான் என்றபடி தன் தலையை உயர்த்தி பார்த்தவளின் கண்களை நம்பவே முடியவில்லை.. காரணம் அவள் கையில் பத்திரிக்கைக்கு பதில் அதற்கு மேல் இருந்த பேப்பர் வெயிட் இருக்க..

"ஓ.. மை காட்..." என்று அரண்டு போய் "ஐயம் சாரி.. வெரி சாரி.." என்றபடி கையில் இருந்த பேப்பர் வெயிட்டை வைக்க..

"பார்த்தியா?!? சச்சிதேவ் உன்னை காதலிக்கும் போதே உனக்கு அவர்களுடைய குணம் ஒட்டிக் கொள்ள ஆரம்பிச்சாச்சு... சொ... நீ இன்னும் உம் சொல்ல வேண்டியது தான் பாக்கி.." என்று மொழிந்தபடியே எழுந்து அவளிடம் நெருங்கி வந்தவன் "கையை நீட்டு" என்றான் அதிகாரமாய்.

'என்ன பண்ற பத்ரி?' என்பது மாதிரியான ஒரு பார்வை பார்த்தவள் மெல்ல அவன் புறம் கையை நீட்டினாள்.

தன் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகப்பு நிற கயிறை எடுத்தவன் நீட்டிய

கையின் மணிக்கட்டில் அதை இரண்டு சுற்றி சுற்ற ஆரம்பிக்க…

“என்னது இது?” என்றாள் கையையே யோசனையாக பார்த்தபடி.

“ம்ம்.. உன்னை மயக்கி என் வலையில் விழ வைக்க வீட்டில் இருந்து மந்திரித்து அனுப்பி வைத்த கயிறு” என்று அவள் கையில் அந்த கயிறை கட்டியபடியே சொல்ல…

“பத்ரி” என்று அலறியவள் வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டாள்.

“ம்ச்சு.. அலக்நந்தா.. என் மேல் நம்பிக்கை இல்லாமல் இந்த கயிறு மேல் நம்பிக்கை வைத்துக் கட்டுவேன் என்று நினைத்தாயா?” என்று சிரிந்தபடியே கேட்டவன்.. அவள் கையை பிடித்து அவன் முன்னால் நிறுத்தி விட்டு அவளை நேராக பார்த்தான்.

“ம்ம்.. ம்கூம்…” என்று எல்லாம் பக்கமும் தலையை ஆட்ட…

“அலக்நந்தா..” என்றான் உள்ளூர சிரிப்பு கொப்பளிக்க பத்ரி.

“வந்து.. என் பத்ரியா இருக்கும் வரை நீ அப்படி எல்லாம் செய்ய மாட்ட… ஆனா பத்ரி சச்சிதேவா இருக்கும் போது நீ எந்த எல்லைக்கும் போவாய் அதனால் தான் யோசிக்கிறேன்..” என்றாள் அவனை இமை கொட்டாமல் பார்த்தபடி.

“ம்ம்.. என்னை பத்தி எவ்வளவு அருமையா சொல்லிட்ட… ஆனா பத்ரி சச்சிதேவா இருந்தாலும் இந்த மாதிரி சீப் டிரிக்ஸ் செய்ய மாட்டேன்… பூமிக்கு அடியில் ஓடிக் கொண்டிருக்கும் நீரோட்டம் எந்த இடத்தில் பூமியை பிளந்து கொண்டு வெளிப்படுதோ அந்த இடத்தை நீரூற்று என்கிறோம்… அதே மாதிரி உன்னுள் ஓடிக்கொண்டு இருக்கும் காதலையும் வெளிப்படையாக நீ உணரும் நேரம் வரும்… அதுவரைக்கும் வெயிட் பண்றேன். சொன்ன வார்த்தை தவற மாட்டேன் மோனல்” என்றான் தெளிவாக பத்ரி.

“ஒருவேளை யாரு கண்ணிற்கும் தெரியாத சரஸ்வதி நதி மாதிரி மிஸ்டிக் ரிவராவே.. என் காதலையும் நான் உணராமலே இருந்து விட்டால்?"

என்றாள் அலக்நந்தா படபடப்பாக.

“ஓ.. அப்படி ஒன்னு இருக்கோ… காத்துக்கிட்டு இருப்பேன் என்பதற்காக தேவதாஸ் மாதிரி தாடி வளர்த்து கொண்டு மாமாங்கம் காத்துக் கொண்டு இருப்பேன்னு அர்த்தம் இல்லை.. இந்த செமஸ்டர் முடியும் வரைதான்..” என்று திட்டவட்டமாக கூறியவன்…

“அப்புறம்.. என்ன பண்ணுவ?” என்று அவள் அதிர்ந்து கூவ

“என்ன பண்ண… உன் காதல் வரும் போது வந்து தொலைக்கட்டுன்னு… என் வீட்டு பாரம்பரியப்படி உன்னை கடத்திட்டு போய் தாலியை கட்டுவேன்…” என்று சர்வ சாதாரணமாக பத்ரி சச்சிதேவாக மொழிந்தவன் அவள் கையில் இருந்த கயிறை கட்ட..

“இப்ப எதுக்கு இந்த கயிறை கட்டற?” என்றாள் அதிர்ச்சி சற்றும் மாறாது.

“ம்ம்.. என் வீட்டில் குல தெய்வம் காளி கோயிலுக்கு சென்று படைத்தாங்களாம்.. அந்த பிரசாதம் நேற்று வந்தது.. இதைக் கட்ட தான் கூப்பிட்டேன். ரொம்ப சக்தி வாய்த்த காளி… இதுவரைக்கும் என் வீட்டில் நடந்த எல்லா கல்யாணமும் அங்க தான் நடந்தது… நம் கல்யாணமும் அங்க தான் நடக்கும்!!!”

“பத்ரி..” என்று அழுத்தம் திருத்தமாக அழைக்க.

“ஓ.கே.. ஓ.கே..” என்றபடி அவளை விட்டு அகன்று சென்று கவுச்சில் அமர்ந்தவன்.. “பேப்பர் பிரண்டேஷன் எப்படி போயிட்டு இருக்கு..?" என்றான் பேச்சை மாற்றி.

“ம்ம்.. நல்லா போயிட்டு இருக்கு.. அடுத்த மாசம் அனேகமாக மூன்று நாள் பீல்டு டிரிப் (FIELD TRIP) இருக்கு என்று நினைக்கிறேன்” என்றாள் அலக்நந்தா யோசனையுடன்.

“உனக்கு என்ன பீல்டு டிரிப்?” என்றான் ஆச்சரியமாக.

“ரிசர்வ் பேங்க் காயின் எக்சிபிஷன் நடந்தப் போறதா சொல்லி இருக்காங்க..

அவங்க எங்க வைக்கிறாங்களோ அங்க எல்லோருமா போவதா ப்ளான்..” என்றாள் அலக்நந்தா.

“ஓ..” என்றவன் “உன்னை முறைத்துக் கொண்டே இருந்தானே அவனும் உன்னோடு வருவானா?" என்றான் பத்ரி முகத்தை சுளித்தப்படி.

“வருவான்னு நினைக்கிறேன்.. ஆனா நிச்சயமா தெரியலை” என்று பதிலளித்தவள்.. “ஆமாம் கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி நீ என்ன சொன்ன.. மோனலா? அது யார் மோனல்?” என்றாள் அலக்நந்தா.

“ஸ்ஸப்பா.. எவ்வளவு சீக்கிரமா கண்டு பிடித்து விட்டாய்??? உன்னை தான் மோனல்ன்னு கூப்பிட்டேன்டி என் அருமை மட சாம்பிராணி… நாம் சைக்கிளில் போகும் போது காட்டினேனே.. ஒரு பறவையை.. கழுத்து மட்டும் பலபலன்னு ஆரன்ஜ் கலரில் அழகான மோனல் பறவை.. முதல் நாள் நீ என்னுடன் காட்ஸ் விளையாட என் பக்கத்தில் உட்கார்ந்த பார்.. அப்பதான் முதல் முறையாக உன் நீண்ட கழுத்தையும்... அதில் தெரிந்த மச்சத்தையும் பார்த்தேன்..” என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்க..

அவளையும் அறியாது அவளின் கைகள் தானாக கழுத்தில் மச்சம் இருந்த இடத்தை துடைக்க..

“ஏய்.. அது மச்சம்… நீ இப்படி துடைச்சா போயிடுமா????” என்றான் அவளின் செய்கையை பார்த்து ரசித்தபடி.. “உன் கழுத்தையும்… அந்த மச்சத்தை பார்த்தப்போவே… உள்ளே ஏதோ தட்டிச்சு.. நான் தான் அதை என்னன்னு கவனிக்கவே இல்லை…”

“கவனித்து இருந்தா?!?”

“இப்படி லீவ்ங் டூ கெதரா இல்லாம... மிஸ்டர் அன்ட மிஸஸ் சச்சிதேவா இருந்திருப்போம்” என்றான் ஜேபர்தஸ்சாக.

“நீ இருப்பதற்கு மட்டும் வாடை கொடுத்து இந்த காலேஜை ஏமாற்றுகிறாய் பத்ரி.. நியாயப்படி உன் ஈகோவிற்கும் சேர்த்து வாடை கொடுக்கனும்… ஏன்னா.. உன்னை விட அது தான் இங்க ரூம் முழுவதும் நிறைந்து இருக்கு..” என்று அவள் சிலாகித்து சொல்லிக்கொண்டு இருக்கும் போதே…

சித் கதைவை திறந்துக் கொண்டு போனில் பேசியபடியே வந்து ஃப்ரிட்ஜில் இருந்து கோக் கேன் எடுத்துக் கொண்டு திரும்பவும் தன் ரூமிற்கு போவது தெரிய.. “சித்திற்கு அண்ணா என்றால் பயமா?” என்றாள் சித் ரூமை பார்த்தபடி.

“பயம் எல்லாம் இல்லை.. அவன் அண்ணன் மேல பயங்கர மரியாதை..”

“எப்படி தெரியும்?” என்றாள் நம்பாத குரலில்.

“இதையே தான் என் வீட்டிலும் கார்த்திக்கிடம் பார்க்கிறேன்.. ஆர்யா கிழித்த கோட்டை தாண்ட மாட்டான்” என்று சொன்னான் திட்டவட்டமாக பத்ரி.

பெருமூச்சு ஒன்றை விட்டவள் “நான் யாரை பார்த்தும் பொறாமைபட்டது இல்லை… ஏன் இப்படி இருக்கனும் அப்படி இருக்கனும் என்று ஆசை கூட பட்டது இல்லை.. பட் உன்னையும்.. சித்தையும் பார்க்கும் போது.. நினைத்ததை பேச கூடிய அக்காவும்… நான் பேசாமலே என் உணர்வுகளை புரிந்துக் கொள்ள கூடிய அப்பா அம்மாவும் இருந்திருந்திருந்தால் என் லைப் எப்படி இருந்திருக்கும் என்று நினைக்க தோன்றுகிறது” என்றாள் வருத்தமான முறுவலுடன்.

“இப்படி வந்து என் பக்கத்தில் வந்து உட்கார் மோனல்” என்றான் அவன் பக்கத்தில் கையை காட்டி.

அவன் திடுதிப்பென்று இப்படி சொல்லவும் ஒன்றும் புரியாது “ஏன்?” என்றாள் அலக்நந்தா.

“நீ உட்கார்ந்திருக்கும் சீட்டில் நான் வந்து உட்கார்ந்தா உன் மடியில் தான் உட்காரனும்… இங்க இடம் நிறையா இருக்கு… என்ன சொல்லற?" என்றபடி அவன் எழ..

வேகமாக எழுந்து அவன் கவுச்சில் மறுமூளையில் அமர்ந்தாள்.

தன் ஒரு முழங்காலை எடுத்து கவுச்சில் வைத்து வசதியாக அமர்ந்து

இவள் புறம் திரும்பியவன் “அபிமன்யூ யாருன்னு தெரியுமா?” என்றான் சம்மந்தா சம்பந்தம் இல்லாமல்.

“நீ எந்த அபிமன்யூவை கேட்கற??” என்று திருப்பி கேட்டாள் அலக்நந்தா.

“மகாபாரதத்தில் வரும் அபிமன்யூ…”

“தெரியாமல் இருக்குமா?? வில்லுக்கு விஜயனான அர்ஜுனனின் மகன்.. அவன் பெரியப்பாக்களில் ஒருத்தன் உலகம் போற்றும் உத்தமனான தர்மன்… அடுத்தவன் இந்திரனுக்கு இணையான உடல் வலிமை கொண்டு கதா யுத்ததில் வல்லவனான பீமன்.. இவர்கள் எல்லாரையும் விட மாய கண்ணனையே தாய்மாமனாக பெற்றவனாக இருந்தும்…

"கௌரவ ஜாம்பவான்கள் அவனை சூழ்ந்து நிற்க.. சரிசமமாய் நின்று போர் புரிய தேர் இல்லாது.. கம்பீரமாய் போர் தொடுக்க கையில் வில் இல்லாது… தன்னந்தனி ஆளாய்… யாரும் அற்ற அனாதையாய் சக்கரவியூகத்தில் மாட்டிக் கொண்டவனை காப்பாற்ற யாரும் வராமல் போர்க்களத்தில்.. தனி ஆளாக மாண்டான்.” என்று அவள் மூச்சு விடாமல் அடுக்கிக்கொண்டே போனாள் அலக்நந்தா..

“வாவ்!!! இந்த அளவு அபிமன்யூவை பற்றி தெரிந்து வைத்து இருப்பாய் என்று நினைக்க வில்லை… என் வேலையை ரொம்பவே சுலமாகி விட்டாய் மோனல்…” என்று அவளை மெச்சியவன்..

“தனக்கான களம் இதுதான்… தான் போராட வேண்டிய இடமும் இதுதான்… தன் பிறந்ததே இதுக்காக தான் என்று இங்க தோன்றும்” என்றப்படி அவன் இதயத்தை காட்டியவன்… “அப்ப நீ சொன்னியே இந்த தேர்…. வில் எல்லாம் ஒரு பெரிய விஷயமா படாது.. அதை விட நம்மை காபாற்ற வானத்தில் இருந்து அப்பாவோ… பெரியப்பாவோ… மாமாவோ குதிப்பாங்க என்ற நினைவு கூட வராது…. இது அபிமன்யூவிற்கு மட்டும் இல்லை மோனல்.. வாழ்க்கையில் ஒவ்வொரு மனிஷனுக்கும் ஒரு இடம் வரும்… தான் மட்டுமே தனியாக நின்று களத்தில் போராட வேண்டிய இடம்.. அது தொழில் முறையாக இருக்காலம்… தனிப்பட்ட வாழ்க்கையாக இருக்கலாம்… தான் போராட வேண்டிய களம் இதுதான் என்று உணர்ந்த பிறகு… போராடுவது தான் முக்கியமாக தோன்றுமே தவிர வெற்றி, தோல்வி

பற்றிய எண்ணமே அங்கே வராது…" என்று பத்ரியாக பேசி முடித்தான்.

அவன் சொன்ன வியத்திற்கு பதில் சொல்ல முடியாமல் விக்கித்து போய் அவனையே கண் இமைக்காமல் பார்த்தாள் அலக்நந்தா.

அந்த பார்வையிலேயே அவளின் எண்ண அலைகளை உணர்ந்தவன்.. "உன்னால் நான் சொன்னதை புரிந்துக்கொள்ள முடியவில்லைன்னு நீ பார்க்கும் பார்வையிலேயே தெரியுது… ஏன்னா அந்த சூழ்நிலைக்கு நீ இன்னும் தள்ள படலை.. உனக்கும் அப்படி ஒரு நாள் வரும் போது நான் இப்ப சொன்ன அர்த்தம்.. அபிமன்யூவின் மனநிலையும் தன்னால் புரியும்…" என்றான் நம்பிக்கையுடன்..

"இப்படி எல்லாம் நீ பேசுவன்னு எதிர்பார்க்கவில்லை பத்ரி…" என்றாள் லேசாக கலங்கிய கண்களோடு அலக்நந்தா.

"நானும் அபிமன்யூ பற்றி படித்த போது உன்னை விட அதிகமாவே அம்மாவிடம் வாக்கு வாதம் செய்தேன். ஆனா அம்மா நான் சொன்னதையே சொல்லி உனக்கே புரியுன்னு சொன்னாங்க…. அண்ணா மும்பைக்கு போக… தாத்தா ஒய்வு எடுத்துக்கொள்ளும் நேரமும் நெருங்க.. இருபத்தியோரு வயதில் யாரும் சொல்லாமலே எனக்கு தெரியும்.. எனக்கான களம் யு.எஸ் போய் எம்.பி.ஏ படிப்பது இல்லை.. என் தொழில் தான். நான் நின்று ஆட வேண்டிய களமும் அதுதான் என்று புரிந்தது.. முதலில் வீட்டில் எல்லோரும் மறுத்தாங்க.. அப்புறம் புரிந்துக்கொண்டாங்க…"

லேசாக தலையை ஆட்டியவள் "உன் அம்மா ரீயலி கிரேட்…" என்றாள் புன்னகையோடு.

"ம்ம்.. அம்மா ரொம்ப அமைதி… அவர்களின் பேச்சில் மட்டும் அல்ல… எந்த ஒரு விஷயத்தையும் அனுகும் முறையில் ஒரு தீர்கமும் தெளிவு இருக்கும்.. அவர்கள் கோவப்பட்டு திட்டும் ஒரே ஆள் ஷங்கி தான்… நீ வீட்டிற்கு வந்த பிறகு உனக்கும் நிறைய சொல்லி கொடுப்பாங்க… அவங்க பக்கத்தில் இருந்தா எவ்வளவு பெரிய பிரச்சனை வந்தாலும் சமாளித்து விடலாம் என்ற தைரியமும்.. அதை விட வார்த்தைகளால் விவரிக்க முடியாத பேரமைதியும் கிடைக்கும்.. அதே உணர்வு தான் நீ என் பக்கத்தில்

இருந்தாலும் வரும்… கடலின் ஆழத்தில் நீச்சலடிக்கிற ஒரு பேரமைதி…” என்றான் நிதானமாக பத்ரி.

இதை விட தன் காதலை ஒருத்தனால் அழகாக சொல்ல முடியுமா? என்று அவள் நினைத்துக் கொண்டு இருக்கும் வேளையில் தான் புது வருடம் வந்தது.. அதன் கூடவே பிரச்சனைகளும் அணி வகுத்து வந்தன…

இன்று.....

அதற்கு மேல் தாங்க முடியாது குமுறி.. குமுறி.. அழுதாள் அலக்நந்தா.

க்ளிசரின் இல்லாது… அருவியாய் இப்படி அழுவது எல்லாம் அவளுடைய பெற்றோருக்கு புதுசு. அதுவும்… அலக்நந்தாவை இப்படி எல்லாம் பார்த்தது இல்லை.

அன்று அவள் போன் செய்து பயமா இருக்கு வாங்க என்று அழைத்த போதும் இப்படி அழவில்லை… என்பதால் பெற்ற மகள் அழுவதை பார்த்து என்ன செய்வது என்று தெரியாது விழித்தனர் பெற்றோர்!!!

நிகாரிக்கா கேட்டது வேண்டும் என்று அழுது அடம் பிடிக்கும் ரகம் என்றால் அலக்நந்தாவோ கொடுத்ததை வாங்கிக்கொள்ளும் ரகம்.. அப்படி பட்ட மகள் எத்தனை தூரம் மாறி இருக்கிறாள் என்று மெல்ல புரிய தொடங்கிய தருணம் அதுதான். இந்த அதிர்ச்சியையே தாங்க முடியாது தினறிக்கொண்டு இருக்க.. அதிர்ச்சிக்கு எல்லாம் அதிர்ச்சியாய் அமைந்தது அலக்நந்தாவின் பேச்சு!!!!

அங்கே நிலவும் சூழ் நிலையையும்.. அலக்நந்தாவின் உணர்வையும் புரிந்து கொண்ட ஒரே ஜீவன் நிகாரிக்காவாக இருக்க… அதற்கு மேலும் பொம்மையாக அவர்களின் பெற்றோர் நிற்பதை போல் பொம்மையாக தானும் நிற்கப் பிடிக்காது வாழ்க்கையில் முதன் முறையாக அக்காவாக துக்கத்தில் துவண்டு போய் இருந்தவளை தோளோடு அணைத்தாள்.

இவள் இப்படி அழுவதற்கு காரணம் இவர்கள் இங்கே வந்ததால் தானே

என்று பெற்றவர்கள் மேல் ஆத்திரம் பொங்க “ஒரு குழந்தையின் அம்மாவா அவ்வளவு தத்ரூபமா நடித்து நேஷனல் அவார்ட் வாங்கின நீ எப்படிம்மா உன் பெண் படும் கஷ்டத்தை உணர முடியாது இப்படி ஜடமா நிக்கற?” என்று வெடித்து சிதறினாள் நிகாரிக்கா.

“அந்த படத்தில் நடித்துக் கொண்டு இருக்கும் போதுதான் இவள் போன் பண்ணி வர சொன்னாள்.. நான் எப்படி வர முடியும்?? அதில் இருந்து ஆரம்பித்தது தான் எல்லா பிரச்சனையும்..” என்றாள் அவளின் அம்மா தான் அன்று நடந்துக் கொண்ட விதத்திற்கு விளக்கும் விதமாக.

அத்தனை நேரம் அழுது கரைந்து கொண்டு இருந்தவள்.. வேகமாக தலையை நிமிர்த்தி தன் உயரத்திற்கு நிமிர்ந்து நின்றாள். வீங்கிய கண்ணும், கன்னத்தில் வழிந்தோடிய செந்நீருமாக முகம் வாடி போய் இருந்தாலும் அதில் முதல் முறையாக கோபம் மின்னியது...

“நீங்க இல்லாவிட்டாலும் அந்த படத்தில் நடிக்க நூறு அம்மா வருவார்கள்.. ஆனா நான் அம்மான்னு கூப்பிட உன்னைத் தவிர எனக்கு வேற யார் இருக்கா?? என்ன மாதிரி சூழ்நிலையில் இருந்து கூப்பிட்டேன்னு தெரியுமா மா??... பதினாறு வயசு ஆகாத நிலையில் என்னை ஹீரோயினா அறிமுகப்படுத்தும் முதல் படம்... ஷூட்டிங் ஸ்பாட்டில் வாந்தி எடுத்து.. மயங்கி விழுந்த என்னை ஹாஸ்பிடலில் சேர்த்த உங்க டைரக்டர் ப்ரெண்ட் முதலில் என்ன டெஸ்ட் எடுக்க சொன்னாரு தெரியுமா? ப்ரெக்னன்சி டெஸ்ட்...”

“அதுவரை குழந்தை நட்சத்திரமாய் தேவதையாய் பார்த்த என்னை... சூழ இருந்தவர்களை பார்த்தார்களே ஒரு பார்வை... வாழ்க்கையில் முதல் முறையாக.. எல்லோரும்... என்னைப் பார்க்கும் விதம் கண்டு கூனி குறுகிப் போனேன் பா... யார் கண்ணிலும் படாமல் ஒதுங்கி போகனுன்னு நினைத்தது அப்ப தான் பா.. எப்பயும் இரண்டு பாடி காடோட யாரோடும் சேர்ந்து பழக விடாது நிதர்சனத்தோட நாலு அடி தள்ளி வளர்த்த என்னை வாழ்க்கையின் உண்மை சுட்டது... எவ்வளவு கேவலமான பப்ளிசிட்டியும் படத்திற்கு நல்லதுன்னு நான் வாந்தி எடுத்ததில் ஆரம்பித்து என்னை ஹாஸ்பிடலில் சேர்த்த வரைக்கும் பேப்பரில் கொடுத்து என்னை ஊரே கை கொட்டி சிரிக்க வைத்த உங்க ப்ரெண்டு டைரக்டரை ஏன்னு ஒரு வார்த்தை கேட்டீங்களா பா?? ம்கூம்.. நீங்க எப்படி கேட்டு இருப்பீங்க.. அந்த நிலையில்

நீங்க இருந்தாலும் அப்படித் தானே செய்து இருப்பீங்க???."

"அதுவரைக்கும் காலையில் வரும் வாந்திக்கும் வயிற்று வலிக்கும் காரணம் அல்சருன்னு எனக்கே தெரியாது... நான் உங்க எல்லோரையும் போன் பண்ணி கூப்பிட்டப்போ.. எனக்கு என்டோ ஸ்கோபி.. டெஸ்ட்.. எடுக்க ஏற்பாடாகி இருந்தது.. என்டோ ஸ்கோபின்னா என்னன்னு தெரியுமா மா?!?

"வாய் வழியா கேமரா இருக்கும் டியூபை விட்டு வயிற்றுக்குள்ள எந்தளவு அல்சர் தீவிரமா இருக்குன்னு பார்ப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது... இப்ப நினைக்கும் போது ஒன்றும் பெரிதாக தோன்றவில்லை மா... ஆனா அப்ப ஹாஸ்பிடலில் இரண்டு நாள் இரவும் பகலும் தனியா இருந்து பயந்து போய் கூப்பிட்டா... உங்களுக்கு அம்மாவா நடிக்க வாய்ப்பு கிடைத்துன்னு நிஜமான அம்மாவா இருக்க வேண்டிய வாய்ப்பை தவற விட்டுட்டீங்க... என்னால் உங்களுக்கு நேஷனல் அவார்ட் வாங்கி தர முடியாமல் இருக்கலாம்.. ஆனால் உங்களுக்கு உங்க பொண்ணு கிடைத்து இருப்பாளே.. அது உங்களுக்கு நேஷ்னல் அவார்டை விட பெரிசா தெரியலையா மா?!?"
"அப்பாவிற்கு ப்ரொடக்ஷன் வேலை... ஏன் பா.. நீங்க பறந்து வந்து பார்த்து விட்டு போக எத்தனை கோடி நஷ்டம் ஆகி இருக்கும்.. ஐந்து கோடி? இல்ல பத்து கோடி...? எத்தனை நஷ்டம் ஆகுன்னு கோடியில் கணக்கு பார்த்த நீங்க.. உங்க பொண்ணையே இழந்தது உங்கள் கண்ணுக்கு நஷ்டமாவே தெரியலையே பா... ?!?

"அப்புறம் அக்கா... சின்ன வயதில் இருந்தே என் மேல் பொறாமை. அதனால் தான் அப்படி பண்ணினால் என்று இப்போ புரியுது... ஆனா அப்போ... நான் செத்தால் சந்தோஷப்படக் கூடிய முதல் ஆள் நீயாதான் இருப்பேன்னு நினைத்தேன் கா.." என்றாள் விரத்தியாக சிரித்தபடி.

"நந்தூ.. சாரி சொல்லி என் முட்டாள் தனமான தவறில் இருந்து நான் தப்பிக்க முடியாதுன்னு புரியுது...." என்று நிகாரிக்கா கண்கள் கலங்கியபடி பேச...

"வேண்டாம் கா.. பத்ரியோட பாட்டி ஒரு கேள்வி கேட்டாங்க.... நீ மன்னிக்க தயாரில்லாத போது உனக்கு மன்னிப்பு கேட்க என்ன உரிமை இருக்குன்னு கேட்டாங்க.. அது ரொம்ப சரி.. எட்டு வருஷம் உங்க மேல் கோபத்தில் பேசாமல் ஒதுங்கிப் போனது ரொம்ப தப்பு.. சொல்லி புரிய முயற்ச்சி செய்து

இருக்கனும்… அந்த சூழ் நிலையில் எனக்கு ஓடி ஒளிய மட்டும் தான் தோன்றியது… அப்ப ஆரபித்தது… இலக்கே இல்லாமல்.. எதுக்கா ஓடறேன்னு தெரியாமல்… எட்டு வருஷமா நிறுத்தாமல் ஓடிக்கொண்டே இருக்கேன் பா…..”

அவள் பேசியதை எல்லாம் கேட்டு.. அதிர்ச்சியின் உச்சத்தில் எந்த பதிலும் சொல்ல முடியாது வாய் அடைத்து நின்றவர்களை பார்த்த அலக்நந்தா…

“நான் இவ்வளவு சொல்லியும் உங்களால் புரிந்து கொள்ள முடியாதுன்னு தெரியும்… நான் பத்ரி இல்லமா… இங்க உணர்வதை எல்லாம்..” என்றப்படி தன் இதயத்தை காட்டி “என்னால் வார்த்தை வடிவம் கொடுத்து பேச…. முடியாது மா.. இருந்தாலும் ஒன்னே ஒன்னு மட்டும் சொல்லிடறேன்.. நீங்க நடிக்காமல் இருந்தால் எப்படி மா உணர்விங்க?” என்றாள் அலக்நந்தா..

அவள் பேசுவதை எல்லாம் ஒரு வித திகுலுடனே கேட்டுக்கொண்டு இருந்த மயூரி “சுவாச குழாயை யாரோ அழுதற மாதிரி..” என்றார் தடுமாற்றமாய்.

“என்னை நீங்க நடிக்க சொன்னா.. நானும் அப்படி தான் மா உணரேன். கலை பார்ப்பவர்களுக்கும்.. அதை செய்பவர்களுக்கும் மனநிறைவையும்… ஆனந்தத்தையும் கொடுக்கனும்.. எனக்கு எந்த விதத்திலும் ஆனந்தத்தை விடுங்க நிம்மதியை கொடுக்கலைம்மா.. பெற்றவர்கள் எல்லாம் அப்பா அம்மாவாகிட முடியாதுன்னு இப்ப தான் மா புரியுது.. அதே மாதிரி மல்ஹோத்ராவா பிறந்தும் நடிக்க பிடிக்க போகலாம் என்பதையும் நீங்க புரிந்துக்கொள்ளுங்கமா” என்று அலக்நந்தா கூறிக்கொண்டு இருக்கு போது தான்…

முதல் முறையாக அன்று பத்ரி அபிமன்யூவை பற்றி சொன்னது நினைவிற்கு வந்தது…

அத்தியாயம் - 22

இரண்டு மாதத்திற்கு முன்பு…

நியூ இயர் கொண்டாட்டதிற்கு மூன்றே வாரம் இருந்த நிலையில் சித் ஊருக்கு சென்ற அன்று மாலை பத்ரியிடம் தன் பேப்பர் ப்ரசன்டேஷன்

அடுத்த மாதம் நடக்க விருக்கும் செமினாருக்கு தேர்வாகி இருப்பதாக உற்சாகமாக சொல்லிக்கொண்டு இருக்கும் போதே…. சுதிரும் அவனுடைய சகாக்களும் புடைசூழ ரூமிற்குள் படை எடுக்க… அத்தனை நேரம் பத்ரியுடன் பேசிக்கொண்டு இருந்தவள் பத்தடி பின் நகர்ந்தாள் அலக்நந்தா.

நியூ இயர் கொண்டாட்டம் என்றவுடன் லைவ் மியூசிக், டான்ஸ் என்பது மாதிரியாக தான் இருக்கும் என்று நினைத்தவளுக்கு அங்கே நியூ இயர் கொண்டாட்டம் என்பது நேஷனல் ஜியோகிராபி சேனலில் வரும் “மெகா கிட்சன்” மாதிரி நூற்றுக்கணக்கில் இல்லாமல் ஆயிரக் கணக்கில் சாப்பாட்டிற்கு மெனு தயாரிப்பதில் ஆரம்பித்து… என்ன கலரில் பேப்பர் ப்ளேட் இருக்க வேண்டும் என்பது வரை ஒரு மெகா செலிபரேஷனுக்கான தயாரிப்பு என்று அவர்களின் பேச்சில் புரியவர மலைப்பாக இருந்தது.

இதை விட அவள் மெய் சிலிர்த்த விஷயம்… இத்தனை வேலையையும் பத்ரி எந்த பதட்டமும் இல்லாமல் மிக இயல்பாய் கையாண்டான். இத்தனை நாள் அவனை விளையாட்டு தனமாக, எரிச்சலாக, கோபமாக, பாசமாக என்று பல்வேறு நிறங்களில் பார்த்திருக்கிறாள்.. ஆனால் முதல்முறையாக ஒரு கைதேர்ந்த பிசினஸ் மேனாக காண அவன் மேல் இருந்த மதிப்பும் மரியாதையும் பல்கிப் பெருகியது.

அடுத்து வந்த ஒரு வாரமும் பத்ரியின் கிளாஸ், உயிரையே உறைய வைக்கும் டிசம்பர் மாத குளிரையும் பொருட்படுத்தாது தினமும் ஸ்விமிங்.. மற்றும் விழாவுக்கான ஏற்பாட்டிற்கு எந்த மாதிரியான பாடல்கள், யார் டான்ஸ் செய்வது.. எத்தனை நொடி… இடைவேளை.. தொகுப்பாளர் இந்த இடத்தில் என்ன பேச வேண்டும்.. என்பது மாதிரியான மிக நுணுக்கமான விஷயங்களை கூட அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல் பட… நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறத்தது.

சித் ஊர் திரும்பியவுடன் இந்த பரபரப்பு சற்றே குறையும் என்று எதிர்பார்த்தவளுக்கு சித் வந்தும் பத்ரி எல்லா வேலைக்கும் அவனுக்கு தோள் கொடுக்க இன்னும் அதிகமானது தான் மிச்சம்.

நியூ இயருக்கான நாள் நெருங்க.. ரூமில் திருவிழா கூட்டம் போல் ஆட்கள் எந்த நேரமும் அலை மோத பத்ரி மற்றும் சித்தை காண்பதே காலையில்

டிபன் சாப்பிடும் வேளையாக மட்டுமே இருக்க எப்படா இந்த விழா முடியும் என்றே ஏங்க தொடங்கினாள் அலக்நந்தா.

அன்று காலை எந்த க்ளாசும் இல்லாததால் பொறுமையாக எழுந்து அமைதியாக கீரின் டீ குடித்துக் கொண்டு இருக்கையில் தான் வெளியில் இருந்து ரூமிற்குள் வந்த பத்ரியை கண்டவள்...

“குட் மார்னிங்” என்றாள் புன்னகை மலர.

ஆனால் அவனோ சிவந்த கண்களுடன்.. விரைத்த தோளுமாய் எதுவும் சொல்லாமல் தாடை இறுக.. அமைதியாக அவள் அமர்ந்திருந்த இடத்திற்கு வெகு அருகில் வர ‘என்னாச்சு?’ என்று சற்றே பின்னுக்கு சரிந்து யோசனையுடன் பார்க்க..

அவனோ.. வேகமாக அவள் கையில் இருந்த ஆவி பறக்கும் கீரின் டீ மக்கை லபக் என்று பிடுங்கியவன்... கொதிக்க கொதிக்க இருந்த டீயை அப்படியே குடிக்க தொடங்கினான்..

“ஏய்... பத்ரி... அது நான் குடித்தது... வேணுன்னா வேற தரேன்” என்று அவள் சொன்னதை காதிலே வாங்காது.. எல்லாத்தையும் குடித்து விட்டுதான் மக்கை கீழே வைத்தான்.

அப்பொழுது தான் ஏன் அப்படி குடிக்கிறான் என்பதை அவனின் ஈரமான தலை முடியே காட்டிக் கொடுக்க.. அவனை ஆத்திரத்துடன் முறைத்தப்படி வேகமாக ரூம் ஹிட்டரை ஆன் செய்தவள்.. அதே வேக நகையுடன் அவன் அருகில் வந்து.. “அப்படியே எனக்கு வர ஆத்திரத்துக்கு...” என்று ஏதோ திட்ட வந்தவள்... திட்ட வார்த்தைகள் கிடைக்காது... ஆவேசமாக “வெளியே ஏழு டிகிரி குளிரும் போது உன்னால் எப்படி பத்ரி ஸ்விமிங் பண்ண முடியுது??” என்று கடுங்கோபத்தோடு திட்ட வந்தவள் கேள்வியாய் முடித்தாள்..

சூடான டீயும்... ரூம் ஹிட்டரும் அவனை குளிரில் இருந்து மீட்டதை விட அவள் கோபத்தில் ஜொலித்த அக்கறை அவனை வெகுவாக மீட்க.. திட்ட தெரியாது அவள் தடுமாறிய விதத்தை கண்டவனுக்கு உரைந்திருந்த உதட்டில் லேசாக புன்னகை தோன்ற...

“ஏன்னா இரவு ஸ்விம் பண்ணா இதை விட ரொம்ப குளிரும்” என்றான் ஏதோ பெரிய அறிவார்த்தமான பதிலை சொல்லி விட்டது போல பெருமிதமாக.

“வாட்???” என்று அவள் வாய் கேட்டாலும் அவளின் கண்ணாடி அணிந்த கண்களோ ‘நீ என்ன லூஸா??’ என்ற கேள்வியை கேட்டது.

அதை கண்டு கொண்டவன் உல்லாசமான சிரிப்பை வெளியே விட “ஐ லவ் யூ” என்றான் கண்கள் பளபளக்க.

“பத்ரி… நான் என்ன கேட்கிறேன் நீ என்ன பதில் சொல்ற??” என்றாள் கோபம் சற்றும் தனியாமல்.

அத்தனை நேரம் இருந்த சிரிப்பு மறைய…“மோனல்.. நிஜமா சொல்லி தான் ஆகனுமா?” என்றான் பத்ரி சற்றே தயக்கமாக.

தன் காதலை சொல்ல கூட தயங்காதவன் இப்போ தயங்குவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தவள்..

“ம்ம்… ஏன் என்னாச்சு…??” என்றாள் படபடப்பாக.

“தூக்கம் வரலை” என்றான் அவள் முகத்தை பார்த்தபடி.

“வாட்…. தூக்கம் வரலையா? உங்க ப்ரெண்ட்ஸ் எல்லோருமா சேர்ந்து நம் ரூமை விட்டு போகவே தினமும் இரண்டு மணி ஆகுது…. அதுக்கு அப்புறம் கூட தூக்கம் வரலைன்னா வாட் யூ மீன் மை தட்?” என்றாள்.

“ம்ச்ச” என்றபடி எதுவும் சொல்லாமல் தோளை குலுக்கிய பத்ரி.. வேகமாக பார்வையை திரும்பினான்.

இத்தனை நேரம் முகத்தை பார்த்து பேசிக்கொண்டு இருந்தவன் சட்டென்று பார்வை திருப்பி விதத்திலேயே தூக்கமின்மைக்கான காரணம் அவனுக்கு தெரியும் என்பதை விளக்க..

தான் என்ன செய்கிறோம் என்பதையே உணராமல் அவனுடைய முகவாயை பற்றி அவள் புறம் திருப்பி “இதுக்கும் எனக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு இல்லை? என்ன விஷயம் பத்ரி?” என்று வருத்தமாக கேட்டாள்.

மெல்ல புன்னகைத்தபடி அவளுடைய மூக்கில் இறங்கி இருந்த கண்ணாடியை ஏற்றி விட்டவன்… “நான் ஏன் உனக்காக வெயிட் பண்றேன்னு சொன்னேன் தெரியுமா அலக்நந்தா?” என்றான் அமைதியாக.

“ம்ம்… நான் என்னை உணரும் வரைன்னு சொன்னிங்க…” என்றாள் அமர்த்தலாக.

“இல்லை… உன்னை உணர நீ என்ன ஞானியா?? என் மேல் உள்ள காதலை உணரும் வரைன்னு சொன்னேன்…” என்று அவள் மூக்கை ஒரு விரலால் லேசகா தட்டியவன்…

“ஒருத்தர் வருத்தப்பட்டாலும் சரி… சந்தோஷப்பட்டாலும் சரி.. அந்த உணர்வு எல்லோருக்கும் ஒரே மாதிரி தான் இருக்கும்!!! ஆனா காதலில் மட்டும் எல்லோரும்.. ஒரே மாதிரி காதலை உணர்வதில்லை… ஒருத்தருக்கு ப்ளைட்டில் இருந்து கீழே குதிப்பது போல் திரிலா இருந்தா.. இன்னும் ஒருத்தருக்கு தண்ணிக்குள்ள டைவ் அடிக்கிற ஒரு பேரமைதி கிடைக்கும்… சிலருக்கு உள்ளுக்குள்ளே பிரளயமே வரும்… இதில் என்ன ஹைலைட் தெரியுமா… இந்த காதல் உணர்வு எல்லாத்தையுமே உன்னால் உணர முடியும்.. அதை எந்த காரணத்திற்காகவும் நீ மிஸ் செய்து விட கூடாதுன்னு நான் விரும்பறேன்… அது என்னால் மட்டும் தான் உனக்கு கிடைக்கனுன்னு.. நான் ஆசைப்படறேன் அலக்நந்தா… அதனால் தான் அப்படி சொன்னேன்.. இது முதல் காரணம்…” என்று நிறுத்தியவன்.

“இரண்டாவது காரணம்.. ரொம்ப ப்ராக்டிகல்..” என்றபடி பெருமூச்சு விட்டவன் “உனக்கே தெரியும் என் வீட்டில் யாருமே நார்மல் இல்லை.. பெரும்பாலும் அவர்கள் வில்லங்கமாக எதுவும் செய்ய மாட்டார்கள் என்றாலும்.. எல்லா சமயத்திலும் அவர்கள் செய்வதை ரசிக்க முடியாது… சில சமயத்தில் அவர்கள் செய்வது பயங்கர கோபம் வரும்… கட்டாயம் வரத்தான் செய்யும்.. அது இயற்கை.. அந்த மாதிரி சமயத்தில்… கோபத்தை அடக்கிக் கொண்டு பொருத்து போவதற்கும் தேவை என்ன தெரியுமா?" என்று அவளை இமைக்காது பார்த்து கேட்டான்.

இவன் எவ்வளவு தூரம் யோசிக்கிறான் என்று மலைத்து போனவள்… “பொறுமை?!?” என்றாள் .

“ம்கூம்… அந்த பொறுமை கொடுப்பதே என் மேல் உள்ள காதலாதான் இருக்கும் அலக்நந்தா. என் அண்ணன் ஸ்தானத்தில் இருந்து குடும்ப பொறுப்பு முழுவதையும் பார்த்துக் கொள்பவன் நான்… வீட்டில் எனக்கான பொறுப்பு ரொம்ப அதிகம்.. என்னில் பாதியாக ஆகப் போகும் உனக்கும்… அதே பொறுப்பு இருக்கும்… சௌவிக்கும்.. நிரல்யாவிற்கும் அங்கே எல்லோரையும் சின்ன வயது முதல் தெரியும்… அதனால் அவர்களால் எளிதாக பொருந்திக் கொள்ள முடிந்தது… ஆனால்… உனக்கு எல்லாமே புதுசா இருக்கும்.. அவர்களின் அன்பு உள்பட…” என்று விளக்கமாக மொழிந்தவன்.

“கோபத்தில் என் வீட்டு ஆட்களை எதாவது பேசிவிட்டால் நான் ரொம்ப வருத்தப்படுவேன் என்று எந்த இடத்திலும் தன்னை முதன்மை படுத்தாது மற்றவருக்காக நினைக்க வைக்கும் மந்திர கயிறு தான் காதல்!! கண்ணுக்கு தெரியாத இந்த காதல் தான் உன்னையும்… என்னையும் மட்டும் இல்லை அலக்நந்தா நம் வீட்டையும் காக்கும் கவசமாக இருக்கும்!!!” என்று தீர்க்கமாக மொழிந்தான்.!”.

அவன் சொன்ன விஷயமும்.. அதை எளிதாக தெரிவித்த விதமும் அவளை திக்கு முக்காட செய்ய…. பூரிப்பாக உணவந்தவள் “சரி… இப்ப அதுக்கும் நீங்க தூங்காததிற்கும் என்ன சம்பந்தம்?” என்றாள் புரியாது.

“இதுதான் பிரச்சனையே…” என்று மெல்ல கண்களை இருக்கி மூடி திறந்தவன்.. “உன்னை இவ்வளவு பக்கத்தில்… நெஞ்சு முட்ட ஆசை வைத்துக் கொண்டு அதை வெளியே காட்டாமல் உன்னைப் பார்த்து இரண்டு இன்ச் ஸ்மைல் பண்ணிவிட்டு.. இரவில் படுக்கும் போது எனக்கும் உனக்குமான இடைவேளை இரண்டு அடி சுவர் தான் என்னும் போது… கடமை கண்ணியம் எல்லாம் வாயால் சொல்வது ரொம்ப சுலபம் அலக்நந்தா.. ஆனா கடைபிடிக்கிறது ரொம்ப ரொம்ப கஷ்டம்… எத்தனை நாள் என்னால் அப்படி இருக்க முடியும்ன்னு தெரியலை மோனல்!!..” என்றான் ஒரு மாதிரி குரலில்.

அவன் சொன்ன காரணத்தை கேட்டு திடுக்கிட்டவள்… இதுக்கு என்ன மாதிரி பதில் சொல்வது என்று தெரியாது…

“பத்ரி!?!” என்றாள் அரண்டு போய்.

“என்ன பதில் சொல்லறதுன்னு உனக்கு எப்படி தெரியலையோ… அதே மாதிரி தான் என்ன பண்றதுன்னு எனக்கும் தெரியலை மோனல்… இரண்டும் மாசம் ஏன்டா டைம் கொடுத்தேன்னு நானே என்னை தினமும் கேட்கும் கேள்வி இது.. முடிந்த வரை என்னுடன் இரண்டு அடி தள்ளியே நில்லு அது தான் உனக்கு சே:ப்” என்று சொல்லியவன் அதற்கு நேர் மாறாக… முகவாயிலிருந்த அவளின் நீண்ட விரல்களை லேசாக கீழே குனிந்து அவனின் அழுத்தமான உதட்டை பதித்தவன்… அப்படியே அவளின் கையைப் பற்றி அவனின் சேவ் செய்யப்படாத கன்னத்தில் அழுத்தி அதை கண் மூடி ரசித்தான்!!!

முதல்முறையாக அவனின் முத்தத்தை உணர்ந்தவளின் இதயம் விம்பி வெடிக்க… அவளை மேலும் குழப்பி படபடக்க வைத்தது ஒரு வித பரவச நிலைக்கே ஆழ்த்தியது… அவனின் ஒருநாள் முள் தாடி.

ஆற்று மனலை கையில் தேய்க்கும் போதும் உண்டாகும் நெருடல் கலந்த ஆனந்தத்தை… அவனின் தாடி அவள் உள்ளங்கையில் தோற்று விக்க… அவளையும் அறியாது அவன் கன்னத்தை மேலும் அழுத்தினாள் அலக்நந்தா. ஆற்று மனலாய் இருந்த அவனின் முள் தாடியை ஸ்பரித்தவளுக்கு… கால்கள் புதை மனலுக்குள் புதைவது போல் இருந்த போதும் … கையை விலக்க தோன்றாமல் அப்படியே நின்றாள் அலக்நந்தா.

அவனின் பார்வையோ அவளின் முகத்தில் நிலைக்காது எகிரி துடித்த இதய துடிப்பின் சாட்சியாக அவளின் கழுத்து நரம்புகள் துடிப்பதையும்… அதற்கு வெகு அருகில் இருந்த அவளின் மச்சத்தை தாபம் பொங்க பார்த்தான் பத்ரி. அவன் பயந்ததில் இருந்த நியாயம் அவளுக்கு புரிந்தது. அவளுக்குமே தன் விரல்களை எடுக்க தோன்றாமல் அவனைக் கட்டி அணைத்து நெஞ்சில் முகம் புதைக்க வேண்டும் போல் இருக்க… நிலைமையின் தீவிரம் உணர… பிரிக்க பிடிக்காவிட்டாலும் மெல்ல கையை எடுத்தவள்..

“பத்ரி.. இன்னும் ஒரு வாரத்திற்கு எப்படியும் நியூ இயர் வேலையில் பிசியா இருப்ப.. மூன்றாம் தேதி நான் டிரிப் போறேன்…” என்றாள் இல்லாத அமைதியை குரலில் காட்டி.

பட்டென்று நிமிர்ந்து நின்றவன்…. “இது எப்ப முடிவாச்சு ஏன் என்னிடம் சொல்லவே இல்லை..?” என்றான் கோபமாக.

“போன வாரம் தான் முடிவாச்சு… நீ ரொம்ப பிசியா இருந்த.. டிக்கெட் கூட புக் பண்ணியாச்சு.. எர்ணாகுளத்தில் இருக்கும் ஆர்.பி.ஐயில் தான் மூன்று நாள் எக்சிபிஷன்.. அப்படியே செமினாரும் இருக்கு”

“அது எத்தனை நாள்” என்றான் இன்னும் எரிச்சலாக.

“இரண்டு நாள்....”

“மை காட்!!! இங்க இருந்து உங்களுக்கு நேராக போக ப்ளைட் இல்லாததால் போகவே இரண்டு நாளாகும்.. அப்ப கிட்டதட்ட பத்து நாளா?” என்று அவன் அலறிக் கொண்டு இருக்கும் போது தான் சித் தன் ரூமை விட்டு வந்தான்.

"என்னடா இப்படி கத்திட்டி இருக்க?" என்றான் சித் கண்களை கசக்கி விட்டபடியே.

"ம்ம்.. இவள் டூர் போறாளாம் பத்து நாளைக்கு அதை தான் சொல்லிட்டிருக்கா" என்றான் மிகுந்த சினத்துடன்

"அதுக்கு எதுக்குடா கத்தற? பத்து நாள் தானே போயிட்டு வரட்டுமே" என்று மீண்டும் கொட்டாவி விட்டபடியே தன் அறைக்குள் நுழைந்தான் சித்.

“பத்து நாள்????” என்று குறுக்கு நெடுக்குமாக இரண்டு முறை அலைந்தவன்… அரைமனதாவே “பத்திரமாக போயிட்டு வா” என்றான் அவள் என்னவோ இவனிடம் சம்மதம் கேட்ட மாதிரி.

அடுத்து வந்த ஒரு வாரமும் இப்படியே புது வருட பிறப்பிற்கான ஏற்பாட்டில் செல்ல… எந்தவித பிரச்சனையும் இல்லாது ஆரம்பித்த விழா இவர்களுக்கு பிரச்சனையோடு முடிந்தது!!!

அன்றைய பேச்சிற்கு பின் அவர்களுக்கு தனித்து பேச உண்மையாகவே நேரம் இல்லாது இருவரும் தத்தம் வேலையில் முழுக… கடந்த மூன்று வாரம் அவர்கள் உயிரை கொடுத்த உழைத்த நாளும் இனிதாகவே விடிய… பரபரப்பின் உச்ச கட்டித்தில் இருந்தது அவர்களின் அறை…

ஓருவழியாக மத்தியத்திற்கு மேல்… எல்லோரும் வெளியேற… மூன்று வாரம் கழித்து அவர்கள் அறை முழு அமைதியை தழுவ… நிம்மதி பெரு மூச்சு விட்டவள் முன்பே விழாவிற்கு போவதில்லை என்று முடிவு எடுத்து இருந்ததால்… அமைதியாக படுத்து கிடந்தாள்.

நிகழ்ச்சி தொடங்கியதின் எதிரொலியாக பாட்டும் பேச்சும் இவள் காதில் விழ… ஏற்கனவே இதை பத்ரியும்.. சித்தும் தயாரித்த போதே கேட்டு இருக்கிறாள் என்ற நினைவுடன்… கண்ணாடி வழியாக தெரிந்த தூரத்து மலை முகட்டை பௌணர்மி ஒளியில் கண்டு களிக்க எத்தனை நேரம் அப்படியே அமர்ந்து அதை பார்த்தாலோ அதை அறியாள்.. திடீரென்று..

“உன்னை மாதிரியே நிலாவும் ரொம்ப அழகாக இருக்கு” என்றப்படி பத்ரி அவள் அருகில் வந்து நிற்க..

அவளின் காதில் ஒளித்த அவனின் பேச்சை கேட்டு இரண்டு அடி துள்ளி குதித்து திரும்பிவள்… “நீ இங்க என்ன பண்ற?” என்றாள் பத்ரியை பார்த்து.

“சீதை இருக்கும் இடம் தான் ராமருக்கு அயோத்தின்னு சொன்னால் ரொம்பவே கேவலமா இருக்கும்… அதனால் அலக்நந்தா இல்லாமல் பத்ரி இருக்க முடியாதேன்னு சொல்றேன் போதுமா??” என்றப்படி அவளை நெருங்கினான் பத்ரி.

“ம்ச்சு….டைலாக் சொன்னது போதும் அங்க விழாவை விட்டு இங்க என்ன பண்ற?” என்றாள் பரபரப்பாக.

“சில நேரத்தில் நீ புரிந்து தான் பேசறியா.. இல்ல புரியாமல் பேசறியான்னே எனக்கு தெரியலை… விழா சித்தோட பொருப்பு.. நான் உதவினேன்.. நீ அங்க வந்தா உன்னுடன் சேர்ந்து பார்க்கலாம் என்று நினைத்தேன் ஆனா.. நீ வரலை.. புது வருட பிறப்பை உன்னுடன் இல்லாமல் நான் மட்டும் தனியா

கொண்டாடுவேன்னு நீ எப்படி நினைச்ச மோனல்?" என்றான் அமர்த்தலாக.

இன்று ....

அன்று பத்ரி அபிமன்யூவை பற்றி சொன்ன போது புரியாத விஷயம் இப்போ பளிச்சென்று புரிந்தது.

தன்னை சுற்றி ஆள் அம்பாரி இல்லாத போது கூட அபிமன்யூ எப்படி உணர்ந்திருப்பான் என்று அந்த நொடியில் உணர்வு பூர்வமாக உணர... தான் இறப்போம் என்று தெரிந்த போதும்... தனக்கான களத்தில் இருந்து.. இறக்கும் போதும் உண்டாகும் உவகை.. நெஞ்சை எப்படி நிறைத்திருக்கும் என்று பரிபூரணமாக உணர்ந்த போது அவளையும் அறியாது அந்த மாவீரனுக்கு மனதால் நன்றி சொன்னாள்!!!

அப்பா, அம்மா மற்றும் அக்காவை பற்றி நடிப்பையும் தாண்டி அவர்கள் சொந்த வாழ்க்கையைப் பற்றி பத்திரிக்கை எப்படி எல்லாம் எழுதி கிழிக்கிறார்கள் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் அவர்களில் யாரும் அதை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.. கேட்க போனால் அதைக் கண்டு கொள்வது கூட இல்லை... காரணம் அவர்களுக்கான களம் அது... நின்று ஆட விரும்பும் களம் அதனால் யாருடைய உதவியையும் நாடவில்லை..!!!

ஆனால் தனக்கோ.. யாரோ எவனோ முகம் தெரியாதவன் கைக்கு வந்ததை எழுதி விட்டான் என்றவுடன் ஓடி ஒளியதான் தோன்றியதே தவிர அதை எதிர்த்து போராட தோன்றவில்லை.. ஏன் தந்தை, தாய் தமக்கையை நாடினாள் என்று மின்னலாய் புரிந்தது.. காரணம்.. அது தனக்கான களம் இல்லை என்பதால்... போட்டியில் கலந்து கொள்ளாமலே தோல்வியை தழுவி... புறம் முதுகிட்டு ஓடி ஒளிந்தாள்!!!

இன்று எல்லோரும் தன்னைச் சுற்றி நின்று எதிராக பேசிய போதும் கூட... பத்ரிக்காக.. தனக்காக அவர்களை எதிர்த்து பேசத்தான் தோன்றியதே... தவிர எங்கும் ஓடி ஒளிய தோன்றவில்லை!!! இன்னும் கேட்க போனால்.. பத்ரி தன்னை தனியாக தவிக்க விட்டு சென்ற பின்னரும் கூட... அவன் கழுத்தை நெறிக்கும் அளவு உள்ளே வலியும் வேதனையும் மண்டி கிடக்க... அவனுக்காகவும் சேர்த்துதான் பேச தோன்றியது!!!

இனியும் யாரிடமும் சொல்லாது ஒளிந்து வாழ்வது தனக்கு எந்த விதத்திலும் நல்லதில்லை.. என்று உணர மனதில் கடந்த பத்து நாட்களாக அடித்த சூறாவளியும் பத்ரி கேட்ட கேள்விக்கான விடையும் சேர்ந்தே கிடைத்தது. பெற்றவர்களை இழந்தாலும் பத்ரி கிடைப்பான் என்ற உவகையே மனதை நிறைக்க.. நிதானமாக நிமிர்ந்து பார்த்தாள் அலக்நந்தா…

“இத்தனை நாள் நீங்க என்னை புரிந்து கொள்ள வில்லை என்று நினைத்து உள்ளே மறுகினேன்.. ஆனா இப்ப நின்று திரும்பி பார்க்கும் போது நானும் உங்களை புரிந்துக் கொள்ள எந்த பிரயத்தனமும் எடுக்கவில்லைன்னு புரியுது… என் வாழ்க்கை பத்ரியோட தான். இது சரியா தப்பான்னு உங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை… உங்களை மாதிரி பெயர் சொன்னவுடன் என்னை ஊர் உலகத்திற்கு அடையாளம் தெரியாமல் இருக்கலாம்… ஆனா நான் அவனோட இருந்தா எனக்கு என்னையே அடையாளம் தெரியும் பா.. அலக்நந்தாவின் பக்கத்தில் பத்ரி இல்லைன்னா… அலக்நந்தா ஜீவ நதியா இருக்க முடியாது ஒரே இடத்தில் தேங்கி குட்டையாகி விடுவேன் பா.. முடிந்தால் நான் சந்தோஷமா இருக்க வாழ்த்துங்கள்.. இல்லைன்னாலும் பரவாயில்லை.. உங்கள் பேச்சை மீறி நான் நினைத்ததை செய்யத் தான் போறேன். அதனால் என்னை மன்னித்து விடுங்கம்மா..” என்று லேசாக கண்கள் கலங்க.. தொண்டையை அடைக்க மொழிந்தவள்…

சட்டென்று தன் பாக்கெட்டில் இருந்து போனை எடுத்து.. பெற்றவர்களிடம் கொடுத்து விட்டு… “ஏதோ ஒரு விதத்தில் நீங்க இன்னும் நான் தப்பானவனை தேர்ந்து எடுக்கிறேன்னு தோன்றியதுன்னா.. இதில் என் ஆடிட்டர் மற்றும் லாயர் நம்பர் இருக்குபா.. நான் சம்பாரித்த வருமானம் எல்லாத்தையும் உங்க பெயருக்கு எழுதி வைக்க ஏற்பாடு செய்கிறேன்… உங்க சொத்தில் ஒன்னும் வேண்டான்னு எந்த டாக்குமென்ட்ஸ் நீட்டறிங்களோ அதில் பத்ரி முன்னாடியே கையெழுத்து போடறேன்…”

“பத்ரி ரொம்ப நல்லவர் மா.. என்னை பார்த்த முதல் நாள் அல்சரில் துடித்தேன்னு மாத்திரை கொடுத்து இரவு முழுவதும் என் கூடவே இருந்தார் மா… நீங்க எந்த பையனை எனக்காக தேர்ந்தெடுத்தாலும் பத்ரியை விட பெஸ்டா யாரும் இருக்க முடியாதும்மா.. எனக்கான களம் அவன்.. என் வாழ்க்கை பத்ரியோட தான் மா… என் காதல் உங்களுக்கு எபிக் லவ்

ஸ்டோரியா தெரியாமல் இருக்கலாம்… ஆனா எனக்கு இது மட்டும் தான் பா.. ஒன் அண்ட் ஒன்லி லவ் ஸ்டோரி..” என்று மெல்ல சிரித்தபடி கூறி முடித்தாள்.

“ஆனா..” என்று அவள் அம்மா வாயை திறக்க…

அதற்குள் நிகாரிக்கா… “அம்மா இதற்கு மேல் எதுவும் பேசாதீங்க..” என்று மொழிந்தவள் “நீ போ.. உன் பத்ரியோட போ.. நான் இவர்களை அழைத்துக் கொண்டு போகிறேன்.. நீ சொன்னது அவர்களுக்கு புரிய இன்னும் ஒரு வாரம் ஆகும்.. அதுக்கு அப்புறம் பேசலாம்..” என்று கூறி அவளை அனுப்ப..

“தேங்க்ஸ் கா.. வரேன் மா.. வரேன் பா” என்றபடி சிரிப்பு குமிழ கூறியவள்.. அதிவேகமாக அவர்கள் காலில் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு அருகில் இருந்த நிகாரிக்காவை அப்படியே இறுக கட்டிக் கொள்ள ஆனந்தத்திலும் கண்ணீர் கசிந்தது….

அந்த அறையை விட்டு வெளியேறி.. ஒரு பக்கம் சந்தோஷம் பொங்கி வழிந்தாலும்.. மறுபக்கம் பத்ரி தன்னை விட்டு சென்ற விதத்தை நினைக்க உள்ளே காந்தியது… ‘உன்னை ரூமிற்கு வந்து பார்த்துக்கிறேன் டா’ என்று வாய் விட்டு கருவியபடி தன் சைக்கிளை எடுத்தவள்.. குறுக்கு பாதையில் போனால் இருபது நிமிஷத்தில் போய் விடலாம் என்று யானையே தனக்கு இரண்டு அடி முன்னால் நின்றாலும் கண்ணிற்கு தெரியாதபடி இருந்த இருளை மறந்து முடிவு செய்து சைக்கிளை மிதிக்க… விதி அவளை விட நாலு கால் பாய்ச்சலில் விரட்டி அடிப்பது தெரியாது.. பயணப்பட்டாள் அலக்நந்தா!!!

அத்தியாயம் - 23

ஒரு மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு….

“புது வருட பிறப்பை உன்னுடன் இல்லாமல் நான் மட்டும் தனியா கொண்டாடுவேன்னு நீ எப்படி நினைச்ச மோனல்?” என்றான் அமர்த்தலாக.

மூடியிருந்த கண்ணாடி ஜன்னலில் சாய்ந்தவள்… “நான்.. நான்… அப்படி நினைக்கலை..” என்று சிறு தடுமாற்றத்துடன் கூறினாள்.

“அப்படி நினைக்கவில்லையா? இல்ல எப்படியுமே நினைக்கவே இல்லையா…?!?” என்று ஒரு மாதிரி நைந்த குரலில் கேட்டான் பத்ரி.

அந்த குரலில் இருந்த வலியை அவன் சொல்லாமலேயே அவள் பரிபூரணமாக உணர.. “பத்ரி…” என்று கையை பிசைந்தபடி மெல்ல அழைத்தவள்.. ஏதோ முனுமுனுப்பாய் சொல்ல..

வெளியே ட்ரம்ஸ் ஓசையுடன் ஒலித்த பாடலின் சத்தத்தில் அவள் சொன்ன பதில் காதில் விழாது போகவே…

“ஆ…” என்று தலையை சாய்த்தவன் காதில் விழவில்லை என்பது போல் செய்கை செய்தான்.

இம்முறை சற்றே உரக்க சொல்ல… அதை காதில் வாங்கினாலும் அவன் மனதை நிறைத்தது என்னவோ அலக்நந்தாவின் பிம்பம் தான். எப்பொழுதும் அணியும் ஜீன்சும் டி சர்ட்டும் தான் என்ற போதும்… அவள் ஜன்னலில் சாய்ந்து நின்ற விதம்… அவனை சித்தம் தடுமாற செய்ய… இவனை முந்திக்கொண்ட அல்லோன்… இதை விட்டால் வேறு எப்பொழுது இப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்க்குமோ என்று தன் வெண்ணிற கிரணங்களால் அவளை அள்ளி அணைத்து தன் பூரண சந்திரிகையை அவள் மேல் பொழிய… விண்ணில் இருந்து வந்த தாரகையாக அவளைக் கண்டவனின் எண்ணங்கள் ஒரு கட்டுக்குள் நிற்காமல் எங்கோ தரிகெட்டு தடுமாறி ஓடத் தொடங்கியது.

“என்ன சொன்ன?” என்று கேட்டபடி அவனையும் அறியாது அவளை நெருங்கினான் பத்ரி.

வேகமாக கண்களை சுழற்றியவள்.. இரண்டு கையையும் வாயில் குவித்து வைத்து “என்னைக் கூப்பிட்டு போக நீ எப்படியும் இங்க வருவாய்ன்னு தெரியும்” என்று தொண்டை கிழிய கத்தி முடிக்க…

ஏதோ வித்தியாசமாக தெரியுதே என்று யோசிக்கும் போது தான்… அத்தனை நேரம் ஜவ்வு கிழியும் படியாக வெளியே அடித்த ட்ரம்ஸ் இசை நின்று இருக்க.. அந்த மயான அமைதியில் அந்த பில்டிங்கே அதிரும் படி அலக்நந்தாவின் குரல் அலறியது.

தாமதமாக தன் செய்கையை உணர்ந்தவள் அவளையும் அறியாது அவசரமாக வாயை மூடினாள்!!!

அவள் சொன்ன செய்தியும்... அவளின் செயலும்.. இத்தனை நேரம் சற்றே வாடி தெரிந்த பத்ரியின் முகம் அவளின் பதிலால் பிரகாசமுற... அழகாய் சிரித்தான்.

முகத்தை சுளித்து.. மூக்கை சுருக்கியவள்.. "யாரும் கேட்டு இருக்க மாட்டாங்கல்ல...?!!?" என்றாள் ரூம் வாசலை எட்டி பார்த்தபடி.

அவள் கேட்டதற்கு பதிலே சொல்லாது மேலும் சிரித்தவன் "நிஜமாகவே இந்த நியூ இயர் அழகாக தான் விடியும் போல.." என்று மொழிந்தவன்... "நீ என்னிடம் முதன்முதலாய் என்ன கேட்ட தெரியுமா?" என்றான் கண் இமைக்காமல் பார்த்து.

"ம்கூம்" என்று தலையை ஆட்டினாள்.

"என் லாப் டாப்பில் ஓடிக்கொண்டிருந்த இளையராஜா பாட்டை ஆப் செய்யறீங்களான்னு நீ கேட்க... நான் கூட படிப்பதற்கு இடைஞ்சலாக இருக்கு போலன்னு நினைத்து கேட்டு வைக்க... அதற்கு நீ சொன்ன பாரு ஒரு விசித்திரமான பதில்... அந்த நொடி.." என்றபடி தன் விரலையை சொடுக்கியவன்.. "உன் மேல் ஒரு ஈர்ப்பு தோன்றியது..." என்றபடி அவன் மேலும் அருகில் வந்தவன்.. "உனக்கும் எனக்குமான ஆரம்பம் அங்கே தான் தொடங்கும் என்று யூகிக்க வில்லை.." என்று சிலாகித்து செப்பியபடியே முகத்தில் விழும் அவளின் கார் கூந்தலை ஒதுக்கியவன்... "நான் எதையும் அவ்வளவு எளிதில் மறக்கும் ஆசாமி இல்லை அலக்நந்தா.. உனக்கு மியூசிக் பிடிக்காது என்று தெரிந்த பிறகு நான் எதற்கும் உன்னை கட்டாயப் படுத்த மாட்டேன்" என்றான் மென்மையாக.

அவனின் அருகாமையிலும் செய்கையாலும் அவன் சொன்ன பதிலாலும் மெய் சிலிர்த்தவள்... "வாட்?? பிடிக்காதா... நான் பிடிக்காதுன்னு சொல்லவில்லை பத்ரி.. தூங்க முடியாதுன்னு தானே சொன்னேன்.." என்றான் நிதானமாக.

“அப்படின்னா??” என்றான் பத்ரி குழப்பமாக அவளின் ஒற்றை விரலால் முகவாய் நிமிர்த்தி.

“பத்ரி.. நான் முறையாக பதினாறு வருஷம் நடனம் பயின்று இருக்கிறேன்.. நடனம் என்றால் கிளாசிக்கல் மட்டுன்னு நினைக்காதே.. ஹப் ஹாபில் இருந்து ஸ்டிட் டான்ஸ் வரை பயின்று இருக்கிறேன்” என்று சற்றே தடுமாற்றத்துடன்.. கிசுகிசுப்பாய் சொன்னாள் அலக்நந்தா.

“வாட்?????? நீ டான்சரா.. பின்ன ஏன் அன்று மியூசிகை ஆப் பண்ண சொன்ன?” என்றான் ஆச்சரியம் தாங்காது.

“எல்லொருக்கும் மியூசிக் கேட்டால் ரீலாக்ஸ்டா தூங்க முடியும்.. ஆனால் என்னால் மியூசிக் கேட்டால் ரீலாக்சும் ஆக முடியாது தூங்கவும் முடியாது பத்ரி...” என்று தெளிவாக சொல்வது போல் மேலும் அவனைக் குழப்பி வைத்தாள் அலக்நந்தா.

“ஏன்?” என்றான் ஒற்றை வார்த்தையாக பத்ரி.

“எப்படி சொல்லி புரிய வைக்க...” என்று யோசனையாக இழுத்தவள்.. “உனக்கு தாய்மொழி தமிழ்.. நீ யோசிக்கும் போதும் தமிழில் தான் யோசிப்ப.. ஆனா என்னிடம் பேசும் போது ஹிந்தியில் பேசுவாய் அப்படித் தானே?!? அது உன்னை அறியாமல் நடக்கும். அது மாதிரி தான் என்னுடைய நடனமும்.. நான் கேட்கும் ஒவ்வொரு பாட்டையும் ஒவ்வொரு பீட்டையும் டான்ஸா தான் நினைத்து பார்க்க முடியும்.. என்னையும் அறியாமல் அது தன்னால் என் மனதில் நடக்கும்.. நானே தடுத்தாலும் என்னால் நிறுத்த முடியாது.. எல்லோரும் ரீலாக்ஸ் ஆக பாட்டு கேட்டால் என்னால் மட்டும் பாட்டை கேட்டால் ரீலாக்ஸ் ஆகவே முடியாது... அதனால் தான் தூங்க முடியாது திண்டாடி போய் உன்னிடம் வந்து ஆப் பண்ண சொன்னேன்” என்று சொல்லி முடிக்க...

அவளை... ஒரு நொடி ஆச்சரியத்துடன் பார்த்தவன் “நீ ஒரு டான்சர் ஆனா டான்ஸ் ஆட மாட்டியா??” என்று கிட்டதட்ட கூவினான்.

“பத்ரி நான் ஆட மாட்டேன்னு எப்ப சொன்னேன்...?!?” என்றாள் அவசரமாக.

“ஆனா.. ஆனா… நான் பார்த்ததே இல்லை..” என்று அவன் இழுக்க..

“பத்ரி நான் ஆடினா தானே பார்த்திருக்க முடியும்.. நான் ஆடாமல் நீ எப்படி பார்த்திருக்க முடியும்…??” என்று ஒரு கேள்வியை கேட்க.

அவள் பதிலால் சற்றும் குழம்பாமல்… “வாவ்.. வாவ்… ஓ!!! மை காட்… யூ ஆர் ஏ ப்ரொபஷனல் டான்சர்..” என்றான் அவள் சொன்னது பதில் அப்போ தான் முழுவதுமாக மனதில் பதிய… “அப்ப நீ நிறைய ஸ்டேஜ் பர்பாமன்ஸ் கொடுத்து இருக்க இல்லை?!? அதனால் தான் யார் உன்னை முறைத்து பார்த்தாலும் அதைப் பற்றி கண்டுக்கவே மாட்ட இல்ல.. உன்னோட ஹில்ஸ் வாக்கிங்..” என்று அவளின் செய்கைகான அர்த்தத்தை அவன் வேறு மாதிரி எடுத்துக்கொண்டு கூற..

ஒரு நிமிடம் கண்ணை இருக்க முடியவள் “ம்ம்..” என்று எல்லா புறத்திலும் தலையை ஆட்டிக்கொண்டு இருந்தாள். அடுத்து என்ன மாதிரி அவன் கேள்வி கேட்டு அவளை திக்கு முக்காட செய்ய போகிறோனே என்று மனதிற்குள் அரண்டு போய் நின்றவள் அவள் சற்று யூகிக்க முடியாது வந்த அவனின் கேள்வி அவளை நிஜமாகவே வாய் பிளந்து நிற்க வைத்தது!!!

“அப்ப என்னோடு ஒரு டான்ஸ் ஆடு” என்றான் சடாரென்று!!!

இதுக்கு என்ன மாதிரி பதில் சொல்வது என்றே தெரியாது விழி பிதுங்கியவள்.. “பத்ரி… நான்.. நான்… ஆடி எட்டு வருஷம் ஆச்சு…” என்று மறுத்தவள்… பின் அவனின் கேள்வியின் தன்மை விளங்க.. “வாட்? உன்னோடு ஆட வா?!? உனக்கு டான்ஸ் ஆட தெரியுமா?” என்று கேட்டபடி திறந்த வாயை மூட மறந்தாள்.

“தெரியுமாவா? என் பாட்டி இரண்டு வருஷத்திற்கு முன் நெவர் செ நெவர் அகேயின் ஜேம்ஸ்பாண்ட் படத்தில் வரும் டாங்கோ நடனத்தை பார்த்துவிட்டு அதை கற்றுக்கொண்டே ஆகனுன்னு ஒத்த காலில் நிற்க… வீட்டில் யாரும் அவங்களுடன் டான்ஸ் ஆட மறுத்துவிட்டதால்.. நான் தான் அவங்க டான்ஸ் பார்ட்னர்…” என்று பெருமூச்சு ஒன்றை விட்டவன் “அவங்க கற்றுக் கொண்டாங்களோ இல்லையோ நான் டாங்கோ கற்றுக் கொண்டேன்” என்று தான் டாங்கோ கற்றுக் கொண்ட ரகசியத்தை சொல்லி முடிக்க.. வெடித்து குலுக்கி சிரித்த அலக்நந்தா…

“உன்னையும் பாட்டி தள்ளி விட்டு உன் காலை உடைக்க வில்லையா?” என்று சிரிப்பின் இடையே கேட்க..

“டான்ஸ் ஆடறேன் பேர்வழியின்னு இரண்டு வேலை ஆட்களின் பாதத்தில் ஏறி நின்று அவர்களை கீழே தள்ளியதாலும்... கார்த்தியின் கையையும் பிடித்துக் கொண்டு சுத்தறேன் சொல்லி அவன் கழுத்தை சுளுக்கி விட்டதாலும் அவர்களுடன் ஆட யாரும் முன் வராததால் நான் பலிகடா ஆக்கப்பட்டேன் என்பது அப்புறம் ஒற்றன் மூலம் நான் அறிந்த ரகசியம்..” என்றான் பத்ரி சிரித்தபடி.

அதைக் கேட்டு மேலும் சிரித்தவள் “மை காட்!!! உன் வீட்டு ஆட்களை இதுவரை பார்த்ததில்லை.. ஆனால் எனக்கு என்னவோ அவர்கள் எல்லோரையும் நெடுநாள் பார்த்து பழகியது போல உணர்கிறேன்..” என்று கூறியவள்.. “ஆமாம்... என்ன மியூசிக் நீ எதுக்கு பயிற்சி எடுத்து இருக்க??” என்று அவள் கேட்டுக்கொண்டு இருக்கும் போதே

அவன் ஐ போனை குடைந்து ட்ரூ லைஸ்(TRUE LIES) படத்தில் வரும் மிக பிரசித்தி பெற்ற மியூசிக்கை வைக்க...

ஒரு நிமிடம் கண் மூடி கேட்டவள் புன்னைகை விரிய.. அடுத்த நிமிடம் அவனுக்கு முன்னாடி நின்று அவன் தோளில் தன் கையை வைத்து.. புன்னகை புரிந்தாள் அலக்நந்தா.

“ஐயம் நர்வஸ்” என்றான் பத்ரி.

“எதுக்கு??”

“காரணம் எதுன்னு தெரிந்தால் நர்வஸா இருக்க மாட்டேன் அலக்நந்தா காரணமே தெரியாததால் நான் இப்படி இருக்கேன்.” என்று பெருமூச்சு விட்டவன்.. அவளின் மெல்லிடையில் கை பதிக்க. அந்த ஸ்பரிசத்தில் அவளின் தளிர்மேனி சிலிர்த்ததை அவனின் விரல்களை கண்டுகொள்ள.. அடுத்த நிமிடம் தன்னை மீட்டுக் கொண்டவளை கண்டவனின் முகத்தில் புன்னகை விரிய.. மெல்ல ஆடத் தொடங்கினான்.

கிட்டதட்ட எட்டு வருடம் கழித்து ஆட ஆரம்பிக்க… ஏதோ இவளை இறுக்கி பிடித்திருந்த மாய கட்டு இவளை விட்டு விலகியதாக உணர… தன்னை மறந்து அவனை ஒட்டி நின்று ஆடினாள்..

முதலில் சற்றே தடுமாற்றத்துடன் ஆரம்பித்த அவர்களின் ஆட்டம் பிறகு ஒரு லயத்துடன் வேகம் எடுக்க… ஒருமுறை இல்ல.. அதே மியூசிக்கை பத்ரி லூப்பில் போட்டு இருக்க கிட்டதட்ட… ஐந்து முறை நிற்காமல் ஆடினாள்.

அவனோடு ஒன்றாக சேர்ந்து அத்தனை நெருக்கத்தில் இருந்ததாலா இல்லை… வெகுநாள் கழித்து ஆடியதாலா என்று தெரியாது மனம் ஆனந்த கூத்தாட.. ஆடி நிறுத்திய பின்னும் அவனை விட்டு நகரும் எண்ணம் துளியும் இல்லாமல்… அவனைப் பார்த்து கண்கள் கலங்க சிரித்தவள்..

“தேங்க்ஸ் பத்ரி” என்று உளமாற செப்பியவள்.. ““இப்ப டான்ஸ் ஆடியது எப்படி தெரியுமா இருக்கு??? நெடுநாள் முன் பிரிந்து சென்ற என்னோட பால்ய சிநேகிதியை பார்த்து பேசியது போல அவ்வளவு சந்தோஷமா உணர்கிறேன்…” என்றபடி சிரித்தாள்.

நகைசுவைக்காக சிரிப்பது வேறு… மனதில் ஆனந்தம் ஊற்று எடுக்க.. உள்ளுக்களுளே குமிழியாய் ஆனந்த பொங்கி கரைபுரண்டு பெரு வெள்ளமாய் உடம்பில் ஒவ்வொரு அனுவிலும் ஓட…. அதை எப்படி வெளிப்படுத்த என்று தெரியாது திக்குமுக்காடி… அவளின் நீண்ட விழிகள் இரவில் மொட்டவிழும் அல்லியாய் மலர்ந்து.. சிப்பி உதட்டில் சிரிப்பு பூசிக்கொள்ள.. முகம் விகசிக்க.. அவள் வார்த்தைகாளால் சொல்ல முடியாதை ஆனந்தத்தை அவளின் மூலமாக தானும் உணர்ந்தவன்.. அவனையும் அறியாது… இடையில் இருந்த கையில் ஒரு அழுத்தம் கொடுத்தவன்… மூச்சு முட்டு தூரத்தில் நெருங்கியவன்…எதுவும் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டி.. “அலக்நந்தா உன்னை முத்தமிட போறேன்” என்று அவளின் விழியோடு விழி வைத்து அறிவித்தான்!!!

ஏற்கனவே அவனின் அருகாமையில் தடுமாறிக்கொண்டு இருந்தவளை பார்த்து திடுதிப்பென்று அவன் இப்படி சொல்ல மறுக்கவும் தோன்றாது… சம்மதிக்கவும் தோன்றாது… மலங்க விழித்து நின்றாள் அலக்நந்தா.

அவள் சிலையென சமைந்து நின்றாலும் அவனை போலவே அவளின்

இதய துடிப்பும் எகிறி துடிப்பதை கழுத்தில் துடித்த நரம்பு பறை அடிக்க.. அதைக் கண்டவனின் புன்னகை விரிய.. அவளை நோக்கி மெல்ல குனிந்தவனை… கண்டு அனிச்சையாக அவள் தலையை சற்றே பின்னுக்கு சாய்த்தாள்!!!…

“தேங்க்ஸ்” என்றான் பத்ரி உள்ளுக்குள்ளே சிரித்தபடி…

வேண்டாம் என்று சொல்வது போல் அவள் தலையை மறுபுறம் சாய்த்தவளுக்கு இவன் எதுக்கு தேங்க்ஸ் சொல்கிறான் என்று குழம்பி போய் நிற்க..

தண்ணவனின் குளுமையான கிரணங்களால் வெண்ணிற புரவியில் பூட்டிய தேரில் இருந்து வந்திறங்கிய மாய கன்னிகையாய் தோற்றப் பொலிவுடன் அவன் முன் நின்றவளின் நீண்ட கழுத்தில்…

அவனுக்கு இணையாக இருமடங்கு வேகத்துடன் துடிக்கும் இதய துடிப்பை தம்பட்டம் அடிக்கும் விடைத்த பச்சை நரம்பிற்கு சமீபத்தில் வீற்றிருந்த அவனைக் கவர்ந்த மச்சத்தை கண்டவனுக்கு புலங்காய்தம் உற்றெடுக்க ஆவலாக தன் வெப்பமான உதட்டை பதித்தான்!!!!

இன்று…

யானையே தனக்கு இரண்டு அடி முன்னால் நின்றாலும் கண்ணிற்கு தெரியாதபடி இருந்த இருளில் பறந்து செல்ல முடிவு செய்து சைக்கிளை மிதிக்க… விதியை அவளை விட நாலு கால் பாய்ச்சலில் விரட்டி அடிப்பது தெரியாது.. பயணப்பட்டாள் அலக்நந்தா!!!

வெளியே அடிக்கும் குளிரையும் தாண்டி.. உள்ளே பத்ரியின் செயலை நினைத்து குமைந்து கொண்டு.. காற்றை கிழித்துக் கொண்டு வேகமாக சென்று அவனை சண்டையிட சென்றவளுக்கு, குறுக்கு வழியின் பாதி வழியில்.. தன்னை யாரோ.. இல்லை எதுவோ பின் தொடர்வது போல் உள்ளுணர்வு தோன்ற… சற்றே கவனிக்க தொடங்கினாள்..

வேகமாக பாக்கெட்டில் விட்டு தன் செல்போனை தேடியவளுக்கு அப்பொழுது தான் அப்பாவிடம் தன் போனை கொடுத்து விட்டு வந்தது

ஞாபகத்திற்கே வர.. தன் நெற்றியை பலமாக அடித்துக் கொண்டவள் வேகம் எடுக்க தன்னை தொடர்ந்து வந்த அதுவும் வேகம் எடுத்தது!!!

பயத்தில் இதயம் வாய் வழியாக தொண்டையில் துடிக்க… அந்த பனியிலும் கைகள் வேர்க்க.. கடவுளே என்னை காப்பாற்று என்று நினைத்துக் கொண்டு இருந்த வேளையில்.. பாதையில் கிடந்த கல்லின் மேல் தெரியாது சைக்கிளை ஏற்ற.. வண்டி குடை சாய சரிந்து அப்படியே விழுந்தாள் அலக்நந்தா.

பத்ரியை பார்க்காமலே தன் காதலையும் தன் தீர்மானத்தையும் சொல்லாமலே ஏதோ ஒரு விலங்கிற்கு இரையாவது உறுதி என்று நினைக்கும் போதே வாழ்க்கையின் தத்துவத்தை உணர… தன் மேல் ஏதாவது வந்து பாய்ந்து கடித்து தின்பதற்கு வசதியாக இப்படி படுத்து கிடப்பதற்கு பதில் எழ வேண்டும் என்ற எண்ணமே வர அவசரமாக எழுந்தவளுக்கு நிலா ஒளியில் கீழே கிடந்த மரத்தின் உடைந்த நீண்ட குச்சி தெரிய வேகமாக அதை எடுத்தவள் இறுக்க பற்ற.. கண்கள் கலங்கியது…

அழ வேண்டிய நேரம் இல்லை.. பதுங்க வேண்டும் என்றபடி அந்த கும்மிருட்டில் எங்கே இனியும் இப்ப பின்னாடி என்ன வருகிறது என்று தெரியாமல் சுற்றி பார்த்தவளுக்கு ஏதோ தன்னை நெருங்குவதாய் காலடி ஓசை கேட்க… அவசரமாக தன் கையை ஓங்கி அடிக்க முனைந்தவள் தன்னை கிட்ட நெருங்கியதை பார்த்து அப்படியே தேங்கி நின்றாள்.

“இங்க என்னை எதிர்பார்க்கவில்லை இல்ல அல்கா மல்ஹோத்ரா?” என்றான் ரோகன் ஒரு இளக்கார சிரிப்புடன்

தன் சக்தி எல்லாம் வடிந்து விட்டது போல் தூக்கிய கையை அப்படியே கீழே விட்டவள் கையில் இருந்த கம்பை கொண்டு ஊன்றி நின்று… ஒரு நிமிஷம் ஆழ்ந்த மூச்செடுத்து விட…

“இங்க ஏன் வந்த? என்னை எப்படி தெரியும் ரோகன்?” என்றாள் ஆயாசமாக.

“ஏன் வந்தேனா?? திடீரென்று பத்து மணிக்கு உன் பாய் ப்ரெண்டு அட்மின் ஆபிஸ் பக்கம் போறான்னு செய்தி வந்தது.. அடுத்த பத்து நிமிஷத்துல நீயும்

உன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போறதை நானே பார்த்தேன்.. அதுதான் பேப்பர் சப்மிட் பண்ணியாச்சே.. இவங்க எதுக்கு கியூ கட்டறாங்கன்னு வந்தேன்.." என்று இளித்தவன், "வந்தா... நான் நினைத்து வந்தததை விட மிக பெரிய நியூஸ் கிடைத்திருக்கு.. பதினாறு வயதில் ப்ரேக்னன்ட்டாகி.. அதைக் கலைக்கப் போய் பைத்தியம் பிடித்து தலைமறைவாக பதுங்கி இருந்த அந்த அல்கா மல்ஹோத்ரா தான் நீ.. உன்னையும் நீ போன உடனே அரக்க பறக்க ஓடி வந்த உன் அக்கா நிகாரிக்காவை பார்த்தவுடனே புரிந்துவிட்டது.." என்று கனலாய் வார்த்தைகளை உமிழ்ந்தான்.

யாரோ தன் வயிற்றில் கத்தியை அப்படியே சொருகியது போல் உணர.. வலியால் துடித்துப் போனவள் கால் சரிய அப்படியே கீழே அமர்ந்தாள் அலக்நந்தா.

"சொ இது நாள் வரை உன் பெயரை யூஸ் பண்ணி தான் என்னை தோற்கடித்த இல்ல....?!?" என்று இகழ்ச்சியாய் ஒரு மார்க்கமாக சிரிக்க..

என் மனதை புண்படும் படியாக பேச இவனுக்கு எப்ப நான் உரிமை கொடுத்தேன்?? இவன் யார் என்னைப் பற்றி பேச? என்ற கேள்வி எழுந்தவுடன் அதி வேகமாக எழுந்து நிமிர்ந்து நின்றவள்... "உன் வாதப்படியே வைத்துக் கொண்டாலும்... அப்ப நான் இங்க வரும் வரை நீ செலக்ட் ஆனாயே.. அப்ப நீ என்ன மாதிரி வேலை செய்தன்னு நான் கேட்கவா??? பெண்ணிடம் தோற்றதை ஒரு பெருந்தன்னையாக எடுத்துக் கொள்ள தெரியாத நீ என்ன படிப்பு படித்து என்ன சாதிக்க போற?!? இதுவரை நீ தோற்றதிற்காக மட்டும் தான் என்மேல் கோவமாக இருந்தேன்னு தப்பா நினைத்தேன் ரோகன்.. அப்படி இல்லைன்னு இப்ப தெரியுது... காட் யூ ஆர் டிஸ்கஸ்டிங்க..." என்றாள் அருவருப்பாக.

"யாரு நான் டிஸ்கஸ்டிங்கா????? என் உழைப்பை ஏன் திருடினன்னு உன்னைக் கேட்டா நீ பதில் சொல்லாமல் உன் பாய் ப்ரெண்டை விட்டு அடிக்க சொல்லுவ.." என்றான் கன்னத்தை தடவியபடி.
"என்ன உன் உழைப்பை நான் திருடினேனா? எனக்கும் எதுவும் சும்மா கிடைத்து விட வில்லை ரோகன்.. இந்த மாதிரி கண்டவனும் பேசிவிட கூடாதுன்னு உன்னை விட இரண்டு மடங்கு அதிகமாக உழைப்பை கொடுத்தவள் நான்.. இதுவரைக்கும் என் பெயரை முழுதாக கூட யாரிடமும் நான் சொன்னதில்லைன்னு உனக்கே தெரியும்.. ஒன்று சொல்றேன் நல்லா

கேட்டுக்கோ… உன்னை கை நீட்டி அடிக்கனுன்னு நினைத்தேன்னா நேராக நானே அடிப்பேனே தவிர பத்ரியிடம் சொல்லி அடிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை..” என்றாள் திடமாக அலக்நந்தா.

"என்னையே அடிப்பியா? அடிப்பியா நீ" என்றான் ஆங்காரமாய்.

“ரோகன்…” என்று மெல்ல அழைத்தவள் “நீ கராத்தேவை சினிமாவில் பார்த்திருப்ப.. இல்லை உன் தெருமுனையில் கற்றுக் கொடுக்கும் மாஸ்டரிடம் கற்றுக் கொண்டு இருப்ப.. ஆனா.. நான் ஆறு மாதம் சைனாவில் இருந்து எனக்காக மட்டும் ஒரு சென்செய்(SENSEI)யை பிரேத்யேகமாய் அழைத்து கற்றுக் கொண்டேன்.. உன் கழுத்தில் இருந்து கால் சுண்டு விரல் வரை நான் அடித்தேன்னு தடமே இல்லாமல் என்னால் அடிக்க முடியும் காட்டவா?” என்றாள் அலட்டலே இல்லாமல் அமைதியாய்.

“என்ன மிரட்டறியா?” என்றான் முன்னே ஒரு அடி எடுத்து வைத்து.

“மிரட்டல் இல்ல ரோகன்.. உண்மையை சொல்றேன். இங்க வருவதற்கு முதல் காரணம் இங்கே இருக்கும் ப்ரைவசி பாலிசிக்காக தான்… ரொம்ப கஷ்டப்பட்டு நான் யாருன்னு உண்மையை நீயாக சொல்லாமல் புரளியாய் கிளப்பி விட்ட… மார்க் மை வாட்ஸ்… ரோகன்.. இந்த காலேஜை விட்டு சர்டிபிகேட் இல்லாமல் தான் நீ வெளியே போவாய்… அவ்வளவு கஷ்டம் உனக்கு எதுக்கு நானே சொல்வேன்.. இப்ப என்னை பின் தொடராமல் ஒழுங்கா ரூமிற்கு போ… அதுவரைக்கும் என் முகத்தில் விழிக்காதே அதுதான் உனக்கு நல்லது!!!” என்று சொல்லிவிட்டு அவள் திரும்பி மிக மென்மையாக இருந்த நிலா ஒளியில் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு உட்கார்ந்து மிதிக்க… அடுத்த ஐந்து நிமிஷத்தில் மீண்டும் அவன் பின் தொடர்ந்து வரும் காலடி தடம் கேட்க..

நின்று சைக்கிளில் இருந்து கால் ஊன்றியவள் “என்னை பின் தொடர்ந்து வராதேன்னு…” என்று கூறியபடி திரும்பியவளுக்கு அங்கே ரோகனுக்கு பதிலாக வேறு இரு கரு விழிகளுடன் என்னவென்றே பெயர் தெரியாத ஒரு மிருகம் நிற்க… மிரண்டு போய் நின்றாள் அலக்நந்தா!!!

அத்தியாயம் - 24

ஒரு மாதம் ஒரு வாரத்திற்கு முன்பு....

பச்சை நரம்பிற்கு சமீபத்தில் வீற்றிருந்த அவனை கவர்ந்த மச்சத்தை கண்டவனுக்கு புலங்காய்தம் ஊற்றெடுக்க ஆவலாக தன் வெப்பமான உதட்டை பதித்தான்!!!!

அவள் கழுத்தில் உதட்டை பதித்தபடியே, "எதுக்கு உனக்கு தேங்க்ஸ் சொன்னேன் தெரியுமா???" என்று மெல்ல முனுமுனுக்க..

அவளிடம் இருந்து எந்த பதிலும் வராது போக.. மெல்ல சிரித்தவன்.. "உனக்கு எப்ப முத்தம் கொடுத்தாலும் உன் மச்சத்திற்கு தான் முதலில் கொடுக்கனுன்னு நினைத்தேன்.." என்று நகை மாறாது செப்பினான்.

அதற்கும் எந்த பதிலும் அவளிடம் இருந்து வராது போகவே.... கழுத்து வலைவில் இருந்து நத்தை வேகத்தில் அவனின் உதடுகள் உரிமையாக முன்னேறி அவளின் காது மடலில் சங்கமித்தது!!!

அவனின் கதகதப்பான மூச்சு காற்று வெப்பமான காற்று அவள் முகத்தில் பரவி.... நாடி நரம்புகளை சிலிர்த்து எழ செய்ய...
இது போதாதென்று அடுத்ததாக அவன் உயிரையே வருடும் குரலில்... "ஐ லவ் யூ..." என்று காது மடலில் உரசியபடியே கிசுகிசுத்தவனின்..
வார்த்தைகள் பூகம்பமாய் அவளுள் வெடிக்க... ஓடும் போது கூட தன் மூன்று இன்ச் ஹீல்சில் அனாயாசமாய் செல்லும் அவள் சம தரையில் பேலன்ஸ் இன்றி அவன் மேல் சரிந்தாள்!!!

உணர்ச்சி பிழம்பாய் இருந்தவளின் கொடி இடையை சேர்த்து அணைக்க... முழு பாரத்தையும் அவன் மேல் சரித்து நின்றிருந்தவளின் கன்னத்தை தன் புறங்கையால் மிக மென்மையாக வருடியவனின் கைகள்... மெல்ல அவளின் முகவாயை திருப்ப... யார் அனுமதியையும் பெறாமலே தன் இஷ்டப்படி அவனின் உதடுகள்... தண்ணவனின் தன் ஒளியால் தகதகத்த தாரகையின் செவ்வாயில் செம்மையாக சங்கமித்தது!!! .

எங்கோ ஒரு கோடியில் கடலுக்கு அடியில் வந்த பூகம்பத்தின் பாதிப்பு... மறுகோடியில் இருக்கும் கடற்கறையில் உண்டாக்கு வதை போல.. அவன் சிப்பி இதழில் மூச்சு முட்ட கொடுத்த முத்தமானது... அவளின் கால் சுண்டு

விரல் வரை அதர்வலைகளை பரவ செய்ய... அதன் தொடர்ச்சியாக அலை அலையாய் மேனி முழுவதையும் தாக்குதலை ஏற்படுத்தி... வாழ்க்கையில் முதல் முறையாக தண்ணீரில் முழுவதை கூட ரசிக்க தொடங்கினாள் அலக்நந்தா!!!

புது வருட பிறப்பை கொண்டாடும் விதமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதையோ.. நயன்... எயிட் என்று கவுண்டவுன் ஆரம்பிக்கப் பட்டதையோ அறியாது... அவர்களை தவிர வெளி உலகம் ஒன்று இருக்கிறது என்பதை மறந்து ஒருவருக்குள் ஒருவர் முழுகி இருக்க... புது வருடம் இனிதாய் பிறந்தது!!!

பத்ரியின் பாக்கெட்டில் இருந்த போன் பெருங்குரல் எடுத்து அலறி... அவர்கள் இருவரையும் நிஜவுலகிற்கு திருப்ப.. பிரிக்க முடியாத போதும்... பிரம்ம பிரயத்தனபட்டு அவளை விடுவித்து இரண்டு அடி பின் நகர்ந்து... மூச்சு விடாமல் சிலையாக சமைந்து நின்றவளை பார்த்தவன்.

“ஹே..” என்று அவளின் சிவந்திருந்த கன்னத்தை லேசாக தொட்டு “பீரித்” என்று கூறி

அவன் பேசியது புரியாது போல் மலமலங்க விழித்து நின்றவளைப் பார்த்து. ““மோனல்... பீரித்.. பீரித்..” என்று கையால் காட்டி செய்கை செய்தான்.

மெல்ல தன்னிலைக்கு திரும்புவதன் சாட்சியாக அவள் சுவாசிப்பதை கண்டு முகவாய் குழியுடன் கூடிய சிரிப்பு மலர... அவசரமாக குனிந்து மீண்டும் ஒரு முத்தத்தை பதித்து விட்டு நகர்ந்தான்.

“தேங்க்ஸ் டா கார்த்திக்..” என்றான் பத்ரி போனை எடுத்து காதில் வைத்த அடுத்த வினாடி.

நைட் பன்னிரண்டு மணிக்கு போன் பண்ணா.. நியூ இயர் விஷ் பண்ணாமல்... அவன் நன்றி சொல்லவும் “உன் பக்கத்தில் பாபி இருக்காங்களா?” என்று நேராக விஷயத்திற்கு வந்தான் கார்த்திக்.

“ம்ம்...” என்றான் லேசாக சிரித்தபடி பத்ரி.

“உன் நன்றி நவிலுதலை எனக்கு சொல்லாமல் நம்ம குல தெய்வம் காளிக்கு சொல்லு. இத்தனை நேரம் ட்ரை பண்ணி இப்ப தான் லைன் கிடைத்தது… அடேய் அண்ணா… ஜோசியரை கேட்டு தாலி கட்டாத ஆளுங்கதான் அதுக்காக டாக்டரை டீயூ டேட் கேட்டு தாலி கட்டும் அளவு போயிடாத… அப்புறம் அம்மா காளிக்கு உன்னை பலிகடாவா ஆக்கிடுவாங்க ஞாபகத்தில் வைச்சிக்க!!!” என்று எச்சரித்தான் கார்த்திக்!!!

“அப்படி ஆகாம இருக்க தான்டா ட்ரை பண்றேன்” என்றான் அருகில் இன்னும் தன் திகைப்பில் இருந்து மீளாது அப்படியே பிடித்து வைத்த சிலை மாதிரி நின்றிருந்த அலக்நந்தாவை பார்த்தபடி.

“என்னது ட்ரை…. ட்ரை பண்றயா?!?” என்று அவன் அலறிக் கொண்டு இருக்கும் போதே.. போனில் கார்த்திக் குரல் தோய்ந்து மறைய.. அடுத்த நொடி அழுத்தமான ஆர்யாவின் குரல் கேட்டது.

கார்த்திக் மாதிரி வெட்டியாக பேசிக் கொண்டு இருக்காமல் எப்பொழுதும் போல் நேராக விஷயத்திற்கு வந்தவன் தம்பிக்கு புத்தாண்டு வாழ்த்து சொல்லி விட்டு… “ஒழுங்கு மரியாதையா… இருக்கற மாதிரி இருந்தா அங்க இரு.. இல்லை… அவளை அழைத்துக் கொண்டு வந்து இங்க குடும்பம் நடத்தும் வழியை பார்.. அதை விட்டு ட்ரை பண்ணறேன்னு சொல்லிட்டு கார்த்திக் சொன்ன மாதிரி ஏதாவது பண்ணி வைத்த.. மகனே.. அம்மா காளிக்கு பலி கொடுக்கும் முன்னாடி… நான் உன்னை பலி கொடுப்பேன்” என்று மிக கடுமையாக எச்சரித்தான் இரண்டு வருடம் முன்பு வரை ப்ளே பாயாக உலக பிரசித்த பெற்ற ஆர்யா.

“ஸ்பா… வாழ்த்து கூடவே எச்சரிக்கையும் வருது.. ஒரு மார்க்கமாதான் இந்த புத்தாண்டு விடிந்திருக்கு…” என்றபடி அதை விளையாட்டாவே எடுத்துக் கொண்ட பத்ரி.. “அடுத்த மாசம் ஸ்பேனுக்கு போவன்னு சொன்ன இப்ப என்னடா திடீரென்று அடுத்த வாரமே போற… அதுவும் சௌவிக்கு டியூ டேட் பக்கத்தில் நெருங்கும் இந்த நேரத்தில் இதை எல்லாம் தவிர்க்க கூடாதா டா??” என்றான் பத்ரி.

“இப்ப போகலை என்றால்.. அப்புறம் சரியாக டெலிவரி டைமில் போக வேண்டியதா இருக்கும் பத்ரி… அதனால தான் இப்பவே போயிட்டு வந்திடலான்னு… இருக்கேன். இரண்டே நாளில் திரும்பி வந்துடுவேன்”

என்று மொழிந்துக் கொண்டு இருக்கும் போது ஷங்கி வந்து “நான் இன்னும் அண்ணனுக்கு வாழ்த்து சொல்லவில்லை” என்று போனை அவள் கையில் பிடுங்க.. அடுத்த பத்து நிமிஷம் வீட்டில் இருக்கும் எல்லோருக்கும் வாழ்த்து சொல்லிவிட்டு வைத்தனர்.

ஒரு பெருமூச்சுடன் போனை சென்டர் டேபிளில் வைத்து விட்டு.. அவளிடம் நெருங்கியவன்… “உன்னுடைய கிரவிட்டி முன்னாடி என்னுடைய செல் கல்ரோல் ஒன்னுமே இல்லை… நான் ஏன் இரண்டு அடி தள்ளி நில்லுன்னு அன்றைக்கு சொன்னேன்னு இப்ப புரிந்திருக்கும்…..” என்று விரக்தியாக தாடையை தடவியவன் “இந்த பத்து நாள்.. உன்னைப் பார்க்காமல் எப்படி போக போகுதோன்னு நினைத்தேன் ஆனா நீ போறது கூட ரொம்ப நல்லதோன்னு இப்பதான் தோன்றுகிறது அலக்நந்தா…” என்று அவன் சொல்ல..

எந்த பதிலும் சொல்லாமல் அவனைப் பார்த்தவள் தலையை மட்டும் ஆட்டி விட்டு, “குட்நைட்” ஒன்றை மொழிந்து விட்டு தன் அறைக்குள் தஞ்சம் புகுந்தாள்.

அடுத்த இரண்டு நாளும் அவளுடன் பேசினாலும் ஏனோ முன்பு போல சகஜமாக பேச முடியாது சற்றே ஒதுங்கி போக… அவனும் அவளுடைய ஒதுக்கத்தை ஏற்றுக் கொண்டு அமைதியாகவே இருந்தான்.

இவர்களுக்கு இடையே நடக்கும் அந்த மௌன போராட்டத்தை கண்ணுற்ற சித்… “என்னடா அடுத்த சண்டையா?? இல்லை முதல் சண்டையையே முடிக்க வில்லையா?” என்று கேட்ட நண்பனிடம் அப்பட்டமாக பொய் சொல்ல விரும்பாது எதுவும் சொல்லாமல் தோளை குலுக்கினான் பத்ரி.

“நீயும் இல்லன்னா ஒருவேளை அந்த பையனா இருக்குமோ??” என்றான் சித் யோசனையுடன்.

சட்டென்று உடல் விரைக்க “எந்த பையன்??” என்றான் பத்ரி.

“ம்ச்சு அதுதான் டா அந்த முறைப்பையன் எப்ப அலக்நந்தாவை பார்த்தாலும் முறைத்துக் கொண்டே போவானே.. நேற்று நானும் அபியும் நடந்து வரும்போது அலக்நந்தாவிடம் என்னமோ பேசிக் கொண்டு

இருந்தான். நான் வேகமாக அவங்களை நோக்கி வருவதை பார்த்துவிட்டு அவசரமாக திரும்பி போய் விட்டான்" என்றான் சித் தன் விரித்து விட்டிருந்த முடி தோள் வரை வந்து ஆட.

"ஓ.." என்று இழுத்தவன், "என்னன்னு அலக்நந்தாவிடம் கேட்டியா?" என்றான் பத்ரி தாடையை தடவியபடி.

"ம்கூம்... அப்படியே கேட்டாலும் என்னிடம் ஒன்று விடாமல் சொல்லி விட்டு தான் மறு வேலை பார்க்க போகிறாளாக்கும்" என்று எரிச்சலாக பதில் அளித்தான்.

"ம்ம்.. நான் பார்த்துக்கிறேன்" என்று பதிலுக்கு மொழிந்த பத்ரி அன்று மாலையே அவனை தேடி சென்று சந்தித்தான்.

"ஹோய் ரோகன்.." என்றான் புல் தரையில் நடந்து வந்தவனை பார்த்து கை ஆட்டினான் பத்ரி.

இவனை அடிக்கடி அலக்நந்தாவுடன் பார்த்திருக்கிறான் என்பதாலோ எதுவும் பேசாது பதிலுக்கு "ஹாய்" என்று சொன்னபடி அவனைக் கடந்து சென்றான் அந்த ரோகன்.

"ஏய்.. நில்லு.. நான் உன்னை பார்க்க தான்.. அந்த பில்டிங்கில் இருந்து வந்தேன்".

"என்னைப் பார்க்கவா??" என்று நின்று திரும்பி பார்த்தவன்.. "என்ன விஷயம்?" என்றான் இவனை முறைத்து பார்த்தபடி.

"ரோகன் இப்ப பார்க்கறியே அது மாதிரி என்னை எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும்.. பார்... ஆனா உன் கிளாஸ்மேட் அலக்நந்தாவை அப்படி பார்க்காதே.. அப்புறம் முக்கியமா பேசவும் செய்யாதே.." என்றான் விளையாட்டாகவே.

அவர்களை கடந்து செல்பவர்களுக்கு அவர்கள் என்னவோ ஜாலியாக பேசும் படியாக தெரியும் படி!!!

“நான் யாரை பார்க்கனும்.. யாரை பார்க்க கூடாதுன்னு சொல்ல நீ யார்?” என்று வெகுண்டான் ரோகன்.

“அரே… இப்ப நீ ரோட்டில் போகும் போது… ஆக்சிடன்ட் ப்ரோன் ஸ்சோன் என்று எழுதி இருந்தால்.. ஜாக்கிரதையாக.. கவனித்து வண்டி ஓட்டுவியா.. இல்லை இதை யாரு இங்க நட்டு வைத்துன்னு ஆராய்ச்சி பண்ணுவியா? அதே மாதிரிதான் இதுவும் ரோகன்.. நான் யாரோ ரோட்டில் பார்க்கும் ஒரு காஷன் போர்டுன்னு வைத்துக் கொள். அலக்நந்தா இருக்கும் பக்கம் உன் பார்வையை திருப்பாத வரை உனக்கு நல்லது… இதை எச்சரிக்கையா எடுத்தாலும் சரி.. இல்லை மிரட்டலாக எடுத்தாலும் சரி.. உன் இஷ்டம்.. ஆனா இதை விளையாட்டா மட்டும் எடுத்துக்காதே.. அடி படுவாய்.. அவ்வளவுதான் மேட்டர்..” என்று சிரித்த முகமாகவே மொழிந்தவன் பட்டென்று திரும்பி மெல்ல ஜாக் செய்து பில்டிங்கை நோக்கி சென்றான் பத்ரி.

அன்று மாலை புறப்பட எல்லாம் தயாராக இருக்க.. இன்னமும் அலக்நந்தா அவனுடன் ஒரு வார்த்தையாகவே பேசிக்கொண்டு இருக்க.. அதை பற்றி எதையும் பெரிதாக கண்டுக்கொள்ளாது அமைதியாக எப்பையும் போல் தன் கிலாஸிற்கு கிளம்பி சென்றான் பத்ரி.

மத்தியம் ஒரு மணி அளவில் அவன் போனில் “எங்க இருக்க?” என்று அதிகாரமாய் அவளிடமிருந்து மேசேஜ் வந்தது.

“கிளாஸ் ரூமில் தான் வேற எங்கே??” என்று பதில் அனுப்பினான் பத்ரி.

“நான் இன்று ஊருக்கு போறேன்…” என்று அடுத்த நொடி அவளிடமிருந்து மேசேஜ் வந்தது.

“தெரியுமே…”

அடுத்த ஐந்து நிமிடம் எந்த பதிலும் வராமல் அமைதியாக இருக்க.. எதுக்காக இப்ப மேசேஜ் செய்தாள் என்று யோசனையோடு அமர்ந்திருக்கும் வேலையில் தான் “நான் உன்னுடன் பேச வேண்டும்… மூன்று மணிக்கு சித் வரும் முன்பு வர முடியுமா?” என்ற கேள்வியுடன் அவளிடம் இருந்து மேசேஜ் வந்தது.

"ம்ம்" என்று பதில் அனுப்பிவன் சொன்னது போலவே சித் கிளம்பி வரும்முன் ஏதோ வேலை இருப்பதாக சொல்லிவிட்டு சீக்கிரம் ரூமிற்கு வர.. கையை பிசைந்தபடி குறுக்கும் நெடுக்குமாய் நடந்தவளைப் பார்த்து “ஹாய்” என்றான் லேசாக சிரித்து.

“ஹாய்” என்றவள்.. மேலும் கையை பிசைய..

அமைதியாக கவுச்சில் வந்து அமர்ந்தவன் எதுவும் பேசாமல் ரூமை அவள் நடைபழகிக் கொண்டு இருப்பதைப் பார்த்தபடி இருந்தான்.

ஐந்து நிமிடம் அப்படியே நடந்தவள்… பின் சோர்ந்து போய் அவனுக்கு பக்கத்தில் வந்து தொப்பென்று உட்கார்ந்தாள்.

எப்பொழுதும் போல் தன் ஆஸ்தான ரீக்ளினரில் உட்காராமல்.. அவன் பக்கத்தில் அதுவும் அவன் சொல்லாமலே அவளாக வந்து அமர்வது எவ்வளவு பெரிய விஷயம் என்று அவனுக்கு மட்டும் தான் தெரியும்!!!

“என்ன விஷயம்னு கேட்க மாட்டியா பத்ரி??” என்றாள் எரிச்சலாக

“வான்னு சொன்னா.. ஏதோ சொல்ல தான் அழைத்திருப்பன்னு தெரியும். அதனால் தான் நீயா சொல்லும் வரை நான் அமைதியாக இருந்தேன்” என்றான் பத்ரி உள்ளே பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி.

“ம்ம்..” என்று பெருமூச்சு ஒன்றை விட்டவள்.. “உன்னிடம் பேசாமல் முறைத்துக் கொண்டு ஊருக்கு போக பிடிக்கவில்லை.. பத்ரி..” என்றாள் சின்னதாகி விட்ட குரலில்.

“ம்ம்..” என்றான் பத்ரி அமைதியாக.

“நியூ இயர்... அன்று” என்று அவள் பேச ஆரம்பிக்க..

அவசரமாக அவளின் உதட்டில் ஆள் காட்டி விரலை வைத்து “ஷ்ஷ்ஷ்” என்று அவளை அடக்கியவன்.. “என்னோட பெஸ்டான நியூ இயரைப் பற்றி எதாவது பேசி அதை ஸ்பாயில் பண்ணி விடாதே மோனல்....” என்று

அவளின் கண்களைப் பார்த்து சொன்னான்.

பெருமூச்சு ஒன்றை விட்டவள் பின் அமைதியாக தலையை ஆட்ட…

“எதைப் பற்றியும் நினைத்து ரொம்ப குழப்பிக்காதே… பீ கூல்.. ஊருக்கு போயிட்டு வா.. எங்க போனாலும் நைட் மட்டும் மறக்காமல் கால் பண்ணு.. உன் குரல் கேட்கலன்னா இங்க என்னால் நிம்மதியா தூங்க முடியாது?!?” என்றான் உணர்ச்சி பூர்வமாக.

“ம்ம்” என்று அதற்கும் தலையை ஆட்டியவள்.. மெதுவாக அவன் விரலை எடுத்து அவள் கைக்குள் புதைத்துக் கொண்டு.. “பத்ரி” என்று அவள் இழுக்க..

“செமினாரை நல்ல படியா முடித்து விட்டு வா.. நான் எங்கேயும் போக போறதில்லை.. இங்க தான் இருப்பேன்..” என்று லேசாக புன்னகைத்தான்.

“தேங்க்ஸ் பத்ரி” என்று அவனுடைய கையை அழுத்த..

“ரீச் ஆனவுடன் கால் பண்ணு” என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே சித் வரும் சத்தம் கேட்க.. இதற்கு மேல் சித்தின் முன்னிலையில் எதுவும் சொல்ல பிடிக்காது.. கையை உறுவிக் கொண்டவன் அமைதியாக தலை ஆட்டினான்.

அவள் சென்ற இரண்டாம் நாளில் இருந்து.. ஊரில் இருக்கும் வேலை எல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்த போதும் அவளைப் பற்றிய சிந்தனை… தூங்கும் நேரம் தவிர… உள்ளுக்குள்ளே ஓடிக்கொண்டே இருக்கும். அவளைக் காணாது தத்தளித்துக் கொண்டு இருக்கும் வேலையில் தான் நேரம் காலம் இல்லாமல் சித் கூட, அவளுடைய இராணி டீயையும் சப்பாத்தி ரோலையும் ரொம்ப மிஸ் செய்வதாக சொல்லி வைக்க.. பற்றிக் கொண்டு வந்தது பத்ரிக்கு!!!

தினமும் இரவு பத்து மணிக்கு தொடர்ந்து ஐந்து நாள் இரவு போன் செய்தவள்.. ஆர்.பி.ஐயில் வேலை முடிந்துவிட்டதாகவும்… நாளை ஆரம்பிக்க இருக்கும் செமினாருக்காக அன்று மாலையே பஸ்சில் கிளம்பி சிட்டியை விட்டு சற்று ஒதுங்கி இருக்கும் பீச் ரீசாட்டில் தான் மீதி மூன்று நாளும் தங்க போகவதாக கூற.. அந்த குரலில் தெரிந்த ஒரு வித்தியாத்தை

கேட்டவனுக்கு “திக்” என்றது!!!.

எத்தனை சந்தோஷமாக செமினாருக்கு கிளம்பினாள்.. ஆனால் இப்ப ஏன் குரலில் அத்தனை சோகம்.. அல்லது பயமா? என்று சந்தேகம் மனதை நிறப்ப அதை பற்றி கேட்காமல் “சரி அங்கே போய் சேர்ந்ததும் கூப்பிடு” என்று மட்டும் கூறிவிட்டு அமைதியாக போனை வைத்து விட்டாலும் அந்த குரலில் இருந்த ஏதோ ஒன்று அவனை கலவரப்படுத்தியது..

சொன்னது போலவே ரிசாட் சேர்ந்தவுடன் போன் செய்தவள் ரொம்ப தலை வலிப்பதாக கூறிவிட்டு உடனே போனை வைத்து விட அவனின் சந்தேகம் இன்னும் வலுப்பற்றது!!!

என்னவென்று தெரியாது அவன் மண்டையை உடைத்துக்கொண்டு தூங்க முடியாமல் யோசித்துக்கொண்டு இருக்க.. சரியாக இரவு ஒரு மணிக்கு அலக்நந்தாவிடம் இருந்து போன் வந்தது!!!

போனை எடுத்தவுடன் “என்னாச்சு மோனல்??” என்றான் இல்லாத அமைதியை குரலில் காட்டி.

“எனக்கு.. எனக்கு.. செமினாருக்கு பீச் ரிசாட்டில் தங்க ஏற்பாடு ஆகி இருக்குன்னு தெரியாது.. தூக்க முடியலை.. நேரமாக.. நேரமாக அலை ஒசை ரொம்ப கேட்குது...” என்றாள் தட்டு தடுமாறி.

இதில் இருந்து என்ன மாதிரி அர்த்தம் பண்ணி கொள்வது என்று தெரியாது “சரி... அதுக்கு?” என்றான் குழப்பமாக.

மயான அமைதி சூழ.. ஐந்து நிமிடம் பொருத்தவன்.. “மோனல்... என்ன பிரச்சனை??” என்று தழைந்த குரலில் கேட்டவன் “நான் உன் பக்கத்தில் இல்லை.. உன்னை பார்த்து நீ சென்னது பாதி சொல்லாது மீதியாய் என்னால் யூகிக்க முடியாது.. அதனால் என்னிடம் தயவு செய்து நேரடியாக சொல்லு?” என்றான் பத்ரி சற்றே அதட்டலாக.

“என்னால் அலை ஒசை காதில் விழ... இங்கே ரூம்மில் தூங்க முடியவில்லை.. பத்ரி.. ஏன்னா.. நான்.. நான்... ” என்று அதற்குமேல் பேச முடியாது தொண்டை அடைக்க...

“உனக்கு அக்குவா போபிக்(AQUA PHOBIC)” என்று கண்களை இருக்க மூடி பதில் சொன்னான் பத்ரி.

இன்று….

அலக்நந்தாவிடம் இருந்து போன் அழைப்பு வரும் போது அவளிடம் பேசும் மனநிலையில் இல்லாத போதும் அதை அலட்சியம் செய்ய மனம் வராத காரணத்தினால் போனை எடுத்தவனுக்கு நிகாரிக்காவின் குரல் காதில் விழ.. ஆச்சரியமாக இருந்தது.

“ஹேய்… அலக்நந்தா கிளம்பும் அவசரத்தில் போனை இங்கயே மறந்து வைத்து விட்டாள்.. நானே அங்கு வந்து தருவதை அலக்நந்தா விரும்ப மாட்டாள்…. வேற யாரிடமும் கொடுக்க எனக்கு பிடிக்கலை அதனால் தான் உங்களுக்கு போன் செய்தேன்” என்று சற்றே தயங்கியபடி தான் போன் செய்த காரணத்தை தெரிவித்தாள்.

அவள் கேட்ட கேள்விக்கு எதுவும் பதில் சொல்லாது “அலக்நந்தா எப்போ கிளம்பினாள்?” என்றான் யோசனையாக.

“இப்ப தான் ஐந்து நிமிஷமாச்சு” என்று அங்கிருந்து பதில் வர..

“ம்ம்.. ” என்பதற்கு மேல் எதுவும் சொல்லாது வைத்து விட்டான்.

ஜெர்கினையும் லேதர் கவுஸ் எடுத்து மாட்டிக் கொண்டே ரூமை விட்டு வெளியே வருவதை பார்த்த சித்..

“இப்ப தானடா வந்த.. திரும்பவும் இந்த குளிரில் எங்கடா போற?” என்றான் அவனைப் பார்த்து.

“அலக்நந்தாவை கூப்பிட போறேன்..” என்றான் அமைதியாக.

“வாட்???? வாட்?? இவ்வளவு லேட்டாகியும் இன்னும் அலக்நந்தா வரவில்லையா?!?” என்றபடி அலக்நந்தாவின் ரூமை அதிர்ச்சியாக

பார்த்தான்.

ம்ம்..” என்பதற்கு மேல் எதுவும் சொல்லாமல் விரக்தியாக தாடையை தடவியவன்.. “சித் நான் உன்னிடம் பொய் சொல்ல விரும்பவில்லை.. நின்னு பேச எனக்கு நேரம் இல்லை… நாளைக்கு எல்லா கதையும் விளக்கமாக சொல்றேன்... இப்ப நான் அங்க போவதற்குள் அலக்நந்தா இங்க வந்துவிட்டால்.. எனக்கு போன் பண்ணி சொல்.. அவளிடம் போன் இல்லை” தன் வுட்லேன்டை அணிந்தபடியே மொழிந்தவன். சித் சரி என்று தலையை ஆட்டுவதை கூட பார்க்காது புயல் வேகத்தில் கீழே இறங்கினான்.

வெளியே உயிரை உறைய வைக்கும் குளிர் அடித்த போதும் உள்ளே அவனுக்கு தகதகவென்று கனன்று கொண்டு இருந்த வெண்கனல் அதை உணர விடாது தள்ளியே நிறுத்த.. எப்பொழுதும் அவர்கள் வரும் பாதையில் அலக்நந்தா வருகிறாளா என்று பார்த்துக் கொண்டே சென்றவனுக்கு அவள் அகப்படாது போக.. ஏன் என்றே புரியாது ஒரு பயம் மனதை பந்தாக அடைத்தது.

அட்மின் பில்டிங் வந்து வண்டியை நிறுத்தியவன் அவசரமாக தன் போன் எடுத்து சித்திற்கு போன் செய்ய..

ஹல்லோ.. என்று கூட சொல்லாது ரத்தின சுருக்கமாக “அலக்நந்தா இன்னும் வரவில்லை” என்றான் உற்ற நண்பனின் தேவை அறிந்த சித்.

“ம்ம்..” என்று போனை வைத்தவன் அட்மின் ஆபிசிற்குள் செல்ல.. அவர்கள் மூவரும் அங்கே தான் இருந்தனர்.

இவனைப் பார்த்தவுடன் அருகில் வந்த நிகாரிக்கா… மெல்ல புன்னைகைத்து அவனிடம் போனை நீட்ட எதுவும் சொல்லாமல் பெற்றுக் கொண்டு பத்ரி திரும்பினான்.

“ஒரு நிமிஷம்..” என்று அவனை தடுத்த நிறுத்திய நிகாரிக்கா.. அவன் திரும்பியவுடன் “அலக்நந்தா ஆற்றில் விழுந்தவுடன் நீங்க தான் காப்பாற்றி….” என்று அவள் ஆரம்பிக்கும் போதே..

“அவளுக்காக நான் செய்ததற்கு நீங்க நன்றி சொல்ல வேண்டிய அவசியம்

இல்லை.. உங்க குற்ற உணர்வை போக்க நன்றி சொன்னிங்கன்னா எந்த ஜென்மத்துக்கும் உங்க நன்றியை நான் ஏற்க மாட்டேன்" என்று முகத்தில் அடித்த மாதிரி பதில் சொன்னான் பத்ரி.

பளார் என்று அரைந்தது போல் நிகாரிக்காவின் கால்கள் பின்வாங்க "பத்ரி.... என் தங்கை..." என்று அவள் எதையும் சொல்ல முடியாது தள்ளாட..

"தங்கையாம்.. தங்கை.. இத்தனை வருஷம் அப்படி ஒருத்தி இருக்கிறாளேன்னு உங்களுக்கு ஞாபகம் இருந்த மாதிரியே தெரியலையே.. இப்ப என்ன திடீர் தங்கச்சி பாசம்?? ஒரு வருஷத்தில் அவளுடன் எத்தனை நேரம் நிமிஷம்... ஓ.. சாரி எத்தனை நொடி பேசுவதில் செலவு பண்ணி இருப்பீங்க?? உங்களை விட்டு ரொம்ப தூரம் தள்ளி இருக்காளே.. அவள் போன் நம்பர் தெரியுமா?" என்று அவன் அடுக்கிக் கொண்டே போக..

பதில் சொல்ல தெரியாது திகைத்தாள் நிகாரிக்கா.

"இதோ நீங்க கொடுத்தீங்களே இந்த போன்... இதில் மூன்று நம்பர் மட்டும் தான் இருக்குன்னு அவள் சொன்ன போது.. நான் கூட உங்க மூன்று பெயர்தான் இருக்குன்னு நினைத்தேன். ஆனா அப்புறம் தான் தெரிந்தது... அது அவளுடைய டாக்டரும், லாயரும், ஆடிட்டர் பெயரும் மட்டும் தான் இருக்கு... ஏன்னா... உங்க நம்பர் அவள் இதில் வைக்கவில்லை.. இங்க வைத்திருக்கிறாள்" என்று நெஞ்சை தொட்டு காட்டினான்.. "அன்னைக்கு அவள் ஆற்றில் விழுந்து ப்ராக்சர் ஆனப்ப... எனக்கு போன் பண்ணி சொல்ல யாரும் இல்லைன்னு சொன்னா..." என்று சொன்னபோது அவன் கைகள் முறுக்கேறி கழுத்து நரம்பு துடித்தது.

நல்லவேளை அப்ப உங்க யாரையும் எனக்கு தெரியாதது உங்களுக்கு நல்லதா போச்சு..." என்று அவர்கள் எல்லோரையும் கையை காட்டி பேசியவன் "அவளுக்கு இங்க இருப்பதை எல்லாம் பேச முடியாது... ஆனா எனக்கு தெரியும்.. ஷி லவ்ஸ் யூ லைக் கிரேசி... அவளுடைய அன்பிற்கு உங்க ஒருதருக்கு கூட அருகதையும் இல்லை தகுதியும் இல்லை."

"இதுவரை அலக்நந்தா உங்களை "அக்கா" என்று கூப்பிட்டு அறிவேனே தவிர ஒருமுறை கூட பெயர் சொல்லி அழைத்ததில்லை... உங்க மேல் அவள் வைத்திருக்கும் பாசத்திற்கு மதிப்பு கொடுத்துதான்.. நான் இப்ப

உங்களுடன் நின்று மரியாதையாக பேசிக்கொண்டு இருப்பது. மற்றபடி எந்த காரணத்திற்காகவும்.. உங்க முகத்தில் விழிக்க நான் விரும்ப வில்லை… இதோ அங்கே நிற்கிறார்களே அவர்களை கூட என்னால் மன்னிக்க முடியும்… ஆனால் வாழ்க்கையில் மன்னிக்கவே முடியாத ஒரு ஜீவன் நீங்க…" என்று ஆக்ரோஷமாக மொழிந்தான்.

"பத்ரி.. நான் எதையும் வேண்டும் என்று செய்யவில்லை.." என்று காற்றாகிவிட்ட குரலில் மன்றாடலுடன் அவள் கூற..

தெனாவெட்டாக சிரித்தவன் "நீங்க வேண்டும் என்று செய்யவில்லை.. அவள் வேண்டாம் என்று தான் செய்திருக்கீங்க.. ஏழு வயது சிறுமி… அதுவும் நீச்சல் தெரியாதவளை ஸ்வீமிங் பூலின் ஆழமான பகுதியில் தள்ளி விட்டு அவள் தண்ணீருக்கு அடியில் முழுகுவதைப் பார்த்துவிட்டு அப்புறம் பயந்து போய் காப்பாற்றி இருக்கியே… ச்ச்ச என்ன மாதிரி சேடிஸ்ட் அக்காடீ நீ… அன்று நீ தள்ளி விட்டதால் அலக்நந்தான்னு ஒரு நதியின் பெயர் இருந்தும் அவளுக்கு அக்குவாபோபியா(AQUAPHOBIA)… தண்ணீன்னா ரொம்ப ரொம்ப பயப்படுவான்னாவது உனக்கு தெரியுமா?" என்று அவன் குரோதம் கொப்பளிக்க கூற..

பெற்றவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அதிர்ச்சியாக பார்த்துக் கொண்டனர்.

ஐ லைனரும்… மஸ்காரவும் இட்ட நீண்ட கண்கள் கலங்கி நீர் தளும்பி வழிந்தது..

"நீ தள்ளி விட்டதை என்னிடம் சொன்னது கூட அவளே அறியாமல் உளறியது தான்..!! சின்ன வயதில் வேறு யாரிடமாவது அவளை நண்பர்களாக பழகவாவது விட்டு இருக்கியா நீ? அவள் கஷ்டப்பட்டு பகல் இரவு பாராமல் சினிமாவில் நடித்து நேஷனல் அவார்டு வாங்கினா என்பதை தவிர உனக்கு என்ன துரோகம் பண்ணினா?? அவளைப் பிடிக்காவிட்டால் ஒதுங்கி போயி இருக்கலாமே… பதினாறு வயது வரை அவளை வாழ்க்கையை நரகமாக்கிய… உன்னை மாதிரி சிக் சாடிஸ்ட் சைக்கோ… என் வீட்டிற்கு வருவதை.. விரும்பவில்லை.. எந்த காரணத்திற்கும் என் வீட்டு பக்கம் வராதே… நாம் பேசுவதும்.. பார்ப்பதும் கூட இது தான் கடைசியாக இருக்கனுன்னு ஆசைப்படறேன்!!!" என்று

ஆவேசமாக மொழிந்தவன் பின்னாடி திரும்பி பார்க்காது மடமடவென்று நடந்தான்.

பைக்கில் ஏறி அமர்ந்தவன் அவசரமாக போனை எடுத்து சித்திற்கு பேச... அவனும் இன்னும் வரவில்லை என்ற பதிலை சொல்ல... மனதை பயம் சூழ எங்க டீ போய் தொலைந்த? என்று மனதார திட்டியப்படிய பயமும் கோவமும் போட்டி போட.. தன் ஆத்திரத்தை எல்லாம் பைக்கில் காட்டி டூகாட்டியை ஸ்டார்ட் செய்தான்.

வண்டியை திரும்பியவன் எதற்கும் இருக்கட்டுமே என்று ஷாட் ரூட்டில் திருப்ப.. அடுத்த பத்தாவது நிமிடம் அவன் அலக்நந்தாவையும் அவள் கையில் வைத்திருந்த குட்டி ஹிமாலயன் ஓநாயையும் காண இதயம் உரைந்து நின்றது!!!

அத்தியாயம் - 25
மூன்று வாரத்திற்கு முன்பு...

"உனக்கு அக்குவா போபிக்(AQUA PHOBIC)" என்று கண்களை இறுக மூடி பதில் சொன்னான் பத்ரி.

ரூமில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடியே அவளுடன் பேசிக் கொண்டு இருந்தவன்... அதை சொன்ன அடுத்த நொடி அவனின் கைகள் தானாக நெற்றியை வேகமாக அடித்துக் கொண்டது..

அன்று அவள் தண்ணீருக்குள் விழுந்த போது ஒரு சின்ன முனுமுனுப்பு கூட இல்லாது கிணற்றில் விழுந்த கல் மாதிரி முழுகியது கை ப்ராக்சர் ஆனதால் தான் என்று யூகித்தது எவ்வளவு பெரிய தவறு என்று அந்த கணம் புரிந்தது!!

நீச்சல் தெரியாதவர்கள் தண்ணீருக்குள் விழும் போது அது இரண்டு அடி தண்ணீராக இருந்தாலும் எப்படி பயந்து தத்தளிப்பார்கள் என்று நூற்றுக்கணக்கான முறை பார்த்திருக்கிறான்.. ஆனால் அன்று அவள் ஆற்றில் விழும் போது எந்த வித அசைவும் இல்லாது உரைந்து போய் அப்படியே முழுகியதற்கும்... அத்துடன் அவன் நீச்சலுக்கு போகிறேன் என்று

சொல்லிவிட்டு போகும் போதும் எல்லாம் முகம் வெளுத்து தலை அசைத்ததுக்கும் இதுதான் காரணம் என்று தாமதமாக விளங்க எங்கயாவது தலையை முட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது!!!

“காட் டாமிட்.. கழுத்தில் இருக்கும் மச்சத்தை கூட உண்ணிப்பாக கவனிக்கும் அவன்... கண்ணிற்கு முன்னால் போர்டு மாட்டி தொங்காத குறையா இருக்கும் இந்த போபியாவை எப்படி கவனிக்க தவறினான்...” என்று அவன் மேலே கோபம் வர... அதைக் கட்டுக்குள் வைக்க தெரியாது அவன் திண்டாடிக் கொண்டு இருக்கையில் தான்...

சற்றே நடுங்கிய குரலில் “ப..த்ரி” என்றது பயத்தின் உச்சியில் இருந்த அலக்நந்தாவின் குரல்.

அவனுள் கரை காண முடியாது ஆற்று வெள்ளாமாய் பொங்கிய கோபம்... அந்த குரலை கேட்ட மாத்திரத்தில் தன் அப்படியே வடிந்து வற்றிப் போக... சட்டென்று தன்னிலைக்கு திரும்பியவன்... ஆழ்ந்த மூச்சு எடுத்து தன்னை சமாதானம் படுத்திக்கொண்டு...

“மோனல்.. இந்த நிமிஷம் உன்னுடன் இருக்க நான் எவ்வளவு தவிக்கிறேன்னு வார்த்தையால் சொல்ல முடியாது...” என்று சொல்லோன்னாத மனவருத்தத்துடன் கூறியவன்..

“அன்று உன்னிடம் என் அப்பா கல்யாணத்தின் போது.. தவறாக மாற்றி தாலி கட்டினாருன்னு சொன்னே ஞாபகம் இருக்கா?” என்றான் சம்பந்தா சம்பந்தம் இல்லாது.

“ம்ம்...”

“என் அப்பாவிற்கு இடது வலது புரியாது... இந்த லெப்ட் ரைட் கன்புயூஷன் வியாதிக்கு பெயர் கூட கிடையாது.. பெயரே இல்லாத வியாதிக்கு மருந்து ஏது மருத்துவம் ஏது? ஆனால் அவரால் நாலாயிரம் கோடி பிசினசை திறம்பட நடத்த முடியும்... இதே நோய் என் தங்கை ஷங்கிக்கும் இருக்கு.. அவளை மாதிரி ஒரு துடிப்பான ஆளை நீ பார்த்திருக்கவே முடியாது.. இவர்களுக்கு இந்த பிரச்சனை இருப்பதால் என் அன்பு எந்த விதத்திலும் மாறப் போவதில்லை... அதே மாதிரி தான் நீயும்..” என்று நிறுத்தி ஆழ்ந்த

பெரு மூச்சு விட்டவன்.

“என்னால் இரண்டு மணி நேரம் தொடர்ந்து நீச்சல் அடிக்க முடியும் ஆனால் மூன்று நிமிஷத்திற்கு மேல் தண்ணீருக்குள் மூச்சு விடாமல் இருக்க முடியாது.. நீ என் மூச்சு அலக்நந்தா..” என்று அவளின் போயியா எந்த விதத்திலும் அவனின் அன்பை மாற்றவில்லை என்பதை அழுத்தமாக சொல்லி முடித்தவன் “உன்னுடைய செமினார் எப்போ வருது?” என்றான் பத்ரி சச்சிதேவாக நிமிர்ந்து.

“கடைசி நாள்” என்றாள் குரல் தழுதழுக்க.

“குட்...” என்று குறுக்கும் நெடுக்குமாக ஒரு நிமிடம் நடந்தவன்... “நான் சொல்வதை ஏன் எதற்குன்னு கேட்காது செய்” என்று அதிகாரமாக கட்டளை இட்டு விட்டு...

“முதலில் உன் டி.வியை ஆன் செய்து அதில் ஏதோ ஒரு மியூசிக் சேனலை வை... கொஞ்சம் சவுண்ட் அதிகமாக” என்று சொல்ல அப்படியே செய்தாள் அலக்நந்தா.

“உன்னிடம் ஹேட் போன் இருக்குல்ல.. ? அதை காதில் சொருகு...” என்று கட்டளை பிறப்பித்தவன் ஒரே நிமிட இடைவேளையில் “ஆச்சா?” என்று அவளை துரதப்படுத்தினான்.

“ம்ம்..” என்று அவள் மெல்ல முனக..

“யூ டியூப் போய் நீ ரொம்ப கஷ்டப்பட்டு கற்றுக் கொண்ட டான்ஸ் பாட்டை தேர்வு செய்.. அதை ஃபுல் சவுண்ட் வைத்து காதில் வைத்து கண்களை மூடி கேட்டுக் கொண்டு இரு.. நான் சரியாக பத்து நிமிஷத்தில் உன்னை திரும்ப அழைக்கிறேன்..” என்று வரிசையாக உத்தரவு இட்டவன் வேகமாக போனை கட் செய்தான்.

சொன்னது போலவே பத்தாவது நிமிஷம் போன் செய்தவன் இவள் எடுத்த அடுத்த நொடி..

“மோனல்.. முதல் ப்ளைட் விடியகாலை நான்கு மணிக்கு சென்னைக்கு

இருக்கு… அங்க நம்ம ப்ளாட்டில் தான் நிரல்யா தங்கி இருக்கா… அவளுடன் இரண்டு நாள் இரு.. உன் பேப்பர் ப்ரஸன்டேஷன் அன்று அங்கிருந்து நீ கொச்சி கிளம்பலாம்… அப்படி உனக்கு சென்னை போய் நிரல்யாவுடன் தங்க இஷ்டம் இல்லைன்னா… கொச்சியிலேயே சிட்டிக்குள்ள தங்க ஏற்பாடு செய்யறேன்… ஆனால் நீ மட்டும் தனியா அங்க இருப்பது எனக்கு பிடிக்கவில்லை… நான் கிளம்பி…”

“வேண்டாம்.. பத்ரி நான் சென்னைக்கே போறேன்” என்று அவசரமாக மறுத்தவள்… “இங்க ப்ரோபசரிடம் சொல்லனுமே” என்று இழுக்க..

“அதை நான் பார்த்துக்கறேன்… இன்னும் ஒரு மணி நேரத்தில் உன் ரூமை காலி செய்து விட்டு கீழே போனேன்னா.. டாக்சியும் ப்ளைட் டிக்கெட்டும் ரிஸப்ஷனில் ரெடியா இருக்கும்… சென்னையில் கார்த்திக் வந்து உன்னை பிக்அப் செய்து கொள்வான்… அவனோட போன் நம்பரை அனுப்பறேன்…” என்று மளமளவென்று தன் ஆக்ஷன் ப்ளானை ஒப்பித்தான் பத்ரி.

“ம்ம்.. கார்த்திக் எப்படி சென்னையில்??” என்று இழுக்க.

“பிசினஸ் விஷயமாக சென்னை வந்தவன் அங்கே தான் இருக்கான், நிரல்யாவை நினைத்து ரொம்ப டென்ஷன் ஆகாதே… உனக்கு நிச்சயம் அவளைப் பிடிக்கும்.. நம் வீட்டிலேயே அதிகம் பேசாத ரொம்ப அமைதியான டைப்” என்று அவளை தேற்றியவன். “சரி அப்படியே நின்று கையை பிசையாமல் என்னுடன் பேசியபடியே உன் சாமான்களை எல்லாம் எடுத்து வை..”

“ம்ம்..” என்று அவள் மொழிய..

“அலக்நந்தா உன்னை பேசியபடியே எடுத்து வைக்க சொன்னேன்.. ம்ம் சொல்லவில்லை..” என்றான் மகா எரிச்சலாக.

“என்ன பேச…??” என்றாள் தயக்கத்துடன்.

“எதாவது பேசு… உன் டான்ஸ் பற்றி இல்ல.. உன் செமினார் பற்றி.. அதுவும் இல்லையா நீ போட்டு இருக்கும் ஹீல்ஸ் பத்தின்னு.. எந்த கருமத்தை வேணுன்னா பேசு… எனக்கு உன் வாய்ஸ் கேட்டுட்டே இருக்கனும்

இல்லைன்னா… எனக்கு வரும் கோபத்திற்கு…. அப்படியே….” என்று பொறுமையாக ஆரம்பித்தவன் ஆத்திரத்தில் தொடர…

“பத்ரி…” என்று அவனை தடுத்து நிறுத்தினாள் அலக்நந்தா. அந்த குரலில் கெஞ்சல்.. கொஞ்சல்.. ஆற்றாமை.. அன்பு.. அளவு கடந்த பிரிவு என்று அனைத்தும் கலந்து இருந்ததை உணர்ந்தான் பத்ரி.

“இப்ப நீ பேசறியா இல்ல நான் கிளம்பி அங்கே வரவா?” என்றான் பத்ரி அந்த ஆற்றாமையை சகிக்கமுடியாமல்.

அவனின் ஆத்திரமமே அவளை இன்னும் அதிகமாக பயமுறுத்தியதை அறியாத பத்ரி அவள் பேச்சிற்காக காத்திருக்க… என்ன பேச என்று தெரியாது ஒரு நிமிடம் திருதிருத்தவள் பின் எதாவது பேச வேண்டுமே என்ற பதட்டத்தில் தன் டான்ஸ் கிளாஸ் பற்றி மெல்ல கிசுகிசுத்த குரலில் தன் சாமான்களை எல்லாம் ட்ராலி பேக்கில் வைத்தபடி பேச ஆரம்பித்தாள்… அலக்நந்தா.

அப்படி ஆரம்பித்தவள் தன்னையும் அறியாது பெரிய.. பெரிய டால்பின் பொம்மைகளை வைத்துக் கொண்டு ஸ்வீம் பூலில் ஆடிக் கொண்டிருந்த அக்காவைப் பார்த்து அந்த பொம்மைக்காக ஆசைப்பட… முதலில் கொடுக்க மாட்டேன் என்று உதாசினப்படுத்திய அவளுடைய அக்கா.. பின் தண்ணிரில் குதி என்று கன்டிஷன் போடவும் நீச்சல் குளத்தின் ஆழத்தைப் பற்றி எதுவும் தெரியாத ஏழு வயது சிறுமியும் தன் அக்கா பேச்சை கேட்டு அந்த பொம்மை மேல் ஆசைப்பட்டு அங்கே குதிக்க… மூச்சு முட்டி தண்ணீருக்கு அடியில் சிலையாய் முழுக ஆரம்பிக்கும் வேலையில் தான் தன் தவறை உணர்ந்து.. அவளைக் காப்பாற்றி இருக்கிறாள் அவளின் அக்கா என்று அலக்நந்தாவின் பேச்சில் புரிந்துக் கொண்டான் பத்ரி.

அவள் தண்ணீரில் விழுந்த கதையை கேட்டு இவனுக்கு மூச்சு முட்டி.. கண்கள் சிவந்ததையோ… அந்த குளிர் பிரதேசத்தில் வேர்த்து கொட்டியதையோ, கைகள் முறுக்கேறியதையோ, இல்லை.. அவளுடைய துன்பத்தை இவன் தனதாக அனுஅனுவாக உணர்ந்ததையோ அவள் அறியாள்!!!

தன் கோபம் குறைய வடிகாலாய் அவளின் குரலை கேட்க ஆசைப்பட்டவன் இப்பொழுது.. அவள் குரலில் வழிந்த ரணம் அவனை ரம்பமாக அறுத்து கூறு போட...

“கடவுளே” என்று தன் பல்லை கடித்து அமைதி காத்தவனுக்கு உள்ளே கட்டுக்குள் அடங்காத ஆத்திரமும் கொலை வெறியும் அவளின் பெற்றவர் மீதும் அந்த அக்காவின் மீதும் வர.. அதை குறைக்க வழிவகை தெரியாது தத்தளித்த போதும்.. அவள் ஏர்போர்ட் வந்து ப்ளைட் ஏறி போனை சுவிட்ச் ஆப் சொல்லும் வரை பேசுவதை கேட்டபடியே தான் இருந்தான் பத்ரி !!!

“போனை சுவிட்ச் ஆப் செய்யப் போறேன்” என்று அலக்நந்தா சொல்ல.

கடந்த மூன்று மணி நேரமாக அவள் சொல்வதற்கு எல்லாம் “ம்ம்” மட்டுமே கொட்டியவன்... இதை கேட்ட அடுத்த நொடி.. “மோனல்... ஒரு நிமிஷம்..” என்று அவளை நிறுத்தினான்.

“சைக்கிளின் ஸ்டாண்டை எடுக்காமல் எத்தனை வேகமாக மிதித்தாலும் நீ போக வேண்டிய தூரத்தை எப்படி கடக்க முடியாதோ அதே மாதிரிதான் மோனல்.. கடந்த காலத்தின் வலி கொண்டு எதிர்காலத்தை கடக்க முயற்சிப்பதும். ஒன்னு நல்லா புரிந்துகொள் மோனல்.... நிகழ்காலத்தின் துணைகொண்டு மட்டுமே எதிர்காலத்தை கடக்க முடியுமே தவிர கடந்த காலத்தின் வலிகொண்டு இல்லை!!!” என்று திட்டவட்டமாக அறிவித்தான் பத்ரி.

“அந்த நிகழ்காலத்தின் துணையாக நான் இருக்க விரும்புகிறேன் மோனல்... உனக்கு வலி.. வேதனை இல்லாத எதிர்காலத்தை தர எனக்கு ஆசைதான்... ஆனால் வாழ்க்கை பயணத்தில் அது சாத்தியம் இல்லை.. எதிர்பார்க்காத வலிகள்.. ஆற்ற முடியாத ரணங்கள்.. வேதனைகள்.. இழப்புகள்ன்னு நிறைய வரும்.. இதை எல்லாம் பகிர்ந்துக்க நான் உன் கூட இருப்பேன்.. அதனால் என் வலி ஒன்னும் குறைய போவதில்லையேன்னு நீ நினைக்கலாம்... ஆனால் நம் கூட ஒருதர் துணை இருக்கும் போதும்.. எந்த ரணத்தையும் தாங்கும் சக்தி கிடைக்கும்.. இயங்க சக்கி கிடைக்கும்.. இயக்கம் தான் வாழ்க்கை மோனல்...” என்று கூறியவனுக்கு விமான பணிப்பெண் வந்து போனை சுவிட்ச் ஆப் செய்ய சொல்வது காதில் விழ... பிடிக்கா விட்டாலும் பை சொல்லி விட்டு போனை வைத்தவன் அடுத்ததாக

கார்த்திக்கிடம் போன் செய்து அலக்நந்தா கிளம்பி விட்டதை தெரிவித்தவன் சிறிது நேரம் பேசிவிட்டு போனை வைத்தான்.

அவள் ப்ளாட் வந்து சேரும் வரை அமைதி இன்றி இருந்தவன்.. கார்த்திக் தான் தங்கி இருந்த ஹோட்டலுக்கு திரும்பியவுடன் தான் தூங்கவே போனான். மறுநாள் மிகவும் தாமதமாக எழுந்து அரக்க பரக்க கிளாஸ் போனால் ஒரு நிமிஷம் கூட அங்கே கவனம் செலுத்த முடியாதபடி வீட்டில் இருக்கும் அணைவருக்கு விஷயம் பரவி ஆள் மாற்றி ஆள் மேசேஜ் செய்து உயிரை எடுக்க.. இவனுக்கு பதில் சொல்லி மாளவில்லை!!!

இதற்கு நான் கிளம்பி ஊருக்கே போயிருக்கலாம் என்று அவன் எரிச்சலுடன் போனை சுவிட்ச் ஆப் செய்தான். சரியாக இரண்டு நிமிடம் கழித்து அருகில் இருந்த சித் சற்றே அவன் புறம் நகர்ந்து

“மரியாதையா உன் போனை சுவிட்ச் ஆன் செய்ய சொல்லி கார்த்திக் மேசேஜ் செய்து இருக்கான்டா..” என்றான் கிசுகிசுப்பாக.

“அட கடவுளே..” என்று தலை எழுத்தை நொந்தபடி வேறு வழி இல்லாது ஆன் செய்து கிளாஸை கவனிக்காது அவர்கள் வீட்டில் இருந்த எல்லோரும் அவளுக்கு சாப்பிட என்ன பிடிக்கும் என்பதில் ஆரம்பித்து என்ன சைஸ் செருப்பு என்பது வரைக்கும் குசலம் விசாரித்துக் கொண்டு இருக்க… தெரிந்தவற்றிக்கு தேமே என்று பதில் சொல்லிக் கொண்டு இருந்தான் பத்ரி.

இப்படியாக அடுத்த இரண்டு நாளும் பாதி மேசேஜிலும் மீதி நேரம் அலக்நந்தாவுடன் போனிலும் கழிய… இரவு சரியாக மீண்டும் ஒரு மணிக்கு போன் வர…

அலறி அடித்துக் கொண்டு போன் எடுத்தவனுக்கு அது ஏற்காட்டில் இருந்து மேகமித்ரா அழைக்க அவசரமாக போனை காதில் வைத்தான் பத்ரி.

வீட்டிலேயே ஆர்யாவை விட அழுத்தமான மேகமித்ரா நட்டநடு ராத்திரியில் போன் பேசுகிறாள் என்றால் அது பூகம்பம் மாதிரியான விஷயத்தை தவிர வேறு எப்படியானதாக இருக்க முடியும்??

மனது திக்திக் என்று அடித்துக் கொள்ள.. அவசரமாக போனை எடுத்து

காதில் வைத்தவனுக்கு அவன் எதிர்பார்த்தபடியே மேக மித்ராவின் அழுகை குரல் தான் காதில் ஒலித்தது.

“என்னடி என்னாச்சு?? மங்கி...?? அழாமல் சொல்லு.. எனக்கு ஒன்னும் புரியலை...” என்றான் டென்ஷன் உச்சிக்கு ஏற... பத்ரி.

“அண்ணா... சௌவிக்கு லேபர் பேயின் வந்திடுச்சு... அதனால் நான் ஹாஸ்பிடல் போயிட்டு இருக்கேன்.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு” என்றாள் அழுகையின் இடையே சற்றே தெளிவாக.

“வாட்ட்ட்????? டியூ டேட்டுக்கு இன்னும் இரண்டு வாரம் இருக்கே...” என்று அலறியவன் “அம்மா ஓ.. அம்மாவும் அப்பாவும் கல்யாணத்திற்கு ஊருக்கு போயிருக்காங்க... பாட்டி எங்கே? கார்த்திக் எங்கே? நீ ஏன் போற?” என்றான் படபடப்பாக.

எதுவும் பேசாமல் அவள் அழுவது காதில் விழ...

“மேகமித்ரா.. முதலில் ஒப்பாரி வைப்பதை நிறுத்து...” என்று அழுத்தமாக உத்தரவிட்டவன் “சௌவியையும் உன்னையும் தனியா விட்டு வீட்டில் இருக்கறவங்க எல்லாம் எங்க போய் தொலைந்தாங்கன்னு சொல்ல போறியா இல்லையா??” என்று ரூமே அதிரும் படி கத்தினான்.

இவன் சத்தத்தை கேட்டு “என்னடா ஆச்சு?” என்றபடி படாரென்று கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சித்..

அவனை கையை காட்டி அமைதியாக இருக்கச் சொன்னவன் மங்கியிடம் கவனத்தை திரும்ப..

“அது வந்து...” என்றபடி மூக்கை உறிஞ்சியவள்... “ஷங்கி, பாட்டி தாத்தாவும் பாபியை பார்க்க சென்னை போய் இருக்காங்க.. எல்லோரும் சேர்ந்து நாளை வருவதாக கார்த்திக் சொன்னான்...” என்ற அழுகையில் குரல் பிசிற.

இன்று...

வண்டியை திருப்பியவன் எதற்கும் இருக்கட்டுமே என்று ஷாட் ரூட்டில்

திருப்ப.. அடுத்த பத்தாவது நிமிடம் அவன் அலக்நந்தாவையும் அவள் கையில் வைத்திருந்த குட்டி ஹிமாலயன் ஓநாயை காண இதயம் உரைந்து நின்றது!!!

இவளைக் கண்டு விட்டேன் என்று சந்தோஷப்படுவதா இல்லை இனி உயிரோடு திரும்புவோமா என்று பயப்படுவதா என்று புரியாத நிலையில் அவன் உள்ளுக்குள்ளே தத்தளித்த போதும் வெளியே எதையும் காட்டாது அவள் அருகில் போக.. எகிறி துடித்த இதயம் இன்னும் அதிகமாக துடிக்க வேகமாக கண்களை சூழல விட்டான்!!

இந்த "கும்" இருட்டில் கண்ணுக்கு முன்னால் பத்தடி தூரத்தில் யானையே நின்றாலும் ஒன்றும் தெரியாத நிலையில் புதருக்குள் மறைந்திருக்கும் ஓநாய் எங்கே தெரிய போகிறது?!?

கூட்டாக வாழும் ஓநாய் சமயம் கிடைத்தால் சிங்கத்தையே அடித்து வேட்டையாடும் தந்திரம் மிக்கது.. இது போதான்னு அதன் குட்டியை வேறு கையில் வைத்துக்கொண்டு... தற்காத்துக் கொள்ள கையில் ஆயுதம் ஏதும் இல்லாமல் இப்படி தன்னந்தனியாக மாட்டிக் கொண்டால் கேட்கவும் வேண்டுமா?!?

பைக்கின் வெளிச்சத்தை கண்டு தலையை திருப்பி இவனைக் கண்டவளுக்கு கோபமும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வர... எதுவும் பேசாமல் முகத்தை திருப்பிக் கொண்டு கையில் இருந்த குட்டியை தடவினாள்!!!

"அலக்நந்தா... உன் கையில் இருக்கும் குட்டியை கீழே வைத்து விட்டு சீக்கிரம் என் பைக்கில் ஏறு" என்றான் சுற்றியும் பார்த்தபடி.

அவன் சொன்னது காதிலேயே விழாதது போல் அப்படியே பிடித்து வைத்த சிலை என நிற்க..

"அலக்நந்தா என் பொறுமையை ரொம்பவே சோதிக்காது.. மரியாதையா அதை கீழே விட்டு விட்டு பைக்கில் ஏறுடீ" என்று கிட்ட தட்ட உறுமினான் பத்ரி.

“உன்னை மாதிரி நானும் உதவி தேவைப்படும் நேரத்தில் அம்போன்னு நடு ரோட்டில் விட்டு வர முடியாது..”

“எதுக்கு எதைப் பற்றி பேசற?.. அதுவும் நீயும் ஒன்னா?!?”

“அதே தான் தானும் கேட்கிறேன்... என்னை தான் உனக்கு பிடிக்காது... இந்த வழி தவறிய நாய் குட்டி கூடவா உனக்கு பிடிக்காது??” என்று கையில் இருந்த குட்டியைக் காட்டி கேட்டாள் அலக்நந்தா.

“வாட்??? நாய் குட்டியா??? இவ்வளவு பெரிய கண்ணாடி போட்டு இருக்கியே.. என்னை பார்த்து முறைக்காமல் உன் கையில் இருப்பதை நல்லா பாருடி... அது ஹிமாலயன் ஓநாய்...”

“அது எந்த வகை நாயா இருந்தாலும் தான் என்ன??” என்று அவள் நின்ற இடத்தில் இருந்து அழுத்தம் திருத்தமாக கேட்டாள் அலக்நந்தா.

“அது நாய் குட்டி இல்லை ஓநாய்... கடவுளே.. உன்னிடம் சுவாலஜி கிளாஸ் எடுக்க எனக்கு டைம் இல்லை.. அலக்நந்தா. அது அம்மா வந்து உன்னை கடித்து குதறும் முன் அதை கீழே விட்டு வந்து என் பைக்கில் ஏறு” என்றான் ஆத்திரமாக கத்தினான் பத்ரி.

அப்போ தான் அவன் சொன்னது அவள் காதில் விழ.. “என்ன சொன்னீங்க? ஓநாயா இதுவா?” என்று இத்தனை நேரம் தன் கையை நக்கிக் கொண்டு இருந்த குட்டியை சற்றே பயம் தலை தூக்க தூர பிடித்து பார்த்தாள் அலக்நந்தா..

அதற்குள் சுற்றி இருந்த புதரில் இருந்து மயிர் கூச்சரியும் படி ஓநாயின் ஊளை சத்தம் அவர்கள் காதை கிழிக்க..

அவள் கையில் இத்தனை நேரம் இருந்த குட்டி தன் தாயின் குரலை கேட்டு விட்டு பதிலுக்கு தான் இங்கே இருப்பதாக காட்டுவதற்கு இதுவும் ஊளை இட்டது!!!

“ஒ..மை காட்..” என்று அரண்டு போய் என்ன பண்ணுவது என்று தெரியாது சுற்றியும் முற்றியும் பார்த்தாள்.

அதற்குள் அவள் இருந்த இடத்தை கண்கள் மினுமினுக்க எட்டு ஓநாய் ஒன்றன் பின் ஒன்றாக புதரில் இருந்து வெளியே வந்தது!! அவளை பாய்த்து கடித்து குதற திட்டமிட்டப்படி அவை அணி வகுத்து நிற்க…

“ப….த்ரி… எனக்கு ரொம்ப பயமாக இருக்கு….” என்று அப்பொழுது நிலைமையின் தீவிரம் புரிய பயந்து நடுங்கி போய் அவனை பார்த்தாள் அலக்நந்தா…

“ஆமாம்டி பயமா இருக்கும் போது மட்டும் என்னை கூப்பிடு…” என்று அவன் தெனாவட்டாக மொழிந்தாலும் உள்ளே குமுழிய பயம் அவன் குரலில் வெளிப்பட்டதை தவிர்க்க முடியவில்லை..

“அலக்நந்தா… நாம் இருவரும் தப்பிக்க.. ஒரே வழிதான் இருக்கு… நான் வேகமாக ஹாரண் அடிக்கிறேன்… அந்த சத்தத்தை கேட்டவுடன் ஒரே ஒரு நிமிஷம் அதுங்க பயந்து பின் வாங்கும் அப்ப.. நீ அந்த குட்டியை கீழே விட்டு ஓடி வந்து என் வண்டியில் ஏறு புரியுதா???” என்று அவரமாக சொன்னவனின் குரலில் இருந்த படபடப்பு அவளையும் தொற்றிக் கொள்ள…

“ம்ம்ம்ம்…” என்று அந்த குளிரிலும் வேர்த்து கொட்ட எச்சிலை விழுங்கியபடி நிற்க..

“ரெடி ஒன் டூ.. திரி..” என்று அவன் சொல்லி அந்த நிமிடம் அவன் ஹாரனை வேகமாக அடிக்க…

அடுத்த நிமிஷம்… குட்டியை விட்டபடி கால் ஹீல்ஸ் இடற… தடுமாறிய போதும் சமாளித்து.. டூகாட்டியை நோக்கி பாய்ந்து ஏறி அமர.. வண்டி சீறி பாய்ந்தது!!!

கீழே விழப்போனவளைக் கண்ட ஒரு நொடி இதயம் நின்று.. பின் நின்றதற்குமாக சேர்த்து துடிக்க… அவனையும் அறியாது.. டிகாட்டியை வேகம் எடுத்தான். பத்து நிமிஷம் காற்றை கிழித்துக் கொண்டு வண்டு பறந்த போதும்.. பின்னால் அவர்களை தொடர்ந்து வந்த ஊளை சத்தம் எப்படிப்பட்ட இக்கட்டில் இருந்து தப்பித்தார்கள் என்று புரிய வர… ஒரு நிமிடம் அவன் உடம்பு குலுங்கி நின்றது.

தான் எப்படிப்பட்ட சூழலில் இருந்து மீண்டும் வந்திருக்கிறோம் என்ற உண்மை புரிய.. தன்னையும் அறியாது அதிர்ச்சியில் நடுங்க… பத்ரியின் பரந்த முதுகில் அட்டையாக ஒட்டிக்கொண்டு… தலையை சாய்த்தாள்.

தன் மொபைலை எடுத்தவன் பின்னால் நீட்டி.. "சித்திடம் நாம் வந்து கொண்டு இருக்கிறோமுன்னு" சொல்லு என்றான் மெதுவாக.

கைகள் நடுங்க போனை வாங்கி சித்தை அழைக்க… இவள் குரலை கேட்டவுடன் விஷயத்தை புரிந்துகொண்டவன்.. "ஷப்பாடா… வந்தாச்சா.. உனக்காக தான் இங்க வெயிட்டிங்… குட்… நீ தான் வந்திட்டியே.. அப்ப நான் சுமன் ரூமில் கார்ட்ஸ் விளையாடறாங்க போயிட்டு வரேன்.." என்றான் சித்.

"ம்ம்.." என்றாள் அலக்நந்தா அவளால் அதுமட்டும் தான் அந்த நிலைமையில் சொல்ல முடிந்தது.

மயான அமைதியில் ரூமிற்குள் வந்ததும்… அவன் புறம் திரும்பி நேருக்கு நேராக பார்த்த அலக்நந்தா.. கைகள் நடுங்க.. கண்கள் கலங்க… கிசுகிசுப்பாய்…. "நீ மட்டும் ஒரு ஐந்து நிமிஷம் தாமதமா வந்திருந்தா நான் அதுகளுக்கு இரையாகி இருப்பேனா பத்ரி??" என்று கேட்க இருவர் உடலும் ஒரு நிமிடம் உறைந்து.. பின் பயத்தில் குலுங்கியது!!!

அத்தியாயம் - 26
மூன்று வாரத்திற்கு முன்பு…

"மை காட்… எதுக்கு என்னிடம் அவளுக்கு எது பிடிக்கும்… எதுக்கு பிடிக்காதுன்னு கேட்டு உயிரை எடுத்தாங்கன்னு இப்ப தான் புரியுது… கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாது.. இப்படியா… அம்மா வீட்டில் இல்லாத போது போவாங்க??… ஏன் உன்னையும் சௌவியையும் விட்டு வைத்தாங்க?? உங்களையும் அழைத்துக் கொண்டு போயிருந்தால்.. போற வழியிலேயே டெலிவரி பார்த்திருக்கலாமே… அந்த தடியன் வரட்டும் அவன் பல்லை உடைக்கிறேன்…" என்று கடித்து துப்பி அவளிடம் சண்டை போட…

மங்கியின் அழுகை அதிகமானது தான் மிச்சம்.

“சரி.. சரி... பயப்படாதே... ஒன்னும் ஆகாது...” என்று அவன் இழுக்கும் போதே.. “மேகா... இது லேபர் பெயின் என்று நிச்சயமா தெரியுமா?” என்றான் சந்தேகமாக.

அத்தனை நேரம் மூக்கை ஊறிஞ்சவள்.. “அண்ணா நான் டாக்டர்... அதை மறந்திடாதே...” என்றாள் அவர்களின் குலதெய்வம் காளி அவதாரம் எடுத்து!!!

“அடியேய்... நீ மாட்டு டாக்டர் டீ..” என்றான் அதே ஆவேசம் குறையாது பத்ரி.

“சோ.. வாட்??? மாட்டுக்கே வைத்தியம் பார்க்கும் எனக்கு மனுஷனுக்கு பார்க்க முடியாதா?” என்று அவள் சமயம் சந்தர்பம் தெரியாது தொழில் பக்தியை காட்ட அவசரமாக வாயை மூடினான் பத்ரி.

பின்ன அவள் பாட்டுக்கு நானே டெலிவரி பார்க்க போறேன் என்று சவால் விட்டால் அவன் என்ன செய்வான்??!?

“அம்மா தாயே.. பராசக்தி.. நீ டாக்டரே தான்... உனக்கு எல்லாம் தெரியும்... இப்ப.. நீ பத்திரமாக சௌவியை நம்ம ஹாஸ்பிட்டலுக்கு அழைத்துப்போ.. நான் டாக்டருக்கு போன் பண்ணி உனக்கு முன்னால் அங்க ரெடியா வந்து இருக்க சொல்றேன்... பயப்படாம இரு மேகா.. அடுத்த பத்து நிமிஷத்தில் அம்மாவை விட்டே உன்னை அழைக்க சொல்றேன்..” என்று அவளுக்கு தைரியம் சொன்னானே தவிர.. அவனுக்கு கை நடுங்கியது.. கூடவே வீட்டு ஆட்களின் மேல் கட்டுக்கு அடங்காத கோவமும் எழ..

அவசரமாக ஹாஸ்பிட்டலுக்கு போன் செய்து விஷயத்தை தெரிவித்தவன் பின்... அப்பாவிடம் ரத்தின சுருக்கமாக சொல்லிவிட்டு மேகாவிடம் அம்மாவை பேச சொல்லி பணித்துவிட்டு.. கார்த்திக்கிற்கு போன் செய்தவன் தன் ஆத்திரமும் ஆவேசமும் தீரும் வரை அவனுக்கு தெரிந்த ப்ரென்ச் மொழியில் கடித்து குதறினான்.

தூக்க கலக்கத்தில் இருந்தவனுக்கு எதுக்கு இவன் நட்டநடு ராத்திரியில் இப்படி கத்தறான் என்றே புரியாத திகைப்புடன் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டு இருந்தவன் ஒரு வழியாக பத்ரிக்கு தெரிந்த நல்ல

வார்த்தைகளை எல்லாம் லட்சார்ச்சனையாக கொட்டி முடிக்க…

“இப்ப எதுக்கு அர்த்த ஜாம பூஜை?” என்றான் கொட்டாவி விட்டபடியே நிலைமையின் தீவிரம் புரியாமல் கார்த்திக்.

“அர்த்த ஜாம பூஜையில்.. நான் மட்டும் அங்கே இருந்திருந்தேன்… உன்னை நரபலி கொடுத்திருப்பேன். தடியா… அங்கே சௌவிக்கு லேபர் பெயின் வந்திடுச்சாம். வீட்டில் யாரும் இல்லாது பயந்து போய் மேகா இப்பதான் போன் பண்ணி ஒரே அழுகை..” என்று சொல்லி முடிக்க..

“ஐய்யோ…..” என்று யாரோ தன் மேல் ஐஸ் தண்ணீரை ஊற்றியது போல் துள்ளி குதித்து எழுந்த கார்த்திக்.. “நான் அண்ணாவிடம் என்ன பதில் சொல்லுவேன்… என்னை நம்பி தான் அண்ணா விட்டு போனார்?!?” என்று அலறியவன்.. “நான் கிளம்பறேன்.. இதை முன்னாடியே சொல்வதற்கு என்ன மடையா… ச்ச்ச.. உன்னிடம் வெட்டியாக பேச எனக்கு நேரம் இல்லை” என்று பத்ரியிடம் பை கூட சொல்லாது போனை வைத்தான் கார்த்திக்.

கார்த்திக்கின் அண்ணன் பக்தியை பார்க்கும் போதும் அந்த சமயத்திலும் சிரிப்பு வந்த போதும், ஆர்யாவிடம் எப்படி சொல்வது என்று அவன் யோசிக்கும் போதே….

“என்னடா உங்க பாபியை ஹாஸ்பிட்டல் அட்மிட் செய்திருக்காங்களா?” என்றான் இத்தனை நேரம் இவனின் சம்பாஷனை கேட்ட சித்.

“ம்ம்..” என்று தலையை ஆட்டியவன் “சித்.. எனக்கு” என்று அவன் ஆரம்பிக்கும் முன்னே..

“தெரியும்.. தெரியும்.. உனக்கு ஊருக்கு போக சார்ட்டட் ப்ளைட் ஏற்பாடு செய்யனும் அது தானே.. நான் பேசாமல் ஹோட்டல் பிசினஸ் செய்வதற்கு பதில் ப்ளைட் சார்ட் பண்ற டிராவல் ஏஜென்சி ஆரம்பிக்கலாம்…” என்று சிரித்தபடி மொழிந்தவன்.. “பயப்படாதே உன் பாபிக்கு ஒன்னும் ஆகாது..” என்று அவன் மொழியும் போதே ஆர்யாவிடமிருந்து போன் வர… கார்த்திக்கின் வேலை என்று புரிந்தது.

பேனிக் அட்டாக் மோடில் இருந்த ஆர்யாவை சமாதானப்படுத்தி போனை

வைத்தால் அடுத்து பாட்டியிடம் இருந்து போன்.. இப்படியாக காலை பத்ரி ப்ளைட் ஏறும் வரை ஆள் மாற்றி ஆள் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

இவர்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தது போதாது என்று கூடவே டாக்டர், நர்ஸ்.. ஏன் ரூம் பாய் வரை பேசி அவர்களின் உயிரையும் சேர்த்தே எடுத்தார்கள்!!!

தலைபிரசவம் என்பதால் நீண்ட நெடிய ஏழு மணி நேரம் போராட்டம் கழிந்து "நான் சச்சிதேவ் தான்" என்று உலகத்திற்கு நிரூபிக்கும் விதமாக வீட்டில் இருக்கும் எல்லோரையும் கலவரப்படுத்தி விட்டு "வீல் வீல்" என்று ஹாஸ்பிட்டலையே இரண்டாக்கிக் கொண்டு பிறந்தான் அடுத்த தலைமுறையை செழிக்க வந்த குட்டி சச்சிதேவ்!!!

குழந்தை பிறந்தவுடன் முதலில் பாட்டி மட்டுவார் குழலியின் கையில் ஒரு விடுதலை உணர்வுடன் நர்ஸ் வந்து கொடுக்க... தாமரை நிறத்தில்... தொட்டாலே வாடும் அனிச்சம் பூவின் மென்மையுடன் சச்சிதேவின் ஸ்பாம்ப் அப்பட்டமாக பிரதிபலிக்க... சின்ன கோலிகுண்டு கண்ணால் தன் கொள்ளு பாட்டியை பார்த்தான் ஆர்யா சச்சிதேவ் ஜூனியர்!!!

பாட்டியை சூழ்ந்து நின்று கொண்டு குழந்தையை அனைவரும் அப்படியே வைத்த கண் வாங்காமல் பார்க்க.. அந்த கூட்டத்தில் சௌவியின் வளர்ப்பு பெற்றவர்கள் தம்பிகள் என்று எல்லோரும் சூழ்ந்து இருக்க... அங்கே ஷங்கியின் கையை பிடித்துக் கொண்டு அலக்நந்தாவும் இருந்தாள்!!!

கார்த்திக் விஷயத்தை சொல்லி கிளம்ப சொன்னவுடன் அலக்நந்தாவை புது இடத்தில் தனியாக விட்டு போகவும் முடியாது... அழைத்துக் கொண்டு போனால் அவளுடைய செமினாருக்கு போக முடியாது.. அதனால் என்ன செய்வது என்று எல்லோரும் தயங்கி நிற்க...

அவளோ எந்த தயக்கமும் இல்லாமல் அவர்களுக்கு முன்னால் கிளம்பி தயாராகி நின்றவளை காண அனைவரின் முகத்திலும் புன்னகை படர்ந்தது!!!

"அப்படியே மூக்கு என்னை மாதிரி இருக்கு இல்ல?!?" என்றாள் ஷங்கி கண்களில் ஆனந்தம் மின்ன அத்தையான குஷியில்...

“ம்கூம்.. மூக்கு உன்னை மாதிரி இருந்தா ஒரு பிரச்சனையும் இல்லை.. வாய் உன்னை மாதிரி இருந்தா தான் பிரச்சனை” என்றான் கார்த்திக்.

“அவள் வாயைப் பற்றி பேசுவது இருக்கட்டும்… முதலில் உன் மூக்கை காப்பாற்றிக் கொள்ளும் வழியை பார்.. நான் போனில் பேசும் போதே பத்ரி வானத்திற்கும் பூமிக்கும் குதித்தான்..” என்றாள் மங்கி.

அதற்குள் தன் வரவால் பாட்டி போஸ்டிற்கு உயர்ந்திருந்த மல்லிகாவின் கைக்கு மாறி இருந்த யுவராஜன் என்னை இத்தனை நேரம் வெறித்துப் பார்த்தது போதும் என் வயிற்றை கவனியுங்கள் என்று பெருங்குரல் எடுத்து அழ ஆரம்பிக்க..

சச்சிதேவ் குடும்பத்தினருக்கு பிரளயமே வந்து விட்டது போல் என்ன செய்வது என ஆள் ஆளுக்கு ஒரு மூளைக்கு ஓட.. பாட்டியும்… மல்லிகாவும் அவர்களை இளக்காரமாக பார்த்து விட்டு அவனை எடுத்துக் கொண்டு சௌவியின் அறைக்குள் செல்ல… கூடவே சௌவியின் அம்மாவும் சிரித்தபடி சென்றார்.

யோசனையாக அவர்கள் செல்வதைப் பார்த்த ஷங்கி “நான் டாக்டரை பார்க்க போறேன்…” என்று அவரசரமாக கிளம்பினாள்.

ஏதோ அவர்கள் ஹாஸ்பிட்டல் என்ற ஒற்றை காரணத்திற்காக மட்டுமே அங்கே பணி புரிந்தவர்கள் ஒன்றும் சொல்ல முடியாது பொறுமை காத்தார்கள்… இல்லையேல் அவர்கள் கடந்த எட்டு மணி நேரமாக செய்த அராஜகத்திற்கு… எப்பவோ கழுத்தை பிடித்து வெளியே தள்ளி இருப்பார்கள்!!! என்ற உண்மையை கார்த்திக் அறிவான் என்ற காரணத்தினால்..

“ஏன்? என்னாச்சு?? இப்ப எதுக்கு டாக்டர்??” என்று கேட்டபடி அவள் அருகில் வந்தான் கார்த்திக்.

“இப்ப எப்படி கத்தினான் ஆனா அவன் கண்ணில் இருந்து ஒரு சொட்டு தண்ணி வரலை.. அதான் எனக்கு கண்ணில் ஏதாவது பிரச்சனை இருக்குமோன்னு பயமா இருக்கு…” என்று சொல்லும் போதே..

அருகில் நின்ற நிரல்யா “ஷங்கி… பயப்படாதே… பிறந்த குழந்தைக்கு கண்ணு சரியா தெரியாது..” என்றாள் மென்மையாக.

“வாட்????” என்று மங்கியை தவிர எல்லோரும் அதிர்ச்சியாக பார்த்தனர்.

“ம்ம்… பிறந்த குழந்தைக்கு கண்ணில் தண்ணீர் வராது… சரியா பார்க்க முடியாது.. பத்து இன்ச் கிட்ட இருக்கும் வெளிச்சத்தை தான் பார்க்க முடியும்… வளர.. வளர.. தான் அவனால் நன்றாக பார்க்க முடியும். குழந்தைக்கு முழு பார்வை திறன் பெற மூன்றிலிருந்து ஐந்து வயது ஆகும்” என்றாள் கூகுள்!!!

இதைக் கேட்டவர்கள் அதிர்ச்சியாக நிரல்யாவை பார்க்க.. மங்கிக்கு மட்டும் இது பெரிய விஷயமாக தெரியவில்லை. காரணம் நாய் குட்டியும் பூனைக் குட்டியும் இப்படிதான் என்பதால் அதைக் கேட்டு அமைதியாக இருந்தாள்.

“சரி… நீங்க அப்படி உட்காருங்க நான் குடிக்க ஏதாவது கொடுத்து அனுப்பறேன்..” என்று நிரல்யாவை ஒரு பார்வை பார்த்து விட்டு சென்றான் கார்த்திக்.

அவன் சொன்னது போல் அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்த நால்வருக்கும் மூன்று காபியும் ஒரு கிரீன் டீயும் வர..

“கிரீன் டீ… உங்களுக்குத் தான்.. நீங்க காபி, டீ குடிக்க மாட்டிங்கன்னு தெரியும்..” என்றபடி கிரீன் டீ கப்பை ஷங்கி எடுத்து கொடுத்தபடி சொல்ல..

“ஓஓ!!!” என்று சிரித்தபடி வாங்கிக் கொண்டாள் அலக்நந்தா.

“பொதுவா டெலிவரி அம்மா வீட்டில் தானே ஆகும்.. இங்க மட்டும் ஏன் தெரியுமா இப்படி?” என்று அலக்நந்தாவை பார்த்து கேட்டாள் ஷங்கி…

“எனக்கு அதைப் பற்றி எல்லாம் அவ்வளவா தெரியாது” என்றாள் அலக்நந்தா டீயை குடித்தபடி.

“இது நம்ம ஹாஸ்பிட்டல்.. இதில் தான் ஒவ்வொரு சச்சிதேவும் பிறப்பது

வழக்கம்.. அதனால் தான் இங்கேயே டெலிவரி பார்ப்பது" என்று மேகமித்ரா விளக்க..

கண்ணை அடித்து சிரித்தபடி "அட ச்ச.. அது எல்லாம் இல்லை.. மூன்று மாசம் பொண்டாட்டியை பிரிந்து இருக்க எந்த சச்சிதேவிற்கு பொறுமை இருக்கு? அதனால்தான் இப்படி ஒரு கதை கட்டி விட்டு இங்கேயே டெலிவரி பார்ப்பது" என்று ஷங்கி தன் கச்சேரியை ஆரம்பிக்க..

அப்படியே அடுத்த அரை மணி பேச்சிலும் சிரிப்பிலும் கழிந்தது. எதையோ ஷங்கி பேசியதை கேட்டு சிரித்துக் கொண்டிருந்த மேகா.. "கார்த்திக் தர்ம அடி வாங்கும் நேரம் வந்தாச்சு"... என்று சொன்னவுடன் சூழ இருந்தவர்கள் எதுவும் புரியாது விழிக்க...

"பத்ரி அண்ணா வந்தாச்சு!!!" என்று வாசல் புறத்தை பார்த்தபடி உட்கார்ந்திருந்தவள் அவசரமாக எழுந்து கார்த்திக் எங்கே இருக்கிறான் என்று கண்களால் தேட..

"நீ கொஞ்சம் பத்ரியை டிலே பண்ணு நான் இப்ப வந்திடறேன்" என்று எழுந்து சௌவியின் ரூமிற்குள் நுழைந்தாள் அலக்நந்தா.

தன் அவசர நடையுடன் கார்த்திக்கை தேடியபடியே உள்ளே வந்த பத்ரியை நெருங்கிய மங்கியும்.. ஷங்கியும் பேச்சு கொடுக்க.. எதையும் காதில் வாங்காத பத்ரி சுவற்றில் சாய்ந்தபடி அப்பாவுடன் பேசிக்கொண்டு இருந்த கார்த்திகை கண்டவன்... கண்களில் கொலை வெறி தாண்டவம் ஆட அவனை நோக்கி வேகமாக நடக்க...

அவனை தடுக்க முயன்று பரிதாபமாக தோற்றுக் கொண்டு இருந்தனர் இரட்டை சகோதரிகள்!!!.

மின்னல் வேகத்தில் கார்த்திகை நெருங்கியவன் "டேய்... உன்னை பொறுப்பா வீட்டை பார்த்துக்க சொல்லிவிட்டு போனா.. நீ என்னடான்னா.." என்று அவன் ஆவேசமாக சட்டையை பிடிக்காத குறையாக பத்ரி வார்த்தைகளை கடித்து துப்ப...

“ப...த்ரி..” என்று இரண்டாம் முறையாக சற்று உரக்கவே அழைத்தாள் அலக்நந்தா.

அவள் குரலைக் கேட்ட மாத்திரத்தில் உரைந்தவன் அவசரமாக திரும்ப..

“மோனல்????? நீங்க இங்க என்ன பண்ற??” என்றான் அதிர்ச்சியாக.. இதுவரை அவனிடம் யாரும் அலக்நந்தாவும் அவர்களுடன் ஏற்காடு வந்து விட்டாள் என்பதை சொல்லாமல் விட்டிருந்தனர்!!!

அவன் கேட்ட வேள்வி எதற்கும் பதில் சொல்லாது.. “உன் கையை நீட்டு” என்றாள் அதிகாரமாக அலக்நந்தா.

அவள் என்ன செய்ய போகிறாள் என்ற ஆர்வத்துடன் பார்க்க வந்த பெண்கள் மூவரும் வேகமாக அருகில் வர... சௌவி ரூமில் இருந்து வெளியே வந்தவளை தொடர்ந்து மல்லிகாவும் பாட்டியும் வர.. அவர்களை சூழ இருந்த எல்லோர் முகத்திலும் படபடப்பும் பரபரப்பும் பொங்க... தாத்தா மட்டும் சற்று தூரத்தில் இருந்து ஒரு சினிமாவை பார்ப்பதை போல் எல்லாவற்றையும் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தார்!!!

அவளை அங்கே பார்த்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாது இருந்தவன்...

“வாட்?? கையை நீட்ட வா? நீ செமினார் போகாது இங்க என்ன பண்ற?” என்றபடி கேள்வி மேல் கேள்வியாய் அடுக்கிய போதும் அவனையும் அறியாது கையை நீட்டினான்.

“ம்ம்..” என்றபடி அவனை பார்த்து அழகாக சிரித்தவள் கையில் பூக்கூவியலாய் இருந்த குழுந்தையை அவன் கையில் பத்திரமாக வைத்தாள்!!!

இத்தனை நேரம் அவள் கையில் குழந்தை இருந்ததை கவனிக்காதவன்... முதல் முறையாக அண்ணனின் குழந்தையை கையில் ஏந்த..

அமைதியாக கண்ணை மூடி உறங்கிக் கொண்டு இருந்த குழந்தை.... இடம்

மாற்றம் காரணமாக தன் சின்ன சிறு சிப்பி இமைகளை திறந்து… முதன் முறையாக தன் சித்தப்பாவை பார்க்க… அந்த மூன்றரை கிலோ எடை உள்ள குழந்தையின் பாரத்தை தாங்காது கால் தள்ளாடியது அவனுக்கு!!!

வேகமாக அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவனின் கண்கள் பணிக்க… உணர்ச்சி பெருக்கில் பேச முடியாது, இமைக்க மறந்து தன் கையில் இருந்த குட்டி சச்சிதேவை பார்த்தபடி இருக்க… அவன் அருகில் கார்த்திக் அமர்ந்து தோளை அணைத்தான்.

ஐந்து நிமிடம் முன்னாடி வரை கார்த்திக்கை அடித்து பல்லை உடைக்க வேண்டும் என்று உள்ளே வந்தவனுக்கு அதைப் பற்றி நினைவே தப்பி போயிருக்க… சகோதரர்கள் இருவரும் சகோதரனின் குழந்தையைப் பற்றி சுவாரசியமாக பேச ஆரம்பித்தனர்.

மங்கி யாருக்கு மூக்கு உடைந்தாலும் முதலுதவி செய்ய தயாராக இருந்தவள்.. “ம்கூம்…. இப்படி குசலம் விசாரிக்க தான் இந்த பில்டப்பா?!?” என்று தலையில் அடித்துக் கொண்டு நகர..

ஒரு கலவரமான சூழ்நிலையை மிக அழகாக அலக்நந்தா கையாண்டதை கண்ட பாட்டியும் மருமகளும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியான பார்வை பார்த்துக் கொண்டனர்.

இரவு பத்து மணியைக் கடந்த வேலையில் மல்லிகாவும் சௌவியின் அம்மாவும் மருத்துவமனையில் தங்க… மற்றவர்கள் வீட்டிற்கு கிளம்பினர்!!!

வீட்டிற்கு வந்தவுடன் இரவு உணவு முடிந்த கையோடு.. ஹாஸ்பிட்டலில் தங்கியவருக்கும் உணவு.. சௌவிக்கு பத்திய சாப்பாட்டை பத்ரியும் கார்த்திக்கும் பேசியபடி எடுத்துச் செல்ல… சௌயின் வீட்டு ஆட்களுக்கு விருந்தினருக்கான தங்கும் ஏற்பாட்டை தாத்தா கவனிக்க… ஒரு வழியாக அன்றைய பரபரப்பு படபடப்பு எல்லாம் அடங்கி அமைதியும் ஆயாசமும் சூழ எல்லோரும் படுக்க சென்றனர்.

அலக்நந்தாவிடம் புது இடம் என்பதால் நீ தனியே படுக்க வேண்டாம் என்று கூறிய பாட்டி அவளை மேகமித்ராவுடன் தங்கும்படி சொல்லவும் தலையை மட்டும் ஆட்டினாள் அலக்நந்தா.

தாமதமாக வீடு திரும்பியவுடன் கார்த்திக் நேராக படுக்க போக...
அலக்நந்தாவை பார்க்காது தூங்க முடியாது என்பதை அறிந்த பத்ரி.. நேராக மேகாவை பார்க்க சென்றான்.

முனுக் என்றால் எழுந்து கொள்ளும் ஆள் மேகா என்பதால் அவன் கதவை திறந்தாலே விழிந்துக் கொள்வாள் என்று கதவில் கை வைக்கும் முன்பே.. அங்கே இருக்கும் பால்கனியில் யாரோ நிற்பது கண்ணில் பட...

யாராக இருக்கும் என்று யோசித்தபடியே அங்கே சென்றவனுக்கு..
அலக்நந்தா அடர்ந்த இருட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்க..

“மோனல்?... இங்க என்ன பண்ற” என்றான் ஆச்சரியமாக.

பட்டென்று திரும்பிய அலக்நந்தாவின் விழியில் கோபம் தெறிக்க..

"இன்னும் ஒரு தடவை இங்க என்ன பண்றன்னு கேட்ட அப்புறம் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது பத்ரி..."

“வாட்?” என்றான் புரியாத திகைப்பில் பத்ரி. இப்ப எதுக்கு கோபப்படுகிறாள் என்று சச்தியமாக அவனுக்கு புரியவே இல்லை..

“என்னிடத்தில் நீ இருந்திருந்தா ஊருக்கு கிளம்பி வந்து இருப்பியா இல்லை செமினார் போய் இருப்பியா பத்ரி???” என்றாள் ஆக்ரோஷமாய் அலக்நந்தா..

“அது இல்லை..” என்று ஆரம்பித்தவனுக்கு மெல்ல அவளின் பதில் புரிய.. “நீ என்ன சொல்றன்னு புரியுதா மோனல்??” என்றான் பத்ரி பரபரப்பாக.

இன்று...

“நீ மட்டும் ஒரு ஐந்து நிமிஷம் தாமதமா வந்திருந்தா நான் அதுகளுக்கு இரையாகி இருப்பேனா பத்ரி??” என்று கேட்க இருவர் உடலும் ஒரு நிமிடம் உறைந்து.. பின் பயத்தில் குலுங்கியது!!!

“சாவை ஐந்து அடி இடைவேளையில் பார்த்த பயம் அதனால் தான் உனக்கு

இப்படி எல்லாம் பேச தோன்றுகிறது..” என்றான். தன்னுள் இல்லாத அமைதியை வார்த்தைகளில் காட்ட பிரம்ம பிரயத்தனப் பட்டான் பத்ரி.

அவனின் முகவாயை திருப்பி அவள் புறம் நிமிர்த்தியவள் “இதற்கு முன்பே பார்த்திருக்கிறேன்… பத்ரி… நேரடியாக பார்த்திருக்கிறேன்…” என்றாள் தொண்டையை அடைக்க… கண்களில் நீர் படலமாக திரையிட

அமைதிபட்ட நெஞ்சு மீண்டும் தடக் தடக் என்று அடிக்க தொடங்க “எதை??” என்றான் பத்ரி.

“சாவை… ஸ்விமிங் பூலில் விழுந்த போது.. ஷூட்டிங் நடக்கும் போது.. அல்சர் என்றே தெரியாது ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆன போது… அன்று ஆற்றில் விழும் போதுன்னு இப்படி விரல் விட்டு எண்ணலாம்.. ஆனா அப்ப எல்லாம் நான் சாகப்போறேனோங்கற உயிரை உறைய வைக்கும் அதீத பயம் மட்டும் தான் இருக்கும்…” என்று உடைந்த குரலில் மொழிந்தவள்

“இன்று ஒநாய்களுக்கு முன்னாடி நான் நிற்கும் போதும்.. பயம் இருந்துச்சு.. ஆனா.. அது எனக்கான பயம் இல்லை.. என் பத்ரி நான் இல்லைன்னா என்ன ஆகுவானோங்கற பயம்… என் காதலை உன்னிடம் முழுமையாக சொல்லாமல் போகப் போறனோங்கற பயம்.. என்னை காப்பாற்ற வந்து உனக்கும் எதுவும் ஆகிவிட கூடாதேங்கற பயம்… இப்படி என்னுடைய ஒவ்வொரு பயமும் உன்னைப் பற்றியது மட்டுமாகத் தான் இருந்தது… பத்ரி…” என்று அவள் கண் கலங்க பேசிக் கொண்டே போக…

“ஷ்… ஷ்.. போதும் எதுவும் பேசாதே… நீ பேசுவதை கேட்கும் மனநிலையில் நான் இல்லை… மோனல்..” என்று கூறியப்படி அவள் உதட்டில் தன் ஆள் காட்டி விரலை வைத்த போதும் வார்த்தைகள் இருக்க வேண்டிய அமைதியோ… ஸ்திரமோ இல்லாமல் சோகையாக வந்து விழுந்தது.

உதட்டில் வைத்த அவனின் விரலில் உதடு குவித்து முத்தம் கொடுக்க… தீ சுட்டது போல் வேகமாக விரலை எடுத்தவனை பார்த்து கசந்த முறுவலை சிந்தியவள்…. “இயக்கம் தான் வாழ்க்கை என்று அன்று சொன்னியே.. என் இயக்கமே நீதான்னு நீ இல்லாமல் என் வாழ்க்கையில் இயக்கமே இல்லைன்னு அன்று மாடியில் காதலிக்கிறேன்னு உன்னிடம் சொன்னேன் அப்பவும் புரியலை.. நீ என்னை வேண்டான்னு ஒதுக்கினாயே.. அப்பவும்

புரியலை.. இதோ... இப்ப புரிந்தும் என்ன பண்ணுறதுன்னு தெரியலை பத்ரி?!? எனக்கு ஹீரோ.. வேண்டாம் ஹீரோ வேண்டாம் என்று கத்திவிட்டு.. கடைசியில் உன்னை என் சூப்பர் ஹீரோவாக ஏற்றுக் கொண்டது.. அதுவும் ஏன் என்று எனக்கு புரியவில்லை பத்ரி..." என்றபடி கரை உடைந்து வெளியே வரும் வெள்ளமாய் கண்ணீர் வர...

அவளின் கண்ணில் வடிந்த நீரை பார்க்க முடியாத பத்ரி.. வேகமாக சுண்டி எரிந்துவிட்டு... "மோனல்..." என்று உயிர் உருக அழைத்தவன் அடுத்து எதுவும் பேச முடியாது அவளைப் பார்க்க...

"ப்ளீஸ் பத்ரி.. உனக்கு தான் நான் சொல்லும் முன்னாடியே என்னைப் பற்றி உனக்கு புரியுமே தானே?... அப்ப இதுவும் தெரிந்திருக்கு ம் தானே.. நான் என்ன பண்ண பத்ரி?!?.." என்று வெம்பிய குரலில் அவள் சொல்லும் போதே... வேகமாக அவளை இழுத்து முரட்டுத்தனமாக தன் மார்பில் இறுக கட்டிக் கொண்டான் பத்ரி.

"பேசாதன்னு சொன்னேன் இல்லை..." என்று அவன் அதில் இருக்க வேண்டிய அதட்டல் இல்லாது மன்றாடல் தொனிக்க.. அவனை இன்னும் இறுக அணைத்துக் கொண்டாள் அலக்நந்தா!!!

"மோனல்... உன் காதலை புரியாதளவுக்கு என்னை முட்டாள் என்றா நினைத்தாய்??" என்று அவன் சென்னியில் முத்தம் பதித்தபடி சொன்னவன்.. "இருவருமே உணர்ச்சிகரமாக இருப்பது எந்த விதத்திலும் நல்லது இல்லை.. எதையும் நாளைக்கு பேசலாம் இப்ப.. ப்ளீஸ் எனக்காக அமைதியாக போய் படு மோனல்" என்றான் தன் நிலை தடுமாறிய உணர்வுகளை அடக்க சிரமப்பட்டு!!!

அவன் பேசியது எதையும் காதிலேயே விழாதது போல் அவனை விட்டு பிரியாது நிற்க..

"ஏன்டி எதையுமே புரிந்துகொள்ளாது இப்படி கொல்ற?" என்று சுந்தர தமிழில் முனுமுனுத்தவன் அவளின் இடையில் கை கொடுத்து சட்டென்று தூக்கி அப்படியே அவள் ரூமில் இருந்த மெத்தையில் கிடத்தியவன்.. "குட் நைட்" என்று மெல்ல மொழிந்துவிட்டு அவளை விட்டு நகர..

“பத்ரி.. நான் தூங்கும் வரை இங்கேயே இரு ப்ளீஸ்...” என்றாள் மன்றாடும் குரலில்.

கண்ணை இருக்க மூடி தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன்... “நா... நான் இருக்கும் மனநிலையில் சும்மா கையை கட்டிக் கொண்டு ரோபோ மாதிரி உன்னை பார்த்துக் கொண்டு இருக்க முடியும் என்று நீ நம்பறியா மோனல்??”

“ஐ ஐஸ்ட் டோன்ட் கேர் பத்ரி... ஐஸ்ட் டோன்ட் கேர்..” என்று கண்ணீர் மல்க சொன்னவள்... பட்டென்று அவனின் காலரை பிடித்து முகத்திற்கு நேராக அவனுடைய முகத்தை இருத்தியவள்...

“இதுவே நான்.. நான் அன்று நீ.. நீ.. சொன்ன மாதிரியே நான் யார்ன்னு ஊருக்கே சொல்லி இருந்தேனா.. அப்பவும் இப்படிதான் பேசுவாயா பத்ரி?!?" என்று அவள் கேட்ட போது யாரோ அவன் வயிற்றில் அரை இன்ச் கத்தியை சொருகியது போல் உணர...

“மோனல்...” என்றான் அரண்டு போய்....

“என் நிகழ்காலத்தின் துணையா இருப்பேன்னு சொன்னியே பத்ரி.. நீ வெறும் நிகழ்காலத்தின் துணையா மட்டும் எனக்கு வேண்டாம் பத்ரி... என் எதிர்காலமும்.. என் கடந்தகாலமும் நீயாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது தப்பா பத்ரி??” என்று அவளின் நெஞ்சில் கை வைத்து கேட்ட போதும் அவனால் பதில் பேச முடியாது அவளுக்காகவும் சேர்ந்து தவிக்க தான் முடிந்தது!!!

“கடந்த காலத்தின் வலிகொண்டு எதிர்காலத்தை கடக்க நினைக்காதேன்னு நீ சொன்னியே பத்ரி... என் வலி மிகுந்த கடந்தகாலத்தை மறந்து.. நீயும் நானும் மட்டும் இருக்கும் ஒரு சந்தோஷமான கடந்த காலத்தை உருவாக்கி அதை ஞாபக பெட்டகத்தில் நிரப்பி வைக்கனும்னு ஆசைப்பட்டேன் பத்ரி.. அது தப்பா????” என்று அடுத்த கேள்வியை கேட்க.. உருக்குலைந்தான் பத்ரி...

இவ்வளவும் அவனால் வந்தது அல்லவா?1? வலியும் வேதனையும் இல்லாத எதிர்காலத்தை கொடுக்க ஆசைப்படறேன் என்று சொன்ன அவனாலே இவ்வளவும் வலியும் வேதனையும் அவள் அனுபவிப்பதை

பார்த்து விட்டு தாங்கிக் கொள்ள முடியாது நெஞ்சின் மேல் இருந்த விரலை அவசரமாக எடுத்து அழுத்தியவன்…

“சஸ்பென்ஸா உனக்கு நாளை சொல்லலாம் என்று இருந்தேன்… நாளை மாலை நான் எழுதி அனுப்பிய அந்த தொல்பொருள் ஆய்வு கட்டுரைக்கான ரிசல்ட் வருது… அதில் எப்படியும் நான் தான் முதல் பரிசு வாங்குவேன்… அப்ப நான் யார் என்பதை ஊர் அறிய சொல்லலாம் என்று திட்டமிட்டு இருந்தேன்… இப்ப உனக்கு சந்தோஷமா பத்ரி… இது தானே நீ கேட்டது?? நான் யாரா இருந்தேன்னு ஊருக்கே தெரிவிக்கனும்.. அப்ப தான் என்னை ஏற்றுப்பேன்னு சொன்ன??” என்று கண்ணீர் வழிய மொழிந்தவள்

“ஒருவேலை இந்த சம்பவம் நாளை நடந்திருந்தால் அப்பவும் இப்படிதான் என்னை தள்ளி தூர நிறுத்தி இருந்திருப்பாயா பத்ரி???” என்று சாட்டையடியாக கேட்க..

அவள் கேட்ட ஒவ்வொரு கேள்வியின் இருந்த அழுத்தம் இன்ச்.. இன்ச்சாக கத்தியை உள்ளே சொருகியது போல் வலிக்க… “மோனல்” என்று வலியின் தாக்கம் தாங்காமல் அவளை முன்னே இழுத்து இருக்க கட்டி… ஆழ்ந்த இதழ் முத்தமிட…

அங்கே கட்டவிழ்ந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடாக காதல் ரசம் குடியேற… இத்தனை ஆண்டுகளாக தான் செல்லவதற்குரிய போக்கிடமோ… தனக்கு என்று ஒரு பாதையோ இல்லாது… திக்கு தெரியாத காட்டாறாக யாருக்கும் பயனற்று ஒடிக்கொண்டிருந்த ஆறு முதன் முறையாக தன் செல்ல வேண்டிய பாதையும்… கலக்க வேண்டிய இடமும் அறிய சந்தோஷமாக அவனுள் சங்கமித்தாள்!!!

அத்தியாயம் - 27
மூன்று வாரங்களுக்கு முன்பு….

அது இல்லை.. என்று ஆரம்பித்தவனுக்கு மெல்ல அவளின் பதில் புரிய.. “நீ என்ன சொல்றன்னு புரியுதா மோனல்??” என்றான் பத்ரி பரபரப்பாக.

“நான் சொல்வது உனக்குதான் புரியவில்லை.. பத்ரி” என்றாள் அந்த குளிரில்

பொறி பறக்க அலக்நந்தா.

அவளின் பதிலை கேட்டவனின் முகத்தில் சூழ இருந்த இருளை சுருட்டி அடிக்கும் படியான பிரகாசமான புன்னகை அவன் முகத்தில் தோன்ற அந்த புன்னைகையின் தொடர்ச்சியாக ஆளை மயக்கும் அவனின் முகவாய் குழி பளீரிட... தன் பரந்த மார்பில் குறுக்காக கையை கட்டியவன் "ஹப்பா... கடைசியில் உனக்கும் புரிந்துவிட்டதா?" என்றான். அந்த "ம்"மில் மட்டும் ஒரு அழுத்து அழுத்தியவனின் குரல் வெகு அமைதியாக எந்த வித சலனமும் இல்லாமல் என்னவோ அவள் தயிர் சாதம் சாப்பிட்டேன் என்று சொன்னது போல் தான் இருந்தது!!! .

அவனின் விட்டேத்தியான பதிலை கேட்டவளுக்கு உள்ளே எரிமலை கொந்தளிக்க "எவ்வளவு பெரிய விஷயம் சொல்லி இருக்கேன் இது தான் நீ கொடுக்கும் ரியாக்ஷனா????" என்றாள் ஆற்றமாட்டாமல்.

அவளின் இம்மி அளவு அசைவை கூட அந்த இருட்டிலும் மிக துள்ளியமாக கவனித்தவனுக்கு உள்ளுக்குள் பொங்கிய சிரிப்பை அடக்க வெகு சிரமப்பட்டு "பின்ன எப்படி இருக்கனும்னு நினைச்ச?" என்ற போது அவன் குரலில் எள்ளல் துள்ளி குதித்தது.

எதையோ சொல்ல வாய் எடுத்தவள் அதை வார்த்தைகளால் சொல்ல வராது.. அவளின் படபடப்பை தெரிவிக்கு செயலான பின் தன் கைகளை பிசைந்தபடி "எனக்கு தெரியலையே... உன் வீட்டில் தான் இது வழக்கமாச்சே.. உனக்கு தெரியாதா?!?" என்றாள் கொந்தளிப்புடன்.

"ஓ.." என்று அவளை மேலும் கீழும் ஒரு மாதிரி பார்த்தவன் "சாரி... டூ டிஸ்சபாய்ன்ட் யூ... என்ன தான் நான் சச்சிதேவாக இருந்தாலும் சகோதரனிடம் போய் அவர்களுடைய ரோமான்ஸ் கதையைப் பற்றி கேட்கும் அளவு மோசமானவன் இல்லை.. அதைவிட நீ தான் என் முதலும் கடைசியுமான காதல். சோ.. இந்த விஷயத்தில் முன் அனுபவமும் இல்லை..." என்று தெளிவாக சப்புக்கொட்டியப்படி மிகவும் பரிதாபமாக மொழிந்தவன்.. "அது சரி மற்றவர்கள் கதை நமக்கு எதுக்கு..? உன் கற்பனை குதிரையை தட்டி விட்டு நான் எப்படி ரியாக்ட் பண்ணனுன்னு நீயே சொல்லேன்" என்றான் முன்னிலும் அமைதியாக.. அதிசிரதையாக.

டென்ஷனின் உச்சிக்கு இருந்ததின் எதிரொலியாக வார்த்தைகள் கூட தடுமாற.. “ஐ.. ஐ... டோன்ட் நோ..” என்று தயங்கியவள்…

பத்ரி எந்த பதிலும் சொல்லாமல் அவளை தலை சரித்து பார்த்தபடி ஒரு தேனாவட்டு தனத்துடன் நிற்க..

தன் வாயில் பதில் வராமல் விடமாட்டான் என்று உணர்ந்தவள் பெருமூச்சு ஒன்றை விட்டு… “ம்ம்…. நான் சொன்னவுடன் நீ ரொம்ப ரொம்ப ஆச்சரியப்பட்டு சந்தோஷமா… துள்ளி குதிப்ப..” என்று இழுத்தவள் “அப்புறம்… கட்டிப்பிடிப்ப.. எக்ஸ்ட்ரா.. எக்ட்ஸ்ரா… எதிர்ப்பார்தேனே தவிர, சத்தியமா… இப்படி ஒரு சப்பையான ரியாக்ஷனை மட்டும் எதிர்பார்க்கலை” என்று தயக்கமாக திக்கி ஆரம்பித்தவள் நிராசை கலந்த கடுப்புடன் முடித்தாள்!!!

“ஓகோ.. அப்ப வா..” என்றபடி இத்தனை நேரம் மார்பின் குறுக்கே கட்டி இருந்த கைகளை விரித்து நின்றான் என்னவோ அவனை சிலுவையில் அறைய போவது போல!!!.

அவன் நின்ற விதத்தை பார்த்தவளுக்கு சிரிப்பு வருவதற்கு பதில் கோபம் பொத்துக் கொண்டு வர, இத்தனை நேரம் உள்ளே குமுறும் எரிமலையாக இருந்தவள் அப்படியே வெகுண்டு வெடித்து சிதர… “இப்படி நிற்பதற்காகவா நான் சொன்னேன்?? நான் எவ்வளவு பெரிய விஷயம் சொல்லி இருக்கேன் இத்தனை….. இத்தனை…. இத்தனையாவது” என்றபடி அவள் ஆள் காட்டி விரலை அரை இன்ச்.. கால் இன்ச்.. என்று அளவு காட்டியபடி அவன் முன் வந்து நிற்க..

அவன் முகத்திற்கு முன்னால் நீட்டி இருந்த கையை பட்டென்று பிடித்தவன் அவள் எதிர்பார்க்காது அப்படியே அவளை திருப்பி பின்புறம் இடையோடு ஒட்டி அணைத்து… பால்கனியில் இருவருக்கும் முன்னால் படர்ந்து விரிந்த இருட்டை நோக்கி நிற்க வைத்தான்!!!

எதுக்கு இப்படி எதுவும் தெரியாத இருட்டை பார்க்கும் படி நிற்க வைத்து தனக்கு பின்னாடி நிற்கிறான் என்று புரியாத போதும்.. அந்த குளிருக்கு அவனின் நெருக்கமும் இறுக்கமும் அவளை நூறு டிகிரி சூட்டில் இருப்பது போல் வேர்க்க வைத்து நிலை தடுமாற செய்ய.. லேசாக தலையை திருப்பிய அலக்நந்தா…

“பத்ரி??” என்றாள் தடுமாற்றமாய்!!!

“ஷ்ஷ்…” என்று மொழிந்தபடி அவளின் நீண்ட கழுத்தில் தன் முகவாயை வைத்தவன் இணைந்திருந்த கைகளை நீட்டி கார் இருள் சூழ்ந்திருந்த மலை முகட்டை காட்டியவன் அவளின் காது மடலில் உதடுகள் உரசியபடி மென்மையாக “அங்க என்ன தெரியுது பாரு??” என்றான் கிசுகிசுப்பாய்..

இறுக்கமாக இருக்கும் ஜஸ்கட்டியில் ஒரு விரிசல் விழுந்தவுடன்…. மடமடவென்று உடைந்து நொருங்கி உருகி கரைவது போல்… அத்தனை நேரம் இறுக்கமாக இருந்தவள் அவனின் ஸ்பரிசம் பட்டவுடன் மளமளவென்று தன் இறுக்கம் தளர்ந்து மேனி உருகி கரைய… அந்த திடீர் உறுக்கத்தை தாங்காது கால்கள் துவள..

அவளின் நிலையை உணர்ந்தது போல் இரு கைகளும் அவளை இன்னும் இறுக்கி இடையை சேர்ந்து அணைத்துக் கொள்ள… எங்கோ பறந்த மனதையும் உணர்வையும் அடக்கிக் கொண்டு… மூன்றாவது மாடியில் இருந்து சூழ இருந்த இருட்டில் என்ன தெரியுதுன்னு கேட்டால் அவள் என்னத்தை சொல்வாள்? அதுவும் இப்படி நிற்கையில்??

அவனின் கதகதப்பை உள்ளுக்குள்ளே ரசித்தபடி “பத்ரி.. இது உன் வீடு… எனக்கு கண்ணாடி போட்டாலே சரியா கண்ணு தெரியாது இதில் இப்படி கும் இருட்டை பாருன்னா நான் எதை பார்க்க?!?” என்றாள் படபடப்பாக லேசாக சிரித்தபடி.

அவளின் கழுத்தில் தன் முகத்தை இன்னும் ஆழமாக புதைத்து “ம்ம்..” என்று நெஞ்சு முழுக்க அவளின் வாசத்தை நிரப்பிக் கொண்டவன்… “இருட்டில் உனக்கு தெரியாமல் இருப்பதால் அங்கே உள்ள சின்ன குன்று இல்லைன்னு ஆகிவிடாது மோனல்… அது மாதிரி காதலும். உனக்கு இத்தனை நாள் தெரியாமல் இருந்ததால் அது இல்லைன்னு அர்த்தம் இல்லை!!” என்றான் பத்ரி மிக தெளிவாக.

“பத்ரி..” என்றாள் எதுவும் பேச முடியாது..

“உன் காதலை நீ இப்ப தான் உணர்ந்த.. அதனால் நியாயப்படி நீ தான்

என்னைக் கட்டிப்பிடித்து எக்ஸ்ட்ரா.. எக்ஸ்ட்ரா செய்யனுமே தவிர... உன் காதலை நூற்றாண்டு முன் உணர்ந்த என்னிடம் அந்த ரியாக்ஷனை எதிர்பார்க்கலாமா?" என்று அந்த நிலையிலும் லாஜிக் பேசினான் பத்ரி சச்சிதேவ்.

அவள் எதுவும் பேச முடியாமல் நிற்க...

"லாஜிக் படி நீ தான் என்னைக் கட்டி பிடிக்கனும்.. இருந்தும் நானே அதை செய்து விட்டேன்... இந்த எக்ஸ்டரா.. எக்ஸ்டரா என்னன்னு சொன்னா நான் மென்டலா ரெடி... ஆகிப்பேன்.." என்றான் தன்னை கவர்ந்த மச்சத்திற்கு மெல்ல முத்தமிட்டபடி.

"நீ... இப்படி நிற்கும் போது என்னால் மூச்சு கூட விட முடியவில்லை.. உன்னால் எப்படி பத்ரி யோசிக்க முடியுது???" என்று முனுமுனுத்தவள் மெல்ல தன் தலையை திருப்பி அவன் முகத்தில் எதையோ தேடினாள்.

அவளின் பார்வையில் இருந்த தேடலை கண்டுகொண்டவன் "என்ன தேடற?"

"என் பத்ரி எங்கையாவது தென்படறானான்னு தேடறேன்..." என்று மிக அழகாக பதில் அளித்தாள் அலக்நந்தா.

"நான் சச்சிதேவா இருந்து... உன் பத்ரி தலை தூக்காதவரை உனக்கு சேப்.. மோனல்" என்றான் முதல் முறையாக உணர்ச்சிகரமாக

"ஏன்?"

"உன் பத்ரியா ஆகாத வரைக்கும் தான் இப்படி பேச முடியும்.."

"என் பத்ரி ஆனா??" என்றபடி அப்படியே திருப்பி அவனை நேருக்கு நேராக பார்க்க...

"என் வீட்டு பால்கனியில்.. என் கை இருப்பில்... யாரும் இல்லா தனி இரவில்.. என்னோட இப்படி நின்றுகொண்டு உன் காதலை சொல்லும் நேரம் வரும் என்று நான் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை மோனல்...." என்று

அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவன் கழுத்தை சுற்றி மாலையாக தன் கையை இட..

ஒரு நிமிடம் கண்னை மூடி நின்றவன்... "இங்கே இருந்து பர்ஸ்ட் ரைட் தான் என்னுடைய ரூம்.. உன்னை இப்படியே தூக்கிட்டு போக எனக்கு எத்தனை நேரமாகுன்னு நினைக்கிற..?!?" என்றான் அவளின் கண்ணாடி அணிந்த கண்களை முழுங்கியபடி.

"தெரியலை.. பத்ரி... உன்னை காதலிக்கிறேன் என்ற குஷியில் இரண்டு இன்ச் தரையில் படாமல் நான் நிற்கிறேன்... வேற எதை பற்றியும் என்னால் நினைக்க கூட முடியாது போது.. எப்படி லாஜிக் எல்லாம் யோசிக்கும் முடியும்??" என்று மொழிந்தவள்.. "சௌவியை ஹாஸ்பிட்டலில் அட்மிட் பண்ணி இருக்காங்கன்னு சொன்னவுடன் கிளம்பி வரனுன்னு தான் தோனியதே தவிர... எனக்கு செமினாரை பற்றி நியாபகம் கூட வரலை... இங்க வந்து குழந்தை பிறந்த பிறகு தான் அங்க போன் பண்ணி சொல்லனுன்னே தோன்றியது.." என்று கூறியவள்.

"முதல் முறையாக நீ குழந்தையை கையில் வாங்கும் போது உன் கண்கள் கலங்கி பார்த்தேன் பத்ரி... சில சமயம் வார்த்தைகள் எவ்வளவு போட்டு நிரப்பினாலும் நம் உணர்வை வெளிப்படுத்தவே முடியாதே... அந்த மாதிரி விஷயமாக அந்த நிமிடங்கள் தோன்றியது... இப்படி ஒரு அழகான நாள் என் வாழ்க்கையில் வரும்ன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை... நான் எப்படிப்பட்டவனை காதலிக்கிறேன்னு முழுமையாக உணர்ந்த தருணம் அது தான் பத்ரி... நான் காதலிக்கிறேன் என்பதை விட உன்னால் காதலிப்படுவதின் முழு பரிமாணத்தை முதல் முறையாக உணர்ந்ததும் இங்க தான்"

"இதுக்கு முன்னாடி உங்க வீட்டில் என்னை பார்த்தது கூட இல்லை.. ஆனா இங்க இருக்கும் எல்லோருக்கும் என்னை பிடிக்கும்.. அது என்ன மாதிரி அன்புன்னு என்னால் வார்த்தைகளால் சொல்லி புரிய வைக்க முடியாது... இருப்பத்தி நான்கு வருஷம் எனக்கு கிடைக்காத அன்பு, பாசம், அரவணைப்பு ஒட்டுமொத்தமாக ஒரே நாளில் கிடைத்தா எப்படி இருக்குமோ அப்படி இருந்தது பத்ரி... இதுக்கு எல்லாம் நீதான் காரணம் என்று நினைக்கும் போது... உன்னுடைய காதலின் அருமை புரியதற்காகவே தான்... நான் அன்பின்றி வளர்கப்பட்டேனோன்னு கூட மனதில்

ஒடிக்கொண்டே இருக்கு பத்ரி...!!!" என்றபடி பின்னால் ஒட்ட நறுக்கப்பட்டிருந்த முடியை மெல்ல வருடியபடி தன் உள்ளத்தில் பொங்கியும் வழியும் கரை காண முடியாத காதலை வார்த்தைகளை வடிகாலாக கொண்டு நிறப்பினாள் மொழிந்தாள் அலக்நந்தா.

"மோனல்.. என்னை ரூமிற்கு போ சொல்லு.." என்றான் வேகமாக மூச்சை இழுத்து விட்டபடி.

"ம்கூம்.." என்று அவள் தலையை பலமாக அசைக்க...

"என் பக்கத்தில் இருந்தால் உன்னால் மூச்சு விட முடியலை.. எனக்கு உன்னை தவிர உலகமே தெரியவில்லை..." என்று அவன் பேசிக் கொண்டு இருக்கும் போதே..

மெல்ல அவனின் கன்னத்தில் கையை வைத்தவள்... தலையை உயர்த்தி அவனின் முகவாயில் குழியில் முத்தமிட்டு "ஐ லவ் யூ" என்றாள் கண்ணில் காதல் மின்ன.

"என்னை ரொம்ப சோதிக்கிறியே மோனல்.." என்று உணர்ச்சிப் பெருக்கில் முனுமுனுத்தவன்.. அதற்கு பின் அவனின் கைகள் கண்ணாடி அணிந்த தாமரை முகத்தை ஏந்தி.. முகம் எங்கும் முத்தமழை பொழிந்தவன்.. பின் அவளின் செவ்விதழில் முத்தமிட அங்கே கரை காண முடியாத காதல் பொங்கி வழிந்தது!!!

மயான அமைதியான அந்த அர்த்தராத்திரியில் யாரோ கையை தட்டும் சத்தம் கேட்க.. மெல்ல சுய உணர்வு பெற்று பதறியடித்துக் கொண்டு பத்ரி அலக்நந்தாவை விட்டு விலகி நின்று திரும்பிப் பார்க்க..

அங்கே தன் முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டி சிரித்து.. அவர்களை ஒருமார்க்கமாக பார்த்தபடி நின்றுக் கொண்டு இருந்தது சிம்பி!!!

"சிம்பி.." என்று சிரித்தபடி அலக்நந்தா விட்டு முற்றிலும் பத்ரி விலக...

"குட்.. சிம்பி கண்டு பிடித்து விட்டாயா?" என்று கேட்டபடியே பின்னாடியே வந்த மங்கி... "நான் தான் உங்களை தேடிட்டு வந்தேன்.. மணி இரண்டுக்கு

மேல் ஆச்சு படுக்க வரலையா பாபி" என்றாள் மேகமித்ரா.

"ஆ... வரேன்.." என்றவள்... பத்ரியிடம் திரும்பி "குட் நைட்" என்று அவனை விட்டு விலக மனமில்லாமல் மொழிய..

அந்த பார்வையிலேயே அவளின் எண்ண ஓட்டத்தை புரிந்துகொண்டவன் மேகமித்ரா புறம் திரும்பிய பத்ரி "ஐந்து நிமிடத்தில் வந்திடுவா நீ போ".

"ஐந்து நிமிடத்தில் அனுப்பிடு.." என்று சொல்லியவள் சிம்பியை அழைத்துக் கொண்டு நடந்தபடியே "பாட்டி ஒன்றும் சும்மா பாபியை என் ரூமில் படுக்க அனுப்பவில்லை... அண்ணா.. சச்சிதேவின் மேல் அவ்வளவு நம்பிக்கை" என்று தமிழில் சிரித்தபடி கூறிவிட்டு ரூமிற்குள் சென்றாள் மேகமித்ரா.

"சரியா ஐந்து நிமிடத்திற்குள் நீ போகவில்லை என்றால் அவள் ஊரையே எழுப்பி விடுவாள்" என்று மெல்ல சிரித்தபடி மொழிந்தவன் "போய் படு மோனல்.." என்று கூறியபடி மிக மென்மையாக அவளின் சென்னியில் முத்தமிட்டான்.

"பத்ரி" என்று அவள் பேச ஆரம்பிக்க..

"ம்கூம்... உன்னை அவளோடயே அனுப்பி இருப்பேன்.. ஆனா.. உன் முகம் பார்த்து அனுப்ப மனம் வரலை... போய் படு.. நாளைக்கு காலேஜுக்கு போன் பண்ணி இந்த ஒரு வாரம் சேர்த்து லீவு சொல்லிவிடு... என்னுடன் சேர்ந்தே போகலாம்.. குட் நைட்" என்று கூற.. அவளும் "குட் நைட்" என்று முனுமுனுப்பாக விடைபெற்றாள்.

அவள் அவனை விட்டு விலகியதும் "மோனல்" என்று தடுத்து நிறுத்தியவன்.. "நீ சொன்னதை முழுமனதாக ஒத்துக்கிறேன்" என்றான் மெல்ல புன்னகைத்தபடி.

அவள் புரியாமல் விழிக்க... அவளிடம் நெருங்கி சட்டென்று இருக்க அணைத்து மீண்டும் ஒரு தரம் ஆழ்ந்த முத்தமிட்டு விடுவித்தவன் "நீ சொன்னியே சில விஷயத்தை வார்த்தைகளால் சொல்லவே முடியாதுன்னு.. அதை நீ காதலிக்கிறேன்னு சொன்ன போது உணர்ந்தேன்" என்றான் பத்ரி உணர்ச்சி பெருக்காக.

“பத்ரி…” என்று கூவியபடியே அவனின் பறந்த மார்பில் தன் முகத்தை வைத்து இறுக்கி கட்டிப்பிடித்தவள் பின் பிரியவே பிடிக்காத போதும்.. அவனை விட்டு பிரிந்து அந்த மயக்கத்திலேயே ரூமிற்கு சென்றவளுக்கு மறுநாளும் இப்படியே கழிந்தது.

ஆர்யாவின் வரவு மிகுந்த பனிபொழிவு காரணமாக மேலும் இரண்டு நாள் தாமதமாக… சுக பிரசவம் என்பதால் மூன்றாம் நாளே சௌவியை வீட்டிற்கு அழைத்துப் போக சொல்லி விட.. சரியாக டிஸ்சார்ஜ் செய்யும் அரைமணி நேரத்திற்கு முன்னாடி வந்தனைக் கண்ட அலக்நந்தாவிற்கு அந்த நாள் தன் வாழ்க்கையில் மாற்றக் கூடிய நாளாக இருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை!!!

இன்று….

எப்பவும் போல் விடியற்காலையிலேயே விழிப்பு தட்ட மெல்ல கண்விழித்தவளுக்கு வாழ்க்கையில் நினைவு தெரிந்த நாளில் இருந்து தனியாகவே படுத்து பழகியவளுக்கு தன் அருகில் யாரோ படுத்திருப்பது தெரிய வர..

விழுந்தடித்துக் கொண்டு பெட்டை விட்டு துள்ளி கீழே இறங்கி தன்னையும் அறியாது கத்த வாயை திறந்தவளுக்கு தன் அருகில் இருந்தவன் பத்ரி என்று புரிய.. அவரசமாக வாயை இழுத்து மூடினாள்!!!.

“கடவுளே” ஒரு நொடி தாமதித்திருந்தாலும் அவள் குரலை கேட்டு மொத்த ப்ளாக்கும் அவள் ரூம் முன்னால் கூடி இருப்பார்கள்.. இவன் இங்கே இருப்பதற்கு என்ன பதில் சொல்லுவாள்?!?

நேற்று நடந்த நிகழ்வு எல்லாம் கண்ணில் ஒரு நொடி வந்து போக… அதை நினைத்து பயமோ… குற்ற உணர்வோ அவளுக்கு ஒரு துளியும் எழவில்லை… ஆனால் பத்ரிக்கு எப்படி இருக்கும் என்று அவளால் யூகிக்க முடிந்தது.. தன் கட்டுப்பாட்டு இழந்து அவளை ஆட்கொண்டதை நிச்சயம் தன்னுடைய தோல்வியாக தான் நினைப்பான் என்று நினைக்கும் போதே மனம் கலங்கியது

கண் விழித்து அவளை இங்கே பார்த்தவுடன் நிச்சயம் பெரிய சண்டை எழப் போகிறது என்பதை உணர்ந்தவள்.. அதை தவிர்க்க எண்ணி... சத்தம் போடாமல் வேகமாக குளித்து விட்டு அவன் கண் விழிக்கும் முன் வெளியேறினாள்!!!

எப்படியும் எழுந்தவுடன் அவளை தேடுவான் என்று தெரிந்து வெளியே போய்விட்டு வருவதாக எஸ்.எம்.எஸ் பண்ணி விட்டுதான் போனாள்!!!

அடுத்த இரண்டு மணி நேரம் கால் தேய நடந்த போதும் செக்கு மாடு சுற்றி வருவது போல் மனது நேற்று நடந்தேறிய விஷயத்தை ஆயிரம் முறை சுற்றிக்கொண்டு இருந்ததே தவிர அவனிடம் என்ன பேசுவது.. எப்படி பேசுவது.. என்பதைப் பற்றி ஒரு உருப்படியான பதிலும் அவளிடம் இல்லை.

இனியும் ரூம் போவதை தள்ளிப் போட முடியாது என்று உணர்ந்து கால் பின்ன ரூமிற்கு செல்ல.. எப்படி எல்லாம் அவன் பார்வையால்.. வார்த்தையால் எரிக்கப் போகிறான் நூறு விதமாக கற்பனை பண்ணிக் கொண்டு அறைக்குள் நுழைந்தவளுக்கு நிச்சயமாக பத்ரி மூக்கை குத்து விடும் காட்சியும்.. அப்போ அவன் கையில் இருந்த மக் கீழே விழுந்து சிதறுவதும்... அதுவும் அவனின் உயிர் நண்பனான சித்துவே இதை செய்வதையும் எதிர்பார்த்திருக்க மாட்டாள்!!!

தான் கண்ட காட்சி நிஜம்தானா என்று ஒரு முறை கிள்ளிப் பார்க்க... வலித்தது.. அதற்குள் பத்ரி..

“எதுக்கு டா இப்ப என்ன அடிச்ச?? ஆர் யூ கான் மேட்??” என்றபடி அடிபட்ட தன் மூக்கை பிடித்துக் கொண்டு கத்தியபடி அடுத்த அடி விழாமல் தலையை குனிந்தான் பத்ரி.

என்ன சொல்வது.. இல்ல என்ன செய்வது என்று எதுவும் புரியாது செயலற்று அப்படியே சிலையென நின்றாள் அலக்நந்தா!!!

“என்னது எதுக்கு அடிச்சேனா?? நீ என் பெஸ்ட் ப்ரெண்டா இருக்கலாம் அதுக்கா நீ செய்றதை எல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பேன்னு நினைக்கிறாயா??” என்று மீண்டும் அடிக்க கையை ஓங்க.. இம்முறையும் நகர்ந்து மயிரிழையில் தப்பினான் பத்ரி.

“அடடேய் நீ அடிக்கும் அளவு என்ன பண்ணினேன் சொல்லேன் டா?!?” என்றான் பத்ரி புரியாத தன்மையுடன்.

“பண்றதையும் பண்ணிட்டு அதை என்னன்னே தெரியாம இருக்க பாரு.. உன்னை..” என்று பல்லை கடித்தவன் மீண்டும் வீராவேசமாக அடிக்க வர.

வேகமாக அங்கிருத்து நகர்ந்தவன் ஹாலில் இருந்த கவுச்சிற்கு பின்னால் வந்து.. “நீ ஏதோ தப்பா புரிந்துக் கொண்டு..”

அவன் பேசவே விடாதவன் “என்னது தப்பாவா? நானா?” என்று கத்திய சித்.. “சரி நான் கேட்பதற்கு நேரடியாக பதில் சொல்லு.. நேற்று இரவு நீ எங்க இருந்த??” என்ற கேட்ட போது அவன் குரலில் ரௌத்திரம் தாண்டவம் ஆடியது!!

அந்த ஷணம் அலக்நந்தாவின் உடம்பிற்கு உயிர் வந்தது. அப்போ இத்தனை நேரம் அவளுக்காக தான் அவன் சண்டை போடுகிறானா? தன் உயிர் நண்பனையே பகைத்துக் கொண்டு!!! என்று நினைக்கையில் சித்தின் மேல் இருந்த மதிப்பும் மரியாதையும் பன் படங்கு பெருகியது!!!

“சொல்லுடா ஏன் இப்படி முழிக்கிற?” என்றான் ஆவேசமாக சித்.

“அலக்நந்தா ரூமில்” என்றான் பத்ரி சின்னதாகிவிட்ட குரலில்.

“நிச்சயமா அவளுக்கு நீ சந்தா மாமா கதை சொல்லி தூங்க வைக்க போகலை தானே?” என்றான் ஆக்ரோஷமாக .

“ம்கூம்..” என்று தலையை மட்டும் ஆட்டினான் பத்ரி.

“உன்னை நம்பினேனேடா.. பத்ரி.. உயிர் நண்பனா உன்னை என் அண்ணனுக்கு அடுத்தபடியா நான் உன்னை தானேடா நம்பினேன்.. நம் ரூம் மேட்டை போய்...”

“அது இல்லடா நான் பேசறதை..”

“உனக்கு தான் நல்லா பேச தெரியுமே நம்பற மாதிரி ஒரு குப்ப கதை சொல்ல போற அதுதானே?? சீப்பாக இப்படி நடப்ப என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லைடா… நேற்றுமட்டும் நான் கார்ட்ஸ் விளையாட போகலைன்னா இது நடந்திருக்கவே நடந்திருக்காது இல்லை… ஒரு நல்ல நட்பை குழிதோண்டி புதைத்து விட்டியே.. அவள் யார் தெரியுமா?!? அவள் எதுக்காக வந்தான்னு தெரியுமா??? காட் டேமிட்… யூ யூஸ்ட் ஹர்…” என்று கத்தியவன் அப்பவும் ஆத்திரம் தீராது… அப்படியே தாவி குதித்து கவுச்சிற்கு பின்னால் உறைந்து போய் நின்ற பத்ரியின் மேல் சரிய..

இந்த தாக்குதலை எதிர்பாராத பத்ரி பின்னால் விழ.. இருவரும் மல்யுத்த வீரர்களை போல் ஹாலில் கட்டி புரண்டார்கள்!!!

தனக்காக உயிர் நண்பர்கள் இப்படி கட்டிப் புரளுவதை பார்த்துக் கொண்டு வாயை மூடி சும்மா இருக்க முடியாது..

“ப்ளீஸ்.. ப்ளீஸ்.. நிறுத்துங்கள்” என்றாள் மன்றாடும் குரலில்.. அலக்நந்தா.

ஆனால் அவள் சொல்லுவதை யார் கேட்கும் மன நிலையில் இருந்தார்கள்.???

சித் அடிக்கும் ஒவ்வொரு அடியையும் தவிர்க்கவும் உருளவுமே பத்ரிக்கு நேரம் சரியாக இருக்க.. அவனை அடித்தே தீருவது என்று கங்கனம் கட்டிக் கொண்டு சித்தும் விடாமல் போராட… இவர்கள் அரங்கேற்றிய யுத்தத்தில் அறையில் இருந்த சாமான்கள் எட்டு திக்கும் தெறித்து சிதறியது!!!

“ஒருநிமிஷம்.. நான் சொல்றதை கேளுடா” என்று பத்ரி மூச்சை பிடித்துக் கொண்டு கேட்க..

“நீ சொல்வதை கேட்டுக் கொண்டே இருந்ததால் தான் இந்த நிலையே வந்தது.. நான் மட்டும் எப்பயும் போல லேட்டாக எழுந்திருந்தால்… நீ அவள் ரூமில் படுத்திருப்பது கூட எனக்கு தெரியாது” என்று கூறிக் கொண்டே போனவன்..

சட்டென்று நிறுத்தி.. புருவங்கள் முடிச்சிட.. “ஓ…மை காட்… ஓ மை காட்…” என்று கூறியபடி தன் நீண்ட முடியை கோதிய சித்… “இதுக்குதான் நீங்க

இரண்டு பேரும் நாயும் பூனையுமா அடித்துக் கொண்டிங்களா?? இது ரொம்ப நாளா நடக்குதா??" என்று வேறு விதமாக கற்பனை பண்ணிக் கொண்டு இன்னும் ஆக்ரோஷமாக அடிக்க போனான் சித்.

"டேய்.. நிறுத்துடா.. நான் சொல்றதை ஒரு நிமிஷம் கேளுடா.." என்று பத்ரி சொல்வது எதையும் காதிலே வாங்காது அவன் மேல் ஏறி அமர்ந்து மேலும் ஒரு குத்து விட போனவன் கையை பிடித்த பத்ரி தன் தொண்டை கிழிய "எதையோ" கத்தி சொல்ல..

மத்திரத்தில் கட்டுப்பட்டவன் போல் உரைந்து நின்ற சித்... தூக்கிய கைகள் அந்தரத்தில் நிற்க... "வாட்???? இப்ப நீ என்ன சொன்ன... என்ன சொன்ன??" என்றான் புரியாமல்.

"அவள் என் பெண்டாட்டின்னு சொன்னேன்.." என்றான் பத்ரி அதே ஆவேசம் குறையாது!!!

அத்தியாயம் - 28
இரண்டு வாரத்திற்கு முன்பு....

அன்று பால்கனியில் உரையாடியதற்கு பிறகு அடுத்து வந்த இரண்டு நாளும் அலக்நந்தாவிடம் தனியாக பேசுவதற்கு மூச்சு முட்ட ஆசை இருந்த போதும்.. ஒரு வார்த்தை பேச முடியவில்லை...

இதற்கே பாட்டி, அம்மா, அத்தை என்று வீட்டில் இருக்கும் பெரிய தலைகள் எல்லாம் ஹாஸ்பிட்டலுக்கும், வீட்டிற்கும் ரன் எடுத்துக் கொண்டு இருக்க... அவனுடைய வீட்டில்... அவனுக்கு எதிராக பத்தடி தூரத்தில் அழகு பதுமையாக வீற்றிருக்கும் இருக்கும் அலக்நந்தாவிடம் மட்டும் பத்ரியால் தனித்து பேசவே முடியாமல் போனதற்கு அங்கே நிலவிய அசாதாரணமான சூழலே காரணம்!!!

போகிற போக்கை பார்த்தால் அவளிடம் பேசுவது என்ன.. அவளைக் கண்ணால் பார்ப்பதே எட்டாவது அதிசயமாகி கொண்டிருந்தது!!!

தன் வாழ்க்கையில் இதுவரை காலாற் படை பார்த்திருக்கிறான்.. குதிரை

படை பார்த்திருக்கிறான்.. யானை படையை பற்றி படித்திருக்கிறான்.. வி.ஐ.பிகளுக்கு கொடுக்கப்படும் பூனை படையை கண்டு இருக்கிறான்.. இன்னும் ஏன்? தோலில் வரும் படையை பற்றி கூட கேள்விபட்டு இருக்கிறான். ஆனால் இப்ப தான் முதல் முறையாக குரங்கு படையை நேரடியாக பார்க்கிறான்!!!

வீட்டில் இருக்கும் நேரம் எல்லாம் அலக்நந்தாவை சுற்றி வட்டம் போட்ட படி சங்கியோ, நிரல்யாவோ இல்லை மங்கியோ அவளை சூழ்ந்தபடி இருக்க.. அலக்நந்தாவை இவர்கள் கண்ணுக்குள் வைத்துக் கொண்டு பார்த்துக் கொள்கிறாங்களோ இல்லையோ.. தன் கண்ணின் மணியாக பார்த்துக் கொண்ட சிம்பி அந்த குரங்கு படைக்கு தலைமை தாங்கியது!!!

அலக்நந்தாவின் விசித்திர ஹேர் ஸ்டைல் காரணமாகவோ என்னவோ... அந்த சிம்பிக்கு அவளை ரொம்ப பிடித்து போக... எங்க இருந்தாலும் அவள் கை பிடித்துக் கொண்டு நடப்பதோ.. இல்லை அவள் தலையை அன்பொழுக வாருவதோ இல்லை.. அவள் கண்படும் தூரத்தில் அவளை பார்த்துக் கொண்டே அமர்ந்து இருந்தது!!!

இப்படி ஒரு அசாதாரண சூழலில் எங்கே அவன் அலக்நந்தாவிடம் தனித்து பேசுவது?!? எல்லோரரும் பேசி வைத்துக்கொண்டு அவனை பழிவாங்குவது போதாது என்று கார்த்திக் வேறு இப்ப தான் முதல் முறையாக பிசினஸ் பண்ற மாதிரி இது என்ன செய்ய அதை என்ன செய்ய என்று ஆயிரத்தெட்டு சந்தேகம் கேட்டு அவனுடன் ஒட்டிக் கொண்டே திரிய.. அலக்நந்தாவிடம் பேசுவது கூட இமால சாதனையாக தான் இருந்தது. எல்லோரும் தூக்கிய பின் இரவில் பேசலாம் என்றால் அப்பயும் சிம்பி அவர்களில் வாயிற் படி காவலனாக கதவருகில் படுத்துக்கொண்டு இவன் போவதையும் வருவதையும் இளக்காரமாக பார்த்து வைக்க... தலையில் அடித்துக்கொண்டு தன் அறையிற்கு சென்றான்.

இப்படியாக முடிந்த வரை அலக்நந்தாவிடம் போனில் மட்டும் பேசிக்கொண்டு இரண்டும் நாளையும் கழிக்க... மறுநாள் காலை ஆர்யா ஊருக்கு வருவதாக இருக்க... கார்த்திக்கும், பத்ரியும் ஹாஸ்பிட்டலுக்கே சென்றனர். சரியாக அரைமணி நேரத்தில் பரபரப்பாக காரை விட்டு தன் நீண்ட ஜடா முடியும்.. சுமார் ஏழுமாத காலமாக கத்தியே பார்க்காத

தாடியுடன் ஏதோ இமய மலையின் அடி வாரத்தில் அப்படியே குதித்தவன் மாதிரி இருந்த ஆர்யாவை.. சகோதரர்கள் வெளியே நின்று வரவேற்றதை கண்டும் காணாது படிகளை தாவி குதித்து தன் காதல் மனைவி இருக்கும் அறையை நோக்கி சென்றான்!!!

படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்த சௌவி.. இவன் கதவை திறந்து உள்ளே வருவதைக் கண்டு.. முகம் விகசிக்க அவளின் பிரத்தியேக புன்னகையை ஆர்யா மீது வீச...

அலுப்பு.. கலைப்பு.. வலி எல்லாத்தையும் மீறி சௌவி முகத்தில் இருந்த தாய்மை தந்த பூரிப்பும்.. அழகும்.. அவளை பேரழகியாக பிரகாசிக்க செய்ய... பாய்ந்து சென்று அவளை அணைத்தான் ஆர்யா!!!

பிரசவம் சமயத்தில் அவளுடனே இருக்க ஆசைப்பட்டு தன் வேலையை எல்லாம் முடித்துவிட்டு ஏற்காடே கதியாக இருக்க ஆசைப்பட்டவனுக்கு இப்படி ஆனதில் எத்தகைய வருத்தம் இருந்தாலும் எல்லாம் நல்லபடியா முடிந்ததில் மனம் முழுக்க ஆனந்தப் பெருவெள்ளத்தில் திளைத்தது!!!

தன் படபடப்பு அடங்கும் வரை அவளை இருக அணைத்தவன்.. பின் மெல்ல விடுவித்து "நீ கவுண்டர் மட்டும்தான் டைமிங்கா கொடுப்பேன் தெரியும்.. ஆனா பிரசவத்தை கூட அதே டைமிங்காக கொடுப்பேன்னு நான் எதிர்பார்க்கவில்லை ஃபாண்டா..." என்றான் ஆதங்கமாக ஆர்யா.

"அத்தான்... குட்டி சச்சிதேவ் பிறக்க இந்த அளவு டிராமாக கூட இல்லைன்னா அவன் சச்சிதேவாவே எப்படி இருக்க முடியும்??" என்று சொன்ன போதுதான் பையனின் ஞாபகமே வர...

இதயம் படபடக்க குழந்தை இருக்கும் தொட்டிலை நோக்கி லேசாக கால்கள் நடுங்க போனான் ஆர்யா.

அச்சு அசல் தன் சாயலைக் கொண்டு பிறந்து.. மிக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனை எப்படி தூக்குவது என்று தெரியாது ஆர்யா தயங்க.. எப்பவும் போல் அவனின் பிரச்சனையை சொல்லாமலே புரிந்துக் கொண்டவள் குழந்தையை தூக்கி அவன் கையில் கொடுக்க... தன் மகனை கண்கொட்டாமல் பார்த்தவனின் கண்களில் உணர்ச்சிகள் கொப்பளிக்க...

மெல்ல நிமிர்ந்தவன்..

“அப்பா.. நான் பிறந்தவுடன் முதன்முதலில் என்னை இப்படி கையில் ஏந்திய போதுதான் என் அம்மாவை எந்தளவு காதலிக்கிறார்ன்னு உணர்ந்தாராம்.. அந்த வார்த்தைகளின் அர்த்தம் இன்று புரிகிறது... ஃபாண்டா... நம் பையன் மேல் வரும் அன்பை விட... இப்படிப்பட்ட ஒரு பொக்கிஷத்தை கொடுத்தவள் நீ தான் என்னும் போது.. உன் மேல் தான் காதல் இன்னும் இன்னும் அதிகமாகுது” என்றான் ஆர்யா உணர்ச்சிப் பெருக்கில்...

ஆர்யா சாமான்யமாக இப்படி எல்லாம் உணர்ச்சி பொங்க பேசும் ரகம் இல்லை என்பதை அறிந்த சௌவி.. மெல்ல புன்னகைத்தவள் “இப்ப தெரியுது ஏன் அத்தை நாம் இருவர் நமக்கு இருவர்ன்னு சொன்ன அந்த காலத்திலேயே இப்படி ஐந்து பேரை சலைக்காமல் பெத்தாங்கன்னு” என்று எப்பவும் போல் கவுண்டர் கொடுக்க..

ஆர்யாவின் முகத்தில் மெல்ல புன்னகை விரிந்தது.

ஆர்யாவிற்கும் சௌவிக்கும் கொஞ்சம் தனிமை தேவைப்படும் என்று இத்தனை நேரம் வரை வெளியே இருந்த வீட்டு ஆட்கள் மெல்ல கதவை தட்டிக் கொண்டு உள்ளே வர... கடைசியாக சோகம் அப்பிய முகத்துடன் வந்தான் கார்த்திக்.

அவன் முகத்தில் குற்ற உணர்வு அப்பி கிடக்க அருகில் வந்த ஆர்யா “டேய்... நானும் இன்னும் இரண்டு வாரம் இருக்குன்னு நம்பிதானேடா ஊருக்கு போனேன்.. அதுதான் எல்லோரும் நல்லா இருக்காங்கல்ல?!?.. அப்புறம் எதுக்கு இப்படி முகத்தை தொங்க போட்டுக் கொண்டு இருக்க?? சித்தப்பாவாகி விட்டதில் சந்தோஷமா இரு...” என்றான் ஆர்யா அமைதியாக.

அண்ணன் மிக எளிதாக தன்னை மன்னித்து விட்டாலும் கூட மனம் சமாதானமாகாமல் “இல்ல... அண்ணா” என்று கார்த்திக் இழுக்க..

“அடேய்... சச்சிதேவாக இருந்தாலும் கூட பிறப்பை எல்லாம் கன்ட்ரோல் பண்ணும் சக்தி நமக்கு இல்லைடா..” என்று ஆர்யாவாக பேச..

“ம்ம்..” என்று கார்த்திக் முகம் தெளியாமல் தலையை ஆட்ட.

“ஆரி அண்ணா நீ வராத வரைக்கும் சந்தோஷம்.. இல்லைன்னா.. சௌவி படும் அவஸ்தையை பார்த்துவிட்டு நீங்க அரண்டு போய் மயக்கி விழுந்திருப்பிங்க… அப்புறம் சௌவிக்கு பக்கத்தில் உனக்கும் ஒரு ஸ்ட்ரேச்சர் போட்டு படுக்க வைத்திருக்கனும்.. அப்புறம் நாளைய சரித்திரம் நம்மை எவ்வளவு இழிவாக பேசும்?? இந்த அசிங்கத்தில் இருந்து சௌவி உன்னை காப்பாற்றி விட்டாள்!!!?” என்று கண்ணடித்தபடி ஷங்கி கூற..

சூழ இருந்த அனைவரின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது கார்த்திக் முகத்திலும் கூட…
அரக்க பரக்க கதவை திறந்துக் கொண்டு உள்ளே வந்த நிரல்யா “என்ன போகலாமா எல்லாம் ரெடி ஆயாச்சு அத்தை” என்று மல்லிகாவை பார்த்து கூற..

"என்னது ரெடி ஆயாச்சா? ஹாஸ்பிட்டல் இருந்து வீட்டுக்கு போக என்ன ரெடி ஆகனும்??" என்றான் பத்ரி

“ம்ம.. அது.. அது.. ஆங்..” நிரல்யா தட்டு மாற..

“நம் சாமான்கள் எல்லாம் எடுத்து வைத்து கிளம்ப நீங்க ரெடியாச்சான்னு சொல்கிறாள் இல்லையா நிரு?!? என்றாள் என்றாள் ஷங்கி திரு திரு வென்று விழிந்துக்கொண்டு நின்ற நிரல்யாவை பார்த்து.

“ஆனா.. நம் ஹாஸ்பிட்டலில்..” என்று பத்ரி எதையோ வாய் திறந்து கேட்கும் போதே டாக்டர் உள்ளே நுழைய… அந்த பேச்சு அத்துடன் முடிக்கப்பட்டது.

அடுத்த அரைமணி நேரத்தில் எல்லோரும் தயாராகி காரில் ஏற… கார் வீட்டை நோக்கி செல்லாது.. காளி கோயில் செல்லும் பாதையில் திரும்ப..

“என்னடா கார்த்திக்? இந்த பக்கம் போற?” என்றான் பத்ரி.

“தெரியாதா?? நம் வீட்டில் குழந்தை பிறந்தவுடன் முதலில் நம் குலதெய்வத்தை பார்த்து கும்பிட்டுவிட்டு தான் வீட்டிற்கே போவது.. அதனால் தான் எல்லா ஏற்பாட்டையும் பார்க்க தாத்தாவும் .. பாட்டியும்

நேராக கோயிலுக்கு போய் விட்டார்கள்" என்றான் கார்த்திக் சற்றே படபடப்பாக.

"அப்படியா இதுவரைக்கும் எனக்கு இப்படி ஒரு பழக்கம் இருப்பதே தெரியாதே" என்றான் பத்ரி ஆச்சரியமாக.

பின்னால் உட்கார்ந்திருந்த ஷங்கி.. "அண்ணா... நம் வீட்டில் இருபத்தி ஒரு வருஷம் கழித்து இப்பதான் சச்சிதேவ் பிறந்திருக்கான் உனக்கு எப்படி தெரியும்??"

"அடியே வாயாடி.. சுண்டெலி மாதிரி இருந்த உன்னை மடியில் வைத்து ஹாஸ்பிட்டலிருந்து தூக்கி வந்தவனிடம் என்ன பேச்சுடி பேசற??" என்றான் பத்ரி.

"அண்ணா.. அப்ப நாங்க இரண்டு பேரும் அவ்வளவு அழகா இருந்தோமா?" என்றாள் பரபரப்பாக ஷங்கி.

"இதுக்கு போய் இப்படி பெருமை பொங்கி பூரித்து போறியே...அவன் உன்னை எலியோட ஒப்பிட்டு இருக்கான் டி.. என் மடசாம்பராணி தங்கச்சி.." என்றான் கார்த்திக் சிரிப்பு பொங்க...

"ம்கும்.. நாங்க எல்லாம் தெரிந்து தான் பேசறோம்... இங்க தெரியாமல் பேசறது.. சாக்ஷாத் நீயே தான். நீ மட்டும் நெக்டு மோல் ராட்டை(Naked mole-rat) பார்த்திருந்தேன்னா சுண்டெலி ரொம்ப அழகுன்னு மட்டும் சொல்லி இருக்க மாட்ட.. பேரழகு.. அழகோ.. அழகுன்னு பூரித்து போய் சொல்லி இருப்ப." என்றாள் ஷங்கி.

இந்த மாதிரி விஷயம் எல்லாம் நிரல்யாவின் உபயமாகத்தான் இருக்கும் என்பதால் சகோதரர்கள் இதை யார் சொன்னது என்று கூட கேட்வில்லை.. இது தான் நிரல்யாவை தனித்து விடப்படாமல் அவர்கள் குடும்பத்தில் ஒருத்தியாக நினைக்க வைக்க பிரதான காரணமாக இருந்தது!!

"ஏன் டி எலியே பார்க்க கண்றாவியாதான் இருக்கும் அதை விட இது கேவலமாவா இருக்கும்?!?" என்றான் கார்த்திக் ஆர்வமாய்.

“உலகத்திலேயே இருக்கும் அசிங்கமான விலங்குகளில் அதுவும் ஒன்று… அது கூட பரவாயில்லை அண்ணா என்னிடம் ஒரு மீனோட போட்டோ காட்டினா பாரு… அது பெயர் கூட… ம்ம்ம்.. போல்பு ஃபிஷ்(blob fish) ஐய்யோ…. பார்த்து விட்டு இரண்டு நாள் சாப்பிட முடியவில்லை” என்று ஷங்கிகே உரிய செயல் முறை விளக்கத்துடன் கூடிய விதத்தில் அடுத்த இருபது நிமிஷம் அதை விளக்க முடிக்கவும் அவர்கள் காளி கோயிலுக்கு வந்து விட்டு இருந்தனர்.

கார் நின்றவுடன் சங்கியும் நிரல்யாவும் விழுந்தடித்துக் கொண்டு கோயிலுக்குள் முன்னால் ஓட..

அவர்களுக்கு பின்னால் வந்த காரில் பெற்றவர்களுடன் ஆரியும்.. சௌவியுன் இறங்க.. அவர்களுடன் பேசியப்படியே வந்த பத்ரி வெளியே மதியம் சாப்பாட்டிற்காக ஏற்பாடாகி கொண்டிருந்த சமையலை பார்த்தபடி மெல்ல உள்ளே போக..

அங்கே மணக்கோலத்தில் தயாராகி இருந்த அலக்நந்தாவை பார்த்து பிரமித்து போய் நின்றான் பத்ரி!!!

“கடவுளே….” என்று வாய் தானாக முனுமுனுக்க.. இது எல்லாம் அவர்கள் வீட்டு ஆட்கள் செய்யும் ஏற்பாடா?? என்று யோசிக்கும் போதே.. பத்ரியின் அருகில் வந்த மல்லிகா மற்றவர்களை உள்ளே செல்லும் படி தலையை ஆட்ட மல்லிகாவை பார்த்து

“அம்மா…என்னம்மா நடக்குது இ…இங்க?? என்றான் எல்லை கடந்த திகைப்பு… அதையும் தாண்டிய அதிர்ச்சி… என்று பத்ரியே பேசுவதற்கு தடுமாறினான்.

“முறைப்படி என்ன நடக்கனுமோ அதுதான் நடக்குது.. பத்ரி” என்ற பதிலை கூறி பத்ரியின் அம்மா என்று நிறுப்பித்தார்.

“ரொம்ப ஸ்மாட்டா பதில் சொல்வதா நினைப்பா??” என்றான் ஆவேசமாக பத்ரி.

“ம்கூம்… என் மகனுக்கு மேலா பேசுக்கூடிய ஆள் இந்த பிரபஞ்சத்தில்

இல்லை என்று நினைக்கும் சாதாரண அம்மா டா நான்”
மற்றாட்டமான குரலில் “போதும் உங்க வஞ்ச புகழ்ச்சி.. ஏன் இந்த திடீர் ஏற்பாடு அதுவும் என்னிடம் கூட சொல்லாது??”

“திடீர் எற்பாடு எல்லாம் இல்லை… மூன்று நாட்களாக இந்த ஏற்பாடு தான் நடந்துட்டு இருக்கு… உனக்கு தான் அலக்நந்தாவை தவிர யாரையும் கவனிக்க நேரம் இல்லாததால்… உன் கண்ணுக்கு தெரியலை” என்று அசாராம்ல ஒரு அனு குண்டை வீசினார் மல்லிக்கா…

“என்னம்மா சொல்லறிங்க… மூன்று நாளா? அப்ப அலக்ந்தாவிற்கு இது முன்னாடியே தெரியுமா??” என்றான் இதற்கு மேல் எத்தனை அதிர்ச்சியை தாங்கும் சக்தி தனக்கு இருக்கும் என்று மனபுழுக்கத்தொடு…

“ம்கூம். அவளுக்கும் இப்ப வரைக்கு தெரியாது..” என்றார் அமைதியாக.

“வாட்???..” என்று அலறிய பத்ரி.. வெறுப்பாக தன் முடியை கொதிப்படி தூரத்தில் தன் கையை பிசைந்தப்படி நிற்கும் அலக்நந்தாவை பார்த்தான்.

“அவளை சம்மதிக்க வேண்டிய பொருப்பு உன்னுடையது…” என்றார் மல்லிக்கா.

அவர் சொன்னது காதிலே விழாதது போல் நின்ற பத்ரி… “இது எல்லாம் அந்த நாட் நாட் செவன் கிழவியோட ஏற்பாடு தானே?!? அவங்களை?!?” என்று அவன் பல்லை கடித்தப்படி அதிர்ச்சி மேல் அதிர்ச்சியை தாங்க மாட்டாதவனாக பத்ரி.

“விந்தையிலும் விந்தையாக இதை உன் பாட்டி ஏற்பாடு பண்ணலை.. நான் தான் பிடிவாதமா ஒத்த காலில் நின்று இந்த கல்யாணத்தை ஏற்பாடு செய்தேன்…” என்றார் மல்லிக்கா அழுத்தம் திருத்தமாக.

இன்று…

“அவள் என் பொண்டாட்டின்னு சொன்னேன்..” என்றான் பத்ரி அதே ஆவேசம் குறையாது!!!

“என்ன சொன்ன.. பொண்டாட்டியா…??? அப்ப உனக்கும் அலக்நந்தாவிற்கும் கல்யாணம் ஆகிடுச்சா??" என்று மீண்டும் அதிர்ச்சியில் மீளாதவனாக கேட்டான் சித்.

“அடேய்.. கல்யாணம் ஆனா தான்டா பொண்டாட்டி..” என்று அந்த நிலையிலும் வக்கனையாக பத்ரி பேச…

இத்தனை முறை சித்தின் குத்திற்கு தப்பித்துக் கொண்டு இருந்தவன் கண் இமைக்கும் நேரத்தில் சித் விட்டு குத்தை தடுக்க வழி இல்லாது இம்முறை சித் விட்ட குத்தை வாங்க.. முகம் சிவந்து வீங்க தொடங்கியது பத்ரிக்கு!!!

“ஸ்ஸ்..” என்று வலியில் துடித்த போதும்.. “அடேய் லூஸாடா நீ?? இப்ப எதுக்குடா அடிக்கிற…?” என்று கத்தினான் பத்ரி.

“கல்யாணம் நடந்த விஷயத்தையே சொல்லாமல் இருந்தா பின்ன அடிக்காமல் கொஞ்ச சொல்றியா?” என்று எரிந்து விழுந்த சித்… அவனை விட்டு கோபமாக எழுந்து அவனையும் கை கொடுத்து எழுப்பி விட்டு அங்கிருந்து கவுச்சில் அமர செய்தான்.

களைப்பாக அமர்ந்த பத்ரி… “உனக்கு தான் தெரியுமே… என் வீட்டில்..” என்று ஆரம்பிக்க..

“டேய்.. உன் வீட்டு சச்சிதேவ் புராணத்தை கேட்கல டா.. எப்படி எப்ப உனக்கும் அவளுக்கும் கல்யாணம் நடந்ததுன்னு கேட்டேன்..??..” என்றான் சித் கோபம் தணியாமல்.

“கோபப்படாமல் கேளுடா சித்..” என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே..

“நீ ஊருக்கு போன போது தான் இந்த திடிர் கல்யாணம் நடந்து இருக்கு இல்லை??” என்றான் அவனாகவே யூகித்து..

பத்ரி அமைதியாக தலை ஆட்டவும்….

“மை.. காட்… ஓ.. மை காட்..” என்று தலை நீண்ட தலை முடியை

கோதியவன்…. “அப்ப கிட்டதட்ட இரண்டு வாரம் முன்னாடி நடந்திருக்கு இல்லை??” என்றான் கட்டுக்கு அடங்காத கோபத்துடன்.

“கொஞ்சம் பொறுமையாக…”

“என்னது பொறுமையாகவா?? எனக்கு கல்யாணம் ஆகிடுச்சுன்னு திடீரென்று சொன்னா உன்னால் பொறுமையா ஆர அமர உட்கார்ந்து கதை கேட்க முடியுமா?" என்றான் சித் ஆங்காரமாய்

“இதுவரைக்கும் நடந்த சச்திதேவ் கல்யாணத்தில் நடக்கவிருக்கும் கல்யாணத்தை பற்றி ஒன்னு பொண்ணுக்கு தெரியாது… இல்லை மாப்பிள்ளைக்கு தெரியாமல் இருக்கும்.. இங்க எங்க இரண்டு பேருக்குமே கல்யாணம்னு தெரியாமல் போச்சு!!!” என்றான் அடிப்பட்ட இடத்தை தடவியப்படி பத்ரி.

“நீ பேசறதை கேட்க.. கேட்க… எனக்கு வர ஆத்திரத்துக்கு உன் ஒவ்வொரு பல்லையும் உடக்கனும் போல் வெறி வருது… சரி கல்யாணம் எப்பயும் போல உங்க வீட்டு முறைப்படி அவசரமாக நடந்ததுன்னே வைத்துக் கொள். அப்புறம் ஊரில் இருந்து வந்த இந்த ஒரு வாரம்?? இந்த வாரம் முழுக்க என் முகத்தில் எப்படிடா விழிக்க முடிந்தது??” என்று அகங்காரமாய் சித் கேட்க..

பெருமூச்சு விட்டவன்.. “சித்… எப்படியும் பிரிந்து போக போற கல்யாணத்தை பற்றி எதுக்கு சொல்லனுன்னு தான் சொல்லலை…” என்றான் அழுத்தமாக பத்ரி.

அத்தியாயம் - 29
இரண்டு வாரங்களுக்கு முன்பு…

விந்தையிலும் விந்தையாக இதை உன் பாட்டி ஏற்பாடு பண்ணலை.. நான் தான் பிடிவாதமா ஒத்த காலில் நின்று இந்த கல்யாணத்தை ஏற்பாடு செய்தேன்…” என்றார் மல்லிக்கா அழுத்தம் திருத்தமாக.

“வாட்???” என்று பத்ரி தன் அம்மா சொன்னதை நம்பவும் முடியாமல்

நம்பாமல் இருக்கவும் முடியாமல் தலையை மறுப்பாக ஆட்டியபடி இரண்டி அடி பின் எடுத்து வைத்தான்..

எதேட்சையாக திரும்பிய ஆர்யாவின் கண்களில் அந்த செய்கை பட... "என்னப்பா இவன் இப்படி தலை ஆட்டிக்கொண்டே பின் வாங்குறான்... எனக்கு பயமா இருக்கு பா" என்று தனக்கு பக்கத்தில் நடந்து வந்து கொண்டு இருந்த அப்பாவிடம்.

ஆர்யா பதறி அடித்துக்கொண்டு சொன்னதை அதை ஒரு பொருட்டாக கூட எடுத்துக் கொள்ளாமல் தன் கையில் இருந்த பேரனை கொஞ்சியபடி நடந்தவர்... "எனக்கு தெரிந்து இந்த உலகத்திலேயே வாய் பேச்சில் பத்ரியை சமாளிக்க கூடியவள் உன் அம்மா தான்.. மிஞ்சிப் போனா இன்னும் ஒரு பத்து நிமிஷத்தில் அவனே தானாக முன் வருகிறானா இல்லையான்னு பொருத்திருந்து பாரு..." என்று தன் மனைவியின் பெருமையை பீற்றினார் அவர்.

"தாத்தா தான் பாட்டி சொன்னதை வேத வாக்கா எடுத்து நடக்கறாருன்னா... நீங்க உங்க பொண்டாட்டியையே வேதமாக பார்க்கறிங்க.... பா" என்று குறைபட்டான் ஆர்யா.
இதைக் கேட்டு அவர் சிரிக்கும் முன் தன் பிரத்யேக சிரிப்பை அவனைப் பார்த்து வீசினாள் உடன் வந்த அவனின் காதல் மனைவி சௌவி!!!

"பெரும்பாலும் ஆண்கள் கண்ணுக்கு கடிவாளம் இட்ட குதிரை மாதிரி நமக்கு முன்னே இருக்கும் காட்சியை... அதுவும் ஒரே காட்சியை மட்டும் தான் பார்ப்போம்.. ஆனா பெண்கள் பச்சோந்தி மாதிரி.. இரு விழிகளையும் தனித்தனியாக இருவேறு புறம் சுழற்றி தன்னைச் சுற்றி நடக்கும் இரு காட்சிகளை பார்த்து சூழ்நிலையை கிரகிக்கும் தன்மை உடையவர்கள்!!!" என்று அவர் பெண்களை பச்சோந்தியுடைய தனிதன்மையுடன் ஒப்பிட்டு புதுவிதமாக விளக்கம் அளித்து தன்னை சச்சிதேவ் என்று நிரூபித்து கொண்டார்.

"நீங்களுமாப்பா??" என்று கடுப்பாக அவரைப் பார்த்தவன் "கடவுளே!!! வர வர... எனக்கு வீட்டில் இருக்கோமா இல்லை... இல்ல ஜூவில் இருக்கோமான்னே தெரியலை..." என்று மகா எரிச்சலாக மொழிந்தவன் "எனக்கு கல்யாணத்தை விட மல்ஹோத்ராவை நினைத்தால் தான்.." என்று

நிறுத்தாமல் இழுக்க..

“அது எல்லாம் பத்ரி அத்தான் சமாளித்துப்பார்… இப்ப அல்கா சம்மதிக்கனும். அதுதான் ஒரே பிரச்சனை” என்று சௌவி மொழிந்து கொண்டு இருக்கும் போதே… “நீங்க தப்பா சொல்லிட்டிங்க மாமா” என்று அவள் சிரிப்புடன் சொல்ல எதுவும் புரியாது கூட இருந்த இருவரும் திருதிருத்தனர்.

பத்ரியின் பக்கம் கையை காட்டியவள் “பத்து நிமிஷம் தானே சொன்னீங்க.. இப்ப பாருங்க.. ஐந்து நிமிஷம் கூட ஆகலை அதுக்குள்ள பத்ரி அத்தானும் அத்தையும் நம்மை நோக்கி வராங்க” என்றாள் சிரித்தபடி சௌவி.

அதற்குள்ளாகவே இவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்த மல்லிகாவைப் பார்த்து “அம்மா நீங்க போயிட்டே இருங்க நான் இவனோடு வரேன்” என்று மொழிந்தவனை பார்த்த சௌவிக்கு தன் ஆருயிர் மணாளனுக்கு அப்படி என்னத்தை சொல்லி அம்மா அவனை சம்மதிக்க வைத்தார்கள் என்ற கேள்விக்கு பதில் தெரியவில்லை என்றால் அவனின் மண்டையே வெடித்துவிடும் அதைக் கேட்க தான் தங்களை முன்னே அனுப்புகிறான் என்று நன்றாக புரிய தலையை ஆட்டியபடி நகர்ந்தாள்.

இவர்கள் பேசுவது கேட்காத தூரம் வரை அமைதியாக நின்ற ஆர்யா… “என்னடா உனக்கு இந்த ஏற்பாட்டில் முழு சம்மதம் தானே?? இதில் இம்மி அளவு இஷ்டம் இல்லைனாலும் சொல்லி விடு கல்யாணத்தை நிறுத்தி விடலாம்…?” என்றான் இந்த கல்யாண ஏற்பாட்டை தன் தலைமையில் முழுக்க.. முழுக்க போனிலேயே கார்த்திக்கை கொண்டு நடத்திய போதும்!!!

“ம்கூம்… எப்ப இருந்தாலும் அவளை நான் தான் கல்யாணம் பண்ணிப்பேன் என்னும் போது எனக்கு முழு சம்மதம் தான் டா..” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வேக நடையுடன் கார்த்திக்கும் அங்கே வந்து சேர..

“வாடா.. புது மாப்பிள்ளை… எல்லா ஏற்பாடும் நினைத்தது மாதிரியே செம்மையா போயிட்டு இருக்கு… இப்ப நீ இதை கட்டிக் கொள்ள.. அப்புறம் பாபி கட்டிக் கொள்ள!!!” என்று தன் தமையனின் தோளில் இடித்து… பின் சந்தோஷம் மிக இறுக கட்டிப் பிடித்தவன்… பின் கையில் ஒரு பெட்டியை கொடுத்தான்.

“என்ன அப்படி பார்க்கிற?? அண்ணன் உனக்காக டிசைன் பண்ணதுதான்.. உனக்கு தான் வேட்டி கட்ட தெரியாதே.. அதனால் தான் கட்டிக்கோ.. ஒட்டிக்கோ டைப்பில் இருக்கும்.. அப்புறம் பாபி கட்டி இருக்கும் புடவை.. சௌவி டிசைன் செய்தது..” என்றான் அமர்த்தலாக.

“வாட்???” என்று அவசரமாக கோயிலின் வாசலில் இன்னும் கையை பிசைந்தபடி நின்றிருந்த அலக்நந்தாவை பார்த்தான்!!!

பன்னீர் திராட்சை நிறத்தில் புடவை அணிந்து… அதற்கு இணையான ப஼ப் வைத்த ப்ளவுஸ் அணிந்து நின்றவளை கவனித்தவனின் கண்கள் இடுங்க…

“இதை… எப்ப” என்று பத்ரி அங்கே நின்றிருந்த அலக்நந்தாவை பார்த்தப்படியே இழுக்க..

“உன் அளவு நாங்க லேட் இல்லை என்பதால்… நீ போன் எடுத்துக் கொண்டு நாட் நாட் செவன் படத்தை பார்க்க போனியே அப்பவே கண்டுபிடித்து விட்டபடியால் நீ ஊருக்கு போன மறுநாளிலேயே ஆரம்பித்த புடவை தான் இது!!!” என்றான் கார்த்திக் பெருமிதமாக.

“ஓஓஓ.. என்னைத் தவிர எல்லோரும் இந்த கல்யாணத்திற்கு தயாராக இருந்தீங்க போல!!!” என்று லேசாக சிரித்தபடி தலையை ஆட்டினான் பத்ரி.

“அது இருக்கட்டும்… அம்மா என்ன சொல்லி உன்னை இந்த கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்தாங்க??” என்றான் ஆர்யா அதற்கு மேல் சஸ்பென்ஸ் தாங்காது.

ஆர்யாவை பார்த்து பெருமூச்சு விட்டவன் “இதே சூழலில் உன் தங்கை இருந்தால் அவளை தன் காதலனுடன் ஒரே ரூமில் மூன்று மாதம் தங்க சம்மதிப்பியான்னு ஒற்றை கேள்வி கேட்டாங்க??? இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் ஆர்யா?!?” என்றான் பத்ரி.

“வாவ்!! அம்மான்னா அம்மா தான். எப்படி இப்படி பேசறாங்க பாரு…” என்று கார்த்திக் சிலாகித்து புகழ.. அதையே பிரதிபலிக்கும் வண்ணம் ஆர்யாவின் முகத்தில் மெல்லிய புன்னகை தவழ்ந்தது.

“ஏய்.. இரு.. இரு..” என்று தடுத்து நிறுத்திய கார்த்திக்.. “எனக்கு ஒரு சந்தேகம் இப்படி சொல்லும் அம்மா அப்புறம் எப்படி சௌவியை மட்டும் அண்ணா வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்??” என்றான் சகோதரர்கள் இருவரையும் பார்த்தபடி.

கார்த்திக்கின் பின்னந்தலையை லேசாக தட்டிய ஆர்யா.. “அடேய்… அம்மா ஒரு தலையா காதலிப்பதைப் பற்றி சொல்லவில்லை இருவருமே காதலிப்பதைப் பற்றி சொல்கிறார்கள்… என் காதலை அவளிடம் தெரிவிக்கும் முன்னே அவளை இங்கே அனுப்பி விட்டு முறைப்படி அப்பாவை விட்டு மாமாவிடம் பெண் கேட்டேன் ஞாபகத்தில் இருக்கா.??” என்றான் ஆர்யா.

“சும்மா நடிக்கிறான் ஆரி.. ஞாபகத்தில் இல்லாமல் எப்படி போகும்?? அப்பபையும் எனக்கு தெரியாமல் நீயும் அவனும் தானே கூட்டு களவாணிங்களா எல்லா செய்திங்க??” என்றான் பத்ரி எரிச்சலாக.

“இப்ப உன் கல்யாணத்தில் எல்லோருமே கூட்டு களவாணிங்க தான் பத்ரி..” என்று புன்னகை விரிய கூறியவன், “ஒன்னும் மட்டும் சொல்லியே ஆகனும்டா அண்ணா… சச்சிதேவ் வரலாற்றிலேயே முதன் முறையாக பெண்ணிற்கும் தெரியாது மாப்பிள்ளைக்கும் தெரியாது கல்யாணம் நடப்பது உனக்கு தான்” என்று அவன் குபீர் சிரிப்புடன் கூற..

“அடேய்… கல்யாண நாளும் அதுவுமா என்னை கொலைகாரனாக்காதடா…” என்று கூறியபடியே போகலாம் என்பது போல் கையை காட்டி முன்னே நடந்தனர்.

இவர்கள் அலக்நந்தாவை நெருங்க.. நெருங்க.. அவளின் படபடப்பும் பரிதவிப்பும் அதைவிட ஏதோ இனம் புரியாத திகில் சீனை பார்த்துக் கொண்டு இருப்பதைப் போல் அவளின் முகம் வெளிரி இருக்க.. ஏன் என்னாச்சு இவளுக்கு?? என்று யோசனையுடன் அருகில் சென்றவன். முறைப்படி ஆர்யாவை அறிமுகப்படுத்தி வைத்தான்.

ஆர்யா முறையாக முகமன் கூறியவனை கண்ட அலக்நந்தாவின் முகம் மேலும் இருண்டு போனதை கவனித்தவனுக்கு முன்பே இவளுக்கு ஆர்யாவை தெரியுமா?? என்று விபரீதமான சந்தேகம் எழவும் அதற்குள்

கார்த்தி தங்களுக்கு வேலை இருப்பதாக மொழிந்து விட்டு முன்னால் போக பத்ரி மட்டும் அவளைப் பார்த்தபடி நின்றான்.

எங்க இருந்து ஆரம்பிக்க?? எப்படி ஆரம்பிக்க என்று ஆயிரம் கேள்வி எழுந்த போதும்… அத்தனை அருகில் நின்றவனுக்கு சௌவியின் கை வண்ணத்தில் உருவான அந்த பட்டுப் புடவையில் இருந்த கோபுரம் கண்ணை கவர.. சற்றே உற்றுப் பார்த்தவனுக்கு எல்லாவற்றையும் மறந்து முகத்தில் புன்னகை விரிந்து மலர்ந்தது!!!

“பத்ரி இப்ப எதுக்கு சிரிக்கிற?” என்றாள் அலக்நந்தா மேலும் பதட்டமாக கிட்ட தட்ட அழமாட்டாத குறையாக கேட்டாள் என்றே சொல்லலாம்.

“இந்த புடவையில் நீ அப்படியே அப்சரஸ் மாதிரி இருக்கறன்னு சொன்னா நம்புவியா?” என்றான் பத்ரி.

“ரொம்ப வருஷத்திற்கு பிறகு முதல் முறையாக புடவை கட்டறேன். மங்கி தான் என்ன சொல்லியும் கேட்காமல் இந்த புடவை கட்ட சொல்லி ஒரே பிரச்சனை..” என்று மடமடவென்று மொழிந்தவள் “ஆமாம்.. பத்ரி எத்தனை அப்சரசை நீ நேரில் பார்த்து இருக்க.. அவங்களோட என்னை கம்பேர் பண்ண??” என்றாள் சற்றே பதட்டம் தனிந்தவளாய்!!!

“இதுவரை ஒன்னே ஒன்னும் தான்… அவளையும் வாழ்க்கை முழுக்க இப்படி பார்த்துக் கொண்டே இருந்தால் போதும் என்று தான் இங்க தோன்றுகிறது..” என்று மொழிந்தபடி தன் இதயத்தை காட்டினான் பத்ரி தெளிவாக.

“பத்ரி?!?” என்றாள் சிரிப்பும் காதலும் போட்டி போட… ஏதோ பேச வர.. சட்டென்று கையை அசைத்து பேச வேண்டாம் என்று தலையை அசைத்தவன்.

இருவருக்கும் தனிமை தருவதாக சொல்லாமல் சொல்லிவிட்டு சென்ற அவனின் குடும்ப அங்கத்தினர் போவது போல் போக்கு காட்டிவிட்டு அங்கே காது கேட்கும் தூரத்தில் தன் மொத்தம் குடும்பமே ஒட்டுக் கேட்பதை பார்த்தவன் “உங்களுக்கு கொஞ்சம் கூட வெட்கமே இல்லையா?” என்றான் சற்றே முன்னுக்கு போய் அங்க நின்று இருந்த குடும்ப அங்கத்தினரை பார்த்து.

அவன் கேட்டதற்கு கொஞ்சம் கூட கூச்சமே படாமல் “ம்கூம்” என்று ஒட்டு மொத்த குடும்பமே பலமாக தலையை அசைக்க..

மகா மகா எரிச்சலாக இவர்களை முறைத்து பார்த்து விட்டு இப்படி தலை ஆட்டுபவர்களுடன் திட்டியோ முறைத்தோ என்ன பயன் இருக்கு?? என்று நினைத்தவன் அங்கே இருந்த காளி கோபுரத்தைப் பார்த்து “அம்மா தாயே… இவர்களுக்கு கொஞ்சமாவது.. நல்ல புத்தி கொடுக்க கூடாதா??” என்று உரக்க வேண்ட!!

“அண்ணா.. முதல்ல எங்களுக்கு நல்ல புத்தி கொடுப்பதை பற்றி காளியிடம் வேண்டுவதை விட்டுவிட்டு.. பாபிக்கு கொஞ்ச நேர்த்திற்கு புத்தியை மழுங்க செய்யும் படி காளியிடம் மன உருகி வேண்டிக்கோ ஏன்னா… நீங்க இன்னும் பத்து நிமிஷத்தில் தம்பதி சமேதரா மணவறையில் வந்து உட்காரணும்… அதுக்கு நீ பாபியுடைய காலை பிடித்து கதறுவியோ… இல்லை அவங்களை சுற்றி அங்க பிரதஷ்னம் செய்வியோ.. உன் இஷ்டம் ஆனா முகூர்த்ததிற்கு இன்னும் பத்து நிமிஷம் தான் இருக்கு.. அதுக்குள்ள நீ உட்காரனும் இல்லைன்னா..” என்று ஷங்கி இழுக்க..

“இல்லைன்னா என்னடி பண்ணுவ??” என்றான் பத்ரி தெனாவெட்டாக.

“என்ன பண்ணுவேனா?? பாபிக்கு பாடிகாடா நானும் உங்களுடன் கிளம்பி ஊருக்கு வந்து.. என் கையால் தான் சமைத்து போடுவேன் எப்படி வசதி??” என்று ஷங்கி கேட்டுக் கொண்டு இருக்கும் போதே அவன் அவசரமாக அலக்நந்தாவை அழைத்துக் கொண்டு “வா அப்படி போய் பேசலாம்” என்று கோபுர வாசலை நோக்கி நடந்து சென்றான் பத்ரி.

“என்ன பத்ரி என்ன விஷயம்??” என்றாள் அலக்நந்தாவை விட்டிருந்த பயம் மீண்டும் பீடித்துக் கொள்ள..

“இப்ப நீ எதுக்கு இவ்வளவு பதட்டமாக இருக்க.. என்னாச்சு முதலில் அதை சொல்லு?” என்றான் பத்ரி.

“பத்ரி..” என்று தயங்கி இழுக்க…

“நீ இழுப்பதை பார்த்தால் ரொம்ப நேரம் எடுத்துப்ப போல இருக்கே.. உன்னிடம் நின்று பேச எனக்கு அவ்வளவு நேரம் இல்லை..” என்று பெருமூச்சு விட்டவன்.. “மோனல்...” என்று அவளின் கையை எடுத்து தன் கைக்குள் பொதித்துக் கொண்டவன்.. எப்படி சொல்வது என்று தினற...

“பத்ரி... பத்ரி... நீ என்னை விட்டு பிரிய போறியா?” என்றாள் கண்கள் கலங்க அலக்நந்தா அவனின் தடுமாற்றத்தையும் பீதியும் பார்த்து தவறாக யூகித்து.

தான் சொல்லும் விஷயத்தால் அவள் அதிர்ச்சியில் மயங்கி விழாமல் எப்படி சொல்வது என்று அவன் யோசித்துக் கொண்டு அவன் தடுமாற.. இவளின் கேள்வியால் ஒரு வினாடி திகைத்து விழித்தவன் பின்.. தன் தலையை சரித்து குலுங்கி சிரித்தான் பத்ரி.

அவனின் சிரிப்பிற்கு அர்த்தம் புரியாது மேலும் கலங்கியவளை கண்டு பட்டென்று தன் சிரிப்பை நிறுத்தி “இனி நீயும் நானும் பிரிக்கவே முடியாத பந்தத்தில் இருக்க தான் என் வீட்டில் ஏற்பாடு பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். இப்ப போய் பிரிய போகிறாயான்னு லூசு மாதிரி கேட்கிறியே” என்றான் பத்ரி கண்களில் காதல் பொங்க.

“என்ன சொல்ற நீ?” என்று வாய் கேட்ட போதும் அவள் முகத்தில் பயம்.. கரை காணா திகைப்பு.. அதை மிஞ்சும் பேரானந்தம்.. என்று அலையலையாய் நவரசமும் வந்து அவளின் அழகிய முகத்தில் நற்தனம் ஆடியது!!!

“இன்னும் சரியா ஐந்து நிமிஷத்தில் நானும் நீயும் மணவறையில் உட்காரணும். நமக்கு கல்யாணம் பண்ண ஏற்பாடு நடந்துக் கொண்டு இருக்கு” என்றான் சிரித்தபடி பத்ரி.

விசித்திரமாக அவனைப் பார்த்தவள் “உன் வீட்டு மனிதர்களுக்கு இதில் சம்மதமா? குறிப்பாக இதில் உன் அண்ணனுக்கு முழு சம்மதமா?” என்றாள் அலக்நந்தா தயங்கியப்படி.

“கல்யாணமா??”, “நமக்கா??” ,“என்னது??” “நீ என்ன லூஸா??”, “நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்” என்று இப்படியாக ஏதோ ஒரு பதிலை

சொல்லுவாள் என்று யூகித்தவனுக்கு நிச்சயம் “உன் அண்ணனுக்கு சம்மதமா?” என்று ஒரு கேள்வியை கேட்பாள் என்று அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை…

“ஏன் இப்படி விசித்திரமாக கேட்கறேன்னு நிறுத்தி விலாவரியா கேட்க எனக்கு நேரம் இல்லை. அதனால் உன் கேள்விக்கான பதில் என் அண்ணன் தான் இந்த கல்யாணத்தை தலைமை தாங்கி நடத்தறான்.. அதற்கு என் வீட்டில் இருக்கும் ஆட்களுக்கு அனைவருக்கும் சிம்பி உட்பட முழு சம்மதமே.. இப்ப நான் கேட்பது உன்னுடைய சம்மதத்தை” என்றான் பத்ரி குரலில் சிரிப்பும் காதலும் போட்டி போட.

“ப..ப… த்ரி” என்று உதடு துடிக்க கண்களில் நீர் தளும்ப.. பேச முடியாமல் வார்த்தை குழற அவள் நிறுத்தினாள்.

“உன் புடவையை நல்லா உற்றுப் பார்த்தியா மோனல்??” என்றான் மெல்ல புன்னகைத்தபடி அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல்!!!

“ம்கூம்..” என்று தலையை அசைக்க.

“அந்த புடவை உனக்காக சௌவி டிசைன் செய்தது.. இரண்டு மாதம் முன்பே. அதை கொஞ்சம் பாரு” என்றான் மென் சிரிப்புடன்.

தன் புடவையை குனிந்து ஒரு நொடி பார்த்தவள் “பத்ரி.. நீண்டு ஓடும் ஆற்றங்கரையில் ஒரு கோபுரம்… அந்த கோபுரத்தின் வடிவமைப்பை பார்த்தால் பத்ரிநாத் கோயிலின் கோபுரம் மாதிரி…” என்று சொல்லிக் கொண்டே போனவள் பட்டென்று நிறுத்திவிட்டு அவனை தலை நிமிர்ந்து பார்க்க…

“ம்ம்ம்.. அலக்நந்தா அறு.. அதன் நதிக் கரையில் பத்ரிநாத்தின் கோயில்… நம் கல்யாணத்திற்காக சௌவி ஏற்பாடு செய்தது…”

அவளின் கையை எடுத்து அதிவேகமாக துடிக்கும் இதயத்தின் நெஞ்சின் மேல் வைத்தவன் “இதற்கு மேல் அவர்களுடைய சம்மதத்தை எப்படி தெரிவிக்க முடியும் நீயே சொல்லு??" என்று அவளையே கேட்டவன் “எப்பயும் உன்னுடைய பத்ரியாக இருக்க நெஞ்சு முட்ட ஆசை இருக்கு..

மோனல் அதே ஆசை உனக்கு இருந்தா ப்ளீஸ்.. உன் சம்மதத்தை சொல்லு" என்றான் அவசரமாக பத்ரி.

கண்களில் திரண்ட நீர் கரை உடைத்துக் கொண்டு வழிய... பேச்சு வராது போக.. தலையை மட்டும் பலமாக அசைத்து அப்படியே அவன் மார்பில் சாய்ந்தாள் அலக்நந்தா.

ஒருநிமிடம் அவளை இறுக கட்டிப்பிடித்து அவளின் குழலில் தன் முகத்தை புதைத்தவன்.. பின் அவசரமாக விடுவித்து "நேரம் ஆச்சு... வா போகலாம்.." என்று கால் நடுக்க நடந்தவளை தாங்கி பிடித்து நடந்தான்.

இவர்கள் தலையை கண்டவுடன் எல்லோருடைய முகத்திலும் எல்லோர் முகத்திலும் குதுகலம் பொங்க.. இனிதே கல்யாணம் கலைகட்ட தொடங்க... அவசரமாக மனமேடைக்கு திரும்பிய குடும்ப அங்கத்தினருக்கு பயங்கர அதிர்ச்சி...

காரணம் அங்கே மாப்பிள்ளை உட்கார வேண்டிய இடத்தில் பஸ்சிற்கு துண்டு போட்டு இடம் பிடிப்பது போல் பத்ரிக்கு முன்பே ஒருத்தர் பஞ்சகஜம் அணிந்து சபர்தஸ்சாக வீற்றிருந்தார்!!!

இன்று.....

"எப்படியும் பிரிந்து போக போற கல்யாணத்தைப் பற்றி எதுக்கு சொல்லனுன்னு தான் சொல்லலை..." என்றான் அழுத்தமாக பத்ரி.

பத்ரியின் கல்யாணம் முடிந்துவிட்டது என்று சொன்னது போது எப்படி உணர்ந்தானோ அதை விட நூறு மடங்கு அதிர்ச்சி அடைந்த சித் ஒரு நிமிடம் அசைவற்று நின்றான்!!!

"என்னடா உளர்ற?? கல்யாணம் ஆகி இரண்டு வாரத்தில் பிரிவா? புரிந்து தான் பேசறியா??" என்றான் சித் இன்னும் அவன் காதில் கேட்ட விஷயத்தை ஜீரணிக்க முடியாது...

"ம்ம்.. புரிந்து தான் பேசுகிறேன் சித்... உண்மையான காதல் கூட ஏன் தோற்கிறது என்று இப்போ புரிகிறது..." என்றான் விரத்தியாக

“எனக்கு தலையும் புரியலை வாலும் புரியலை.. என்னடா பத்ரி சொல்ற??”

“எனக்கு புரியுது சித்.. உண்மையான காதல் எல்லாம் வெற்றி அடையனும்னு அவசியம் இல்லைனு புரியுது.. பாயலை எடுத்துக் கொள்ளேன்.. அவளும் என்னை உண்மையாக தான் காதலித்தாள் அவளின் காதல் தோற்று போகவில்லை?!? ஏன் நானுமே இவளை உண்மையாக தான் காதலித்தேன். ஆனா இப்ப தோற்று போய் உன் முன்னாடி நிற்கவில்லை…??”

“அடேய் காதல் வேற… கல்யாணம் வேற டா மடையா…” என்று பொங்கி எழுந்தான் சித்.

“ம்கூம்.. ஒரு கல்யாணத்திற்கு காதல் இருந்தா போதும் என்று நினைத்தேன் ஆனா.. அதே கல்யாணத்தை நிலை நிறுத்தி இந்த காதல் இருந்தா மட்டும் போதாதுன்னு இப்ப புரியுது.. புரிய வைத்து விட்டாள் அவள்” என்றான் அதிகாரமாக பத்ரி!!!

என்ன பேசுவது என்று புரியாது… ஒரு நிமிடம் கண்களை மூடி செயலற்று நின்றவன்.. ஏன் எதுக்கு எப்படி என்று தன்னுள் நூறாயிரம் கேள்வி எழுந்த போதும் வாயை திறந்து எதுவுமே கேட்காமல்.. அலக்நந்தாவின் புறம் திரும்பியவன் உயிரையே தன் கையில் பிடித்துக் கொண்டு நிற்பவள் போல் நிற்க… அவள் முன் இதைப் பற்றி மேலும் பேச விரும்பாது… “உன்னிடம் நான் எதை பேசும் மனநிலையில் இல்லை… இன்னும் நாலு மணி நேரத்திற்கு உன் ரூமிற்குள் போய் வெளியே வராதே. இல்லை… வெளியே போய் விட்டு நாலு மணி நேரம் கழித்து விட்டு வா…” என்று சித் கூற..

கண்களை அழுத்தமாக துடைத்தவள் “நான் லைப்ரரி போறேன்” என்றாள் அவள் தடுமாறியபடி..

“ம்ம்..” என்று தலையை மட்டும் ஆட்டி சித்.. “என் நண்பனை இப்படி வருத்தப்பட வைத்து விட்டியே அலக்நந்தா? இந்த மாதிரி ஏதாவது ஆகுன்னு தான் அப்பவே நீ யார் என்ற உண்மையை உன்னிடம் சொன்னேன்?!?” என்றான் மிக மிக உருக்கமான அதே சமயம் வருத்தம் மித மிஞ்சிய குரலில் சித்.

அவனைப் பார்த்து கசந்த புன்னகையை விட்ட அலக்நந்தா.. “பத்ரி விழுந்தால் தாங்கி பிடிக்க அவன் குடும்பமும்… வருத்தப்பட்டால் தோள் கொடுக்க நண்பர்கள் என்று அவனைச் சுற்றி நிறைய பேர் இருக்காங்க சித்.. ஆனா எனக்கு அவன் மட்டும் தான் இருக்கான்…” என்று மொழிந்தவள் பின் “இருந்தான்…” என்று மாற்றி சொல்லிவிட்டு “எல்லாமுமா அவன் இருக்க எப்படி அவனை நான் விட்டுக் கொடுப்பேன் சித்??”

“எல்லாமுமாக இருக்கிறான் என்று சொல்லிவிட்டு எதுவுமே இல்லாமல் ஆகிவிட்டாயே!!!” என்றான் பத்ரி மித மிஞ்சிய கோபத்தில் கண்கள் அக்கினி ஜுவாலை தெறிக்க..

அத்தியாயம் - 30
இரண்டு வாரங்கங்களுக்கு முன்பு

காரணம் அங்கே மாப்பிள்ளை உட்கார வேண்டிய இடத்தில் பஸ்சிற்கு துண்டு போட்டு இடம் பிடிப்பது போல் பத்ரிக்கு முன்பே ஒருத்தர் பஞ்சகஜம் அணிந்து சபர்தஸ்சாக வீற்றிருந்தார்!!!

அவர் வேறு யாரும் இல்லீங்க தாலி எடுத்துக் கொடுக்க வேண்டிய ஜடா முடி ஐயர்தான்.. தாலி கட்ட வேண்டிய இடத்தில் உட்கார்ந்திருந்தார்!!!

பாவம்… அவர் கஷ்டம் அவருக்கு… இங்கே வந்ததில் இருந்து ஆறு அடி உயரத்தில் எப்பயோ தன் மகனுடன் உட்கார்ந்து பார்த்த “கிங் காங்” படத்தில் வருவதை போல் ஒரு மகா உருவம் ஐந்து அடி தூரத்தில் அமர்ந்து கண் இமைக்காமல் இவரையே பார்த்துக் கொண்டு இருக்க அவருக்கோ பயத்தில் அண்ட சராசரமே நடுங்கியது!!!

அதுவும் அந்த “கிங்காங்” வேறு தப்பி தவறி இவர் தலையை நிமிர்த்தி பார்த்த அடுத்த நொடி… கீழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று திக்கிற்கு ஒரு பக்கமாய் இருக்கும் தன் முப்பத்தி இரண்டு பல்லை.. “குளோஸப் அப்” புன்னைகையாக நினைத்துக் கொண்டு தன் கோர பல் தெரிய ஒரு சிரிப்பை அவரின் மேல் அள்ளி வீசியபடியே மெல்ல அரை அடி அவரை நெருங்கி உட்காரும்….

ஐயர் அறியாத உண்மை என்னவென்றால் இப்படி… சிம்பி எப்பொழுதும் தன் “சிங்கார பல்லை” காட்டி சிரித்தால் வீட்டில் இருக்கும் ஆட்கள் அந்த சிரிப்பில் “மயங்கி” தங்களை கூந்தலை கொடுப்பார்கள் என்பது அது கற்று வைத்திருந்த ராஜ தந்திரம்.. அதை தான் இந்த நான்கு அடி ஜடா முடி வைத்திருந்த ஐயர் மேல் தன் “மந்திர புன்னகையை” பயன்படுத்த.. அவரோ மனித குரங்கு சிரிக்கும் என்பதை கூட வாழ்நாளில் கேள்விப்பட்டிராத அந்த அப்பாவி ஐயர் பயத்தில் கிலி கண்டு எங்கே எழுந்து ஓடினால் பாய்ந்து வந்து குதறிவிடுமோ என்ற பீதியை மறைத்துக் கொண்டு அதன் “கோர பல்லின்” தாக்குதலில் இருந்து தப்பிக்க வழி தேடி அப்படி நகர்ந்து அமர்ந்தார்.

இப்படியாக கடந்த அரை மணி நேரத்தில் நடந்த சிம்பிக்கும், ஜடா முடிக்கும் ஐயருக்குமான செஸ் விடையாட்டில்... முறையாக ஹோம குண்டத்திற்கு முன்னால் உட்கார வேண்டிய ஐயர் மணவரையில் மாப்பிள்ளை அமர வேண்டிய இடத்தில் அமர்ந்திருந்தார்!!!

“மாப்பிள்ளை உட்காருவதற்கு முன்னாடி.. மணவரையில் நீங்க உட்கார்ந்து பார்ப்பது சாங்கியமா??” என்றார் பாட்டி படு நக்கலாய்.

பாட்டியின் பேச்சால் பய உலகில் இருந்து நிஜ உலகிற்கு மீண்டவர் தான் எங்கே உட்கார்ந்து இருக்கிறோம் என்பதை உணர.. குடம் கணக்கில் வழிந்து.. ஏதோ உளறி கொட்டி கிளறி மூடி.. வேக… வேகமாக எழுந்து தன் இருப்பிடத்தில் அமர்ந்து மந்திரத்தை ஓத ஆரம்பித்தார். அவரை சுற்றி மனிதர்கள் இருக்கும் தெம்பில்!!!

ஒரு வழியாக கார்த்திக்கின் உபயத்தோடு பத்ரி வேட்டியை கட்டிக் கொண்டு வருவதற்கும்… அலக்நந்தா புடவையை சரி செய்து அதற்கு பொருத்தமான கலை வேலைப்பாடு மிக்க “ஆன்டிக் டெம்பிள்” நகைகளை கழுத்தில், காதில், கையில் அணிந்து, முதன் முறையாக தலை முடியை வாரி.. வகிட்டில் நெற்றி சுட்டியை தொங்க விட.. முகத்தில் இருந்த கண்ணாடி மட்டும் தான் மனக்கோலத்திற்கு சற்றும் பொருந்தாது இருக்கவே அவசரமாக கழற்றி வைத்தாள் அலக்நந்தா. அதனால் விளைய போகும் விபரிதம் தெரியாமல் கண்ணில் கனவு மின்ன அவன் அருகில் அமர்ந்தாள்!!!

கிங் காங் கண்ணுற்கு தான் பட கூடாது என்ற எண்ணத்தினாலோ என்னவோ… ஜாடி முடி ஐயர் பழைய சினிமாவில் வரும் கனவு காட்சியை போல தன்னால் ஆன மட்டும் தன்னை சுற்றி புகை மண்டலத்தை எழுப்பினார். அவ்வாறு அவர் எழுப்பிய புகை மண்டலத்தால் தன் அருகில் அமர்ந்திருந்த மணவாட்டியை கூட சரியாக காண முடியாது கண்கள் கலங்க அமர்ந்திருந்தவனிடம்.. மாப்பிளை தோழனாக அருகில் நின்ற கார்த்திக்கும் ஆர்யாவும் கேளி கிண்டலில் அவனை நனைக்க, மூச்சு முட்ட புகையை கிளப்பியது போதாது என்று மந்திரத்தை சொல்ல சொல்லி ஐயரின் நச்சரவும் சேர்ந்துக்கொண்டு கொலையாக கொல்ல… இதற்கு மேல் மாப்பிள்ளையை கண் கலங்க வைக்க கூடாது என்று கடைசியாக கையில் தாலியை கொடுத்து கட்ட சொன்னார் அந்த ஐயர்.

முதல் முறையாக அவள் புறம் தாலியை கட்ட திரும்பியவனுக்கு கண்ணாடி இல்லாது.. காதரிவோடிய கண்களில் தீட்டப்பட்டிருந்த அஞ்சனமும்… எப்பயும் போல் இருபுறமும் திரையாய் முகத்தை மறைக்கும் முடி இல்லாது தலையை ஒழுங்காக பின்னலிட்டு… மெல்லிய மேக்கப்புடன் வீற்றிருந்த அலக்நந்தாவின் முகம் அவனுடைய மோனலாக இல்லாது வேறு யாரோ ஒரு அதிரூப சுந்தரியின் முகம் போல் அவனுக்கு காட்சி அளிக்க… கண்கள் கூர்மையுற இமைக்க மறந்து அவளை வெறித்து பார்த்தான்!!!

“அண்ணா.. ஊருக்கு போன பிறகு பாபியை இப்படியே பார்த்துக் கொண்டே பசி, தூக்கம் இல்லாமல் இருக்கலாம்… இப்ப முதலில் தாலியை கட்டு” என்று நாத்தனார் முடிச்சு போடுவதற்காக பின்னாடி நின்ற மங்கி அவனின் கைகளை கிள்ள தன் நினைவு திரும்பி வேகமாக தாலியை கட்டினான் பத்ரி!!!

தாலி கட்டியவுடன் கண்கள் தெரியாமல் தடுமாறியவளைப் பிடித்து நிறுத்தியவன் சங்கியிடம் கண்ணாடியை எடுத்து வரச் சொல்லி அவளுக்கு அதை அணிவித்த பிறகுதான் மற்ற சடங்குகளை செய்யவே சம்மதித்தான்!!! ஒருவழியாக எல்லா சடங்குகளும் இனிதே நடந்தேறியது.

எப்பொழுதும் கலகலவென்று பேசுபவனின் முகம் அதி தீவிர யோசனையில் முழுகியதைதோ… இல்லை அலக்நந்தாவின் மேல் கூர்மையுடன் அடிக்கடி பாய்ந்ததையும் பின் அவன் முகம் இருகி

கருகியதையும் அங்கே இருந்தவர்கள் பரபரப்பில் கண்டுக்கொள்ளாது விட்டனர் அலக்நந்தா உட்பட!!!

மதியம் சாப்பிட்டு விட்டு முன் மாலை பொழுது வீட்டிற்கு திரும்ப... மீண்டும் முறையே அங்கேயும் செய்ய சடங்குகள் காத்து இருக்க... எல்லாவற்றையும் செய்து முடித்து இரவு உணவையும் முடித்தவர்களை சினிமா தனமாக எதுவும் செய்யாமல் பத்ரியை முன்னே போக சொல்லிய மல்லிகா அலக்நந்தாவை சற்றே மெல்லிய அலங்காரத்துடன் முதல் இரவு அறைக்கு அனுப்பி வைத்தார்!!!

எத்தனையோ ஆசைகளுடன் அவனின் அறைக்கு வந்தவளை எதிர்க்கொண்ட பத்ரி கேட்ட முதல் கேள்வி..

“நீ யார் என்பதை எப்ப சொல்லுவதாக இருந்தாய் அல்கா?? நமக்கு குழந்தை பிறந்தவுடனா இல்லை யாரோ ரோட்டில் போறவன் உன் பொண்டாட்டி தானே நடிகை அல்கான்னு கேட்ட பிறகா?” என்றான் அகங்காரம் தாண்டவம் ஆட...

ஆசையாக மிட்டாய் சாப்பிட ஆசைப்பட்டு கையை நீட்டிய குழந்தைக்கு மிட்டாய்க்கு பதிலாக கையில் சூடு கிடைத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அலக்நந்தாவின் உணர்வும் வலியும்...

தாங்க முடியா வலியுடன் “பத்ரி...” என்ற கிசுகிசுப்பாக அழைத்தபடி தாமரை விழிகளில் அதீதித பயமும் விலியும் பிரதிபலிக்க இரண்டு அடி பின் எடுத்து வைக்க..

“உன்னை உயிருக்கு உயிராய் காதலித்தவனை எப்படி.. எப்படி டி உன்னால் குற்ற குறுகுறுப்பே இல்லாமல் அவ்வளவு எளிதாக ஏமாற்ற முடிந்தது??” என்று விஷ நாகமாய் அவனின் வார்த்தைகள் சீறி வந்த விழுந்தன.

“பத்ரி...” என்றாள் வார்த்தையின் வண்மையை தாங்க மாட்டாதவளாய் அவளையும் மீறி அஞ்சனை இட்ட அவளின் காதறிவோடிய கண்களில் நீர் திரள... “எதையுமே நான் திட்டம் போட்டு செய்யவில்லை பத்ரி.” என்றாள் மிக மிக மெல்லியதாய் உயிர் வலியின் ரணம் அதில் வெளிப்பட..

“வருடத்தில் பாதியில் திடீரென்று எங்கிருந்தோ வந்து என் ரூமில் தான் தங்குவேன்னு டேரா போட்டது உன் திட்டத்தின் முதல் கட்டம் இல்லைன்னு சொல்றியா அலக்நந்தா???” என்றான் வெகு அலட்சியமாக.

தன்னை காதலிக்காத போது கூட இதுவரை அவளை அலட்சியமாகவோ.. கீழ் தரமாகவோ பார்க்காதவன் இன்று முதல் முறையாக அப்படி பார்க்கவும் பேசவும் அவளால் ஜீரனிக்க முடியாது...

“நான் வேண்டும் என்றே அங்கே வரவில்லை பத்ரி... நா... நான் முன்னாடி படித்த காலேஜில் என்னுடைய தோழியாக இரண்டு வருடமாக பழகியவள்... நான் யார், என் குடும்ப பின்னணி எல்லாம் தெரிந்த பின்... பணத்திற்காக என்னைப் பற்றிய விவரத்தை அவள் பேப்பருக்கு விற்க முற்பட... தோழியாக இருந்து என்னை ஏமாற்றிய அந்த துரோகத்தை தாங்க முடியாது நான் அங்கிருந்து வெளியேறினேன். அதன் பின் உன் அண்ணியின் மூலமாக இந்த காலேஜ் தெரிய வர.. அப்படி தான் இங்க வந்து சேர்ந்தேன் பத்ரி... அதற்கு முன் நான் உன்னை பார்த்தது கூட இல்லை... உன் பெயர் கூட என்னவென்று தெரியாது” என்றாள் அழுகையும் துக்கமும் போட்டி போட.

அவள் உறுக்கமாக கூறுவதை எல்லாம் கையை கட்டிக்கொண்டு ஒரு வித அலட்சியத்துடன் கேட்டவன் இளக்காரமாக ஒரு இளிப்பு ஒன்றை இளித்து “எப்படி... எப்படி?? உன் தோழி உன்னை ஏமாற்றினால்.. அதுக்கு பெயர் “துரோகம்” அதையே உன் கணவனுக்கு நீ செய்தால் உங்க அகராதியில் “காதல்ன்னு” பெயரா அல்கா மல்ஹோத்ரா?!? என்று சுடாக திருப்பி கொடுத்தான் பத்ரி.

ஏற்கனவே அவன் வார்த்தை ஏற்படுத்திய காயத்தால் தாங்க முடியா வலியால் துடித்துக் கொண்டு இருக்க... அந்த காயத்தில் மேன் மேலும் வார்த்தை என்னும் பாதரசத்தை ஊற்றியபடி .

“பத்ரி... நான் மல்ஹோத்ராவா ஒரு நாளும் உன்னுடன் நடந்தது இல்லை..” என்றாள் வலி பொருக்க மாட்டாமல்.

“நீ மல்ஹோத்ராவை தவிர வேறு எப்படியாகவும் நடக்க வில்லை.. அல்கா... சுய நலத்தின் மொத்த உரு... உன் அக்காவுடன் ஒரு ஐந்து நிமிடம் பேசியதும்

தெரிந்தது… ஆனா இப்ப தான் புரியுது மல்ஹோத்ரா குடும்பமே மொத்த சுய நலத்தின் திரு உருன்னு" என்றான் அருவருப்பும் அவமதிப்புமாக… மொழிந்தவன்..

"உனக்கு அந்த காலேஜில் இருந்து அங்கிருந்து தப்பிக்க ஒரு வழி வேண்டும். அதனால் இந்த காலேஜுக்கு வந்த… படிப்பு முடிந்தவுடன் உனக்கு பாதுகாப்பாக தங்க உனக்கு ஒரு புகலிடம் தேவை.. என் வீட்டை பார்த்தவுடன் வாழ்நாள் முழுக்க உனக்கு ஒரு இடம் அமைத்துக் கொடுக்க நான் தான் ஒரு இளிச்சவாயன் காத்துக்கொண்டு இருந்தேன் அதனால் சுலமாக ஒத்துக்கொண்ட…" என்றான் இரக்கமற்று.

"என்னை யாருன்னு சொல்லாதது தப்புதான்… ஒத்துக்கறேன்… உன்னிடம் ஒரு பாதுகாப்பை உணர்ந்தேன்.. அதையும் ஒத்துக்கறேன் ஆனால் அது உன் மேல் இருந்த காதலால் மட்டும் தான் பத்ரி… மற்றபடி உன்னிடம் புகலிடம் தேடி ஓடி வர நான் என்ன தீவிரவாதியா?? உன் காதலை ஒரு நாளும்.. ஒரு நொடியும் நான் அப்படி நினைக்கவில்லை.." என்று அவள் மறுமொழிக்கும் போது குரல் நடுங்கியது.. "உனக்கு வேண்டுமானால் என் கடந்தகாலம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் உன் வீட்டில் எல்லோருக்கும் என்னைப் பற்றி நல்லாவே தெரியும் பத்ரி.." என்றாள் இரைஞ்சும் குரலில்.

அப்படி சொன்னாலாவது கொஞ்சமாவது சமாதானம் ஆகிவிட மாட்டானா என்று ஆதங்கத்தில்…

"நான் ஒரு பெண்னை காதலிக்கிறேன்னு தெரிந்தால் போதும் அவள் எப்படிப்பட்டவளாக இருந்தாலும் என் வீட்டினருக்கு அவளை பிடிக்கும்… அதற்கு காரணம் என் மேல் உள்ள அன்பும், பாசமும்… அதை நீ உனக்கு எவ்வளவு சாதகமாக பயன்படுத்திக் கொண்டாய்?!?" என்று அதற்கும் அவள் மேல் எரிந்து விழுந்தான்.

"அன்புன்னா என்னன்னே தெரியாது இருபத்தி நாலு வருஷம் வளர்ந்த எனக்கு… உன் அன்பு எனக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதுவும் என்னை எனக்காகவே நேசிக்கும் உன் காதல் வேண்டும் என்று நினைத்தேன்… அந்த சுயநலம் தான் என் வாயை மூடி இருக்க காரணமாக இருந்ததே தவிர நீ நினைக்கிற மாதிரி இல்லை.. காட்.. பத்ரி உனக்கு எப்படி நான் புரிய வைப்பேன்… உன்னை விட நான் நூறு மடங்கு அதிகமாக

காதலிக்கறேன்…" என்று அவள் நா தழு தழுக்க கூறினாள் அலக்நந்தா.

"என்னது காதலா?? ம்கூம்…" என்று வன்மமாக அவளைப் பார்த்து இகழ்ச்சியாக உதடு சுழித்தவன் "காதலின் அர்த்தம் தெரியுமாடி?? சொன்னால் புரிந்துக் கொள்ள கூடிய தகுதி இருக்காடி உனக்கு?? உன் அம்மா அப்பா சரி இல்லை என்று அறிந்த பின் அவர்களைப் பற்றி பேசினா உனக்கு வலிக்குமேன்னு அந்த பேச்சையே எடுக்கலை.. அதுடி காதல்ன்னா… வாழ்நாள் முழுமைக்கும் சேர்ந்து வாழ போற உன்னிடம் நீ யார்ன்னு எந்த கேள்வியும் கேட்காமல் உன் கழுத்தில் தாலி கட்டினேன் அதுடி காதல்ன்னா… உன் கடந்த காலம் மிக மிக கசப்பான அனுபவங்களை கொண்டது என்று யூகித்த ஒரே காரணத்திற்காக அதைப் பற்றி வாயை திறக்கவில்லை அதுடி காதல்ன்னா… இப்படி ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ஒவ்வொரு நொடிக்கும் உன்னைப் பற்றியே நினைத்து… உன்னைப் பற்றியே யோசித்த என்னை… ஒரு நிமிஷம் ஒரே ஒரு நிமிஷம் கூட நீ யோசிக்கலையேன்னு நினைக்கும் போது தான் இங்க வலிக்குதுடி!!!" என்றான் தன் இதயத்தை தொட்டு காட்டி வலியும் வேதனையும் மிக.

அவன் வலியை தனதாக உணர்ந்தவள் "பத்ரி…" என்று கிட்ட தட்ட கதறினாள்.

"என்னை நடித்து ஏமாற்றுவது உனக்கு அவ்வளவு சுலபமானதா போச்சு இல்ல?" என்றான் அதே குரலில்

"நான் ஒரு காலத்தில் நடிகையா இருந்தேன்.. என் அம்மா, அப்பாவை திருப்திப்படுத்த.. அவர்களை சந்தோஷப்படுத்த அதுதான் வழின்னு நினைத்து எனக்கு பிடிக்காத போதும் அதை செய்தேன்.. செய்துக் கொண்டும் இருந்திருப்பேன்.. ஆனால் ஒருநாள் அல்சருக்காக என்னை மருத்துவமனையில் அனுமதிக்கும் வரை.. எந்த அப்பா, அம்மாவை திருப்திபடுத்தவும் சந்தோஷப்படுத்தவும் என் பள்ளி காலம் முழுவதையும் தொலைத்தேனோ.. அவர்கள் என்னைப் பார்க்க வர முடியாதுன்னு சொல்லிட்டாங்க.. அப்ப முடிவு பண்ணினேன் பத்ரி.. இனி யாருக்காவும் வாழக் கூடாது.. நான் எனக்காக வாழனும்.. என் சந்தோஷத்திற்காக மட்டும்தான் வாழனுன்னு முடிவு எடுத்தேன்… இதில் உன்னை போல் ஒருத்தனை சந்திக்க போறேன்னு நான் எதிர்பார்க்கவில்லை பத்ரி… நீ என்னை எப்படி வேண்டுமானாலும் சொல்லு.. ஆனா நடித்தேன்னு மட்டும்

சொல்லாத..” என்றாள் நா தழு தழுக்க..

அவள் சொல்லுவதை எல்லாம் முகத்தில் கோபக்குறியுடன் கேட்டுக் கொண்டு இருந்தவன் “ஆக.. இப்ப நீ சொல்ல வருவது என்னன்னா.... இப்ப நீ கேமரா முன்னாடி மட்டும் நடிப்பதில்லை.. நிஜ வாழ்க்கையிலும் நடிக்கற... அதுதான்?!?” என்றான் மூர்க்கத்தனமாய்..

கூர் தீட்டப்பட்ட வார்த்தை என்னும் கத்தியால் அவளை அவன் கூறு போட... ரத்தம் கசிந்தது அவளுக்கு...”நீ ஏமாற்றினால் நியாயம் அதுவே நான் செய்தால் அநியாயமா, நடிப்பாகி விடுமா பத்ரி??

"என்ன புதுகதை நான் ஏமாற்றினேனா??"

“புதுக் கதை இல்லை பத்ரி, பழைய கதை... உன் அண்ணனிடம் சொல்லாமல் சௌவியை மும்பைக்கு அனுப்பி வைத்த போதும் அவர் அதை மன்னித்து விடவில்லையா??? இல்லை உன்னை கேட்காமலேயே கல்யாணம் ஏற்பாடு பண்ணினாலும் கூட அவர்கள் பண்ணியதை மன்னித்து நீ ஏற்றுக் கொள்ளவில்லையா??. இதில் இருக்கும் பரந்த மனது ஏன் என்னிடம் வரவில்லை....???

“வாவ்?!? என்ன மாதிரி ஒரு விளக்கம் அலக்நந்தா இதை நிச்சயம் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை.. தீவிரவாதியும் தான் துப்பாக்கி ஏந்தி சுடறான்... ராணுவத்திலும் தான் சுடறாங்க.. அதுக்காக அதுவும் இதுவும் ஒன்றாகி விடுமா அலக்நந்தா?!? அதுக்கும் இதுக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன தெரியுமா??? தீவிரவாதி சுயநலத்திற்காக துப்பாக்கி ஏந்தறான்.. ராணுவத்தில் பொது நலத்திற்காக துப்பாக்கி ஏந்தறான்... நான் சௌவியை அனுப்பியது என் அண்ணின் சந்தோஷத்திற்காக... அதே மாதிரி என் வீட்டில் கல்யாணம் ஏற்பாடு பண்ணியது என் சந்தோஷத்திற்காக தானே தவிர.. அவர்களுக்காக இல்லை.. ஆனா நீ... உன் கடந்தகாலத்தை மறைத்தது முழுக்க.. முழுக்க உன் சுயநலத்திற்காக மட்டும்.... இதை என் வீட்டு ஆட்களுடைய அன்புடன் ஒப்பிடாதே... அதைப் பற்றி பேச உனக்கு தகுதி இல்லை..” என்று வெறுப்புடன் மொழிந்தவன்.. தொடர்ந்து..

“கிட்ட தட்ட உன் ஐந்து வயதில் இருந்து உன் பதினாறு வயது வரை நடித்து விட்டு உனக்கு பிடிக்கவில்லை என்று அந்த துறையை விட்டு விலகிய நீ...

என்னையும் உனக்கு பிடிக்கவில்லை என்று ஐந்து வருஷம் கழித்து பிரிய மாட்டேன்னு என்ன நிச்சயம்??" என்றான் ஆவேசமாய்!!

இன்று....

"எல்லாமுமாக இருக்கிறேன்னு சொல்லிவிட்டு எதுவுமே இல்லாமல் ஆகிவிட்டாயே!!!" என்றான் பத்ரி மித மிஞ்சிய கோபத்தில் கண்களில் அக்னி ஜூவாலை தெறிக்க..

"என்னது?? நானா?? நீ என்னையா சொல்ற பத்ரி?? எதை நான் வந்து இல்லாமல் செய்துவிட்டேன்னு குதிக்கிற பத்ரி? உன் குடும்பத்தையா? உன் நண்பர்களையா? உன் மரியாதையையா? உன் பணத்தையா?? உன் மதிப்பையா? இப்படி எதை நான் இல்லாமல் செய்து விட்டேன்னு எனக்கு சுத்தமாக புரியவில்லை...?" என்று ஆவேசமாய் கேட்டவள்..

"உன்னால் நான் எதை இழந்திருக்கிறேன்னு சொன்னால் புரியுமா?? ஒரு மகா பேராசைகாரனுக்கு தங்கமும் வைரமும் கொண்ட பொக்கிஷத்தைக் காட்டி இது எல்லாம் உனக்கு தான்னு ஆசை காட்டிவிட்டு பின் இரக்கமே இல்லாது அந்த அறையை பூட்டி கண்ணுக்கு தெரியாத இருட்டில் சாவியை எரிந்துவிட்டு தேடி எடுத்துக்கோன்னு சொன்னா அவன் எப்படி உணர்வானோ.. அப்படித் தான் நானும் உணர்கிறேன் பத்ரி... இந்த மூன்று வாரமா... என் சாவி எங்கேன்னு தெரியாமல் தேடிக்கொண்டு இருக்கிறேன் பத்ரி... தாலி கட்டிய புருஷனா கண்ணு முன்னாடி திரிந்த போதும்... நீ என் கணவன் இல்லை.. அத்தை, மாமா, தாத்தா, பாட்டின்னு உறவு இருந்த போதும் அந்த உரிமையை எடுத்துக் கொள்ள முடியாது... இப்படி இருந்தும் இல்லாத மாதிரி வாழ்வது எவ்வளவு கொடுமைன்னு தெரியுமா பத்ரி??" என்றபோது அவளின் குரல் உடைந்து கண்ணில் நீர் திரண்டது.

எப்பொழுதும் வார்த்தைகளையே ஜாலமாக பேசும் பத்ரி இன்றோ பதில் சொல்ல வேண்டிய நேரத்தில் வார்த்தைகள் அற்ற மொழியையே பரிசாக கொடுத்தபடி அலக்நந்தாவை வெறித்து பார்த்தான்.

இருவரின் பார்வையும் பின்னி பினைய... அங்கே நிலவிய மௌனம் ஐந்து நிமிஷத்தில் வெடிக்கவிருக்கும் டைம் பாமின் கவுண்ட் டவுனை போல அசாத்திய இறுக்கத்தோடு திக்திக் என்று நகர... இதில் யார் வெடித்தாலும்

சிதறினாலும் இழப்பு இருவருக்கும் தான் என்று யூகித்த சித்..

மேலும் பொறுக்க மாட்டாது அவளை நோக்கி சென்றவன்… “நீ அல்காவா இருந்தாலும், அலக்நந்தாவா இருந்தாலும், அலக்நந்தா சச்சிதேவா இருந்தாலும் என்றுமே நான் உன் தோழன் தான். இந்த சமயத்தில் இருவருக்கும் இருக்கும் கோபத்தில் எதை பேசுகிறேன் என்று தெரியாது வார்த்தையை கொட்டுவது எந்த விதத்திலும் நன்மை பயக்காது என்பதால் ப்ளீஸ் அலக்நந்தா கொஞ்சம் நேரம் வெளியே போயிட்டு வா…” என்றான் சித் அமைதியாக.

மறுத்து எதுவுமே பேசாது பத்ரியும் கடைசி வரை அமைதியாகவே இருக்க.. சித்தின் வார்த்தையை கேட்ட பின் அவள் முகத்தில் உண்டான எல்லையில்லா வலியையும், ஏமாற்றத்தையும்… அவள் கட்டுக்குள் வைக்க துடிக்கும் அவளின் போராட்டமும் பார்வையாளனாக இருந்த சித்தை ஒரு நிமிஷம் ஆட்டி படைத்தது.

எதுவும் சொல்லாமல் வெளியே கால் நடுங்க சற்றே தடுமாற்றமாய் படிக்கட்டில் அலக்நந்தா செல்வதை கண்ணிற்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு இருந்த சித்.. வேகமாக கதவை தாளிட்டு விட்டு திரும்பியவன்…

“அவள் வார்த்தைகளில் இருந்த வலியும் ரணமும் ஒரு தோழனா எனக்கே வலிக்குதே… ஏன்.. ஏன்டா ஒரு வார்த்தை கூட பதில் சொல்லாமல் இருந்த??” என்றான் ஆத்திரமாக சித்.

“எப்படிடா பதில் சொல்வேன் அவள் உணரும் அதே வலியும் அவளை விட நூறு மடங்கு வேதனையும் நானும் உணரும் போது எந்த கேள்விக்கு என்னை பதில் சொல்ல சொல்ற??” என்றான் விரக்தியாக பத்ரி.

அத்தியாயம் - 31

இரண்டு வாரத்திற்கு முன்பு…

“கிட்டதட்ட உன் ஐந்து வயதில் இருந்து உன் பதினாறு வயது வரை நடித்து விட்டு உனக்கு பிடிக்கவில்லை என்று அந்த துறையை விட்டு விலகிய நீ…

என்னையும் உனக்கு பிடிக்கவில்லை என்று ஐந்து வருஷம் கழித்து பிரிய மாட்டேன்னு என்ன நிச்சயம்??" என்றான் ஆவேசமாய்!!

"ப... பத்ரி..." என்று அவள் காதில் கேட்ட செய்தியை நம்ப முடியாது அதிர்ச்சியின் உச்சிக்கே சென்றவளின் நாக்கு குளறியபடியே அவனின் பெயரை முனகினாள்.

ஈன்ற அன்னையே தன்னை அடித்த போதும் "அம்மா..." என்று அடித்தவரையே தன் வலிக்கு துணையாக அழைக்கும் குழந்தையை போல்... அவனின் கொடூர வார்த்தைகளால் அவளை அறுத்து கூறுப்போட்ட போதும்... வேறு எதையும் சொல்ல தெரியாது தன் வலியை தாங்கும் வல்லமை தரும் அந்த மந்திர சொற்களையே அவளின் நாக்கு உச்சரித்தது.

முழுதாக ஒரு நிமிடம் பிடித்தது அவன் சொன்ன வார்த்தைகளில் தாக்குதலின் இருந்து மீண்டு.. அலையலையாய் தன்னுள் பரவும் வலியை மென்று விழிங்கியவள் வாயை திறந்து பேச...

"என் காதல் எக்ஸ்பயரி டேட் போட்டு எல்லாம் வருவதில்லை பத்ரி.. நான் வாய் விட்டு சொல்லாமலே என் பயத்தை, அன்பை, காதலையும் புரியும் உனக்கு.. நான் இவ்வளவு தூரம் சொல்லிய பிறகும் ஏன் பத்ரி புரிந்து கொள்ள மறுக்கற?? என் காதல் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை அவ்வளவு தானா??" என்றாள் அழுகையும் குமுறலுமாய் அலக்நந்தா.

அவளின் அழுகுறலும் குமுறலும் தன்னை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பது போல் "நம்பிக்கையை பற்றி நீ பேசறது தான் ரொம்பவே ஆச்சரியமாக இருக்கு.. உன் காலேஜ் அக்கவுண்டையே ஹேக் பண்ணி போன் நம்பர் கண்டுபிடிக்க முடிந்த என்னால் நீ யார்... உன் பூர்வீகம் என்னவென்று கண்டுபிடிக்க முடியாது என்றா நினைத்தாய் அல்கா??" என்று அவளின் சினிமா பெயரை வைத்து மிக அழுத்தமாக அழைத்தான்.

இந்த பெயரால் தான் அழைக்கப்படுவதை பிடிக்காது என்று தெரிந்த பின்னும் அவளை நோக வைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அல்கா என்று அழைத்தவனை கண்களை விரித்து பார்த்தாள் அலக்நந்தா.

தனக்கு முன்னால் நின்று பேசுவது அவள் பத்ரியும் அல்ல.. பத்ரி சச்சிதேவும் அல்லாது யாரோ முன் பின் தெரியாத ஒரு அன்னியனோடு பேசுவது போல் உணர்ந்தாள்.

இதுவரை அவள் அறிந்த பத்ரி அவளுக்கு பிடிக்காது என்று தெரிந்தால் போதும்.. காரணம் கூட கேட்காமல் அதைச் செய்யவது என்ன அந்த பேச்சை கூட எடுக்க மாட்டான். அவளுக்கு இந்த பெயர் பிடிக்காதது மட்டும் அல்ல அந்த பெயரால் அவளுக்கு ஏற்பட்ட மனக்கசப்பையும் தெள்ள தெளிவாக உணர்ந்த பின்னும் அவன் வேண்டும் என்றே இப்படி அழைக்கிறான் என்றால் இத்தனை நேரம் மனதை அழுத்திய வலியையும் வேதனையையும் விட இன்னும் ஏதோ... நடக்கக் கூடாத ஒன்று நடக்கப் போவது போல் அவளின் உள்ளுணர்வு சதிராட்டம் போட...

நெஞ்சம் தடதடக்க... கண்கள் எரிய... "ப்ளீஸ் பத்ரி.. நீ அந்த பெயர் சொல்லி அழைக்காதேயேன்.." என்றாள் இறைஞ்சும் குரலில்.

"நான் சொல்லா விட்டால் நீ அல்கா இல்லைன்னு ஆகிவிடுமா??" என்றான் பத்ரி அலட்சியமாய்.

"இல்லை... நான் அல்கா இல்லை.. இனி ஆக போவதும் இல்லை... என் கடந்தகாலத்தைப் பற்றி போதுமான அளவு பேசிவிட்டேன்.. இனி அதைப் பற்றி பேச எதுவும் இல்லை..." என்று திடமாக கூறியவள் "என் பயம்.. என் குறை... என் கனவு.. என்று எல்லாம் தெரிந்த பின்னும் என்னை காதலித்தவனுக்கு என் கடந்தகாலத்தை ஒரு பொருட்டாக நினைக்க மாட்டாய் என்று நினைத்தேன் பத்ரி... உன்னை நம்பினேன் பத்ரி.. ஆனால் என் காதலை விட என் கடந்தகாலம் தான் உனக்கு இவ்வளவு பெரிய விஷயமாக கண்ணிற்கு தெரியும் என்று ஒரு நிமிடம் கூட நான் நினைத்து பார்க்கவில்லை..." என்றாள் அலக்நந்தா விக்கலும் விம்மலுமாக.

தலை சரித்து அவளை ஒரு மார்க்கமாக பார்த்தவன் "அப்படியா சொல்ற?? என் மேல் உனக்கு அவ்வளவு நம்பிக்கையா?" என்றான் பத்ரி வில்லங்கமாக.

அதை எதையும் கவனிக்கும் மனநிலையில் இல்லாத அலக்நந்தாவோ.. அவன் மேல் இருக்கும் காதலை நிரூபிக்கும் விதமாக "சர்வ நிச்சயமாக..."

என்றாள் ஆணித்தரமாக அலக்நந்தா.

“நான் உன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்க நான் எதுவுமே கேட்காமலே உன்னை கல்யாணம் பணணிக்கொண்டேன் அதே மாதிரி உனக்கு ஒரு வாய்ப்பு வந்தால்… நீயும் செய்ய தயாரா இருக்கியா?” என்றான் பத்ரி நிறுத்தி நிதானமாக.

“ம்ம்..” என்றால் வேகமாக தலையை ஆட்டி எப்படியாவது தன் காதலை அவனுக்கு புரிய வைத்திட வேண்டும் என்ற எண்ணமே பிரதானமாக இருக்க..

“அப்ப.. நீ யார் என்பதை உலகத்திற்கு சொல்லு” என்றான் பத்ரி சர்வ சாதாரணமாக.

உலகத்திலேயே அவளால் எதை செய்ய முடியாது என்று தெரியுமோ.. அந்த விஷயத்தை மிக சாதாரணமாக செய்ய சொல்ல…

தான் நினைப்பதும் அவன் சொல்வதும் ஒன்றே தானா? இல்லை தவறாக புரிந்துக்கொண்டோமா என்று எண்ணம் எழ “என்ன சொல்ற… எனக்கு நீ சொல்றது புரியிலை.. நான் யார்ன்னு உலகத்திற்கு சொல்லனுன்னா?? எப்படி ??” என்றாள் அலக்நந்தா.

அவளிடத்தில் இருந்து பார்வையை விளக்காதவன்… “நீ அல்கா மல்ஹோத்ரான்னு இந்த உலகத்திற்கு சொல்லுன்னு சொல்றேன்..” என்றான் அமைதியாக பத்ரி.

“நான் இன்னைக்கு காலையில் இருந்து அலக்நந்தா சச்சிதேவ் அதை மறந்துவிட்டு பேசறியே பத்ரி” என்றாள் அலக்நந்தா. அவன் என்ன சொல்கிறான் என்ற முழு அர்த்தம் உள்ளுக்குள்ளே வாங்க முடியாதவளாய்.

“அதைப் பற்றி அப்புறம் முடிவு பண்ணலாம்…” என்றான் பத்ரி அது ஒரு பொருட்டாகவே இல்லாதது போல்… அதாவது நடந்து முடிந்த அவர்களின் கல்யாணத்தில் முடிவு பண்ண என்ன இருக்கு என்று அவள் யோசிக்கையில் தான் அவன் எதைக் கேட்கிறான் என்ற விஷயத்தின் ஆழமே புரிய.. இத்தனை நேரம் திடமாக நின்று இருந்த கால்கள் ஆட்டம்

காண ஆரம்பித்தது அப்பொழுதுதான்…

ஆயிரம் மையில் வேகத்தில் சுழன்றுக்கொண்டு இருக்கும் பூமி திடீரென்று சடன் பிரெக் போட்டு நின்றால் எப்படி நாம் யூகிக்கவே அளவு தூக்கி எரியபடுப்படுவோமோ அப்படி இருந்தது பத்ரி அவளை செய்ய சொன்ன விஷயம்!!!

நிற்க முடியாது கால்கள் நடுநடுங்க… அப்படியே பின்னால் இருந்த சுவரில் சாய்ந்தவள் கால்களை முட்டு கொடுத்து தன்னுள் இருகி அனைத்துக்கொண்டு உதறிய உடலை கட்டுக்குள் கொண்டு வர முயல… அதற்குள் மூளை “சுவாசி.. சுவாசி” என்று அபாய எச்சரிக்கை விட அப்பொழுதுதான் தான் கடந்த ஒரு நிமிடமாக சுவாசிப்பதையே நிறுத்திவிட்டு இருந்தாள் என்பதே புரிய வர… அவசரமாக மூச்சு எடுத்து விட்டவளுக்கு… மீண்டும் ஒரு நிமிடம் ஆனது மூளை செயல் பட தொடங்க…

“எ.. எனக்கு…. எனக்கு புரியலை பத்ரி.. நான் சொல்றதுக்கும்.. இந்த நம்பிக்கைக்கும் என்ன சம்பந்தமுன்னு எனக்கு.. சுத்தமாக புரியலை…” என்றாள் உயிரே இல்லாத வெற்று குரலில் அலக்நந்தா.

அவள் படும் மரண வேதனையை நாடி நரம்புகள் புடைக்க.. ரத்த ஓட்டமே இல்லாத இருகிய முகத்தொடு பார்த்துக்கொண்டு இருந்தவன்.. “உனக்கு புரிய வேண்டியதில்லை என்பது தான் என் அவசியம்… உன்னை யாருன்னே தெரியாமல் நான் எப்படி காதலித்து கல்யாணம் வரை வந்தேனோ.. அதே மாதிரி எதுக்குன்னே தெரியாமல் நான் சொன்னதை நீ செய்… அது தான் நீ என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை காட்டும் விதம்.. என்று எடுத்துக் கொண்டாலும் சரி.. இல்ல இதையே மாற்றி உனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நீயும் உன் காதலின் ஆழத்தை காட்டுவேன்னு இப்ப சூளுரைத்தியே.. அதை நிரூபிக்கும் விதமாகவும் கொண்டாலும் சரி ” என்று தன் வார்த்தைகளால் அவளுடன் விளையாடினான் பத்ரி.

ரீக்டர் ஸ்கேலில் ஒன்பது புள்ளி ஆறு பூகம்பம் அவளுள் வெடித்து சிதற … உள்ளுக்குள்ளே விழுந்து நொறுங்கி போக.. அவனோ எந்த உணர்வும் இல்லாமல் ஒரு செய்தி வாசிப்பாளரின் தன்மையோடு நின்று பேசினான்.

இத்தனை நேரம் இதோ அதோ என்று துருத்திக் கொண்டிருந்த கண்ணீர்

கரையை உடைத்துக்கொண்டு வெளியேற… “பத்ரி… இது.. இது.. நான் யார் என்பதை உன்னிடம் சொல்லாததற்கு நீ கொடுக்கும் தண்டனையா??”

“ம்கூம்… இது தண்டனையும் இல்லை பரிகாரமும் இல்லை அலக்நந்தா.. இருதரப்பில் இருந்தால் தான் அந்த நம்பிக்கைக்கு அர்த்தம் இருக்கும்.. ஒரு பக்கத்தில் மட்டும் இருந்தால் அது மூட நம்பிக்கையாக தான் இருக்கும் அலக்நந்தா” என்றான் பிசிற்று மொழிந்தவன். “நம்பிக்கை இல்லாத காதல் நீ படிக்கிற நாணயங்களைப் பற்றி படிப்பது மாதிரி… அந்த நாணயத்திற்கு பெரிய மகத்துவம் இருக்கலாம், பின்னனி இருக்கலாம், காலத்தை வென்ற வரலாறு இருக்கலாம்.. ஆனா இன்றைய தேதிக்கு அது “செல்லா காசு” அது மாதிரி தான் நம்பிக்கை இல்லாத காதலும்… அப்படிப்பட்ட காதல் எனக்கு தேவை இல்லை அலக்நந்தா” என்ற போது அவன் குரல் உணர்ச்சி பொசுக்கப்பட்ட குரலாய் இறுகி இருந்தது…

செல்லா காசா? தேவை இல்லையா?? நானா? காதலா?? என்று வார்த்தையோடு வார்த்தை கோர்வை இல்லாது அவளின் முன் நின்று பேய் ஆட்டம் போட.. மூளையோ அந்த சொல்லையே சுற்றி வட்டமிட.. சுவற்றில் சாய்ந்து நின்றவளுக்கு அதற்கு மேல் நிற்க கூட முடியாது போக.. சரிந்து கீழே அமர்ந்தாள் அலக்நந்தா.

“அப்படி நான் நீ சொன்னதை செய்ய முடியலைன்னா…” என்றாள் கண்ணில் ஆறாக வழிந்தோட…

ஒரு நிமிடம் அவளை வலி மிகுந்த கண்ணோடு பார்த்தவனின் கண்களில் பின் உணர்வுகளே இல்லாது அவளை நேருக்கு நேராக பார்த்தவன் “நாம் சேர்ந்து வாழ்வதும் பிரிந்து போவதும் இனி உன் கையில்” என்றான் அமைதியாக பத்ரி!!!

“உன்னால் என்னை பிரிந்து மறந்து விட முடியுமா பத்ரி” என்றாள் வெடித்து சிதறிய அழுகையோடு.

அவளின் உச்சரிப்பில் இருந்து தாள முடியாத வேதனையும் வருத்தமும் எதிர் நின்றவனை புயலென தாக்கிய போதும் எதுவுமே பேசாது நின்றான் பத்ரி.

அவளை பார்த்த முதல் நாளிலேயே அல்சரால் துடிக்கிறாள் என்று தெரிந்தபோது இரவோடு இரவாக மாத்திரை வாங்கி கொடுத்தவன் அவன்.. அப்படிப்பட்ட பத்ரியை தான் அவள் அறிவாள். அதைவிட அவள் அறிந்த பத்ரி பேசுவான்.. எதையும் சாதுர்யமாக பேசுவான்.. அது தான் அவனின் தனி தன்மை… ஆனால் அவள் முன்னால் இப்படி மௌனமாக எந்த உணர்வும் இல்லாமல் அவள் அழுவதை பார்த்தபடி எதுவும் பேசாமல் நிற்பவன் அவள் பத்ரியே அல்ல!!!

அவன் உதிர்த்த வார்த்தைகளின் வீரியத்தை விட அவனின் இந்த மௌனமான ரௌத்திரம் தான் இந்த அசாதாரண நிலமையை விபரீதமானதாக விளைவுகளை சேர்க்க கூடியதான சூழலாக மாற்ற… முதல்முறையாக பத்ரியை இழந்து விடுவோமோ என்று அவள் மனதில் பயம் கொள்ள தொடங்கியது அந்த நொடியில் தான்.

எவ்வளவு சுட்ட மண்ணாக இருந்தாலும் மண் சட்டியில் விழும் கண்ணிற்கு புலப்படாத லேசான சின்ன விரிசல்.. அந்த பானையை உடைக்கவல்ல வல்லமை பொருந்தியதாக இருந்துவிடும்.. அது போல் ஆனது அவளின் நிலை..

அத்தனை நேரம் அவன் கோபத்தில் வார்த்தை வந்து தெரித்தன.. ஆனா வார்த்தைகள் வராத இறுகிய மௌனமும்.. அதை விட இம்மி கூட தன் உணர்வை வெளிப்படுத்தாத பத்ரியின் முகமும் அவனுடனான அவளின் எதிர்காலமே விரிசல் விழ… தன் வாழ்க்கை முடிவற்ற சூன்யமாக தெரிய குமுறி அழுதாள்!!!

அந்த கண்ணீரை பார்க்க பிடிக்காமலா இல்லை அக்கறை அற்றா என்று தெரிந்துக்கொள்ள முடியாதப்படி சட்டென்று திரும்பி தன் படுக்கையில் சரிய்தப்படி சற்று உரக்கவே… “நீ ஒரு முடிவிற்கு வரும் வரை இந்த கல்யாணத்தை காலேஜில் யாரிடமும் சொல்ல வேண்டாம்… எப்பவும் போல் நாம் ரூம் மேட்டாகவே இருப்போம்” என்றான். அதே தெளிவான குரலில் நிர்தாட்சண்யமாக பேசியவன் மெத்தை மேல் படுக்க எத்தணிக்க.. அப்புறம் ஏதோ நினைவு வந்தது போல் திரும்பியவன்.

தரையில் மண்டி இட்டு தாரை தாரையாக வழிந்த நீரை துடைக்க கூட மறந்து அசையாமல் அவனை வெறித்து பார்த்தபடி இருந்த அலக்நந்தாவை

நோக்கியவனின் கண்ணில் சொல்லோன்னாத வலி வந்து போக… எச்சிலை கூட்டி விழுங்கியவன்.. “டிக்கெட் புக் பண்ண மாதிரி நீ ஊருக்கு கிளம்பு… நான் உன்னோடு வரவில்லை” என்று முடித்தவன் அதற்கு மேல் மௌனமாக படுத்தான்.

அடுத்த நாள் மாலை சென்னையில் இருந்து ப்ளைட் புக்காகி இருக்க முதலில் இவர்களுடன் நிரல்யாவும் சென்னை கிளம்புவதாக இருந்தது. திடீரென்று பத்ரி வரமாட்டேன் என்று சொல்லி விட்டபடியால் கார்த்திக் அவர்களை விட சென்னை வந்தவன் “உங்களுக்கும் பத்ரிக்கும் என்ன பிரச்சனைன்னு யாருக்கும் தெரியாது பாபி.. பத்ரியிடம் எல்லோரும் கேட்டதற்கு ஒரு மாதத்திற்கு யாரும் எதுவும் கேட்க கூடாதுன்னு… குறிப்பா தன் கல்யாணத்தைப் பற்றி வெளியே யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று மிகவும் கண்டிப்பாக சொல்லிட்டான்… உங்களுக்கே தெரியும் பத்ரி ஒளித்து மறைத்து பேசும் ஆளு இல்லை.. இருந்தும் முதல் முறையாக அவனே அப்படி சொல்லவும் வீட்டில் அவன் இஷ்டத்திற்கு விட்டுட்டாங்க… உங்கள் விஷயத்தில் தலையிடுவதாக நினைக்காதீங்க… எதுவா இருந்தாலும் சீக்கிரம் முடித்து விடுங்க.. பத்ரியும் ரொம்ப ரொம்ப மனகஷ்டத்தில் இருக்கிறான் என்று புரியுது உங்களைப் பார்த்தாலும் நீங்களும் அப்படி தான் இருக்கீங்கன்னு தெரியுது..” என்பதை மட்டுமே சொன்னவன் விடைபெற்று செல்ல… எப்படி வந்து சேர்த்தோம் என்று புரியாத தன்மையுடன் ஒரு இயந்திர தனமாக ஊர் திரும்பினாள்.

லீவ் இல்லாத போதும் ஒரு வாரம் கழித்து ஊர் திரும்பியவன் நான்கு மாதத்திற்கு முன் பார்த்த பத்ரியில் இருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தான்!!!

இன்று…

“எப்படிடா பதில் சொல்வேன் அவள் உணரும் அதே வலியை அவளை விட நூறு மடங்கு வேதனையுடன் நானும் உணரும் போது எந்த கேள்விக்கு என்னை பதில் சொல்ல சொல்ற??” என்றான் விரக்தியாக பத்ரி.

“என்னது… வலிக்குதா.. உனக்கா?? வலிக்கிறவன் செய்யும் வேலையா எனக்கு தெரியலையே??” என்றான் சித் இகழ்ச்சியாக.

“வலிக்க வைக்காமல் இருக்க எவ்வளவு தான் பிரயத்தனபட்டாலும் எல்லா சமயத்திலும் நினைத்த மாதிரி செய்ய முடிவதில்லை சித்...” என்றான் பத்ரி விரக்தியும் கழிவிரக்கமும் மிக...

“இப்படி எல்லாம் பேசி.. உன் பேச்சு திறமையால் என்னை குழப்பி நீ செய்வதை எல்லாம் சரின்னு நிரூப்பிக்காதே பத்ரி...” என்று கொந்தளிப்பாக கூறிய சித்.. “முதலில் நான் கேட்கும் கேள்விக்கு நேரடியான பதில் சொல்லு... அலக்நந்தா யாருன்னு தெரிந்த பின் கல்யாணம் பண்ணியா இல்லை கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகு அவள் யார் என்று தெரிந்ததா?!?” என்றான் நேருக்கு நேராக .

சித் அடித்ததால் இடது கண்ணும், வலது கன்னமும் வீக்க தொடங்க... “சரியா.. தாலி கட்டும் போது தெரிந்தது...” என்றான் நிதானமாக பத்ரி அவனைப் பார்த்து.

“சரி... கட்டும் போது அவள் யாருன்னு தெரிந்து விட்டது இல்லை? அப்புறம் ஏன்டா தாலி கட்டின?? அப்பவே கல்யாணத்தை நிறுத்தி தொலைத்திருக்க வேண்டியது தானே?!? இப்படி கல்யாணம் பண்ணி அவளை உயிரோடு கொல்வதற்கு அது எவ்வளவோ பரவாயில்லையே”

வீங்கிய கண்களுடன் அவனை அற்ப புழு போல பார்த்தவன் “நான் அவளை காதலிக்கிறேன்டா..??” என்றான் பத்ரி. என்னவோ அந்த “காதலிக்கிறேன்” என்ற சொல்லே சித்திற்கு போதுமான விளக்கத்தை தத்துவிட்டது போல பத்ரி!!!

“என்னது காதலிக்கிறியா?? காட்... நீ சொன்ன இந்த காதலுக்கு அர்த்தம் என்னென்னு எனக்கு புரியலை.. நான் சச்சிதேவ் இல்லை... உங்க மைண்ட் எப்படி வேலை செய்யுதுன்னு சத்தியமாக புரியலை...” என்று விரக்தியும் வன்மமும் போட்டி போட கேட்ட சித்... “நான் தெரியாமல் தான் கேட்கிறேன்... இப்ப நீ காதலிக்கிறேன்னு சொன்னது அவளை கௌரவப் படுத்துவதாக நினைத்துக் கொள்வதா.. இல்லை நீ அரங்கேற்றும் செயலுக்கு காதல் முலாம் பூசினால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற திமிரா?? அலக்நந்தாவை பற்றி எதுவுமே தெரியாமல் கல்யாணமே பண்ணிக்க போனவனுக்கு ஏன் இந்த கோபம்...?? அவளாகவே முன்வந்து தன் கடந்காலத்தை உன்னிடம் சொல்லாதது பிரச்சனையா?? இல்லை அவளின்

கடந்த காலமே உனக்கு பிரச்சனையா??" என்று அடுக்கடுக்காக கேள்விக் கணைகளை சரமாரியாக தொடுத்தான்.

பெருமூச்சு ஒன்றை சத்தம் போட்டு விட்டவன் "இதுக்கு நான் பதில் சொல்ல முடியாது சித்..." என்றான் வெகு அமைதியாக பத்ரி.

"உனக்கே தெரியும் எனக்கு சின்ன வயதில் இருந்து மிலிட்டரி ட்ரெயினிங் உண்டு... ஏற்கனவே உன் ஒரு பக்கம் கண் வீங்கி.. பார்வை மங்க ஆரம்பித்துவிட்டது... வீணா உன் வாயையும் கிழிக்க வேண்டாம் என்றால் மரியாதையா நான் கேட்க கேள்விக்கு பதில் சொல்லு ஏன்டா... மற்றதற்கு மட்டும் பக்கம் பக்கமாய் புரியாமலே விளக்கம் தர தெரியும்.. இப்படி நேராக கேட்டா மட்டும் ஏன் சொல்ல தெரியாதா?" என்றான் சொட்டா நவபாய்!!!

அவன் மிரட்டியதை கண்டு கொஞ்சம் கூட அசரமால் அந்த கவுச்சிலேயே அமர்ந்திருந்த பத்ரி... "நான் முடியாதுன்னு சொன்னேன்.. தெரியாதுன்னு சொல்லலை... டா.. ஏன்னா உன் வேள்வி சரியானதாய் இருந்தாலும் தப்பான ஆளிடம் கேட்கிறாய்.." என்றான் பத்ரி கொஞ்சம் கூட சலனமே இல்லாமல்!!!.

"டேய்.. இப்படியே என்னிடம் பேசினேன்னு வை... எனக்கு வர ஆத்திரத்துக்கு உன் ஒவ்வொரு பல்லையும் உடைக்கத்தான் போறேன்..." என்று ரௌத்திரமாக சித் மொழிந்தபடி அவன் அருகில் வர...

"அடேய் கொஞ்சம் இப்படி உட்கார்..." என்று பெருமூச்சு ஒன்றை விட்டபடி.. அவனை கையை பற்றி அவன் அருகில் இழுத்து உட்கார வைத்தான் பத்ரி...

"இந்த மாதிரி சமயத்தில் கூட எப்படிடா இவ்வளவு அமைதியாக இருக்க?" என்று அதற்கும் எரிந்து விழுந்தான் சித்.

தன் வீங்கிய கன்னம் அனுமதிக்கும் அளவு லேசாக சிரித்த பத்ரி... "நான் சொல்றது உனக்கு புரியனுன்னா... இத்தனை நேரம் நீ கேட்டு நான் பதில் சொன்ன மாதிரி.. இப்ப நான் கேட்கிறேன் நீ பதில் சொல்லு.. அலக்நந்தா ஏன் அந்த காலேஜில் இருந்து இங்க ஓடி வந்தாள்??" என்றான் பிசிறே இல்லாமல் பத்ரி.

“ம்ம்… யாரோ ப்ரெண்ட் பணத்திற்காக இவளைப் பற்றி தகவலை பேப்பரில் போட போக.. அதை தவிர்க்க இங்கே வந்தாள்..”

“ரொம்ப சரி… ஒரு சின்ன சர்ஜரி செய்து தன் கண்ணை சரி செய்துகொள்ள வழி இருந்தும்… அப்படி சர்ஜரி செய்ய பிடிக்காவிட்டாலும் கூட அல்ட்ரா மாடனாக எத்தனையோ வகை கண்ணாடி இருந்தும் ஏன் அந்த காலத்து முகத்தை மறைக்கும் பெரிய கண்ணாடியையும், அவ்வளவு அழகான நீண்ட முடியை எதுக்கு குருவி கூடு மாதிரி வெட்டி விட்டுக் கொள்ள வேண்டும்??”

“அவளை யாருக்கும் அடையாளம் தெரியாமல் இருக்க…” என்றான் சித் அவனை பார்த்தபடி.

“நீயே சொல்லுடா இங்கே அவளை யாருக்குமே தெரியாது என்று தெரிந்த போதும் ஏன்டா அவள் புதிதாக யாரை கண்டாலும் பயத்தில் நாலு அடி பின் வைத்து ஓடி ஒளியனும்..??”

இவன் இப்ப என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்துகொள்ள முயன்றய படி “தப்பி தவறி கூட அவளை தெரிந்து விட கூடாது..” என்று சித் கூறிக்கொண்டு இருக்கும் போதே..

“இதை விட… அவளின் நியாயமான.. தார்மீகமான கோபத்தை கூட மறைத்து… ரோகனை எந்த காரணத்திற்காக பொறுத்து போகனும்??” என்றான் பத்ரி சற்றே கோபமாக.
“அவளை கண்டுபிடித்து விட கூடாதே என்ற பயம் தான்” என்று மீண்டும் அதே பதிலை சித் கூறியபோது அவன் குரல் சற்றே இழுத்தது.

சோகம் கலந்த சிரிப்பை உதிர்த்தவன் “கிளாஸ் முடிந்ததும் எதுக்கு இவள் மட்டும் விழுந்து அடித்துக் கொண்டு ஓடி வர வேண்டும்? இருபத்து நான்கு வயதில் நண்பர்கள் என்று ஏன் இதுவரை இல்லை?? அவளுடைய போன் நம்பரை எதற்காக இத்தனை ரகசியமாக வைக்கனும்?? என்று இப்படி நூறு கேள்வி அடுக்கிக் கொண்டே போகலாம்… ஆனா நான் கேட்கும் எல்லா கேள்விக்கு நீ சொன்ன ஒரே பதில் தான் வரும்…” என்று எரிச்சலும் வெறுப்புமாக மொழிந்த பத்ரி…

“கொஞ்சம் நேரத்திற்கு முன்னாடி அவளுடைய கடந்தகாலத்தை என்னிடம்

சொல்லாதது பிரச்சனையா இல்லை கடந்தகாலமே பிரச்சனையான்னு கேட்டியே… இப்ப நீ சொல்லு சித்.. தன் கடந்தகாலத்தை ஏற்காதது நானா இல்லை அவளா?!?" என்றான் பத்ரி தீர்க்கமாக அவனைப் பார்த்து.

"பத்ரி…" என்று சித் என்ன சொல்ல வருகிறான் என்று முதன் முறையாக புரிய அரண்டு போய் பார்த்தான்!!!

"இப்படி ஊருக்கு ஒளிந்து வாழ அவள் என்ன தேச துரோகியாடா?? யாருக்காக வாழ்நாள் முழுக்க பயந்து, பயந்து ஓடனும்?? இப்படியே எத்தனை நாள் மறைந்து வாழ முடியும்…?? அவளை முன்னால் நடிகையாக பார்த்தால் என்ன?? உண்மையில் அவள் அது தானே?? அவள் மல்ஹோத்ரா குடும்பத்தில் பிறந்தவள்… அதை அவள் மறக்கலாம்.. அதற்காக அதை எப்படி மறைக்க முடியும்??? அவளுக்கு நடிப்பு பிடிக்கவில்லை என்பது அவளின் தனிப்பட்ட விஷயம். அவள் படிக்க வந்ததில் என்ன தவறு இருக்கு??? இதில் மறைக்க என்னடா இருக்கு??"

"தன்னை யாருங்கற உண்மையை அவள் வெளியே சொல்ல தயாரா இருந்திருந்தால்…தேவை இல்லாத நூறு பிரச்சனையை தவிர்த்து இருக்கலாம் இந்த அல்பதனமான விஷயத்திற்காக அவள் கொடுத்திருக்கும் விலை என்ன???"

"தங்க சுரங்கத்தில் தங்கத்தை தொண்டி எடுக்கும் போது ஒரு அளவிற்கு மேல் தங்கம் இருக்கும் என்று தெரிந்தாலும் கீழே போக மாட்டார்கள்.. ஏன்னா… தங்கதிற்கு ஆகும் செலவை விட.. அது எடுப்பதற்காக ஆகும் செலவு ரொம்பவே அதிகம் அது மாதிரிதான் டா இதுவும்.. அவள் கொடுத்த விலைக்கு அவள் பெற்றது ரொம்ப ரொம்ப சொற்பம் டா… பதினாறு வருஷம் அவள் பெற்றவர்கள் அவளை பூட்டி வைத்தார்கள் என்றால்… அடுத்த வந்த எட்டு வருஷம் இவளே தன்னை தானே காலாகிரஹத்தில் பூட்டிக் கொண்டாள்."

"இதை எல்லாம் அவளிடம் நீயே எடுத்து சொல்லி இருக்க கூடாதா?" என்றான் பத்ரியை மதிப்பு பொங்க பார்த்தபடி சித்.

"எப்படி?? என்றான் பத்ரி விரக்தியின் உச்சத்திற்கு போய். " நான் உட்கார வைத்து பாடம் எடுத்தால் உடனே புரிந்து கொண்டு விடுவாள் என்று

நம்பறியா?? உயிருக்கு உயிராய் காதலித்த என்னிடமே அவள் சொல்லாத விஷயத்தை மற்றவர்களிடம் எப்படி டா சொல்லுவா?? எட்டு வருஷம்டா எட்டு வருஷம்… அவளுக்குள்ளே பூட்டு போட்டு கொண்டு இறுகி இருந்தவளிடம் போய் எத்தனை சாவி போட்டாலும் பூட்டு திறக்க முடியாதுடா… பூட்டை உடைக்கனும். அதற்கு அவளுடைய காதலை தவிர வேறு வழி தெரியவில்லை…"

சட்டென்று அவனை இறுக பிடித்து தோளை அணைத்த சித் "தன் தோழி கல்யாணத்திற்கு போவதற்கே ஒரு மாதம் முன்னாடியே தன்னை தயார்படுத்திக் கொள்ளும் பெண்கள் இருக்க.. எப்படி ஒவ்வொரு சச்சிதேவும் இப்படி திடுதிப்புன்னு கல்யாணம் பண்ணும் போதும் மட்டும் எப்படி சொல்லி வைத்த மாதிரி உடனே கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்கிறாங்கன்னு அடிக்கடி நினைத்து ஆச்சரியப்படுவேன் டா… ஆனா இப்ப உன் பேச்சை கேட்ட பின் இந்த மாதிரி ஒரு அன்பிற்கு முன்னாடி அந்த விஷயம் எல்லாம் ஒரு பொருட்டாகவே நிற்க முடியாதுன்னு… எனக்கே தெரியும் போது.. உங்களால் காதலிக்கப் படுபவர்களுக்கு எப்படி தெரியாமல் இருக்கும்?? என்று புலங்காகிதமாக மொழிந்தவன் சட்டென்று எச்சரிக்கும் விதமாக "ஆனா ஒரு விஷயம் பத்ரி பூட்டை உடைக்கிறேன்னு அவளை உடைத்து விடாதே டா பத்ரி!!!" என்று அவன் மொழிந்துகொண்டு இருக்கும் போதே யாரோ படபடவென்று கதவை தட்டினார்கள்.

கதவு தட்டப்படும் விதத்திலேயே அது அலக்நந்தா இல்லை என்று இருவரும் உணர.. இவனை பார்த்தபடி சித் வேகமாக கதவை திறந்தான்.

பரபரப்பாக உள்ளே வந்த பாயல் பத்ரியின் முகத்தை பார்த்ததும் அரண்டு போய்.. "நீ அவனை அடித்து விட்டாயா?? ஆனா உன்னை பார்த்தா அடித்த மாதிரி தெரியவில்லையே.. அடிவாங்கின மாதிரிதானே இருக்கு?!?" என்றாள் தன் பயம் அப்பி கண்களால் அவர்களின் ரூமை துழாவியபடி. "அடித்தவன் நான்… நீ யாரை கேட்கற பாயல்??" என்றான் சித்.

இரண்டு அடி துள்ளிக்குதித்து பின்ன நகர்ந்தவள் சித்தை அரண்டு போய் விக்கித்து பார்க்க.

"என்ன ஆச்சு பாயல்? யாரை அடித்தியான்னு கேட்கற?" என்றான் பத்ரி கண்ணில் கூர்மை மின்ன அவளில் விசித்திரமான நடத்தையை கண்டவன்.

அவன் கேட்ட கேள்வியை காதிலே வாங்காதவள் “முதல்ல இங்கே அலக்நந்தா வந்துவிட்டாளா?” என்றாள் அவள் படபடப்பாக.

இத்தனை நேரம் சித் அவனை பல்லை உடைப்பேன்.. என்று மிரட்டிய போதும் அமைதியாக இருந்தவன் பாயலின் குரலில் இருந்தே பயத்தை கண்டுக்கொண்டவன் அவசரமாக “இல்லையே ஏன்… அவளுக்கு என்னாச்சு?” என்றான் ஏதோ உள்ளுணர்வு எச்சரிக்கை செய்ய கவுச்சிலிருந்து எழுந்து அவள் பக்கத்தில் நின்றபடி பத்ரி.

“அது வந்து…” என்று மென்று விழுங்கியவள் “இன்று ரீசல்ட் வருவதாக இருந்தது இல்ல…”

“எந்த ரீசல்ட்??” என்றான் சித் தலையும் புரியாமல் வாலும் புரியாமல்.

“அதான் தொல்பொருள் அனுப்ப சொல்லி இருந்த ஆய்வு கட்டுரை” என்று படபடப்பாகவே விளக்கினாள் பாயல்.

“ஆமாம் அதுக்கு இப்ப என்ன??” என்றான் பத்ரி அவன் கேட்ட விதத்திலேயே அவனின் அவசரமும் சீக்கிரம் சொல்லி தொலையேன் என்று ஆவேசமும் விளங்க..

எச்சிலை கூட்டி விழுங்கியவள் “மாலை வர வேண்டிய அந்த ரீசல்ட் இப்பயே வந்துவிட்டது..”

“என்னாச்சு??” என்றான் பத்ரி பொறுமை அற்று…

இத்தனை பிரச்சனையிலும் ஏன் அவள் அந்த பேப்பரை எழுதியே ஆவேன் என்று அவ்வளவு அடம் பிடித்தாள் என்று அன்று புரியாவிட்டாலும் நேற்று இரவு எதற்காக அவள் அவ்வளவு ஈடுபாடுடன் உயிரை கொடுத்து எழுதினாள் என்று தன் வாயால் அவள் சொல்ல… அவன் தன் கட்டுப்பாட்டை இழந்து உடைந்த தருணமும் அது தான்.

அதில் வெற்றி பெற்றால் அதன் வாயிலாக தான் யார் என்பதையும் அறிவிக்கலாம் என்பதை மனதில் வைத்து தான் அவள் அதை தயாரிக்க

அத்தனை சிரமப்பட்டு இருக்கிறாள்.. அது தெரியாத அவன் அவளை மேலும் வாட்டி எடுத்திருக்கிறான் என்று நினைக்கும் போது அவள் மேல் காதல் முட்டி மோதி அவனை திக்கு முக்காட செய்ய.. தலையை ஆட்டி தன் நிலைக்கு திரும்பியவன்

“என்னாச்சு??” என்றான் மீண்டும்.

இவனின் முகத்தையே சிறு நடுக்கத்தோடு பார்த்தபடி தன் பேச்சை நிறுத்தி இருந்த பாயல்…

“அது வந்து.. இந்த போட்டியில் அலக்நந்தா தோற்றுவிட்டாள்.. இந்த ரோகன் தான் ஜெயித்திருக்கான்.. அந்த கர்வம் அவன் தலைக்கு ஏற.. ஏற்கனவே எதையோ பறிகொடுத்தவள் மாதிரி உட்கார்ந்திருந்தவளிடம் போய் முகத்திற்கு நேராக அவள் தோற்று விட்டதாகவும் தான் ஜெயித்து விட்டதாக பேசினான் பத்ரி” என்றாள் மிக உருக்கமான குரலில் பாயல்!!!

அத்தியாயம் - 32

“அது வந்து.. இந்த போட்டியில் அலக்நந்தா தோற்றுவிட்டாள்….” என்பது வரை தான் பாயல் சொன்னது.. பத்ரியின் செவிப்பறையில் விழுந்தது.. அதற்கு மேல் மனக்கண்ணில் வந்தது என்னவோ அலக்நந்தாவின் கடைசியாக பார்த்த முகம் தான்…

அதுவும் சித் அலக்நந்தாவை சற்று நேரம் வெளியே போக சொன்ன அந்த நொடி… உயிரின் வலியோடு “சாம்பி” போய் இவனை ஒரு பார்வை பார்த்தாலே அது தான் இப்பொழுது அவன் கண் முன் வந்து நின்று அவனை வாட்டியது!!!

வாழ்க்கையில் முதன் முறையாக “சாம்புதல்” என்ற கம்ப ராமாயணத்தில் வரும் வார்த்தையின் அர்த்தத்தை உணர்வுபூர்வமாக கண் முன் நிறுத்தினாள் அவள்…

அண்டங்களுக்கு அதிபதியாகி தன் பெயரிலேயே ஈஸ்வர பட்டத்தை கொண்ட இராவனேஸ்வரன் நாடு நகரம் இழந்து.. தன் படைகளை எல்லாம் இழந்து… உடன்பிறந்த தம்பிகளை இழந்து.. ஈன்று எடுத்த மகனை இழந்து…

உயிரை மட்டுமே வைத்துக் கொண்டு போர் புரிய… அப்பொழுதும் அவனை கொல்லாத இராமன் “இன்று போய்… நாளை வா” என்று திருப்பி அனுப்ப…

உயிரை தவிர மற்ற எல்லாவற்றையும் இழந்தவன்… தன் உயிரையும் நாளை எடுக்கப் போகிறான் என்று தெரிந்தபின் எப்படி உணர்ந்திருப்பான் என்பதை “சாம்புதல்” என்ற ஒரே வார்த்தையில் இராவணனின் நிலைப்பாட்டை கூற..

அந்த வார்த்தைக்கான அர்த்தத்தை உயிரை தவிர எதுவும் இல்லாதது போல் அவனைப் பார்த்து விட்டு போன அலக்நந்தா கண் முன் தெரிந்தாள்!!!

என்ன காரியம் செய்துவிட்டேன் என்று மனது பதற.. அடுத்த கணம் மரத்து இருந்த உணர்வினை மீட்டவன் எதுவும் பேசாமல் புயல் வேகத்தில் தன் அறையை விட்டு வெளியேறினான் பத்ரி.

அவன் செல்வதை பார்த்து அவசரமாக அலக்நந்தா எங்கே இருக்கிறாள் என்பதை பாயலிடம் கேட்டு தெரிந்த சித்… அவனைப் பின் தொடர்ந்தபடியே.. “அலக்நந்தா… அட்மின் பக்கம் போனாலாம்.. நான் இந்த பக்கம் பார்க்கிறேன்.. ஒருவேளை நான் முதலில் பார்த்து விட்டால் போன் பண்ணுகிறேன்” என்று சொல்லி விட்டு நிற்காமல் வேகமாக ஆளுக்கு ஒரு புறம் சென்றனர்.

நடிப்பாகட்டும் படிப்பாகட்டும் எதையுமே முடிந்தளவு செய்தால் போதும் என்று எடுத்துக் கொள்ளும் ரகம் அலக்நந்தா இல்லை.. எதை செய்தாலும் முழு மூச்சாக இறங்கி செய்யும் ரகம் அவள்.. அப்படி இருக்க.. இதை நம்பி எவ்வளவு பெரியகனவு கண்டு இருக்க.. இப்படி தோற்றுப் போவாள் என்று அவள் நினைக்கவில்லை.. ஏன் கற்பனை கூட பண்ணவில்லை…

வேறொரு சமயத்தில் இது மாதிரி தோற்று போய் இருந்திருந்தால் ஒருநாள் வலியோடு அதை மறந்து இருந்திருக்க முடியுமோ என்னவோ.. ஆனால் பத்ரியின் அந்த வெற்றுப் பார்வையும்… கடைசியாக அவனின் வார்த்தைகள் சாட்டை அடியாக வாங்கியபின் பல இழைகள் ஒன்றடங்கிய நூலில்… கடைசி இழை அறுந்து விழும் வரை அதை பிடித்துக் கொண்டு தொங்குவதை போல் அவளுடைய பலமுனை போராட்டத்தில் தோற்று இருந்தாலும் இழையாய் ஊசல் ஆடிக்கொண்டு இருந்த அவளின் நம்பிக்கை

பத்ரியின் அந்த வெற்றுப் பார்வையிலும், பேச்சிலும்... கடைசியாக இப்ப வந்த ரிசல்டிலும் சுத்தமாக அறுந்து போக.. நூல் அறுந்த பட்டமாக ஒரு பிடிப்பும் இல்லாது திக்கு தெரியாது எங்கோ நடந்தாள்.

எட்டு வருஷத்தில் அவள் உழைத்த உழைப்பு எல்லாம் எங்கோ காணாமல் போய் விட்டது போல்.. பதினாறு வருஷம் முன்பு ஹாஸ்பிடல் அறையில் யாரும் இல்லாத தனிமை உணர்ந்தாளோ... அதே தனிமையும் துரத்த... விடைதெரியாத ஆயிரம் கேள்விகளும் அவளை துரத்த... பதிலறியாது நடந்தபடியே இருந்தாள்...

சூறாவளியில் மாட்டிய பட்டமாக திசைக்கு ஒரு புறமாக எண்ண அலைகள் இழுக்க.. போகும் வழியும் தெரியாது.. போகும் தடமும் புரியாது.. நெஞ்சை சொல்ல முடியாத துக்கம் வந்து பந்தாக அடைக்க அந்த அழுத்தம் தாங்க முடியாது கண்களில் நீர் வழிந்து கோடாக இறங்கியது...

அடுத்த ஒரு மணி நேரம் ஒவ்வொரு யுகம் யுகமாம் கடக்க.. சட்டென்று உலகத்தை விட்டே மறைந்தவளை தேடுவதிலேயே நேரம் கரைய... இனியும் இப்படி அலைய முடியாது சிசி டி.வி இருக்கும் இடத்திற்கு போக வேண்டியது தான் என்று பத்ரி நினைக்கும் வேலையில்...

எந்த இடத்தில் அவள் நிச்சயம் இருக்க மாட்டாள் என்று நினைத்து இத்தனை நேரம் தேடாமல் விட்டானோ அந்த இடத்தில் அவளை கண்டான்!!!

அன்று அவள் கால் இடறி ஆற்றில் விழுந்தாலே அதே இடத்தில் மண்டி ஈட்டு சலசலவென்று சுழன்று அடித்துக் கொண்டு ஓடும் ஆற்றை இலக்கின்றி வெறித்து உயிர் உணர்வு அற்று அமர்ந்திருந்தவளை கண்டவனுக்கு மூச்சு கூட விட முடியாதபடி இத்தனை நேரம் உடல் முழுவதும் இறுக கட்டு போட்டு இருந்தவனை சட்டென்று விடுத்தது போல உடல் அப்படியே தளர வேகமாக நெஞ்சில் காற்றை நிரப்பிக் கொண்டவன் அவளை நோக்கி ஓடி வந்தான்!!!

யாரோ தன்னை நோக்கி வருகிறார்கள் என்பதை கூட உணராது சிலையென அமர்ந்து இருந்தவளை நெருங்கியவன்...

“எங்கடீ போய் தொலைந்த… உன்னை எத்தனை நேரமாக தேடி இருக்கேன் தெரியுமா??” என்று ஆத்திரம் பொங்க கேட்டபடி பத்து அடி ஓடிவந்தவன் பத்து கிலோ மீட்டர் ஓடி வந்தது மாதிரி மூச்சு இறைக்க வந்து அவள் முன் நின்றான்!!!

இவள் தலையை உயர்த்தி யாரோ முகம் அறியாத ஒரு அன்னியனை பார்ப்பது போல் அவனைப் பார்க்க…

அடுத்த வினாடி… அவளின் நீண்ட முன்டக கண்ளில் தெரிந்த அன்னியத்தையும் விலகலையும் எதிர்க்கொண்டவனுக்கு தன் ஒவ்வொரு அனுவிலும் அவளின் வலியை உணர…

அப்படியே யாரோ தன் சக்தி எல்லாம் பிடுங்கி கொண்டது போல் கால்கள் செயலிழுந்து போக… தடுமாறி “தொப்” என்று புல் தரையில் அவள் முன்னால் வஞ்ஜராசனமிட்டு அமர்ந்து… கைகள் நடுங்க அவளின் தோளில் கை அழுத்தி பிடித்தவன்..

“மோனல்” என்றான் உயரை உருகுக வைக்கும் குரலில்..

அதற்கு எந்த பதிலும் வராது அவனிடமிருந்து பிரித்து பார்வையை சுழலும் ஆற்றில் மீண்டும் நிலைக்க.. கண்களை மூடி அவளுடயை விலக்கலை விழுங்கியவன் அதை உணராதது போல்….

“ஒரு மணி நேரமா இப்படி அலைய விட்டுடியே டி??” ஒரு உலுக்கு உலுக்கிய பத்ரி குரலில் வருத்தமும்.. பயமும் என்பதை கடந்து எல்லை இல்லா கோபம் இருந்தது.

பட்டென்று அவன் கைகளை உதறி தள்ளியவள் “ம்கூம்.. ஒரு மணி நேரம்… ஒரே ஒரு மணி தேடினதுக்கே இப்படி பதறியே… நான் கடந்த மூன்று வாரமா என்னுடைய பத்ரியை தேடிட்டு இருக்கேன்..??” என்றாள் அலக்நந்தா. இத்தனை நேரம் துயரத்தில் சோகத்தை பிழிந்த அதே கண்கள் இப்போ கொள்ளிக்கட்டையாக திகு திகு என்று தீப்பற்றி எரிந்தது.

“மோனல்” என்றான் விக்கித்து போய்..

“மோனலாம் மோனல்..” என்று கத்தியவள் “என்னை ரூமை விட்டு வெளியே போக சொல்லி விட்டு.. இப்ப எதுக்கு இங்க வந்த பத்ரி?? நான் தோற்று போனதால் தானே வந்த..?? இல்லைன்னா என்னை தேடி வந்திருக்க மாட்ட இல்லை..?? நான் யாருன்னு சொல்லும் வரை என்னுடன் பேசி இருக்க மாட்டல்ல...??” என்று குமுறியவள்..

“நான் யாரால் தோற்றேன் தெரியுமா?? உன்னால்.. உன்னால்..” என்று அவன் மார்பை தொட்டு காட்டியவள் “உன்னால் தான் இன்று நான் தோற்றேன்” என்றாள் அதே குரலில் காட்டியபடி கண்கள் கனக்க..

எதை சொல்கிறாள் புரிய.. ஒரு வினாடி கண்களை இறுக்க மூடியவன் மௌனமாக தலையை மட்டும் அசைத்தான்.

“தோற்று விட்டேன்... தோற்று விட்டேன்... என்ற வார்த்தை தான் என் மனதில் அடி நாதமாய் ஒளித்துக்கொண்டே இருக்கு தெரியுமா??” என்று கூறியவளுக்கு ஏதோ பதில் பேச அவன் வாயை திறக்க..

அவன் பேச வருவதை கையை ஆட்டி தடுத்து நிறுத்தியவள்.. “தோல்வின் மறுகரையில் இருப்பர் வாய் கிழிய பேசலாம் ஆனால் தோற்ப்பவனுக்கு மட்டும் தான் தெரியும் அதனுடைய வலியும் வேதனையும்... ரொம்ப புத்திசாலிதனமா தோல்வி தான் வெற்றிக்கு முதல் படி.. தோற்று விழுவது பெரிதில்லை... எழுந்து நிற்பது தான் பெரிசுன்னு இந்த மாதிரி எதையாவது உன் சித்தாந்தம் பேசினன்னு வை.. சித் செய்யாத வேலையை நான் உன் பல்லுக்கு செய்வேன் பத்ரி..” என்று ஆங்காரமாய் முடித்தாள்.

இந்த பதிலால் முதல் முறையாக தரிகெட்டு ஓடிக்கொண்டு இருந்த பத்ரியின் நெஞ்சு மெல்ல சீர்பட நான் பேச மாட்டேன் என்பது போல் செய்கையால்... வாயை ஜிப் போட்டவன்!!! மூச்சு முட்டும் தூரத்தில் அவள் குத்து கால் வைத்து கண்களில் அனல் பொங்க அவனை பார்த்தபடி உஷ்ணக்காற்றை கக்கியவளின் உருவை நெஞ்சில் நிரப்பிக் கொண்டு எதுவும் பேசாமல் அவளை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி அமர்ந்திருந்தான் பத்ரி.

“உனக்காக.. நீ சொன்னதை செய்ய வேண்டும் என்பதற்காக ஊரில் இருந்து வந்ததில் இருந்து எப்படி இரவு பகலாய் ஊன் உறக்கம் இன்றி

உழைத்தேன்னு தெரியுமா??" என்றபோது அவள் குரல் நடுங்கியது..

எதுவுமே சொல்லாது வெறும் தலையை ஆட்டினான் பத்ரி..

"நான் எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் எதற்காக, யாருக்காகன்னு தெரியுமா??" என்று ஆவேசமாக கேட்டவள் அவன் பதில் அவளை அமைதியாக சும்மா பார்ப்பதே பரமசுகம் என்பது போல் உட்கார்ந்திருந்தவனை கண்டு எரிச்சல் கொண்டு "உனக்காக... உனக்காக மட்டும் எழுதினேன்" என்று மீண்டும் அவன் நெஞ்சில் தன் ஆட்காட்டி விரலை வைத்து கத்தினாள் அலக்நந்தா..

"நான் கேட்காத போதெல்லாம் எனக்கு கிட்டிய ஜெயம்... எப்படியும் இதில் ஜெயித்தே ஆக வேண்டும் என்று.. உழைப்பும் மட்டும் இல்லை என் உயிரையே வைத்து எழுதிய போதும் எனக்கு கிடைக்கலை பத்ரி... லைப் சக்ஸ்..." என்று போது அவள் குரல் கீரிச்சிட்ட லேசாக உடைய தொடங்கியது!!

அத்தனை நேரம் கோபத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணீர் துக்கத்தில் மடையை திறக்க.. குபு குபுவென்று புது புனல்போல் கண்ணில் பெருக்கெடுக்க...

அவளை அப்படியே வாரி சுருட்டியவன் அவளை தன் நெஞ்சில் புதைத்துக் கொண்டான்..

பத்ரி தன்னை தேடி வந்ததற்காகவா.. இல்லை தான் தோற்று விட்டதற்காகவா.. இல்லை வெளியே போ என்று சொன்னதற்காகவா என்று எதுவுமே தெரியாது அவன் பரந்த மார்பில் புதைந்திருந்த அவளுடைய முகம் கண்ணீர் சொரிந்தபடியே இருந்தது!!!

எதுவும் சொல்லாமல் அவளை அணைத்தவன் வெகு நேரம் அவள் அழுது தீரும் வரை அமைதியாக காத்து இருந்தவன் ஒரு வழியாக அவள் அழுகையின் ஈரம் குறைவதை கண்டு..

"மோனல்" என்று அரை மணி நேரம் கழித்து மெல்ல அழைத்தான் பத்ரி.

எதுவும் பேசாமல் அமைதியாக அவன் மார்பிலேயே புதைந்திருந்தவளை மீண்டும் அழைத்தவன்.. “நீ வாழ்க்கையில் எத்தனை முறை தோற்று கீழே விழுந்தாலும்… என் மேல் தான் விழுவாயே தவிர உன்னை கீழே விழ நான் விட மாட்டேன் மோனல்” என்ற மிக மிக மெல்ல மொழிந்தவன் அதை விட மென்மையாக அவளின் கார் கூந்தலில் முத்தம் மிட்டு தன் தலையை அவள் தலையின் மேல் சாய்த்தான்.

அவள் பதில் பேசும் முன் கீரீச்சிட்டது இன்னொரு பெண்ணின் குரல்…

“அண்ணா… இது என்ன பீச்சா??” என்று சிரிப்புடன் கேட்டுக் கொண்டே நெருங்கிய ஷங்கியின் குரல் உணர்ந்தவன் வெடுக்கென்று தலையை பின்னால் திரும்பி பார்க்க..

அவன் நெஞ்சில் தலையை புதைத்திருந்த அலக்நந்தா வேகமாக நகர்ந்ததை கவனிக்க தவறினாள் ஷங்கி..

காரணம் பத்ரியின் முகத்தில் இருந்த காயங்களையும் வீக்கத்தையும் பார்த்தவளுக்கு அவனைத் தவிர எதுவும் கண்ணிற்கு தெரியாமல் போக… பின்னால் சாவகாசமாக நடந்தப்படி வந்த குடும்ப அங்கத்தினரை பார்த்து..

“கார்த்திக் அண்ணா… இங்க வந்து பத்ரியை அண்ணாவை பாரேன்” என்று கிட்டதட்ட அந்த காடே அதிரும் படி அலறினாள் சங்கமித்ரா.

அங்கே வந்திருந்த எல்லோரும் அதிசயம் கலந்த அதிர்ச்சியில் உறைந்து பத்ரியைப் பார்க்க.. மல்லிகாவிற்கு மட்டும் அவன் அருகில் உறைந்த நிலையில் இருந்த அலக்நந்தா தான் கண்ணில் பட்டாள்.!!!

ஒரு நொடி அவளின் அழுத கண்களையும் வீங்கிய முகத்தையும் பார்த்த மல்லிகா.. பத்ரியைப் பார்த்து, "நீ அவங்களை அழைத்துக் கொண்டு உன் ரூமிற்கு போ நான் அலக்நந்தாவுடன் வருகிறேன்" என்று கூறி அவனை எழுப்பி அனுப்ப…

அவனை புடை சூழ்ந்து குடும்ப அங்கத்தினர் குசலம் விசாரித்தபடி அங்கிருந்து கிளம்பினான். இரண்டு தரம் அலக்நந்தாவை வெகு சிரமப்பட்டு திரும்பி பார்க்க.. ஆனால் அவளோ நிமிர்ந்து கூட பார்க்காது கோர்த்து

இருந்த தன் கையையே பார்த்தப்படி அமர்ந்திருந்தாள்..

மெல்ல அலக்நந்தாவின் புறம் வந்த மல்லிகா “வாம்மா நாம் அப்படி உட்காரலாம்” என்றார் ஒரு பெரிய மரத்தின் அருகில் இருந்த பென்ஞ்சை கையால் காட்டி.

“ஆனா.. பத்ரி… பத்ரி.. ரூமில்..” என்று கையை பின்னால் காட்டி பாதி ஆங்கிலத்திலும் பாதி செய்கையிலும் சொன்னாள் அலக்நந்தா. அவர்கள் அவனைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று யூகித்து.

“நாங்கள் அவனைப் பார்க்க வரவில்லை அலக்நந்தா.. உன்னை பார்க்க தான் வந்தோம்..” என்றார் அமைதியாக அமர்ந்தபடி மல்லிகா.

“என்ன… என்னை.. என்னை… பார்க்கவா??” என்று அதிர்ச்சியில் அமர்ந்தாள்.

“ம்ம்.. நீ ஊருக்கு வந்திருந்த போதும் நான் குழந்தையுடன் ரொம்பவே பிசியா இருந்தேன்.. அதனால் உன்னுடன் தனியா நின்று பேச கூட முடியவில்லை அப்புறம் எங்கிருந்து என் கையால் சமைத்து கொடுக்க…?? பத்ரி முன்னாடியே சொல்லி இருந்தான்.. இன்னைக்கு உன் ரிசல்ட் வருது தானே… அவன் தான் வரச் சொன்னான்.. அதுதான் உன்னை பார்த்து விட்டு.. போகலாம் என்று வந்தோம்” என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே… மயங்கி விழாத குறையாக பார்த்தாள் அலக்நந்தா

அத்தியாயம் - 33

“ம்ம்.. நீ ஊருக்கு வந்திருந்த போதும் நான் குழந்தையுடன் ரொம்பவே பிசியா இருந்தேன்.. அதனால் உன்னுடன் தனியா நின்று பேச கூட முடியவில்லை அப்புறம் எங்கிருந்து என்கையால் சமைத்து கொடுக்க…?? பத்ரி முன்னாடியே சொல்லி இருந்தான்.. இன்னைக்கு உன் ரிசல்ட் வருதாமே… அவன் தான் வரச் சொன்னான்.. அதுதான் உன்னை பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தோம்” என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே… மயங்கி விழாத குறையாக பார்த்தாள் அலக்நந்தா.

அதிர்ந்து விழித்தவளின் முகத்தை பார்த்த மல்லிகா.. “என்னம்மா???” என்றார் அவளின் சில்லிட்டு மரத்து இருந்த கைகளை பற்றி.

நினைவு தெரிந்த நாளில் இருந்து என்றாவது தன் அன்னை மகளின் வதங்கிய வதனத்தை பார்த்தே ஏதோ பிரச்சனை என்று புரிந்துக்கொண்டு இப்படி கனிவுடன் பேசி இருக்கிறாரா என்று யோசிக்க... அது யோசிக்கும் அளவில் தான் இருந்தது!!!

அவர் சொன்னது எதுவுமே காதில் விழாதது போல் உணர்ச்சி பொங்க பார்த்த அலக்நந்தா.. பட்டென்று எழுந்து கீழே அவரின் கால் அடியில் உட்கார்ந்தவள் அப்படியே மல்லிகாவின் மடியில் தலை சாய்த்து அவரை இடையோடு கட்டிக்கொண்டாள்... ஒரு காலத்தில் புதியவர்கள் தன்னைப் பார்த்தாலே பத்து அடி பின்ன போய் தன்னை மறைந்துக் கொள்ளும் அலக்நந்தா!!!

“அம்மா வரும் வரை இதோ பக்கத்தில் இருக்கும் அட்மின் ப்ளாக் வரை நடந்து போகலாம். அவர்கள் கிளம்பியதும் எப்படியும் போன் பண்ணுவார்கள்.. அப்ப எல்லோருமாக ஒன்றாக சேர்ந்து ரூமிற்கு போகலாம்” என்று பத்ரி கூற அனைவரும் ஒத்துக் கொண்டனர்.

சௌவி குழந்தையுடன் பயணம் பண்ண முடியாது என்பதால் பாட்டியும், மேகமித்ராவும் ஊரிலேயே இருக்க... மற்ற அனைவரும் படை எடுத்திருந்தனர்.

ஆள் மாற்றி ஆள் யார் அடித்தது என்று தோண்டி துருவி கேட்ட குடும்பத்தாரின் கேள்விளுக்கு சித்தின் பெயரை மறந்தும் வெளியே சொன்னான் இல்லை.. காரணம் அவனை அடித்தது சித் என்று தெரிந்தால் கார்த்திக் எந்த சித் என்று கூட கேட்க மாட்டான். கேம்பஸ்சில் இருக்கும் எல்லா “சித்”தின் முகத்தையும் இடம் பெயர்த்துவிட்டு... “ஆமாம் நீ நம்ம சித்தையா சொன்ன?” என்று சாவகாசமாக கேட்கும் ரகம்.

இந்த மாதிரி அல்ப காரணத்திற்காகவும் சித் மாதிரியான நண்பனை இழுக்க தயாராக இல்லாத பத்ரி... அவனுக்கே உரிய திறமையில் நாலாபுறத்திலும் இருந்து சரமாரியாக வந்த கேள்விகளுக்கு பதில் பூசி மெழுகி சமாளித்தான்!!!

முதன் முறையாக தன் பச்சிளம் குழந்தையை பள்ளியில் விட்டு வரும்

அன்னையின் கண்ணும், வாயும், கையும் என்ன வேலை செய்தாலும்… மனம் மட்டும் பள்ளியில் விட்டு வந்த குழந்தையை சுற்றி சுற்றியே எப்படி வளம் வருமோ.. அதுபோல் பத்ரியின் பேச்சும் பார்வையும் தன் குடும்பத்தாருடன் இருந்தாலும் மனம் மட்டும் அங்கே தன் அம்மாவிடம் விட்டு வந்த அலக்நந்தாவிடமே சுழன்றி அடித்து சுழல… அவனையும் அறியாது கண்கள் பின்னே திரும்பி பார்த்தன..

புல் தரையில் அமர்ந்து அவனின் அம்மாவின் மடியில் தலையை சாய்த்திருந்த அலக்நந்தாவை கண்டவனுக்கு கால் தானாக நின்றது.

தன்னுடன் வராமல் எங்கோ வெறித்து பார்த்தபடி நின்றவனை கண்டு ஆர்யாவும் என்னத்தை இப்படி பார்த்து மலைத்து போய் நிற்கிறான் என்று யோசித்தபடி தலையை திருப்பி பார்க்க..

அங்கே தெரிந்த சோகமான காட்சி மனதை பிழிவதாக இருந்த போதும்… பத்ரியின் கையை அழுத்தி பிடித்தவன்..

“வா போகலாம்…” என்றான் ஆர்யா விடாமல்.

“ஆரி..” என்று எதையோ பேச ஆரம்பித்தவனை தலை ஆட்டி தடுத்து நிறுத்திய ஆர்யா..

“அவள் இப்படி இருக்கனுன்னதானே இவ்வளவு கஷ்டப்பட்ட?? அப்புறம் என்ன??? உன்னையே சமாளிக்க தெரிந்த அம்மாவிற்கு அலக்நந்தாவையும் சமாளிக்க தெரியும் நட” என்றான் ஆர்யா அவனுக்கே உரிய அழுத்தத்துடன்.

பெருமூச்சை விட்டவன் மீண்டும் நடக்க… “எனக்கு உன்னை பார்த்தால் ரொம்ப சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்குடா பத்ரி” என்றான் ஆர்யா தன் குடும்பத்தார்கள் அனைவரையும் முன்னே போக விட்டு பின்னே தங்கிய இவர்கள்!!!

புரியாமல் “எதுக்கு டா?” என்றான் பத்ரி.

“உன்னை எதுக்கு இங்கே காலேஜிற்கு அனுப்பினேன்னு தெரியுமா?? நீ பிசினஸ் பார்க்க ஆரம்பித்த பிறகு… என்னையும் கார்த்திக்கையும் தவிர

உனக்கு காலேஜ் நண்பர்களை கூட சந்திக்க நேரம் இல்லை… குடும்பத்தை தவிர வேற எதுவும் நியாபகத்தில் இருப்பதில்லை.. ஆனா இன்னைக்கு உன்னை கையை நீட்டி அடித்தவனை காகாக்கும் அளவு உனக்கும் சித்துக்குமான நட்பு இருக்கும் போது… கூடவே நான் ப்ளான் பண்ணி அனுப்பிய இடத்தில் உன்னை காதலிக்கு ஒரு பெண்ணும் கிடைச்சாச்சுன்னு நினைக்கும் போதும்… என் மகனை முதன் முதலில் கையில் தூக்கிய போது நம்மை அறியாது ஒரு கர்வமும் சந்தோஷமும் வருமே அது மாதிரி இருக்கு டா" என்றான் ஆரி பூரிப்பாக!!

நன்றி சொல்லு வழக்கம் சகோதரர்களுக்குள் கிடையாது என்பதால் தன் அண்ணன் தோளை இறுக அணைத்தான் தம்பிக்காரன். இருவருக்கும் பேச்சுகள் அற்ற அமைதி சூழ எதுவும் பேசாமல் அமைதியாக நடந்தார்கள்!!!

அப்படியே ஒரு பத்து அடி எடுத்து வைத்தவனுக்கு அப்பொழுது தான் சித்திடம் தான் இன்னும் போன் பண்ணி சொல்லாது பற்றி ஞாபகம் வர முன்னே சென்று கொண்டு இருந்த கார்த்திக்கை அழைத்து "சித்திடம் போன் பண்ணி அலக்நந்தா அம்மாவிடம் இருப்பதாக சொல்" என்றான் தாமதமாக பத்ரி.

"ம்கூம்… எவ்வளவு சீக்கிரமாக உன் நண்பனுக்கு போன் பண்ணி சொல்ல சொல்ற?!? என்று திரும்பி நின்று கார்த்திக்.. சிலாகிக்க

அதற்குள் அவனுடன் வந்த தந்தை சிவ சச்சிதேவ் "டேய் பத்ரி.. இந்த "ஏன்.ஹேச்" ஹோட்டல் குருப்ஸ் இவர்களோடது தானே ??" என்றார் பரபரப்பாக.

"செத்தான் டா சித் பையன்" என்று நினைத்த கார்த்திக்… பத்ரி பதில் சொல்லும் முன் முந்திக்கொண்டு "ஆமாம் பா.. அவர்களோடதே தான். நானும் அண்ணனும் ஹய்திராபாத் பேஷன் ஷோவிற்கு போனோமே அது இவர்கள் பொட்டிக் ஹோட்டலில் தான் நடந்தது.. ரொம்பவே நல்லா இருந்தது… அப்பதான் சித்தோட அண்ணன், அப்பா, அம்மா எல்லாரையுமே சந்தித்தோம்… அவனுடைய அப்பாவையும்… அண்ணனையும்.. நம் வீட்டிலேயே கம்மியாக பேசும் ஆரி அண்ணாவுடன் கம்பெர் செய்தால் ஆரி ஒரு நாள் பேசுவதை அவர்கள் ஒரு மாதத்திற்கு பேசுவார்கள்… அவர்கள் இருக்கும் இடத்தில் சித் எப்படி பேச கற்றுக்கொண்டான் என்பதே பெரிய

விஷயம்!!!" என்றான் கார்த்திக்.

"ஓ!! அப்படியா.." என்று மிகுந்த யோசனையுடன் தாடையை தடவிய சிவ சச்திதேவ்.. "அப்ப கொஞ்சம் அவனையும் கான்பரன்ஸ் ரூமிற்கு வர சொல்லேன்" என்றார் பத்ரியை பார்த்து அவனுக்கு ஏதும் ஆட்சேபனை இருக்குமா என்று பார்த்தபடி.

அவரின் பார்வையிலேயே தந்தை கேட்பதை புரிந்துக் கொண்ட பத்ரி எதுவும் இல்லை என்பது போல் தலையை ஆட்ட... இந்த பரிபாஷையை கவனித்த சங்கமித்ரா தன்னுடன் வந்த நிரல்யாவை கையைப் பிடித்து நிறுத்தியதை பார்க்காத கார்த்திக்... சித்திற்கு போன் செய்தபடி தந்தை மற்றும் தாத்தாவுடன் முன்னே சென்றான்!!!

"ஆமாம் நீ எப்படிடா என்னை அடித்தது சித்தன்னு அவ்வளவு சரியா கண்டு பிடித்தாய்??" என்றான் பத்ரி யோசனையாக தன் அருகில் வந்த ஆர்யாவைப் பார்த்து.

"இது என்ன பெரிய விஷயம்?? கார்த்திக்கின் ஒவ்வொரு கேள்விக்கும் நீ தலையை சுற்றி மூக்கை தொடும் போதே தெரியுமே.. யாரோ உனக்கு ரொம்பவே நெருங்கியங்களா இருக்கனும்.. உன் அடியை பார்த்தால் நிச்சயமாக அலக்நந்தாவால இப்படி அடிக்க முடியாதுன்னு தெரியும் அதை விட்டால் சித் தான் பாக்கி" என்றான் எளிதாக லாஜிக் பேசினான் ஆர்யா.

தன் இறுக்கம் தளர்ந்து மெல்ல சிரித்த பத்ரி "தயவு செய்து யார் காதிலும் படுவது மாதிரி சொல்லிடாதே டா..." என்றான் பத்ரி.

பேசியபடியே அவர்கள் படி ஏறிய சமயம் பார்த்து அம்மாவிடம் இருந்து அழைப்பு வர.. உள்ளே போக சொல்லிவிட்டு பத்ரி அவசரமாக போகும் வழியில் சித்தின் கார் வருவதை கண்டவன்.. காரை நிறுத்துவது தெரிந்தது.

"தேங்க் காட் நீ வந்த.. என் வீட்டு ஆட்கள் எல்லாம் அட்மின் ப்ளாக்கில் இருக்காங்க.. கொஞ்சம் பார்த்துக்கோ.. நான் போய் அம்மாவையும் அலக்நந்தாவையும் அழைத்து வரேன்" என்று கூறியபடி திரும்ப..

"ஏய் ஏறுடா காரில் போகலாம்..." என்று காரை ஸ்டார் செய்ய.. அடுத்த

இரண்டாவது நிமிடம் கார் சீறிப்பாயந்தது.

“சித்.. நீ தான் என்னை அடித்தாய்ன்னு எப்படி கேட்டாலும் சொல்லாதே” என்றான் பத்ரி தணிந்த குரலில்.

“ஏன்டா.. சொன்னா… என்னை உன் வீட்டில் என் கையை காலை உடைத்து என்னை படுத்த படுக்கை ஆக்கி விடுவாங்களா?” என்றான் மெல்ல புன்னகைத்தபடி சித்.

“என் வீட்டில் எப்படி ரியாக்ட் பண்ணுவாங்கன்னு சொல்லவே முடியாது. அதுவும் இந்த கார்த்திக் ரொம்ப அடாவடி.. அடித்துவிட்டு தான் கேள்வியே கேட்பான்.. ப்ளீஸ் சொல்லாதே” என்றான் பத்ரி இரைஞ்சும் குரலில்.

“ம்ம்.. சரி சொல்ல மாட்டேன்” என்று சித் சொல்லி முடிக்கவும் அவர்கள் வந்து சேரவும் சரியாக இருக்க..

வண்டியைப் பார்த்து விட்டு இரு பெண்களும் எழ.. அலக்நந்தாவை கையை பிடித்து உட்கார வைத்த மல்லிகா.. எதையோ அவளிடம் சொல்லிட்டு முன்னே நகர… வண்டியை நிறுத்திய இரு நண்பர்களும் விசித்திரமாக பார்த்துக் கொண்டார்கள்.

வண்டியை நெருங்கிய மல்லிகா சித்தைப் பார்த்து புன்னகை பூத்தவர் “எப்படி இருக்க சித்?” என்றார் வாஞ்சையாக.

“நான் நல்லா இருக்கேன் ஆன்ட்டி.. நீங்க எப்படி இருக்கிங்க?? நீங்க வருவதாக இவன் சொல்லவே இல்லை” என்றான் அருகில் குழப்பத்துடன் அமர்ந்திருந்த பத்ரியை லேசாக இடித்து.

எதுவும் பதில் சொல்லாது மெல்ல பத்ரியை பார்த்து சிரித்தவர்.. “பத்ரி நீ அலக்நந்தாவை அழைத்துக் கொண்டு வா.. நான் முதலில் சித்துடன் காரில் போறேன்” என்றார் அர்த்தம் பூஷ்டியான பார்வை பார்த்து.

அம்மா சொல்லுவதன் அர்த்தம் விளங்கவே இரண்டு ஒரு நிமிடம் பிடிக்க அவசரமாக கீழே இறங்கியவன் பத்ரியை பார்த்து “டேய்.. என் போன் சுவிட்ச் ஆப்பில் இருக்கு.. ஆரியை நிகாரிக்காவிற்கு போன் பண்ணி.. எப்படியும்

இன்னும் ஒரு அரை மணி நேரத்தில் இங்கே இருக்க சொல்" என்றான்.

"ம்ம்.. இன்னும் அவங்க ஊருக்கு போகலையாடா??"

"வர சொன்னதே இதற்காக தான் அப்புறம் எப்படி போக விடுவேன்?!?" என்று பேசிய பத்ரி அவசரமாக ஒரு பை தெரிவித்தான்.

அவர்கள் செல்ல வேண்டிய இடம் வந்து சேர... முறையாக உள்ளே அழைத்து சென்றவன் லேசாக கதவை தட்டிவிட்டு மல்லிகாவுடன் உள்ளே நுழைத்தான் சித்.

சச்சிதேவ் எல்லோரும் எதையோ அருந்திக் கொண்டு இருப்பதை பார்த்தவன் ஒரு பொதுவான வணக்கத்தை சொன்னவன்... கார்த்திக் அருகில் சென்று அமர்ந்த படியே எதிர் புறத்தில் இருந்த ஆர்யாவிடம் பையன் பிறந்ததுக்காக கையை குலுக்கி வாழ்த்து சொன்னவன்...

"குழந்தையை பார்த்துக்கொள்ளவதற்காக பாட்டியும் மேக மித்ராவும் அங்கே தங்கி விட்டாங்களா?" என்று அவர்களை மட்டும் காணாததை கண்டு எதோ கேட்க வேண்டுமே என்று கேட்டான் சித். அது எப்படிப்பட்ட அதிர்வலையை உருவாக்க கூடும் என்று சற்றும் எதிர்பார்க்காது!!!

அவன் அப்படி ஆர்யா பார்த்து கேட்டது தான் தாமதம்.. என்னவோ அவர்கள் கண்ணிற்கு முன்னால் அவனுக்கு வால் முளைத்து குரங்கா மாறியது போல் அப்படி ஒரு பார்வை பார்க்க குழம்பி போனவன்.

"காட்.. இந்த சச்சிதேவ் எதை எப்படி பார்பார்கள்?? நாம் அப்படி என்ன தப்பா கேட்டுவிட்டோம்?" என்று புரியாத திகைப்பில் முதல் முறையாக தான் பேசும் தமிழையே சந்தேகப்பட்டான் சித்.

என்னதான் அவனின் தாயின் மொழி தமிழ் என்றாலும் கூட அவன் ஒரு ஹைதராபாத் மண்ணின் மைந்தன் என்பது மட்டும் அல்ல அவன் ஒரு நவாப் என்பதை அவன் பிறப்பில் இருந்து ஊட்டப்பட்டு வந்தது என்பது தான் நிதர்சனம்.

தன் அருகில் இருந்த கார்த்திக்கிடம் திரும்பிய சித்.. "நான் ஏதாவது தப்பா

கேட்டேனா?”

“ம்கூம்... சரியா கேட்டதால் தான் இப்படி பார்க்கிறாங்க” என்றான் கார்த்திக்.

கார்த்திக்கின் பதிலால் மேலும் குழம்பி போனான் “ஆமாம்.. உங்க சச்சிதேவிற்கு ஒரு கேள்வி கேட்டா அதற்கு நேரா பதில் சொல்லவே தெரியாதா?!?” என்றான் சித்..

அவன் பேசிய பதிலை கேட்டு மெல்ல சிரித்த கார்த்திக் “நீ மங்கியை வளைகாப்பிற்கு வந்த போது ஒரு ஐந்து நிமிஷம் பார்த்திருக்க.. சங்கியை பார்க்க கூட இல்லை இல்லையா?” என்றான் தீர்மானமாக.

“ஆமாம்” என்றான் சித் இன்னும் புரியாமல்.

“அப்ப எப்படி இது மங்கி இல்லைன்னு அவ்வளவு உறுதியாக சொல்ற?” என்றான் தன் அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து சங்கியை காட்டி.

“என்ன கேள்வி இதுன்னு எனக்கு சுத்தமாக புரியலை..” என்று கேட்ட சித்.. “அவங்க மேகமித்ரா இல்லை என்பதால் அப்ப கண்டிப்பாக டிவின் சிஸ்டராக இருப்பாங்கன்னு நினைத்தேன்” என்றான் எரிச்சலாக சித்.

மீண்டும் ஏதோ பேச வாயை திறந்த கார்த்திக்கை நிறுத்திய ஆர்யா.. “சித்.. டிவின்ஸ்சை ஒரே தடவை அதுவும் ஒருத்தரை மட்டும் பார்த்துவிட்டு இருவருக்குமான வித்தியாசத்தை இதுவரை யாரும் கண்டு பிடித்ததே இல்லை..” என்றான் அமைதியாக.

“சிம்பியை தவிர” என்றாள் சற்று உரக்கவே சங்கி முதல் முறையாக வாயை திறந்த சித் மேல் கண்கள் கத்தி வீச.

அதைக் கேட்டவர்கள் எல்லோரும் தங்கள் சிரிப்பை கட்டுப்படுத்துவதை கண்டு “அது யாரு சிம்பி??” என்றான் கார்த்திக்கை பார்த்து சித்.

“அது எங்கள் வீட்டில் மங்கி வளர்க்கும் செல்லப் பிராணி சிம்பான்சி” என்றான் பொதுவாக.

“ஓ…” என்றான் இதில் என்ன இருக்கு என்பது போல்..

“முழுசா பதில் சொல்லு அண்ணா.. அவர் தான் சச்சிதேவிற்கு நேரா பதில் சொல்ல தெரியாதுன்னு சொல்றார் இல்லை..” என்று சற்றே இழுத்தவள் சித்தின் புறம் தன் தலையை திருப்பி “சிம்பி ஒரு நிஜமான சிம்பான்சி.. அது தான் எங்க வீட்டில் வளர்க்கும் செல்லபிராணி” என்றாள் சங்கி தன் கப்பில் இருந்த காபியை மெதுவாக அருந்தியப்படி.

அவன் செல்லப்பிராணி என்றவுடன் நாய் என்று நினைத்துக் கொண்டான் என்பது அவனின் முகக்குறிப்பில் இருந்து புரிந்து கொண்டவள் வேண்டும் என்றே விலாவரியாக விலக்கினாள்!!!

“வாட்.. ஆர் யூ கிட்டிங் மீ???” என்று ஒரு நிமிஷம் அரண்டும் போய் அங்கு அமர்ந்திருந்த எல்லோரையும் அந்த சங்கி சும்மா விளையாட்டுக்கு சொல்கிறாள் என்று சொல்வார்கள் என்பது போல் பார்வையை சூழல விட… ஆனால் அங்கிருந்தவர்கள் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு அமைதியாக இருக்க…

முதன் முறையாக பத்ரி அடிக்கடி மார்தட்டிக் கொண்டு சொல்லும் “சச்சிதேவ்டா” என்பதன் அர்த்தம் புரிய ஆரம்பிக்க அரண்டு போய் அங்கு இருந்தவர்களை மீண்டும் ஒரு தரம் பார்த்தான்..

என்னமோ அவர்கள் எல்லாம் பறக்கும் தட்டில் வந்து இறங்கிய ஏலியன்ஸ் என்பது போல் தோன்ற..

இவன் வாய் பேச முடியாமல் தடுமாற.. அவனுக்கு முன்னாடி ஒரு கப்பில் டீ ஆவி பறக்க வைக்கப்பட்டது..

அதை வைத்தது சங்கியே தான்!!! வைத்தவள் சும்மா இருக்க முடியாது வாயை காது வரை இழுத்து புன்னகைத்தவள் “சூடா டீ சாப்பிடுங்க அதிர்ச்சிக்கு நல்லது” என்றாள் கன அக்கரையாக.

சிம்பியின் அதிர்ச்சியில் முழுகி இருந்தவன் சங்கி வந்து அவன் முன்னால் டீ கப்பை வைத்ததும் அவனை சுற்றி இருந்தவர்கள் மஞ்சள் தெளித்து பலி மேடைக்கு தயாராகி போகும் ஆட்டை பார்ப்பது போல் பரிதாபமாக பார்த்து

வைக்க அதை எதையுமே கவனிக்காது அவசரமாக அந்த கப்பை எடுத்து வாயில் வைக்க... அந்த டீ எனப்படும் திரவம் இறங்கி... அடுத்த அதிர்ச்சியை கொடுத்தது!!!

வென்டிங் மிஷினில் இருந்து வரும் டீ எப்படி மாடு குடிக்க மறுக்கும் கழனி தண்ணியாக இருக்க முடியும்?!? டீ குடித்தால் கூட புட் பாயிசன் ஆக கூடும் என்ற உண்மையை உணர்ந்தவன் அவசரமாக எழுந்து கதவை திறந்துக் கொண்டு வெளியே சென்று வாஷ் பேஷின் உமிழ்ந்து விட்டு திரும்பியவனின் பார்வை.. அங்கே நின்ற சங்கியின் மேல் பதிந்த்து..

"சாரி மிஷினில் ஏதோ ஃபால்ட்டுன்னு நினைக்கிறேன் வாழ்க்கையில் முதல் முறையாக டீ குடித்தால் புட் பாய்ஸன் ஆகிவிடுமோன்னு பயந்துட்டேன்" என்று அவன் லேசாக சிரித்தபடி..

“அது மிஷின் பிரச்சனை இல்லை... நான் தான் வேணுன்னே கொஞ்சம் டீ.. காபி.. புஸ்ட்.. அப்புறம் கொஞ்சமே கொஞ்சமா என்னுடைய நெயில் பாலிஷை வேணுன்னே கலந்தேன்.. எங்க அண்ணனை அடிச்ச இல்லை.. அதுக்காக” என்றாள் சங்கி அவனை எரிக்கும் கண்களோடு.

என் வீட்டில் எப்படி ரியாக்ட் பண்ணுவாங்கன்னு சொல்லவே முடியாது என்று பத்ரி காரில் வைத்து மொழிந்ததின் அர்த்தம் இப்ப புரிய.. என்னதான் பாசம் இருந்தாலும் ஒருதனை கொலை செய்யும் அளவு போவார்கள் என்று சத்தியமாக நினைக்கவில்லை....

“வாட்??? அப்படின்னு உன் அண்ணன் உன்னிடம் சொன்னானா?” என்றான் சித்.

“என் அண்ணன் என்ன எல்.கே. ஜி பாப்பாவா யார் அடித்தாங்கன்னு கையை காட்ட.. ஆரி அண்ணனிடம் பேசும் போது நான் தான் ஒட்டு கேட்டேன்..” என்றாள் மிக மிக சாதாரணமாக.

இந்த பதிலை கேட்டவனின் முகம் இரண்டாவது முறை அந்த டீ குடித்தது போல் ஆக.. ஒட்டு கேட்பதை கொஞ்சம் கூட வெட்கமே இல்லாம் முகத்திற்கு நேராக இப்படி சொல்கிறாளே இவள் எப்படி பத்ரிக்கு தங்கையாக பிறந்தாள்... என்று நினைத்தப்படி “அப்ப.. ஏன் அடித்தேன்னு

தெரியும் தானே?" என்றான் வெறுப்போடு.

"அதை ஆரி அண்ணா கேட்கவும் இல்லை.. ஏன் என்று பத்ரி அண்ணா சொல்லவும் இல்லை.. காரணம் தெரிந்திருந்தாலும் அதைப் பற்றி எனக்கு அக்கறையும் இல்லை.. நீ பத்ரி அண்ணாவை அடித்தாய்.. எவ்வளவு திமிர் இருந்தால் என் அண்ணாவை அடிப்பாய்.. ஏதோ அவருடைய ப்ரெண்டாய் இருந்த காரணத்தால் இத்துடன் உன்னை விடறேன் பிழைத்து போ… அப்புறம் என் அப்பா உன்னிடம் ஹோட்டல் பிசினஸ் பற்றி கேட்க தான் கூப்பிட்டு இருக்கார் உன் நன்மைக்காக தான் சொல்றேன்… மரியாதையா இதில் தலையிடாது ஒடி போயிடு இல்லை உன்னை உன்னை" என்று ஆவேசமாக பேசும் போதே கார்த்திக் கதவை திறந்துக் கொண்டு கான்பரன்ஸ் ரூமை விட்டு வெளியே வருவது தெரிய..

"இப்ப நீ தப்பித்து விட்டதாய் நினைக்காதே…" என்று சூளுரைத்தவள் அவனை விட்டு அவசரமாக நகர்ந்து நின்றாள்.

கார்த்திக் இவர்களை நோக்கி நகர.. ஒரு விடுதலை உணர்வோடு அவசரமாக அங்கிருந்து நழுவினான் சித்!!!

சங்க மித்ரா சித்துடன் வம்பு வளர்த்துக்கொண்டு இருந்த அதே நேரத்தில் இங்கே..

மனது பின்னடித்த போதும் கால்கள் படுவேகமாக நடக்க.. அவள் கண்களோ பத்ரியை வருகிறான் என்று தெரிந்தும் இவனை காணாது அங்கே ஓடிக் கொண்டிருந்த ஆற்றிலேயே சுழன்று கொண்டிருக்க.. அவள் உட்கார்ந்திருந்த பென்ஞ்சை சென்றடைந்தான்.

"அலக்நந்தா.." என்று அழைத்தபடி அவள் அருகில் உட்கார.. முதல் முறையாக மெல்ல பார்வையை திருப்பினாள் அவள்.

இருவருக்கும் என்றும் இல்லாத அமைதி போர்வையாக சூழ… அதை உடைக்கும் பொருட்டு "நீ என்ன படிக்கிற அலக்நந்தா??" என்றான் அவனாக ஆரம்பித்து…

கண்களிலும் வார்த்தைகளிலும் கோபம் கொப்பளிக்க… "ஏன் தெரியாதா??

அது தான் செல்லா காசை பற்றி படித்துக் கொண்டு இருப்பதாக வாயை கிழிய சொன்னீங்களே" என்றாள் அவன் சொன்ன வார்த்தையையே திருப்பி சொன்னபடி.

"அலக்நந்தா... இப்படி பிடிவாதமாக தான் இன்றைய பொழுது என்னுடன் பேசப்போற என்றால் உன்னைப் பார்க்க வந்தவர்களை காக்க வைக்காமல் முதலில் பார்த்துவிட்டு அப்புறம் நம் கதையை வைத்துக் கொள்ளலாம்" என்றப்படி எழுந்தான் பத்ரி.

தள்ளி போடுவதில் என்ன இருக்கு?? என்று மனம் சஞ்சலப்பட "இல்ல பேசி முடித்து விடுங்கள்" என்றாள் அமைதியாக மென்று விழுங்கியபடி..

"ஓ.." என்று மீண்டும் அந்த பென்ஞ்சில் அவளை சற்றே ஒட்டி அமர்ந்தவன் "நீ என்ன படிக்கிறாய்ன்னு கேட்டேன் அலக்நந்தா. அதற்கு இன்னும் பதில் சொல்லவே இல்லை" என்றான் சற்றே அழுத்தமாக.

என்னமோ தெரியாத மாதிரி என்ன கேள்வி என்று உள்ளே பொருமிய போதும் "நான் நாணயங்களுக்கு பின்னாடி இருக்கும் வரலாறை படிக்கிறேன்" என்றாள் தலையை நிமிர்த்தி.

"யாருக்குமே தெரியாத நாணயங்களுக்கு பின்னாடி இருக்கும் பூர்வாங்க சரித்திரத்தை தேடிப் பிடித்து படிக்கும் நீ.. உனக்கு பின்னாடி இருக்கும் வரலாறை மறப்பது தப்பில்லையா அலக்நந்தா??" என்றான் அமைதியாக பத்ரி.

பேசுவது பத்ரியா இருக்கும் போது பதில் சொல்ல அலக்நந்தாவிற்கு திராணி ஏது?!?

ஒரு நிமிடம் அவன் சொன்ன விஷயத்தை கண் மூடி செரித்தவள்.. அதைப் பற்றி எதுவுமே பேசாது "நாளைய பேப்பரில் நான் இதுநாள் வரை என்ன படித்துக் கொண்டு இருந்தேன் என்பதில் ஆரம்பித்து நான் உன்னை மணந்து கொண்டது வரை ஒரு ப்ரஸ் மீட்டில் என் அப்பாவை அறிவிக்க சொல்லி விட்டேன் பத்ரி.. சந்தோஷமா??" என்றாள் வலியின் ரணமும்... வேதனையும் அந்த குரலில் இருந்த போதும் அதை மீறி காதலும் அதில் தெரிய.. அந்த காதல் அவனை இன்னும் அதிகமாக அழுத்தியது...

அம்மாவிடம் பேசிய பிறகு கொஞ்சமாவது சூடு தணிந்திருப்பாள் என்று பார்த்தால் அது இன்னும் கூடியது போல் தான் இருந்ததே தவிர குறைந்த பாடில்லை என்று மனதில் நினைத்துக் கொண்டவன்.. அவள் அறியாது எரிச்சலாக மூச்சு காற்றை வெளி விட்டு..

தன் படபடத்த இதயத்தை சமன் செய்துகொண்டு "ம்ம்..." என்று உள்ளே இல்லாத அமைதியை வெளியே காட்டி தலையை ஆட்டினான் பத்ரி. "சந்தோஷம் என்று இல்லை அலக்நந்தா... என்றைக்கா இருந்தாலும் இதை நீ சொல்லி தான் ஆக வேண்டும்?!?" என்றான் சமாதானமாக பேச விரும்பி.

"சந்தோஷம் இல்லையா?? நீ நினைத்ததை சாதித்து விட்டாய் இல்லை??" என்ற போது அவளில் கோபத்தில் வார்த்தைகள் கூட உடைந்து விழ.... "இப்பயாவது என் காதல் மேல் நம்பிக்கை இருக்கா?? இனி உன் மனைவின்னு பெருமையாக சொல்லுவ இல்லை??" என்று கடுங்கோபமாக கத்தியவளின் உடல் நடுங்க... தன்னைத் தானே இருக்க கட்டிக்கொண்டு.. அவன் முகத்தை பார்க்க கூட பிடிக்காதது போல்.. தலையை திருப்பி ஓடும் நதியை இமைக்க மறந்து பார்த்தவள்..

"என் காதலை... என் காதலை பகடையா பயண்படுத்தி நிரூபிக்க சொன்னதை தான்... என்னால் ஜீரணிக்கவே முடியலை பத்ரி... நிஜமாவே இது எல்லாம் செய்ய சொன்னது என் பத்ரியான்னு கூட சந்தேகப்பட தோன்றுது" என்று வார்த்தை தங்கு தடையின்றி சூடாக வந்து அவன் முகத்தில் விசிறி அடித்தது.

அவளின் ஒவ்வொரு கேள்விக்கும் பத்ரியின் முகம் பளார் பளார் என்று அறை வாங்கியது போல் வலியின் சாயல் வந்து வந்து போக எதையும் காணாது எங்கேயோ வெறித்து பார்த்தபடி இருந்தாள்.

"நான் ஏற்கனவே உன்னிடம் பலமுறை சொன்னேன் அலக்நந்தா நான் எப்பவும் உன்னுடைய பத்ரியாக மட்டும் இருக்க முடியாதுன்னு?!? ஞாபகம் இருக்கா???" என்றான் பத்ரி அழுத்தமாக.

சுழன்று ஓடும் நதியைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் பட்டென்று திரும்பி அவனைப் பார்த்து முறைந்தவள் "ஆமாம்.. சொன்ன.. நீ என் பத்ரியா மட்டும்

இருக்க முடியாது. பத்ரி சச்சிதேவாகவும் இருப்பன்னு சொன்னாய்.. அதுக்கு என்ன இப்ப??" என்றாள் கூர்மையாக நோக்கி.

"அலக்நந்தா நான் உன் பத்ரியாக மட்டும் இருப்பதாக இருந்தால் உன் இஷ்டத்திற்கு விட்டு இருப்பேன் ஆனா.." என்றான் லேசாக தயங்கி நிறுத்த..

"நீ பத்ரி சச்சிதேவா இருப்பதற்கும்.. நான் அல்கா மல்ஹோத்ரான்னு ஊருக்கு சொல்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கு...???" என்று அவன் புறம் நன்றாக தன் தலையை திருப்பி பார்த்தவளின் கண்களில் இருந்த துவேஷம் வார்த்தைகளிலும் தெரித்தது.

"என்ன சம்பந்தம் இருக்கா??? ஏன் டி கொஞ்சமாவது மூளை இருந்தால் இந்த கேள்வியை என்னிடம் கேட்டிருக்க மாட்ட" என்று பொறுமையாக பேச நினைத்த பத்ரி முதல் முறையாக எரிச்சல் பட்டான்.

அவள் அதிர்ந்து அவனை நோக்கவும் "உன் முட்டை கண்ணை வைத்து என்னை மட்டும் பார்க்காது என்னை சூழ்ந்து இருப்பவர்களையும் பார் மோனல்... நான் வெறும் பத்ரியா.. உன் கணவனா, காதலனா, நண்பனா மட்டும் இருக்க முடியாது... என்னை சுற்றி என் மேல் உயிரையே வைத்திருக்கும் ஒரு அழகான குடும்பம் இருக்கு... அதில் கல்யாணம் ஆகாது என் இரு தங்கைகள் இருக்காங்க... மூன்று பேருக்கு அண்ணனா, ஒரு தம்பியா, ஒரு நல்ல மகனா.. பேரனா என் குடும்பத்திற்கு நான் செய்ய வேண்டியது கடமைகளும் பொறுப்புகளும் வரிசையாக நிற்கிறது... என்னில் பாதியான நீ... எல்லாத்துக்கும் என் தோள் கொடுத்து என் பாரத்தை தாங்க என்னுடன் நிற்காமல் எங்கோ போய் ஒளிந்து கொண்டா.. என்னால் எப்படி அலக்நந்தா தனி ஆளா இயங்க முடியும்?!? என் இயக்கமும் சக்தியும் நீயா இருக்கும் போது... நீ இல்லாது நான் எப்படி இயங்குவேன்னு கொஞ்சமாவது யோசித்தாயா?? என்னால் முழு நேரமும் உன் பத்ரியாவும் இருக்க முடியாது... பத்ரி சச்சிதேவாவும் இருக்க முடியாது... எதிலும் முழுமையாக செயல்பட முடியாது.. என் உயிராய் நினைக்கும் உன்னிடத்திலும் தோற்று... என்னை உயிராய் நினைக்கும் என் குடும்பத்திடமும் தோற்றுப் போய் நிற்பேன்டி..." என்று சொல்லும் போது அவளின் முகத்தை அவன் கையில் ஏந்த...

மூச்சுக்காற்று முகத்தில் படும் தூரத்தில் அவளின் முகத்தை இருத்தியவன்..

அவளின் அகண்ட விழிகளில் இருந்த வலியையும் வேதனையும் கண்டு.. “இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி என்னடி சொல்லி அழுத?!? என் காரணமா தோற்றதையே தாங்க முடியாது கதறினாயே… என்னையே தோற்றிருந்தால் தாங்குவாயாடி?!?” என்று அவன் கேட்டு முடிக்கும் முன் இமையோரம் விழி நீர் கசிந்து அவனின் விரல்களை நனைத்தது.

“எனக்காக ஒரு போட்டியில் தோற்கும் போதே வலிக்குதுன்னு சொன்னியே.. ஆனா நாம் தோற்றுப் போவது வெறும் போட்டியா இருக்காது மோனல்… நம் வாழ்க்கையா தான் இருந்திருக்கும்.. அது தான் நீ.. நம் காதலுக்கு கொடுக்கும் பரிசா?!?” என்று அவன் அவளை கண்னோடு கண் வைத்து கேட்க… குபு குபுவென்று அவனின் பிம்பத்தை மறைத்து கண்ணில் நீர் திரண்டு புரண்டது.

முதல் முறையாக பத்ரியின் பக்கம் இருந்த நியாயத்தையும் அவனின் போராட்டத்தையும் உணர்ந்தவளுக்கு தன் பிடிவாதத்தால் நடந்திருக்க கூடிய விளைவு திரைப்படமாக கண்ணில் தெரிய… உடம்பு காந்தியது!!!

“உன்னை மட்டுமே நினைத்து பார்த்தியே தவிர.. உன்னில் பினைந்து இருக்கும் என்னை கொஞ்சமாவது நினைத்து பார்த்தியா?? நீ பத்ரியை மணக்கவில்லை.. பத்ரி சச்சிதேவை மணந்திருக்க… இந்த குடும்ப பாரம்பரியத்தை காப்பாற்ற ஒரு தொழில் இருக்கு.. உன் போல் அல்லாமல் நான் என் பரம்பரை தொழிலை நேசிக்கிறேன்… அந்த தொழிலை நம்பி பத்தாயிரம் பேர் இருக்காங்க.. இன்னைக்கு இல்லா விட்டாலும் இன்னும் ஐந்து வருஷத்தில் நான் இந்த சச்சிதேவ் குரூப்ஸ் சேர்மன் ஆகப் போகிறேன்… நம் பிசினஸ் விஷயமாக உன்னுடன் சேர்ந்து எத்தனையோ பேரை சந்திக்க வேண்டி வரும்… நீ யாரைப் பார்த்து பயப்படுவ.. யாரிடம் பேசுவ.. என்று நான் உன் அருகிலேயே நிற்க முடியுமா மோனல்? அது சாத்தியமா நீயே சொல்லு?? உன்னைப் பூட்டி வைத்து விட்டு என்னால் எப்படி தனியாக போக முடியும்?? ஐயம் ப்ரவுட் ஆப் யூ… மோனல்… உன்னை நான் எதுக்குடி மறைத்து பொத்தி வைக்கனும்?? என்று அவனின் ஆழ்ந்த குரலில் வெளிப்பட்ட வருத்தமும் வேதனையும் அவளை அலை அலையாய் தாக்க..

முதல் முறையாக தன் இறுக்கம் தளர்ந்து “பத்ரி….” என்று முனுமுனுத்தாள்.. நீல கண்களால் அவனை தன்னுள் நிரப்பியபடி.

உண்மையின் உரைகல்லாக அவளை அறைந்த பேச்சை கேட்க... கேட்க.. மேனி நடுங்க ஆரம்பிக்க... முகத்தில் ஏந்தி இருந்த கையை பிய்த்து தன்னை விடுவிடுத்துக் கொண்டவள்.. அவனின் கழுத்து வளைவில் தன் முகத்தை புதைக்க.... இத்தனை அழுத பின்னும் கூட நான் வற்றி போகவில்லை என்று கரை உடைத்துக் கொண்டு கண்களில் நீர் வழிய.. எத்தனை பெரிய முட்டாளாக இருந்திருக்கிறோம் என்று மெல்ல புரியத் தொடங்கியது...

அவனை காதலிக்க தொடங்கியது அவனுக்காகவே என்றாலும், அவன் குடும்பத்தின் மேல் இருக்கும் பாசத்தின் மீதி அவளை காதல் கொள்ளச் தூண்டியதை எப்படி அதை அவள் மறந்தே போனாள்?!?

அவளை தன்னுள்ளே புதைத்துக் கொண்டவன் அவளின் கட்டுப்பாடற்ற கார் கூந்தலை மெல்ல வருடியபடி "நான் உன்னை மல்ஹோத்ராவா பார்க்கலைடி.. ஆனா உன் மல்ஹோத்ரா பாரம்பரியத்தை ஏற்றுக் கொண்டேன்... உனக்கு பிடிக்காவிட்டாலும் அவர் உன் அப்பா, அம்மா இல்லை என்று ஆகி விடுமா??" என்று அவன் அழுத்தம் திருத்தமாக கேட்க.. கை வளைவில் இருந்தவளின் நடுக்கம் அதிகமானது தான் மிச்சம்.

அவள் படும் வேதனையும் அவன் அறிந்தவன் "விபத்தில் இருந்து காப்பாற்ற உதவும் அதே சீட் மெல்ட் தான்... பல சமயம் விபத்தில் இருந்து தப்பிக்க முடியாதபடி நம்மை அதனுள் இறுக்கி பிடித்துக் கொள்ளும்... அப்ப உடைத்து காப்பாற்றுவதை தவிர வேற வழி இல்லை.. அது மாதிரிதான் உன்னை பயம் இறுக்கி பிடித்துக் கொண்டு கவ்வி இருக்கு... நிறுத்தி நிதானமாக பேசி புரிய வைக்க எனக்கு நேரம் இல்லை... என் காதலை புரிந்துகொள்ளவே கிட்டதட்ட நாலு மாசம் எடுத்தாய் அலக்நந்தா... எல்லா விஷயத்தையும் பொறுமையாக விளக்கினால் நீ புரிந்துகொள்வாயா என்பது அடுத்த விஷயம்.. அதை புரிந்துகொண்டு ஒத்துக்கொள்ளும் வரை காத்திருக்கும் பொறுமை எனக்கு இல்லை... நான் மட்டுமே காதலிக்கும் போதே சும்மா இருக்க முடியாது டிசம்பர் மாத குளிரில் ஸ்வீமிங் போனவன் நான்... அதுவும் கல்யாணமே ஆகிவிட்ட பின் என்னால் சும்மா இருக்க முடியும் என்றா நினைக்கிறாய்?!?" என்று உணர்ச்சிமயமாக கேட்க

விருட்டு என்று தலையை உயர்த்தியவள் "ஐயம் சாரி பத்ரி... சாரி என்ற வார்த்தை நான் இங்கே உணரும் உணர்வை புரிய வைக்குமா என்று கூட

தெரியவில்லை… உன்னை இப்படி எல்லாம் கஷ்டப்படுத்துவேன்னு நினைக்காமலே இருந்துட்டேன்” என்று கதறியவள் கண்ணீர் வழிந்த கன்னத்தோடு பத்ரியின் முகம் எங்கும் முத்தம் மழை பொழிய…

கடந்த மூன்று வாரத்தில் முதல் முறையாக பத்ரியின் மனம் லேசாக அதன் தொடர்ச்சியாக உதடு சிரிப்பை உதிர்த்த அடுத்த நொடி இத்தனை நாட்களாக மறந்திருத்த அவனின் முகவாய் குழி வெளிப்பட ஒரு வினாடி அதை ஆசையாக தன் விரல் நுனியால் வருடியவளின் முகத்திலும் அவனை ஸ்பரிசத்த இன்பத்திற்காக சிலிர்ப்பை உணர… வெகு நாட்கள் கழித்து அலக்நந்தாவின் உதட்டிலும் புன்னகை அரும்பி அந்த இடத்தை மட்டும் இல்லை அவன் மனதை பிரகாசமாக்க… அதற்கும் மேலும் சும்மா உட்கார்ந்துக்கொண்டு ரசிக்க முடியாமல் அவளை இருக்கி அனைத்து முத்தம் கொடுத்தான் பத்ரி!!!

உணர்ச்சிகள் பெருக்கெடுத்து ஆறாக ஓட… மூச்சு முட்ட முத்தமிட்டவன் மெல்ல அவளை விடுவித்த போதும்… அப்படியே அவளை தன் மடியில் தூக்கி உட்கார வைத்தவன்… அவள் கழுத்தில் முகம் புதைத்து… ஒரிரு நிமிடம் அமர்ந்தவன் பின் அப்படியே பேச தொடங்கினான்….

“என் அவஸ்தையை விளக்கமாக சொல்லி கேட்கும் நிலையில் நீ இல்லை அலக்நந்தா… உண்மையாக இருந்தாலும் கூட.. எல்லாரோட காதலும் நிறைவேறுவது இல்லை மோனல்… பாயல் என்னை உண்மையாக காதலித்தாள்.. ஆனால் அவள் காதல் நிறைவேறியதா?? அது மாதிரி என் காதல் பொக்கிஷமா கிடைத்த உன்னை எப்படிடி விடுவேன்?!?அதனால் தான் இப்படி ஒரு அதிரடி முடிவு… இதோ இப்படி முடியை வெட்டி விட்டுக் கொண்டு அசிங்கமா திரிய வேண்டிய அவசியம் இல்லை… யாரை பார்த்தாலும் பத்தடி பின்னால் தள்ளி நின்று பயந்து சாக வேண்டிய அவசியமில்லை.. எல்லாத்தையும் விட நீ நீயாக இருக்கலாம்.. அலக்நந்தா மல்ஹோத்ராவா இல்லை அலக்நந்தா சச்சிதேவா… எனக்கு அப்படிதான் உன்னைப் பார்க்க ஆசை!!!” என்று மிக மிக மென்மையாக அவள் சென்னியில் முத்தம் பதித்தான் பத்ரி.

“இதையே கொஞ்சம் மாத்தி யோசியேன் உன் இடத்தில் நான் இருந்தால் நீ எப்படி எடுத்துப்ப மோனல்?? நீ எங்க போனாலும் உன்னுடன் வெளியே வரமாட்டேன்.. உன் நண்பர்களைக் கண்டால் பத்தடி தள்ளி போவேன்…

யாருடன் பேச மாட்டேன்னு சொன்னா அதை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா???"

தனக்காக அவன் ஒவ்வொரு விஷயமாக பார்த்து செய்திருக்க.. அவளின் செய்கையை அவன் பொறுத்துக் கொண்டது மட்டுமல்லாது தனக்காக எவ்வளவு செய்திருக்கிறான் என்று நினைக்க வேகமாக கண்ணீரை துடைத்துக் கொண்டு நிமிர..

"பத்ரி... நான்... நான்.. உன்னை ரொம்பவே கஷ்டப்படுத்திட்டேன் இல்லை?!!! என் பத்ரி.. என் பத்ரின்னு உன்னை சொல்லி விட்டு நான் உன் மோனலாகாமலே இருந்திருக்கேன் இல்ல..." என்றாள் சுயபச்சாதாபம் மின்ன.

"ம்கூம்" என்று அழுது அழுது சிவந்து மூக்கில் மென்மையாக முத்தமிட்டவன் "என்னை பத்ரின்னு கூப்பிட ஆயிரம் பேர் இருக்காங்க... ஆனா உன்னை மோனல்ன்னு கூப்பிடுவது நான் மட்டும் தானே? சோ.. நீ எப்பவும் என் மோனல் மட்டும் தான்" என்று பத்ரியாக பேசியவன்.. அதற்கு மேலும் தீவிரமாக யோசித்து பேச முடியாது அவளை தள்ளி நிறுத்த முடியாது முகம் எங்கும் முத்தமழை பொழிந்தவனை தடுத்து நிறுத்தியவள் என்ன என்பது போல் அவன் பார்க்க...

"பத்ரி... இன்னைக்கு எதுக்கு வீட்டில் இருந்து வர சொன்ன?? நான் தோற்று போவேன் என்று முன்பே தெரியுமா?" என்றாள் யோசனையுடன் அவனை பார்த்து.

"ம்கூம்.." என்று தலையை ஆட்டியவன் "ஜெயித்தால் பரவாயில்லை ஒருவேளை நீ தோற்றுவிட்டால் உனக்கு துணைக்கு ஆள் தேவை நானும் துணை இல்லாத இந்த நேரத்தில் என் அம்மா இருந்தா ஆறுதலாக இருக்குன்னு தோன்றியது அதனால் தான் வர சொன்னேன்..." என்று அவன் கூறிக்கொண்டே இருக்கும் போதே

"நீ சொன்னது ரொம்ப ரொம்ப சரி பத்ரி..." என்று மிலிட்டரி கட்டில் இருந்த குச்சி முடியை மெய் சிலிர்க்க வருடியவள்.. "அத்தை ஒன்றுமே பேசவில்லை... நீ தான் அவங்களை வர சொன்ன என்றதும் எனக்கு அப்படியே அழுகை வர... கீழே விழுந்தவுடன் அம்மா மடி தேடும்

குழந்தையாக மாறி அத்தையின் மடியில் முகம் புதைக்க என்ன ஆச்சரியம் அழுகை வரவில்லை பத்ரி… அதற்கு பதிலாக உன் பக்கத்தில் இருந்தா கிடைக்கும் பாதுகாப்பு உணர்வு தான் என் ஒவ்வொரு அனுவிலும் உணர்ந்தேன் பத்ரி" என்றாள் உணர்ச்சி பூர்வமாக.

"ம்ம்ம்" என்று மெல்ல கண் மூடி அவளின் வருடலை ரசித்தவன் அவளை இழுத்து அவனுடைய ஆஸ்தான இடமாக கழுத்தின் மச்சில் தன் தலையை புதைத்தவன் தன் சொர்கமே அது தான் என்பது போல் ஆழ்ந்த மூச்சுவிட்டு தன் நெஞ்சில் அவளின் வாசத்தை நிறப்பிக்கொண்டு அப்படியே இருந்தான்.

"பத்ரி…" என்று மெல்ல அழைத்தவள்.. "நாளைக்கு பேப்பரில் வரும் முன்னாடி நான் பாயிலிடம் தனியாக பார்த்து சொல்லனும்… " என்றாள் நிஜமாக வருத்துடன் மொழிந்தவள் "இது தான் விசித்திரமான உண்மை இல்லை பத்ரி…?!? என் மனம் அவளுக்காக வருந்திய போதும் நல்ல காலம் அவளை நீ காதலிக்கவில்லையே என்று மனம் ஆனந்த கூத்தாடுது" என்று கூற…

"ம்ம்.. ஒரு காதல் தோல்வியால் துவண்டிடும் ஆள் இல்லை.. ரொம்பவே கஷ்டமாக இருந்தாலும் சமாளித்து விடுவாள்!!!" என்றான் அலக்நந்தாவிற்கு ஆறுதல் சொல்லும் விதமாக. அவள் முகத்தை பார்த்து சொன்னவன் கையில் இருந்த கடிகாரத்தை பாத்தவன் "காட்… டைம் ஆச்சு" என்று முனுமுனுத்தப்படி..
அவன் முத்ததிலேயே உருகிக் கொண்டு இருந்தவள் வெடுக்கென்று நிமிர்ந்து..

"இப்ப என்ன சொன்ன.. என்ன சொன்ன பத்ரி…?" என்றாள் பரபரப்பாக.

"கிளம்பனும்… உன் அம்மா.. அப்பா.. அக்கா எல்லோரும் வராங்க" என்றான் எரிச்சலாக பத்ரி அவளின் அனைப்பில் இருந்து பிரிய பிடிக்காது.

"ஆனா அங்க நேற்று நைட்டே" என்று இழுத்தவள் "மை காட் பத்ரி அவங்க வந்ததும் உன் வேலையா?" என்றாள் ஆச்சரியமாக.

"பின்ன எதாவது செய்வாயான்னு பார்த்தா யாருக்கு வந்த விருந்தோன்னு நீ பாட்டுக்கு தினமும் லைப்ரரியில் போய் புத்தகத்தில் உட்கார்ந்திருக்க..

நானும் அப்படியே உட்கார முடியுமா? ஏதாவது செய்யனும் இல்லை? அதான் உன் அப்பா, அம்மாவிற்கு போன் பண்ணி நீயா இங்க வந்தா மரியாதை.. இல்லை நானா வந்தேன்னா.. உன் பெண்ணுடைய அன்பு கணவன்னு.. ப்ளாஷ் நியூஸாதான் வருவேன்.. எப்படி வசதின்னு கொஞ்சம் விளையாட்டா மிரட்டினேன். அதனால்தான் அவர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்..."

"அப்ப நேற்று இரவு கோவப்பட்டது?? நிஜமா.. பொய்யா" என்றாள் இன்னும் நம்ப முடியாது அலக்நந்தா..

"அவர்கள் மேல் கோபம் இருப்பது ரொம்பவே நிஜம் மோனல்.. ஆனா என்ன இருந்தாலும் அவர்கள் உன்னைப் பெற்றவர்கள்... நான் மன்னிக்க எந்தவித தகுதியும் இல்லைன்னாலும்.. உன்னை எனக்காக பெற்றவர்கள்.. அந்த ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும்.. உன் அப்பாவையும், அம்மாவை மன்னிப்பேன்.. ஆனா உன் அக்காவை மட்டும் என்னால் எந்த ஜென்மத்திலும் மன்னிக்கவே முடியாது அலக்நந்தா... உன்னை ஸ்வீம்மிங் பூலில் தள்ளியதை இப்ப நினைத்தாலும் என் ரத்தம் கொதிக்குது.." என்று அவன் ஒரு சிலிர்ப்புடன் கூற..

இவன் இல்லாது என்றோ.. எப்போதோ நடந்த நிகழ்விற்கு அவள் அக்காவின் மேல் கோபப்படுபவனின் காதலை எப்படி எளிதாக எடுக்க முடியும்?? என்று நினைக்கும் போது தான்... "உங்க அம்மா சொன்னது ரொம்பவே சரியா இருக்கு பத்ரி" என்றாள் யோசனையுடன்.

"என்ன சொன்னாங்க?" என்றான் கண்களில் குறுகுறுப்பாக.

"நீ ஜெயிக்கும் போது உன்னைச் சுற்றி ஆயிரம் பேர் இருக்கலாம் ஆனால் அவங்க எல்லாம் உன் சொத்து இல்ல.. ஆனா நீ தோற்கும் போது உன்னைச் சுற்றி இரண்டு பேர் இருந்தாலும் அவங்கதான் நீ சேர்த்து இருக்கும் உண்மையான சொத்து... இப்ப பாரேன் நான் நடிக்கும் போது கோடி கோடியா சம்பாதித்து, ஹாஸ்பிட்டலில் இருக்கும் போது ஒருத்தர் கூட இல்ல... ஆனா இப்ப உன்னை தான் காதலித்தேன்... என்னைச் சுற்றி மொத்த குடும்பமே திரண்டு நிற்குது இல்லையா பத்ரி..??" என்று இழுக்க..

"ம்ம்..." என்று சொன்னவன் அவளை அணைத்து ஆழ்ந்த முத்தம்

பதித்தவனை காதல் ஒழுக பார்க்க..

“இன்னைக்கு சித்தை வேற ரூமில் தங்க சொல்ல வேண்டியது தான்..” என்று சொல்லும் போது தான் “காட்.. டைம் ஆச்சு வா போகலாம் இல்லைன்னா என் தம்பி உன் அப்பாவின் மூக்கை உடைத்து விடுவான்” என்றபடி அவளை விட்டு விலக பிடிக்காவிட்டாலும் இழுத்துக் கொண்டு முன்னே நகர…

மெல்ல சிரித்தபடி அவனுடன் நடந்த அலக்நந்தா.. “பத்ரி என் அக்காவை பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை.. ப்ளீஸ் சும்மா ஒரு இரண்டு வார்த்தை மட்டும் பேசு ப்ளீஸ்…. ப்ளீஸ்…” என்றாள் மன்றாடும் குரலில்.

அவளின் குரலில் இருந்த கெஞ்சலும், அக்காவின் பாசமும் அவனை கொஞ்சம் இளக்க பெருமூச்சு ஒன்றை விட்டவன் “சரி ஆனா அவளிடம் நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு முத்தம் வேணும்.. இந்த டீலுக்கு ஒ.கே என்றால் மட்டும்தான் நான் அவளிடம் பேசுவேன் இல்லை.. இதில் பேச்சு வார்த்தைக்கே இடம் இல்லை…” என்று திட்டவட்டமாக அறிக்கை விட. சிரித்தபடி அவனுடன் மெல்ல கை கோர்த்து சலசலவென்று பேசியபடி யாரும் வழி காட்டாமலே தான் சேர வேண்டிய இடம் வந்து சங்கமிக்கும் நதியை போல்.. தன் இடம் அறிந்து சங்கமித்தாள் அலக்நந்தா!!!

**********சுபம்**********